# மட்டக்களப்பு வாழ்வியல் தடங்களில்

ஆசிரியர் சிரோமணி

# தம்பிப்பிள்ளை செல்வநாயகம்



ஆசிரியர்
சரவணமுத்து நவேந்திரன்
[கன்னிமுத்து வெல்லபதியான்]

துணை ஆசிரியர்
சரவணமுத்து கணேசமூர்த்தி
[சரவணன்]

பகுதி - 01

# ஆசிரியர் சிரோமணியின் எழுத்தாளர் வரலாறு

# மட்டக்களப்பு வாழ்வியல் தடங்களில்

## ஆசிரியர் சிரோமணி

# தம்பிப்பிள்ளை செல்வநாயகம்

அன்பளிப்பு
ஆசிரியர் சிரோமணியின் மகள்
திருமதி. வினோதா. ஜெகநாதன்.
24.10.2010

AASI[illegible] SIROMANI
T. [illegible]AYAGAM
[illegible] Principal
37 6th Lane.
[illegible] Square,
[illegible] Road,
[illegible] 222987

ஆசிரியர்

**சரவணமுத்து நவேந்திரன்**

(கன்னிமுத்து வெல்லவதியான்)

துணை ஆசிரியர்

**சரவணமுத்து கணேசமூர்த்தி**

(சரவணன்)

# நூல்விபர அட்டவணை


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மட்டக்களப்பு வாழ்வியல் தடங்களில் ஆசிரியர் சிரோமணி தம்பிப்பிள்ளை செல்வநாயகம் |
| நூலாசிரியர் | : | சரவணமுத்து நவேந்திரன் (கன்னிமுத்து வெல்லபதியான்) |
| துணை ஆசிரியர் | : | சரவணமுத்து கணேசமூர்த்தி. (சரவணன்) |
| வகை | : | வரலாறு |
| மொழி | : | தமிழ் |
| நூல் அளவு | : | A5 (1/8) |
| எழுத்து | : | Bamini |
| பிரதிகள் | : | 500 |
| பக்கங்கள் | : | XXV + 401 |
| முதற்பதிப்பு | : | 2010 ஒக்டோபர். |
| பதிப்புரை | : | ஆசிரியருக்கு. |
| அச்சிட்டோர் | : | ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு. |


விற்பனைக்கல்ல – அன்பளிப்பாக.





**RAMAKRISHNA MISSION**
(CEYLON BRANCH)
ASHRAMA & CHILDREN'S HOMES,
RAMAKRISHNAPURAM, BATTICALOA, SRI LANKA.
T.P : 065 - 2222752, E-mail rkmbat@eureka.lk

## ஆசியுரை

இவ்வுலகில் இறைவனால் படைக்கப்பட்ட எல்லாமே ஆக்கம், அளவு, இறுதி எனும் மூன்று நிலைகளையும் கடந்தே ஆகவேண்டும். இந்த விதியால் கட்டுப்பட்டதே வாழ்க்கையும் மனிதவாழ்வும். "**புனரபி ஜனனம் புனரபி மரணம்**" என்பது பஜகோவிந்தம்.

மனிதன் பிறக்கின்றான். அவனது வாழ்க்கை என்பது இறைவனது வரப்பிரசாதம். அந்த வாழ்க்கையை வாழ்தல் என்பது அவனது வாழும் முறையால் வரையறுக்கப்படுவது.

நம் எல்லோரையும் போன்றே அமரராகிவிட்ட திருவாளர் த. செல்வநாயகம் இவ்வுலகில் பிறந்தார். அவர் எவ்வளவு காலம் இவ்வுலகில் வாழ்ந்தார் என்பது வினாவல்ல. அவர் எப்படி வாழ்ந்தார் என்பது நோக்கற்பாலது. இந்த நூலில் அமரர். த. செல்வநாயகம் அவர்கள் பதித்து வந்த வாழ்வியல் தடயங்கள் சீரிய முறையில் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

ஓர் நல்லாசிரியராக தனது ஆரம்ப கால வாழ்க்கையை ஆரம்பித்து பல்லாயிரம் மாணவர்களின் ஆசு அகற்றி, அவர்களை மனிதத் தன்மையுள்ள நல்ல மனிதர்களாக உருவாக்கித் தந்த பெருமையுடையவர். போதனையோடு நிற்காது தனது வாழ்க்கையை அதற்கு இலக்கணமாக அமைத்துக் கொண்டவர். எத்தனை பேர் கூடிநின்றாலும் தனது உடையாலும் பெருந்தன்மையாலும் தன்னை வெளிக்காட்டிக் கொண்டு அடையாளம் காட்டுவார்.

நல்லாசிரியராக வாழ்ந்து அதிபராகி, ஆசிரியர்களுக்கெல்லாம் மகுடம் போல் ஆசிரியர் சிரோமணி என்னும் அழகிய மகுடம் தரித்து இவ்வுலகை வலம் வந்தவர்.

மேலும் தான் சார்ந்த சமயத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து சைவம் சார்ந்த திருப்பணிகளையும், சைவ நெறியையும் பின்பற்றி வளர்த்த பெருந்தகையாளர்களில் ஒருவர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனோடு தன்னை இணைத்துக் கொண்டு பல பயனுள்ள சேவைகளை தன்னால் ஆனமட்டும் ஆற்றி குருதேவரின் பேரருளைப் பெற்றுக் கொண்டவர். ராமகிருஷ்ண மிஷனில் நடைபெறும் ஜயந்தி தினங்கள், வரவேற்பு உபசாரங்கள், விழாக்கள் போன்றவற்றில் அமரர். திரு.த. செல்வநாயகம் அவர்களின் பிரசன்னம் நிச்சயம் இருக்கும்.

ஒரு சிறந்த மனிதரை காலத்தின் கட்டாயத்திற்கு அமைவாக நாம் இழந்து துயரில் ஆழ்ந்துள்ளோம். **“தோன்றில் புகழோடு தோன்றுக”** எனும் வள்ளுவர் வாக்குக்கமைவாக வாழ்ந்து அமரத்துவம் அடைந்த திரு. த. செல்வநாயகம் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருடன் நாங்களும் இணைந்து கொள்கின்றோம். வெளிவரவிருக்கும் ஆசிரியர் சிரோமணி பற்றிய இந்நூல் இளம் சந்ததியினருக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்பது எமது நம்பிக்கை.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதாதேவி, சுவாமி விவேகானந்தர் ஆகிய தெய்வத்திரு மூவரையும் மனமுருகிப் பிரார்த்தனை செய்கின்றோம்.

இறைபணியில்,

சுவாமி அஜராத்மானந்தா

**சுவாமி ஆஜராத்மானந்தா.**

SWAMI AJARATMANANDA
Swami-in-Charge
RAMAKRISHNA MISSION
Ramakrishnapuram,
Batticaloa, Sri Lanka.

**DIOCESE OF TRINCOMALEE – BATTICALOA**

RT. REV. DR. J. KINGSLEY SWAMPILLAI
T.PHONE NO. : 065-2222723
FAX NO. : +94-65-2224667

BISHOP'S HOUSE
P.O. BOX – 43
BATTICALOA
(SRI LANKA)

## ஆசிச் செய்தி

மண்ணில் தோன்றிய மனிதரெல்லாம் மறைந்துவிடுவது இயல்பு. மறைந்தாலும் மறையாமல் மக்கள் மனங்களில் வாழ்வோர் சிலர். அந்தச் சிலரில் ஒருவராக மட்டக்களப்பு பிரதேச மக்கள் மனதில் வாழ்பவர், அன்போடு நினைவுகூரப்படுபவர் ஆசிரியர் சிரோமணி திரு.த. செல்வநாயகம் அவர்கள். அன்னாருக்கு நினைவுமலர் வெளியிடுவது மிகவும் பொருத்தமானதும் தேவையானதுமாகும்.

ஆசிரியர்களுக்கும் ஆசிரியப் பணிக்கும் ஒரு முன்மாதிரிகையாக வாழ்ந்து மட்டக்களப்பு பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றியுள்ள அவர், இப்பிரதேசத்தில் ஒரு கல்விச் சமூகத்தை உருவாக்குவதில் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளதை அவரிடம் பயின்று, இன்று கல்வியியலாளர்களாக விளங்குகின்றவர்களிலிருந்து நாம் உணர்ந்து கொள்ளலாம்.

ஆசிரியர் திரு.த. செல்வநாயகம் அவர்கள் பன்முக ஆளுமை கொண்டவராவார். ஆசிரியராக மட்டுமன்றி எழுத்தாளராக, நூலாசிரியராக, வெளியீட்டாளராக, சமய-சமூகப் பணியாளராக, பல்வேறு சமூக அமைப்புகளில் உறுப்பினராக இருந்து அவர் ஆற்றியுள்ள பணிகள் அவரது பரந்துபட்ட ஆற்றலையும் செயல்திறனையும் நமக்குக் காட்டுவதாக உள்ளன. கிழக்கிலங்கை புனர்வாழ்வுக் கழகத்தில் (E.R.O) எம்மோடு இணைந்து அவர் பணியாற்றியபோது அவரது உயர்ந்த பண்பு நலன்களை நாம் தனிப்பட்ட விதத்தில் அறிந்துகொள்ள முடிந்தது. நிருவாகக் குழு உறுப்பினராக, உபதலைவராக இருந்து அவர் ஆற்றிய சேவைகள் என்றும் நினைவுகூரத் தக்கன.

அவரது தன்னலமற்ற பன்முகப்பட்ட சேவையினாலேயே அவருக்குப் பல இடங்களிலிருந்தும் பாராட்டுகளும் விருதுகளும் வந்து குவிந்தன. அன்பும் அடக்கமும், மனித நேயமும், பணியார்வமும் மிக்கவராக வாழ்ந்த அவரது வாழ்வு வருங்காலத் தலைமுறையினருக்கு ஓர் எடுத்துக்காட்டும் வாழ்க்கை முறையுமாகும். அவரது வாழ்க்கைத் தடங்களையும் அவர் பற்றிய பெருமக்களது கருத்துக்களையும் விரிவாகக் கூறும் இந்நினைவுமலர் ஆசிரியர் சிரோமணி திரு.த. செல்வநாயகம் அவர்களுடாக ஏறத்தாள நான்கு அல்லது ஐந்து தசாப்தங்களுக்கு முந்திய இப்பிரதேசத்துச் சமூகச் சூழலையும் நிலைமைகளையும் நம் கண் முன்னே நிறுத்துகிறது. அவ்வகையில் இந்நினைவுமலர் படிக்கவும், பாதுகாக்கவும் வேண்டிய ஒரு நினைவுப் பெட்டகம் என்று கூறலாம்.

தாம் வாழ்ந்த காலத்தைப் பெறுமதி மிக்கதாகவும் சமூகத்துக்குப் பயன்தரும் வகையிலும் வாழ்ந்து முடித்த அன்னாரது நினைவுகளை மீட்டும் இவ்வேளையில் அவருக்கு இறைசந்நிதியில் முடிவில்லாப் பெருவாழ்வு கிடைக்க இறைஞ்சுவதோடு அவர்தம் குடும்பத்தாருக்கும், உறவினருக்கும், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் ஆறுதலும் அமைதியும் கிடைக்க எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவாராக.!

**பேரருள்தந்தை. யோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை**

ஆயர், திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம்,

**03.09.2010.**

"........... SERVICE OF FAITH & FELLOWSHIP"

Kavimani
Kalaabooshan
Moulavi M.H.M. Buhary (Falahee)

Principal,
~~Sirajiya~~ Arabic College,
~~Oddamavadi~~ Nintavur
~~T.P. 065-2257360~~ TP. 067-2250456

'Baithul Barakath'
Old Road,
Kattankudy.04
T.P: 065-2246089 / 0772686159

Date : 11.08.2010

# உள்ளங்கனிந்த நல்லாசி

தமிழ் - முஸ்லிம் மக்களின் நல்லுறவால் தனிச் சிறப்புப் பெற்றது மட்டக்களப்புத் தமிழகம். இரு சமூகத்தினரும் இதயத்தால் இணைந்து இனிய தமிழையும், இலக்கியத்தையும் ஏற்றமுற வளர்த்து வருகின்றனர். இன்ப துன்பங்களில் இரு சாராரும் பங்கு கொண்டு பரஸ்பரம் அன்பைப் பரிமாறிக்கொள்கின்றனர். இவர்கள் மத்தியில் வாழ்ந்த வாழும் அறிஞர்களும், பெரியார்களும் தமிழ் - முஸ்லிம் நல்லுறவு வலுப்பெறப் பெரும் பங்காற்றியுள்ளனர்.

இந்த வகையில், ஆசிரியர் சிரோமணி, செம்மனச் செல்வர், சமூக சாகரன் திரு.த. செல்வநாயகம் அவர்கள் குறிப்பிடத்தக்க ஒருவர். அவர் எல்லாத் துறைகளிலும் கால்பதித்தவர். சமயப் பணிகளில் சதாவும் பங்கு கொண்ட சமய வாதி, சமூகப் பணிகளில் சளைக்காது உழைத்த சமூகத் தொண்டர், கல்விப்பணிகளிற் கண்ணாயிருந்த கல்விமான், தமிழ்த் தொண்டே மூச்செனக் கொண்ட தமிழறிஞர், இலக்கியத்துக்கு எப்போதும் பங்களிப்புச் செய்த இலக்கியவாதி. இவ்வாறான இணையற்ற பணிகள் மூலம் தமிழ் - முஸ்லிம் நல்லுறவுக்கு வலுச் சேர்த்த வல்லவர் அவர்.

அன்னாரின் மறைவு இரு சமூகத்தாருக்கும் பேரிழப்பாகும். அவர்களது நற்பணிகளை நினைவு கூர்ந்து அவர்தம் நினைவாக ஒரு சிறப்பிதழ் மலர்வது மிகவும் பொருத்தமானது, பாராட்டத்தக்க நற்பணி இது.

இந்தப் பொன்மலருக்கு நல்லாசி வழங்கக் கிடைத்தமையைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

நன்றி

**மௌலவி எம்.எச்.எம். புஹாரி (பலாஹீ)**
காத்தான்குடி.

## மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி

**"கற்றோனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு"** என்ற கருத்தை நாம் ஒவ்வொருவரும் உள்வாங்குவோமாயின் அல்லது விதைப்போமாயின் கல்வியில் எம்மால் சிறந்து விளங்க முடியும். அதனூடாகச் சிறந்த சமூகத்தை உருவாக்கவும் முடியும். ஆக, கல்வி என்பது மனிதனுக்கு மிக மிகத் தேவையான ஒன்று இதை உணர்ந்து பலர் செயற்பட்டார்கள். அவர்களுள் அமரர். த.செல்வநாயகம் அவர்களும் ஒருவர் என கூறமுடியும்.

கல்வியால் நாம் உயரவேண்டும். நம்மை உயர்த்திய கல்வியால் சமூகத்தை உயர்த்த வேண்டும். அவ்வாறான நோக்கம் கொண்டு அமரர் ஆசிரியர் சிரோமணி செயற்பட்டதனாலேதான் அவரால் பலரை உருவாக்க முடிந்துள்ளது. சமூகத்தை கட்டி எழுப்ப முடிந்தது.

மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் நெஞ்சை நிமிர்த்தி நிமிர்ந்து நிற்பதற்கும் அவ் வித்தியாலயத்தைப் பலர் தேடி வருவதற்கும் அங்கு சிறந்த கல்வியைப் பெற முடியும் என்ற நம்பிக்கை மக்களிடம் ஏற்பட்டிருப்பதற்கும் காரணமாக அமைந்தவர்கள் சிலர். அந்தச் சிலருள் அமரர். த.செல்வநாயகம் அவர்கட்கு தனியிடம் உண்டு என்பதை மறுக்க முடியாது. அந்த அளவிற்குச் சமூகச் சிந்தனையாளராக அவர் செயற்பட்டமைதான் காரணம் எனலாம். இவ்வாறு கல்வியைத் தமக்காக மட்டுமன்றிச் சமூகத்துக்காகவும் பயன்படுத்த வேண்டும். "நாம் வாழ்ந்தோம்?" என்பதைவிட "நாம் என்ன செய்தோம்?", "நாம் எப்படி வாழ்ந்தோம்" என்ற கேள்விகளுக்குரிய விடை சிறப்பாக அமைய வேண்டுமென்பதே முக்கியமானது.

மட்டக்களப்பு மக்களுக்குக் கல்வி வழங்கித் தன் சேவையை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் மலையக மக்களுக்காகவும் கல்வியை வழங்க தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அமரர். த.செல்வநாயகம் அவர்கள் கல்விப் பணியுடன் சேர்ந்து பல்வேறு சமூகப்பணிகளை ஆற்றியவராகக் காணப்படுகிறார். சிலர் தாமுண்டு, வேலையுண்டு என்று கருத்திற் கொண்டு தம் நலத்தையே கவனித்துக் கொள்வார்கள். இவர் அப்படிப்பட்டவராக இருக்க விரும்பாமல் பிறர் நலத்தையும் வேண்டி நின்றவராகிறார்.

இறைபக்தியானவனாக விளங்கும் இவரிடம் இத்தகைய பண்புகள் இயல்பாகவே அமைந்தமை பெரிய வியப்பல்ல. உண்மையான பக்தியாளனிடம் இவை அமைந்தே இருக்கும்.

எனவே இறைபக்தியும் கல்வியும் கட்டாயம் ஒவ்வொருவரிடமும் இணைய வேண்டும். அப்போதுதான் ஒருவரால் சீரான வாழ்வு வாழ முடியும். அமரர். ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களின் பெயரால் வெளிவரவிருக்கும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**ஏ.எம்.இ.போல்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கலவி பணிமனை,
மட்டக்களப்பு.

## அணிந்துரை

"**மட்டக்களப்பு வாழ்வியல் தடங்களில் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம்**" என்னும் நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஆசிரியர் சிரோமணி திரு.தம்பிப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் மட்டக்களப்புத் தமிழகம் அறிந்த ஆசிரியப் பெருந்தகைகளில் ஒருவர். இப் பிரதேசத்தின் வாழ்வியல் தடங்களில் ஒரு பதிவாக இடம் பெற வேண்டியவர். சமகால சமூகமும், குறிப்பாக வருங்கால கல்விப் புலமும், இளஞ்சந்ததியும் அறிந்திருக்க வேண்டிய ஒருவர். அந்த வகையில் அவருக்காக வெளிவரும் இந்த நூல் பாராட்டத்தக்கதொன்றாகும்.

திரு.த.செல்வநாயகம் அவர்கள் எனக்குப் பரிட்சயமான ஒருவர். அவர் சுகயீனமுற்ற செய்தி அறிந்து ஒருநாள் நான் அவரில்லம் சென்றிருந்தேன். அச்சந்தர்ப்பத்திலே அவர் தனது வாழ்க்கை வரலாற்றை எழுதிக் தொகுத்து நூலாக்க வேண்டிய தேவையினையும், அதனை ஆவணமாக்க வேண்டிய அவசியத்தினையும், இது தொடர்பான தனது ஆதங்கத்தினையும் என்னிடம் வெளிப்படுத்தியிருந்தார். அதற்கு நான், இதனைச் செய்து முடிக்க உரிய ஒழுங்குகளை மேற்கொள்கிறேன் என்றும், இதனை உடனே செய்து முடிப்போம் என்றும் உறுதிமொழியளித்திருந்தேன்.

இந்த உறுதிமொழியைச் செயற்படுத்தவென எனது மாணவர்களான திரு.ச.கணேசமூர்த்தி (அதிபர்), திரு.ச.நவேந்திரன் (ஆசிரியர்) ஆகிய இருவரையும் அழைத்து ஆலோசனைகளும், வழிகாட்டுதல்களும் வழங்கி அதற்கான பொறுப்புக்களையும் கொடுத்திருந்தேன். அவர்கள் அதற்கேற்பச் செயற்பட்டார்கள். எனது வழிகாட்டுதல்களும், திரு.ச.கணேசமூர்த்தி (அதிபர்) அவர்களது வழிகாட்டுதல்களும், திரு.ச.நவேந்திரன் அவர்களுக்கு தொடர்ந்தும் கிடைத்துக் கொண்டே இருந்தன. இவர் "ஆசிரியர் சிரோமணி" அவர்களது வீட்டுக்குப் பலமுறை சென்று சகவாசமாகப் பழகி அவருடன் உண்டு மகிழ்ந்து

உடனிருந்து "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் சொல்லச் சொல்ல அவற்றை எல்லாம் உள்ளதை உள்ளபடியே கையெழுத்துப் பிரதியாக முதலிலே எழுதி முடித்தார். மேலும் பலபேருடனும் தொடர்பு கொண்டு வேண்டிய தகவல்களைப் பெற்றார். வாழ்க்கைச் சரித்திரம் வளர்ந்தது. எனினும் இது நூலுருவாக்கம் பெறுவதில்தான் பல சிரமங்களையும், தடைகளையும் தாண்ட வேண்டியிருந்தது.

குறிப்பாக இந்த நல்ல முயற்சிகள் முன்கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் வயோதிபம் கனிந்து இறுதியிலே இயற்கை எய்தியமை எல்லோருக்கும் பெரியதொரு ஏக்கத்தையும், இடைவெளியையும் ஏற்படுத்தி இருந்தது. இருந்தும் நூலுருவாக்க முயற்சிகள் தொடர்ந்து கொண்டே இருந்தன. இன்று சில திருத்தங்களுடனும், புதிய சேர்க்கைகளுடனும் இந்த நூல் வெளிவருவதையிட்டு எல்லோருக்கும் ஒருவித தெம்பும், திருப்தியும் ஏற்பட்டிருக்கிறது.

ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அவர்கள் என்ன செய்தார்? எவ்வாறு செயற்பட்டார்?, மட்டக்களப்பு வாழ்வியல் தடங்களில் எத்தகைய இடங்களைப் பெறுகின்றார்? என்பவை பற்றியெல்லாம் நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர் சிறந்த ஆசிரியராக, பாராட்டத்தக்க அதிபராக, நல்ல ஆலோசக ஆசிரியராக, முன்மாதிரியான சமய-சமூகத் தொண்டனாக, தமிழ் இலக்கியப்பற்று மிக்கவராக, தூர தரிசனமும், துரித செயற்படுதிறனும் உடையவராகத் தனது வாழ்நாட்களிலே திகழ்ந்துள்ளார். அதனால் ஆசிரியர் சிரோமணியாக, செம்மனச் செல்வராக, சமூக சாகரனாக வாழ்விலே பல வெற்றித் தடங்களைப் பதித்துள்ளார்.

விசேடமாக அவர் ஆற்றிய கல்விப்புல சேவைகள் கவனிக்கப்பட வேண்டியவை. சமூகத்திலுள்ள பலரும் அறிந்திருக்க வேண்டியவை. ஓர் ஆசிரியர் என்றால் எப்படி இருக்க வேண்டும்? ஓர் அதிபரானவர் எப்படி தமது கடமையில் நின்றொழுக வேண்டும்?, ஒரு குடிமகன்

தான்பிறந்த சமூகத்துக்கும், தாய்மொழிக்கும் எத்தகைய பங்களிப்புகளை நல்கவேண்டும்? என்பதற்கெல்லாம் நமது ஆசிரியர் சிரோமணி அவர்களது வாழ்க்கை தரும் செய்திகள் ஒவ்வொன்றும் நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

திரு.ச.நவேந்திரன் (கன்னிமுத்து வெல்லபதியான்) அவர்களை ஆசிரியராகக் கொண்டு இந்த நூல் இன்று வெளிவருகின்றது. இவருடன் திரு.ச.கணேசமூர்த்தி (சரவணன்) அவர்களும் இதன் உருவாக்கத்துக்குப் பெரும் பங்களிப்பை நல்கியுள்ளார். இவர்கள் இருவருமே எடுத்த கருமத்தை திறம்படச் செய்து முடித்தமை தொடர்பில் பாராட்டப்பட வேண்டியவர்கள். தியாக மனப்பான்மையுடன் இவர்கள் இப்பணியை வெகு கச்சிதமாகச் செய்து முடித்திருக்கிறார்கள். "ஆசிரியர் சிரோமணி" அவர்களது பிள்ளைகள் இந்த அரிய ஆக்க முயற்சிக்காக வழங்கிய ஒத்துழைப்புக்களையும், காட்டிய கரிசனைகளையும் இந்தச் சந்தர்ப்பத்திலே வெகுவாக நான் பாராட்டுகின்றேன்.

கல்விப் புலத்திலே - நமது சமய, சமூக பண்பாட்டுப் பாரம்பரியத்திலே ஆசிரியர் சிரோமணி தம்பிப்பிள்ளை செல்வநாயகம் அவர்களைப் போன்ற ஆசிரியர்களை, அதிபர்களை, சமய-சமூக சேவையாளர்களை, தமிழ் பற்றாளர்களை, சிந்தனையாளர்களை நாம் தொடர்ந்தும் பெற வேண்டும். இத்தகைய அரிய நூலுருவாக்க முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் சிறந்த கல்விச் சமூகமும், சிந்திக்கும் இளம் சமுதாயமும் உருவாக்கம் பெறும் என்பது எனது நம்பிக்கையாகும். இந்நூல் கல்விப் புலத்திலே பலரதும் கவனத்தை ஈர்க்கும் என்பதில் வியப்பேதுமில்லை.

*பேராசிரியர் மா.செல்வராஜா*
தலைவர்,
கல்வி, பிள்ளை நலத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை,
இலங்கை.

# முன்னுரை

கிழக்குப் பல்கலைக்கழக கல்வி, பிள்ளை நலத்துறைப் பேராசிரியரும் கல்வி, சமூக சிந்தனையாளரும் எனது குருவுமாகிய பேராசிரியர் திரு.மா. செல்வராஜா ஐயா அவர்களின் ஆதங்கமாகிய "ஆசிரியர் சிரோமணி பற்றிய புத்தகமொன்று வெளியிட வேண்டும்" என்ற எண்ணத்தின் அடிப்படையில், அவர் எம்மிடம் கேட்டுக் கொண்டதற்கமைய அதனை ஏற்று அதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்காக நானும் எனது இளைய சகோதரனாகிய ச.நவேந்திரன் அவர்களும் திடசங்கற்பம் கொண்டு பேராசிரியர் அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியின் பேரில் ஆசிரியர் சிரோமணி அவர்களை கடந்த வருட நடுப்பகுதியை அடுத்து வந்த ஒரு நாள் பகல் வேளையில் திசவீரசிங்கம் சதுக்கத்தில் உள்ள அவரது வீட்டில் சந்தித்தோம். அச் சந்திப்பு மூன்று மணித்தியாலங்கள் வரை நீடித்தது.

முதலில் நாங்கள் இருவரும் வணக்கம் கூறி எங்களை அனுப்பி வைத்தது பேராசிரியர் செல்வராஜா சேர் எனச் சொன்னவுடன் "நல்லது நல்லது வாருங்கள், வாருங்கள்" எனக்கூறி இன்முகத்துடன் வரவேற்று இருக்கச் செய்தார். அதன்பின் எங்களை நாங்கள் அறிமுகம் செய்தோம். பின்பு அவர் தன்னை அறிமுகம் செய்தார். நாங்கள் அங்கு சென்ற நோக்கத்தைக் கூறி தங்களைப் பற்றியும், தங்கள் சேவைகளைப் பற்றியும் புத்தகமொன்றை எழுதி சமூகம் பயன்பெறச் செய்ய

வேண்டுமென பேராசிரியர் அவர்கள் விரும்புகிறார். அதை நிறைவேற்ற செயலாற்றுவதற்காகவே வந்திருக்கிறோம் என்றோம். சிரித்தபடி அதற்கென்ன? நல்லதுதான். அதற்கு நான் என்ன உதவிகள் செய்ய வேண்டும்? எனக் கேட்டார்.

அதற்கு நாம் இப்புத்தகத்தை எழுதுவதற்கான தகவல்களையும் வேண்டிய ஒத்துழைப்புக்களையும் தந்துதவ வேண்டுமெனக் கேட்டுக் கொண்டோம். தான் இதில் சந்தோசமடைவதாகவும் முழு ஒத்துழைப்பையும் இதற்கு நல்குவதாகவும் தெரிவித்தார். அது மட்டுமன்றி தனது வாழ்க்கைச் சரிதத்தின் சுருக்கத்தை உள்ளதை உள்ளபடியே உருக்கமான முறையிலே பகிர்ந்து கொண்டார். அதன்போது வேண்டிய குறிப்புக்களை நாம் குறித்துக் கொண்டோம். தான் இதுவரை சேகரித்து வைத்திருந்த பல ஆவணங்களையும் எம்மிடம் காண்பித்ததுடன் சில ஆவணங்களின் நகல் பிரதிகளையும் தந்துதவினார். நன்றி கூறி நாமிருவரும் விடைபெறத் தொடங்கினோம். "நல்லது மகனே நல்லது, இதனைக் காலம் தாழ்த்தாமல் விரைவாகச் செய்து முடிக்க வேண்டும்; போய் வாருங்கள்; வரும் போது நான் சொல்லச் சொல்ல அதனை எழுதுவதற்கான ஆயத்தத்தோடும் வாருங்கள்." எனக் கூறி எம்மை வழியனுப்பி வைப்பதற்காக தலைவாயில்வரை வந்தவர் "எனது மதிப்புக்குரிய ஆசான் F.X.C நடராசா ஐயா அவர்கள் தனது வீட்டுக்கு வருவோரை இப்படித்தான் தலைவாயில் வரை சென்று இன்முகத்துடன் வழியனுப்பி வைப்பார்" என்ற உபதேசத்துடன் வழியனுப்பி வைத்தார். நாமிருவரும் விடைபெற்று வீடு திரும்பினோம்.

இதுதான் ஆசிரியர் சிரோமணி ஐயாவுடனான எமது முதல் சந்திப்பு. அவர் கூறியது போலவே இதன்பின்பும் ஓரிரு சந்திப்புகள். அவருடனான முதல் சந்திப்பும், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற சந்திப்புகளும் என் எண்ணவெளியிலே காலத்தால் என்றுமே அழியாத மனப் பதிவுகளாக இடம்பெற்றன.

ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அவர்கள் நான் என் வாழ்விலே தரிசித்த பெரியார்களில் குறிப்பிடத்தக்க ஒருவர். திடகாத்திரமான உடலும் உறுதியான பேச்சும், எல்லோரையும் கொள்ளை கொள்ளத்தக்க விதத்திலான மொழி வளமும், உண்மையும்,

நேர்மையும், கருணை-காருண்ணியமும், வெளிப்படைத் தன்மையும் இனிய நற்பண்பும் அவரது ஆளுமையில் செல்வாக்குப் பெற்று விளங்கக் கண்டேன்.

அவரை உற்று நோக்கும்போது அவரது நேர்கொண்ட பார்வையும் முகத்திலே புன்முறுவலும் நெற்றியிலே பளிச்சிடும் வெண்திருநீற்றுப் பூச்சும் அவரது வழிபாட்டு முறைகளும் பிரமிக்கச் செய்வதாக அமைந்திருந்தன. "அவர் ஒரு சிறந்த சைவப் பழம்" என்பதை அவரது திருநீற்றுப் பூச்சு துல்லியமாக வெளிப்படுத்திக் காட்டும்.

சமயப் பற்றைப் போலவே தமிழ் பற்றிலும் ஊறியவர் அவர். அவரது வாயில் இருந்து வெளிவரும் ஒவ்வொரு சொற்களும் அர்த்தமுள்ளவைகளாகவும், அழகு தமிழ்ச் சொற்களாகவும் இருக்கும். அவரது மொழிப் பிரயோகம் எல்லோருக்கும் நன்கு விளங்கும். எதையுமே தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுவார். பிறர் கதைப்பதை நன்கு செவிமடுத்துக் கேட்பார். இடைமறித்து அவர் கதைத்ததனை நான் கண்டதில்லை. எடுத்த கருமத்தை உடனே செய்துமுடிக்க வேண்டும் என்பதில் ஒரே குறியாக இருப்பவர். அதற்காக அவ்வப்போது கண்டிப்போடு கூடிய வார்த்தைகளையும் வெளிப்படுத்துவார். இவரது தமிழ்ப் பற்று பற்றி சுருங்கச் சொன்னால் "தன் தாயிலும் மேலாக தமிழை நேசிப்பவர்."

மேலும் இவரது நற் பண்புகளாக பலவற்றை என்னால் நேரிலே கண்டுகொள்ள முடிந்தது, வந்தோரை எழுந்து வரவேற்றல், அவர்கள் அமர்ந்த பின்பே தான் அமர்தல், எல்லோருக்கும் நன்மைகளையே உடலாலும் மனத்தாலும் செய்ய விழைதல், பிறருக்கு அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் கூறுதல், தொலைநோக்குச் சிந்தனை, சேவை மனப்பான்மை, கூரிய ஞாபகசக்தி, படைப்பாற்றல், எங்கும் எதிலும் ஒழுங்கு முறையைக் கடைப்பிடித்து அழகுற வைத்துள்ள பான்மை, நேரத்தைப் பொன்செய்வதில் காட்டும் தீவிர ஈடுபாடு, எவருடனான சந்திப்புகளையும் திகதி, நேரம், நாள் குறித்து

ஒழுங்குபடுத்தி எழுதி வைத்துள்ளமை, தன் வாழ்நாளில் சமகால பல்துறைசார் சேவையாளர்களையும் பற்றி எழுதிய கட்டுரைகளை பத்திரப்படுத்தி வைத்துள்ளமை என்பனவாக அமைந்து என் எண்ணவெளியில் நீண்டுகொண்டே செல்கின்றது. அவர் செம்மனச் செல்வராய், சமூக சாகரனாய், ஆசிரியர் சிரோமணியாய் என் எண்ணத்திலே வண்ணமும் வனப்பும் சேர்த்து விளங்குகின்றார்.

இப்படியான சமய, சமூக, கல்விச் சேவையாளரை சந்தித்தமை அவர் பற்றிய வரலாற்றை ஒரு ஆவணமாக்க வேண்டிய பொறுப்பு கிடைத்தமை, அவரிடமிருந்து நல்லபல உபதேசங்களைப் பெற்றமை, அதன்மூலம் பலவித நல்ல அனுபவங்கள் கிடைத்தமை என்பன எனது எண்ணத்தை விட்டு என்றுமே அகலாதவை. இருந்தும் இந்த நல்முயற்சியினிடையே ஏற்பட்ட சிற்சில தடைகள், எல்லா வற்றையும் விட அவர் உயிருடன் இருக்கும் போது இப் "புத்தகம்" அவர் கையிலே தவழ முடியாமல் போனமை ஆகியவை என் எண்ணவெளியிலே சோகப்பதிவுகளையும் ஏற்படுத்தின. ஏக்கத்தையும் தந்தன.

இருந்தும் அவரது பிள்ளைகளின் அயராத முயற்சியாலும் பேராசிரியர் என்னருமைக் குருநாதர் திரு.மா. செல்வராஜா சேர் அவர்களது (தொடக்கம் முதல் இற்றை வரையிலான) அன்புக் கட்டளைகளாலும், தொடர்ச்சியான கண்காணிப்போடு கலந்த ஆலோசனைகளாலும் நாம் எடுத்த இம் முயற்சி இன்னும் சில நல்ல மாற்றங்களுடன் எனது இளைய சகோதரன் திரு.ச. நவேந்திரன் அவர்களை நூலாசிரியராகவும் என்னை துணை நூலாசிரியராகவும் கொண்டு வரலாற்று நூலாக வெளிவருவதையிட்டு (இடையிலே சோபையிழந்து போன) எனது மனம் இன்று பூரித்து நிற்கின்றது. உயர்ந்த எண்ணவெளியினைக் தந்த ஆசிரியர் சிரோமணி அமரர் த.செல்வநாயகம் அவர்கள் எனது எண்ணவெளியிலே எப்போதும் ஒளிவீசிப்பிரகாசித்துக் கொண்டே இருப்பார் என்பது திண்ணம்.

**திரு. சரவணமுத்து கணேசமூர்த்தி (அதிபர்)**
**துணை நூலாசிரியர்,**
**வெல்லாவெளி.**

## ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களின் இதயத்திலிருந்து.....

**(ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் தன்வரலாறாக இந்தநூல் உருவாக்கம் பெறுவதற்குத் தேவையான வாய் மொழிமூலக் குறிப்புகளை கொடுத்து முடித்த நாளன்று முடிவுரையாகச் சொன்ன கருத்துகளே இவை)**

என் அன்புக்கும், பெருமதிப்புக்கும் உரித்தானவரும், எனது ஆசிரியப் பெருந்தகைகளில் உன்னதமான ஒருவருமான மகா வித்துவான் கலாசூரி இலக்கிய கலாநிதி எப்.எக்ஸ்.சி.நடராசா ஐயா அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை அவரின் சம்மதத்துடன் அவர் உயிருடன் இருக்கும்போதே எழுதி வெளியிட்டமை எனக்குப் பெரும் ஆத்ம திருப்தியாகும். இதே போன்றே எனது வாழ்க்கை அனுபவங்களைத் தொகுத்து அழகியதொரு நூலாக்க வேண்டும் என்பது எனது நீண்டநாள் ஆசைகளில் ஒன்று. இதனை கட்டாயமாக எழுதி முடிக்கும்படி என்னைப் பலரும் தூண்டியதும் உண்டு. ஆனாலும் இதனைச் சாத்தியப்படுத்திய சாதனையாளராகத் திகழ்பவர் ஒருவரே ஆவார். அவர்தான் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வி, பிள்ளை நலத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.செல்வராஜா அவர்களாவர். சரித்திரம் எழுதவேண்டுமென எண்ணிய எண்ணங்களும், ஏற்கனவே எடுத்த முயற்சிகளும் தோல்வி அடைந்ததையும் அவர் அறிவார். இந்த நிலையில் எனது வாழ்க்கை வரலாற்றை தனது வழிகாட்டுதலில் நூலுருவாக்கி எடுக்க வேண்டுமென தீர்க்கமானதும், திடமானதுமான முடிவினை அவர் அன்றே எடுத்திருக்க வேண்டும்.

நான் சுகயீனமுற்றிருந்த வேளையிலே என்னைப் பார்ப்பதற்காக ஒரு நாள் பேராசிரியர் மா.செல்வராஜா அவர்கள் எனது இல்லத்துக்கு வந்திருந்தார். அவ்வேளையில் எனது வாழ்க்கை வரலாற்றை தான் முன்னின்று நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்துச் சென்றிருந்தார். அவர் அந்த உறுதி மொழியைச் செயற்படுத்தியதன் விளைவே இந்த அரிய நூலாகும். அவர் தனது அன்புக்குரிய மாணவர்களான திரு.ச.கணேசமூர்த்தி (அதிபர்) இவருடைய சகோதரன் திரு.ச.நவேந்திரன் ஆகிய இருவருக்கும் என்னை அறிமுகப்படுத்தி இப்பணியை நிறைவேற்றிக் கொடுக்குமாறு பணித்திருந்தார்.

அப்பேராசிரியரின் பணிப்பினை சிரமேற்கொண்டு செய்து முடிக்கும் நல்நோக்கத்துடன் அன்றே திரு.ச.கணேசமூர்த்தி (அதிபர்) அவர்கள் தனது சகோதரன் திரு.ச.நவேந்திரன் (ஆசிரியர்) அவர்களையும் அழைத்துக் கொண்டு எனது இல்லத்துக்கு வந்திருந்தார். "வணக்கம்" கூறியபடி வந்த அவர்கள் இருவரையும் நானும் வணக்கம் கூறி வரவேற்றேன். அவர்கள் இருவரும் தாம் வந்த காரணத்தைக் கூறினார்கள். அவர்களில் "செயலூக்கம்" தெரிந்தது, எனக்கோ பெருமகிழ்ச்சியாக இருந்தது. "இப்போது தான் பேராசிரியரின் வழிகாட்டுதலில் வாழ்க்கை வரலாற்றை எழுதி முடிப்பதற்கு உரியவர்கள் வாய்த்திருக்கிறார்கள்" என்ற புளகாங்கிதம் எனக்கு அந்தச் சந்தோசத்தோடு வந்த மாணவர்கள் இருவரிடமும் எனது வாழ்வின் சாரத்தை சுருக்கமாகச் சொல்லி முடித்தேன். அவர்கள் இருவரும் பிரமித்தபடி கேட்டுக் கொண்டிருந்தார்கள். வாழ்வின் சோகங்களைச் சொன்னபோது தம்மையறியாமலே கண் கலங்கியும் போனார்கள். "அடுத்த தடவை வரும்போது இவற்றையெல்லாம் எழுதுவதற்கு ஆயத்தமாக வாருங்கள்" என்று கூறி அந்த மாணவர்கள் இருவரையும் நான் வழியனுப்பி வைத்திருந்தேன்.

இதன்படி அவர்கள் இருவரும் தமது குருவின் வழியிலும், எனது கூற்றுக்கு ஏற்பவும் செயற்பட்டார்கள். திரு.ச.நவேந்திரன் (ஆசிரியர்) அவர்கள் பலவாரங்களாக எனது இல்லத்துக்கு வந்து என்னைத் துருவித் துருவி வாய்மொழி மூலமாகவும், எனது ஆவணப்படுத்தல்கள் மூலமாகவும் தேவையான தகவல்களையெல்லாம் பெற்று அரியமுயற்சியை நிறைவேற்றியுள்ளார். இதற்கு அவரது சகோதரர் திரு.ச.கணேசமூர்த்தி (அதிபர்) அவர்களும் பக்கபலமாக நின்று அயராது உழைத்துள்ளார்.

இந்த நூலில் குறிப்பிடப்படும் விடயங்கள் யாவும் என்னால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆதார பூர்வமான ஆவணங்களில் இருந்து பெறப்பட்ட உண்மையான தகவல்களே தவிர கற்பனையில் பெறப்பட்டவைகளல்ல. நனவிடை தோய்தல் என்பதற்கமைய இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஸ்ரீமத் ஆத்மகணானந்தஜீ மகராஜ் அவர்கள் எனக்குக் கூறிய ஒரு அறிவுரைக்கமைய நான் செய்த நல்லவைகளை நினைந்து தகவல்களைக் கொடுத்து நூலுருவாக்க உதவியுள்ளேன். இப்பணியை பேராசிரியரும், அவர்தம் இரு மாணவர்களும் மனமுவந்து தியாக மனப்பாங்குடன் செய்து முடிப்பதற்கு அருள் வளங்கிய எல்லாம் வல்ல இறைவனின் தெய்வீக கிருபையை ஆனந்தக் கண்ணீர் சொட்ட நானின்று நினைத்துப் பார்க்கிறேன்.

இந்த உயர்ந்த சேவையினை செயல் வீரர்களாக நின்று செய்து முடித்த கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வி, பிள்ளை நலத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.செல்வராஜா அவர்களுக்கும் அவர் வழிப்படுத்தலின் கீழ் செவ்வனே செயற்பட்டு எடுத்த கருமத்தை கருமமே கண்ணாகக் கொண்டு நிறைவேற்றி முடித்த அவரது

மாணவர்களான திரு.சரவணமுத்து கணேசமூர்த்தி (அதிபர்), திரு.சரவணமுத்து நவேந்திரன் (ஆசிரியர்) ஆகியோருக்கும், இவர்களது குடும்பத்தினர்களுக்கும் நானும் எனது மக்கட் செல்வங்களான வினோதா, சசிதரன், ஶ்ரீகாந்தன் ஆகியோரும் மனமார்ந்த நன்றியினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். கையெழுத்துப் பிரதியாக தற்போது உருவாகியுள்ள இந்த நூலாக்கம் விரைவிலே அச்சேறி கைவசம் கிட்ட வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**"எல்லோரும் வாழ்க, இன்பமே சூழ்க"**

**திருமதி. வினோதா ஜெகநாதன்.**

## பகுதி – 01

# ஆசிரியர் சிரோமணியின் வாழ்க்கை வரலாறு

## பொருளடக்கம்

**பகுதி 01**

**வாழ்க்கை வரலாறு**

**01. அறிமுகமும் வாழ்வியல் பின்புலமும்.**

1.1 குலமரபு.

1.2 பக்திநெறி.

1.3 பண்பாடு.

1.4 இல்லற வாழ்வு.

**02. மாணவப் பருவம்.**

2.1 ஆரம்பக் கல்வி.

2.2 இடைநிலைக் கல்வி.

2.3 ஆங்கிலக் கல்வி.

2.4 மாணவப் பருவத்தில் கிழக்கின் கல்விநிலை.

2.5 ஆசிரியர் கல்வி/ஆசிரியர் பயிற்சி.

**03. ஆசிரியர் சேவைக்காலம்.**

3.1 மலையகத்தில் ஆசிரியர் சேவை.

3.2 மட்டக்களப்பில் ஆசிரியர் சேவை.

3.3 சேவையாற்றிய பாடசாலைகள்.

**04. கோட்டைமுனை கனிஷ்டவித்தியாலய அதிபர்சேவை.**

4.1 வித்தியாலயத்தின் ஆரம்பகாலம்.

4.2 வித்தியாலயத்தின் இடைக்காலம்.

4.3 வித்தியாலயத்தன் பிற்காலம்.

**05. கல்விசார் பணிகள்.**

5.1 ஆலோசக ஆசிரியர் சேவை.

5.2 ஆசிரியர் தொழிற்சங்கப் பணி.

5.3 பரீட்சை மதிப்பீட்டுப் பணி.

5.4 விபுலானந்தர் கல்வி அபிவிருத்திச் சங்கப்பணிகள்

**06. சமய சமூகப் பணிகள்.**

6.1 மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தொடர்புகள்.

6.2 ஆலயத் திருப்பணிகள்.

6.3 மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றப்பணிகள்.

6.4 சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லப்பணிகள்.

6.5 புலவர்மணி நினைவுப் பணிமன்றப் பணிகள்.

6.6 பிற பொதுப்பணிகள்

**07. தமிழ் இலக்கியப்பணிகள்**

**08. வெளிநாட்டுப் பயண அனுபவங்கள்.**

8.1 கனடாவில் பெற்ற அனுபவங்கள்.

8.2 இலண்டனில் பெற்ற அனுபவங்கள்.

**09. தொலைநோக்குச் சிந்தனைகள்.**

9.1 கல்விச் சிந்தனைகள்.

9.2 சமய சமூக கலாசார சிந்தனைகள்.

**10. பெற்ற பட்டங்கள், விருதுகள், பாராட்டுகள்.**

**11. ஆசிரியர் சிரோமணியிடமிருந்து நாம் கற்கவேண்டிய பாடங்கள்.**

**12. வாழ்வின் இறுதி அத்தியாயம்.**







## 01.அறிமுகமும் வாழ்வியல் பின்புலமும்

**"அரிது அரிது மானிடராதல் அரிது"** என்னும் ஔவைப் பிராட்டியின் அமுத மொழிக்கமையவும், "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்கின்ற அப்பர் சுவாமிகளின் அருள்மொழிக்கிணங்கவும், **"செயலில் துறவினை மேற்கொள்"** என்று பகவத்கீதை தரும் போதனைக்கேற்பவும் நாட்டுக்கு நாடு, சமூகத்துக்குச் சமூகம், பிரதேசத்துக்குப் பிரதேசம், வெவ்வேறு துறைசார்ந்த பல பெரியார்கள் தோன்றிப் பிறந்ததன் பயனைத் தமது உயரிய பணிகள் மூலம் நிரூபித்து வந்திருக்கிறார்கள்; நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எந்தவொரு மக்கள் சமூகத்தினது பண்பாட்டுக்கும், காலச் சூழ்நிலைக்கும் இதுவே அவசியமாகின்றது. ஏனெனில் இவர்களால் தான் ஊரும், நாடும், உலகமும் உருப்படமுடியும். குறிப்பாக கல்வியியல் சார்ந்த பெரியோர்களும், ஆசிரியத்துவம் சார்ந்த பெருந்தகையாளர்களும் உயிர்ப்புள்ள சேவைகளைச் சமூகத்துக்காகச் செய்யவேண்டியதும், சமூகம் இத்தகையவர்களது சேவையின் மகத்துவம் பற்றி அறிந்திருக்க வேண்டியதும் இன்றியமையாததாகின்றது.

இத்தகைய பின்புலத்தில் மட்டக்களப்புத் தமிழகமும் காலந்தோறும் கல்வி, கலை, பண்பாடு போன்ற பலதுறைகளில் பலரைப் பிரசவித்து

அவர்கள்மூலம் பிரகாசம் பெற்ற பெருமைக்குரியது. இப்பிரதேசம் வடக்கே வெருகல் ஆற்றையும், தெற்கே குமுக்கன் ஆற்றையும், கிழக்கே வங்காள விரிகுடாக் கடலையும், மேற்கே ஊவா மலைக்குன்றுகளையும் எல்லைகளாகக் கொண்ட நிலப்பரப்பாகும். இது நில அமைப்பியல் ரீதியாகவும், மக்களின் வாழ்வியல் ரீதியாகவும் சிறப்புப் பெற்றது. சுவாமி விபுலானந்தர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை முதலான பன்மைத்துவம் சார்ந்த பெரியோர்களால் வளம்பல பெற்றது.

இத்தகையோர் இம்மண்ணின் வாழ்வியல் தடங்களில் முதல்நிலை இடங்களைப் பெறுகின்றனர். இவர்கள் தடம்பதித்துச் சென்ற வாழ்க்கைத் தடங்களின் வழித்தடங்களில் இன்னும்பல பல்துறைசார்ந்த பெருந்தகையாளர்களை இந்த மட்டக்களப்பு மனிதத்துவ விளைபுலம் உருவாக்கித்தந்த பெருமைக்கும், சிறப்புக்கும் உரியதாகின்றது. இத்தகையோருள் சிலரது வாழ்வியல் கோலங்கள் பல்வேறு எழுத்துமூலங்களாக வெளிவந்து அவர்களை வெளிச்சப்படுத்தி நிற்கின்றன. ஆனாலும் வெள்ளிடை மலையாக விளங்க வேண்டிய இன்னும் சிலரது வாழ்வியல் கோலங்கள் இலைமறை காய்களாக விளங்குகின்றன.

அத்தகைய சிலருள் ஒருவர் தான் மட்டுமண் பெற்றெடுத்த "**ஆசிரியர் சிரோமணி - செம்மனச் செல்வர் - சமூகசாகரன் தம்பிப்பிள்ளை செல்வநாயகம்**" அவர்களாவார். இவர் 1927.04.03ல் ஐயம்பிள்ளை தம்பிப்பிள்ளை - கந்தவனம் பொன்னம்மா தம்பதிக்குப் பிறந்த புத்திரராவர். இலங்கையின் சுதந்திரத்துக்கு முன்னர் தோன்றியவர்களில் ஒருவராவார். மட்டக்களப்பு ஆரையம்பதியில் இரண்டாம் குறிச்சியில், செங்குந்தர் வீதியில், செங்குந்தர் குலத்தில் முகிழ்ப்பெய்திய இவர்

தாமரைக்கேணியில் இல்லறவாழ்விலே பிரவேசித்ததை அடுத்து மட்டக்களப்பு எல்லைவீதி, திசவீரசிங்கம் சதுக்கத்தை வசிப்பிடமாகக் கொண்டிருந்தார். குணத்திலும், கொடைத்திறனிலும், ஒழுக்கத்திலும், வாய்மை தூய்மையிலும், மதிநுட்பத்திலும், மனிதநேயத்திலும், ஞாபகசக்தியிலும் நன்றியறிதலிலும் நனிசிறந்து விளங்கியுள்ளார்.

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களுக்கு ஒரு அக்காவும் இரண்டு தம்பிமார்களுமாக மூன்று சகோதரர்கள். திருமதி.மாரிமுத்து தர்மலிங்கம் (அதிபர்-மூத்தவர்), திரு.த.இராசரெத்தினம் (அதிபர்), திரு.த.இராஜேஸ்வரன் (M.L.T.) ஆகியோரே அவர்கள். இத்தகைய கல்விப்புலம் சார்ந்த குடும்பப் பின்னணியைக் கொண்டிருந்த இவர் இளம் பராயத்திலிருந்தே கல்வி, கேள்விகளில் சிறந்தோங்கி வந்துள்ளார். மாணவத்தால் மேன்மையுற்று ஆசிரியத்துவத்துக்கு வந்துள்ளார். இல்லற வாழ்விலே வேல்முருகு ருத்திராம்பாள் என்பவரைக் கரம்பற்றி நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையாகவும், சிறந்ததொரு குடும்பத் தலைவனாகவும் பலரும் பாராட்ட வாழ்ந்து காட்டியுள்ளார்.

சிறந்ததொரு குருசீட ஆசிரியத்துவ வாழ்வியல் பின்புலத்தையும் 'ஆசிரியர் சிரோமணி' அவர்கள் பெற்றிருந்தார். "மனிதன் வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டே இருக்கவேண்டும்" என்பதும், "கற்கமறுப்பவன் வாழ மறுப்பவனாகின்றான்" என்பதும் இராமகிருஷ்ண பரமஹம்சரின் திருவாக்கு. "மனிதனிடம் ஏற்கனவே புதைந்துள்ள தெய்வீகப்பூரணத்துவத்தை வெளிக்கொணர்வதே கல்வி" என்பது இராமகிருஷ்ணரின் சீடர்களில் ஒருவரான சுவாமி விவேகானந்தரின் அமுதவாக்கு. இந்த இருவரையும் மானசீகக் குருவாகக் கொண்டிருந்த சுவாமி விபுலானந்தரின் தலைமாணாக்கர்களில் ஒருவர் கலாசூரி இலக்கியச்செம்மல் மகாவித்துவான் எப்.எக்ஸ்.சி.நடராசா அவர்கள்.

இவரொரு பன்மைத்துவ சிந்தனையாளர். சிறந்த கல்விப்புலமையாளர். இந்த மகாவித்துவான் எப்.எக்ஸ்.சி. ஐயாவின் நன்மதிப்புக்குரிய மாணவர்களில் ஒருவராக நம் "ஆசிரியர் சிரோமணி" ஐயா அவர்கள் நல்லிடம் பெறுகின்றார்.

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் மாணவப் பருவத்திலே சிறந்ததொரு மாணவனாக, ஆசிரியர் பயிற்சிக் காலத்திலே முன்மாதிரியானதொரு ஆசிரிய மாணவனாக, ஆசிரியர் சேவையிலே ஆசிரியர் சிரோமணியாக, அதிபர் சேவையிலே முதன்மையானதொரு அதிபராக, ஆலோசக ஆசிரியராகப் பணியாற்றுகையிலே ஆசிரியர்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாக, நன்னடத்தை வாழ்விலே செம்மனச் செல்வராக, சமய வாழ்விலே உத்வேகமுள்ள பணிமகனாக, சமூக சேவையிலே சமூக சாகரனாக, தமிழ்ப்பணி தொடர்பிலே தாய்மொழிப் பற்றுமிக்கதொரு குடிமகனாக, ஆளுமை தொடர்பிலே பன்முகத் தன்மை மிக்கவராக, சிந்தனைப்பாங்கிலே தூரநோக்குடைய ஒருவராக அகலித்துச் செல்லும் அறிமுகத்தினைப் பெறுகின்றார். சமூகத்தால் புடம்போடப் பட்டிருக்கின்றார். அவரது காலத்து ஆசிரியப் பெருந்தகைகளில், அதிபர்களில், சமய-சமூக சிந்தனையாளர்களில், அனுபவ சாலிகளில், கல்விப் புலமையாளர்களில் தனக்கெனத் தனித்துவமானதொரு இடத்தினைப் பெற்றுவிடுகின்றார்.

### 1.1 குலமரபு

திரு.த.செல்வநாயகம் ஐயா அவர்கள் பிறந்த பதியும் முகிழ்ந்த செங்குந்தர் குலமும் கூர்ந்து நோக்கத் தக்கவை. மட்டக்களப்பு நகரின் தென்பால் நான்குமைல் தொலைவில் அமையப்பெற்று பல குலமக்களைத் தம்மகத்தே கொண்டதாக விளங்குவது ஆரையம்பதி தமிழ்க் கிராமம். இது வடக்கே காத்தான்குடியையும், தெற்கே கோயிற்

குளத்தையும், மேற்கே மட்டக்களப்பு வாவியையும், கிழக்கே வங்காள விரிகுடாக் கடலையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இப்பழம்பெரும் தமிழ்க்கிராமம் "ஆரைப்பற்றை" என்னும் பெயராலும் அழைக்கப்பெறுவதுண்டு. இப்பெயர் மெல்லமெல்லப் பின்நிலைக்குச் சென்றுவிட இன்று "ஆரையம்பதி" என்பதே இப்பதியின் பெயராக வழங்கப்பெற்று வருகின்றது. இக்கிராமம் சில அறிஞர்களையும், சமூகப் பற்றாளர்களையும், பக்திமான்களையும் காலந்தோறும் உருவாக்கிய பெருமைக்குரியது.

ஆரையம்பதிக் கிராமத்தின் முகப்பில் காத்தான்குடியின் தெற்குக் கரையோரமாக கிராமத்தின் அணிகலன்களாக விளங்குவன ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயமும், மூத்ததம்பி நொத்தாரிஸ் வித்தியாலயமும் ஆகும். செங்குந்தர் குலம் விளங்க அருள்பாலிக்கும் ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயமும், பல பெரியோர்களை உருவாக்கிய மூத்ததம்பி நொத்தாரிஸ் வித்தியாலயமும் செங்குந்தர் குலத்தின் பெருமையை விளக்கும் சாதனங்களாக மிளிர்கின்றன. இக்குலத்தைச் சேர்ந்த ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களையும், அன்னாரது குடும்பத்தையும் இந்த ஆலயமும், வித்தியாலயமும் உயர்ந்த நிலைகளுக்கு இட்டுச்சென்றுள்ளன. இதேபோன்று ஏனைய மக்கள் வாழ்விலும் ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயமும், மூத்ததம்பி நொத்தாரிஸ் வித்தியாலயமும் முக்கியத்துவம் பெறுகின்றன. பண்பாட்டின் நிலைக்களனாய், கிராமத்தின் இதயதானமாய் இவையிரண்டும் விளங்குகின்றன.

செங்குந்த மரபினர் வீரவாகுதேவர் முதலிய நவவீரர் வழித் தோன்றியோராவர். "குந்தம்" என்றால் "வீரப்படை" எனப்பொருள்படும். "செங்குந்தர்" என்றால் "குந்தம்" என்னும் வீரப்படைக்கு உரியார்

எனப்பொருள்படும். அன்றியும் இம்மரபினருக்கு "கைக்கோளர்" என்னும் பெயர் ஏற்பட்டதற்கும் இதுவே காரணம் எனலாம். அதாவது "கைக்கோளர்" என்றால் "குந்தம் என்னும் ஈட்டியைக் கைக்கொண்டோர்" என்பது பொருளாகின்றது. அச்சொல் "கைக்கோலர்" என வழங்கப்பெற்று காலப்போக்கில் "கைக்கோளர்" என மாற்றம் பெற்றதென்பர்.

ஆக, "செங்குந்தர்" என்போர் வீரவாகுதேவர் முதலிய ஒன்பதின்மர் மரபினர் என்பது புராணப் பிரசித்தம். இதனை,

**"தேவி யுரிமை பாதச் சிலம்பில் வரு வீரியர்கள் - சிறு**
**தேருருட்டி யருளே**
**சிவ கயிலாய பரம்பரை யாரென்னும் செங்குந்தரே"**

என்னும் பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது. அத்துடன் செங்குந்தர் என்போர் சிறந்த சமயப் பற்றும், ஒழுக்க சீலமும் உடையோர் என்பதனை,

**"தேவார முற்றும் படிப்பாரும் அங்கையிற் செங்குந்தரே**
**திருவாசகம் சொல் ஒருவாசகத் தரும் செங்குந்தரே"**

என்னும் பாவடிகள் மூலம் இதனை அறிய முடிகின்றது.

(ஆதாரம் - செங்குந்தர் பிரபந்தத் திரட்டு)

செங்குந்தர் குலம் பற்றிய சுவையான பல தகவல்களைத் தரும் "செங்குந்தர் பிரபந்தத் திரட்டு" என்னும் நூல் செங்குந்தர் மரபைச் சேர்ந்த ஒட்டக்கூத்தர் பாடிய 'ஈட்டி எழுபது' முதல், புகழேந்தியார், ஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர், நாகைமுத்துக் குமாரதேசிகர் வரையான பலர் பாடியருளிய பாடல்களைக் கொண்ட ஒரு தொகுப்பாகும். இது

செங்குந்தர் குலம் பற்றிய பல உண்மைகளைத் தெளிவுபட இயம்புகின்ற - குலவரலாறு பற்றியதோர் நூலாகும். இப்பின்புலத்தில் ஆசிரியர் சிரோமணி த. செல்வநாயகம் அவர்களிடத்திலே செங்குந்தர் குலமரபினருக்குரிய உடல், உள, உறுதிப்பாட்டையும், உற்சாக உணர்வையும், உயர்ந்த ஒழுக்கநெறி விழுமியங்களையும் காணக்கூடியதாக இருந்தது. குலநெறி வாழ்விலே ஒரு சிறந்த குணவானாக வாழ்விலே பலரும் இவரைக் கண்டுகொண்டார்கள்.

"செய்யும் தொழிலைச் சீர்தூக்கிப் பார்க்கின் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை" என்பதற்கேற்ப செங்குந்தர் குலத்துக்குரிய குலத்தொழிலாகிய நெசவுத் தொழிலைத் தேர்ந்தெடுத்தவர் இவரது தந்தையார் திரு.தம்பிப்பிள்ளை அவர்கள். அவர், தான் மட்டுமன்றி கிராமத்தைச் சேர்ந்த ஏனையோருக்கும் தொழில் வழங்கியவர். அதிலே மகிழ்ச்சியும், வெற்றியும் கண்டவர். தந்தையாரின் இத் தொழிலுக்கு தனயனான திரு.த.செல்வநாயகம் அவர்களும் உதவி வந்திருக்கிறார். இத்தொழிலால் இவர்களது குடும்பம் நிமிர்ந்தது. "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற பொன்மொழிக்கேற்ப "நெய்யும் தொழிலுக்கு" இவர்கள் முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

**1.2 பக்திநெறி**

"செங்குந்தர் பிரபந்தத் திரட்டு" என்னும் செங்குந்தர் குலவரலாறு கூறும் நூலின் வாயிலாக அக்குல மக்களது சமயநெறிப் பற்றினையும், சிவநெறிப் பாங்கினையும், பக்திநெறிப் பான்மையையும் பற்றித் தெரிந்துகொள்ள முடியும். அந்நூலில் வரும் "சிவ கயிலாய பரம்பரையாரென்னும் செங்குந்தரே" என்ற தொடரும், "தேவாரம் முற்றும் படிப்பாரும்...செங்குந்தரே, திருவாசகம் சொல் ஒருவாசகத்தரும் செங்குந்தரே" எனவரும் தொடர்களும் இதனைச் சான்றுப்படுத்தும்.

"ஆசிரியர் சிரோமணி" அவர்களது குடும்பமும் இக்குலப் பின்னணியில் சமய உணர்விலும், பக்திநெறியிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. ஐயா செல்வநாயகம் அவர்களின் பெற்றோர் ஐயம்பிள்ளை தம்பிப்பிள்ளை அவர்களும், கந்தவனம் பொன்னம்மா அவர்களும் ஊரின்கண் உள்ள ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயத்தின் மீது மிகுந்த பக்தி கொண்டு ஆலயத்தின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்தவர்கள். சமயப்பற்று மிக்கவர்களாக வாழ்ந்தவர்கள். சிவநெறி மறவாச் சிந்தனையாளர்களாக சைவநெறிமுறைகளைப் பின்பற்றி வாழ்விலே ஒழுகியவர்கள். பக்திவைராக்கியம் மிக்கவர்களாகத் திகழ்ந்தவர்கள். ஊரிலே கூடிய மதிப்பும், மரியாதையும் பெற்றவர்கள். ஊர்மக்களின் நன்மதிப்பினைத் தமதாக்கிக் கொண்டவர்கள். ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வுகளில் நிறைகுடம், திருவிளக்கேந்தி இருக்கும் வரை குடி புகுந்தவர்கள் இவர்களே எனலாம்.

தனது பெற்றோரது பக்திநெறிப்பாங்காலும், சைவநெறிச் செழுமையாலும் இளமைக்காலம் முதல் இறுதிக்காலம் வரை "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் ஈர்க்கப்பட்டிருந்தார். "தூய்மையே தெய்வீகம்" என்ற இராமகிருஷ்ண பரமஹம்சரின் போதனைக்கு ஏற்றாற்போல் வாழ்ந்துவந்தார். "நீறில்லா நெற்றி பாழ்" என்பார்களே. இத்தகைய நெற்றியை இவர் விரும்பவில்லை. பெரும்பாலும் நெற்றிப்பரப்பிலே எப்போதும் திருநீற்றுக்கோடுகள் அழுத்தமாகப் பதிந்திருக்கும். இது சாந்தமும், கருணையும் நிறைந்த இவரது முகத்தினை மேலும் அழகுபடுத்தி நிற்கும்.

ஒருவருக்கு உணவு மூன்று வேளையும் எவ்வளவு அவசியமோ அதேபோல மூன்று வேளையும் தவறாமல் இவர் இறைவனைத் துதிசெய்து வாழ்ந்துவந்தார். இறைவழிபாட்டின் போது எண்ணம், சொல்,

செயல் மூன்றையும் இறைவன்மீதே செலுத்தியிருப்பார். ஆலயவழிபாட்டிலும், திருப்பணி வாழ்விலும், சமயநெறியிலும் தீவிர ஈடுபாடு இவருக்கிருந்தது. இவரது பக்திநெறி வாழ்விலே ஆரையம்பதி ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயமும், மட்டக்களப்பு கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயமும், மட்டக்களப்பு எல்லைவீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயமும், மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றமும், சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லமும், மட்டக்களப்பு கல்லடி உப்போடை இராமகிருஷ்ண மிஷனும் காலத்தால் அழியாத தடயங்களாகும்.

## 1.3 பண்பாடு

தமிழர் தம் பண்பாட்டில் மட்டக்களப்புப் பிரதேசத்துக்கு ஒரு தனி இடம் உண்டு. வந்தோரை வாஞ்சையுடன் வரவேற்பதிலும், பண்பாட்டுக்கூறுகளைப் பேணிக் காப்பதிலும் இந்நிலபுல மக்கள் தனித்துவம் உடையவர்கள். ஆசிரியர் சிரோமணி தம்பிப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் பிறந்ததும், தவழ்ந்ததும், அடியெடுத்துவைத்து நடந்ததும், பயின்றதும், தமிழைக் கற்றதும், ஆசிரியர் பயிற்சியைப் பெற்றதும், இல்லறம் புகுந்ததும், இனிய பிள்ளைகளைப் பெற்றதும், பணிகளை அதிகம் செய்ததும், ஆசிரியர் சிரோமணியாய் - செம்மனச் செல்வராய் வாழ்விலே உயர்ந்ததும் இந்த நிலத்தில் தான். நடை, உடை, பாவனை, சிந்தனை, செயல் ஒவ்வொன்றிலும் இவரது வெளிப்பாடு ஒரு தனிப் பண்பாடு.

விதிப்படி இறைவனைத் துதிப்பதும், முறைப்படி திருநீற்றைத் தரிப்பதும், ஆலயத் திருப்பணி புரிவதும், சமய நிறுவனங்களைச் சார்ந்துபணி செய்வதும், சமயப் பெரியார்களை மதிப்பதும், பரிசுத்தம் காப்பதும் இவரது சைவசமயப் பண்பாடு. வெள்ளைநிற வேட்டியும் வாலாமணியும்

அணிவதும், தன்னிடம் வருவோரை முகமலச்சியோடு வரவேற்பதும், அவர்களுக்கு உதவிகள் நல்குவதும், இல்லத்துக்கு வந்து செல்வோரைத் தனது குருநாதர் எப்.எக்ஸ்.சி.நடராசா ஐயா போல் தலைவாயில் வரைசென்று வழியனுப்பி வைப்பதும், தமிழ் இலக்கண இலக்கியப் பனுவல்களில் ஊறித்திளைப்பதும், தன் தாய்தந்தையரை நேசித்தது போல தமிழை நேசித்து நடப்பதும் இவரது தமிழ்ப் பண்பாடு. மனித நேயம் மிக்கவராக வாழ்வதும், எல்லோரையும் மதிப்பதும், உரிய நேரத்துக்குக் கடமைக்குச் செல்வதும், கள்ளம் கபடமற்றுக் கருமங்களைச் செய்வதும், பொதுநலன் நோக்கியே செயற்படுவதும் இவரிடம் காணப்பட்ட பொதுவான மனிதப்பண்பாடு.

“பண்பெனப் படுவது பாடறிந்தொழுகுதல், அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை” எனக் கலித்தொகையும், “அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும் பண்புடைமை என்னும் வழக்கு” எனத் திருக்குறளும் கூறுகின்ற உண்மைகளின் வாயிலாக ஒரு மக்கள் சமூகத்தின் பண்பாட்டில் இருபெரும் கூறுகளாக அன்புடைமையும், பண்புடைமையும் விளங்குவதை அறியமுடிகின்றது. ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் ஐயாவினுடைய வாழ்விலும் இத்தகைய அன்புடைமையும், பண்புடைமையும் உயர்ந்து விளங்கியதை காணமுடிகின்றது. இவற்றைத் தவிர வாய்மை, தூய்மை, நேர்மை, நீதி நெறிமுறை, ஒழுக்கமுடைமை போன்ற பண்பாட்டு அம்சங்களும் இவருடைய வாழ்விலே மேலோங்கியிருந்தன. இத்தகைய பண்பாட்டியல் சார்ந்த பின்புலம் இவர் உயர்வை நோக்கித் தடம்பல பதிப்பதற்கு ஒரு அடிப்படையாக அமைந்திருக்கின்றது.

## 1.4 இல்லற வாழ்வு

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் தனது இருபத்தைந்தாவது (25) அகவையில் 1952.07.09ல் வேல்முருகு ருத்திராம்பாள் என்பவரைக் கரம் பிடித்து இல்லறம் பிரவேசித்தார். இவர் மட்/ஆரைப்பற்றை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் உதவி ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்த காலம் அது. 1948.02.04ல ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்ற இலங்கை தனது நான்காவது சுதந்திரதினத்தைக் கொண்டாடி ஐந்தாவது மாதத்தைக் கடந்து கொண்டிருந்த காலப்பகுதி அது. இவ்வாறு சுதந்திர இலங்கைக்கு நான்காவது வயதும், தனக்கு இருபத்தைந்தாவது வயதும் நடந்துகொண்டிருக்கின்ற காலப்பகுதியிலேயே இவரது திருமணம் நடந்து முடிந்தது.

இல்லாளை ஏற்று இல்லறத்தை நல்லறமாய் காத்து ஒழுகிவரும் காலத்தில் பிள்ளைச் செல்வங்களாக வினோதா, சசிதரன், திலீபன், ஸ்ரீகாந்தன் ஆகிய நால்வரும் பிறப்பெய்துகின்றனர். தந்தையும், தாயும், பிள்ளைகளும் மகிழ்ந்து குலாவிய நிலையில் குடும்பம் வளர்ந்து வந்தது. பிள்ளைகள் நால்வரும் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கி வந்தார்கள். "இல்லறம்" இனிதே நடத்துகொண்டிருந்தது. தந்தையாரின் ஆசிரியத்துவ சேவையும் நன்கு தொடர்ந்துகொண்டிருந்தது.

குடும்பத்திலே மூத்தவரான வினோதா (வினோ) அவர்கள் கல்வியால் உயர்ந்து, பயிற்றப்பட்ட கணித பாட ஆசிரியையாக வாழ்விலே நிமிர்ந்தார். "தன் ஆசிரியத்துவ வழியிலே பணியினைத் தொடர்வதற்கு அன்புமகள் உள்ளாள்" எனத்தந்தையார் மகிழ்ந்தார். ஒரேயொரு மகளான இவர் மட்/சிவானந்தா வித்தியாலயத்தில் பதினாறு (16) வருடங்கள் திறமையாகக் கற்பித்த பின்னர் மட்/புனித மிக்கேல்

கல்லூரியில் தனது பணியினைத் தொடர்ந்து கொண்டிருக்கும் வேளையில் 1999ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி தாய் காலமாகியதை அடுத்து 2000ம் ஆண்டில் கடமையில் இருந்து ஓய்வு பெற்றார்.

1994ல் தம்பி திலீபனையும், 1999ல் தாய் ருத்திராம்பாளையும் இழந்த சோகமும், தாயின் இழப்பையடுத்து தனது பாடசாலை ஆசிரியத்துவ சேவையிலிருந்து நீங்கிய தவிப்பும் "வினோ ரீச்சரை" மிகவும் வருத்திக் கொண்டிருந்தது. இதே மனவருத்தத்தை தந்தையாரும் மற்றைய இரு தம்பிமாரும் அடைந்திருந்தார்கள். இத்தகைய சோகப்பின்னணி ஏற்படுத்திய மாறாத ரணங்கள் குடும்பத்தை விட்டு நீங்காத நிலையிலே "வினோ ரீச்சர்" 2007ல் தனது கணவனார் திரு.மயில்வாகனம் ஜெகநாதன் அவர்களை இழந்துவிடுகின்றார். இன்று தன்னுயிர்த் தந்தையாரையும் இழந்து தவிக்கின்ற நிலை... பாடசாலைப் பணிநிலையில் இருந்து ஓய்வு பெற்றாலும், பெரும் துன்ப துயரங்களை வாழ்விலே சுமந்தாலும் கல்லடி-உப்போடை இராமகிருஷ்ணமிஷன் மாணவர்களுக்குச் சென்று கற்பிப்பதையும், தன்னிடம் வீட்டுக்கு வரும் மாணவர்களுக்குக் கற்பிப்பதையும் "வினோ ரீச்சர்" இன்னும் விட்டுவிடவில்லை. தன் தந்தைக்குச் செய்யும் பெருங்கடமையாகக் கருதி மாணவ சமுதாயத்துக்கு இப்பணியை இவர் ஆற்றி வருகின்றார். ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் ஐயாவின் மகன் சசிதரன் அம்பாறை காடி தொழிநுட்பக் கல்லூரியில் மின்சாரத் துறையில் பயிற்சி பெற்று கல்முனை மின்சாரத் திணைக்களத்தில் பணியாற்றியவர். இவர் தற்போது கனடாவில் மனைவி ராகவன்பிள்ளை நளினியுடனும் பிள்ளைகள் அஜனி, விஷாந், கோபிகா ஆகியோருடனும் வசித்து வருகின்றார்.

மற்றைய மகனான திலீபன் அவர்கள் க.பொ.த.உயர்தர வகுப்பில் அரசினர் கல்லூரியில் கல்வி கற்றவர். சிறந்த ஞாபக சக்தியும், செயலில் செம்மையும் உடையவர். மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் தந்தையாரின் வெற்றிக்கு இவரது கைவண்ணமே மூல காரணம் எனலாம். தந்தையாரின் இவ்வித்தியாலய சேவைக் காலத்திலே மாணவர் சேர்வு இடாப்பு, மற்றும் பரீட்சைப் புள்ளி விபரங்கள், நேரசூசி என்பவற்றைச் சிறப்பாகவும் செம்மையாகவும் தந்தையாருக்குச் செய்து கொடுத்து அவரது சேவை வாழ்வுக்கு உறுதுணையாய் நின்றுழைத்தவர் இத்தனயனே ஆவார். இத்தகைய மகன் திலீபனை 1994 ஏப்ரல் 26ல் இழந்த தந்தையார் அவர்கள் வாழ்க்கையில் வலது கையை இழந்தது போன்ற துயர நிலைக்கு உள்ளானார்கள்.

இன்னொரு மகனான ஸ்ரீகாந்தன் அவர்கள் "கட்டுப் பெத்த" தொழிநுட்பக் கல்லூரியில் கல்வி பெறும் காலை ஏற்பட்ட இன நெருக்கடி காரணமாக படிப்பைப் பூர்த்தி செய்யாது ஒருவருடக் கல்வியுடன் ஜேர்மனி சென்று அங்கிருந்து பிரான்சினை அடைந்து அதன்பின்பு பிரித்தானியாவைச் சென்றடைந்து தற்போது மனைவி சதாசிவம் ஜயந்தியுடனும், பிள்ளைகள் தீப்டிலாந்த், அருந்த் ஆகியோருடனும் அங்கேயே வாழ்ந்து வருகின்றார்.

இவ்வாறு இன்பமும், பெரும் துன்ப துயரங்களும் நிறைந்ததொரு வாழ்வியல் பின்புலத்தை ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் பெற்றிருந்தார். 1994ல் தன் அருமைப் புதல்வன் திலீபன் அவர்களை இழந்து ஐந்து வருடங்களால் - 1999ல் தன்னுயிர் மனைவியை இழந்ததோடல்லாமல் 2007ல் தன் மருமகனையும் இழந்து இவர் அனுபவித்த சோகங்கள் சொல்லில் அடங்கா.

## 02.மாணவப் பருவம்

ஒரு மனிதனின் வாழ்வில் மாணவப் பருவம் என்பது எத்தனை ஜென்மம் எடுத்தாலும் மீளப் பெற முடியாத ஒன்றெனலாம். அந்த வகையில் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களின் மாணவப் பருவமும் சிறப்பும், செழுமையும் பெறுகின்றதெனலாம். இவர் தனது மாணவப் பருவத்திலே ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, ஆங்கிலக் கல்வி, ஆசிரியர் கல்வி ஆகிய நான்கையும் முறையாகப் பெற்று வாழ்விலே முன்னேற்றம் கண்டார். படிப்பையே துடிப்பாகக் கொண்டிருந்ததனால் பலபடிகளில் வாழ்விலே உயர்ந்து சென்றார்.

"ஆச்சாரிய தேவோ பவ" என்னும் வாசகத்தால் வேத இலக்கியம் கூறும் "ஆசிரியர்களைத் தெய்வமாகப் போற்றுவோமாக" என்னும் உண்மைக்கு அமைவாக இவர் தனது மாணவப் பருவத்திலே தனக்குக் கல்வி புகட்டிய ஆசிரியப் பெருந்தகைகள் அனைவரையும் மிகவும் மதிப்பும், மரியாதையும் கொடுத்து உயர்வாகக் கருதி வாழ்ந்துவந்தார். "குருவில்லா வித்தை பாழ்" என்ற ஔவையாரின் அமுதமொழியையும் இவர் அறிந்து கொள்ளத் தவறவில்லை.

### 2.1 ஆரம்பக் கல்வி

ஒரு மனிதனது வாழ்விலே ஆரம்பக் கல்வியானது மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. உறுதிமிக்க அத்திவாரம் தான் உறுதிமிக்க கட்டடத்தை, உறுதிமிக்க கோபுரத்தை உருவாக்கும். பலவீனமான அத்திவாரங்கள் பலவீனமான கட்டடங்களையும், பலவீனமான கோபுரங்களையும் தான் எப்போதும் உருவாக்கும். ஆக, ஒரு கட்டடத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஆரம்பிக்கும் போது முதலில் உறுதியானதும், பலமானதுமான அத்திவாரத்தை நாம் இட்டுக் கொள்ளவேண்டும். ஆரம்பக் கல்வி என்பதும் உறுதியானதொரு

அத்திவாரம் போன்றுதான் மனித வாழ்விலே அமையவேண்டும். ஏனெனில் அத்திவாரம் பிழைத்தால் கட்டடம் ஆட்டம் கண்டுவிடுவதைப் போலவும், கோபுரம் சரிந்து விடுவதைப் போலவும் ஆரம்பக் கல்வி பிழைத்தால் அதனைத் தொடர்ந்து வருகின்ற அனைத்துக் கல்வியும் பிழைத்துவிடும். வாழ்வே ஆட்டம் கண்டுவிடும். ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் ஐயாவினுடைய ஆரம்பக் கல்வியானது சிறந்ததொரு அத்திவாரத்தின் அமைப்பைப் போல் சிறந்து விளங்கியது.

இவரை, இவரது பெற்றோர் ஆரம்பக் கல்விக்காக ஊரிலே உள்ள மெதடிஷ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலே (தற்போதைய மூத்ததம்பி நொத்தாரிஸ் வித்தியாலயம்) 1932ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ம் திகதி சேர்த்துவிட்டார்கள். '0984' என்பது இவரது சேர்விலக்கமாக இருந்தது. அங்கே திரு.ஜே.பி.பொன்னம்பலம் என்னும் ஆசிரியப் பெருந்தகையிடம் நன்மாணாக்கனாக ஆரம்பக் கல்வியினைக் கற்று வளர்ந்து வந்தார்.

திரு.ஜே.பி.பொன்னம்பலம் அவர்களைப் பொறுத்தமட்டில் அவர் ஒரு சிறந்த ஆசிரியர். நடையுடை பாவனையிலும், நன்னடத்தைப் பாங்கிலும் முன்மாதிரியானவர். மாணவர்களது மனங்களைக் கவரும் வகையில் விளக்கமாகவும், தெளிவாகவும் கற்பிப்பது தொடர்பில் திறமையானவர். இதனால் இவரிடம் ஆரம்பக் கல்வியைப் பெற்ற மாணவர்கள் அனைவரும் நன்னடத்தையிலும், கல்வியிலும் மேலோங்கினர். இதற்கு "நமது குருநாதர்" நல்லதொரு உதாரணர். இவர் இப்பாடசாலையை விட்டு 1939ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதியன்று விலகும் போது ஆறாம் வகுப்புச் சித்தி அடைந்திருந்தார். ஆரையம்பதி மெதடிஷ்தமிஷன் பாடசாலையிலே இவர் பெற்ற ஆரம்பக் கல்வியானது வாழ்க்கை முழுவதிலும் செல்வாக்குச் செலுத்தி நின்றது.

## 2.2 இடைநிலைக் கல்வி

ஒரு மனிதனது வாழ்விலே ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து முக்கியத்துவம் பெறுவது இடைநிலைக் கல்வியாகும். ஆரம்பக் கல்வியின் மூலம் பெற்றுக் கொள்ளும் வெற்றியானது இடைநிலைக் கல்வியை வேகமும், விறுவிறுப்பும் கொண்டதாக்கும். இதற்கேற்றாற் போல் ஆரம்பக் கல்வியினை மிகவும் கண்ணியமாய் முடித்துக்கொண்ட திரு.த.செல்வநாயகம் ஐயா அவர்கள் இடைநிலைக் கல்வியினை இரு பாடசாலையிலே பெற்றுக் கொண்டார்கள். காத்தான்குடி 05ம் குறிச்சி ஆண்கள் பாடசாலையில் திரு.எஸ். செல்லப்பா என்னும் ஆசிரியப் பெருந்தகை குருவாக வாய்த்தார். காத்தான்குடி மத்திய கல்லூரியில் காரைநகரைச் சேர்ந்த எம். ஏ. கந்தையா என்னும் பெயர் கொண்ட ஆசிரியப் பெருந்தகை குருவாக வாய்த்தார்.

திரு.எஸ்.செல்லப்பா, திரு.எம்.ஏ.கந்தையா ஆகிய இருவருமே ஆசிரியத்துவத்திலே நன்கு அறியப்பட்டவர்கள், பெருந்தகைகள். சிறந்த ஆசிரியர் ஒருவர் கொண்டிருக்கவேண்டிய நன்னடத்தைப் பாங்குகளையும், ஒழுக்கநெறி விழுமியங்களையும் உடையவர்கள். ஆரம்பக் கல்வியிலே திரு.ஜே.பி.பொன்னம்பலம் என்னும் ஆசிரியப் பெருந்தகையவர்கள் எத்தகைய முக்கியத்துவம் பெற்று விளங்கினாரோ அதுபோன்றே ஐயா செல்வநாயகம் அவர்களது இடைநிலைக் கல்வி வாழ்விலே திரு.எஸ்.செல்லப்பா மற்றும் திரு.எம்.ஏ.கந்தையா ஆகிய இருவரும் முதன்மையும், முக்கியத்துவமும் பெற்று விளங்கினார்கள். இவரது இடைநிலைக் கல்வியானது அடுத்தகட்டக் கல்விக்கு ஆயத்தப்படுத்தியது. கற்றலின் மீதான ஆர்வத்தை மேலும் தூண்டியிருந்தது.

## 2.3 ஆங்கிலக் கல்வி

ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அவர்கள் ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி இரண்டையும் பெற்றதோடு மட்டும் நின்றுவிடவில்லை. அவ்வாறு நின்றிருந்தால் ஆங்கிலக் கல்வியையும், ஆசிரியர் கல்வியையும் இவர் பெற்றிருக்க முடியாது. ஆசிரியர் சேவைக்கு வந்திருக்க முடியாது. ஆசிரியர் சிரோமணியாக வாழ்விலே உயர்ந்திருக்க முடியாது. அந்தவகையில் இவர் காத்தான்குடி மத்திய கல்லூரியில் இடைநிலைக் கல்வியினை தனது 16வது வயதினிலே முடித்துவிட்டு ஆசிரிய கலாசாலை செல்வதற்கு வயது போதாமையினால் ஆங்கிலக் கல்வியைக் கற்பதற்காக அதன்மீது மிகுந்த பற்றுக்கோடு உடையவராகி கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலயம் பிரவேசித்தார்.

‘ஆங்கிலம் தெரியாதவன் அரைமனிதன்’ என்பார்கள். அத்தகையதொரு அரைமனிதனாக வாழ்வதை இவர் விரும்பாமையினால் ஆங்கிலக் கல்வியைப் பெறுவது தொடர்பில் அதிகூடிய ஈடுபாட்டினைக் காட்டினார். ஐயா செல்வநாயகம் அவர்கள் ஆங்கிலக் கல்வியைக் கற்பதற்காக நுழைந்துகொண்ட சிவானந்தா வித்தியாலயம் என்பது சர்வசாதாரணமானதொரு பாடசாலையல்ல. இது அகில இலங்கை முழுவதிலும் அறியப்பட்டதொரு பாடசாலையாகும். உலகம் போற்றும் உத்தமர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளால் உருவாக்கப்பட்ட ஆங்கிலப் பாடசாலையாகும். அந்தவகையிலே இந்த வித்தியாலயத்திலே ஆங்கிலம் கற்பதற்கு வாய்ப்புக் கிடைத்தமையானது இவர் வாழ்வில் பெற்றதொரு பெரியதொரு பாக்கியமே ஆகும்.

இப்பாடசாலையிலே திரு.எஸ்.அம்பலவாணர் (B.Sc.), திரு.கே.கணபதிப்பிள்ளை (F.R.G.S.), திரு.வி.திருநாவுக்கரசு (B.A), மகாவித்துவான் பண்டிதர் வி.சீ.கந்தையா முதலான தகமைசான்ற ஆசிரியப் பெருந்தகைகளிடமே இவர் ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக்கொண்டார். இவர்கள் அனைவருமே தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர்கள். தேசம் நன்கு அறிந்தவர்கள். தன் உயர் குருமாராக இவர்களை மதித்து, கீழ்ப்படிந்து, வேதவாக்காக இவர்களது போதனைகளைக் கருதி திரு.த.செல்வநாயகம் ஐயா அவர்கள் ஆங்கிலக் கல்வியினைப் பெற்றுவந்தார். இத்தகைய ஆங்கிலக் கல்வி அறிவானது இவரது தொடர்ச்சியான கல்விப் பயணத்துக்கு மேலும் ஒருபடியான வேகத்தையும், விறுவிறுப்பையும் ஊட்டி நின்றது எனலாம்.

## 2.4 மாணவப் பருவத்தில் "கிழக்கின்" கல்விநிலை

இக்கால கட்டத்திலே கிழக்கு மாகாணத்தில் சமய ரீதியாகவே பாடசாலைகள் நிருவகிக்கப்பட்டு வந்தன. சமய நிலை கல்வி நிலையிலே பெரும் தாக்கம் செலுத்தி வந்தது. இராமகிருஷ்ண மிஷன், மெதடிஷ்த மிஷன், கத்தோலிக்க திருச்சபை என்பவை பாடசாலைகளை முகாமைத்துவம் செய்யும் அமைப்புகளாகப் பணியாற்றிக் கொண்டிருந்தன. கல்லடி உப்போடையில் அமைந்துள்ள சிவானந்தா வித்தியாலயம், விவேகானந்தா வித்தியாலயம், மற்றும் 'புளியந்தீவில்' அமைந்துள்ள ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலை என்பனவும் ஆரையம்பதி இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம், மண்டூர் இராம கிருஷ்ண மிஷன் வித்தியாலயம் ஆகியவையும் இராம கிருஷ்ண மிஷனால் நிருவகிக்கப்பட்ட பாடசாலைகளாக விளங்கின.

சுவாமி விபுலானந்தர் காலத்தில் ஆரம்பித்து நிருவகிக்கப்பட்ட பாடசாலைகள் சைவப் பாடசாலைகள் என்னும் பெயரில் கல்லடி உப்போடையில் இருந்த சுவாமி நடராஜானந்தா அவர்களால்

நிருவகிக்கப்பட்டன. மெதடிஷ்த சபையின் கீழ் இயங்கி வந்த மட்டக்களப்பு மெதடிஷ்த மத்திய கல்லூரி, மட்/வின்சன்ற் மகளிர் கல்லூரி, அரசடி மெதடிஷ்த மிஷன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, அரசடியில் அமைந்திருந்த ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை என்பனவும் மிஷன் முகாமையாளர் எஸ்.ஏ.செல்வநாயகம் அவர்களால் நிருவகிக்கப்பட்டன. கத்தோலிக்க சபை சார்பாக புனித மிக்கேல் கல்லூரி, புனித சிசிலியா மகளிர் பாடசாலை, சென் மேரீஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் என்பனவும் சென்.அகுஸ்தீன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை என்பனவும் இயங்கி வந்தன. இவ்வாறு கிழக்கு மாகாணத்திலே, குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்திலே கல்வியை வழங்கும் நிறுவனங்களாக விளங்கி வந்த பாடசாலைகள் சைவம், கிறிஸ்தவம் ஆகியவற்றைச் சார்ந்த சமய நிறுவனங்களால் நேரடிக் கண்காணிப்பின்கீழ் நிருவகிக்கப்பட்டு வந்ததனைக் காணமுடிகின்றது. மேலும் திரு.த.செல்வநாயகம் ஐயா அவர்களது மாணவப்பருவ காலப்பகுதியிலே மேற்கூறியவாறு சமய ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டமையையும் காணலாம். சமய நிறுவனங்களின் சார்பாக நிருவகிக்கப்பட்டு வந்த ஆசிரியர் கலாசாலைகளும் மூடப்பட்டன. இந்நிலையில் மக்கள் மத்தியிலே கிழக்கு மாகாணத்தில் தேசிய ஆசிரியர் கலாசாலை இல்லை என்ற உணர்ச்சி மேலெழத் தொடங்கிய சிறப்பினைக் காணலாம்.

இத்தகைய தூரநோக்குமிக்க உணர்ச்சியானது வலுப்பெற்றதன் பலாபலனாக மட்டக்களப்பு வடக்குத் தொகுதியின் அரசாங்க சபை அங்கத்தவராக இருந்த திரு.எஸ். தர்மரெட்ணம் அவர்கள் 1942ல் அட்டாளைச் சேனையில் பழுதுற்ற நிலையில் இருந்த அரசினர் தங்கு சாவடியினைத் திருத்தி அமைத்து, திரு.வி.நல்லையா அவர்களை

அதிபராகக் கொண்டு ஒரு பயிற்சிக் கலாசாலையை அரசினர் ஆதரவுடன் ஆரம்பித்தார். இது "அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை" என்னும் பெயர்நாமத்தோடு விளங்கியது. கிழக்கின் கல்வி வரலாற்றில் இது முக்கியமானதொரு பதிவாகும்.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் தோற்றமானது கிழக்கு மாகாணத் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்குப் பெரும் வரப்பிரசாதமாய் அமைந்திருந்தது. அதில் தமிழ் முஸ்லிம் மாணவர்கள் சகோதரர்கள் போல் ஒற்றுமையுடன் கற்றுக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு அம்மாணவர்கள் ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுவரும் காலத்தில் கலாசாலையின் முதலாவது அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த திரு.வி.நல்லையா அவர்கள் மட்டக்களப்பு தெற்கு சட்டசபைத் தொகுதிக்காக நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதையடுத்து சட்டசபை அங்கத்தவராக அரசியல் வாழ்வில் பிரவேசித்தார். திரு.வி.நல்லையா அவர்களது வெற்றிடத்துக்குப் பதிலாக, அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் வரலாற்றில் இரண்டாவது அதிபராக திரு.வி.ரி.ஞானசூரியம் (அரசடி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அதிபராக இருந்தவர் - அது மூடப்பட்டபின்னர் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அதிபராக நியமிக்கப்படுதல்) அவர்கள் நியமிக்கப்பட்டார்.

அக்காலத்தில் ஆசிரியர் பயிற்சி பெறுவதாயின் முதலில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். அதிலே தகுதி எனக் காணப்பட்டால் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்து அப்பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டும். திரு.த. செல்வநாயகம் அவர்கள் சிவானந்தா வித்தியாலயத்தில் ஆங்கிலக் கல்வியைக் கற்றுக் கொண்டிருந்த

காலத்தில் 18வயதை அடைய ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பித்திருந்தார். இதன்படி நேர்முகப்பரீட்சைக்கான திகதி அறிவிக்கப்பட்டதும் உரிய தினத்தன்று அக்கலாசாலைக்குச் சென்று அதிலே கலந்துகொண்டார். அந்நேர்முகப் பரீட்சையில் இவர் தேறியதும் அதிபர் திரு.வி.ரி.ஞானசூரியம் அவர்களின் முன்னிலையில் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பத்தில் கையொப்பமிட்டு அதனை அவரிடமே கையளித்துவிட்டு வீடுதிரும்பினார். அதனையடுத்து போட்டிப்பரீட்சைக்கான திகதி அறிவிக்கப்பட்டு குறிப்பிட்ட திகதியில் அப்பரீட்சையும் நடைபெற்றுமுடிந்தது. எனினும் முடிவுகள் அறிவிக்கப்படாமலே நாட்கள் பல நகர்ந்தன.

இவ்வாறு திரு.த.செல்வநாயகம் அவர்கள் ஆசிரியர் பயிற்சிக்கான போட்டிப்பரீட்சையினையும் எழுதிவிட்டு முடிவுகளுக்காகக் காத்துக் கொண்டிருந்த வேளையிலே அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் இரண்டாவது அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த திரு.வி.ரி.ஞானசூரியம் (B.A) அவர்கள் வட்டாரக் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவ்விடத்துக்கு காத்தான்குடி மத்திய கல்லூரியின் அதிபராக இருந்த திரு.சி.கந்தசாமி அவர்கள் கலாசாலையின் மூன்றாவது அதிபராக நியமிக்கப்பட்டார். மட்டக்களப்பு சென்ற் செபஸ்தியான் பாடசாலையில் அதிபராக இருந்த பண்டிதர் செ.பூபாலபிள்ளை அவர்களும் தமிழ் விரிவுரையாளராக அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு நியமிக்கப்பட்டார். இக்கலாசாலை உதயமான 1942ம் ஆண்டுமுதல் 1946 மே மாதம் வரையான காலப்பகுதில் தமிழ் முஸ்லிம் மாணவர்கள் மிகவும் அன்னியோன்னியமாக ஆசிரியர் பயிற்சியைப் பெற்று வந்தார்கள். இந்த ஒற்றுமையானது இதன்பின்னர் நீடிக்கவில்லை. இவ்வேளையிலே அம்மாணவர்கள் மத்தியிலே உணவுப் பிரச்சினையொன்று ஏற்பட்டது.

இதன் காரணமாக ஒரு வெள்ளிக் கிழமை தமிழ் மாணவர்கள் உணவைப் பகலும் இரவுமாகப் பகிஷ்கரித்தார்கள்.

இவ்விடயம் அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதிபர் "சாப்பிட விருப்பம் இல்லாதவர்கள் உடனடியாகப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வெளியே போகலாம்" என்று கூறியதும் உடனடியாக தமிழ் மாணவர்கள் 29 பேரும் தங்கள் பெட்டியைத் தூக்கிக் கொண்டு தமிழ் விரிவுரையாளர் பண்டிதர் செ.பூபாலபிள்ளை அவர்களின் தலைமையில் கால்நடையாகவே மட்டக்களப்பை வந்தடைந்தார்கள். அன்றிரவு அந்த மாணவர்களைத் தனது இல்லத்தில் தங்கவைத்த பண்டிதரவர்கள் விடிந்ததும் அரசாங்க சபை அங்கத்தவரும், அரசாங்கத்தின் கல்விக் குழுவில் அங்கத்துவம் வகித்தவருமாகிய திரு.V.நல்லையா ( M.S.C ) அவர்களுக்கு இந்த விடயத்தைத் தந்தி மூலம் அறிவித்திருந்தார்.

இன்னும் பல பிரமுகர்களும் தமிழருக்குத் தனிக்கலாசாலை வேண்டும் என்ற கோரிக்கையை திரு.வ.நல்லையாவிடம் முன்வைத்தார்கள். அதையடுத்து மட்டக்களப்பில் "R.A.F" படையினர் வசித்த ஓலைக்கட்டடத்தில் குருகுல முறைப்படி, திரு.V.நல்லையா (M.S.C) அவர்களால் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆரம்பகால அதிபராக திரு.வி.துரைசிங்கம் வித்தியாதரிசி அவர்கள் நியமிக்கப்பட்டார். பண்டிதர் செ. பூபாலபிள்ளை அவர்களும் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். இவ்வாறு 29 தமிழ் மாணவர்களுடன் மட்டக்களப்பு தேசிய ஆசிரியர் கலாசாலை உதயம் ஆயிற்று. இது கிழக்கின் கல்வி வரலாற்றில் மற்றுமோர் முக்கிய நிகழ்வாகும்.

இவ்வாறாக ஆசிரியர் சிரோமணி அவர்களது மாணவப்பருவ காலப்பகுதியிலே சமய நிறுவனங்களால் பாடசாலைகள் நிருவகிக்கப்பட்டு வந்தமை, அப்பாடசாலைகளைப் பின்பு அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டமை, பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டதையடுத்து சமய நிறுவனங்களின் சார்பாக இயங்கிக் கொண்டிருந்த ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகள் மூடப்பட்டமை, அதனையடுத்து கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் கலாசாலை இல்லையே என்ற தேசிய உணர்வு மக்கள் மத்தியிலே ஏற்பட்டமை, அதன் பலாபலனாக 1942ல் அட்டாளைச்சேனையில் ஆசிரியர் கலாசாலை தோற்றம் பெற்றமை, அக்கலாசாலையில் 1946 மே மாதக் கடைக்கூற்றில் தமிழ் முஸ்லிம் மாணவர்கள் மத்தியிலே உணவுப் பிரச்சினையொன்று ஏற்பட்டமை, இதன் இறுதி விளைவாக அங்கே ஆசிரியர் பயிற்சியைத் தொடர்ந்து கொண்டிருந்த இருபத்தொன்பது (29) தமிழ் மாணவர்களும் அதிபரின் கட்டளைக்கேற்ப தத்தமது பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு தமிழ் விரிவுரையாளர் பண்டிதர் செ.பூபாலபிள்ளை அவர்களது தலைமையிலே கால்நடையாகவே மட்டக்களப்பை வந்து சேர்ந்தமை, இச்சூழ்நிலையில் தமிழருக்குத் தனிக் கலாசாலை வேண்டும் என்ற தேசிய உணர்ச்சி மக்கள் மத்தியிலே பலமாக எழுந்தமை, இந்த உணர்ச்சியின் விளைவாக அந்த இருபத்தொன்பது (29) மாணவர்களைக் கொண்டு மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையானது தோற்றம் பெற்றமை ஆகிய பல நிகழ்வுகள் நடந்துமுடிந்துள்ளன. அதாவது காலத்தால் அழியாதபல வரலாற்றுத் தடயங்களை இவரது வாழ்க்கைக் காலம் கொண்டிருப்பது சிறப்பம்சமாகின்றது

## 2.5 ஆசிரியர் கல்வி / ஆசிரியர் பயிற்சி

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களது காலத்திலே ஆசிரியத் தொழிலை விரும்புபவர்கள் கட்டாயமாக ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிருக்கவேண்டும். ஆசிரியத்துறையிலே கால் பதிப்பதென்பது இலேசான காரியமாக இருக்கவில்லை. மட்டக்களப்பிலே அக்காலப் பகுதியில் வாழ்ந்த மக்களின் உணர்வாலும், அரசாங்க சபை அங்கத்தவரும், அரசாங்கத்தின் கல்விக்குழுவில் அங்கத்துவம் வகித்தவருமாகிய திரு.வ.நல்லையா அவர்களது அரிய முயற்சியாலும் 1946ம் ஆண்டின் நடுப்பகுதியளவில் இருபத்தொன்பது (29) மாணவர்களுடன் "R.A.F" படையினர் வசித்த ஓலைக் கட்டடத்தில் குருகுல முறைப்படி அரசினர் ஆசிரியர் கலாசாலையானது திரு.வி.துரைசிங்கம் வித்தியா தரிசி அவர்களை அதிபராகவும், பண்டிதர் செ.பூபாலபிள்ளை அவர்களை விரிவுரையாளராகவும் கொண்டு தோற்றம் பெற்றது. இது மட்டக்களப்பின் கல்வி வரலாற்றிலும், ஆசிரியர் சிரோமணி தம்பிப்பிள்ளை செல்வநாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

இக்கலாசாலையின் வரலாற்றில் 1946 யூலை மாதத்தில் ஐம்பத்திரண்டு (52) ஆசிரிய மாணவர்கள் 2வது தொகுதியினராகச் சேர்க்கப் பட்டார்கள். ஆசிரியர் பயிற்சிக்கான பரீட்சை எழுதி அதில் சித்தியடைந்த மாணவர்களே இவ்வாறு சேர்க்கப்பட்டிருந்தார்கள். அத்தொகுதியில் திரு.த. செல்வநாயகம் அவர்களும் ஒருவராக இடம் பெற்றார். அந்தவகையில் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஆரம்பகால மாணவர்களில் ஒருவர் என்ற பெருமையினை இவர் பெற்றுவிடுகின்றார்.

இங்கே இவருக்கு அதிபர் திரு.வி.துரைசிங்கம் வித்தியாதரிசி அவர்களும், பண்டிதர் செ.பூபாலபிள்ளை அவர்களும், வளர்ந்தோர் கல்வி அதிகாரியாக இருந்த எஸ்.ஆறுமுக வடிவேல் ஐயா அவர்களும் ஆசிரியப் பெருந்தகைகளாக வந்து வாய்த்திருந்தார்கள். இவர்கள் மூலமாக மிகவும் திறமையான முறையில் ஆசிரியர் பயிற்சிநெறிகள் வழங்கப்பட்டன. மட்டக்களப்பில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையானது உருவாகாமல் விட்டிருந்தால் "ஆசிரியர் சிரோமணி" அவர்களும், பிறரும் அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்றுதான் ஆசிரியர் பயிற்சியைப் பெற்றிருக்கவேண்டும். "பிறந்த பிரதேசத்திலே ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம்" என்ற மகிழ்ச்சி இவர்களது மனத்திலே அப்போது நிறைந்திருந்தது. "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் கலாசாலையிலே ஒரு முதல் மாணவனாக இருந்து ஏனைய மாணவர்களின் தினவரவுகளை அடையாளமிடும் தகுதிவாய்ந்த ஆசிரிய மாணவனாகத் திகழ்ந்துள்ளார். இதே போலவே சகல விதத்திலும் கலாசாலையில் முதன்மை மிக்க ஆசிரிய மாணவனாக இருந்து கலாசாலைக்கு நற்பெயரையும், நன்மதிப்பையும் தேடிக் கொடுத்துள்ளார்.

போதனாசிரியராகவும் விடுதி மேற்பார்வையாளராகவும்; சுருங்கச் சொன்னால் இவ்வாசிரிய கலாசாலையின் எல்லாப் பணிகளுக்கும் பண்டிதர் செ.பூபாலபிள்ளை அவர்கள் பொறுப்பானவராகக் காணப்பட்டார். திருவாளர் துரைசிங்கம் அவர்கள் தனது முந்திய பதவிக்கே மீண்டதும் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் மூன்றாவது அதிபராக இருந்த திரு.எஸ்.கந்தசாமி (B.Sc) அவர்கள் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் இரண்டாவது அதிபராக நியமனம் பெற்றார். நாளடைவில் போதனாசிரியர்களின் தொகை அதிகரித்தது. அவர்களையும் தன்பெருங் குருமாராக "ஆசிரியர்

சிரோமணி"" அவர்கள் ஏற்றுக் கொண்டார். 1947 டிசம்பர் மாதம் முதலாவது தொகுதியினராகிய 29 மாணவர்களும் பூரண பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக வெளியேறினார்கள். அவர்களைத் தொடர்ந்து மேலும் 51 மாணவர்கள் கலாசாலை பிரவேசித்தார்கள்.

இலங்கையில் முதன்முதலாக பாராளுமன்ற நடைமுறை ஆரம்பமான காலம் இதுவாகும். முன்னர் நிறத்துக்குப் புள்ளடி போட்ட காலம் மாற்றம் அடைந்து சின்னத்துக்குப் புள்ளடி இடும் காலம் இக்காலத்தே தான் உதயம் ஆனது. தவிர தேர்தல் தொகுதிகளும் அதிகரிக்கப்பட்டன. இதன்படி மட்டக்களப்பு, கல்குடா, பட்டிருப்பு முதலான தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. அரசியல் கட்சிகளும் உதயமாயின. இந்த மாற்றங்களை உள்வாங்கியபடி நடக்கவிருந்த தேர்தலில் மட்டக்களப்பு தெற்குத் தொகுதியின் சட்டசபை உறுப்பினராக இருந்த திரு.வ.நல்லையா (M.S.C) அவர்கள் கற்குடா தொகுதியின் உறுப்பினராகப் போட்டியிட முன்வந்தார். இவருடைய தேர்தல் சின்னம் "கை" ஆகும். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்தவர் திரு.கே.டபிள்யு தேவநாயகம் அவர்களின் தேர்தல் சின்னம் "யானை" ஆகும்.

இத்தகைய அரசியல் சூழ்நிலையில் தேர்தல் சின்னங்களுக்கு அடையாளமிடப் பழக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர் கலாசாலை மாணவர்களாகிய திரு.த.செல்வநாயகம் முதலான ஒருசிலர் மீது பொறுப்பாக்கப்பட்டது. இவர்கள் வாகரை, கதிரவெளி, பாற்சேனை ஆகிய இடங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு எவ்வாறு கைச்சின்னத்துக்குப் புள்ளடி இடுவது என்ற பயிற்சியைக் கொடுத்தார்கள். பல சிரமங்களுக்கு மத்தியில் இவர்கள் இப்பணியைச் சிறப்பாகச் செய்து முடித்தார்கள். ஆசிரியர் பயிற்சிக்காலத்தில்

திரு.வ.நல்லையா அவர்களின் அரசியல் வெற்றிக்காகவும் பாடுபட்டமை சிறப்பம்சமாகும்.

இத்தேர்தலில் திரு.வ.நல்லையா அவர்கள் கல்குடாத் தேர்தல் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு திருவாளர் பண்டாரநாயக்கா அவர்களின் அரசாங்கத்தில் தொலைத் தொடர்பு மந்திரியாக நியமனம் பெற்றார். இவ்வாறு பசுமையான பல நினைவுகளுடன் ஆசிரியர் பயிற்சி பெற்ற இவர்கள் 31.03.1948 உடன் பயிற்சியைப் நிறைவு செய்து, பூரண பயிற்சி பெற்ற 2ம் தர ஆசிரியர்களாக வெளியேறினார்கள். அவர்களுள் ஒருவராக த.செல்வநாயகம் ஐயா அவர்களும் தனது பயிற்சியைப் பூரணமாக முடித்துக் கொண்டு பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார்.

## 03. ஆசிரியர் சேவைக் காலம்

01.07.1946 தொடக்கம் 31.03.1948 வரைக்கும் பயிற்றப்பட்டு பயிற்சி பெறும் மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தியதற்கு அறிகுறியாக 01.04.1948ம் திகதி தொடக்கம் A 34/48 என்னும் இலக்கத்தைக் கொண்ட இரண்டாம் வகுப்பு தராதரப் பத்திரம் அளிக்கப் பெறுவதுடன் பயிற்றப்பட்ட ஆசிரியராகப்பதிவு செய்வதற்குத் தகுதி உடையவரென்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்தப் படுகின்றது எனக் குறிப்பிடப்பட்ட, வித்தியாபதியின் ஒப்பத்துடன் கூடிய ஆசிரியர் தராதரப் பத்திரம் ஒன்று 20.07.1949 அன்று திரு.த.செல்வநாயகம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதன்படி இவர் பயிற்றப்பட்ட ஆசிரியராகத் தன்னைப் பதிவுசெய்து கொண்டார்.

இத்தகைய பெறுமதியான தொழில் தகைமையோடு கல்விப் புலத்திலே "ஆசிரியத்துவம்" ஆற்றவும், அதன்மூலமாக சிறந்ததொரு மாணவ

சமூகத்தை உருவாக்கவும் பிரவேசம் பெறுகின்றார். இதன்படி 03.05.1948ல் தமிழ் உதவி ஆசிரியராக முதலாம் நியமனத்தைப் பெற்றுக் கொண்டார். அந்த முதலாம் நியமனத்தின் (தற்காலிக நியமனம்) படி முதன்முதலிலே பதுளை உடுவறை அரசினர் சிங்கள தமிழ்க் கலவன் பாடசாலையிலே ஆசிரியர் சேவைக்காகக் காலடி எடுத்துவைத்தார். அன்றுமுதல் மலையகமென்றும், மட்டக்களப்புத் தமிழகமென்றும் அவரது ஆசிரியத்துவ சேவை அகலித்துச் செல்லத் தொடங்கியது.

### 3.1 மலையகத்தில் ஆசிரியர் சேவை

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இருந்து மேற்குறிப்பிட்ட தகுதியுடன் வெளியேறிய திரு.த.செல்வநாயகம் அவர்கள் தனக்கு முன்னதாகவே அறிமுகமாக இருந்த பதுளை வட்டாரக் கல்வி அதிகாரி திரு.நாகலிங்கம் ஐயா அவர்களுடன் தொடர்பு கொண்டு தனக்குப் படிப்பிப்பதற்கு வசதி செய்து தருமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு அந்த அதிகாரி தன்னை பதுளைக்கு வந்து சந்திக்குமாறு கூறியிருந்தார்.

இதன்படி பதுளை சென்று அவரைச் சந்தித்த போது திரு.த.செல்வநாயகம் அவர்களுக்கு 03.05.1948 அன்று பது/உடுவறை அரசினர் சிங்கள தமிழ்க் கலவன் பாடசாலைக்குத் தமிழ் உதவி ஆசிரியராகத் தற்காலிக நியமனம் கிடைத்தது. உடுவறைப் பாடசாலை நியமனக் கடித இலக்கம் A/G 206/A (258) ஆகும். இந்த நியமனத்தை அவர் உயர்வாகவும், பெறுமதி மிகுந்ததாகவும் கருதி அப்பாடசாலையில் கடமையினை ஏற்றுக் கொண்டார்.

இந்தக்காலத்து ஆசிரியர்களில் பெரும்பாலானோர் தமக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் பணியாற்றவே விரும்புகின்றனர். தூர இடங்களுக்குச் சென்று அப்பிரதேசங்களிலே தங்கியிருந்து பணியாற்றுவதற்கு கொஞ்சம் கூட இவர்கள் விரும்புவதில்லை. கல்வி அமைச்சால் இப்படியானதொரு நியமனம் இவர்களுக்கு வழங்கப் பட்டால் எப்படியோ ஓடித்திரிந்து எவரையாவது பிடித்து அண்மையில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு இந்த நியமனத்தை மாற்றி எடுத்து விடுவார்கள். இப்படியானதொரு குறுகிய நோக்கம் திரு.த.செல்வநாயகம் அவர்களுக்கு இருக்கவில்லை. தனது ஆசிரியர் சேவை பரந்து நிலைக்கவேண்டும் என்பதைத்தான் இவர் பெரிதும் விரும்பினார். இந்தக்காலத்து ஆசிரியர்களென்றால் "பதுளைக்கா? இதாரப்பா போறது?" என்று இப்படித்தான் நினைத்திருப்பார்கள். ஆனால் இவர் தொழிலைத் தேடிப் பதுளைக்கல்லவா சென்றிருக்கிறார்.

உடுவறை என்பது பதுளை - பண்டாரவளை வீதியில் 'ஹாலி எல' என்னும் இடத்துக்கு அண்மையில் அமைந்துள்ள ஒரு சிங்கள தோட்டக் கிராமம் ஆகும். அது தேயிலைத்தோட்டம் சார்ந்ததொரு கிராமப்புறம் எனலாம். தோட்டப்பாடசாலைகள் பலவற்றில் மட்டக்களப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் சிலர் கற்பித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் திரு.த.செல்வநாயகம் அவர்கள் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

தான் கடமையேற்ற இப்பாடசாலையில் சிங்கள மாணவர்களுக்கான வகுப்பு S.S.C. வரை இருந்தது. அதிபருக்குப் பாடசாலையிலேயே விடுதி இருந்தது. ஆரம்பத்தில் திரு.த.செல்வநாயகம் அவர்களும் அதிபரோடு விடுதியில் தங்கினார். உதவி ஆசிரியர்கள் சிலரும் அதிபருடனேயே தங்கியிருந்தார்கள். சிங்களப் பாடசாலை ஒரு

மணிவரையும் இடம் பெறும். தமிழ்ப் பாடசாலை பிற்பகல் ஒரு மணியில் இருந்து ஐந்து மணிவரையும் நடைபெறும்.

தமிழ்ப் பாடசாலையில் அப்பிரதேசத்தில் வசித்த தமிழ்ப் பெற்றோர்களின் பிள்ளைகள் கற்றுக் கொண்டிருந்தார்கள். இப்பாடசாலைக்குத் தெற்கே உடுவறை தேயிலைத் தோட்டம் ஆரம்பமாகியது. 'பதுளை - பண்டாரவளை - கொழும்பு வீதி' பாடசாலைக்கு அருகாகவே செல்கிறது. 'பதுளை ஓயா' எனப்படும் ஒரு ஆறு அதன் அருகாமையில் ஓடிக்கொண்டிருக்கிறது.

உடுவறை தேயிலைத் தோட்டத்தில் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரு பிரிவுகள் உள்ளன. கீழ்ப் பிரிவில் ஒரு பாடசாலை; அதனுடன் இணைந்த ஒரு 'பிள்ளை மடுவம்.' பாடசாலைக்குப் பொறுப்பாக திரு.பேரின்பநாயகம் என்னும் ஒரு ஆசிரியர் கடமையாற்றிக் கொண்டிருந்தார். தோட்டப்புற மாணவர்கள் அங்கே கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள்.

திரு.பேரின்பநாயகம் ஆசிரியருடன் திரு.த.செல்வநாயகம் ஆசிரியர் அறிமுகமானார். அந்த ஆசிரியர் இந்த ஆசிரியரைத் தம்முடன் வந்திருக்கும்படி அன்பாக அழைத்தார். சிங்களப் பாடசாலையின் தலைமை ஆசிரியர் திரு.முனசிங்க அவர்களுடனும் திரு.பேரின்பநாயகம் ஆசிரியர் இது தொடர்பாகக் கலந்துரையாடி சம்மதத்தினைப் பெற்றதையடுத்து ஆசிரியர் திரு.த.செல்வநாயகம் அவர்கள் அந்த ஆசிரியருடன் சேர்ந்திருக்க ஆரம்பித்தார்.

அவர்களுடைய பாடசாலை காலை வேளை நடைபெறும். காலை உணவை அவர் தயார் படுத்தி விட்டு பாடசாலைக்குச் செல்வார்.

திரு.த.செல்வநாயகம் ஆசிரியர் அவர்கள் மதிய உணவைத் தயார்படுத்திவிட்டு பாடசாலைக்குச் செல்வார். இதன்படி சுமார் ஒருவருட காலம் அங்கே கடமையாற்ற வேண்டிய பாக்கியம் எமது ஆசிரியருக்குக் கிடைத்தது. இயற்கை எழில் கொஞ்சும் இதமான சூழலில் தெய்வீகப் பணியான ஆசிரியப் பணியை அர்ப்பணிப்போடு அறப்பணியாக மேற்கொண்டு வந்தார்.

ஆசிரியர் திரு.த.செல்வநாயகம் அவர்களுடன் வெளியேறிய ஆசிரியர்கள் பலருக்கு நிரந்தர நியமனம் கிடைத்ததாக அறிய முடிந்தது. அப்போது எமது ஆசிரியர் கொழும்பு கல்வித் திணைக்களத்துக்குச் சென்று நியமனத்துக்குப் பொறுப்பான அதிகாரியிடம் தனது நிலையை எடுத்துக் கூறினார். உடனே அவர் உரிய பதிவேட்டைப் பார்வையிட்டு இந்த ஆசிரியருக்கு நியமனம் வழங்கப் படவில்லை என்பதை உறுதி செய்து கொண்டார். அதன் பின்னர் அந்த அதிகாரி உரிய பாடசாலைக்கு உடனே செல்லும் படியும் நிரந்தர நியமனக் கடிதம் அங்கே அனுப்பி வைக்கப்படும் எனவும் கூறினார்.

அவ்வதிகாரி கூறியது போலவே மறுதபாலில் நிரந்தர நியமனக் கடிதம் ஆசிரியர் திரு.த.செல்வநாயகம் அவர்களுக்குக் கிடைத்தது. இதன்படி 01.09.1949ல் கண்டியில் உள்ள மயிலப்பிட்டிய சிங்கள அரசினர் கலவன் பாடசாலைக்கு நிரந்தரமாக நியமனம் பெற்றார். நியமனக் கடித இலக்கம் GTD/581 ஆகும். இப்பாடசாலை ஒரு தனிச்சிங்களப் பாடசாலையாகும். இவரது மலையகப் பிரதேச ஆசிரியத்துவ சேவையில் இரண்டாவது பாடசாலை இதுவாகும். இப்பாடசாலையின் அதிபர் திரு.ஜெயசிங்க அவர்களாவார். இவர் வெலிமடையைச் சேர்ந்தவர். இப்பாடசாலையில் S.S.C. வரை வகுப்புகள் இருந்தன. அங்கே ஆங்கிலமும் ஒருபாடமாகக் கற்பிக்கப்பட்டது.

இவர் அங்கு சென்றதும் அதிபர் திரு.ஜெயசிங்க அவர்களிடம் தன்னைத் தமிழ் உதவி ஆசிரியராகக் கணித்து 3ம் வகுப்பிலிருந்து S.S.C. வரையுமான வகுப்புகளுக்கு தமிழ் கற்பிக்கும் தமிழாசிரியனாக நேரசூசியில் பாடங்களைக் குறிப்பிட்டு வட்டாரக் கல்வி அதிகாரியின் அங்கீகாரத்தைப் பெறுமாறு மிகவும் அன்பாகக் கேட்டுக்கொண்டார். இதன்படி வட்டாரக் கல்வி அதிகாரியும் இதை அங்கீகரிக்கவே திரு.த.செல்வநாயகம் ஆசிரியர் அவர்கள் இந்தப் பாடசாலையிலே 3ம் வகுப்பில் இருந்து S.S.C. வரையுமான வகுப்புகளுக்குத் தமிழைக் கற்பிக்கத் தொடங்கினார்.

அக்காலத்தில் "இலகு தமிழ்" (Lower Tamil) என்று சொல்லி தமிழ்ப் பாடம் அங்கீகரிக்கப் பட்டிருந்தது. ஆசிரியர் திரு.த.செல்வநாயகம் அவர்கள் அப்பாடசாலையில் S.S.C. வகுப்பில் உள்ள மாணவர்கள் தங்களது பொதுப் பரீட்சையில் அப்பாடத்தை ஒரு பாடமாக எடுக்க வேண்டும். அதில் அம்மாணவர்கள் சிறந்த சித்தியை எய்த வேண்டும் என்ற நோக்கத்துடன் அர்ப்பணிப்புடன் படிப்பித்து வந்தார். ஒவ்வொரு வருட முடிவிலும் இப்பாடசாலையை வட்டாரக் கல்வி அதிகாரி தரிசித்து, ஆசிரியர்களின் கற்பித்தலைப் பரிசீலித்து, அவர்களின் தராதரப் பத்திரத்தில் புறக்குறிப்பு எழுதிவிட்டுச் செல்வார். அவ்வாறே அப்பாடசாலையைத் தரிசித்த திரு.ஜேசுதாசன் என்னும் பெயரை உடைய வட்டாரக் கல்வி அதிகாரி திரு.த.செல்வநாயகம் ஆசிரியரின் புறக்குறிப்புப் பகுதியில் **"சேவை மிகவும் திருப்தி"** என்பதைக் குறிப்பிடும் **"very satisfactory"** என்னும் குறிப்பை எழுதிவிட்டுச் சென்றிருந்தார். இதிலிருந்து இவரது ஆசிரிய சேவை எவ்வளவு தூரத்துக்குச் சிறப்புற்றிருந்தது என்பதை அறிய முடிகின்றது.

அக்காலத்தில் திரு.த.செல்வநாயகம் ஆசிரியர் அவர்கள் S.S.C. வகுப்பு மாணவர்களை "இலகு தமிழ்"ப் பாடத்துக்கு ஆயத்தமாக்கிக் கொண்டிருந்தார். தொடர்ந்து முனைப்புடன் படிப்பித்து இறுதிப் பரீட்சைக்கு ஆறு ( 06 ) பேரைத் தோற்றச் செய்தார். அச்சமயம் அடுத்த பரசோதனைக்காக வந்த வட்டாரக் கல்வி அதிகாரி திரு.நடராசா அவர்கள் ஆசிரியர் திரு.த.செல்வநாயகம் அவர்களின் "சேவை திருப்தி" என்று மட்டும் குறிப்பிட்டிருந்தார். இதனையிட்டு மிகவும் மனவேதனைக்குள்ளான இவர், அந்த வட்டாரக் கல்வி அதிகாரியைப் பார்த்து "முந்திய கல்வி அதிகாரி எனது **சேவை மிகவும் திருப்தி** எனக் குறிப்பிட்டிருக்க நீங்கள் **திருப்தி** என்று மட்டும் குறிப்பிட்டிருப்பதால் எனது சக ஆசிரியர்கள் எனது கற்பித்தலைக் குறைவாக மதிப்பிடமாட்டார்களா?" என்று கேட்டார்.

அதற்கு அக்கல்வி அதிகாரி "பரீட்சைக்குத் தயார் படுத்தியுள்ள மாணவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் நான் அடுத்த முறை வரும் போது **மிகத் திருப்தி** எனக்குறிப்பிடுவேன்" என்று உறுதியளித்தார். அதற்கு இவர் "நான் அப்போது இங்கே இருக்கமாட்டேன்; மாறிப்போய்விடுவேன்" என்று கூறினார். இதற்கு அந்தக் கல்வி அதிகாரி "அப்படி ஏற்படுமாயின் Endorsement Slip எழுதி தபாலில் அனுப்பிவைப்பேன்" என்று உறுதிமொழி அளித்திருந்தார்.

மயிலப்பிட்டி பாடசாலையில் சிங்கள ஆசிரியர்களோடு கற்பித்த காலம்; சிங்கள மக்களுடன் பழகிய காலம் மிகவும் சந்தோசமான காலமென "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் தனது உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தியிருந்தார். பாடசாலை மாணவர்களும் பெற்றோர்களும் இணைந்து கல்விச் சுற்றுலா செல்வது வழக்கம். அக்காலத்தில்

தான் யாழ்ப்பாணச் சுற்றுலாவும், சிவனொளிபாதமலைச் சுற்றுலாவும் இவருக்கும் செல்லக்கிடைத்தது.

இவ்வாறு சுற்றுலா சென்ற சமயத்தில் மாணவர்களுடன் இணைந்து எடுத்த ஒரு சிறிய புகைப்படத்தை "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் பெருப்பித்து ஆரைப்பற்றையில் உள்ள அவரது வீட்டுச்சுவரில் தொங்கவிட்டிருந்தார். 1952 - 53 காலமாக இருக்கலாம். மட்டக்களப்பில் ஒரு சிறிய புரட்சி ஏற்பட்டகாலம். 'மேஜர் உடுகம' என்பவரின் தலைமையில் ஒரு படையணியினர் இங்கே வந்திருந்தார்கள். அவர்கள் நாள்தோறும் ஒவ்வொரு பிரதேசங்களாகப் பிரித்துத் தேடுதல் நடத்துவார்கள். அவ்வாறு தேடுதல் நடத்தும் போது வீடுகளில் உள்ள பெரியவர் சிறியவர் என்றெதுவும் பாராது ஆண்கள் எல்லோரையும் ஒரு இடத்தில் ஒன்றுகூட்டி ஒரு குறிப்பிட்ட நேரம்வரை வெய்யிலில் இருத்திவைத்துவிட்டுப் பின்னர் வீட்டுக்கு அனுப்புவார்கள்.

இவ்வாறான சுற்றிவளைப்பொன்று ஆரைப்பற்றையில் இவரது வீடு அமைந்திருந்த பிரதேசத்திலும் இடம்பெற்றது. ஒருநாள் விடிவதற்கு முன்னதாக இவரது வளவில் இருந்த விறகுக் கொட்டில், ஓலைமட்டைக் கும்பல்கள் எல்லாவற்றையும் கலைத்தெறிகின்ற சத்தம் கேட்டது. இவர் எழுந்து பார்த்த போது வீட்டு விறாந்தையில் ஒரு இராணுவச் சிப்பாய் காணப்பட்டார். சுவரில் தொங்கவிட்டிருந்த அந்தச் சுற்றுலாப் புகைப்படத்தை அந்தச்சிப்பாய் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்ததையும் இவர் கண்டுகொண்டார். அந்தச் சிப்பாயின் முகம் இவருக்கு அறிமுகமானது போலத்தென்பட்டது. அவரும் இவரைப் பார்த்துக்கொண்டேயிருந்தார்.

அதனையடுத்து அந்த இராணுவச் சிப்பாய், "சேர் இது உங்களுடைய வீடா? இங்கு நீங்கள் தான் இருக்கிறீங்களா?" என்று மரியாதையுடன் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் ஐயாவைக் கேட்டபடி கைகூப்பி வணங்கினார். அவர்தான் மயிலப்பிட்டிய பாடசாலையில் தன்னிடம் தமிழ் கற்ற மாணவர்களில் ஒருவரான "சமரசிங்க" என்னும் மாணவன் என்பதை உணர்ந்துகொண்டார். அதன்பின்னர் இருவரும் ஒருவரையொருவர் ஆரத்தழுவி மகிழ்ச்சியுற்றார்கள்.

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் அச்சந்தர்ப்பத்தில் தனது மனைவிக்கும் அம்மாணவனை அறிமுகம் செய்துவைத்தார். இதன் பின்னர் "சமரசிங்க" தன்னுடன் வந்த சிப்பாய்கள் அனைவரையும் அழைத்து, "இவர் என்னுடைய ஆசிரியர்; தேடுதல் வேண்டாம்; உங்கள் வாகனங்களுக்குச் செல்லுங்கள்" என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டு தனது பெருமதிப்புக்குரிய "குருவறையா"வுடன் இருந்து மயிலப்பிட்டிய பாடசாலைக்காலத்துப் பசுமையான நினைவுகளை மீட்டிவிட்டு விடைபெற்றுச் சென்றார்.

இவர் மட்டக்களப்பிலிருந்து போவதற்கிடையில் சில தடவைகள் வந்து தனது குருவைச் சந்தித்துப் போயிருந்தார். இவையெல்லாம் மறக்கமுடியாத சம்பவங்களாகும். சிங்கள சமூகத்திலே ஆசிரியர்களுக்கு இருக்கின்ற உயர்வான கௌரவத்தினையும், ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் ஐயா அவர்கள் மலையகத்தின் குறிப்பிட்ட பிரதேசங்களில் தமிழ், சிங்கள மக்கள் மத்தியிலே பெற்றிருந்த செல்வாக்கினையும் "சமரசிங்க"வின் இந்த நடத்தை வெளிப்பாடுகள் மூலமாகத் தெளிவாக அறியமுடிகின்றது.

அந்தக் காலத்தில் ஆசிரிய இடமாற்றங்கள் யாவும் 'வித்தியா போதினி' என்று சொல்லப் படுகின்ற கல்வித் திணைக்களத்தினது வெளியீட்டின் மூலம் காலியான இடங்கள் அறிவிக்கப்பட்டு, அதற்கேற்பவே அந்த இடமாற்றங்கள் வழங்கப்படும்.

அவ்வேளையில் வெளியான 'வித்தியா போதினி'யில் ஆரைப்பற்றையில் ஆசிரியர் வெற்றிடம் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இதன்படி ஆசிரியர் திரு.த.செல்வநாயகம் அவர்கள் விண்ணப்பத்தை கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி இருந்தார். எந்தவிதமான தூண்டுதலும் இல்லாமல் போதிய சேவையினை கண்டி மயிலப்பிட்டிய அரசினர் சிங்கள கலவன் பாடசாலையில் செய்தமையைக் கருத்திலே கொண்டு கல்வித் திணைக்களத்தினால் இவரது இடமாற்ற விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதன்படி மட்டக்களப்புக்கு வந்த திரு.த.செல்வநாயகம் அவர்கள் மட்/ஆரைப்பற்றை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், அதனையடுத்து மட்/கோட்டைமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் பணியாற்றிவிட்டுப் பின்னர் தனது சேவையின் தொடர்ச்சியாக மட்/கோட்டைமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாலர் பாடசாலையிலே கடமையாற்றிக் கொண்டிருந்த காலகட்டத்திலே "கொள்கை மாற்றம்" என்ற அடிப்படையில் இடமாற்றம் பெற்று மீண்டும் மலையகப் பிரதேசத்திலே உள்ள ஒரு பாடசாலைக்குக் கடமைக்காகச் சென்றடைந்தார்.

அதுதான் பது/வெலிமடை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையாகும். இங்கேயும் இவர் உதவி ஆசிரியராக ஒரு வருடமும் ஏழு மாதங்களும் பணியாற்றியுள்ளார். 1960.06.01 தொடக்கம் 1961.12.31 வரையான

காலப்பகுதியே இதுவாகும். திரு.த.செல்வநாயகம் அவர்கள் தனது ஆசிரியத்துவ சேவைக்காலப் பகுதியில் மலையகப் பிரதேசத்திலே பணியாற்றிய மூன்றாவது பாடசாலை இதுவாகும். இதனால் மலையக வெலிமடைப் பிரதேச மாணவர்களும் இவரிடம் கற்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருந்தார்கள். இவரது கற்றல் கற்பித்தல் செயன்முறையின் நுட்பமுறைகள் அப்பகுதி மாணவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. அப்பாடசாலையின் அதிபர், மற்றும் ஆசிரியர்களுக்கும் இவர் மிகவும் பிடித்தமானவராக வாய்த்திருந்தார்.

இதன்பின்னர் சேவையின் தேவையை நோக்கி மீண்டும் மட்டக்களப்புப் பிரதேசத்துக்கு மாற்றம் பெற்று வந்தார். இதனோடு மட்டும் இவரது மலையக ஆசிரியத்துவ சேவை நின்றுவிடவில்லை. பது/வெலிமடை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலிருந்து மாற்றம் பெற்று மட்/கிரான்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 1962.01.01ல் வந்துசேர்ந்து இப்பாடசாலையிலே இருவருடங்கள் பணியாற்றினார். இதன்பின்னர் மட்டக்களப்பிலுள்ள பலபாடசாலைகளிலும் பணியினைத் தொடர்ந்துகொண்டிருந்தார். இந்தவரிசையில் மட்/கோட்டைமுனை மகாவித்தியாலயத்திலே சிரேஷ்ட உதவி ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த (1971.03.01 - 1971.07.31) வேளையிலே முதலாந்தரப் பதவி உயர்வு கிடைத்து அதிபராகி மீண்டும் ஒரு அரிய சந்தர்ப்பமாக மலையகப்பகுதிப் பாடசாலையொன்றுக்கு அதிபராகக் கடமைக்குச் சென்றிருந்தார்.

அப்பாடசாலைதான் பது/கொஸ்லாந்தை தமிழ் மகா வித்தியாலயமாகும். இப்பாடசாலைக்கான மாற்றக் கடித இலக்கம் ப/உ/பா/அ/11/01 என்பதாகும். இதுவரையிலும் மலையகப் பிரதேசத்திலும், மட்டக்களப்புப் பிரதேசத்திலும் ஒரு தலைசிறந்த

ஆசிரியராக அறியப்பட்டிருந்த திரு.த.செல்வநாயகம் அவர்கள் இப்போது அதிபராகி விட்டார். அதிபராகச் சேவையாற்ற மலையகத்துக்குச் சென்றுவிட்டார். அங்கே கொஸ்லாந்தைப் பகுதியிலே அதிபராக இவரிப்போது அறிமுகமாகின்றார்.

கொஸ்லாந்தை என்பது அழகானதொரு ஊராகும். அவ்வூருக்குச் செல்லும் வழியிலே ஒரு அழகான நீர்வீழ்ச்சி இருக்கிறது. அங்கே சிங்களப் பாடசாலை வேறாக இயங்குகின்றது. ஒரு மத்திய வைத்திய சாலையும் அதையடுத்து சிறியதொரு கடைத்தொகுதியும் இருக்கிறது. இதிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் அமைந்திருப்பது இவ்வித்தியாலயம். அதில் S.S.C. வரை வகுப்புகள் இருந்தன. அப்பாடசாலையிலே மட்டக்களப்பைச் சேர்ந்த ஆசிரியர்கள் சிலரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் சிலரும் படிப்பித்துக் கொண்டிருந்தார்கள். மட்டக்களப்பு ஆசிரியர்களில் ஒருவர் திரு.தம்பிராசா அவர்கள். திரு.திருமதி.பாலசுப்பிரமணியம் குடும்பமும் அங்கே பணியாற்றிக் கொண்டிருந்தது.

அப்பாடசாலையிலே காலையில் 6ம் வகுப்பு தொடக்கம் S.S.C. வரையான வகுப்புகள் நடைபெறும். பின்னேரம் முதலாம் வகுப்பு தொடக்கம் 5ம் வகுப்பு வரையான வகுப்புகள் நடைபெறும். காலைவேளைப் பாடசாலைக்கு திரு.பாலசுப்பிரமணியம் அவர்கள் பொறுப்பாக இருந்தார். பின்னேரவேளைப் பாடசாலைக்கு திருமதி.பாலசுப்பிரமணியம் அவர்கள் பொறுப்பாக இருந்தார். இந்த இரண்டு வேளைப் பாடசாலைக்கும் ஆசிரியர் த.செல்வநாயகம் அவர்கள் சமுகமளிப்பார். அந்த ஊரிலே வசித்துவந்த திருவாளர் மாசியாப்பிள்ளை என்னும் பிரபல வர்த்தகருடைய வீட்டிலே இங்குள்ள ஆசிரியர்கள் தங்கியிருந்தார்கள். அவர்களுடனேயே ஆசிரியர் த.செல்வநாயகம் அவர்களும் தங்கியிருந்தார்.

பின்னேரப் பாடசாலை ஒரு மணிக்கு ஆரம்பமாகி 5 மணிக்கு முடிவடைந்ததும் மாணவர்களை அனுப்பி விட்டு ஆசிரியர்கள் விடுதிக்குச் செல்வார்கள். பாடசாலைக் கட்டடம் ஒரு மலைச் சரிவில் அமைந்திருந்தது. புதிய கட்டடம் கட்டுவதற்குரிய செயற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. இவ்வேளையில் கொஸ்லாந்தை தமிழ் மகாவித்தியாலயத்திலிருந்து 15.03.1972ல் மீண்டும் கோட்டைமுனை மகாவித்தியாலயத்துக்கு சிரேஷ்ட உதவி ஆசிரியராக இடமாற்றம் பெற்று வந்தார்.

திரு.தம்பிப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் தனது பணிக்காலத்திலே மலையகப் பிரதேசத்திலே பணியாற்றிய நான்காவது பாடசாலை இந்த பது/கொஸ்லாந்தை தமிழ் மகாவித்தியாலயமாகும். இது இவர் மலையகத்திலே பணியாற்றிய பாடசாலைகள் நான்கினுள்ளும் மிகவும் முக்கியமானதாகும். இது ஒரு மகாவித்தியாலயம். இதிலே அதிபராகச் சேவை செய்யக் கிடைத்தது பெரியதொரு பாக்கியம். இவரது அதிபர் சேவையினைப் பெற்றுக்கொண்ட முதலாவது பாடசாலையும் இதுவாகும். "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் மலையகத்திலே மேற்கூறிய நான்கு பாடசாலைகளிலுமாக ஆறு வருடங்களும் இரண்டு மாதங்களும் கடமையாற்றியுள்ளார். மலையகத்தின் ரம்மியமான சூழலில் பலநூற்றுக்கணக்கான மாணவர்களைக் கல்விப் புலத்திலே மேலோங்கச் செய்துள்ளார். மலையகக் கல்விச் சூழலிலே பெற்ற அனுபவங்களும், வெற்றிகளும் மட்டக்களப்பின் கல்விச்சூழலில் இவர் பலவெற்றிகளை நிலைநாட்டுவதற்குப் பக்கபலமாக இருந்திருக்கின்றன.

## 3.2 மட்டக்களப்பில் ஆசிரியர் சேவை

ஆசிரியர் சிரோமணி திரு.தம்பிப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் மலையகப் பிரதேசத்தில், கண்டி மயிலப்பிட்டிய சிங்கள கலவன்

பாடசாலையில் கற்பித்துவிட்டு 01.05.1952 அன்று ஆரைப்பற்றை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்தார். இடமாற்றக் கடித இலக்கம் GTE/2782ஆகும். இப்பாடசாலையில் ஆரம்ப வகுப்புகள் தொடக்கம் S.S.C. வரையும் வகுப்புகள் இருந்தன.

இப்பாடசாலையில் கடமையினைத் தொடர்கின்ற சமயத்தில S.S.C. பரீட்சை முடிவுகள் வெளியாகி இருந்தன. இலகு தமிழ்ப் பாடத்தில் (Lower Tamil) கண்டி மயிலப்பிட்டிய பாடசாலையில் ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அவர்கள் தோற்றச் செய்த மாணவர்களில் நான்கு(04) மாணவர்கள் சித்தியடைந்திருந்தார்கள். பெறுபேறு வெளியாகி அடுத்த வருடம் கண்டி மயிலப்பிட்டிய பாடசாலைக்குச் சென்றிருந்த குறித்த வித்தியா தரிசி அப்பெறுபேற்றைப் பார்வையிட்டு தான் கூறியவாறு தனது Endorsement Slip ல் Very **satisfactory (சேவை மிகவும் திருப்தி)** என்று எழுதி இவருக்கு அனுப்பி இருந்தார். இவருக்கோ இது இரட்டிப்புச் சந்தோசத்தை ஏற்படுத்துவதாய் அமைந்திருந்தது.

வித்தியா தரிசியினுடைய இந்தப் புறக்குறிப்பானது ஆசிரியர் திரு.த.செல்வநாயகம் அவர்களது முதலாம் தர அதிபர் பதவிக்கு மிகவும் உதவியாக இருந்தது. எவ்வாறெனில், அதிபர் பதவி உயர்வுக்கான நேர்முகப் பரீட்சையின் பரீட்சகர் குழுத் தலைவராக குறிப்பிட்ட திரு.நடராசா வித்தியா தரிசி அவர்களே இருந்தார்கள். இந்நேர்முகத் தேர்வின் போது ஆசிரியர் திரு.த.செல்வநாயகம் அவர்களைக் கண்டதும் அவரது தராதரப் பத்திரத்தைப் பார்த்து மிகவும் சந்தோசப்பட்டார். இவரது திறமையினையும், செய்த சேவைகளின் சிறப்புக்களையும் பாராட்டினார்; அங்கிருந்த சகபரீட்சகர்களுக்கும் அறிமுகப் படுத்தினார். வேறு எந்த விதமான சான்றுகளும் கேட்காமல் மகிழ்ச்சியோடு வழியனுப்பி வைத்தார்.

வித்தியா தரிசியினுடைய மேற்படி புறக்குறிப்பானது ஆரைப்பற்றைத் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியர் த.செல்வநாயகம் அவர்கள் ஆசிரியப் பணியைத் திறம்படத் தொடர்வதற்கு மேலும் வேகத்தையும் விறுவிறுப்பையும் ஊட்டி நின்றது.

இக்காலத்தில் காத்தான்குடி மத்திய கல்லூரி வேறு புதிய கட்டடத்துக்கு மாற்றப்பட்டது. இது கடற்கரைக்கு அண்மையில் இருந்தது. இக்கல்லூரிக்கு கல்வித் திணைக்களத்தில் பணியாற்றிய திரு.டி.சி.அருளானந்தம் என்னும் கல்விமான் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரைவிட இன்னும் சில தமிழ் ஆசிரியர்களும் அங்கே கற்பித்தார்கள். ஆரையம்பதியில் உள்ள தமிழ் மாணவர்கள் உயர் வகுப்புகளில் அங்கே கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள்.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட பிரச்சினையால் மட்டக்களப்பில் அரசினர் ஆசிரியர் கலாசாலை உதயமானது போல இங்கும் ஒரு பிரச்சினை ஏற்பட்டது. "தமிழ் ஆசிரியர்கள் எங்களுக்கு வேண்டாம்" என்ற கோசத்துடன் காத்தான்குடி மத்திய கல்லூரியில் ஒரு மறியற் போராட்டம் நடைபெற்றது. இச்சந்தர்ப்பத்தில் காத்தான்குடி மத்திய கல்லூரியில் கல்வி கற்ற தமிழ் மாணவர்கள் அனைவருக்கும் இங்கு கற்பித்த திரு.பூ.தெய்வநாயகம் பிள்ளை என்னும் ஆசிரியரால் விடுகைப் பத்திரங்கள் எழுதிக் கொடுக்கப்பட்டு ஆரைப்பற்றை தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அனுப்பப்பட்டார்கள்.

இப்பாடசாலையில் திருவாளர் தம்பியப்பா என்பவர் அதிபராக இருந்தார். திரு.த.செல்வநாயகம் முதலான ஆசிரியர்கள் அந்த அதிபருடன் செய்து கொண்ட ஏற்பாட்டின் அடிப்படையில் அங்கிருந்து வந்த மாணவர்கள்

அனைவரையும் இங்கே பதிந்து புதிய வகுப்புகளை ஆரம்பித்தார்கள். நாளடைவில் இம்மாணவர்களைக் கொண்டு ஆரைப்பற்றை மகாவித்தியாலயம் ஆரம்பமாகியமை குறிப்பிடத் தக்கதாகும். இதனைத் தொடர்ந்து இப்பிரதேசத்திலே உள்ள பல பாடசாலைகளிலே ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் தனது ஆசிரியத்துவத்தினை அகலித்து நிலைபெறச் செய்துள்ளார்.

மட்/கோட்டைமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மட்/கோட்டைமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாலர் பாடசாலை, மட்/தளவாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மட்/கிரான்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மட்/அரசடி மெதடிஷ்த மிஷன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மட்/கோட்டைமுனை மகாவித்தியாலயம், மட்/மெதடிஷ்த மத்திய கல்லூரி எனப் பல்வேறு பாடசாலைகளுக்கூடாக மட்டக்களப்புப் பிரதேசத்திலே வளர்ச்சியடைந்த இவரது ஆசிரியம் மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்துக்கூடாக முதிர்ந்து கனிந்து நின்றமை நோக்கத் தக்கதாகும்.

### 3.3 சேவையாற்றிய பாடசாலைகள்

ஆசிரியர் சிரோமணி த. செல்வநாயகம் அவர்கள் மலையகமென்றும் மட்டக்களப்புத் தமிழகமென்றும் மாறிமாறிப் பல்வேறு பாடசாலைகளிலே பணியாற்றியுள்ளார். பல நூற்றுக்கணக்கான நன்மாணாக்கர்களை கல்வி உலகுக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கின்றார். அந்த மாணவர்கள் பல்வேறு துறைகளிலே, பல்வேறு பிரதேசங்களிலே பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ந்திருக்கின்றார். இந்த வகையில் இவர் பணியாற்றிய பாடசாலைகளின் பணிநிலமைகள் பின்வருமாறு அமைந்திருக்கின்றன.

01. பது/உடுவறை அரசினர் சிங்கள தமிழ்க் கலவன் பாடசாலை.

பணிநிலை : தமிழ் உதவி ஆசிரியர்.

சேர்ந்த திகதி : 03.05.1948

விலகிய திகதி : 03.08.1949

02. கண்டி/மயிலப்பிட்டிய அரசினர் சிங்கள தமிழ்க் கலவன் பாடசாலை.

பணிநிலை : தமிழ் உதவி ஆசிரியர்.

சேர்ந்த திகதி : 01.09.1949

விலகிய திகதி : 30.04.1952

03. மட்/ஆரைப்பற்றை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

பணிநிலை : உதவி ஆசிரியர்.

சேர்ந்த திகதி : 01.05.1952

விலகிய திகதி : 28.02.1957

04. மட்/கோட்டைமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

பணிநிலை : சிரேஷ்ட உதவி ஆசிரியர்.

சேர்ந்த திகதி : 01.03.1957

விலகிய திகதி : 20.08.1958

05. மட்/கோட்டைமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாலர் பாடசாலை.

பணிநிலை : உதவி ஆசிரியர்.

சேர்ந்த திகதி : 21.08.1958

விலகிய திகதி : 30.09.1958

06. மட்/தளவாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

பணிநிலை : உதவி ஆசிரியர்.

சேர்ந்த திகதி : 01.10.1958

விலகிய திகதி : 31.05.1960

07. பது/வெலிமடை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

பணிநிலை : உதவி ஆசிரியர்.

சேர்ந்த திகதி : 01.06.1960

விலகிய திகதி : 31.12.1961

08. மட்/கிரான்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

பணிநிலை : உதவி ஆசிரியர்.

சேர்ந்த திகதி : 01.01.1962

விலகிய திகதி : 15.03.1964

09. மட்/அரசடி மெதடிஷ்த மிஷன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

பணிநிலை : உதவி ஆசிரியர்.

சேர்ந்த திகதி : 16.03.1964

விலகிய திகதி : 31.12.1965

10. மட்/அரசினர் கல்லூரி (கோட்டைமுனை மகா வித்தியாலயம்)

பணிநிலை : உதவி ஆசிரியர்.

சேர்ந்த திகதி : 01.01.1966

விலகிய திகதி : 31.12.1967

11. மட்/மெதடிஷ்த மத்திய கல்லூரி.
பணிநிலை : உதவி ஆசிரியர்.
சேர்ந்த திகதி : 01.01.1968
விலகிய திகதி : 13.09.1970

12. மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம்.
பணிநிலை : உதவி ஆசிரியர்.
சேர்ந்த திகதி : 13.09.1970
விலகிய திகதி : 28.02.1971

13. மட்/கோட்டைமுனை மகாவித்தியாலயம். (இந்துக்கல்லூரி)
பணிநிலை : உதவி ஆசிரியர்.
சேர்ந்த திகதி : 01.03.1971
விலகிய திகதி : 31.07.1971

14. பது/கொஸ்லாந்தை தமிழ் மகாவித்தியாலயம்.
பணிநிலை : தலைமை ஆசிரியர் (அதிபர்)
சேர்ந்த திகதி : 01.08.1971
விலகிய திகதி : 14.03.1972

15. மட் /கோட்டைமுனை மகாவித்தியால்யம். (இந்துக்கல்லூரி)
பணிநிலை : சிரேஷ்ட உதவி ஆசிரியர்.
சேர்ந்த திகதி : 15.03.1972
விலகிய திகதி : 07.03.1973

16. மட் /கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம்.

| | | |
|---|---|---|
| பணிநிலை | : | தலைமை ஆசிரியர் (அதிபர்). |
| சேர்ந்த திகதி | : | 08.03.1973 |
| விலகிய திகதி | : | 03.04.1987 (இதனுடன் ஓய்வு பெறுதல்). |

இவ்வாறாகப் பத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் கற்பித்திருக்கின்றார். தனது சேவை வாழ்விலே உதவி ஆசிரியராய், சிரேஷ்ட உதவி ஆசிரியராய், தலைமை ஆசிரியராய் (அதிபராய்), ஆலோசக ஆசிரியராய் பல்வேறு படிநிலைகளிலே உயர்ந்து ஊருக்கும், பிரதேசத்துக்கும், இந்த நாட்டுக்கும் பல்திறப்பட்ட சேவைகளை ஆற்றியிருக்கின்றார். இதனால்தான் ஆசிரியர் சேவைக்குக் கிடைத்த உயர் கௌரவமாக "ஆசிரியர் சிரோமணி" என்னும் சாகாவரம் பெற்ற பட்டத்தினையும் பெற்று எல்லோருக்கும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியிருக்கின்றார்.

## 04. கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய அதிபர் சேவை

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களது ஆசிரியப் பணியானது கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் ஊடாக வீறுகொண்டெழத் தொடங்கியது. 'குன்றிலிட்ட தீபம்' போல இற்றைவரை மிளிரும் இப்பாடசாலை தான் இவரையும் 'குன்றிலிட்ட தீபம்' போல உயர்த்திவிட்ட பெருமைக்குரியது. இதன்படி ஆசிரியர் திரு.த.செல்வநாயகம் அவர்கள் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் 01.03.1957ல் தனது தூய பணியைத் தொடர்வதற்காக காலடி எடுத்து வைத்திருந்தார்.

**4.1 வித்தியாலயத்தின் ஆரம்ப காலம்**

இப்பாடசாலை ஆரம்பமானது தொடக்கம் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் இப்பாடசாலைக்கு அதிபராக 08.03.1973ல் பொறுப்பேற்கும் வரையான காலப் பகுதியே இங்கு வித்தியாலயத்தின் ஆரம்பகாலமாக நோக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1839 – 1945 வரையான காலப்பகுதியிலும், அதனையண்டிய காலப்பகுதியிலும் கல்வி நிலையங்கள் யாவும் சமயச் சார்புடைய மிஷனரிகளால் நிருவகிக்கப்பட்டு வந்துள்ளன. றோமன் கத்தோலிக்க மிஷன், மெதடிஷ்த மிஷன், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் முதலியவை பட்டணத்திலும், கிராமங்களிலும் கல்விக்கூடங்களை நிறுவி அவற்றை நிருவகித்து வந்துள்ளன. ஆரம்பக்கல்வி தொடக்கம் ஆசிரியர் பயிற்சிவரை இந்நிலையே இருந்துள்ளது. இப்பிரதேசத்திலுள்ள மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகள் கிடைக்காத நிலமைகள் காணப்பட்டுள்ளது. இத்தகையதொரு சூழ்நிலையில் தான் மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் தோற்றத்தைக் காணமுடிகின்றது.

அதாவது அக்காலத்தில் இலங்கை அரசாங்கசபைப் பிரதிநிதியாக இருந்தவரும், பின்னர் பாராளுமன்றத்தில் கல்குடாத் தொகுதி உறுப்பினராகி தபால், தொலைத்தொடர்பு அமைச்சராக விளங்கியவருமான திருவாளர் வ.நல்லையா அவர்கள், கௌரவ C.W.W. கன்னங்கரா அவர்களின் கல்வி அமைச்சில் கல்விக்குழு உறுப்பினராகப் பதவி வகித்த காலத்தில் மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திக்காக பல பாராட்டத்தக்க சேவைகளைச் செய்துள்ளார். மட்டக்களப்பு பிரதேசம்வாழ் சைவப் பெருமக்களின் பிள்ளைகளுக்கு உயர்கல்வி வாய்ப்புகள் மறுக்கப்படுகின்ற நிலையைக்கண்டு அதற்குப்

பரிகாரம் காணுமுகமாக மாவட்டமெங்கிலும் அரசாங்கப் பாடசாலைகளை அமைக்கும் திட்டத்தை அமுலாக்கினார்.

இதன் பெறுபேறாக மட்டக்களப்பில் "அரசினர் கல்லூரி" என்ற பெயரில் ஓர் (சீனியர் ஸ்கூல்) உயர்தரக் கல்லூரியை நிறுவினார். அக்கல்லூரியின் ஆரம்பப்பாடசாலையாக (யூனியர் ஸ்கூல்) நிறுவப்பட்டதுதான் இக்கோட்டைமுனை கனிஷ்டவித்தியாலயம் என்னும் கல்விச்சாலையாகும். இது "கோட்டைமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை" என்ற பெயருடன் மட்டக்களப்பு அரசடிச் சந்தியில் கோட்டைமுனை ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் தாமரைக் கேணி சைவப் பெருமக்களால் தற்காலிகமாக கட்டி உதவிய ஓலைக் கொட்டிலில் உதயமாகியது. இதனை அன்றைய கல்வி அதிகாரி (E.O) திரு.எஸ்.யு.சோமசேகரம் அவர்கள் 1945ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 09ம் திகதி ஆரம்பித்து வைத்தார்.

அச்சமயம் தாமரைக்கேணியைச் சேர்ந்த திரு.ஆ.நாகமணி அவர்கள் பதில் தலைமை ஆசிரியராக இருந்துள்ளார். பின்னர் அரசினர் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலையாக இது இயங்க ஆரம்பித்ததும் அரசினர் கல்லூரி அதிபர் திரு.ஏ.ராஜகாரியர் அவர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. இவர் 01.01.1946ல் திரு:ரி.எஸ்.வேதநாயகம் அவர்களையும், 04.06.1946ல் திரு.ஏ.ஜோசேப் அவர்களையும் பொறுப்பாசிரியர்களாக நியமித்துள்ளார். அதன் பின்னர் 23.01.1947ல் திரு.கே.ரி.கந்தையா அவர்கள் பொறுப்பாசிரியராகப் பணியேற்றுள்ளார். அதன் பின்னர் திருவாளர் டி.என்.நல்ல தம்பி அவர்கள் 02.01.1950ல் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றதும் இதன் நிருவாகம் இவர் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. அன்றிலிருந்து இப்பாடசாலை அரசினர் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலையாகத் தனித்தியங்கத் தொடங்கியது.

ஆசிரியர் பயிற்சியைப் பெறும் மாணவர்கள் ஆசிரியப் பயிற்சிக்காகச் செல்லும் பாடசாலைகளில் இதுவும் ஒன்றாக விளங்கியது. திரு.த.செல்வநாயகம் அவர்களும் தனது ஆசிரியர் பயிற்சிக் காலத்தில் ஆசிரியர் பயிற்சிக்காகச் சென்ற பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும். அந்நாட்களிலேயே இப்பாடசாலையில் நிரந்தர ஆசிரியர் நியமனம் பெற்று இப்பாடசாலையில் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் திருத.செல்வநாயகம் அவர்களின் அடிமனதிலே உதயமாகி இருந்தது. அவ்வெண்ணம் அவர் நினைத்த படியே நிறைவேறியதானது பெருமைக்குரியதாகும்.

திரு.டி.என்.நல்லதம்பி அவர்களுக்குப் பின்னர் திரு.எ.க.எதிர்மன்னசிங்கம் அவர்கள் 01.11.1953ல் அதிபராகப் பொறுப்பேற்று 13.021958 வரை கடமையாற்றியுள்ளார். இவர் கடமையிலிருந்த காலத்தில்தான் திரு.த.செல்வநாயகம் அவர்கள் சிரேஷ்ட உதவி ஆசிரியராகக் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்திலே காலடி எடுத்துவைத்தார். இக்காலத்தில் 1957ல் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பாடசாலைக் கட்டடங்கள் முற்றாக அழிவுக்குள்ளாகின. இக்காலத்தில் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியின் அதிபராக இருந்த உயர்திரு.சி.கந்தசாமி அவர்கள் ஆசிரியர் கலாசாலை வளவினுள் சாதனா பாடசாலைக்கென நிறுவிய இருகட்டடங்களுக்கும் இப்பாடசாலை 05.02.1958ல் இடமாற்றம் செய்யப்பட்டமை முக்கியமானதொரு நிகழ்வாகும்.

மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் திரு.எ.க.எதிர்மன்னசிங்கம் அவர்கள் சேவையிலிருந்து 13.02.1958ல் இளைப்பாறியதும் நிரந்தர அதிபராக திரு.ம.வீரக்குட்டி அவர்கள் அதிபராக 01.04.1958ல் பொறுப்பேற்கும் வரை திரு.த.செல்வநாயகம் அவர்கள் பதில் அதிபராகக் கடமையாற்றும் பொறுப்பை ஏற்றிருந்தார்.

அதுவரைக்குமான காலப்பகுதியில் இவர் தனது கடமையிலே கண்ணும் கருத்துமாக இருந்து வித்தியாலயத்தின் நிருவாகத்தைத் திறம்பட இயக்கியுள்ளார்.

திரு.ம.வீரக்குட்டி அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்ற காலத்தில் இவ்வித்தியாலயத்தில் இன்னொரு அதிபருக்கு இடம் கொடுக்க வேண்டியநிலை உருவாகியது. இக்காலத்தில் வழங்கப்படுவது போல முதலாமாண்டு, இரண்டாமாண்டு என்றில்லாமல் பாலர் கீழ்ப் பிரிவு (L.D), பாலர் மேற்பிரிவு (U.D), இரண்டாம் வகுப்பு என்னும் பெயர்களால் வகுப்புகள் அழைக்கப்பட்டன. இதன்படி பாலர் கீழ்ப்பிரிவு தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரை ஆறு வகுப்புகள் இங்கே நடைபெற்றன.

இக்காலத்தில் தனித்தனியே இயங்கிவந்த அரசினர் ஆண்கள் ஆசிரியர் கலாசாலையும், அரசினர் பெண்கள் ஆசிரியர் கலாசாலையும் "மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை" என்ற பெயரில் ஒன்றிணைக்கப்பட்டன. இதன் காரணமாக பெண்கள் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளராகப் பணிபுரிந்த திருமதி .மங்கையர்க்கரசி மயில்வாகனம் என்பவருக்கு அதிபர் பதவி வழங்குவதற்காக பாலர் கீழ்ப்பிரிவு, பாலர் மேற்பிரிவு, இரண்டாம் வகுப்பு ஆகிய மூன்று வகுப்புகளும், அவற்றுக்குரிய ஆசிரியர்களும் பிரிக்கப்பட்டு அவரது பொறுப்பில் "பாலர் பாடசாலை" யாகவும்; மூன்றாம், நான்காம், ஐந்தாம் வகுப்புகள் மூன்றும் "அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை" என்னும் பெயரிலும் இயங்கியுள்ளன.

திருமதி.ம.மயில்வாகனம் அவர்கள் மாற்றம் பெற்றுச் சென்றதும் திரு.த.சந்திரசேகரம்பிள்ளை அவர்கள் 31.08.1967 வரை கடமையாற்றி உள்ளார். 01.09.1967ல் இருபாடசாலைகளும் ஒன்றிணைக்கப்பட்டு

மீண்டும் ஒரே நிருவாகத்தின்கீழ் இயங்கத்தொடங்கின. இவ்வேளை திரு.பி.வி.கணபதிப்பிள்ளை அவர்கள் அதிபராகப் பணியாற்றியுள்ளார். இவருக்குப் பின்னர் திரு.எம்.முருகுப்பிள்ளை, திரு.நொ.க.ஏரம்பமூர்த்தி, திரு.எஸ்.பிரான்சிஸ், திரு.ஏ.ஜோசேப் ஆகியவர்கள் அதிபர்களாகப் பணியாற்றியுள்ளார்கள். பாடசாலை ஆரம்பமானது தொடக்கம் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் இப்பாடசாலைக்கு அதிபராக 08.03.1973ல் பொறுப்பேற்கும் வரையான காலப் பகுதியில் (சுமார் 27 வருடங்கள், 05 மாதங்கள்) இவ்வித்தியாலயத்திலே பதினேழு (17) அதிபர்கள் காலத்துக்குக் காலம் தேவைக்கேற்ப நியமனம் பெற்றுப் பணியாற்றியிருக்கிறார்கள். இக்காலப் பகுதியிலே ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் சிரேஷ்ட உதவி ஆசிரியராகவும், பதில் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு.த.செல்வநாயகம் அவர்கள் சிரேஷ்ட உதவி ஆசிரியராக இங்கே பணியாற்றிய காலத்தில் 01.10.1958ல் மட்/தளவாய் அ.த.க.பாடசாலைக்கு கொள்கை மாற்றம் என்ற அடிப்படையில் இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார். அங்கே 31.05.1960 வரை கடமையாற்றினார். பின்னர் இதே கொள்கைமாற்ற அடிப்படையில் இடமாற்றம் பெற்று 01.06.1960 தொடக்கம் 31.12.1962 வரை பது/வெலிமடை அ.த.க.பாடசாலைக்கு உதவி ஆசிரியராக இடமாற்றம் பெற்றுக் கடமையாற்றியுள்ளார். இதனையடுத்து அங்கிருந்து இடமாற்றம் பெற்று இப்பிரதேசத்துக்கு வந்து மட்/கிரான்குளம் அ.த.க. பாடசாலையிலே 01.01.1962 – 15.03.1964 வரையான காலப்பகுதியிலும், பின்னர் மட்/மெதடிஸ்த மிஷன் அ.த.க.பாடசாலையில் 16.03.1964 – 31.12.1965 வரையான காலப்பகுதியிலும் தனது ஆசிரியத்துவ சேவையினை தொடர்ந்துள்ளார். இதற்குப் பின்னர் கோட்டைமுனைப் பிரதேசத்திலேயே மாறிமாறிப் பணியாற்றியுள்ளார்.

மட்/கோட்டைமுனை மகா வித்தியாலயத்திலே 01.03.1971 – 31.07.1971 வரையான காலப்பகுதியிலே சிரேஷ்ட உதவி ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கையிலேயே முதலாம்தர அதிபர் நியமனம் பெற்று பது/கொஸ்லாந்தை தமிழ் மகாவித்தியாலயத்துக்குச் சென்று அதிபராகக் 'கல்விச்சேவை' புரிந்துள்ளார். அங்கே 01.08.1971 – 04.03.1972 வரை சேவையாற்றிவிட்டு இடமாற்றம் பெற்று மீண்டும் கோட்டைமுனைக்கே கடமைக்காக வந்துசேர்ந்தார். அதற்குப் பின்னர் மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்திலே இவரது நீடித்த அதிபர் சேவை ஆரம்பமாகத் தொடங்கியது.

## 4.2 வித்தியாலயத்தின் இடைக்காலம்

மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் இடைக்காலமாக எடுத்து ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களின் சேவை பற்றி நோக்கும் காலம் இவர் 08.03.1973 முதல் சேவையிலிருந்து இளைப்பாறிய 03.04.1987 வரையான காலப்பகுதியாகும். மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய வரலாற்றில் இக்காலத்தைப் பொற்காலம் எனலாம். இதற்குக் காரணம் இவரது அர்ப்பணிப்பும், விடாமுயற்சியும், பொதுநலமும், தொலைநோக்கும் மிக்க சேவைகளாகும். இதனை இவ்வித்தியாலய வரலாறானது நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்கும் போது இப்பாடசாலையிலே ஆரம்பப் பிரிவு முதல் எட்டாம் வகுப்பு வரை வகுப்புகள் இருந்தன. மூன்று கட்டடங்கள் மட்டுமே இருந்தன. எந்தவொரு கட்டடமும் கம்பி வேலிகளால் அடைக்கப்பட்டிருக்கவில்லை. அங்கே 350 மாணவர்கள் கல்வி கற்றுக்

கொண்டிருந்தார்கள். அதிபருடன் சேர்த்து ஐந்து ஆண்களும், பத்துப் பெண்களும் ஆசிரியர் குழுவில் இடம்பெற்றிருந்தார்கள். இடநெருக்கடி, தளபாடத் தட்டுப்பாடு, பாதுகாப்பின்மை ஆகியவை பெரும் குறைபாடுகளாகக் காணப்பட்டன. இக்குறைபாடுகளை நீக்கி மாவட்டத்திலேயே ஆரம்பப் பாடசாலைகளின் வரிசையில் இப்பாடசாலையை முதற்பாடசாலையாக விளங்கச் செய்வதற்குரிய தெளிவான குறிக்கோள்களையும், திட்டங்களையும் இவர் தன்னகத்தே கொண்டிருந்தார்.

முதல் நடவடிக்கையாக கோட்டைமுனை மகாவித்தியாலய அதிபர் திரு. சின்னத்துரை அவர்களின் ஒப்புதலோடும் கல்வித் திணைக்களத்தின் ஆலோசனைக்கு இணங்கவும், பெற்றோரின் விருப்பத்தையும் பெற்று ஐந்தாம் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புகள் யாவற்றையும் அதற்குரிய ஆசிரியர்களுடன் கோட்டைமுனை மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்தார். இதன் காரணமாக நீண்டகாலமாக இருந்துவந்த இடநெருக்கடியானது பெரிதும் குறைந்ததோடு, இவ்வித்தியாலயம் நிறுவப்பட்ட "அரசினர் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலை" என்ற நோக்கமும் நிலைநிறுத்தப்பட்டது.

அன்றிலிருந்து வருடம் தோறும் ஐந்தாம் வகுப்புச் சித்தியடைந்த மாணவர்கள் அனைவரும் உயர் கல்விக்காக கோட்டைமுனை மகாவித்தியாலயத்துக்கே அனுப்பிவைக்கப்பட்டார்கள். சில காலத்தின் பின்னர் பெற்றோர் தமது பிள்ளைகளைத் தாம் விரும்பிய நகரப் பாடசாலைகளில் சேர்த்துப் படிப்பிக்கவும் தலைப்பட்டார்கள். இங்கே தமிழ் முதல் மொழியாகவும், ஆங்கிலம் இரண்டாம் மொழியாகவும் கற்பிக்கப்பட்டன. அத்தோடு சிங்களமும் கற்பிக்கப்பட்டது. இது இன ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. எனவே இந்த மூன்று

மொழிகளிலும் மாணவர்கள் தேர்ச்சி பெறவேண்டும் என்பதிலும், மாணவர்களிடையே இவற்றின்மூலம் ஒற்றுமை உணர்வும், அமைதியும் மேலோங்க வேண்டும் என்பதிலும் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்டிருந்தார்.

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் இவ்வித்தியாலயத்திலே கடமையாற்றிக் கொண்டிருந்த காலப்பகுதியிலே அரசு நாடளாவிய ரீதியில் **"செயல் மூலம் உணர்தல் - நவீன கணிதத் திட்டம்"** என்னும் ஆரம்ப வகுப்புகளுக்கான கலைத்திட்டத்தை அறிமுகம் செய்திருந்தது. இத்திட்டமானது சிங்கள மொழியில் - சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களில் **"கிரியாவதன நவோதய"** என அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இத்தகைய கலைத்திட்டமானது இவரது காலத்திலே இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டமையும், இதனைச் சரியாகத் திட்டமிட்டு திறம்பட நடத்தி வெற்றிகள் பலவற்றை இவர் நிலைநாட்டியமையும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளாகும்.

அதாவது இலங்கையில் செயல் மூலம் உணர்தல் என்னும் ஆரம்ப வகுப்புகளுக்கான கணிதத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்ட வேளையில், பரீட்சார்த்த முன்னோடிப் பாடசாலையாக மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் தெரிவானது. மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் அனுசரணையில் கணித விரிவுரையாளர் திரு.கோ.கோணேசபிள்ளை அவர்களின் பொறுப்பில் 1973ல் இத்திட்டம் இங்கே ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வித்தியாலயத்தில் உதவி ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி பாக்கியலட்சுமி குமாரசாமி ஆசிரியை இதற்கான விசேட பயிற்சியைப் பாடவிதான அபிவிருத்தி நிலையத்தில் பெற்றார். இது தொடர்பான பயிற்சிகள் அதிபருக்கும் வழங்கப்பட்டன. இவர்கள் இருவரும் திரு.கோ.கோணேசபிள்ளை அவர்களின் வழிகாட்டலில் இத்திட்டத்தை வெற்றிகரமாக அமுலாக்கினார்கள். செயல் மூலம் உணர்தல் என்னும் நவீன கணிதத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் கல்விஅமைச்சு, மாவட்டக் கல்வித்திணைக்களம், பாடவிதானஅபிவிருத்தி நிலையம், ஆசிரிய கலாசாலை என்பனவற்றின் முழுக்கவனமும் ஆசிரியர் திரு.த.செல்வநாயகம் ஆகியோர்பால் ஈர்க்கப்பட்டன. சில பௌதீகத் தேவைகளும் படிப்படியாக நிறைவேறத் தொடங்கின.

ஆசிரியர் கலாசாலையின் பூரண ஒத்துழைப்புகளும் அன்றுமுதல் இப்பாடசாலைக்குக் கிடைத்துக் கொண்டிருந்தன. இதுவரை காலமும் வித்தியாலயத்தின் அயலவர்களாக மாத்திரம் விளங்கியவர்கள் பாதுகாவலர்களாக மாறிவிட்ட புதுமையும் நிகழ்ந்தது. கல்வி அமைச்சிலிருந்தும் பாடவிதான அபிவிருத்தி நிலையத்திலிருந்தும் கல்விப்பணிப்பாளர்களும், கல்வி அதிகாரிகளும் இத்திட்ட அமுலைப் பார்வையிடுவதற்காக அடிக்கடிவர ஆரம்பித்திருந்தார்கள். இவர்களுடைய வருகைகளும், பாராட்டுகளும் அதிபரையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் உற்சாகமூட்டின. இம்மாவட்டத்திலுள்ள ஏனைய ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்கள் இத்திட்ட அமுலைப் பார்வையிடவும், பயிற்சி பெறவும் கல்வித்திணைக்களத்தின் ஆலோசனையின் பேரில் இங்கு வருகைதர ஆரம்பித்திருந்தார்கள்.

அதுமாத்திரமன்றி இவ்வித்தியாலயத்தில் நடைமுறையிலிருந்த ஒன்றிணைந்த பாடத்திட்டமே இம்மாவட்டப் பாடசாலைகளிலும் அமுலாக்கப்பட்டன. இதிலிருந்து அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதியபுதிய கலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் கொண்டிருந்த தீவிர ஈடுபாட்டையும் செயற்றிறனையும் நன்கு அறிந்து கொள்ளலாம். மேலும் மாணவர்களின் செயற்றிறன்களைத் தூண்டும் வகையில் இப்பாடசாலையிலே பல கல்விப் பொருட்காட்சிகள் நடைபெற்றுள்ளன. மாணவர்களின் செயற்றிறன் உபகரணப் பொருட்கள் இங்கு மாத்திரமன்றி ஒவ்வொரு வட்டாரப் பாடசாலைகளிலும், பாடவிதான அபிவிருத்தி நிலையத்திலும் காட்சிப்படுத்தப்பட்டன.

நாளடைவில் மேற்படி திட்டத்தினை அதிபர் ஐந்தாம் வகுப்பு வரை விரிவடையச் செய்திருந்தார். இத்தகைய முன்மாதிரியானதும், முற்போக்கானதுமான செயற்பாடுகள் மூலமாக கல்வியூட்டலில் இம்மாவட்டத்தில் சிறந்த முன்னோடிப்பாடசாலையாக கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் கல்வித் திணைக்கள அதிகாரிகளினால் மதிப்பீடு செய்யப்பட்டு ஏனைய மாவட்டங்களிலும் அறிமுகம் செய்யப்பட்டது.

இவ்வளர்ச்சிக்காகவும், வெற்றிக்காகவும் இரவுபகலாக அயராதுழைத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என எல்லோரும் பாராட்டப்பட்டார்கள். இத்திட்ட வெற்றியே இவ்வித்தியாலயத்தின் வெற்றி எனலாம். இவ்வெற்றிக்காக உழைத்த அதிபர் த.செல்வநாயகம் அவர்களும், ஆசிரிய கலாசாலை கணிதபாட விரிவுரையாளர் திரு.கோ.கோணேசபிள்ளை அவர்களும், வித்தியாலய ஆசிரியை திருமதி.பா.குமாரசாமி அவர்களும் இக்காலத்தில் சேவையாற்றிய

ஏனைய ஆசிரியர்களும் இவ்வித்தியாலய வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவர்கள். இப்பாடசாலையில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் உரையாற்றிய ஆசிரியர் கலாசாலையின் அதிபராக இருந்த திரு.எஸ்.தர்மலிங்கம் அவர்கள் தமது உரையில் **"வரண்டு காணப்படுகின்ற ஆசிரியர் கலாசாலையின் பாலைவனப் பசுந்தரையாக விளங்குவது இப்பாடசாலை"** எனக் கூறியது இங்கே நினைவு கூரத் தக்கதாகும். அடுத்ததாக இடநெருக்கடியை மேலும் குறைக்கும் வகையிலும், பௌதீக வளம் தொடர்பில் பாடசாலையை அபிவிருத்தி செய்யும் விதத்திலும், வித்தியாலயத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்கிலும் அதிபர் திரு.த.செல்வநாயகம் அவர்கள் சிந்திக்கத் தொடங்கினார். இந்த நிலையில் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினரும் அரசியல் வாதியாகப் பணிபுரிந்தவருமாகிய திரு.பி.இராஜன் செல்வநாயகம் அவர்களின் உதவியை நாடினார். அவரது உதவி இவ்வித்தியாலயத்துக்குத் தாராளமாகக் கிடைத்தது. இவரின் நிதி ஒதுக்கீடுகளினால் கட்டடங்கள் கம்பி வலைகளால் அரண்செய்யப் பட்டன. எல்லை மதில்கள் அமைக்கப்பட்டு வித்தியாலயப்பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டது.

மேலும் மலசல கூடங்கள் அமைக்கப் பட்டதோடு வித்தியாலயத்துக்கு மின்னிணைப்பும் செய்யப்பட்டது. அதிபரின் காரியாலய அறையுடன் கூடிய 80'X20' அளவிலான கட்டடமும் புதிதாக அமைக்கப்பட்டது. 31.10.1987ல் மிகக் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்ட கட்டடம் இதுவாகும். இப்பணிகளுக்கெல்லாம் வரையாது நிதியுதவி வழங்கிய திரு.பி.இராஜன் செல்வநாயகம் அவர்கள் இவ்வித்தியாலய வரலாற்றில் இடம்பெற்ற பிரமுகர்களுள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றார். அவரது நிதியுதவியைப் பெற்று வித்தியாலயத்தின் அபிவிருத்திக்காக

அயராது பாடுபட்ட அதிபர் திரு.தம்பிப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் இவ்வித்தியாலய வரலாற்றில் இடம்பெற்ற அதிபர்களுள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றார்.

மட்டக்களப்பு வரலாற்றில் 1978 நவம்பர் 23ம் திகதி மறக்க முடியாத நாள் எனலாம். அன்று வீசிய சூறாவளி இம்மாவட்டத்தை நிலைகுலையச் செய்தது. மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகள் இடிந்து தரைமட்டமாயின. கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்துக்கு இக்கதி நேராவிட்டாலும் மேற்கூரைகள் யாவும் சேதமுற்றன. மாவட்டம் முழுவதும் அரச கட்டடப் பொருட்கள், அரசுடமைகள் ஆகியவை பொதுமக்களால் அபகரிக்கப்பட்ட வேளையில் இவ்வித்தியாலயத்தில் எந்தவொரு உடமைகளோ கொள்ளை போகவில்லை என்பது வரலாற்று உண்மையாகும்.

சூறாவளியின் தாக்கத்தையடுத்து இவ்வித்தியாலயக் கட்டடங்களுக்கு மேற்கூரைகளை அமைப்பதிலும், ஏனைய திருத்த வேலைகளைச் செய்வதிலும் அதிபர் கூடிய கவனம் செலுத்தியிருந்தார். இதன்படி கல்வித் திணைக்களம், அரச அதிபர் செயலகம், மட்டக்களப்பு கட்டடப் பொருட்கூட்டுத் தாபனம் என்பவை ஒன்றிணைந்து வழங்கிய ஒத்துழைப்பு பாடசாலை வரலாற்றுடன் இணைந்த ஒன்றாகும்.

சூறாவளியின் பின்னர் புனரமைப்புப் பணிக்காக சிறப்பாக நியமிக்கப்பட்ட; (கிழக்குப் பிராந்தியத்தின் அபிவிருத்திக்காக நியமனம் பெற்றுப் பணிபுரிந்த) திரு.கே.ஆர்.எம்.புஞ்சிநிலமே அவர்களும் அவருடன் வருகை தந்த திரு.டபிள்யு.டி.சி. மகாதந்தில அவர்களும் இவ்வித்தியாலயத்தைப் பார்வையிட்ட பின்னர் பாடசாலைச் சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் எழுதிய அவர்களின் குறிப்புகளை இங்கே குறிப்பிடுவது மிகவும் பொருத்தமுடையதாகும்.

**05.01.1979:** visited school at 9.00 a.m. and found 11/13 teacher's at working clearing the garden and attending to salvaging. principal appears to be one very enthusiastic about his work. what he has succeded so far in trying to bring back his school is commendable. A very dedicated principal indeed.

**K.R.M. Punchinilame**
**D/E. Rehabilitation.**

**05.01.1979:** VISITED SCHOOL WITH THE R.D.E. I THANK THE PRINCIPAL AND THE STAFF FOR THE EXCELLENT REHABILITATION WORK DONE SO FAR. I AM DEEPLY IMPRESSED WITH THE EXCELLENT DEVOTION OF THE PRINCIPAL.

**W.D.C.MAHATHANTHILA**
**ADD/D/E.**

சூறாவளி அனர்த்தத்திலிருந்து மீண்ட பின்னர் வித்தியாலயத்தை முன்னரிலும் பார்க்க அதிதுரிதமாக முன்னேற்றுவதில் அதிபர் திரு.த.செல்வநாயகம் அவர்கள் அதிதீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார். கற்றல் கற்பித்தல் செயன்முறையை மேலும் வினைத்திறனாக்கும் முயற்சியிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளையும், புறக்கிருத்திய நிகழ்வுகளையும் மேம்படுத்தும் நோக்கிலும் அவர் கொண்டிருந்த கரிசனை பாராட்டத்தக்கதாகும். இதற்கேற்றாற்போல் ஆசிரியர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் தோளோடு தோள் நின்று உதவியுள்ளார்கள்.

இதன்படி இவர் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் கடமையாற்றிய காலத்தில் மூன்று முக்கிய பரிசளிப்பு விழாக்களை வெற்றிகரமாக நடத்தியிருக்கின்றார். முதலாவது பரிசளிப்பு விழா 31.08.1978 அன்று ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் பிரம்மஸ்ரீ.கி.லஷ்மண ஐயர் (கல்வி அமைச்சின் தமிழ்ப் பிரிவு கல்விப் பணிப்பாளர்), திருமதி.பாலம் லஷ்மண ஐயர் ஆகியோரைப் பிரதம விருந்தினராகவும் மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜீ மகராஜ் அவர்களைச் சிறப்பு விருந்தினராகவும் கொண்டு கிழக்குப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு.ஜி.டி.சோமபால அவர்கள் தலைமையில் இடம் பெற்றது.

இரண்டாவது பரிசளிப்பு விழா 'அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு, பலாலி ஆசிரியர் கலாசாலைகளின்' முன்னைநாள் அதிபர் உயர் திரு. சி.கந்தசாமி அவர்களைப் பிரதம விருந்தினராகக் கொண்டு வித்தியாலய வெளி அரங்கிலே நடைபெற்றது.

மூன்றாவது பரிசளிப்பு விழா வித்தியாலயத்தின் வெளி அரங்கை பாடசாலையின் உள்ளே இணைத்துத் திருத்தி அமைக்கப்பட்ட புதிய உள்ளரங்கில் மட்டக்களப்பு மாவட்ட அரசஅதிபர் உயர்திரு எம்.அந்தோனிமுத்து, திருமதி.எம்.ஆர்.அந்தோனிமுத்து ஆகியோரைப் பிரதம விருந்தினராகக் கொண்டு இடம்பெற்றது. இரண்டாவது, மூன்றாவது பரிசளிப்பு விழாக்களில் முறையே கிழக்குப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்களான ஜனாப் மு.ஷரீப், ஜனாப் ரி.டி.கனான் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்திருந்தார்கள். கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் திரு.த.செல்வநாயகம் அவர்கள் அதிபராகப் பணியாற்றிய காலத்திலே சிறந்த குருளைச் சாரணர் இயக்கமொன்றும் ஆரம்பிக்கப்பட்டு சின்னஞ்சூட்டு விழாக்களும்

நடைபெற்றுள்ளன. 1975ம் ஆண்டு தொடக்கம் 1986ம் ஆண்டு வரை ஏழுமுறை குருளைச் சாரணர் சின்னஞ்சூட்டு விழாக்கள் இனிதே நிகழ்ந்தேறியுள்ளன.

இவ்விழாக்களில் மாவட்டச் சாரண ஆணையாளர்களான திரு.ஏ.பி. பாலசுப்பிரமணியம், திரு.ஏ.சாரங்கபாணி, ஜனாப் ஹவ்லீன் சம்டீன் திரு.எஸ்.தேவராஜன் ஆகியோரும் கல்விப் பணிப்பாளர்களான திரு.இ.ஜே.சற்குணராசா, ஜனாப்.எம்.கபூர் மற்றும் பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம்.ஏ.சம்சுடீன், கல்வி அதிகாரி திரு.எல்.எம்.ஜோசேப் ஆகியோரும் பிரதம விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர். வட்டாரக்கல்வி அதிகாரிகளான திரு.கே.ஜே.முத்துராஜா, திருமதி.எஸ்.செல்வரெத்தினம் ஆகியோரும், ஆசிரியர் கலாசாலை அதிபர்களான திரு.எஸ்.தர்மலிங்கம், திரு.கோ.கோணேசபிள்ளை ஆகியோரும் சின்னஞ்சூட்டு விழாவில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சின்னஞ்சூட்டி மகிழ்வூட்டினர்.

கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற விழாக்களுள் கௌரவ பி.இராஜன் செல்வநாயகம் அவர்களின் நிதியுதவியுடன் கட்டப்பட்டு 31.10.1977அன்று, அந்நாள் கல்விப் பணிப்பாளர் ஜனாப்.ஏ.எம்.மஜித் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட புதுக்கட்டடத் திறப்பு விழாவைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இவ்விழாவில் திரு.இ.ஜே.சற்குணராசா, திரு.எஸ்.தர்மலிங்கம், திரு.எல்.எம்.ஜோசேப் திரு.கோ.கோணேசபிள்ளை ஆகியோரும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு.க.தர்மலிங்கம் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

இப்பாடசாலை வருடம் தோறும் இடம் பெறும் வட்டார, மாவட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றியதோடு, இல்ல விளையாட்டுப்

போட்டிகளையும் நடத்திப் பெருமித்தது. இல்ல விளையாட்டுப் போட்டிகள் கலைமகள், திருமகள், மலைமகள் என்னும் மூன்று இல்லங்களுக்கிடையில் நடத்தப் பட்டுள்ளன.

இப்போட்டிகளுக்கு கிழக்குப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்களான திரு.தி. மாணிக்கவாசகர், ஜனாப்.எம்.ஷரீப், றோட்டரிக் கழகத் தலைவர் திரு.க.தர்மலிங்கன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், உடற்கல்விப் பாடத்துக்கான அதிகாரி திரு.ரீ.கிருபைராஜா, வட்டாரக் கல்வி அதிகாரிகளான திரு.எல்.எம்.ஜோசேப், திரு.கே.ஜே.முத்துராஜா, மண்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு.வெ.சாம்பசிவஐயர், ஆசிரிய கலாசாலை அதிபர்களான திரு.சு.தர்மலிங்கன் திரு.சி.புலேந்திரன் திரு.கோ.கோணேசபிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்துள்ளார்கள்.

கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய ஆரம்பத்திலே கல்விமா அதிபதியும் கல்விச் செயலாளருமான கலாநிதி.பிரேமதாச உடகம அவர்களைப் பிரதம விருந்தினராகக் கொண்டு 01.06.1973 தொடக்கம் 03.06.1973 வரை 'கல்வி-வளர்ச்சி-பயன்' என்னும் தொனிப் பொருளிலான பொருட்காட்சியின் ஒரு அங்கமான 'விவசாயப் பிரிவு செய்முறைப் பொருட்காட்சி' இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து 07.04.1976ல் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் வாதியும் தேசியப் பேரவை உறுப்பினருமாகிய அமரர் திரு.பி.இராஜன் செல்வநாயகம் அவர்களைப் பிரதம விருந்தினராகக் கொண்ட 'பெற்றார் தினவிழா - செயல்மூலம் உணர்தல் - செயற்றிறன் பொருட்காட்சி' இடம்பெற்றது.

இதன் பின்னர் 20.03.1980ல் கிழக்குப் பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு.டீ.ஜீ.பீ.சமரஜீவ அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட

‘மாணவர் செயற்றிறன் பொருட்காட்சி - வானொலிப் பெட்டி அன்பளிப்பு விழா’ ஆகியவை இடம் பெற்றன. அத்துடன் 15.11.1980 அன்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய ‘கைவினைப் பொருட்கண்காட்சியுடன் இணைந்த கல்விப் பொருட்காட்சி’ யானது பலரும் பாராட்டத்தக்க வகையில் நடைபெற்றுள்ளது. இப்பொருட் காட்சிக்கு கௌரவ.கே.டபிள்யு.தேவநாயகம் (உள்நாட்டலுவல்கள் அமைச்சர்), கௌரவ.செ.இராசதுரை (பிராந்திய அபிவிருத்தி அமைச்சர்), கௌரவ.காமினி அத்துக்கோறள (தேசிய இளைஞர் சேவைகள் பிரதி அமைச்சர்), திரு.எம்.அந்தோனிமுத்து, திரு.டிக்ஷன் நிலவீர, கலாநிதி ஆ.கந்தையா, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற ஆளுகைக்குழு உறுப்பினர் ஆகியோர் பிரதம, சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

இவற்றைவிட 30.03.1987 அன்று கிழக்குப்பிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு.இ.ஜே.சற்குணராசா அவர்கள் பிரதம விருந்தினராகவும், பிரதம கல்வி அதிகாரி திரு.எஸ்.நவரெத்தினராசா, வட்டாரக்கல்வி அதிகாரி திரு.எஸ்.எஸ்.மனோகரன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்துப் பாராட்டிய ‘கல்விப் பொருட்காட்சி’யும் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்திலே இடம்பெற்றுள்ளது.

எந்தவொரு பாடசாலையினதும் உயர்வு கருதி இடம்பெறுகின்ற புறக்கிருத்தியச் செயற்பாடுகளில் கல்விசார் பொருட்காட்சிகளும், கலைசார் கைவினைகளும் பிரதான இடத்தைப் பெறுகின்றன. மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்திலும் மேற்படி பல பொருட்காட்சிகள் சிறப்புற இடம் பெற்றிருக்கின்றன. இவற்றின் மூலம் இவ்வித்தியாலயமானது பலரதும் பாராட்டுக்களையும், நல்லாசிகளையும் பெற்றிருக்கின்றது. இத்தகைய உயர்வுக்கும், சிறப்புக்கும் முன்னணியில்

நின்று செயற்பட்டவராகத் திருவாளர் த. செல்வநாயகம் அவர்களைக் கண்டு கொள்ள முடிகின்றது.

முதன்முதலாக அரசாங்க இலவசப் பாடப்புத்தக விநியோக விழா நாடெங்கிலும் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயமும் அவற்றுள் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப் பட்டமையானது முக்கியமானதோர் அம்சமாகும். 18.01.1980 அன்று இவ்விழாவானது மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. இவ்விழாவுக்குப் பிரதம அதிதியாக பிரதேச அபிவிருத்தி தமிழ்மொழி அமுலாக்கல், இந்து கலாசார அமைச்சர் கௌரவ செ.இராசதுரை அவர்கள் கலந்துகொண்டார். சிறப்பு அதிதிகளாக கிழக்குப்பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு.டி.ஜி..பீ.சமரஜீவ அவர்களும், கல்வி அதிகாரி ஜனாப்.எம்.ஏ.காதர் முகைதீன், வடக்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு.கே.ஜே.முத்தராஜா, மண்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு.வெ.சாம்பசிவ ஐயர் ஆகியோர்களும் கலந்து சிறப்பித்துள்ளார்கள். இந்த விழாவுக்குப் பிரதம அதிதியாக வருகை தந்திருந்த பிரதேச அபிவிருத்தி தமிழ்மொழி அமுலாக்கல், இந்து கலாசார அமைச்சர் கௌரவ.செ.இராசதுரை அவர்கள் வித்தியாலய சம்பவத்திரட்டுக் குறிப்புப் புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். **“18.01.1980 ஆகிய இன்று இவ்வித்தியாலயத்துக்கு வருகை தந்த போது அமைதியுடனும், ஒழுங்குடனும் இருந்த மாணவர்களைக் கண்ணுற்றேன். எனக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. நல்ல அதிபர், நல்ல ஆசிரியர்கள், நல்ல மாணவர்கள். இப்பாடசாலை மேலும் வளர்ச்சியுற வாழ்த்துகிறேன்.”** இத்தகைய வாழ்த்துக்களை இவ்வித்தியாலயம் பெறுவதற்கு மூலகாரணமாக அமைந்தவர் திருவாளர் த.செல்வநாயகம் அதிபர் அவர்கள் என்பது இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் 1982 ஜுன் 16ம் திகதியன்று இடம்பெற்ற பாலர்களுக்கான ஊஞ்சல் திறப்பு வைபவம் ஒரு விஷேட நிகழ்ச்சியாகும். மட்டக்களப்பு றோட்டரிக் கழகம் அன்பளிப்புச் செய்த பாலர்களுக்கான ஊஞ்சல் தொகுதியை மதுரை மாநகரிருந்து இலங்கைக்கு வருகை தந்த அந்நாள் றோட்டரிக்கழக மாவட்ட ஆளுனரான மேன்மை தங்கிய ஸ்ரீமான் எம்.சண்முகம் அவர்கள் தமது பாரியார் சகிதம் வருகை தந்து திறந்து வைத்த நிகழ்ச்சி வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். அச்சமயம் மட்டக்களப்பு றோட்டரிக் கழகத் தலைவர் திரு.கே.தர்மலிங்கம், செயலாளர் திரு.அ.கி.பத்மநாதன் உறுப்பினர்கள் திரு.எம்.அந்தோனிமுத்து, திரு.வெ.சாம்பசிவ ஐயர் ஆகியோர் உட்படப் பலர் கலந்து இவ்விழாவைச் சிறப்பித்திருந்தார்கள். வித்தியாலயத்தில் இடம்பெற்ற முன்னேற்றகரமான பல வைபவங்கள் தொடர்பான புகைப்படக் கண்காட்சி ஒன்றும் இவ்விழாவில் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

வருடந்தோறும் பாடசாலை மட்டத்தில் வட்டார, மாவட்ட மட்டங்களின் இறுதியில் மாகாணமட்டத்தில் நடைபெறும் தமிழ் மொழித்தின, ஆங்கில மொழித்தினப் போட்டிகளில் பங்கு பற்றி கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய மாணவர்கள் பெருமையினைத் தேடிக் கொடுத்துள்ளனர். வருடந்தோறும் இடம் பெறும் வாணிவிழா, ஒளிவிழா முதலானவற்றில் மாணவர்களுடன் பெற்றோர்களும் பங்கேற்றுள்ளனர். வெள்ளிக் கிழமைகளில் ஆலய வழிபாடுகள், கூட்டுப் பிராத்தனைகள் ஒழுங்கு செய்யப்பட்டு திறம்பட நடத்தப் பட்டுள்ளன. பெற்றோருடன் இணைந்து மாணவர்கள் பல கல்விச் சுற்றுலாக்களையும் மேற்கொண்டு பயன்பல பெற்றுள்ளனர். கலை, கலாசார நிகழ்வுகளில் இவ்வித்தியாலய மாணவர்களின் பங்களிப்புகள் மேலும் ஒருபடி உயர்ந்ததாக இருந்துள்ளன. குறிப்பாக பரிசளிப்பு விழாக்களில் திறமையான தமிழ்,

ஆங்கில கலைநிகழ்ச்சிகளை இவ்வித்தியாலய மாணவர்கள் மேடையேற்றி இருக்கிறார்கள்.

மட்டக்களப்பு வடக்கு வட்டாரத்தில் புகழ் பூத்த பெற்றார் ஆசிரியர் சங்கமாக இவ்வித்தியாலய பெற்றார் ஆசிரியர் சங்கம் திகழ்ந்தது. வருடாந்தப் பொதுக்கூட்டங்களுக்கு 100 வீதமான பெற்றோர்கள் சமுகமளித்ததோடு பாடசாலை விழாக்களிலும் அவ்வாறே பங்கேற்றுச் சிறப்பித்துள்ளார்கள். இதனையிட்டு இவ்விழாக்களில் கலந்து கொண்ட கல்விப்பகுதி அதிகாரிகளே பாராட்டியுள்ளார்கள். மட்டக்களப்பு மாவட்ட பெற்றார் ஆசிரியர் சங்க சம்மேளனச் செயலாளராகப் பணியாற்றும் வாய்ப்பும் இவ்வித்தியாலயப் பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் தலைவருக்குக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் அதிபராகப் பணியாற்றிய காலத்திலே இப்பாடசாலைப் பரீட்சைகள் யாவும் ஒழுங்காகவும், முறையாகவும் நடைபெற்றுள்ளன. அதாவது பரீட்சைகள் அனைத்தும் புதிய பாடத்திட்டத்துக்கமைய சிறப்பாக நடைபெற்றுள்ளதோடு, வட்டாரத்திலுள்ள ஏனைய பாடசாலைகளும் இப்பரீட்சைத்திட்டத்தில் இணைந்து செயற்படும் வாய்ப்புகளும் செய்யப்பட்டிருந்தன. அதுமாத்திரமன்றி கிழக்குப் பிரதேச ஆசிரியர் சங்கம் நடத்திய பொதுப்பரீட்சைகள், அகில இலங்கை விவேகானந்த சபையினர் நடத்திய இந்து சமயப்பாடப் பரீட்சைகள், மட்டக்களப்பு மறைக்கல்வி நிலையம் நடத்திய றோமன் கத்தோலிக்க சமய பாடப் பரீட்சைகள், முதலியவற்றுக்கும் மாணவர் தோற்றும் வாய்ப்புகளும் அதிபரினால் செய்து கொடுக்கப்பட்டிருந்தன.

ஆறாம் ஆண்டில் (ஐந்தாம் வகுப்பு) நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் தோற்றிச் சித்தியடைந்துள்ளார்கள். சித்தியடையும் மாணவர் தொகை படிப்படியாகக்கூடி 1982ம் ஆண்டு நடந்த பரீட்சையில் பத்து (10) மாணவர்களும், 1983ம் ஆண்டு நடந்த பரீட்சையில் பதினான்கு (14) மாணவர்களும் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளார்கள். அவ்வேளையில், **"ஒரே பாடசாலையில் பதினான்கு மாணவர்கள்..."** என்று தலைப்பிட்டு **வீரகேசரிப் பத்திரிகையில** ஒரு பாராட்டுச் செய்தி வெளிவந்திருந்தமை இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

பின்னர் ஐந்தாம் ஆண்டில் இப்பரீட்சை நடைபெற்றது. இதிலும் இவ்வித்தியாலய மாணவர்கள் திறமையாகச் சித்தியெய்தி மாவட்டத்தில் முதலிடத்தைக்கூடப் பெற்றிருந்தார்கள். இதற்கெல்லாம் காரணம் செயல்மூலம் உணர்தல் - நவீன கணிதத்திட்டமும், செயன்முறைசார்ந்த இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும், இதர புறக்கிருத்திய வேலைப்பாடுகளும், ஒன்றிணைந்த கலைத்திட்டமும் முன்மாதிரியான முறையில் இயக்கப்பட்டமையாகும். அந்த வகையில் அதிபர் திரு.த.செல்வநாயகம் அவர்களினதும் அவரைச் சார்ந்த ஆசிரியர் குழாமினதும் செயற்பாடுகள் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் வரலாற்றுப் பதிவுகளில் முதல்நிலை இடங்களைப் பெறுகின்றன.

இவரது காலத்திலே இவ்வித்தியாலயத்திலே ஆசிரியர்கள் பலர் வந்து கடமையாற்றிச் சென்றுள்ளார்கள். அவர்களில் சில ஆசிரியர்கள் வித்தியாலய வரலாற்றுடன் பிணைக்கப் பட்டுள்ளார்கள். திரு.வே.சர்வானந்தம் அவர்கள் இவ்வித்தியாலயத்தின் உப அதிபராகப் பணியாற்றி ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களின்

பொறுப்பான கடமைகளில் பங்கேற்று பாடசாலை நலனுக்கு உழைத்த பெருமகன். திருமதி. பூமணி சண்முகநாதன் அவர்கள் சிரேஷ்ட உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தவர். வித்தியாலயத்தின் சகல முன்னேற்றகரமான பணிகளுக்கும் பங்களிப்புச் செய்தவர். அவசிய தேவை கருதியே விடுமுறை எடுப்பவர். 1982ம் ஆண்டில் நூறுவீதம் பாடசாலைக்குச் சமூகமளித்து 1984ம் ஆண்டில் நடைபெற்ற வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பாடசாலை அபிவிருத்திச் சங்க ஞாபகார்த்தப் பரிசினைப் பெற்று வரலாறு படைத்தவர்.

திருமதி.பாக்கியலட்சுமி குமாரசாமி அவர்கள் இவ்வித்தியாலயத்தில் செயல் மூலம் உணர்தல் - நவீனகணிதத் திட்டத்தை வெற்றிகரமாக அமுலாக்கி அத்திட்டம் அகில இலங்கையிலும் செயற்பட வழிகோலிய வரலாற்றுச் சிறப்பு மிக்கவர். திருமதி.சோதிமலர் முத்துலிங்கம் அவர்கள் இவ்வித்தியாலயத்தின் குருளைச் சாரணர் இயக்கத்தின் முதன்மையாசிரியராக திறமையாகச் செயலாற்றி வெற்றியீட்டியவர். அத்துடன் உடற்கல்விப் பயிற்சி, சமய கலைநிகழ்ச்சிகள், புலமைப்பரிசில் பரீட்சைக்கான ஆயத்தம் முதலான பலதுறைகளிலும் பாடசாலைக்குப் பெருமைகளைத் தேடித்தந்தவர்; அயராதுழைத்தவர். திருமதி. ஜோகேஸ்வரி சிறீ அவர்கள் அமைதியே உருவாக இவ்வித்தியாலயத்தின் சமய, கலைகலாசார நிகழ்ச்சிகள், புலமைப்பரிசில் பரீட்சை ஆயத்தம் முதலிய துறைகளின் முன்னேற்றத்துக்குச் சிறப்பான சேவை ஆற்றியவர்.

திருமதி. அருளம்மா ஞானப்பிரகாசம் அவர்கள் இவ்வித்தியாலயத்தில் முதலாம், இரண்டாம் ஆண்டு வகுப்புகளில் திறமையாகக் கல்வியூட்டி மாணவர்களை நல்வழிப்படுத்தியவர். றோ.க.சமய விழாக்களிலும் முக்கிய பங்கேற்றவர். திருமதி.ஏ.எம்.எம்.அவுட்ஸ்கோன் அவர்கள்

ஆங்கில உதவி ஆசிரியையாகப் பணியாற்றியவர்களுள் அயராது பணியாற்றி முதன்மையான ஆங்கில ஆசிரியை எனப் பாராட்டுப் பெற்றவர். இவர்களைவிட இன்னும் சில ஆசிரியர்களும், தொண்டர் ஆசிரியர்களும் வித்தியாலய வரலாற்றிலே முக்கியத்துவம் பெறுகின்றார்கள். ஆக, திரு.த.செல்வநாயகம் அவர்கள் அதிபராக இருந்த காலப்பகுதியிலே சிறந்ததொரு ஆசிரியர் குழாத்தினரை கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் பெற்றிருந்தமை நோக்கத் தக்கதாகும்.

கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய பொன்விழா மலருக்கு (1945-1995) முன்னாள் ஆசிரியை திருமதி.பூமணி சண்முகநாதன் அவர்கள் வழங்கியிருந்த "கடந்தகால நினைவுகள்" என்ற தலைப்பிலான அவரது கட்டுரையில் இருந்து சில குறிப்புகளை இங்கே தருவது மிகவும் பொருத்தமுடையதாகும்.

"... நான் 01.02.1967ம் ஆண்டு இப்பாடசாலையில் ஆசிரியையாகக் காலூன்றினேன். காலத்துக்குக் காலம் எத்தனையோ அதிபர்கள், ஆசிரியர்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். இப்படி நிலைகள் மாறும்போது வெட்டுக்கள், குத்துக்கள், சிலகாலம் கலவரங்கள். எல்லாம் அனுபவித்து வரும்பொழுது ஓர் உன்னத ஆசிரியர் குழாம் உதித்தது. அக்காலம் தான் இப்பாடசாலையின் உயர்ச்சிக்கும், புகழ்ச்சிக்கும் வித்திட்ட காலமென நினைக்கிறேன்.

ஓர் அதிபர் வந்தார். அவருடைய அடிமனதின் நோக்கம் என்னவென்றால்; இப்பாடசாலை ஒருமுன்மாதிரியான பாடசாலையாகவும், பார்புகழும் பாடசாலையாகவும் வரவேண்டுமென்பதுதான் என்பதை உணர்ந்தேன். அதற்காக அரும்பெரும் சேவையுடன் தொண்டாற்றினார். பாடசாலைதான்

எல்லாம் என்று வாழ்ந்தார். அதற்குரிய நிர்வாகத்தை வகித்தார். சிறந்த நிர்வாகியாகத் திகழ்ந்தார். அவர்தான் திரு.த.செல்வநாயகம் அவர்கள். அவரது நிர்வாகத்துக்குத் தடையில்லாத ஆசிரிய குழு ஒன்றுதான் அப்பொழுது அமைந்திருந்தது.

ஆண்டவனின் ஆசீர்வாதமோ தெரியாது இக்காலத்தில் தான் ஒன்றிணைந்த பாடத்திட்ட அமுலாக்கலும் அதற்குரிய பாடசாலையாக எமது பாடசாலையும் தெரிந்தெடுக்கப்பட்டது. பாடசாலை அதிபர் திரு.த.செல்வநாயகத்துடன் கல்வி அதிகாரிகள், ஆசிரிய கலாசாலை அதிபர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புகளும் கிடைத்தன. சில பாடசாலைகளில் பெற்றோர்கள் அந்நியர்களாகக் கருதப்படுவார்கள். எங்கள் காலத்தில் பாடசாலை அவர்கள் வீடு மாதிரி. ஆசிரியர்களும், பெற்றோர்களும் ஒரே குடும்பத்தவர்கள் போலப் பழகினார்கள். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எல்லோரும் அன்புடையவர்களாக இருந்தார்கள்.

மாணவமணிகளோ வீடுகளில் இருக்க விருப்பமில்லாமல் தாயைத்தேடிக் கன்றுகள் ஓடுவதுபோல பாடசாலை அதிபரையும், ஆசிரியர்களையும் தேடிப் படையெடுத்தார்கள்; பயின்றார்கள். உயர்தரப் பாடசாலை களுக்குச் சென்று அங்கெல்லாம் திறமைமிக்க மாணவர்களாக தமது பெருமையினை நிலைநாட்டினார்கள்." (மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம், பொன்விழா மலர், 29.04.1997, 'கடந்தகால நினைவுகள்', பக்கங்கள் 32-33)

இதிலிருந்து கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயமானது ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களுடைய காலத்திலே குன்றிலிட்ட தீபம் போல விளங்கிய விதம் பற்றியும், அதனைப் பலவகையிலும்

பிரகாசிக்கச் செய்வதற்கு இவர் பெற்றிருந்த தலைமைத்துவம், நிருவாக ஒழுங்கமைப்பபு, முகாமைத்துவம் பற்றியும், பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான நெருக்கமான பிணைப்புப் பற்றியும், இவருக்குக்கீழ் இயங்கிய ஆசிரியர் குழாத்தினது மகத்துவம் பற்றியும் தெளிவாக அறிந்துகொள்ள முடிகின்றது. கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் வரலாறு பற்றி ஆராய நினைப்பவர்கள் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களை ஒருபோதும் மறந்துவிட முடியாது. அதேபோன்று "ஆசிரியர் சிரோமணி" அவர்களது வாழ்க்கை வரலாறு பற்றி ஆராய நினைப்பவர்கள் ஒருபோதும் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தினை மறந்துவிட முடியாது.

## 4.3 வித்தியாலயத்தின் பிற்காலம்

மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்திலே ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களுக்குப் பின்னர் முறையே திரு.என்.எம்.கந்தசாமி, திரு.கா.சின்னத்துரை, திருமதி.ச.மகேந்திரராஜா, திரு.சி.வி.விஸ்வலிங்கம் ஆகியோர் அதிபர் பொறுப்புக்களை ஏற்றுக் கடமையாற்றியுள்ளார்கள். "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் தொடங்கிவைத்த முன்மாதிரியான செயற்பாடுகளை இவர்கள் சிரமேற்கொண்டிருந்தார்கள்.

திரு.என்.எம்.கந்தசாமி அவர்கள் அதிபராயிருந்த காலக் கடைக்கூற்றிலே (1995ல்) புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் தொகை அறுபத்தைந்தாக (65) உயர்ந்திருந்தது. இந்த அறுபத்தைந்து மாணவர்களில் கிழக்குமாகாணத்திலேயே அதிகூடிய புள்ளிகளைப்பெற்று (168) செல்வன்.கிருஷ்ணன் திவ்யன் முதலாவது இடத்தினையும், அதற்கடுத்ததாக அதிகூடிய புள்ளிகளைப் பெற்று (167) செல்வி.நடராசா லினோஜா இரண்டாவது இடத்தினையும்

பெற்றுச் சாதனை படைத்திருந்தார்கள். மொத்தத்தில் மேற்கூறியவாறு அறுபத்தைந்து மாணவர்கள் சித்தியெய்தி ஒரு வரலாற்றைப் படைத்திருந்தார்கள். மாவட்டத்திலேயே அதிகமான மாணவர்கள் சித்தியடையும் ஒரு வித்தியாலயமாக இவ்வித்தியாலயம் திகழ்ந்துகொண்டிருந்தது.

மேலும் இதே ஆண்டில் நடைபெற்ற ஆங்கிலதினப் போட்டியில் பிரதி பண்ணலில் வடகிழக்கு மாகாண மட்டத்தில் செல்வன்.பொ.எனிற், செல்வன்.இ.அஜந்தன் ஆகிய இருவரும் முதலாம் இடத்தினைப்பெற்று வித்தியாலயத்துக்குப் பெருமையைத் தேடிக்கொடுத்திருந்ததும் வரலாறறிந்த உண்மையாகும். இதற்கெல்லாம் உண்மையில் அன்றே 'அடித்தளம்' இட்டிருந்தவர் நமது ஐயா அவர்கள் என்பதனை எவரும் மறக்கவோ மறைக்கவோ முடியாது. திருமதி.ச.மகேந்திரராஜா அவர்கள் இப்பாடசாலையில் உப அதிபராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவேளையில் 07.10.1995 அன்று இடம்பெற்ற வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழாவுக்கு சிறப்பு விருந்தினர்களுள் ஒருவராக ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் கலந்துகொண்டு அவ்விழாவைச் சிறப்பித்திருந்தமையும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும். ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்திலே கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையிலே இப்பாடசாலையில் சேர்வதற்குரிய பிள்ளைகளை வீடுகளுக்குச் சென்று பெற்றாரைச் சந்தித்து பாடசாலைக்குச் சேர்த்த காலமொன்றிருந்தது. ஆனால் இன்று பாடசாலைக்கு விண்ணப்பித்து பலவாறு முயற்சி செய்தும் தமது மகனுக்கு அல்லது மகளுக்கு இடம் கிடைக்கவில்லையே என்று கவலையுறும் பெற்றாரை நாம் காண்கிறோம். இவர் நன்றி மறப்பது நன்றன்று என்பதற்கேற்ப கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய வரலாற்றில் தன்னோடு

இணைந்து கல்வி அபிவிருத்திப் பணியில் முன்னின்றுழைத்த அனைவரையும் இவ்வித்தியாலயத்துக்குரிய குறிப்புகளை தந்துகொண்டிருந்த வேளையிலே அன்புடன் நினைவுகூர்ந்து மனமார்ந்த தனது நன்றிகளை மனமுவந்து தெரிவித்துக் கொண்டார்.

இங்கே குறிப்பிட்ட மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய வரலாற்றுக்கு ஆதாரமான குறிப்புகள் இவ்வித்தியாலய பொன்விழா மலர் மூலமாகவும், ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் சுகதேகியாக இருந்தவேளையில் அவரது மனதில் இருந்த ஞாபகசக்தியின் மூலம் அவருடனான நேர்காணலூடாகவும், பிற பெரியார்களை உசாவியதன் மூலமாகவும் கிடைத்தவையென்பது இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

## 05. கல்விசார் பணிகள்

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் கல்விப்புலத்திலே கற்றல், கற்பித்தல் ஆகிய இரண்டிலும் முன்மாதிரியானவர். இளமைக்காலம் முதல் இறுதிக்காலம் வரையும் கற்றுக்கொண்டே இருந்தார். ஆசிரியராக அடியெடுத்து வைத்த நாள் முதல் அதிபராக ஓய்வுபெறும் வரையும் கற்பித்துக்கொண்டே இருந்தார். இவர், பாடசாலைக் காலத்திலே கற்றல் மூலம் பெற்ற வெற்றிகள் ஒவ்வொன்றும் பணிக்காலத்திலே கற்பித்தல் மூலம் பல வெற்றிகளைப் படைப்பதற்கு அடிப்படை அலகுகளாய் அமைந்திருக்கின்றது. ஐயா செல்வநாயகம் அவர்கள் ஆசிரியராக, அதிபராக இருந்து ஆற்றிய சேவைகளெல்லாம் கல்விப்பணிகளேயாகும். இங்கே இவரது வேறுசில கல்விப்புல செயற்பாடுகள் நோக்கப்படுகின்றன.

## 5.1ஆலோசக ஆசிரியர் சேவை

ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அவர்களின் சேவை வாழ்வில் அவர் ஆலோசக ஆசிரியராகத் தகுதிபெற்று ஆற்றிய சேவைகளும் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. இவர் ஆலோசக ஆசிரியராகக் கடமையாற்றுவதற்குத் தேவையான நிபந்தனைகள் அனைத்தையும் திருப்திப்படுத்தி இருந்ததனாலும், ஆலோசக ஆசிரியர் கடைப்பிடித்தொழுக வேண்டிய நெறிமுறைகளை அனுசரித்து ஒழுகுவதற்கு ஒப்புக் கொண்டமையாலும் இவருக்கு 1961 யூலை 01ம் திகதி தொடக்கம் ஆலோசக ஆசிரியராக கடமையாற்றுவதற்குரிய C 44 /61 /T 45 என்னும் இலக்கத்தைக் கொண்ட ஆலோசக ஆசிரியர் தராதரப் பத்திரம் வழங்கப்பட்டது.

இதன்படி மட்டக்களப்பு கல்விப் பணிமனையின் அனுசரணையுடன் கல்விப்பணிப்பாளர் ஜனாப்.எம்.சமீம், வழிகாட்டு மதிப்பீட்டு உத்தியோகத்தர் செல்வி எல்.நவரெத்தினசிங்கம் ஆகியோரின் மேற்பார்வையில் மட்டக்களப்பு, கல்முனை ஆகிய இருகல்வி மாவட்டங்களிலும் முறையே, மட்/புனித சிசிலியா மகளிர் பாடசாலை, கமு/கார்மேல் பற்றிமா பாடசாலை ஆகிய இரு நிலையங்களிலும் தெரிந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள், அதிபர்களுக்கு சனிக்கிழமை வகுப்புகள் நடத்தி அவர்களை ஆலோசக ஆசிரியர் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தியிருக்கிறார். இதன் மூலமாக சிறந்த கல்விச் சமூகமொன்றைத் தோற்றுவித்திருக்கிறார்.

இவ்வகுப்புகளில் கலந்து கொண்டவர்களில் பின்வருவோர் குறிப்பிடத் தக்கவர்களாவார்கள்.

01. அதிவண. சகோதரர் S.A.I.மத்தியூ அதிபர் திலகம். கல்முனை கார்மேல் பத்திமா தேசிய பாடசாலை.

02. திரு.கே.முத்துலிங்கம் - முன்னாள் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர்.

03. திரு.ஆர்.மாணிக்கராசா - முன்னாள் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர்.

04. ஜனாப். முகமட் - முன்னாள் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர்.

05. திரு.டி.எஸ்.கே.வணசிங்க - முன்னாள் மகாஜனக் கல்லூரி அதிபர்.

06. திரு.எஸ்.தேவராஜன் - மட்டக்களப்பு மாவட்டச் சாரண ஆணையாளர்.

இந்தவகையில் ஆலோசக ஆசிரியர் பயிற்சி வகுப்புகளைத் திறம்பட நடத்தி வெற்றி பெற்றிருக்கின்றார். இவரிடம் ஆலோசக ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் சிறந்த அதிபர்களாக, கல்விப் பணிப்பாளர்களாக, பல்துறைத் தகைஞர்களாக வாழ்க்கையில் பிரகாசித்திருப்பதனைக் காணமுடிகின்றது. இந்தவகையிலும் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் நம்மத்தியிலே உயர்ந்து நிற்கின்றார்.

## 5.2 ஆசிரியர் தொழிற்சங்கப் பணி

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் ஆசிரியர் தொழிற்சங்கத்தில் இணைந்து பணியாற்றவும் தவறவில்லை. பொது அமைப்புகளைச் சார்ந்து நின்று இவர் செய்த சேவைகளில் இதுவும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இவரது காலத்திலே "கிழக்கிலங்கை சுவபாஷா ஆசிரியர் சங்கம்" ஆசிரியர்களின் நலனுக்காக இயங்கி வந்திருக்கிறது. இதன் தாய்ச்சங்கத் தலைவராக திரு.எஸ்.நடராசா அவர்களும், செயலாளராக திரு.வே.கனகப்பா அவர்களும், பொருளாளராக திரு.அ.வேல்முருகு அவர்களும் சங்கச் செயற்பாடுகளை முன்கொண்டு செயற்படுத்தி வந்திருக்கிறார்கள்.

இந்த ஆசிரியர் தொழிற் சங்கமானது கிளைச்சங்கமாகவும் பிரிந்து நின்று சேவையாற்றியிருக்கிறது. இதன்படி மேற்கூறிய கிழக்கிலங்கை சுவபாஷா ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளைச் செயலாளராக ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் அங்கம் வகித்துச் சேவை செய்திருக்கின்றார். இதே போன்று கிழக்குப் பிரதேச ஆசிரியர் சங்கத்திலே திரு.எம்.சிவநேசராசா அவர்கள் தலைவராக இருந்த வேளையிலே "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் செயலாளராக இருந்து ஆசிரியர்களின் நலனுக்காகப் பணியாற்றி வந்துள்ளார். இந்த வகையில் இவரது ஆசிரியர் தொழிற்சங்கப் பணிகள் முக்கியம் பெறுகின்றன.

### 5.3 பரீட்சை மதிப்பீட்டுப் பணி

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் உதவி ஆசிரியராக இருந்து சேவையாற்றிய வேளையில் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சாதாரண நோக்குநராகவும், நிரந்தர நோக்குநராகவும் இருந்து கருமமாற்றியுள்ளார். அதிபராகிய பின்னர் மேற்பார்வை உத்தியோகத்தராகப் பல வருடங்கள் பணியாற்றியிருக்கின்றார். அத்துடன் பரீட்சை நிலைய உதவி இணைப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

மேலும் வினாப்பத்திரம் திருத்தும் பணியில் பல வருடங்கள் இந்துசமய பாட சாதாரண பரீட்சகராகவும், பிரதம பரீட்சகராகவும் பணியாற்றியுள்ளார். அதுமாத்திரமன்றி விடைப்பத்திரம் திருத்தும் மீளாய்வுக் குழுவிலும் அங்கம் வகித்துப் பணியாற்றியுள்ளார். இவ்வாறாக ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் தனது 'கல்விச் சேவை'க் காலத்திலே க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சாதாரண நோக்குநராக, நிரந்தர நோக்குநராக, மேற்பார்வை உத்தியோகத்தராக, பரீட்சை நிலைய உதவி இணைப்பாளராக,

சாதாரண பரீட்சகராக, பிரதம பரீட்சகராக, பரீட்சை மீளாய்வுக்குழு அங்கத்தவராக படிபல உயர்ந்து பணிபல செய்துள்ளமை நோக்கத்தக்கதாகும்.

**5.4 விபுலானந்தர் கல்வி அபிவிருத்திச் சங்கப் பணிகள் (VEDS)**

ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அவர்கள் ஆற்றிய கல்விப் பணிகளில் முக்கியமானதொரு அங்கமாக இடம் பெறுவது அவர், கனடாவிலே தோற்றம் பெற்ற விபுலானந்தர் கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் இலங்கைக் கிளைச் செயலாளராக இருந்து செய்த சேவைகளாகும். இவர் அதிபராக இருந்து ஓய்வு பெற்றதோடு அவரது பணிகள் ஓய்ந்து விடவில்லை என்பதற்கு இதுவொரு தக்க சான்றாகின்றது. இத்தகைய அரிய வாய்ப்புகள் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. தன் தூரநோக்குச் சிந்தனையாலும், தொலைநோக்குக் கொள்கையாலும் விபுலானந்தர் கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் எண்ணக்கனவுகளையும், இலட்சியங்களையும் நனவாக்கிய சாதனையாளராகவும் இவரைத் தரிசிக்க முடிகின்றது.

இலங்கையிலிருந்து பல்வேறு காரணங்களால் புலம் பெயர்ந்து கனடா ஒன்ராறியோ (Ontario) மாகாணத்தில், ரொறன்ரோ (Toranto) நகரத்தில் வாழ்ந்த நம் இரத்த உறவினர்கள் ஒன்று சேர்ந்து பிறந்த மண்ணையும், இங்குள்ள மாணவர்களின் கல்வி நிலையையும் கருத்திலே கொண்டு **"கல்விக்கு ஒரு கரம் கொடுப்போம்"** ( LETS HELP THE LESS FORTUNATE ) என்னும் வாசகத்தினை மணிமகுடமாக வைத்து உருவாக்கிய உன்னதமானதொரு அமைப்பே ஆங்கிலத்தில் "VEDS" (VIPULANANDA EDUCATIONAL DEVELOPMENT SOCIETY) என்று அழைக்கப்பட்ட விபுலானந்தர் கல்வி அபிவிருத்திச் சங்கமாகும்.

கனடா மண்ணிலே ஒன்ராறியோ மாகாணத்தில் ரொறன்ரோ நகரத்திலே 1992ம் ஆண்டு சித்திரைத்திங்கள் 04ம் நாள் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட இவ்வமைப்பானது கல்வி அபிவிருத்திக்காக முன்னின்றுழைத்து முத்திரை பதித்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் திருநாமத்ததை முதற்பெயராகக் கொண்டு விளங்கியமை பெருமைக்குரிய விடயமாகும்.

அத்தினம் இச்சங்கத்தின் தலைவராக திரு.டி.கோபன் கந்தையா அவர்களும், செயலாளராக திரு.சசி செல்வநாயகம் அவர்களும், பொருளாளராக மிதிலாதேவி தர்மரெட்ணம் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். இவர்களைவிட பத்துப் பேரைக் கொண்ட ஒரு நிருவாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. இச்சங்கத்தின் போஷகராக செல்வி செல்லையா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

இந்நாட்டின் போர்ச் சூழலில் துர்ப்பாக்கிய நிலையில் கல்வி வளர்ச்சி குன்றிவரும் நிலைமையில் பின்னடைவுகளையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்கிய நம் மாணவர்களின் மேற்கல்விக்கு வழிசமைக்கும் முகமாக க.பொ.த.(சா/த) வகுப்புகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் மேலதிக இலவச ஊக்குவிப்பு வகுப்புகளை நடத்துவதை அடிப்படையாகக் கொண்டு இச்சங்கமானது ஆரம்பமானது. இது தாய்ச் சங்கமாக அமைந்தது.

இந்நோக்கத்தை இலங்கையில் செயற்படுத்துமுகமாக அருட் தந்தை போல் சற்குணநாயகம் அவர்களைத் தலைவராகவும், ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களைச் செயலாளராகவும், உதவிகள்; ஒத்தாசைகள்; ஆலோசனைகள் வழங்குமுகமாக திரு.கே.பாஸ்கரன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் மட்டக்களப்பு கல்வி வலயம்),

திரு.சி.கிருஷ்ணபிள்ளை (சேவைக்கால ஆலோசக ஆசிரியர் பட்டிருப்பு கல்வி வலயம்), திரு.த.யுவராஜன் (கல்வித் திணைக்கள செயற்றிட்ட உத்தியோகத்தர்) ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழுவும் அத்தினம் உருவாக்கப்பட்டது. இது கிளைச்சங்கமாக அமைந்தது.

தாய்ச் சங்கத்துக்குச் செயலாளர் திரு.சசி செல்வநாயகம் அவர்கள். கிளைச் சங்கத்துக்குச் செயலாளர் திரு.தம்பிப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள். இவர்கள் இருவருமே செயல் வீரர்கள். பெயருக்கும் பொருத்தமானவர்கள். இவர்களுக்கு ஏற்றாற் போல் இச்சங்கங்களின் தலைவர்கள்; நிருவாக உறுப்பினர்கள். இதிலிருந்து "ஆசிரியர் சிரோமணி" அவர்களுக்கு சமூக மட்டத்திலும், கல்விப் புலத்திலும், கடல் கடந்த நிலையிலும் எத்தகைய இடம் இருந்திருக்கிறது என்பதை அறியக்கூடியதாக இருக்கிறது.

இலங்கைக் கிளைக்கான செயலாளராக ஏன் இவர் தெரிவு செய்யப்பட்டார்? இங்கே வேறொருவர் இருக்கவில்லையா? இருந்தார்கள். ஆனால் இவரைப்போல் செயல் வீரராக அவர்கள் இருக்கவில்லை. பொருத்தமானவருக்குத் தானே பொருத்தமான பதவியைக் கொடுக்கவேண்டும். இதன்படி இவர் ஒரு செயல் வீரர் என்பதையும் கிழக்கிலங்கையிலே மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலே கல்விச் சூழலில் மாணவர் சமூகத்திலே ஏற்பட்டுக் கொண்டிருந்த சரிவு நிலையை நிமிர்த்தக்கூடிய செயற்பாடுகளை விபுலானந்தர் கல்வி அபிவிருத்திச் சங்கத்துக்கூடாக (கனடா) முன்கொண்டு சென்று வெற்றியடைய வைப்பார் என்பதையும், ஆசிரிய சேவையிலே பலவருட அனுபவமும், கல்விப் புலத்திலே அதிக ஈடுபாடும் உள்ளவர்; "ஆசிரியர் சிரோமணி"யாக உச்சம் பெற்றவர் என்பதையும் கனடாவிலே வாழ்ந்த உறவுகள் நன்றாக உணர்ந்திருந்தார்கள்.

இவ்விதமாக தாய்ச்சங்கத்தின் தூரநோக்குகளை அடையச்செய்யும் நோக்குடன் தோற்றம் பெற்ற கிளைச் சங்கமானது கிழக்கிலங்கையில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா கல்வி வலயங்களிலும், கல்முனைப் பிரதேசத்தில் கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை கல்வி வலயங்களிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் வாழும் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துப் பணியாற்றும் ஒரு அமைப்பாக இவ்வமைப்பு விளங்கியது.

இவ்வமைப்பை முழுமையாக அர்ப்பணித்துச் சேவை செய்யும் ஒரு அமைப்பாக வளர்சியடையச் செய்வதில்; குறிப்பாக "ஆசிரியர் சிரோமணி" அவர்களது பங்கு அளப்பரியதாகும். இவர் சங்கத்தின் தூர தரிசனங்களை அடையக்கூடிய விதத்திலே முழுமூச்சாகச் செயற்பட்டுள்ளார். முழுமையாகத் தன்னைச் சேவைக்காக அர்ப்பணித்துச் செயற்பட்டுக் கொண்டிருந்தார். இவர்கள் முழுமூச்சோடும், அர்ப்பணிப்போடும் செயற்படாமல் விட்டிருந்தால் அமைப்பானது எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியாமல் போயிருக்கும். கிழக்கு மாகாணத்திலே கல்வியானது மிகவும் பின்தங்கிப் போயிருக்கும். போர்ச் சூழ் நிலையிலே கல்விப் புலத்தில் இழக்கப்பட்டு வந்த கல்வியை மாணவர் மத்தியிலே மீளக் கட்டியெழுப்புவதற்கும், மாணவர்களின் உயர் கல்விக்கு உதவுவதற்கும் சங்கமானது எடுத்துவந்த திட்டங்கள் ஒவ்வொன்றும் நம் வரலாற்றுப் புலத்தில் நின்று என்றென்றும் உயிர் வாழும்.

கிளைச் சங்கமானது உருவாக்கப்பட்டதையடுத்து அதன் செயற்பாடுகள் ஆரம்பமாயின. திரு.கே.பாஸ்கரன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், மட்டக்களப்புக் கல்வி வலயம்), திரு.எஸ்.கிருஸ்ணபிள்ளை (கணிதபாட

சேவைக்கால ஆலோசக ஆசிரியர், பட்டிருப்புக் கல்வி வலயம்) ஆகிய சங்கத்தின் அங்கத்தவர்களுடன் கலந்தாலோசித்து அந்தந்த வலயங்களில் உள்ள வளம் குறைந்த இவ்விரு பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களது ஒத்துழைப்புடன் தகுதிவாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு பாடசாலை நேரசூசிக்கப்பால் வாராந்தம் இரண்டு மணித்தியாலங்கள் குறையாமல் மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு உரிய அறிவுறுத்தல்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.

இத்திட்டத்தைப் பாடசாலை அதிபரும், சங்க இணைப்பாளரும் மேற்பார்வை செய்வதென்றும், மாணவர்வரவு, பாடப்பதிவு, அலகுப் பரீட்சைப் பெறுபேறுகள் ஆகியவற்றைப் பதிவதென்றும் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டன. ஆசிரியர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளும் வழங்கப்பட்டன. மாதாந்தம் குறித்த வகுப்புகள் முடிவடைந்து ஒருவார காலத்தினுள் பண உறுதிப் பற்றுச்சீட்டுடன் நேரடியாகவோ அல்லது இணைப்பாளருடாகவோ செயலாளர் "ஆசிரியர் சிரோமணி" அவர்களிடம் சமர்ப்பித்து தங்களுக்குரிய கொடுப்பனவாக 1200 ரூபாவையும் பெற்றுக் கொள்வதற்குரிய ஒழுங்குமுறைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இவற்றிலே மிகவும் கரிசனை காட்டி "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் செயலாற்றி வந்தார். இத்திட்டத்தின்படி கல்முனைப் பிரதேசத்திலும் அச்சமயம் கடமையில் இருந்த கல்விப் பணிப்பாளரின் துணையுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

கிளைச்சங்கமானது இவ்வாறு கல்வி வளம் குறைந்த பயங்கர வாதத்தினால் பாதிக்கப்பட்ட கஷ்டப்பிரதேசப் பாடசாலைகள் சிலவற்றை இனங்கண்டு உரிய கல்விப் பணிப்பாளர்களின் உதவியுடன் பொருத்தமான ஆசிரியர்களைக் கொண்டு க.பொ.த.(சா/த) வகுப்புகளில்

கல்வி கற்கும் மாணவர்கள் க.பொ.த.(உ/த) வகுப்புகளுக்கு தகுதி பெறவேண்டிய முக்கிய பாடங்களான கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு இலவச ஊக்குவிப்பு வகுப்புகளை 1997ம் ஆண்டு வரைக்கும் நடத்தி வந்தது. இவ்வகுப்புகளினால் பல பாடசாலைகள் பயன்பல பெற்றன. இக்காலப்பகுதிக்குள்ளே இவ்வகுப்புக்கான கொடுப்பனவுகளாக ஒருலட்சத்து இருபதினாயிரம் ரூபாவைச் சங்கம் வழங்கியிருந்தது.

1997 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட இத்திட்டமானது இதன் பின்னர் மடடக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள சகல தமிழ்ப் பாடசாலைகளும் ஏதோவொரு வகையில் பயன் பெறவேண்டும் என்ற நோக்கில் பரிசுத்திட்டமொன்றாக மாற்றப்பட்டது. இவ்விரு மாவட்டங்களிலுமுள்ள தமிழ்ப் பாடசாலைகள் ஒவ்வொன்றிலுமிருந்து க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு முதல்முறையாகத் தோற்றும் மாணவர்களில் அந்தந்தப்பாடசாலைகளில் ஆகக்கூடிய பெறுபேறுகளுடன் க.பொ.த.(உ/த) வகுப்புக்குத் தகுதி பெறும் மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா (ரூபா 1000) ரொக்கப்பரிசுடன், தகைமைச் சான்றிதழும் வழங்குவதே அப்பரிசுத் திட்டமாகும். சில பாடசாலைகளில் ஒருவருக்கு மேற்பட்டோர் சம பெறுபேறுகளைப் பெற்றிருப்பின் அவர்கள் யாவருக்கும் அப்பரிசுகள் வழங்கப்படும்.

இப்புதிய திட்டப்படி 1997 டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருவாளர் எஸ்.எஸ்.மனோகரன், கல்முனைக் கல்வி மாவட்ட மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருவாளர் கே.முத்துலிங்கம் ஆகிய இருவரினதும் பங்களிப்புகளுடன் மட்டக்களப்பு

மாவட்டத்திலுள்ள 84 தமிழ்ப் பாடசாலைகளிலிருந்தும் 94 மாணவர்களும், கல்முனைக் கல்வி மாவட்டத்திலுள்ள 23 தமிழ்ப் பாடசாலைகளிலிருந்தும் 24 மாணவர்களும், இப்பரிசுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். இவர்களுக்கான பரிசளிப்பு வைபவங்கள் மட்டக்களப்பில் 1998.06.28ம் திகதியன்றும், கல்முனையில் 1998.07.18ம் திகதியன்றும் இடம் பெற்றன. இவ்வைபவங்களில் தாய்ச் சங்கச் செயலாளர் திரு.சசி செல்வநாயகம் அவர்களும், குழு உறுப்பினர் திரு.அஜந்தா ஞானமுத்து அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இதனையடுத்து 1998 டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளிலிருந்து மட்டக்களப்புக் கல்வி வலயத்திலுள்ள 38 தமிழ்ப் பாடசாலைகளிலிருந்து 47 மாணவர்களும், பட்டிருப்புக் கல்வி வலயத்திலுள்ள 31 தமிழ்ப் பாடசாலைகளிலிருந்து 30 மாணவர்களும், கல்குடா கல்வி வலயத்திலுள்ள 15 தமிழ்ப் பாடசாலைகளிலிருந்து 14 மாணவர்களும் பரிசுக்காகத் தெரிவாகியிருந்தனர். அவ்வாறே கல்முனைக் கல்வி மாவட்டத்தில் கல்முனை வலயத் தமிழ்ப் பாடசாலைகள் 09 லிருந்து 13 மாணவர்களும், அக்கரைப்பற்று வலயத் தமிழ்ப் பாடசாலைகள் 08 லிருந்து 08 மாணவர்களும், சம்மாந்துறை வலயத் தமிழ்ப் பாடசாலைகள் 07 லிருந்து 08 மாணவர்களும் பரிசுக்குரியவர்களாகத் தெரிவாகியிருந்தனர்.

தெரிவாகியிருந்த இத்தனை மாணவர்களுக்கும் தலா ஆயிரம் ரூபா பணப் பரிசும், தாய்ச்சங்க இலட்சினை பொறிக்கப்பட்ட "1998ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சைப்பெறுபேற்றின் அடிப்படையில் முதன்மை இடத்தைப் பெற்றமையைப் பாராட்டி கனடாவில் இயங்கும் விபுலானந்தர் கல்வி அபிவிருத்திச் சங்கம் வழங்கிய தகமைச் சான்று" என்ற வாசகங்களுடன்; உரிய வலயக்

கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் இலங்கைக் கிளைச்சங்கத் தலைவர், செயலாளர் ஆகியோரின் கையொப்பங்களையும் கொண்டதான தகைமைச் சான்றிதழும் வழங்கப்பட்டது.

1998ம் ஆண்டு இடம் பெற்ற விழாக்களின்போது கலந்துகொண்ட தாய்ச்சங்க உறுப்பினர்களிடம் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் முதலானோர் இலவச ஊக்குவிப்பு வகுப்புகளின் பலாபலன்கள் பற்றி எடுத்துக் கூறி அத்தகைய வகுப்புகளைத் தொடர்ந்து நடத்தும்படி வேண்டுகோள்களை விடுத்திருந்தார்கள். இவ்வேண்டுகோள்கள் தாய்ச்சங்க ஒன்றுகூடலின் போது பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பயனாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் இரண்டிலும் மீண்டும் வகுப்புகள் தொடங்கப்பட்டு நடத்தப்பட்டு வந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப்பளைப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்தில் நடைபெற்ற வகுப்பில் அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம், கடுக்காமுனை வாணிவித்தியாலயம் இரண்டையும் சேர்ந்த 60 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். இங்கே கணிதபாட ஆசிரியராக திரு.எம்.உதயகுமார் அவர்களும், விஞ்ஞான பாட ஆசிரியராக திரு.வி.சந்திரகுமார் அவர்களும், கலைமகள் வித்தியாலய அதிபர் திரு.பி.ஆர்.சந்திரவோஸ் அவர்கள் பொறுப்பாளராகவும் பணியாற்றினார்கள். மட்டக்களப்பு வலயத்திலுள்ள மண்முனை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் கன்னங்குடா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வகுப்பில் அவ்வித்தியாலய மாணவர்களே கலந்து கொண்டார்கள். அங்கே விஞ்ஞான பாட ஆசிரியராக திரு.எஸ்.உமையகாந்தன் அவர்களும், கணிதபாட ஆசிரியராக

திரு.நா.இளங்கோ அவர்களும், இவ்வித்தியாலய அதிபர் திரு.எஸ்.முருகேசபிள்ளை அவர்கள் பொறுப்பாளராகவும் பணியாற்றினர். இவ்வகுப்பில் 70 மாணவர்கள் பங்கேற்றிருந்தார்கள்.

கல்குடா வலயத்தில் வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சந்திவெளி சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் இடம்பெற்ற வகுப்பிலே 50 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். வித்தியாலய அதிபர் திரு.என்.குழந்தைவேல் அவர்களின் மேற்பார்வையில் ஆசிரியர் திரு.எம் சிவசுந்தரம் அவர்கள் கணிதபாடத்தையும், ஆசிரியர் திரு.எஸ்.முரளிதரன் அவர்கள் விஞ்ஞான பாடத்தையும் கற்பித்தார்கள். இவ்வகுப்புகளின் இணைப்பாளராகவும், மேற்பார்வையாளராகவும் மன்றக்குழு உறுப்பினரும், கணிதபாட ஆலோசக ஆசிரியருமான திரு.எஸ்.கிருஸ்ணபிள்ளை அவர்கள் பணியாற்றினார். அத்துடன் அவ்வப் பாடங்களுக்குரிய உதவிக் கல்விப் பணிப்பாளர்களினதும், பாடங்களின் ஆலோசக ஆசிரியர்களினதும் மேற்பார்வையும், ஊக்குவிப்பும் கிடைத்துக் கொண்டிருந்தன.

கல்முனை மாவட்டத்திலுள்ள மூன்று கல்வி வலயங்களிலும் இவ்வாறான ஊக்குவிப்பு வகுப்புகளை ஆரம்பித்து நடத்தும் பொறுப்பு கல்முனை வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி.எஸ்.கே.ஆனந்தராசா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இத்தகைய ஊக்குவிப்புத்திட்டங்களாலும், செயன்முறைகளாலும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட கல்வி வலயப்பாடசாலை மாணவர்கள் பல பலாபலன்களைப் பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர் பெற்றுள்ள பெறுபேறுகள் அதற்கு முன்னைய ஆண்டுகளை விடத் தரத்தில் அதிகரித்திருக்கின்றன. இதனை அவ்வப்பாடசாலைகளின் அதிபர்கள் சங்கத்தின் இலங்கைக்

கிளைச் செயலாளர் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களிடம் தெரிவித்திருக்கிறார்கள். இம்முன்னேற்றம் பற்றி இவரும் பலஅதிபர்களிடம் கேட்டு அறிந்துமிருக்கிறார். 1999ம் ஆண்டிலும் செயலாளரின் தொடர்தேர்ச்சியான முயற்சியினால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1999ம் ஆண்டு தாய்ச் சங்கத்தின் சார்பில் பரிசளிப்பு விழாவை நடத்திய கிளைச் சங்கத்தின் பரிசளிப்பு விழா பற்றிய சிறு மலருக்கு தாய்ச்சங்க செயலாளர் அளித்திருந்த வாழ்த்துச் செய்தியின் சில வரிகளை இங்கே குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

“எது அழிந்தாலும் அழியாச் சொத்தாகிய கல்வியே எமது முதுசம். அதை நாம் அழிய விடாது பாதுகாப்பதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அத்தகையதொரு ஊக்குவிப்பு முயற்சியே இப்பரிசுத்திட்டம். இம்முறை வெளியான பரீட்சை முடிவுகளை நோக்குமிடத்து எமது ஊக்குவிப்புத் திட்டம் மிகவும் பயனுடையதாக அமைந்திருந்தது என நாம் நினைக்கிறோம். ஒருபாடசாலையில் ஒரு மாணவன் அல்லது ஒரு மாணவி இப்பரிசைப் பெற்றுக் கொண்டாலும் பலமாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று க.பொ.த. (உ/த) வகுப்பிற்குத் தகுதி பெற்றுள்ளார்கள் என்ற செய்தியை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.” (பக்கம் 01)

இதேபோன்று இம்மலருக்காக இலங்கைக் கிளைத் தலைவர் வண.பிதா.போல் சற்குணநாயகம்(யே.ச.) அவர்கள் வழங்கியிருந்த செய்தியில் பின்வரும் வரிகள் மிகவும் முக்கியமானவை.

“கல்வி வளர்ச்சி என்பது பரீட்சைகளில் மாணவர்கள் சித்தியடைவதை மட்டும் தொனிப் பொருளாகக் கொண்டதல்ல. இது, முழுச்சமுதாயமும் தன் இருப்பினை உணர்ந்து விழித்தெழுவதையே குறிக்கும். இந்த வகையில் இருண்ட வீட்டுக்கு ஒரு விளக்குப் போல ஒருசமுதாயத்தின் முதுகெலும்பாக விளங்கும்; படிக்க வசதியற்ற மாணவர்களின் எதிர்கால நலனுக்காக இச்சங்கம் அரும்பணியாற்றி வருவதை அனைவரும் அறிவர். இன்றைய யுத்த சூழ்நிலையில் இவ்விரு மாவட்டங்களும் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. அதுவும் கல்வித்துறையில் பின்தங்கியுள்ள மாவட்டங்கள் இன்றைய சூழலால் இன்னும் பின்தள்ளப்பட்டுள்ளன. இதனை நன்கு கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ள சங்கம் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காகத் தன் பணியை ஆற்றிவருகின்றது.” (பக்கம் 02)

இவ்வாறாக யுத்த சூழ் நிலையிலே சங்கம் ஆற்றிய சேவைகள் ஒவ்வொன்றும் காலத்தால் அழியாத சுவடுகளாகக் கருதப்படுகின்றன. எனினும் இதன் பின்னர் தாய் நாட்டில் ஏற்பட்ட பல்வேறு காரணங்களினால் பாடசாலைகளுக்குச் சென்று படிப்பிப்பதற்கோ, பரிசு வழங்கிக் கௌரவிப்பதற்கோ முடியாமல் போனதால் தாய்ச் சங்கத்தின் அனுமதியுடன் இச்சங்கத்தின் பணிகள் இங்கே முடிவுற்றுள்ளன. இதனை மனம் கலங்கியபடி செயலாளர் செல்வநாயகம் அவர்கள் தெரிவித்தார்.

**06. சமய சமூகப் பணிகள்**

ஆசிரியர் சிரோமணி தம்பிப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் ஆசிரியத்துவ சேவையில் மட்டுமல்ல சமய சமூகப் பணிகளிலும் தீவிர நாட்டம் உடையவர். சமயத்தின்மீது அதிக பற்றினையும்,

சமூகத்தின்மீது அகலித்த பார்வையினையும் கொண்டவர். எங்கெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்கின்றதோ அங்கெல்லாம் இவர் சமய சமூகப் பொதுப்பணிகளுக்காக தன்னை இறுக்கமாகப் பிணைத்துக் கொண்டு வாழ்ந்து வந்திருக்கின்றார். சுருங்கக் கூறினால் தன் வாழ்வினை 'சேவை வாழ்வாகவே' மாற்றியமைத்திருக்கின்றார்.

## 6.1 மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் தொடர்புகள்

இராமகிருஷ்ண மிஷனோடு தொடர்பு கொண்டவர்கள், அதன்மூலம் போஷிக்கப் பட்டவர்கள் எல்லோரும் வாழ்க்கையில் உயர்ந்த சரித்திரங்களாக நம்மத்தியில் உள்ளனர். ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அவர்கள் மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலம் தொடக்கம் ஏற்பட்ட இராமகிருஷ்ண மிஷன் தொடர்பு வாழ்வின் இறுதி வரைக்கும் தொடர்ந்தது. இன்று பிள்ளைகள் மூலம் தொடர்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்னர் சிவபதம் அடைந்த சுவாமி ஸ்ரீமத் ஜீவனானந்தஜீ மகராஜ் அவர்கள் இராமகிருஷ்ண மிஷனில் இளம் துறவியாகப் பணியாற்றிக் கொண்டும், சிவானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்றுக் கொண்டும் இருந்தார்.

திரு.த.செல்வநாயகம் அவர்கள் சிவானந்த வித்தியாலயத்தில் ஆங்கிலக் கல்வியைக் கற்று, அதன் பின்னர் மட்டக்களப்பு ஆண்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று, பலபாடசாலைகளில் தனது ஆசிரியத்துவ பணியினைத் தொடர்ந்து, மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்துக்கு அதிபராக வந்த காலத்தில் இராமகிருஷ்ண மிஷனுக்குச் சென்று அங்கு இளம் துறவியாக 'விறதர் சீவரெட்ணம்' என அழைக்கப்பட்டவர் பூரண துறவியாகி சுவாமி

ஜீவனானந்தஜீ என்னும் திருநாமத்துடன் அங்கே ஒளிவீசிக் கொண்டிருந்ததைக் கண்டார்.

அன்றைய தொடர்போ என்னவோ தெரியாது தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் இவர் அத்துறவியைச் சந்திப்பதற்காக மிஷனுக்குச் செல்வார். இருவரும் பல பயனுள்ள விடயங்களைப் பற்றி உரையாடுவார்கள். திரு.த.செல்வநாயகம் அவர்கள் தான் அதிபராக அச்சமயம் கடமையாற்றிக் கொண்டிருந்த கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தைப் பற்றி அவருடன் கலந்துரையாடுவார். இவர் இவ்வித்தியாலயத்தில் நடைபெற்ற சுவாமி விபுலானந்தருக்கான விழாவொன்றுக்கு அத்துறவியை அழைத்திருந்தார்.

அதுமாத்திரமன்றி கொழும்பு தாய்ச் சங்கத்தில் உள்ள சுவாமிகளான சுவாமி ஆத்மணானந்தஜீ மகராஜ், சுவாமி அஜராத்மானந்தஜீ மகராஜ், ராஜேஷ்வரானந்தஜீ மகராஜ் ஆகியோர்களுடைய தொடர்பும் திரு.த.செல்வநாயகம் அவர்களுக்குக் கிடைத்தது. அதுமாத்திரமன்றி மிஷனிலே நடைபெறும் எல்லாவிதமான குருபூசைகளிலும், சமய விழாக்களிலும் இவர் பங்குபற்றி வந்தார். இதனால் இவருக்கும், இவரது குடும்பத்துக்கும் மிஷனிலே நல்ல மதிப்பும் மரியாதையும் கிடைத்திருந்தது.

அதுமாத்திரமன்றி தனது குடும்பத்திலிருந்து முத்தி அடைந்த தாய், தந்தை மனைவி, மகன், மருமகன் முதலானோருடைய ஞாபகார்த்த தினங்களுக்கு மிஷன் பராமரிப்பில் உள்ள பிள்ளைகளுக்கு உணவளிக்குமாறு நிதிவழங்கி அவ்வேளை திரு.த.செல்வநாயகம் குடும்பமும் அங்கு சென்று அந்தப் பிள்ளைகளுடன் உணவருந்தி மகிழ்ச்சிப்படுத்தி மனமகிழ்வுடன் வீடு திரும்புவர். இது அன்றிலிருந்து

இன்றுவரையும் தொடர்கிறது. மேலும், முத்தியடைந்த குடும்ப அங்கத்தவர்களின் பெயரில் இவரால் ஒரு அறக்கட்டளை நிதியமொன்றும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

'இராமகிருஷ்ண புரம்' என்று சொல்லப்படுகின்ற கல்லடி உப்போடையில் உள்ள மடடுநகர் நாவற்குடாவில் அமைந்துள்ள விவேகானந்தபுரம் நொச்சிமுனை என்னும் இடத்தில் வீட்டுத் திட்டமொன்று அமைக்கப்பட்ட வேளை திரு.த.செல்வநாயகம் அவர்களும் மிஷன் சுவாமிஜீயுடன் இணைந்து தன்னாலான சரீர உதவிகளைப் புரிந்துள்ளார். நல்ல சுகதேகியாக இருந்த சுவாமிஜீ அவர்கள் சற்றுச் சுகயீனமுற்று கொழும்பு சென்று சிகிச்சை செய்து இங்கே திரும்பி வந்தார்.

தற்போது இங்கே அமைக்கப்பட்டிருக்கும் இராமகிருஷ்ண இல்லம் சுவாமிஜீயினுடைய அயரா உழைப்பால் உருவானதாகும். ஒவ்வொரு ஊருராகச் சென்று இல்லக்கட்டடத்துக்காக சிறுதொகையானாலும் மிகவும் மனவிருப்போடு பெற்று கட்டடப் பணியைத் திருப்தியாகச் செய்து முடித்தார். அவரை வேலூர் மடத்துக்கு வரச் சொல்லி இந்தியாவில் இருந்து வந்த அழைப்புகளையெல்லாம் மறுத்துவிட்டு இங்கேயே தங்கியிருந்தவர் சுகயீனமுற்று டாக்டர் விவேகானந்தராசா அவர்களுடைய வைத்திய சாலையில் வைத்து திடீரென ஒருநாள் இயற்கை எய்தினார்.

சுவாமிஜீயினுடைய பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக மணிமண்டபத்தில் வைக்கப்பட்டு இறுதிநாள் அன்று மாணவர் இல்லத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட வண்டியில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அரசடி, தாமரைக்கேணி, நகரின் கடைத்தெரு முதலான இடங்கள் ஊடாக மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள்

மகாவித்தியாலயத்துக்குச் சென்று திரும்பி, கல்லடி, நாவற்குடா, மஞ்சந்தொடுவாய் முதலான இடங்கள் ஊடாக கல்லடி உப்போடையில் உள்ள சுவாமி விபுலானந்தர் சமாதி அமைந்துள்ள வளவில் ஆயிரக் கணக்கான மக்களின் அரோகரா கோசத்தின் மத்தியில் தகனம் செய்யப்பட்டது. ஆத்மகனானந்தஜீ, அஜராத்மகானந்தஜீ, ராஜேஸ்வரானந்தஜீ முதலான துறவிகளும் இதிலே கலந்து கொண்டார்கள். சுவாமிஜீயினுடைய இவ்வுலக நீக்கம் திரு.த.செல்வநாயகம் அவர்கள் உட்பட பலநூற்றுக்கணக்கான மக்களின் மத்தியிலே பாரியதொரு சோகத்தை உருவாக்கியிருந்தது. அத்துறவியினுடைய மறைவின் பின்னர் அஜராத்மகானந்தஜீ அவர்கள் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனுக்குத் தலைவராகி அளவிலாப் பணிகளைச் சிறப்புறச் செய்து வருகின்றார். வெளிநாடுகளில் இருந்தும் மக்களின் வருகையும், வற்றாத நிதியும் மிஷனுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. இது மட்டக்களப்பின் நந்தவனமாக என்றென்றும் விளங்கி சுவாமி ஜீவனானந்தஜீ மகராஜினுடைய நாமத்தை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும்.

திரு.தம்பிப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் சுகயீனமுற்று வெளியில் எங்கும் செல்ல முடியாமல் வீட்டிலே வாழ்ந்து வந்த அந்திம காலப்பகுதியிலே 'மும்மூர்த்திகளின்' படங்களையும் தரிசித்து குருதேவரின் அருளினைப் பெற்றுக் கொண்டு வந்தார். இவர்களின் திருநாமத்தை வாழ்த்தியபடியே வீட்டிலே வாழ்ந்து வந்தார்.

## 6.2 ஆலயத் திருப்பணிகள்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்னும் முதுமொழிக்கு அமைவாக ஆலய வழிபாட்டிலும், ஆலயத் திருப்பணி வேலைகளிலும்

தன்னை மிகுந்த பற்றுறுதியோடு ஈடுபடுத்தி வாழ்ந்து வந்தவர் "ஆசிரியர் சிரோமணி" அவர்கள். இவர் ஒரு தெய்வீக புருஷர். சிறந்ததொரு பக்திமான். தன் தாய் தந்தையின் வழியிலே சமயத்திலே மிகுந்த பற்றுவைத்து சமயப் பணிகளில் ஈடுபட்டு வந்தவர் இவர். திருப்பணி வேலைகளைச் செய்வதில் இவருக்கொரு தனிநாட்டம் இருந்தது. அந்தவகையிலே குறிப்பாக மூன்று ஆலயங்களில் இவர்செய்த சேவைகள் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றன.

தான் பிறந்த பதியிலே அமைந்துள்ள ஆரையம்பதி ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயமானது இவரது திருப்பணி வாழ்விலே முதலில் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனென்றால் தான் பிறந்த ஊரில் உள்ள கோவில் என்பது ஒன்று. மற்றையது இவர்களது செங்குந்தர் குலத்துக்குரிய தனித்துவமானதொரு கோவில் இதுவென்பது இன்னொன்று. இக்காரணங்களினால் இவரது இவ்வாலயத் திருப்பணி வேலைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவர் இவ்வாலயத்தின் நிருவாகக் குழுவிலே ஒரு உறுப்பினராக இருந்துள்ளார். இக்காலப் பகுதியிலே அக்கோவிலைப் புனருத்தாரணம் செய்துள்ளார். இதன்மூலமாகக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடக்கவும், ஆலயக் கிரியை முறைகளும், வழிபாடுகளும் சீராக இடம் பெறவும் தன்னாலான பெரும் பங்களிப்புகளைச் செய்துள்ளார்.

இதனையடுத்து ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களின் சமயப்பணி வாழ்விலே; ஆலயத் திருப்பணி சேவையிலே மட்டக்களப்பு கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத் திருப்பணி சேவைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்வாலயத்தின் நிருவாகக் குழுவிலும் இவர் ஒரு உறுப்பினராக இருந்துள்ளார். தான் பிறந்த பதியிலே அமைந்துள்ள ஆரையம்பதி ஸ்ரீ திருநீலகண்ட ஆலயத்திலே நிருவாகக்

குழுவிலே ஒரு உறுப்பினராக இருந்து என்னென்ன சேவைகளைச் செய்தாரோ அதேபோன்றே மட்டக்களப்பு கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்திலும் நிருவாகக் குழுவிலே உறுப்பினராக இருந்து பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளார். அந்தவகையில் இங்கே கோவிலைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் நடக்கவும், அதன்மூலமாக ஆலயத்தின் வழிபாட்டு முறைகள் விருத்தி பெறவும் பெருந்துணை புரிந்துள்ளார்.

ஒரு மனிதனின் வாழ்வியலிலே 'சமய வாழ்வு' மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. இத்தகைய சமய வாழ்விலே ஆலய வழிபாடுகளும், திருப்பணி சேவைகளும் பிரதான இடத்தினைப் பெறுகின்றன. இதற்கேற்ப "ஆசிரியர் சிரோமணி" அவர்களின் வாழ்வியல் பதிவுகளிலும் ஆலய வழிபாடும், ஆலயத்திருப்பணி சேவைகளும் முதன்மையும், முக்கியத்துவமும் பெறுகின்றன. ஆரையம்பதி ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயத்திலும், அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்திலும் ஆற்றிய சேவைகளோடு இவரது திருப்பணி வாழ்வு முடிந்துவிடவில்லை. அந்தவகையில் இவற்றின் தொடர்ச்சியாக மட்டக்களப்பு எல்லை வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயப் போஷகராகப் பணியாற்றிய காலப் பகுதியிலே கோவில் புனரமைப்புக்கு உதவி ஆலயக் கும்பாபிஷேகமானது சிறப்பாக நடைபெறப் பெருந்துணை புரிந்துள்ளார்.

இவ்வாறாக ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அவர்கள் தனது சமய வாழ்விலே ஆலயங்களின் நிருவாகக் குழுக்களிலே ஒரு செயல் வீரராக, சமய சிந்தனையாளராக, நல்லதொரு நிருவாக

உறுப்பினராக இருந்து பல்வேறு ஆலயத்திருப்பணி வேலைகளில் ஈடுபட்டுள்ளமை; குறிப்பாகத் திருப்பணி நிருவாகம் சிறப்பாக இயங்கவும், ஆலய கும்பாபிஷேக நிகழ்வுகளும், வழிபாட்டு முறைகளும் நல்லமுறையில் நடைபெறவும் தன்னாலான பங்களிப்புகளை நல்கியுள்ளமை பலரும் அறிந்த உண்மைகளாக சிறப்புப்பெறுகின்றன. இவர் வயோதிபம் கனிந்து இயலாமை உற்றிருந்த வேளையில் கூட தனது பிள்ளைகளின் உதவியுடன் ஆரையம்பதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு குலதெய்வங்களை வழிபட்டு வந்தமையும் இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

## 6.3 மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றப் பணிகள்

ஈழவள நாட்டின் இந்துமத வரலாற்றில் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்துக்கும் ஒரு தனி இடம் உண்டு. இதன் தோற்ற வளர்ச்சியும், எதிர்கொண்ட சவால்களும், சாதித்த சாதனைகளும் அகில இலங்கை ரீதியில் பலரும் அறிந்த ஒன்று. ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அவர்களுக்கும் இந்த இந்து இளைஞர் மன்றத்துக்கும் இடையில் மிகவும் நெருங்கிய உறவுண்டு. அந்த வகையில் இவருடைய வாழ்வியல் வரலாற்றிலே இந்நிறுவனமானது முக்கியமானதொரு அங்கமாகின்றது.

இந்த நிலையில் இந்து இளைஞர் மன்றமானது இங்கே எத்தகைய சூழ்நிலையிலே தோற்றம் பெற்றது?, இது தோற்றம் பெற்றதற்கான காரணங்கள் என்ன?, எதிர்நோக்கிய பிரச்சினைகள் என்ன?, சாதித்த சாதனைகள் என்ன?, நமது “ஆசிரியர் சிரோமணி” அவர்கள் இதிலே எப்போது அங்கத்துவம் பெற்றார்?, இந்நிறுவனத்தை வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் இட்டுச்செல்வதில் இவர் கொண்டிருந்த தூரநோக்குகள்

என்ன?, இவர் ஆற்றிய சேவைகள் என்னென்ன? என்பவை பற்றியெல்லாம் நோக்கவேண்டியது அவசியமாகின்றது.

மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கான வழிமுறைகளைக் கூறி அவர்களை நெறிப்படுத்தத் தோன்றியவைகளே சமயங்கள். அச்சமயங்களை வளர்க்கவும், வலுப்படுத்தவும் தோன்றியவைகளே சமய நிறுவனங்கள். ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, ஆங்கிலக்கல்வி, ஆசிரியர்பயிற்சி ஆகியவற்றைத் தொடர்ந்த காலப்பகுதிகளிலும், இவரது ஆசிரியத்துவ சேவைக்காலப் பகுதியிலும் மட்டக்களப்பின் சமய நிலைபற்றி நோக்குகின்ற போது கிறிஸ்தவ சமயத்தின் ஊடுருவலும், பரவலும் கூடிக்கொண்டிருந்தது. இதனால் இந்துமதமும், இந்துப் பண்பாடும், ஒழுக்கநெறிமுறைகளும், தார்மீகக் கடமைகளும் வீழ்ச்சி நிலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தன.

இத்தகைய சமயச் சூழ்நிலையில் நாட்டின் போர்ச்சூழ்நிலையும் மக்களை அல்லோல கல்லோலப்படுத்திக் கொண்டிருந்தது. அழிவுகளையும், அனர்த்தங்களையும் உண்டுபண்ணி மக்களின் வாழ்வியலில் மாறாத வடுக்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. குறிப்பாக இளைஞர்கள் மத்தியிலே குழப்பமானதொரு நிலை தோன்றியது. இந்நிலை இந்து மதத்தையும், இந்து கலாசாரத்தையும், அதன் இருப்பையும் மேலும் பலவீனப்படுத்திக் கொண்டிருந்தது. அறியாமையாலும், வறுமையாலும் இந்துமதத்திலிருந்து மக்கள் கிறிஸ்தவ மதத்துக்கு மாறிக் கொண்டும் இருந்தார்கள்.

இத்தகைய பிற்போக்கான சூழ்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இந்துமக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டக்கூடிய,

இளைஞர்களை நெறிப்படுத்தக் கூடிய, சமய உண்மைகளை எடுத்துக் கூறி மக்களை நல்வழிப்படுத்தக்கூடிய சமயநிறுவனங்கள் எதுவும் இருக்கவில்லை. இது பாரியதொரு குறைபாடாகக் காணப்பட்டது. இந்துமக்களின் நலனைக் கவனிக்க ஓர் அமைப்பு இல்லாத அந்தச் சூழ்நிலையில் எதிர்காலவியல் குறித்துச் சிந்திக்கும் அக்கறையாளர்கள் சிலர் அடிக்கடிகூடி இது தொடர்பாகப் பேசத் தொடங்கினார்கள். இந்த உணர்வு இதயத்திலே ஊற்றெடுத்த உணர்வாளர்களில் ஒருவராகவும், எதிர்காலவியல் குறித்த சிந்தனையாளர்களில் ஒருவராகவும் "ஆசிரியர் சிரோமணி" அவர்களும் விளங்கினார். இந்து மதமும், இந்து கலாசாரமும் சரிவு நிலைக்குச் சென்று கொண்டிருப்பதையிட்டு இவரது மனம் விம்மியது.

இத்தகைய உணர்வுகளாலும், ஒன்றுகூடல்களாலும் உருவாக்கம் பெற்றதுதான் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றமாகும். இதனை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இந்துசமயம், கலை கலாசாரம், பொருளாதாரம், சமூகசேவை, ஆத்மீகம் ஆகியவற்றை முன்னேற்றி மேம்படச் செய்யும் நோக்குடன் சைவ அறிஞர்கள் பலர் ஒன்றுகூடி 1968ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ம் திகதி புளியந்தீவில் அமைந்துள்ள மட்/ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலை விவேகானந்த மண்டபத்தில் "மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்" என்ற பெயர் நாமத்துடன் ஆரம்பித்து வைத்தார்கள்.

இதற்குத் தலைவராக திரு.கே.வி.எம்.சுப்பிரமணியம் (சட்டத்தரணி) அவர்களும், செயலாளராக திரு.ஆ.தவராசா (சட்டத்தரணி) அவர்களும், பொருளாளராக திரு.பி.ரி.அரசன் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டார்கள். இவர்களுடன் பன்னிருவர் அடங்கிய நிருவாக சபையும் தெரிவு

செய்யப்பட்டது. இந்த நிருவாக சபையிலே திரு.ம.சிவநேசராசா, திரு.இ.இரத்தினசிங்கம் முதலானோரும் இடம்பெற்றிருந்தார்கள்.

இம்மன்றமானது பல பொதுநோக்கங்களையும், சிறப்பு நோக்கங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தது. இந்துமதத்தின் பரந்த தொலைநோக்குச் சிந்தனைகள் சிலவற்றையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. பொது நோக்கங்களாகப் பின்வருபவை முக்கியத்துவம் பெற்றிருந்தன.

அ). மட்டக்களப்பு இந்து இளைஞர்களின் ஆத்மீக, சமூக அறிவு, மற்றும் உடல் வளர்ச்சிக்கான காரியங்களைச் செய்தல்.

ஆ). இளைஞர்களிடையே விஞ்ஞான இலக்கியக் கல்வியை ஊக்குவிப்பதுடன் அவர்கள் வேறு பயனுள்ள துறைகளில் அறிவைப் பெறவும் உதவுதல்.

இ). அவ்விளைஞர்களின் நன்மைக்காக வாசிக சாலைகள், விளையாட்டுச் சாலைகள் மற்றும் இதுபோன்ற தாபனங்கள் என்பனவற்றை நிறுவிப் பராமரித்தல்.

ஈ). சமூகசேவை நடவடிக்கைகளில் ஈடுபடுதலும், அரசினரால் மேற்கொள்ளப்படும் நிவாரண, புனர்வாழ்வு, வீடமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவுதலும்.

உ). இந்துமதத்தின் அருமை பெருமைகளை மக்கள் மத்தியிலே எடுத்துக் கூறுவதன் மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்துதலும் ஆகும்.

இத்தகைய பொதுநோக்கங்களைக் கொண்டதாக உருவாக்கம் பெற்ற மன்றமானது சமயம், சமூகம், ஆத்மீகம், கல்வி, கலை கலாசாரம் போன்ற துறைகள் சார்ந்து பரந்துபட்ட அளவில் பணியாற்றுவதையும் இலட்சியமாகக் கொண்டிருந்தது. நாளடைவிலே இத்தகைய முன்னேற்றங்களையும், முன்மாதிரியான செயற்பாடுகளையும் காணக்கூடியதாக இருந்தது.

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் ஜீயா அவர்களுக்கு மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் தோற்றமும் அது தன்னகத்தே கொண்டிருந்த தெளிவான நோக்கங்களும் மிகவும் பிடித்திருந்தது. மனதுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருந்தது. இயல்பாகவே சமய சமூக, ஆத்மீக, கல்விப் பணிகளில் தீவிர ஈடுபாடும், தமிழ்ப் பற்றும், பொதுநோக்கும் உடைய இவரது மனம் இம்மன்றத்திலே இணைந்து தன்னாலான சேவைகளைச் செய்யவேண்டும் எனத் துடித்தது.

இம்மன்றம் ஆரம்பமானதைத் தொடர்ந்து இதன் அங்கத்தவர்களாகப் பலர் சேர்ந்து கொண்டார்கள். மன்றம் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடிய வேளையில் ஆயுட்கால அங்கத்தவர்களாக 206 பேரும், சாதாரண அங்கத்தவர்களாக 209 பேரும் இடம்பெற்றிருந்தார்கள். இதன் ஆரம்பகால அங்கத்தவர்களில் ஒருவராகவும், ஆயுட்கால அங்கத்தவர்களின் வரிசையில் முக்கியமான ஒருவராகவும் "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் பொதுப்பணிக்காக இந்த நிறுவனத்தோடு தன்னை இறுக்கமாக இணைத்துக் கொண்டார்.

"ஆசிரியர் சிரோமணி" அவர்களின் நாற்பத்தோராவது வயதின் நடுப் பகுதியிலே தான் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் தோற்றத்தைக் காண முடிகின்றது. (இவரது தோற்றம் 1927.04.03;

இந்து இளைஞர் மன்றத்தின் தோற்றம் 1968.10.14) மட்/மெதடிஷ்த மத்திய கல்லூரியில் உதவி ஆசிரியராக இவர் கடமையாற்றிக் கொண்டிருந்த காலப்பகுதியே இது. ஆசிரியத்துவ சேவைக் காலப் பகுதியில் இந்து இளைஞர் மன்றத்தில் இணைந்து பொதுச்சேவை புரிய விளைந்தமை "ஆசிரியர் சிரோமணி" அவர்களுக்கு ஒரு சுமையாகத் தெரியவில்லை. மாறாக இவர் இதனை ஒரு சுகமாகவே கருதினார். எங்கெங்கு இணைந்து பொதுச்சேவைகள் புரியலாம் எனச் சந்தர்ப்பங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர் இவர். மன்றப்பணிகளோடு இணைந்து கொண்டமைக்காக பாடசாலைக் கடமைகளிலே தொய்வு நிலையை இவர் காட்டவில்லை. பாடசாலைப் பணிகளிலும் மிகவும் கண்ணும் கருத்துமாகத்தான் செயற்பட்டுக் கொண்டுவந்தார். எல்லோராலும் இது முடியாத காரியம்.

இவரது காலத்திலே ஒரு துறையிலே இருந்துகொண்டு பொதுப்பணிகளிலும் ஈடுபடக்கூடிய ஆற்றலும், ஆளுமையும் உடைய ஒருசிலர் இருந்தார்கள். அத்தகையவர்களில் ஒருவராகக் கூறக்கூடிய பெருமையினை இவர் பெற்றிருந்தார். மனிதர்களில் பெரும்பாலானவர்கள் ஒரு துறையிலே நின்று சேவை செய்யும் போது இன்னொரு துறையிலே குறிப்பாக பொது அமைப்புக்களிலே சேர்ந்து பொதுச்சேவை புரிய விரும்பமாட்டார்கள். வேலைப்பளு கூடிவிடும் என்பது இவர்களின் வாதம். ஆனால் இவர், இவர்களில் இருந்து விதிவிலக்கானவர். ஆசிரியத்துவத்திலே நின்று சேவை செய்யும் போது இப்பொது அமைப்பிலே சேர்ந்து பணிசெய்யச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமையாகக் கருதினார்.

மன்றத்தின் மாதாந்த வருடாந்தக் கூட்டங்கள் யாவும் மட்/ஆனைப்பந்தி மகளிர் வித்தியாலய மண்டபத்திலேயே நடத்தப்பட்டு வந்தன. வளரும்

மன்றத்துக்கு அதன் நிருவாகச் சீரமைப்புக்காக ஒரு தனியான அலுவலகம் தேவைப்பட்டது. இதற்கென மட்டக்களப்பு மாநகர சபையிடமிருந்து இருபத்தைந்து வருடக் குத்தகை அடிப்படையில் மட்டக்களப்பு விளையாட்டு மைதானத்துக்கு அருகில் விறைன் டிறைவ் வீதியில் PP 731ம் இலக்கப்படத்தில் 30ம் இலக்கத்துண்டான 107 பேர்ச்சஸ் காணித்துண்டொன்று பெறப்பட்டது.

இதனைப் பெறுவதற்கு அப்போது மேயராக இருந்த திரு.கே.தியாகராசா அவர்களும், ஆணையாளராக இருந்த திரு.டி.டபிள்யு.சமரதுங்க அவர்களும் பேருதவியாக இருந்தார்கள். 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 6ம் திகதி 789ம் இலக்க குத்தகை ஒப்பந்தம் பிரசித்த நொத்தாரிசும், சட்டத்தரணியுமாகிய திரு.கே.டபிள்யு.தேவநாயகம் அவர்களால் நிறைவேற்றப்பட்டது. மன்றத் தலைவர் திரு.கே.வி.எம்.சுப்பிரமணியம் அவர்களும், சட்டத்தரணியும் பொதுச் செயலாளருமாகிய திரு.ஆ.தவராசா அவர்களும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தார்கள். இந்த ஒப்பந்தம் மட்டக்களப்புக் காணிப்பதிவகத்தில் B 392ம் இலக்கப் புத்தகத்தில் 160ம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டது. இக்காணிக்கு எல்லைகளாக வடக்கும் மேற்கும் மாநகர சீமேந்துக்கட்டு வடிகாலும், கிழக்கே மாநகர மன்ற வீதியும், தெற்கே P.W.D.யாட் வீதியும் அமைந்திருந்தன. காணி கிடைத்தவுடன் ஒரு கட்டடத்துக்கான வரைபடம் தயாரிக்கப்பட்டது. அதனை அப்போதிருந்த பிரதம பொறியியலாளர் திரு.அழகானந்தம் அவர்கள் தயாரித்து உதவினார். அவரது கட்டட வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டடம் அமைக்க நிதி சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. இதனையடுத்து இக்கட்டடத்துக்கான அடிக்கல்லை காலஞ்சென்ற நீதியரசர் திரு.எஸ்.சிவசுப்பிரமணியம் அவர்களைக் கொண்டு மன்றம் 1976ம் ஆண்டு நட்டுவித்தது.

அடிக்கல் நாட்டப்பட்டதும் கட்டடப்பணிக்கு நிதிசேகரிக்கும் பணி துரிதமாக இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இப்பணிக்கு அப்போது மாவட்ட நீதிபதியாகவிருந்த திரு.கே.சண்முகலிங்கம் முதலானோர் முன்னின்றுழைத்தார்கள். நிதிசேகரிக்கும் பணியில் மன்றத்தின் அங்கத்தவர்கள் அதிக ஆர்வத்துடன் செயற்பட்டுவந்தார்கள். அவர்களில் ஒருவராக "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வந்தார். இந்நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் கட்டட அமைப்புக் குழுவொன்று நிறுவப்பட்டது. கட்டட அமைப்பு தொடர்பில் இக்குழு வினைத்திறனுடன் செயற்பட்டுக் கொண்டிருந்தது.

முதலில் அத்திவாரப் பகுதி பூரணமாக்கப்பட்டது. அதனையடுத்து பத்து அறைகளைக் கொண்ட தங்குமிடப்பகுதி, சமையற்பகுதி, குளியல் அறை, கழிவறை கொண்டபகுதி, துறவியர் தங்கும்அறை, பிரார்த்தனை மண்டபம் ஆகிய கூறுகள் கட்டிமுடிக்கப்பட்டன. இக்கட்டடப் பணியை மேற்பார்வை செய்வதில் திரு.பொன். சின்னத்துரை அவர்கள் ஆற்றியபணி குறிப்பிடத்தக்கது. படவரைஞர் திரு.சுப்பிரமணியம் அவர்கள் தொழினுட்ப ஆலோசனைகளை வழங்கினார். அத்துடன் மன்றத்தின் தொழினுட்ப ஆலோசகர் திரு.வி.சிவகணேசர் அவர்களும் தனது பங்களிப்பைச் செய்துதவினார். காலஞ்சென்ற திரு.வைரவிப்பிள்ளைராசா அவர்கள் பிரார்த்தனை மண்டபத்தைத் தனது செலவில் கட்டி உதவினார். திரு.ஆர்.அம்பலவாணர் அவர்கள் விஷேடவிருந்தினர் அறை கட்டுவதற்கு பண உதவியினை நல்கினார். இதன்பின்னர் பிரதான மண்டபம் கட்டும் பணி ஆரம்பமாகியது. இதற்கு பக்கத்தளங்களுக்கு கொங்கிறீற்றுப் போட்டும், முகடுகளுக்கான 'ரஸ்சுகளும்' தயாரிக்கப்பட்டு முகட்டு வேலைகள் ஆரம்பமாகும் தருணத்தில் 1978ம் ஆண்டு வீசிய சூறாவளி கிழக்கிலங்கையை அல்லோலகல்லோலப்படுத்தி வைத்தது. இது இக்கட்டடத்தை

சின்னாபின்னப்படுத்தி வைத்தது. கொங்கிறீற்றுத் தளங்கள், 'ரஸ்சுகள்' அனைத்தையும் நிர்மூலமாக்கித் தரையில்போட்டது. மன்றத்தின் அலுவல்கள் அனைத்தையும் சீர்குலைத்ததுடன், பெருமளவு சேதத்தையும் ஏற்படுத்தியிருந்தது. இது மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் எதிர்நோக்கிய முதலாவது இழப்பும், பாரியதோர் சவாலுமாகும். மன்றத்தின் ஏனைய நிருவாக உறுப்பினர்கள் இந்நிலைமையையிட்டு பெரும் மனவேதனையை அடைந்தது போல "ஆசிரியர் சிரோமணி" அவர்களும் இக்கதி நேர்ந்ததையிட்டு பெரிதும் மனம் கலங்கினார். இதே வேளையில் இந்தியா செல்வதற்காகத் தலைவர் திரு.கே.வி.எம்.சுப்பிரமணியம் அவர்கள் தனது பதவியை விட்டு விலகினார். அத்துடன் செயலாளர் திரு.ஆ.தவராசா அவர்களும் பதவியை விட்டு விலகினார். இவர்களுடைய இடங்களுக்கு திரு.பி.ரி.அரசன் அவர்கள் தலைவராகவும், திரு.எஸ்.உமாபதிசிவம் அவர்கள் செயலாளராகவும், திரு.என் தில்லைநாதன் அவர்கள் பொருளாளராகவும், திரு.இ.இரத்தினசிங்கம் அவர்கள் உதவிச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டார்கள். இது மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்ற நிருவாகக் கட்டமைப்பிலே ஏற்பட்ட முதலாவது மாற்றமாகும்.

புதிய தலைவர், புதிய செயலாளர், புதிய பொருளாளர் ஆகியோரைக் கொண்ட புதிய நிருவாக ஒழுங்கமைப்பின் கீழ் மன்றம் 1978 சூறாவளியால் ஏற்பட்ட சோதனையைப் பெரும் முயற்சியினால் ஓரளவு சமாளித்துக் கொண்டது. விருந்தினர் விடுதி, பிரார்த்தனை மண்டபம், துறவியர் தங்கும் அறை ஆகிய பகுதிகளைத் திருத்தி அமைத்துக் கொண்டு செயற்பட ஆரம்பித்தது. இச்சந்தர்ப்பத்தில் இந்தியா சென்றிருந்த திரு.கே.வி.எம்.சுப்பிரமணியம் அவர்கள் அங்கேயே காலமானார். கட்டட புனர் நிருமாணப்பணி தொடங்கி சிறிது காலத்தின்

பின்னர் தலைவராக இருந்து நற்பணி ஆற்றி வந்த திரு.பி.ரி.அரசன் அவர்கள் மரணமானார்.

செயலாளர், பொருளாளர் ஆகியோரும் காலமாக உதவித் தலைவராக மன்றத்தின் ஆரம்பம் தொடக்கம் இருந்து வந்த திரு.ம.சிவநேசராசா அவர்கள் தலைமைப் பதவியையும், திரு.ஆ.சுந்தரலிங்கம் அவர்கள் பொதுச் செயலாளர் பதவியையும், திரு.இ.சீனித்தம்பி அவர்கள் பொருளாளர் பதவியையும், திரு.இ.இரத்தினசிங்கம் அவர்கள் தொடர்ந்தும் உதவிச் செயலாளர் பதவியையும் மிகவும் பண நெருக்கடியான நிலைமையில் ஏற்றுக் கொண்டார்கள்.

1981ம் ஆண்டு முதல் பொதுச்செயலாளராக இருந்துவந்த திரு.ஆ.சுந்தரலிங்கம் அவர்கள் பதவியிலிருந்து சொந்தக் காரணங்களுக்காக விலகிக்கொண்டார். உதவிச் செயலாளராக இருந்துவந்த திரு.இ.இரத்தினசிங்கம் அவர்கள் பொதுச் செயலாளராக கடமையை ஏற்றுக் கொண்டார். தலைவர் திரு.ம.சிவநேசராசா அவர்களும், பொதுச் செயலாளர் திரு.இ.இரத்தினசிங்கம் அவர்களும் மன்றத்தின் பொன்விழாக் காலத்திலும் முறையே தலைவராகவும், பொதுச் செயலாளராகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

சூறாவளியினால் சேதமடைந்த இடிபாடுகளை சீரமைப்பதற்குப் பெரும் நிதி தேவைப்பட்டது. தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருடைய பெருமுயற்சியினால், அன்றைய காலகட்டத்தில் முன்னைநாள் கௌரவ பிராந்திய இந்துகலாசார அமைச்சராக இருந்த திரு.செல்லையா இராசதுரை அவர்களுடைய உதவியால் ஒரு இலட்ச ரூபா பெறக்கூடியதாக இருந்தது. மகா மண்டபத்தைக் கட்டுவதற்கு பதின்மூன்றாயிரம் ரூபாய் பெறுமதியான ஆறு 'றஸ்சுகள்'

தேவைப்பட்டன. இவற்றுள் ஒன்றை உதயா மோட்டர்ஸ் உரிமையாளர் திரு.கருணாரத்ன அவர்களும், மற்றொன்றை சிவநெறிச் செல்வர் சைவ நன்மணி இரா.மயில்வாகனம் அவர்களும் தங்கள் செலவில் செய்து உதவினார்கள். நூறு ரூபா சீட்டுக்கள் அச்சிட்டு விற்பனை செய்து நிதி சேகரிக்கப்பட்டது. சூறாவளியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்தோ வர்த்தகர்களிடமிருந்தோ எதுவித உதவியையும் பெறமுடியவில்லை.

பிரதான மண்டபத்துக்கான புனருத்தாரண வேலைகள் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜீ மகராஜ் அவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டன. கட்டம் கட்டமாக வேலைகள் செய்யப்பட்டன. இரும்பு 'ரஸ்சுகள்' செய்யப்பட்டு முகட்டு வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. பிரதான மண்டபத்துக்கு முன்பக்கமாக 'போட்டிக்கோவும்' கட்டப்பட்டது. ஆண்டுதோறும் கொடிவிற்பனை செய்யப்பட்டு கட்டட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு பிரதான மண்டபத்தை (மகா மண்டபம்) 1988ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 17ம் திகதி சமய முறைப்படி கிரியைகள் செய்து மன்றத்தின் ஆத்மீகத் தலைவர் ஸ்ரீமத் ஜீவனானந்தஜீ மகராஜ் அவர்கள் சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார்.

மேலும் இம்மண்டபத்துக்கு அரங்கு, சீலிங், மின் அலங்காரம் ஆகியவையும் செய்யப்பட்டன. அயராத உழைப்பால் பெருந்தொகைப்பணச் செலவில் சூறாவளியால் சிதைவுற்ற மன்றத்தின் கட்டடப் பணிகள் மகா மண்டபம் உட்பட பூர்த்தியாக்கப்பட்ட வேளையில் 1990ம் ஆண்டு ஜூன் மாதம் 17ம் திகதி இக்கட்டடத்திலே இராணுவம் புகுந்து கொண்டது.

இச்சந்தர்ப்பத்தில் புத்தகங்களை மட்டுமே மீட்க முடிந்தது. பல இலட்ச ரூபாய் பெறுமதியுள்ள மின்சார இணைப்புகள், மின் விசிறிகள், கட்டில்கள், கதிரைகள் முதலியவற்றையும், பணிமனையையும் இழக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை மன்றத்தினருக்கு ஏற்பட்டது. இதன் மூலம் இழக்கப்பட்ட பொருள்களின் அன்றைய பெறுமதி 4,14867 ரூபா என மதிப்பிடப்பட்டிருந்தது. 1978ல் சூறாவளி வீசி மன்றத்தின் கட்டடமும் பொருட்களும் சின்னாபின்னமாக்கப்பட்ட வேளையில் ஏற்பட்ட தாக்கத்தைவிட பன்மடங்கான வேதனைகளை "ஆசிரியர் சிரோமணி" அவர்களுக்கும் மன்ற நிருவாகிகளுக்கும் ஏற்படுத்தி இருந்தது.

சொந்தக் கட்டடத்தில் எந்நேரமும் கூட்டங்களையும், சொற்பொழிவுகளையும் நடத்தவும், விருந்தினரைத் தங்கவைக்கவும், சமயம் சமூகம், ஆத்மீகம், கல்வி, கலை கலாசாரம் போன்ற பல்வேறு துறை சார்ந்து சேவைகள் செய்யவும் வாய்ப்பு வசதிகளைப் பெற்றிருந்த மன்றத்தினர் அரச படையினர் அக்கட்டடத்தைச் சொந்தமாக்கிக் கொண்டதையடுத்து அங்கிருந்து வெளியேற்றப்பட்டமையும், சமய சமூகப்பணிகளைச் செய்வதற்குத் தடையாக அமைந்தமையும் துரதிஷ்டவசமானது. இருந்தபோதும் இத்தகைய பெருஞ் சோதனையின் மத்தியிலும் இம்மன்றம் தனது பணியை நிறுத்தாமல் சிறப்பாக ஆற்றிவந்தமை வரலாறு நன்கறிந்த பேருண்மையாகும். இது ஒரு சாதனையாகும்.

இத்தகைய மேன்நிலை இறைவன் திருவருளாற் கிடைத்த பெறுபேறே ஆகும். அத்துடன் ஆன்மீகத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜீ மகராஜ் அவர்களின் வழிநடத்தலும், ஒருவர்பின் ஒருவராகப் பதவிக்கு வந்த தலைவர்கள், நிருவாக உறுப்பினர்களின் அயராத சேவைகளும், பொதுமக்களின் பேராதரவும் இதற்குத் துணை நின்றுள்ளன. பல

சமயத்தவர்கள் வாழும் மட்டக்களப்பு மாவட்டத்திலே இனமத பேதங்கள் கடந்து இங்குள்ள அனைத்து மக்களுடைய உதவி, ஒத்தாசைக்ளையும் பெற்று நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப இம்மன்றம் முனைப்புடன் செயற்பட்டு வந்திருக்கிறது.

இம்மன்றம் இந்து கலாசார அமைச்சிலே H/A/4/BT/8ம் இலக்கத்தில் இந்துசமய நிறுவனமாகவும், சமூகசேவை அமைச்சிலே 11/4/20/578/86ம் இலக்கத்திலே சமூக சேவை நிறுவனமாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். மேலும் அகில இலங்கை இந்துமாமன்றம், இலங்கை இந்துப் பேரவை, கிழக்கிலங்கைப் புனர்வாழ்வுக் கழகம், சிறைச்சாலைச் கைதிகள் நலன்புரிச் சங்கம், மாவட்ட விளையாட்டுக் கழகம், விபுலானந்த இசைநடனக் கல்லூரி ஆலோசனைச் சபை, ஆங்கிலமொழி ஆதரவுச் சங்கம் ஆகியவற்றிலும் அங்கம் வகித்தமை அதன் பரந்து விரிந்த சேவைநல நோக்கைத் தெளிவுபடுத்தி நிற்கின்றது.

இந்நிறுவனத்தின் அன்பர்கள் இன்னல்களும் இடர்களும் நிறைந்த இக்கட்டான காலகட்டங்களில் கூட தளரா மனஉறுதியுடனும், விடாமுயற்சியுடனும் சைவ சமயத்துக்கும், நற்றமிழுக்கும், சமூகத்துக்கும், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கும் பெரும்பணியாற்றி வந்திருக்கிறார்கள். நிறைவான இறைபக்தியாலும், ஒற்றுமையாலும், ஒத்துழைப்பாலும், நம்பிக்கை நிறைந்த நல்லெண்ணங்களாலும் பல்வேறு சாதனைகளைச் சாதித்திருக்கிறார்கள். அத்தகைய அன்பர்களுள் ஒருவராக மன்றத்தின் ஆயுட்கால அங்கத்தவர்களில் முக்கியமான ஒருவராக "ஆசிரியர் சிரோமணி" அவர்களும், அவர்தம் பணிகளும் இடம்பெறுகின்றமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் ஆற்றிய பணிகள் பற்றிநாம் நோக்குகின்ற போது அவை ஆழமானவையாக, அகலமானவையாக, தொலைநோக்கோடு கூடியவையாக வீச்சுருப் பெற்று விளங்கு கின்றமையைக் காண முடியும். சமயம், சமூகம், கல்வி, கலை கலாசாரம் ஆகிய பல்வேறு துறைகள் சார்ந்ததாக மன்றத்தின் நோக்கங்களும், பணிகளும் காலப்போக்கிலே விரிந்து சென்றன. வீரியம் பெற்றன.

இந்துமதமும், இந்து கலாசாரமும் வீழ்ச்சிநிலையை அடையாமல் தடுத்து நிறுத்தி வளர்ச்சி நிலையைக் காணவைக்க வேண்டும்; இந்து இளைஞர்கள் நெறிபிறழ்ந்து நடக்காவண்ணம் நல்வழிப்படுத்தபட வேண்டும்; அவர்களுக்கூடாக கூட்டுப் பிரார்த்தனைகளையும், ஆலய தரிசனத்தையும் வளர்க்கவேண்டும்; மக்களை விழிப்படையச் செய்யவேண்டும்; ஆத்மீகத்தை மேலோங்கச் செய்யவேண்டும்; அறக்கடமைகளையும், சமய அனுட்டானங்களையும் மக்கள் மத்தியிலே ஊட்ட வேண்டும் என்பனபோன்ற நோக்கங்களைக் கொண்டிருந்த மன்றம் நாளும் பொழுதும் அதன் நோக்கிலும், போக்கிலும் விரிந்த கொள்கைகளைக் கொண்டதாக வளர்ச்சியடைந்து வந்ததைக் காணமுடிகின்றது.

இம்மன்றம் இந்துமக்களின் நன்மை கருதி அமைக்கப்பட்டாலும் இப்பிரதேச மக்கள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து எதிர்நோக்கிய சொல்லொண்ணாத் துயரங்களை அடுத்து தனது பணியை "ஜீவ சேவையே சிவ சேவை" எனக் கொண்டு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களுக்கு சாதி, சமய பேதமின்றி உணவு, உடை, வீடு என்பனவற்றை வழங்குவதிலும் அவர்களது துயர்களைத் துடைப்பதிலும் அரியபணி ஆற்றிவந்திருக்கிறது.

வந்தாறுமூலை தாக்கப்பட்டு வீடுகள் எரியூட்டப்பட்டு மக்கள் தவித்த வேளையில் அங்குபோய் மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன், அழிவுகளைப் பற்றிய மதிப்பீட்டையும் ஆரம்பித்ததும் மன்றத்தின் சமூகப்பணி பரந்த அடிப்படையில் ஆரம்பமாகியது. மன்றத்தினர் இப்பகுதி மக்களுக்கு ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜீ மகராஜ் அவர்கள் வழங்கிய உடைகளை வழங்கி உதவியதுடன் ஆறுதலும் கூறினார்கள். இதனையடுத்து மாவடி வேம்புக்கிராமம் தாக்கப்பட்டது. மக்கள் குடிசைகளை அமைக்க ஓலைகள் பெறமுடியாத நிலையிலே தவித்தார்கள். அப்போது அப்பகுதி உதவி அரசாங்க அதிபர் விடுத்த வேண்டுகோளை ஏற்று அங்கு சென்று வெளியூரிலிருந்து வந்த லொறிகளிலிருந்து ஓலைகளை வாங்கி அவர்களுக்கு வழங்கியதன் மூலம் மன்றத்தினர் அம்மக்களின் துயரினைத் துடைத்திருக்கிறார்கள். இவ்விதமாகத் தொடங்கிய சமூகப்பணி வீடிழந்தவர்களுக்கு வீடமைத்துக் கொடுத்தல், தொழில்வாய்ப்புக்களை இழந்தவர்களுக்கு மீளத்தொழில் செய்ய வாய்ப்பளித்தல், உணவு உதவிகளை வழங்கல், உடுதுணிகளை வழங்குதல், அகதிமுகாம்களைப் பொறுப்பேற்று நடத்துதல், யுத்தத்தால் தாய்தந்தையரை இழந்த சிறார்களுக்கான இல்லங்களை அமைத்தல், அவர்களுக்கு கல்வியூட்டல் என நீண்டுகொண்டு சென்றது.

சமய சம்பந்தமான பணிகளிலும் மன்றமானது கூடியகவனம் செலுத்தி வந்திருக்கிறது. நாயன்மார்களின் குருபூசைகள், நவராத்திரிப் பூசைகள், விஜயதசமி ஆகியவை நடத்தப்பட்டு வந்துள்ளன. சைவசமயப் பெரியார்களின் வரிசையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விபுலானந்த அடிகள், புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை ஆகியோர்களது நினைவு தினங்கள் அனுட்டிக்கப்பட்டுள்ளன. சமய விழாக்களின் போது பண்ணிசைகள், கதாப்பிரசங்கங்கள்,

சமயப்பிரசங்கங்கள், வில்லுப்பாட்டு ஆகியவை நடத்தப்பட்டுவந்துள்ளன. மன்றமானது நெருக்கடியான காலத்திலே இளைஞர்களை ஒன்றுசேர்த்துக் கருத்தரங்குகளை நடத்துவதற்கு மன்றக்கட்டடம் இல்லாமற் போனதனால் மட்டக்களப்பு உயர்தரக் கல்லூரிகளில் கல்வி பயின்ற உயர்தரவகுப்பு சைவ மாணவர்களைக் கொழும்புக்கு அழைத்துச் சென்று இராமகிருஷ்ண சுவாமிகளுடைய அனுசரணையுடன் அங்குள்ள சமய சமூக வல்லுநர்களைக் கொண்டு சமயக் கருத்தரங்குகளை நடத்தி வந்திருக்கிறது.

கலவரத்தினால் பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்களைத் திருத்த சிறுதொகை நிதி உதவிகளைச் செய்துகொடுத்தும், மக்களை ஊக்குவித்து கும்பாபிஷேகம் செய்ய ஆலோசனை வழங்கியும், வசதிபடைத்தவர்களிடமிருந்து நிதியுதவிகளைப் பெற்றுக் கொடுத்தும் இந்து இளைஞர் மன்றமானது ஆலயங்களின் வளர்ச்சிக்காக சேவையாற்றி வந்திருக்கிறது. அத்துடன் வழிபாட்டுத் தலங்களில் நிலவும் குறைபாடுகளைத் தீர்த்து ஆலய பரிபாலனத்தை சீராக நடத்தத் தகுந்த திட்டங்களை அமைத்து மக்களின் பங்களிப்பையும் வேண்டி உதவி வந்துள்ளது.

மேலும் மன்றமானது பண்ணிசைத் தொகுப்புகளை அச்சிட்டு சைவ மாணவர்களுக்கு வழங்கி பண்ணிசையை ஊக்குவித்து போட்டிப்பரீட்சைகளை நடத்தி திறமை பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வந்திருக்கிறது. இப்பண்ணிசையை முறையாகப் பாடக்கூடியவர்களைக் கொண்டு பாடுவித்து ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவு செய்து போட்டிகளை ஏற்படுத்தி அதிலே பங்கு பற்றுவோருக்கு பரிசு வழங்கும் திட்டத்தையும் கொண்டிருந்தது.

மன்றப் பணிகளில் நூல் வெளியீடும் முக்கியம் பெறுகின்றது. சைவ வினாவிடை, மற்றும் அரிய சைவ நூல்களை மறுபதிப்புச் செய்து வெளியிட்டுள்ளது. சைவப்புலவர் கா.அருணாசலதேசிகமணி அவர்கள் எழுதிய 'சைவ சமய சிந்தாமணியையும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய முதலாம் சைவ வினாவிடையையும் அச்சிட்டுவெளியிடும் அரிய பணியையும் மன்றம் மேற்கொண்டிருந்தது. தவிர கோளறு பதிகம், இடர்களை பதிகம், சுவாமி விபுலானந்தர் அருளிய ஈசன் உவக்கும் இன்மலர்கள், புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையின் மீட்சிப்பத்தும் வெளியிடப்பட்டன. 'திருமுறைப்பாடல்கள்' என்ற தொகுப்பும் வெளியிடப்பட்டது.

இந்து இளைஞர் மன்றமானது சங்கீதக் கலைஞர்களையும், கவிஞர்களையும் கௌரவித்துப் பாராட்டியும் வந்திருக்கிறது. அக்காலப் பகுதியிலே மூவர் பாராட்டப்பட்டிருந்தனர். திரு.கி.கிருஷ்ணபிள்ளை (திமிலைத் துமிலன்) அவர்களுக்கு 'கவியரசு'ப் பட்டமும், திரு.செ.சிவஞானம் அவர்களுக்கு 'இசைஞானமணி' என்னும் பட்டமும், திரு.என்.இராஜு அவர்களுக்கு 'இசை அரசு' என்னும் பட்டமும் மன்றத்தால் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

சொந்தக்கட்டடத்தை இழந்த மன்றத்தினர் ஞானசூரியம் வீதியில் இருந்த செயலாளரின் இல்லத்திலும், பின்னர் மட்டக்களப்பு தாமரைக்கேணி வீதியில் உள்ள ஒருவாடகை வீட்டிலுமாக செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் திரு.எம் சிவநேசராசா அவர்கள் தலைவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார். இதனையடுத்து நடைபெற்ற பொதுக் கூட்டத்திலே திரு.மு.பவளகாந்தன் அவர்கள் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அப்பொதுக் கூட்டத்திலே ஆசிரியர் சிரோமணி

த.செல்வநாயகம் அவர்கள் உப செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இதன்போது நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. திரு.ஆ.இரத்தினசிங்கம் அவர்கள் செயலாளராகத் தொடர்ந்தும் பணியாற்றினார். இவர்களுக்கு ஒரு நிரந்தரக் கட்டடம் வேண்டும் என்ற பிரேரணை நிருவாகக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதன்படி மட்டக்களப்பு கல்லடி அரச விடுதியில் அமைந்துள்ள வன இலாகாவுக்குச் சொந்தமான அரச காணியில் வன இலாகாவின் சம்மதத்துடனும், மண்முனை வடக்கு பிரதேச செயலாளரின் அனுமதியுடனும் அக்காணியைப் பெற்று மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்துக்குச் சொந்தமாக்கி கட்டடஅமைப்பு வரைந்து வரைபடத்துக்கு அமைய இரண்டுமாடிக் கட்டடத்துக்கு சுவாமி ஜீவனானந்தஜீ மகராஜ் அவர்களைக் கொண்டு அடிக்கல் நாட்டப்பட்டமை முக்கியமான நிகழ்வாகும். ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அவர்கள் உப செயலாளராகியதன் பின்னர் மன்றத்தின் செயற்பாடுகள் மீண்டும் வளர்ச்சிப் பாதையில் செல்லத் தொடங்கியமை பாராட்டத்தக்கதாகும். இவ்வாறாக ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அவர்கள் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும், மன்றத்தின் கலாசாரச் செயலாளராகவும், வெள்ளிவிழா அமைப்புக் குழுத் தலைவராகவும் இருந்து பன்முகப்பட்ட பாராட்டத்தக்க சேவைகளைப் புரிந்துள்ளார். அதுமாத்திரமன்றி இக்காலப் பகுதியிலே அகில இலங்கை இந்துமாமன்ற முகாமைப்பேரவை உறுப்பினராகவும், கிழக்கிலங்கை புனர்வாழ்வுக் கழக (E.R.O.) நிருவாகக்குழு உறுப்பினராகவும் இருந்து பொதுப்பணிகளை ஆற்றியுள்ளார். இவை எல்லாவற்றுக்கும் மேலாக மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் உப தலைவராகி மன்றத்தின் செயற்பாடுகளை மீண்டும் வளர்ச்சி நிலைக்குக் கொண்டு சென்றுள்ளார்.

### 6.4 சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லப் பணிகள்

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தால் உருவாக்கப்பட்ட ஒன்றே 'மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லமாகும்.' முதியோர்கள் பேணப்பட வேண்டும்; அவர்கள் வாழ்வுக்கு உதவ வேண்டும் என்னும் நோக்கத்துடன் தோற்றம் பெற்றதாகும். ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் மன்றத்தின் உப தலைவராக இருந்த வேளையிலேயே மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லமானது தோற்றம் பெற்றுள்ளமை சிறப்புக்குரியதாகும். அதாவது இந்து இளைஞர் மன்றத் தீர்மானமொன்றுக்கு அமைய முதியோர்களின் நீண்டகாலத் தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன் முதியோர் இல்லத்துக்கான அடிக்கல் நாட்டு விழா மட்டக்களப்பு கல்லடி, 82 அரசவிடுதி வீதியில் உள்ள அரசினரால் மன்றத்துக்கு வழங்கப்பட்ட காணியில் 20.10.1997 அன்று காலை சுப முகூர்த்த வேளையில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜீ மகராஜ் அவர்களால் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவ்வைபவத்துக்கு இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் திரு.மு.பவளகாந்தன் அவர்கள் சமுகமளித்திருக்காத காரணத்தினால் உப தலைவராகிய ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் தலைமைதாங்கி அந்நிகழ்வினை சிறப்பாக நடத்திவைத்தார்.

இதே வேளை முதியோர் இல்ல வதிவிடத்துக்கான வரைபடத்தையும் அதற்குத் தேவைப்படும் நிதியையும் குறிப்பிட்டு கொழும்பு இந்துமாமன்றத்துக்கு ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் முதலானோர் விண்ணப்பித்திருந்தார்கள். அதை ஏற்றுக் கொண்ட இந்துமா மன்றத்தினர் அதற்கு வேண்டிய நிதியை பகுதி பகுதியாகத் தந்து உதவினார்கள். அதேவேளை மட்டக்களப்பில் உள்ள வணிகப்

பெருமக்களையும் பொருள்வளம் படைத்தோரையும் அணுகி கட்டடத்தில் அமையவுள்ள தனி அறைகள் பற்றிய விபரங்களைக் கூறி அவர்களின் உபயமாக ஞாபகார்த்த அறைகள் அமைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அக்கட்டடம் முடிவுறாத நிலையில் இல்லத்தை ஆரம்பித்து நிதிவசூல் செய்யலாம் என்ற நோக்குடன், புதிய கல்முனை வீதி 185 ம் இலக்க வாடகை வீட்டில் 10.02.2000 அன்று நான்கு முதியோர்களுடன் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜீ மகராஜ் அவர்களால் இல்லம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்பின்னர் அகில இலங்கை இந்துமாமன்றம் அன்பளிப்பாக வழங்கிய பன்னிரெண்டு இலட்சம் ரூபாவில் 82 அரசவிடுதி வீதியில் அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகானந்தஜீ மகராஜ் அவர்களால் 07.07.2001ல் திறந்து வைக்கப்பட்டது.

அக்கட்டடத்தின் முதியோரின் பராமரிப்பை "ஆசிரியர் சிரோமணி" அவர்களே ஏற்றுக் கொண்டார். இந்து இளைஞர் மன்றத்தில் உப தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருந்த இவர் முதியோர் இல்லத்தின் தலைவராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார். முதியோரின் உணவு ஏற்பாட்டிற்காக ஸ்ரீமத் ஜீவனானந்தஜீ மகராஜ் அவர்களின் ஆலோசனைப்படி ஒருநாளைக்கு ஒருவர் என்ற வீதம் உணவு கொடுப்பதற்கு ஒருவருடத்தில் ஒருதரம் ஆயிரம் ரூபாய் கொடுக்கக் கூடியவர்களை "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் சந்தித்து அவர்களுடைய சம்மதத்தைப் பெற்று அவர்களைக் கொண்டு உணவு வழங்கும் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்.

இல்ல மேற்பார்வையாளராக ஒருவரையும், இல்லக் காவலாளியாக ஒருவரையும், சமையற் காரியாக இன்னொருவரையும் இவர் நியமனம் செய்திருந்தார். மட்டக்களப்புப் பட்டணத்தில் உள்ள கல்லடியிலும், தாமரைக்கேணியிலும் உள்ள "சத்தியசாயி சமித்திகள்" உணவு வழங்குவதாக ஏற்றுக் கொண்டன. உணவுவழங்குவதற்கு ஒத்துக் கொண்டவர்களுக்கு ஒரு கிழமைக்கு முன்னதாகவே "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் சென்று ஞாபகமூட்டுவார். அடுத்தடுத்த நாட்களில் அவர்களுக்கு அறிவித்து விட்டு அவர்களிடம் சென்று திகதியைப் பெற்றுக் கொள்வார். இம் மேற்பார்வையாளர் நாளாந்த உணவுக்கு வேண்டிய எல்லா ஒழுங்குகளையும் செய்து கொடுப்பார்.

இவ்வாறு 15.01.2003 தைப்பொங்கல் தினம் வரை இவ் அறப்பணியைச் செய்துவந்த திரு.த.செல்வநாயகம் அவர்கள் தனது சொந்த விருப்பத்தின் பேரில் இப்பணியில் இருந்து இளைப்பாறினார். இச்சேவையை இப்போது சித்த வைத்தியரும், இந்து இளைஞர் மன்ற நிருவாகசவை உறுப்பினருமாகிய திரு.க.நடராசா என்பவர் செய்து வருகின்றார். 2004ல் ஏற்பட்ட சுனாமியின் போது ஒரு முதியவப் பெண்மணி, கோட்டைக்கல்லாற்றைச் சேர்ந்த நல்லம்மா என்பவர் வெள்ளத்தில் அள்ளுண்டு சென்றிருந்தார். சுனாமியில் இருந்து மீண்டவர்கள் சிலர் தம் வீடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். வீடு சென்றவர்கள் சிலர் மீண்டும் வரவில்லை.

இந்த இல்லத்தில் "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் சேவை செய்துவந்த காலத்தில் இவரால் சேர்த்துக் கொள்ளப்பட்ட திரு.சிவகுரு சுப்பையா அவர்கள் தனது 100வது பிறந்த நாளை 08.08.2007அன்று மகிழ்வுடன் கொண்டாடினார். சிலவேளைகளில் அவர் இவரைப் பார்க்க வந்து செல்வார். இவர் அவரைப் பார்க்கச் செல்வார். அவரைச் சந்திப்பதில்

இவருக்கும், இவரைச் சந்திப்பதில் அவருக்கும் பெரும் மகிழ்ச்சியாக இருக்கும்.

இதேபோன்று இவ்வில்லத்தில் திரு.க.பத்மநாதன் என்றொரு முதியவர் இருந்தார். அவர் கல்லடி உப்போடை இராம கிருஷ்ணமிஷனில் தங்கி இருந்தவர். மிஷனை விட்டுச் செல்லும் போது கள்ளியங்காட்டில் அமைந்துள்ள கத்தோலிக்க முதியோர் மடத்துக்குச் செல்லத் தீர்மானித்துள்ளதாக "ஆசிரியர் சிரோமணி" அவர்களிடம் கூறியிருந்தார். அவர் அவ்வாறு தீர்மானம் செய்யும் போது இம்முதியோர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

"இப்போது நீங்கள் கத்தோலிக்க முதியோர் மடத்துக்குச் செல்லத்தேவையில்லை; சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லத்தில் சேர்ந்து கொள்ளலாம்" என்றுகூறி திரு.த.செல்வநாயகம் அவர்களும், ஆரையம்பதியைச் சேர்ந்த டாக்டர் மாசிலாமணி அவர்களும் அவரைத் தடுத்து நிறுத்தினார்கள். அவர் அதனை ஏற்றுக்கொண்டு முதியோர் இல்லத்தின் முதியோருக்கும், இல்லத்துக்கும் அரும் பெரும் பணிகளை ஆற்றிவந்தார்.

அவர் மிகவும் சுறுசுறுப்பானவர். இத்தகைய அவர் இராமகிருஷ்ணமிஷன் சுவாமி ஜீவனானந்தஜீ மகராஜ் அவர்கள் மறைந்துவிட்ட பின்னர் கத்தோலிக்க இல்லத்துக்குச் சென்றுவிட்டார். அவர் சொன்ன காரணங்களுக்கேற்ப திரு.த.செல்வநாயகம் அவர்களால் அவரை முன்னர் போல் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவர் சொன்ன முக்கியமானதொரு காரணம் தான் உடல்நிலை தளர்ந்துபோகும் காலத்தில் தன்னை இங்கு கவனிப்பதற்கு வேண்டிய வசதிவாய்ப்புகள் இல்லை என்பதேயாகும்.

இவ்வாறாக சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லம் ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் இல்லப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற நாளான 15.01.2003 வரை இல்லப்பரிபாலன குழுத் தலைவராகப் பணியாற்றி இல்லத்தை நெறிப்படுத்திய பெருமை ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களையே சாரும். நாள்தோறும் இல்லத்து முதியோர்களுக்கு உணவு வழங்க நிதி வசதியை ஏற்படுத்தியிருந்ததோடு இல்லப்பணியைப் பற்றி கனடா, இலண்டன் ஆகிய நாடுகளிலும் பிரசாரம் செய்து ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட நிதி சேகரித்து இல்ல நலனைப் பேணிப் பாதுகாத்த பெருமையும் நமது குருநாதரையே சேரும்.

**6.5 புலவர்மணி நினைவுப் பணிமன்றப் பணிகள்**

சுவாமி விபுலானந்த அடிகளாருக்குப் பின்னர் மட்டக்களப்பின் தமிழ்ப்புலமையின் குறியீடாகத் திகழ்ந்தவர் புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை அவர்கள். மட்டக்களப்பின் பழம்பெரும் பதிகளுள் ஒன்றான மண்டூரில் 08.01.1889ம் ஆண்டு ஏகாம்பரப்பிள்ளை என்பவருக்கும் சின்னத்தங்கம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர் அவர். ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் பிறப்பதற்கு 38 வருடங்களால் முன் தோன்றியவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள். அவர் 02.11.1978ல் இயற்கை எய்தும் வேளையில் 'ஆசிரியர் சிரோமணி' அவர்கள் மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்திலே அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

'புலவர்மணி' அவர்கள் ஆழ்ந்த தமிழ்ப்புலமையும், கவிப்புலமையும், பன்முக ஆளுமையும், பரந்துபட்ட தொலைநோக்கும் உடையவர். இவரது "உள்ளதும் நல்லதும்" சுயசரிதம் இவற்றை நன்கு வெளிப்படுத்தும். பலபட்டங்கள், விருதுகள், பாராட்டுகளுக்குச்

சொந்தக்காரர் அவர். எனினும் மட்டக்களப்புத் தமிழ்க்கலை மன்றம் வழங்கிய 'புலவர்மணி' என்னும் பட்டத்தையே அவர் பெரிதும் விரும்பி ஏற்றுக் கொண்டார். அதுவே அவருடைய பெயரோடு என்றுமே பிரியாத ஒன்றாக ஒட்டிக் கொண்டது. இத்தகைய பெருமையும், புலமையும், பன்முக நோக்கும் கொண்டு தமிழ்கூறும் நல்லுலகை அலங்கரித்த அவருக்காக; அவருடைய பணிகளும், நினைவுகளும் மக்கள் மத்தியிலே நிலைக்க வேண்டும் என்பதற்காக அவர் மறைந்து பதினாறு நாட்களால்; அதாவது 18.11.1978 அன்று உருவாக்கப்பட்டதுதான் புலவர்மணி நினைவுப்பணி மன்றமாகும்.

இது அப்போதய பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.செ.இராசதுரை அவர்களின் தலைமையில் புளியந்தீவிலுள்ள ஆனைப்பந்தி மகளிர் பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட 'இரங்கல்' நிகழ்வின்போதே அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இதற்கு அக்காலத்தில் மட்டக்களப்பு அரசாங்க அதிபராகவும், மாவட்டச் செயலாளராகவும் கடமையாற்றிய திரு.அ.கி.பத்மநாதன் அவர்கள் தலைவராகவும், டாக்டர்.வி.பஞ்சாட்சரம், திரு.எஸ்.கே.தெய்வநாயகம் ஆகிய இருவரும் உபதலைவர்களாகவும், திரு.ம.சிவநேசராசா அவர்கள் செயலாளராகவும், திரு.இரா.நாகலிங்கம் (அன்புமணி) அவர்கள் உபசெயலாளராகவும், திரு.எஸ்.நடராசா அவர்கள் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டார்கள். இவர்களுடன் ஒன்பதுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

இம்மன்றமானது புலவர்மணியின் கவிதைகள், "உள்ளதும் நல்லதும்" முதலானவற்றை வெளியிடுவதெனவும், ஆண்டுதோறும் புலவர்மணி நினைவுதின விழாவை கார்த்திகை மாதம் 02ம் திகதி கொண்டாடுவதெனவும், பாடசாலை மாணவர்களிடையே கவிதை,

கட்டுரைப் போட்டிகளை நடத்துவதெனவும், புலவர்மணியின் பெயரை வீதிக்குச் சூட்டுவதெனவும், நகரின் மத்தியிலே அவரது உருவச் சிலையை நிறுவுவதெனவும் ஆரம்பகாலத் திட்டமாகத் தீர்மானம் எடுத்திருந்தது. இவற்றில் பல நிறைவேறாமலும் போனது. இதனால் மன்றப் பணிகளை வேகப்படுத்தும் நோக்குடன் 02.10.1988ல் கூடிய பொதுக்கூட்டத்தின்போது இரண்டாவது நிருவாக சபை தெரிவுசெய்யப்பட்டது.

புதிய நிருவாக சபைக்கு கலாசூரி இலக்கியச் செம்மல் மகாவித்துவான் F.X.C.நடராசா அவர்கள் தலைவராகவும், ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் செயலாளராகவும், திரு.கே.கார்த்திகேசு அவர்கள் பொருளாளராகவும் தெரிவானார்கள். இங்கே தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட கலாசூரி இலக்கியச் செம்மல் மகாவித்துவான் F.X.C.நடராசா அவர்கள் நாடறிந்த பெருமகன். பன்முக சிந்தனைகளும், பரந்துபட்ட சேவைநலன்களும் வாய்க்கப் பெற்றவர். ஒரு செயல் வீரர். இவரின் உள்ளம் கவர்ந்த மாணவர்களில் ஒருவரே செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள். இவரும் ஒரு செயல் வீரர். தன் குருநாதரின் வழித்தடங்களைப் பின்பற்றி வந்தவர். சமய சமூக சேவைகளில் ஆர்வம் மிகுந்தவர்.

செயல் வீரர்களான இவர்கள் மன்ற வரலாற்றில் முறையே தலைவர் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டமை மன்றத்தின் ஆரம்பகாலத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும் மேலும் முன்னேற்றப்பாதையில் மன்றத்தின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்கும் வரப்பிரசாதமாய் அமைந்திருந்தது. இந்தவகையில் மட்டக்களப்புத் தமிழகத்தில் புலவர்மணி

நினைவுப்பணிமன்றத்தின் வரலாற்றுத் தடங்களில் அதன் இரண்டாவது செயலாளராகவும், தீவிர செயற்பாட்டாளராகவும் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் முதன்மையும், முக்கியத்துவமும் பெறுகின்றார்.

இரண்டாவது நிர்வாக சபையினர் பல செயற்பாடுகளைச் செய்துமுடிப்பதென தீர்க்கமான முடிவுகளை எடுத்திருந்தார்கள். இதற்கேற்ப வாவிக்கரை ஓரமாக நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு அருகாமையில் மட்டு.போதனா வைத்தியசாலைக்குச் செல்லும் யாட் வீதிக்கு (இந்து இளைஞர் மன்றக் கட்டடத்துக்கு அருகாகச் செல்லும் வீதி) "புலவர்மணி வீதி" எனப் பெயர் சூட்டப்பட்டது. இவ்வைபவத்துக்கு திரு.அருணகிரிநாதர் அவர்கள் தலைமை தாங்கினார். யாட் வீதிக்கு "புலவர்மணி வீதி" எனப் பெயர் சூட்டப்பட்டமை மன்ற வரலாற்றில் முக்கியமானதொரு பதிவாகும். "வீதியொன்றுக்குப் புலவர்மணியின் பெயரைச் சூட்டவேண்டும்" என்னும் நல்லெண்ணத்தை மன்றத்தின் முதலாவது நிர்வாக சவையினர் மனதில் கொண்டிருந்த போதிலும் அதனைச் செயற்படுத்திய பெருமை மகாவித்துவான் F.X.C.நடராசா அவர்களைத் தலைவராகவும், ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களைச் செயலாளராகவும் கொண்டிருந்த இரண்டாவது நிர்வாக சபையினரையே சாரும்.

இதனோடு மாத்திரம் நின்றுவிடாமல் "புலவர்மணி வீதி" எனப் பெயர் சூட்டப்பட்ட யாட் வீதியில் அமைந்துள்ள முச்சந்தியில் புலவர்மணியின் முழு உருவச் சிலையை நிறுவுவதெனவும் இரண்டாவது சபை தீர்மானம் எடுத்திருந்தது. இதற்கேற்ப மட்டக்களப்பு மாநகர சபையிடமும், திருகோணமலையில் அமைந்திருந்த வடகிழக்கு மாகாண சபையிடமும் அனுமதி பெறப்பட்டு "புல்லுமலை நல்லரெட்ணம்" என்னும்

சிற்பாச்சாரியாரிடம் சிலைநிறுவும் பணி பொறுப்பாக்கப் பட்டிருந்தது. இந்நிலையில் நாட்டுக் கலவரங்கள் ஏற்பட்டதால் சிலைநிறுவும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்நிலமை குறிப்பாக மன்றத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரதும் மனத்திலே பெரியதொரு ஏக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. எனினும் 22.05.1994ல் தேசிய வீரர்கள் தினவெளியீடாக அரசாங்கம் முத்திரை வெளியிட்ட வேளையில் தேசிய வீரர்களுள் ஒருவராக புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை அவர்களையும் கணித்து 1.00/= (ஒரு ரூபா) பெறுமதியான முத்திரை வெளியிட்டிருந்தமை இவர்கள் மனத்திலே சந்தோசத்தை ஏற்படுத்தியிருந்தது.

“ஆசிரியர் சிரோமணி” அவர்கள் புலவர்மணி நினைவுப் பணி மன்றத்தின் செயலாளராகப் பணியாற்றிய வேளையிலே மன்றத்தின் ஆவணங்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் அந்நாளில் மட்டக்களப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பரிபாலனசபைத் தலைவராக இருந்த திரு.ஏ.எஸ்.மனோகரதாஸ் அவர்களிடமிருந்து இரும்பு அலுமாரி ஒன்று கேட்டுப் பெற்றுக் கொள்ளப்பட்டு ஆவணங்கள் பேணப்பட்டு வந்தமை முக்கியமானதொரு விடயமாகும்.

“ஆசிரியர் சிரோமணி” அவர்கள் தனது தனிப்பட்ட வாழ்விலும், பாடசாலை ஆசிரியத்துவ வாழ்விலும், சமயசமூக சேவை வாழ்விலும் எல்லாவிதமான ஆவணங்களையும் மிகவும் கவனமாகவும், புனிதமாகவும் பேணி வந்துள்ளதனை அவரது வாழ்க்கை நன்கு வெளிப்படுத்தி நிற்கின்றது. இதைத்தான் அவர் புலவர்மணி நினைவுப் பணிமன்றத்தில் செயலாளராகக் கடமையாற்றிய காலப்பகுதியிலும் செய்துள்ளார்.

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களின் புலவர்மணி நினைவுப் பணிமன்றப் பணிகளில் அடுத்து முக்கியத்துவம் பெறுவது அவர் அம்மன்றத்தின் உபசெயலாளராகவும், செயலாளராகவும் இருந்து பணியாற்றிய வேளைகளில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் இலக்கியப் படைப்புகள் சில வெளிவருவதற்குத் துணை செய்துள்ளமையாகும்.

அந்த வகையில் "புலவர்மணி கவிதைகள் - 1980", "உள்ளதும் நல்லதும் - 20.06.1982", "புலவர்மணியின் விபுலானந்தர் மீட்சிப்பத்து – 20.05.1990", "பாலைக்கலி – 02.11.1991" ஆகிய நூல்கள் வெளிவருவதற்கு வழிசமைத்துள்ளார். இத்தகைய தூரநோக்குடைய பணிகளைச் செய்வதற்கு மன்றத்தின் முதலாவது நிர்வாக சபையினர் உரிய திட்டங்களையும், தீர்மானங்களையும் எடுத்திருந்தபோதிலும் செயல் வடிவம் பெறவில்லை. ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் செயலாளராகவும், அவரது குருநாதர் கலாசூரி இலக்கியச் செம்மல் மகாவித்துவான் F.X.C.நடராசா அவர்கள் தலைவராகவும் இருந்து சேவையாற்றிய காலப்பகுதியிலே தான் இவை செயல் வடிவம் பெற்றிருக்கின்றன. இந்த வகையில் இவர்கள் செயல் வீரர்கள் என்பது புலனாகின்றது.

## 6.6 பிற பொதுப் பணிகள்

ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அவர்கள் பொதுப் பணிகள் செய்வதிலே பேர்பெற்ற ஒருவராகப் பிரகாசித்திருக்கின்றார். இவர் மேற்கூறிய சமய சமூக அமைப்புகளிலே சேர்ந்து பணியாற்றியதோடு மட்டும் நின்றுவிடவில்லை. மேலும் பல சங்கங்களிலே இணைந்து கொண்டு சேவையாற்றியிருக்கின்றார். அந்தவகையிலே அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய உறுப்பினராகவும், மட்டக்களப்பு

இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவோரின் மட்டுப்படுத்தப்பட்ட சேமநலச் சங்கச் செயலாளராகவும், மட்டக்களப்பு மாநகர தொலைபேசிப் பாவனையாளர் சங்கத் தலைவராகவும், மட்டக்களப்பு நிர்வாக மாவட்ட மட்டக்களப்பு மத்தியஸ்சகர்கள் குழு உறுப்பினராகவும் இருந்து சமூகத்துக்காகப் பொதுப் பணிகள் பலவற்றை ஆற்றியுள்ளார்.

இவ்வாறாக ஆசிரியர் சிரோமணி அவர்கள் சமய சமூகப் பொதுப்பணி வாழ்விலே பல்வேறு அமைப்புக்களிலே ஆரம்பகால உறுப்பினராகவும், தலைவராகவும், செயலாளராகவும், இணைப்பாளராகவும், போஷகராகவும் இருந்து பல்வகைத் தன்மையான பணிகளை ஆற்றியுள்ளார். இவை இவரது சமய சமூகப் பணிகள் பன்முகத் தன்மையும், அகலித்த தன்மையும், தூரநோக்கமும் கொண்டவை என்பதை நன்கு பிரதிபலித்துக் காட்டுகின்றன.

இவர் சிறந்த தலைமைத்துவத்தை உடையவர் என்பதற்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சமய சமூகப் பொதுப்பணி அமைப்புகளில் தலைவராக பணியாற்றியுள்ளதனைக் குறிப்பிடலாம். சிறந்ததொரு செயற்பாட்டாளர் என்பதற்கு இவர் பல அமைப்புகளிலே உப செயலாளராகவும், செயலாளராகவும் இருந்து பணியாற்றியுள்ளதனைக் குறிப்பிடலாம்.

## 07. தமிழ் இலக்கியப் பணிகள்

ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அவர்களின் பணிநிலை வாழ்விலே அவர் செய்த தமிழ் இலக்கியப் பணிகளும் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. 'மொழி ஓரினத்தின் விழி' எனப்போற்றப்படுகின்றது. ஒரு குடிமகன் தனது தாய்மொழியிலே அதிக பற்றுடையவனாக வாழவேண்டும். அதுமாத்திரமன்றி

அம்மொழிக்காக தன்னாலான சில சேவைகளையும் செய்ய வேண்டும். திரு.த.செல்வநாயகம் அவர்களைப் பொறுத்தமட்டில் இந்த இரண்டிலும் முக்கியத்துவம் பெறுகின்றார். தன் தாயை நேசித்தது போல் தமிழை நேசித்துள்ளார். இவர் தனது சேவைக் காலத்திலே கற்பித்த பிரதான பாடங்கள் தமிழும் சமயமும் தான். தமிழின் அருமைபெருமைகளை அறிந்தவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் பற்று உடையவர். அத்தகைய நூல்களை அவர் வாசிப்பதிலே தீவிர நாட்டத்தோடு செயற்பட்டு வந்திருக்கிறார்.

இவர் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாக்குழுவின் இலக்கியப் பணிக்குழுச் செயலாளராகவும், மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப்பேரவை இலக்கியப் பணிக்குழுத் தலைவராகவும், மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் போஷகராகவும் கடமைப் பொறுப்புகளைப் பெற்று தமிழுக்காகப் பலவித சேவைகளை ஆற்றியுள்ளார். எடுத்துக் காட்டாக சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாக்குழுவின் இலக்கியப் பணிக்குழுச் செயலாளராகப் பணியாற்றிய வேளையிலே "விபுலானந்த தரிசனம்" வெளிவர உதவியமையையும், இச்சபையின் வெளியீடுகளாக சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்கள் தொகுதி I, II, III, IV ஆகியவை வெளிவர உதவியமையையும், மட்டக்களப்பு மாவட்ட கலாச்சாரப்பேரவை இலக்கியப் பணிக்குழுத் தலைவராக இருந்து பணியாற்றிய வேளையில் மகாவித்துவான் F.X.C. நடராசா அவர்கள் ஆகஸ்ற் 1962ல் பதிப்பித்த மட்டக்களப்பு மான்மியம் எனும் நூலின் இரண்டாம் பதிப்பு நவம்பர் 1998ல் வெளிவரத் துணை செய்தமையையும் குறிப்பிட முடியும். இவற்றை விட அவரது தமிழ் இலக்கியப் பணிகளை பின்வருமாறு இவரை இனம் காண்பதன் மூலமாக அறிந்து கொள்ள முடியும்.

அ. நூலாசிரியர்.

ஆ. மலர்த் தொகுப்பாசிரியர்.

இ. இலக்கியப் படைப்புகள் வெளிவர உதவியவர்.

ஈ. இலக்கியப் படைப்புக்களில் கட்டுரையாளர்.

தமிழர்களுடைய சுயதிறன் திருப்திகளாக மூன்று திறன்கள் கூறப்படுகின்றன. அவையாவன, முதற்பிள்ளை ஆண்பிள்ளையாக பிறந்திருத்தல்; சொந்த உழைப்பில் வீடு கட்டி முடித்திருத்தல்; நூலொன்றை எழுதி வெளியிட்டிருத்தல்; என்பவையே அவையாகும். இந்த வகையில் ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அவர்கள் இரண்டு நிலமைகளில் நூலாசிரியராக முக்கியத்துவம் பெறுகின்றார். "இலக்கிய கலாநிதி இலக்கியச் செம்மல் கலாசூரி மகாவித்துவான் F.X.C.நடராசா வாழ்க்கை வரலாறு" இது இவரது தனிப்பட்ட சொந்த முயற்சியின் வெளிப்பாடாகும்.

தனது குருவின் வாழ்க்கை வரலாற்றை அவருடைய சம்மதத்தைப் பெற்று அவர் உயிரோடு இருக்கும் போதே எழுதி வெளியிட்டு மக்கள் மனங்களில் நீங்காத இடத்தைப் பெற்றிருந்தார். இது இவர் தனது வாழ்க்கையிலே செய்த சேவைகளில் எல்லாவற்றையும் விட உயர்ந்ததும், பெறுமதி கூடியதுமான ஒரு சேவையாகும். மகாவித்துவான் F.X.C.நடராசா அவர்கள் பன்முகப் படைப்பாளி; தேசம் நன்கு அறிந்த ஆசிரியப் பெருந்தகை; நமது குருநாதர் சிரோமணியாய், செம்மனச் செல்வராய், சமூக சாகரனாய் வாழ்விலே பலபடிகள் உயர்வதற்குக் காரணமானவர்களில் ஒருவர். அவர் மீது இவர் கொண்டிருந்த உயர்ந்த குருபக்தியின் வெளிப்பாடே இந்த நூல் எனலாம். ஒரு மாணவன் தன்குருவை மதித்துச் செயற்பட வேண்டும்; அவரது சேவைகளை மதிக்க வேண்டும் என்பதனை இந்நூலை எழுதி வெளியிட்டதன் மூலம் "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் எல்லோருக்கும் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.

இந்நூல் தொண்ணூற்றுமூன்று பக்கங்களைக் கொண்டதாக, மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவரினதும் (ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜீ மகராஜ்), திருமலை மட்டுநகர் மறைமாவட்ட ஆயரினதும் (கிங்ஸ்லி சுவாம்பிள்ளை), மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளரினதும் (திரு.ஏ.கே.பத்மநாதன்) அணிந்துரைகளுடன் 06.01.1993ல் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

"ஸ்ரீமத் சுவாமி விபுலானந்த ஜீ" என்பது சுவாமி விபுலானந்த அடிகளாரைப் பற்றிய ஒரு நூலாகும். இந்நூல் தனி ஒருவரின் படைப்பல்ல. இதற்கு மூவர் நூலாசிரியர்கள். அதில் ஒருவர் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள். அதாவது இந்நூலை மகாவித்துவான் F.X.C. நடராசா அவர்களும், கிழக்குப் பல்கலைக் கழக நூலகர் சாம்பசிவம் தவமணிதேவி அவர்களும், "ஆசிரியர் சிரோமணி" அவர்களும் சேர்ந்து வெளியிட்டுள்ளனர். ஆக, இந்த நூலின் நூலாசிரியர்களில் ஒருவர் என்ற பெருமையினையும் இவர் பெற்றுவிடுகின்றார்.

அடுத்ததாக பல மலர்களின் தொகுப்பாசிரியராக ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களைத் தரிசிக்க முடிகின்றது. அதாவது பல விழா மலர்களும், நினைவு மலர்களும் வெளிவரத் துணை செய்துள்ளார். அந்த வகையில் பின்வரும் மலர்களுக்கு தொகுப்பாசிரியராக இருந்து பணியாற்றியுள்ளார்.

"மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்ற வெள்ளி விழா மலர் - 1968 – 1993" (1994.04.30) "மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய பொன் விழா மலர் - 1945 – 1995" (1997.04.29) "மட்டக்களப்பு ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலய

நூற்றாண்டு விழா மலர் - 1896 – 1996" (1997.08.30) "சைவ சித்தாந்த சிரோமணி மயில்வாகனம் சிவநேசராசா அவர்கள் பற்றிய அறிமுகம், மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்" (1996.05.19) "அமரர் கங்கேஸ்வரி கந்தையா அவர்களின் நினைவு வெளியீடு" (1994.01.12) "அமரர் இளையதம்பி வடிவேலன் அவர்களின் நினைவு மலர்" (2001.06.26)

இலக்கியப் படைப்புகள் வெளிவர உதவியவர் என்ற வகையில் ஒரு வெளியீட்டாளராகவும் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் விளங்கியிருக்கின்றார். "விபுலானந்தர் மீட்சிப்பத்து" (மறுபதிப்பு, ஆசிரியர் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, வெளியீடு மட்டக்களப்பு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம், 1990.05.20) "பாலைக்கலி" (ஆசிரியர் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, வெளியீடு மட்டக்களப்பு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம், 1991.11.02) "விபுலானந்த தரிசனம்"(ஆசிரியர் திரு.வ.சிவசுப்பிரமணியம், B.A. வெளியீடு – மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபை, 1993.08.01) "அம்மை அப்பர்" (ஆசிரியர் சைவசித்தாந்த சிரோமணி திரு.ஏ.பாக்கியமூர்த்தி, ஓய்வு பெற்ற அதிபர்.)

அடுத்ததாக இலக்கியப்படைப்புகளில்/நினைவு மலர்களில் கட்டுரையாளராக இவர் முக்கியத்துவம் பெறுகின்றார். "இளைப்பாறிய அதிபர் கார்த்திகேசு" ('அமரர் கார்த்திகேசு மாஷ்டர் நினைவு மலர்', 23.05.1988, பக்கம் 10 – 11) "மறைந்த ஒளி பூரணேஸ்வரி" ('செல்வி. பூரணேஸ்வரி கார்த்திகேசு நினைவு மலர்' 23.07.1992, பக்கம் 8 – 9) "என் ஆசிரியர் பற்றி" ('அமரர் கந்தையனார் கருத்து மலர்' 23.05.1994) "அமரர் பொன்னையா பூபாலரெட்ணம் J.P" ('அமரர் பொன்னையா பூபாலரெட்ணம் J.P 31ம் நாள் நினைவஞ்சலி மலர்' 04.06.1998)

"காணாதன கண்டேன்" ('அமரர் பிரம்ம ஸ்ரீ இராமலிங்கக் குருக்கள் அவர்களின் நினைவு மலர்' 28.06.2000, பக்கம் 6 – 7) "எது உனக்கு விதிக்கப்பட்டுள்ளதோ அது நடக்கும்" ('அமரர் அருளம்பலம் சிவஞானம் நினைவு மலர்' 31.03.2002 பக்கம் 22) "சைவ சித்தாந்த சிரோமணி மயில்வாகனம் சிவநேசராசா அவர்கள் பற்றிய அறிமுகம்" ('சிவநேசம் நினைவு மலர்' 03.08.2002, பக்கம் 9 – 12) "இதயத்திலிருந்து சில துளிகள்" ('அமரர் நல்லூர்ப் பண்டிதர் திரு.சு.இராசையா அவர்கள் பற்றிய நினைவு மலர்' 2003, பக்கம் 34)

"மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை வரலாறு" ('சிறப்பு விழா மலர்'- ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, 1953, பக்கம் 1 – 5) "விநாயகர் வழிபாடு" ('திருப்பணி மலர்' மட்/கோட்டைமுனை அரசடிப்பிள்ளையார் ஆலயம், 1993) "சமய வாழ்வு" ('மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்ற வெள்ளி விழா மலர்' 30.04.1994) "மட்டக்களப்பு நரசிங்க வைரவர் சுவாமி ஆலயம்" ('வைரவ மான்மியம்' 1995, பக்கம் 59 – 69) "புலவர்மணி வாழ்க்கை தரும் செய்தி" ('இலக்கிய கலாநிதி புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை நூற்றாண்டு நினைவு மலர்' 07.02.1999, பக்கம் 23 – 27) "தமிழால் உயர்ந்தோர்" ('முத்திரையிற் பண்டிதமணி' பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை, உரும்பராய், 04.12.1999, பக்கம் 54 – 55) "நல்ல மனம் வாழ்க நாடு போற்ற வாழ்க" ('ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் பாராட்டு விழா மலர்', உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம், 28.10.2001, பக்கம் 6– 7) "சுவாமிஜீயின் கண்டிப்பான உத்தரவு" ('இராமகிருஷ்ணமிஷன் மாணவர் இல்லப் பவளவிழா மலர்', 07.06.2001, நேர்காணல் திரு.பா.வேலுப்பிள்ளை ஜே.பி.உடன்) "அரசினர் கல்லூரி" ('மட்டக்களப்பு அரசினர் கல்லூரி பழைய மாணவர் சங்கம்-கனடா, வருடாந்த ஒன்றுகூடல் மலர்', 19.05.2001, பக்கம் 03) "மட்டக்களப்பில்

இந்துமக்கள் எதிர்கொள்ளும் இடர்களும் வேண்டப்படும் தீர்வுகளும்" ('மட்டக்களப்பு இந்துசமய அபிவிருத்திச்சங்க பொன்விழாச் சிறப்பு மலர்', 31.08.2002) "கம்பன் கழக விருது பெற்ற மகாவித்துவான் எவ்.எக்ஸ்.சி." ('விடிவானம்') "சைவசித்தாந்த சிரோமணி மயில்வாகனம் சிவநேசராசா" ('தினக்கதிர்' பத்திரிகை, 03.08.2002) "சான்றோர் கேண்மை சைவசித்தாந்த சிரோமணி மயில்வாகனம் சிவநேசராசா" ('வீரகேசரி'ப் பத்திரிகை, 04.07.2003)

இவ்வாறாக ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களின் தமிழ் இலக்கிய ஆர்வமும், அவைசார்ந்த பணிகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. இவரது எழுத்தாக்கங்கள் அனைத்தும் எல்லோருக்கும் விளங்கத்தக்கதாக இலகுவான மொழி நடையிலே அமைந்திருக்கின்றன. சொற்பிரயோகங்கள் ஒவ்வொன்றும் அழுத்தம் கூடியவைகளாகக் காணப்படுகின்றன. இறந்தவர்களின் அருமை பெருமைகளைப் பற்றிய உள்ளக்கிடக்கைகளை இவர், நினைவு மலர்களுக்காக எழுதிய கட்டுரைகள் புலப்படுத்தி நிற்கின்றன. இவரது எழுத்துப்பணி சற்று நீண்ட வீச்சையும் கொண்டிருந்தது என்பதை 'தினக்கதிர்', 'வீரகேசரி', முதலான பத்திரிகைகளுக்கு இவர் எழுதிய ஆக்கங்கள் தெளிவு படுத்தியுள்ளன.

## 08. வெளிநாட்டுப் பயண அனுபவங்கள்

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களின் மூத்தமகன் சசிதரன் அவர்கள் கனடாவில் ரொறன்ரோ (TORANTO) என்னும் இடத்திலும் இளையமகன் ஸ்ரீகாந்தன் அவர்கள் இலண்டனில் பின்ஸ்லி (FINCHLEY) என்னும் இடத்திலும் தத்தமது குடும்பத்துடன் வசித்துவந்த காரணத்தினால் தந்தையாரை அங்கு வரும்படி அழைத்து சகல ஏற்பாடுகளையும் செய்து அனுப்பியிருந்தார்கள். இதனால் இவர்

அங்கெல்லாம் சென்று பல்வேறுபட்ட அனுபவ நுகர்ச்சிகளையும், அதிசயங்களையும் வாழ்க்கையிலே கண்டுணரக் கிடைத்தமை வரப்பிரசாதம் எனலாம்.

இதன்படி இவர் 02.08.2000ம் ஆண்டு புதன்கிழமை பகல் 12.30க்குப் புறப்படும் 503ம் இலக்க விமானத்தில் 11 C இலக்க இருக்கைக்கான வீசா முதலியவற்றுடன் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தைச் சென்றடைந்தார். உரியவிமானம் குறிப்பிட்ட நேரம் புறப்படவில்லை. பிற்பகல் மூன்று மணிக்குப் புறப்பட்ட அவ்விமானம் இலண்டனைச் சென்றடைந்தபோது கனடா செல்லும் இணைப்பு விமானம் சென்றுவிட்டது. இங்கிருந்து தான் சென்ற விமானத்திலிருந்து பொதிகளை இறக்கிக் கொண்டு எயார் லங்கா காரியாலயத்தில் இதைப் பற்றி அறிவித்தார். அவர்கள் "நாளை வேறுவிமானம் ஒழுங்குசெய்து தருவதாக இவரிடம் கூறினார்கள். அவர்கள் இவரையும் இன்னும் சிலரையும் அங்கிருந்து கூட்டிச் சென்று அன்றிரவு RENAISSANCE LONDON HEATHROW HOTELல் 3071ம் இலக்க அறையில் சேர்த்துவிட்டார்கள்.

அது ஒரு ஐந்து நட்சத்திரக் ஹோட்டல். அங்கிருந்து தொலைபேசியில் இலண்டனில் வசிக்கும் 'சிறி' மகனுடன் கதைத்தார். அதன்மூலம் கனடாவில் வசிக்கும் 'சசி' மகனுக்கும் பயணம் தாமதமாகியதன் காரணத்தை அறிவித்தார். அன்றிரவு தங்கிய அறை நல்ல வசதியான அறையாக இருந்தது. உணவு, குளிப்பு, படுக்கை என்பன பிரமாதமாக இருந்தன. இருந்தும் உறக்கம் சரியாக வரவில்லை. வழமைபோல் அதிகாலை நான்கு மணிக்கு விழித்து மீண்டும் 'சிறி' மகனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டார். அவர் காலை ஆறு மணிக்குத் தந்தையாரை வந்து சந்தித்தார். மகன் தந்தையாரை அங்கிருந்து

அழைத்துச் சென்று குறிப்பிட்ட விமான நிலையத்தில் கனடாவுக்கான விமானத்தில் 10 C இலக்கமுடைய இருக்கையில் ஏற்றி வழியனுப்பி வைத்துவிட்டு தனது இருப்பிடத்துக்குத் திரும்பிச் சென்றார்.

கொழும்பிலிருந்து இலண்டனுக்கு வந்த விமானத்தைவிட இந்தவிமானம் மிகவும் வசதிகளை உடையதாக இருந்தது. அதிலே, தான் இருப்பது முதலாம் வகுப்பு இருக்கை என அறிந்து கொண்டார். அதில் ஒவ்வொரு பிரயாணிக்கும் அன்பளிப்புப் பொருள்களும் வழங்கப்பட்டன. கனடா நேரப்படி இந்த விமானம் 3.30 மணியளவில் அங்குள்ள விமான நிலையத்தைச் சென்றடைந்தது. தனது வீட்டிலிருந்து மூத்தமகன் சசிதரன் தனது பிள்ளைகளுடன் தந்தையாரை அழைத்துச் செல்ல வந்திருந்தார். 'சசி' மகனின் வீடு ரொறன்ரோவில் (TORANTO) ஒன்ராறியோ (ONTARIO) நகரில் BIRCHMOUNT ROAD ல் அமைந்துள்ள 570ம் வீட்டுத் தொடரில் 8ம் மாடியில் உள்ள 12ம் இலக்க வீடாகும். இவர் சென்ற செய்தி அங்கே வசிக்கின்ற உறவினர்களுக்கு மகன் மூலமாக அறிவிக்கப்பட்டது. அவர்கள் தொலைபேசி மூலமும், நேரில் வந்தும் பெரும் மனமகிழ்வுடன் கலந்துரையாடினார்கள்.

## 8.1 கனடாவில் பெற்ற அனுபவங்கள்

கனடா ஒரு கூட்டரசாகும். அங்கே 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு வாக்குரிமை உண்டு. மாகாண நாடாளுமன்றம் மூலமாக நகராட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். வயோதிபகால பாதுகாப்பு ஓய்வூதியம் 65 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் வழங்கப்படும். கனடா உள்நாட்டில் இலவச தொலைபேசி வசதிகள் உண்டு. கனடாவிலே வாகனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஒரே ஒழுங்குவரிசையில்; ஒரேவேகத்தில் செல்லும். ஒவ்வொரு வீட்டுக்கும்

குறைந்தது இருகார்கள் வீதம் இருக்கும். ஒரு குடும்பத்திலுள்ள கணவன், மனைவி, பிள்ளைகள் எல்லோருமே உழைப்பவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் ஒருமித்து உணவு உண்பது ஓய்வு நாளான ஞாயிற்றுக் கிழமைகளில் மாத்திரம் தான். ஒவ்வொருவருடைய வேலை நேரங்களும் வித்தியாசம் வித்தியாசமாக அமைந்திருக்கும். அங்குள்ள நம்மவர்கள் அதாவது தமிழர்கள் வீடுகளுக்கு NEWS PAPERS போடுதல் தொடக்கம் பல்வேறு தொழில்களிலும் ஈடுபடுகின்றார்கள். கனடாவில் காரியாலயங்களில் எந்தவொரு ஊழியரும் தமது மேலதிகாரியை "SIR" போட்டுக்கதைப்பதில்லை. பெயரைக் குறிப்பிட்டே அழைப்பார்கள். பதவிகள் "GRADE 1" என்பது குறைந்த பதவியைக்குறிக்கும். "GRADE 2", "GRADE 3" என்பவை கூடிய பதவிகளைக் குறிக்கும். அங்கே மனித உரிமைகள் சரியாகப் பேணப்படுகின்றன. வேலைத்தளத்தில் எல்லோரும் கனடியர்களாகவே கணிக்கப்படுவார்கள். 18 வயது தொடக்கம் 64 வயது வரை வேலை செய்யலாம். பால், நிறம், சமயம், இலங்கையன், இந்தியன் என்ற பாகுபாடுகள் எதுவுமே வேலைத்தளத்தில் கிடையாது.

ஒன்ராறியோவிலே (ONTARIO) அழகானதொரு ஏரியுண்டு. அதிலே சிறிய, பெரிய கப்பல்கள் செல்லும். கப்பல் செல்லும் வழியின் குறுக்கே ஏரியைக் கடப்பதற்கான வீதிகளும், மிதக்கும் பாலங்களும் அமைந்திருக்கின்றன. கப்பல்கள் செல்லும் பொழுது இவை தாமாகவே உயர்ந்து வழிவிடும். கப்பல்கள் சென்று முடிந்ததும் பழையபடி பாலங்கள் வீதியுடன் இணைபடும். அதுவரை இருகரையிலும் தரித்து நின்ற வாகனங்கள் தமது பயணத்தைத் தொடரும். இப்பாலங்களை மிதக்கும் பாலங்கள் என்பர். இதே போன்று 'சசி' வீட்டிலிருந்து பார்க்கும் போது அங்குள்ள விமான நிலையத்திலிருந்து விமானங்கள் வருவதும் போவதும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

அங்கே ஒரு பிரமாண்டமான வாசிகசாலை உள்ளது. (இதற்கு 05.08.2000 சனி காலை பத்து மணிக்குப் பேரப் பிள்ளைகளுடன் சென்றிருந்தார்) அதன் பெயர் "ஸ்காபரோ அல்பேர்ட் கம்பெல் டிஸ்றிக் வாசிகசாலை" என்பதாகும். அங்கு அரபிக், ஜேர்மன், பிரான்ஸ், ஆங்கிலம் முதலான மொழிகளில் உள்ள புத்தகங்களுடன் தமிழ்ப் புத்தகங்களும் காணப்படுகின்றன. தமிழில் பெரியபுராணம் தொடக்கம் கல்கியினுடைய 'பொன்னியின் செல்வன்' ஈறாக திருக்குறள், பாரதியார் கவிதைகள் முதலியனவும், அண்ணாத்துரை எழுதிய புத்தகங்கள், கவிஞர் அம்பி கவிதைத் தொகுதிகள், தென்னாலிராமன் கதை, விக்கிரமாதித்தன் கதை என்பனவும் காணப்படுகின்றன.

அந்த வாசிகசாலையிலே படிப்பதற்கு, ஆராச்சி செய்வதற்கு எனத் தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வாசிகசாலையில் அங்கத்தவர்களாக உள்ளவர்களுக்கு பல சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு அங்கத்துவ அட்டைக்கு மூன்று வாரங்களுக்கு நூறு புத்தகங்கள் எடுக்கலாம். இந்த வாசிகசாலையில் இல்லாத புத்தகங்கள் எமக்குத் தேவைப்படின் வேறு வாசிக சாலையிலிருந்து தருவித்து உதவுவார்கள். மாணவர்களினதும், முதியோர்களினதும், இளைஞர்களினதும் அறிவுப்பசி இங்கே தீர்க்கப் படுகின்றது.

கனடாவிலே உலகப் பிரசித்தி பெற்ற நீர்வீழ்ச்சிகளுள் ஒன்றான நயகரா நீர்வீழ்ச்சி உண்டு. இந்நயகரா நீர்வீழ்ச்சி கனடா, அமெரிக்கா எல்லையாக அமைந்திருக்கிறது. கனடாப் பக்கத்திலிருந்து பார்ப்பதற்குத் தான் அதன் அழகும், ரம்மியமும் அதிகமாகத் தெரியும். இந்தப் பரந்த நீர்வீழ்ச்சி குதிரைலாடன் வடிவில் காணப்படுகின்றது. வானவில் அப்பகுதியிலே எப்போதும் தோன்றும். இதனால் பக்கத்திலே உள்ள

பாலம் "வானவில் பாலம்" என அழைக்கப்படுகின்றது. அந்த நீர்வீழ்சியிலே படகோட்டமும் நடைபெறும். இரவு ஒன்பது மணிக்கு அங்கே வர்ண விளக்குகள் போடப்படும். அப்போது அப்பகுதி மேலும் அழகாகத் தெரியும். அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை ரொறன்ரோவில் உள்ள கனடா கந்தசுவாமி கோவிலுக்குச் சென்றிருந்தார்.

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் அங்குள்ள அருங்காட்சியகத்தைப் பார்ப்பதற்கும் தவறவில்லை. பத்துமணிக்கு பஸ்வண்டி மூலம் பயணத்தை ஆரம்பித்து நிலத்தில் மேலும் கீழும் ஓடும் மின்சார ரயில் வண்டி மூலம் அதனைச் சென்றடைந்தார். பல நூதன, புராதன பொருட்கள் அங்கே காணப்பட்டன. அவைபற்றிய விளக்கங்கள் வீடியோக் காட்சிகள் மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும் இடம் பெறுகின்றன. அங்குள்ள சிற்றுண்டிச்சாலையில் மதிய உணவினை உண்டபின் ஒன்ராறியோ பாராளுமன்றக் கட்டடத்துக்குச் சென்றிருந்தார். மிகப் பிரமாண்டமான கட்டடம் அது. புராதன கட்டட, சிற்ப முறைப்படி அமைக்கப்பட்டிருந்தது. அதிலே பிரித்தானிய நாட்டுத் தேசியக்கொடி, கனடா நாட்டுத் தேசியக்கொடி, ஒன்ராறியோ மாகாணக் கொடி என்பன பறந்து கொண்டிருந்தன.

கனடாவிலே தமிழர் கடைகள் இருக்கின்றன. அவை "நகரத்து விருந்து" என அழைக்கப்படுகின்றன. நாவிதன் வெளியைச் சேர்ந்த ஒருவரால் அது அப்போது நடத்தப்பட்டுக்கொண்டிருந்தது. பூக்கடைகள், நகைக் கடைகள் முதலான தமிழர்களால் நடத்தப்படும் கடைகளும் இருக்கின்றன. அங்கே ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் இருந்த வேளை பாதர் போல அவர்கள் கனடா வந்திருந்தார். அவருடைய வருகையைப் பிரயோசனப்படுத்தி "VEDS" சினுடைய தாய்ச் சங்க உறுப்பினருடன் ஒரு கலந்துரையாடலை நடத்தினார்கள்.

"VEDS" மூலமாக மேற்கொண்ட நடவடிக்கைகளை அவர்களுக்கு விளக்கினார்கள்.

வீட்டில் இருக்கின்ற வேளைகளில் தொலைக்காட்சியில் படங்கள் பார்ப்பதும், தொலைபேசியில் கதைப்பதும் தான் இவருடைய பொழுதுபோக்காக அமைந்திருந்தது. அங்குள்ள மருமகள் படிக்கும் தொழில்நுட்பக் கல்லூரிக்கும் சென்றிருந்தார். விதவிதமான பயிற்சிநெறிகளுடன் கூடிய பிரமாண்டமான கல்லூரி அது. ஐந்து மாடிகளை உடையது. 2000க்கும் மேற்பட்ட அறைகள் இருந்தன. கனடாவில் அங்குள்ள வீதிகளில் மின் திருத்தம் நடைபெறும் வேளைகளில் எந்தக் காரணம் கொண்டும் மின்தடை ஏற்படுத்தப்படுவதில்லை. தடை ஏற்படுமானால் மின்சாரத் திணைக்கள அதிகாரி அல்லது வேலைக்குப் பொறுப்பான அதிகாரி விளக்கம் கூறவேண்டும்.

பொதுமக்களுக்கு மாத்திரமன்றி பிராணிகளுக்குக் கூட உயர் மதிப்புக் கொடுக்கின்ற மக்களை "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் கனடாவிலே கண்டார். ஒருநாள் நாற்சந்தியான வீதியைக் கடக்கின்ற போது ஒரு தாராக் கூட்டம்; குறைந்தது ஒரு இருபது இருக்கலாம்; அழகாக அசைந்து அசைந்து வீதியைக் கடந்து சென்று கொண்டிருந்தன. வீதியின் நாலா திசைகளிலிருந்தும் வந்த வாகனங்கள் அவை கடந்து செல்லும் வரைக்கும் நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டு இவர் வியப்புக்குள்ளானார். நமது நாட்டில் என்றால் 'கோண்' பண்ணியே அவற்றைக் கலைத்துவிடுவார்கள்.

அங்கே தமிழ் மொழியிலே பல பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. உலகத் தமிழோசை, முழக்கம், உதயன், நம்நாடு

முதலான பல வார வெளியீடுகள் உள்ளன. அந்நாட்டுக் கவிஞர்கள் பலவகையிலும் பிரசித்தி பெற்றுள்ளார்கள். கல்முனையைச் சேர்ந்த வித்துவான் க.ஞானரெட்ணம் "கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்" என்னும் ஒலிபரப்பு நிலையத்தில் "வைகறை வானம்" எனும் தலைப்பில் ஒரு நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தார்.

அவ்வொலிபரப்பு நிலையத்துக்கு சமுகமளித்த "ஆசிரியர் சிரோமணி" அவர்களிடம் விபுலானந்தர் கல்வி அபிவிருத்திச் சங்கம் (VEDS), இராமகிருஷ்ண மிஷன் முதலான தலைப்புகளில் இவரை ஒலிப்பதிவு செய்ய வருமாறு அவர் கேட்டுக் கொண்டார். இவரும் அதனை பெருமகிழ்வோடும், தனக்குக் கிடைத்த அரியதொரு சந்தர்ப்பமாகவும் ஏற்றுக் கொண்டு அத்தலைப்புகளில ஒலிபரப்புச் செய்தார். சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபை பற்றியும அதிலே ஒலிபரப்பப்பட்டன.

"ஆசிரியர் சிரோமணி" அவர்கள் அங்கிருந்த காலத்தில் "கலாபம் ரீ.வி சிலோண்" என்னும் நிலையத்துக்கு ஒரு ஒளிப்பதிவுக்காக மகனுடன் சென்றிருந்தார். மகாவித்துவான் F.X.C.ஐயா பற்றி தான் எழுதிய நூலை ஆதாரம் காட்டி பத்து நிமிட ஒளிபரப்புக்கான பதிவு நடைபெற்றது. தனது வாழ்நாளில் ஒளிபரப்பு நிலையத்தில் "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் தோன்றிய அரிய சந்தர்ப்பம் இதுவாகும். இந்நிலையத்தின் உரிமையாளர் திரு.ஸ்ரீனிவாசன் அவர்களாவார். இவருடன் கலந்துரையாடியவர் திரு.பாலச்சந்திரன் அவர்களாவார்.

இன்னொருநாள் வித்துவான் க.ஞானரெட்ணம் அவர்களுடன் சி.ரி.வி.சி.ஒலிபரப்பு நிலையத்துக்குச் சென்று சில ஒலிப்பதிவுகளைச் செய்தார். "வைகறை வானம்" என்னும் நிகழ்ச்சிக்காக

இவ்வொலிப்பதிவுகள் செய்யப்பட்டன. மட்டக்களப்பு நாட்டுக் கூத்து, திருமணச் சம்பிரதாயங்கள், மட்டக்களப்பு நாட்டுப் புலவர் வரிசை என்பன அவையாகும். இவை மறுநாளே ஒலிபரப்புச் செய்யப்பட்டன. ஒருநாள் இவரும், மகனும், பேரப்பிள்ளை அஜனியுடன் ஒன்ராறியோ விஞ்ஞான நிலையம் சென்றிருந்தார்கள். அன்று 10 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை பார்வையிட்டார்கள். அமெரிக்கா போன்ற பிற நாடுகளில் இருந்தும் இதனைப் பார்ப்பதற்காக மக்கள் வருவார்களாம். மேல் அறை மாடிகளான நான்கு மாடிகள் அங்கே இருந்தன. ஒவ்வொரு மாடியிலும் விஞ்ஞான கூடங்கள் காணப்பட்டன. கோள்கள் பற்றிய விளக்கங்களெல்லாம் அங்கே தெளிவாக உண்டு. "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் தனது இதயத் துடிப்பை அங்கே பார்த்தார் 72க்கும் 80க்கும் இடையே சராசரியாக இருந்தது. இங்கே ஒரு மனிதன் இறந்த பின் சவப் பெட்டியில் பெறும் அனுபவம் வரை தெரிந்து கொள்ளலாம். பலவிதமான விஞ்ஞான வினோதங்கள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் பற்றிய விபரங்களையெல்லாம் அங்கே காணலாம். அவற்றைக் கண்டுபிடித்த காலம், கண்டுபிடித்தவர் பெயர், ஒலியின் வேகம் முதலான விபரங்களும் அங்குண்டு.

மேலும் வானமண்டலக் காட்சியை தத்ரூபமாக படுத்திருந்து பார்த்த அனுபவம், ஒளியின் வேகம், பவன அமுக்கம், பூமிச் சுழற்சியினால் ஏற்படும் மாற்றம் என்பனவற்றைப் பற்றியும் அங்கே அறிய முடிந்தது. இளம் பருவத்தையும் இன்னும் ஐம்பது வருடங்களின் பின்னர் தோன்றும் படத்தையும் காட்டும் போட்டோக் கருவியும் அங்கே காணப்பட்டன. அவை இரண்டிலும் "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் தனது எதிர்கால உருவங்களைப் பார்த்துத் தெரிந்து கொண்டார்.

கனடாவில் உண்மையில் பார்க்க வேண்டிய இன்னொரு அதிசயம் தான் C.N.டவர் என அழைக்கப்படும் கோபுரம். நிலமட்டத்தில் இருந்து 116 மாடிகளின் பின் தெரிவது முதலாவது தரிப்பிடம். அங்கு கடைகள், களியாட்டப் பொருள்கள் சுற்றிவரக் காணப்படுகின்றன. அதில் ஓரிடத்தில் கண்ணாடி பதிக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் நிலமட்டத்தைப் பார்க்கக்கூடியவாறு உறுதிமிக்க தடித்ததொரு கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளது. அக்கண்ணாடியின் மேல் ஒருவர் மாத்திரமல்ல பலர் ஏறிக் குதிக்கலாம். பயம் கொண்டோர் ஏறுவதில்லை. "இக்கண்ணாடியின்மேல் ஒன்பது யானைகள் ஏறினாலும் உடையாது" என அங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கண்ணாடியின் கனதியும், உறுதியும் அத்தகையது. அதிலிருந்து 147 மாடிகளுக்கு அப்பால் 1465 அடி உயரத்தில் இரண்டாவது தரிப்பிடத்தைக் காணலாம். அதிலிருந்து பார்த்தால் ரொறன்ரோ நகரம் முழுவதுமே தெரியும். விமானத்தில் இருந்து பார்ப்பதுபோல் மிகவும் ரம்மியமாகத் தோன்றும். C.N.கோபுரத்தின் ஓரிடத்தில் சுழலும் உணவகம் இருக்கிறது. உணவுகள் சரியான விலை. இக்கோபுரத்தின் நுனிப்பகுதியில் மின்சார சாதனப் பொருட்கள் பொருத்தப்பட்டுள்ளதால் மின்சார ஊழியர்களைத் தவிர வேறெவரும் அப்பகுதிக்குச் செல்வதில்லை. இதற்கு அனுமதிக் கட்டணம் உண்டு. அதனை இருவர் பார்ப்பதற்கு 44 சிலின் 26 சதம் கட்டவேண்டும்.

கனடிய வாசிகளுக்கு இலவச மருத்துவ வசதிகள் உண்டு. ரொறன்ரோவில் சுமார் இரண்டுலெட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். (அப்போது)! அங்குள்ள ஒருவர் தனது நிலைப்பாட்டை "ஆசிரியர் சிரோமணி" அவர்களிடம் பின்வருமாறு விபரித்திருந்தார். "ஐயா எங்களுடைய நிலை மிகப் பரிதாபம். இராப்பகல் ஓட்டம். குழந்தை குட்டிகளுடன் சாப்பிடும் நாள், உறங்கும் நாள் மிகக் குறைவு.

குடும்பத்தில் உள்ள எல்லோரும் வேலை செய்யவேண்டும். என்ன வேலை செய்யினும் மனதில் நிம்மதி இல்லை. எமது நாட்டில் நாம் பெற்ற அன்பு அமைதி கிடைக்குமா? என ஏங்குகிறோம். வந்துவிட்டோம் வாழ்ந்துதான் ஆகவேண்டியுள்ளது. பிறருக்காக நாம் அல்லும் பகலும் உழைக்கிறோம். கனடியக் கோடீஸ்வரர்கள் நமது சக்தியை உறிஞ்சி எடுக்கிறார்கள்." என ஏக்கப்பெருமூச்சோடு கூறினார் அவர். இதுவே பலரின் அபிப்பிராயமும், வாழ்க்கை முறையுமாகும்.

"ஆசிரியர் சிரோமணி" அவர்கள் ஒருநாள் "லிங்கன்" என்று அழைக்கப்படும் அமிர்தலிங்கத்துடன் உலகத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கீதவாணி ஒலிபரப்பு நிலையத்துக்குச் சென்றிருந்தார். கீதவாணி அதிபர் திரு.ராஜ்குமார் அவர்களுடன் களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த திரு.பாலகிருஷ்ணமூர்த்தியும் பங்காளர். அறிவிப்பாளர் திரு.கணபதி ரவீந்திரன் அவர்களுடன் சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லம் பற்றி ஒரு நேர்முக உரையாடலை நடத்தியிருந்தார். அரைமணித்தியாலத்துக்கு மேலாகத் தொடர்ந்த இந்த உரையாடல் சிறப்பாக அமைந்தது. உரையாடலில் கனடா வந்திருந்த மலேசிய எழுத்துலக 'சரஸ்வதி அரிகிஷ்ணன்' தம்பதியினர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இதனையிட்டுப் பாராட்டினார்கள். மலேசியாவில் சுவாமி விபுலானந்தரின் பெயர் சூட்டப்பட்ட மண்டபத்தில் தாம் படித்த ஞாபகத்தை வெளிப்படுத்தி மகிழ்ச்சியடைந்தார்கள். இக்கலந்துரையாடலுக்கு வழிவகை செய்த 'லிங்கன் நடராசா' அவர்களுக்கும், உரையாடிய கணபதி ரவீந்திரன் அவர்களுக்கும், நிலைய உரிமையாளருக்கும், கனடாவில் வசிக்கும் அன்புள்ளங்களுக்கும் உரையாடலின் முடிவில் மனமார்ந்த நன்றிகளைக் கூறி விடைபெற்றார்.

அங்குள்ள தமிழ்ப் பத்திரிகைகள் எல்லாம் இவரது வருகையைப் பாராட்டியும், பாராட்டு விழாச் செய்திகளைப் பிரசுரித்தும் செய்திகளைப் பெருமைப்படுத்தி வெளியிட்டிருந்தன. தமிழ் மொழியில் பல செய்தித் தாள்கள் உள்ளன. ஈழநாடு, முழக்கம், நம்நாடு, தமிழ்க் காடியன், செந்தாமரை, உதயன், 'உலகத் தமிழர்' என இன்னுமின்னும் பலவுண்டு. சர்வதேச தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 24 மணிநேரமும் இயங்குகிறது. உலகத் தமிழ் வானொலி கீதவாணி, கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் எனப் பல ஒலிபரப்புக் கூட்டுத் தாபனங்களும் உள்ளன.

கனடாவில் இருந்த வேளையில் உறவினர்கள், நண்பர்கள், மாணவர்கள் முதலானவர்களைக் கண்டுகளித்தார். இதற்கிடையில் இவர் பத்திரிகைகளில் வெளியிட்ட சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லம் பற்றிய விளம்பரங்கள், வேண்டுகோள்கள் ஒலிபரப்பு நிகழ்ச்சியில் ஒலிபரப்பிய செய்திகள் என்பன மக்களிடையே பரவியிருந்த காரணத்தினால் சென்ற இடமெல்லாம் அதைப்பற்றி விசாரித்து தங்களால் இயன்ற நன்கொடைகளை அன்பளிப்புச் செய்தார்கள். பிறிதொரு நாட் காலை "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் 'டி.பி.' என்றழைக்கப்படும் திரு.டி.பூபாலபிள்ளை என்பவரின் வீட்டுக்குச் சென்றிருந்தார். கனடாவில் "மட்டக்களப்பு சமூகம்" என்றொரு அமைப்பு இயங்குகின்றது. மட்டக்களப்பில் இருந்து வரும் கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வையும் செய்து வருகிறது. இவர் அங்கு சென்றிருந்த போது பிரபல எழுத்தாளர் 'எஸ்.பொ.' எனஅழைக்கப்படும் திரு.எஸ்.பொன்னுத்துரை அவர்களும் சமுகமளித்திருந்தார். இவ்வைபவம் "கிராமத்து விருந்து" என அழைக்கப்படும் உணவு விடுதியில் 09.04.2000 ஆண்டு பிற்பகல் 5.00 மணிக்கு ஆரம்பமாகியது. இவ்வைபவத்தில் ஏறக்குறைய

ரொறன்ரோ நகரில் வாழ்கின்ற மட்டக்களப்பு மக்கள் பலரும் சமுகம் தந்து இருவரையும் பாராட்டினார்கள். "கிராமத்து விருந்து" உணவகத்தின் பின்புறமாக அமைந்த மைதானத்தில் புல் வெளியில் இவ்வைபவம் இடம்பெற்றது. இவ் வைபவத்தில் ஆசிரியர் சிரோமணிக்கு **"சமூகசாகரன்"** பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

கனடிய மட்டக்களப்பு சமூகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு; தாய்மண்ணின் கலை கலாசார விழுமியங்களைப் பேணுதல். தாயக எழுத்தாளர்களையும் அவர்கள்தம் படைப்புக்களையும் வெளிக் கொணர்தல். இளைய எழுத்தாளர்களை ஊக்குவித்தல். பெரியோர்களைக் கௌரவித்தல். வளரும் மண்ணில் ஒன்றுகூடல் கலந்துரையாடல்களை ஏற்படுத்துதல். ஆக்கங்களை வெளியிடுதல். தாயகத்திலிருந்துவரும் அறிஞர்கள், பெரியோர்களைக் கௌரவித்தல். கலை விழாக்களை ஏற்பாடு செய்து மேடை ஏற்றல். கூத்து மற்றும் கிராமிய நாடகக் கலைஞர்களை வரவழைத்து நிகழ்ச்சிகளை நடத்துதல். "பிறந்த மண்ணில் புகழ்பரப்ப வளரும் மண்ணில் கரம் கோர்ப்போம்" எனும் இலக்கினை நோக்காகக் கொண்டு கனடிய மட்டக்களப்பு சமூகம் இயங்குகின்றது.

இவ்விழாவின் அடுத்தநாள் வெளிவந்த "உதயன்" பத்திரிகையின் 28ம் பக்கத்தில் "இரண்டு அறிஞர்களுக்கு மட்டக்களப்பு சங்கம் அளித்த பாராட்டு" என்னும் தலைப்பிலும், தமிழர் பத்திரிகையில் (07.09.2000) "புலம் பெயர்ந்த நாடுகளில் நாம் பரதேசிகளாக வாழ்கின்றோம்" என்ற தலைப்பிலும் முழுப்பக்கச் செய்திகள் வெளிவந்தன. முக்கியமாக இந்தப் பாராட்டு வைபவத்துடன் "ஆசிரியர் சிரோமணி" அவர்களின் கனடா விஜயம் நிறைவுறுகிறது எனலாம். 16.09.2000 அன்று சனி காலை நமது நாட்டு அரசசபை உறுப்பினரும்,

முஸ்லிம் காங்கிரசின் தலைவருமான 'அஸ்ரப்' அவர்கள் தேர்தல் பிரசாரத்தின் போது கேகாலைப் பகுதியில் விமானம் மலையுடன் மோதி இறந்ததாக வானொலி செய்தி ஒலிபரப்பியது.

இறுதியாக கனடாவில் இருந்து இவர் விடைபெறும் நேரம் நெருங்கியது. கோடை காலம் கனடாவில் விடை பெறுகின்றது. இலையுதிர் காலம் ஆரம்பமாகிறது. மார்கழி 21 வரை இலையுதிர் காலம்; அதன் பின் குளிர் காலம். இது கனடா அரசின் உத்தியோக பூர்வ அறிவிப்பு. தனது பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அன்று பகல் கனடா கந்தசுவாமி ஆலயம் சென்று எல்லோர் நலனுக்கும் அருள் செய்யுமாறு வேண்டுதல் செய்தார். தனது அன்புக்குரிய மிக நெருங்கிய உறவினர்களான சோதிமலர், ஸ்ரீசங்கர், சாந்தி மைத்துனர் சகயானந்தா ஆகியோர்களும் வீட்டுக்கு வந்து வழியனுப்பி வைத்தார்கள். கனடாவில் இருந்த காலத்தில் இவருக்கு பல வகையிலும் உதவி செய்த அன்பர்கள், நண்பர்கள், சமூக சேவகர்கள் ஆகியோருக்கு தனது பிரியாவிடையினைக் கூறி இனிமையான நினைவுகளுடன் மகன் மருமகள் பேரப் பிள்ளைகளின் அன்பான வழியனுப்புதல்களுடன், "எல்லாம் அவன் செயலுடன் இனிதே நிறைவேறும்" என்னும் நல்லெண்ணத்துடனும், இறைவனின் நல்லாசியுடனும் இலண்டனுக்குச் சென்றார்.

## 8.2 இலண்டனில் பெற்ற அனுபவங்கள்

22.09.2000ம் ஆண்டு இரவு 12மணிக்குப் புறப்பட்ட AIR கனடா விமானம் இலண்டன் நேரப்படி பகல் 12 மணிக்கு இலண்டன் கீத்றோ விமான நிலையத்தைச் சென்றடைந்தது. விமான நிலையத்திலிருந்து சகல கருமங்களையும் முடித்து வெளியேற சுமார் ஒருமணிநேரம் எடுத்தது.

வெளியே 'சிறி' மகன், மருமகள் ஜெயந்தி, பேரப் பிள்ளைகள் தீப்டிலான், அருந்த் ஆகியோர் அன்புடனும் பாசத்துடனும், வரவேற்றனர். இலண்டனில் உள்ள வீடுகள் யாவும் தனித்தனி வீடுகளாகும். கீழ் வீடு, மேல் வீடு, நடுத்தளம் என மூன்று பிரிவுகள் உண்டு. வீடுகள் யாவும் கிராமியச் சூழல் மாதிரிக் காணப்படுகின்றன. அங்குள்ள இவரது உறவினரான ஞான பூசணி அவர்களுடனும், மனோகரதாஸ் அவர்களின் மகன் மனோபவான் என்பவருடனும் தனது மாணவன் நந்தனுடனும் தொலைபேசியில் கதைத்தார். அன்று பின்னேரம் நந்தன் மனைவியுடன் வந்தார். மனோபவன் செவ்வாய் வருவதாகக் கூறினார். அன்று பின்னேரம் அங்குள்ள ஒரு பிரார்த்தனை மண்டபத்துக்குச் சென்று பிரார்த்தனையில் கலந்து கொண்டார். அப்பிரார்த்தனை மண்டபத்தில் தனக்குத் தெரிந்த, தன்னைத் தெரிந்த பலரைச் சந்தித்தார்.

இலண்டன் வீதிகள் யாவும் ஒடுக்கமானவை. இவ்வீதிகளின் இருபுறமும் ஒரே மாதிரியான தனித்தனி வீடுகள். கார் நிறுத்த வீட்டில் இடமில்லாதபடியால் வீதிகளிலேயே எதிரும் புதிருமாக கார்களை நிறுத்துவார்கள்.

"ஆசிரியர் சிரோமணி" அவர்கள் 'ஆச்வே' என்னும் இடத்தில் உள்ள முருகன் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டுள்ளார். மூலவிக்கிரகம் முருகன் வள்ளி தெய்வானையாவர். நல்ல உயரமான தோற்றமுடைய உருவங்கள். ஆடை அலங்காரம் செய்த பின் ஒரு ஆள் அளவு உயரத்தில் காணக்கூடியதாக இருந்தது. சுற்றிவர சிவன், பிரம்மா, விநாயகர், விஷ்ணு; தேவிகளாக துர்க்கை, உமையம்மன், நவக்கிரகங்கள் முதலான சகல தெய்வங்களும் அலங்காரமாகக் காணப்பட்டன. பூசை முடிவடைய ஒருமணி நேரம் எடுத்தது. பூசை முடிவில் தமிழில் முருகன் துதிபாடி பூசை நிறைவுற்றது.

அடுத்த நாள் 27.09.2000ம் ஆண்டு தயாபரன் என்னும் தனது மாணவனின் அக்கா டாக்டர் நிதியுடன் தொடர்பு கொண்டு தனது இரத்த அழுத்தம், நெஞ்சுநோ முதலானவற்றையெல்லாம் பரிசோதித்துக் கொண்டார். இவையெல்லாம் சாதாரணமாக இருப்பதாக அறிந்த பின்னர் அன்று பிற்பகல் 'நெசடின்' என்னும் இடத்தில் உள்ள வட இந்தியர்களால் பரிபாலிக்கப்படுகின்ற "ஸ்ரீ சுவாமி நாராயன் மந்திர்" என அழைக்கப்படும் புனித கோவிலுக்குச் சென்றார். புனிதமான பளிங்கு ஆலயம். தூண்களில் விஷ்ணு பகவானின் தசாவதாரக் காட்சிகள் வெள்ளைப் பளிங்குக் கற்களில் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோவிலும், இதன் காட்சியும் முக்கியமான ஒன்றாகும். இதை தனக்குப் பார்க்கக் கிடைத்தது இறைவனின் அபூர்வ சக்தியே எனத் தெரிவித்தார்.

அடுத்த நாள் உலகப் பிரசித்திபெற்ற மெழுகினால் ஆன மெய்மை போல் தோன்றும் பொய்மையான மனிதர்களைக் கண்டு மகிழ்வெய்தினார். மகாத்மா காந்தி, இந்திரா காந்தி, நரசிம்மராவ், மகாராணி குடும்பம், தென்னாபிரிக்கத் தலைவர்கள், அமெரிக்க ஜனாதிபதிகள், இலக்கியகர்த்தாக்கள், நெப்போலியன் மரணப் படுக்கை, அப்பலோ வீரர்கள், டயானா இளவரசி, நெல்சன் மண்டேலா இவ்வாறு எத்தனை எத்தனையோ முக்கிய பிரமுகர்களைக் கண்டு (போலி உருவங்கள்) களிக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். அத்துடன் இலண்டன் நகரக் காட்சிகளை றிச்சோ வண்டியில் சென்று கண்டு களித்துள்ளார். கோள் மண்டலக் காட்சிகள் கனடா விஞ்ஞான கூடத்தில் காட்டியதை விட வினோதமாகக் காட்டினார்கள்.

தேம்ஸ் நதி இலண்டனுக்கு அழகு செய்யும் ஒரு நதி. இதன் குறுக்காகப் பல பாலங்கள். தொடருந்துப் பாலங்கள், மோட்டார்ப் பாலங்கள் அழகாகச் சுழலும் வட்டவடிவமான வளையம், நதியில் செல்லும் உல்லாசக் கப்பல்கள் என்பனவும் ஹொட்டேல் படகுகள் என்பனவும் அழகுக்கு அழகு செய்பவை. இலண்டன் நகரம் "WEST MINSTER CITY" என அழைக்கப்படுகின்றது. நகரத்திலே முக்கியமான இடங்களில் சாதனை படைத்த மன்னர்கள், போர் வீரர், வீராங்கனைகள் போன்றோரின் சிலைகள் மிக அழகாக தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளன.

கட்டடங்கள் யாவும் புராதன நாகரிகங்களைப் பிரதிபலிக்கும் வகையில் சிற்பங்கள், கைவண்ணங்கள் ஆகியவற்றைக் கொண்டு அழகு மிகுந்து காணப்படுகின்றன. வியத்தகு வர்ணங்கள், பொன்னொளி வீசும் கிரீடங்கள் என்பன மாளிகைகளின் உச்சியை அலங்கரிக்கின்றன. வீதிகளில் சனநடமாட்டம் நெரிசல். உல்லாசப் பயணிகள் நிரம்பி வழிகின்றனர். "WEST MINSTER COUNCIL" ஆல் இந்நகரம் பேணப்படுகின்றது. 29.09.2000 வெள்ளி காலை சக்தி வழிபாட்டின் பின் இலண்டன் உயர் வாசற் குன்றம் ஸ்ரீ முருகப் பெருமான் தரிசனத்துக்காகச் சென்றார். அருமையாகப் பூசை வழிபாடுகளைக் கண்டு வணங்கினார்.

ஆலயம் மூடிய கட்டடத்தினுள் அழகாக அமைந்துள்ளது. ஆச்வே வீதி 200 A இலக்கத்தில் அமைந்துள்ளது. இது முன்னர் கிறிஸ்தவ ஆலயத்துக்குச் சொந்தமான நிலமாக இருந்ததாகவும், இந்நிலத்தை வாங்கும் போது அக்கட்டடத்தின் அமைப்பை மாற்றக் கூடாதென்ற நிபந்தனையின் பேரில் வாங்கப்பட்டதாகவும், அதனாலேயே இதன் வெளித் தோற்றம் சைவ ஆலய முறைப்படி அமையவில்லை எனவும் அவ்வாலய நிர்வாகத்தரான திரு.க.நாகராசா கூறினார். அவர்

மட்டக்களப்பு இராம கிருஷ்ண மிஷனுடனும், சுவாமி ஸ்ரீமத் ஜீவனானந்தஜீ மகராஜ் அவர்களுடனும் நெருங்கிய தொடர்புடையவர்.

இலண்டனிலே பல நிறுவனங்கள் பஸ்சேவையை நடத்துகின்றன. பஸ்சில் சாரதி மாத்திரம் தான் இருப்பார். சாரதியின் பக்கத்திலே பயணச்சீட்டு மெசின் உள்ளது. அதில் காசைப் போட்டு சாரதியிடம் இடத்தைத் தெரிவித்தால் பயணச்சீட்டும், மிகுதிப் பணமும் வெளியேறும். அகன்ற இரட்டைக் கதவுகள் மின்சாரத்தால் திறந்து மூடுவன. வயோதிபர், பிள்ளைகள், வலது குறைந்தவர்களுக்கு பிரத்தியேக ஆசன வசதிகள் உண்டு. தள்ளுவண்டியுடன் வரும் பிள்ளைகளை பஸ்சில் ஏற்றக்கூடியவாறு வீதியும், பஸ்சின் படிகளும் அமைக்கப்பட்டுள்ளன. பஸ் ஓடும் பாதை, நடை பாதை ஆகியவை அகலமானவை.

இங்கு நிறத்துவேசம் வேலைவாய்ப்புகளில் உணரக் கூடியதாக உள்ளது. ஒருவருடைய சுயவிபரப் படிவத்தில் எந்த நாடு? ஆசிய நாடாயின் இந்தியாவா? பாகிஸ்தானா? பங்காளதேசா? சிறிலங்காவா? எனக் கேட்கப் படுகிறது. சமயமும் கேட்கப்படுகிறது. பெரிய பதவிகளுக்கு கறுப்பின மக்கள் நியமிக்கப்படுவது அரிது. இந்தப் பதவிக்கு குறிப்பிட்ட ஒருவரைவிட வேறு ஒருவர் இல்லை என்று அரசாங்கத்துக்கும், திணைக்களத்துக்கும் நிரூபித்தால் அவருக்கு அப்பதவி வருட அடிப்படையில் கிடைக்கும்.

07.10.2000ம் ஆண்டு "வேல்ஸ்" மாகாணத்தில் உள்ள ஸ்ரீரெங்கநாத ஆலயத்துக்கும் சென்றுள்ளார். மருமகளின் உறவினர் சக்தி என்பவரது இருப்பிடம் 240மைல் தூரத்தில் இருந்தது. போகும் வழி சாதாரணமான நிலம். போகப்போக மலைநாடு. இலங்கையின் மலைநாட்டுப் பிரதேசம்

போன்று காணப்பட்டது. செம்மறி ஆடுகளும் மாடுகளும் காணப்பட்டன. கோவிலுக்குச் செல்லும் வழி காட்டுவழி; ஒற்றைவழிப் பாதை செப்பனிடப்படாத பாதை. மடாலயம் போன்ற மூலஸ்தானம். ஆறு முகங்களும் பன்னிரண்டு கரங்களும் கொண்டதாக முருகன் மயில் வாகனத்தில் நிற்கும் காட்சி ஓவியமாக உள்ளது. முருகன், சிவபெருமான், இலக்குமி, சரஸ்வதி, துர்க்கை ஆகியோரின் படங்கள் மண்டபச் சுவரை அலங்கரிக்கின்றன. 1.30 மணிக்கு "சுக்கிலாம் பரதம்" என்ற சுலோகத்துடன் திரை திறக்கப்பட்டு பூசை நடைபெற்றது. அக்கோயிலின் அயலில் ஒரு குளம். அதில் நீரின் மத்தியில் காளி அம்பாள் சிங்க வாகனத்தில் வீற்றிருந்தார். பூசை செய்பவர் தோணியில் சென்று பூசை செய்வதாகவும், பூசை வேளையில் நீர் குறையும் என்றும் சிலர் கூறினார்கள். இதன் தலைமைப் பூசகர் ஒரு சிங்களவர் எனவும், அவர் வெள்ளை அங்கி தான் அணிந்திருப்பாராம் எனவும், அவர் தனது பெயரை 'சுப்பிரமணிய சுவாமி' என மாற்றிக் கொண்டுள்ளாராம் எனவும் அறிய முடிந்தது. "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் இலண்டனில் தங்கியிருந்த காலத்தில் இலங்கையில் பொதுத்தேர்தல் 10.10.2000ம் ஆண்டு நடைபெற்றது.

12.10.2000 அன்று உலகப் பிரசித்தி பெற்ற இலண்டன் கிறின்வீச் மணிக்கூட்டைப் பார்க்கச் சென்றுள்ளார். உலகை தேசாந்திர ரீதியாக கிழக்கு மேற்காகப் பிரித்து நேரக் கணக்கீட்டைச் செய்யும் இடமே கிறின்வீச். இவர் அங்கு சென்ற நேரம் 12.10.2000ம் ஆண்டு கிறின்வீச் MEAN TIME 12:09:06:26 எனக்குறிக்கப்பட்ட 'த ரைம்ஸ்' பத்திரிகையில் அன்று வெளியான செய்தியுடன் இவருக்குக் கொடுக்கப்பட்டது. இவ்விடத்தில் மணிக்கூடுகளின் வளர்ச்சி பற்றி பண்டைக்காலத்தில் பாவிக்கப்பட்ட புராதன மணிக்கூடுகள் முதல்

மிகப்பிரமாண்டமான மணிக்கூடுகள் வரை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

## 09. தொலைநோக்குச் சிந்தனைகள்

மட்டக்களப்பு வாழ்வியல் தடங்களில் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களை, தொலைநோக்குச் சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் கொண்ட ஒருவராகவும் காணமுடிகின்றது. குறுகிய நோக்கங்களையும், சுயநலப் போக்குகளையும் உடையவராக இவர் இருந்திருந்தால் இவரது வாழ்க்கை குறுகிய வட்டத்துக்குள் தான் முடிந்திருக்கும்; ஆசிரியர் சிரோமணியாக, செம்மனச் செல்வராக, சமூக சாகரனாக எந்தவொரு உயர்ச்சியையுமே நிட்சயமாகக் கண்டிருக்கமாட்டார். தூரநோக்குடைய சிந்தனைகளாலும், பொதுநல நோக்குடைய கொள்கைகளாலும் தான் இவர் தொட்ட துறைகளனைத்தும் தூரநோக்குடையவைகளாக விருத்தி பெற்றன. குறிப்பாக கல்வி, சமயம், சமூகம், மொழி சார்ந்து "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் கொண்டிருந்த சிந்தனைகள் பாராட்டத் தக்கவைகளாக விளங்குகின்றன.

### 9.1 கல்விச் சிந்தனைகள்

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் மாணவப்பருவத்திலிருந்தே கல்வி கேள்விகளில் ஆர்வம் காட்டி வந்துள்ளார். இடைநிலைக்கல்வி, ஆங்கிலக் கல்வி ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியிலே கற்பதன் மூலம் தான் வாழ்விலே முன்னேற்றம் பெறமுடியும் எனவும், சமூகத்துக்கு நற்சேவை செய்யமுடியும் எனவும் இவர் நம்பிக்கை கொண்டிருந்தார். ஆங்கிலக் கல்வி ஒருவரது வாழ்வுக்கு இன்றியமையாதது என்பதை உணர்ந்திருந்தார்.

தனது ஆசிரியத்துவம் மட்டக்களப்புக்குள் மட்டும் குறுக்கம் அடைவதை இவர் விரும்பவில்லை. இவரது ஆசிரியம் மட்டக்களப்புக்கு வெளியே மலையகப்பகுதியிலே முதன்முதலில் ஆரம்பமாகியது. பிறப்பெய்திய பிரதேசத்துக்குள் மாத்திரம் நிற்காமல் இதற்கு வெளியிலும் தனது சேவை நிலைக்க வேண்டும்; சிறந்த மாணவ சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பது இவரது நல்லெண்ணமாகும். பதுளை உடுவறை சிங்கள தமிழ்க் கலவன் பாடசாலையிலே முகிழ்ப்புப் பெற்ற இவரது சேவை மயிலப்பிட்டிய, வெலிமடை, கொஸ்லாந்தை என மலையகத்தின் பல பகுதிகளிலும் விரிவாக்கம் பெற்றிருந்தது. உடுவறை, மயிலப்பிட்டிய, வெலிமடை ஆகிய பகுதிகளிலே உதவி ஆசிரியராக அறிமுகமானவர் பின்னர் கொஸ்லாந்தைப் பகுதியிலே அதிபராக அறிமுகமானார். மலையக மாணவர்களும் கல்வியிலே முன்னேற வேண்டுமென இவர் பெரிதும் விரும்பினார்.

"ஆசிரியர் சிரோமணி" அவர்கள் கற்பித்தற் பணிக்காகச் சென்ற மலையகப் பாடசாலைகளில் கண்டி மயிலப்பிட்டிய அரசினர் பாடசாலை என்பது தனிச் சிங்களப் பாடசாலையாகும். அங்கே S.S.C. வரை வகுப்புகள் இருந்தன. 1949.09.01 – 1952.04.30 வரை மூன்றாம் வகுப்பிலிருந்து S.S.C. வரை தமிழை ஒரு பாடமாக ஆரம்பித்து கற்றல் கற்பித்தல் செயன்முறையை வினைத்திறன் மிக்கதாக முன்கொண்டு சென்றுள்ளார். மட்டக்களப்புப் பிதேசத்தைச் சேர்ந்த பல ஆசிரியர்கள் மலையகப் பாடசாலைகளில் அக்காலத்தே கற்பித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் எவருக்குமே இத்தகையதொரு உயர்வான சிந்தனை தோன்றியிருக்கவில்லை.

அந்தப் பாடசாலையிலே S.S.C. வகுப்பில் ஆறு மாணவர்களை "இலகு தமிழ்" (Lower Tamil) பாடத்துக்குப் பகிரங்க பரீட்சைக்குத்

தோற்றச் செய்து அதில் நான்கு மாணவர்களைச் சித்தியடைய வைத்துள்ளார். இதன் மூலம் 1949 ம் ஆண்டிலேயே சிங்கள மாணவர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்பித்து வெற்றி கண்டவர் என்னும் பெருமைக்கு உரியவராயினார்.

இச்சிறப்பான சேவைக்காக "சேவை மிகவும் திருப்தி" (work very satis factory) என்னும் புறக்குறிப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆசிரியத் தொழிலுக்கு வந்து அவர் சாதித்துக்காட்டிய முதலாவது சாதனை இதுவாகும். தமிழ் மொழியிலே இவர் கொண்டிருந்த அதிக பற்றையும், சிங்கள மாணவர்களும் தமிழ் மொழியைக் கற்கவேண்டும் என்னும் உள்ளத்துடிப்பையும், பிரதேசம் கடந்த; இனம்கடந்த அவரது கல்விப் பணியினையும், புதிய மாற்றத்தை விரும்புகின்ற பண்பையும் இதன்மூலமாகத் தெட்டத்தெளிவாக நாம் அறிந்து கொள்ளலாம். இது இவரது தொலைநோக்குடைய கல்விச் சிந்தனைக்குத் தக்கதோர் சான்றாகும்.

இவரது மலையகக் கல்விச் சேவையோடு மட்டக்களப்புக் கல்விச் சேவையினை ஒப்பிட்டு நோக்கும்போது மேலும் பன்முகப்பாங்கான முன்னேற்றங்களையும், தொலைநோக்குகளையும் இவர் கொண்டிருந்தமை தெளிவாகின்றது. பல பாடசாலைகளிலே இவர் தியாக சிந்தையோடும், உயர்ந்த சிந்தனைகளோடும் பணியாற்றினார். தான் எங்கெங்கு கடமைக்காகச் சென்றாரோ அங்கெல்லாம் மாணவர்களின் முன்னேற்றத்துக்காகவும் பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் அர்ப்பணிப்போடு சேவையாற்றியுள்ளார்.

கல்வி மூலமாகச் சிறந்த ஒழுக்கமும், நேர்மையும், சேவைநலனும் மிக்க மாணவ சமுதாயம் உருவாக்கம் பெறவேண்டும் என்பதிலே

கரிசனை காட்டிவந்தார். குறிப்பாக கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்திலே அதிபராகப் பணியேற்ற நாள் தொடக்கம் சேவையிலிருந்து ஓய்வு பெறும்வரையான பதினான்கு வருடங்களும் செய்த சேவைகள் ஒவ்வொன்றும் காலத்தால் அழியாத தடங்களாகின்றன. "குன்றிலிட்ட தீபம்" போல அவ்வித்தியாலயத்தை பலவகையிலும் சமூகத்தின் மத்தியிலே பிரகாசிக்கச் செய்த பெருமை இவரையே சாரும். அப்பாடசாலையினை மட்டக்களப்புப் பிரதேசத்திலே ஒருசிறந்த, முன்மாதிரியான பாடசாலையாக உயர்த்த வேண்டும் என்னும் நல்லெண்ணத்தினை இவர் உள்ளத்திலே கொண்டிருந்தார். அதனைச் சாதித்தும் காட்டியுள்ளார். அதுதான் இவரது வெற்றி இலக்கின் மையமுமாகும்.

தான் அதிபராகக் கடமையேற்ற பாடசாலைகளை முன்னேற்றப்பாதையில் உயர்த்துவதற்கான சிந்தனைகளையும், செயற்பாட்டுத் திட்டங்களையும் இவர் கொண்டிருந்தார். ஊக்கமும், ஆக்கமும் உள்ள எண்ணங்கள் இவரின் உள்ளத்திலே இருந்தது. பாடசாலையிலுள்ள அனைத்து மாணவர்களையும் தன் பிள்ளைகளாகவே "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் நேசித்திருக்கிறார். அனைத்து மாணவர்களும் திறமையாகக் கற்று முன்னேற்றங்கள் பலவற்றைக் காணவேண்டும் என்பதிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். ஒரு வகுப்பிலே ஆசிரியர் கற்பிக்கும் போது அந்த வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் அது தெளிவாக விளங்க வேண்டும். நல்ல உள்ளீடுகளை (IN PUT) வழங்குவதன் மூலமாக நல்ல வெளியீடுகளை (OUT PUT) மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியும் என்பதை "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் தன் சேவைமூலமாக நிறுவிக் காட்டியுள்ளார்.

கற்றல் கற்பித்தல் செயன்முறையானது இலகுவானதாக எல்லோருக்கும் விளங்கத் தக்கதாக அமைய வேண்டும். செயற்பாடு சார்ந்த கற்றல் கற்பித்தல் செயன் முறையே அதிக வெற்றியளிக்கும் என்பதனை "செயல் மூலம் உணர்தல் நவீன கணிதத் திட்டம்" மூலமாக நமது குருநாதர் நிருபித்துக் காட்டியுள்ளார். ஆசிரியர்கள் பாடசாலையிலே முழுநேரத்தையும் மாணவர்களுக்காகச் செலவிட வேண்டும்; கற்பித்தலை அர்ப்பணிப்போடு அறப்பணியாகத் தொடரவேண்டும் என்பனபோன்ற சிந்தனைகளையும் இவர் தன்னகத்தே பெற்றிருந்தார். ஆசிரியர் சிரோமணியாக, செம்மனச் செல்வராக, சமூக சாகரனாக வாழ்விலே பல்வேறு படிநிலைகளில் உயர்வதற்குப்பிரதான காரணம் இவர் பெற்றிருந்த கல்விப்புலமைகளும், மெய்யியல் தரிசனங்களுமாகும். "கல்விக்கு ஒரு கரம் கொடுப்போம்" என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு கிழக்கிலங்கையின் மாணவர்களது கல்வி முன்னேற்றத்தை அடிப்படையாக வைத்து கனடாவிலே தோன்றிய விபுலானந்தர் கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் இலங்கைக் கிளைக்கான செயலாளராக இருந்து இவராற்றிய சேவைகள் அளப்பரியவை. அகலித்த நோக்கங்களை உடையவை. நாட்டின் போர்ச் சூழலில் மிகவும் பின்தள்ளப்பட்டுக் கொண்டிருந்த மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்திலே கொண்டு தாய்ச் சங்கத்தின் தூரநோக்குகளைச் செவ்வனே நிறைவேற்றும் பாங்கில் உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டமை இவரது தூரநோக்குடைய கல்விச் சிந்தனைக்குக் கிடைத்த மற்றுமொரு வெற்றியாகும்.

### 9.2 சமய சமூக கலாசார சிந்தனைகள்

ஒரு குடிமகன் சமயத்தை மதிக்க வேண்டும். சமூகத்தை நேசிக்கவேண்டும். கலை கலாசார விழுமியங்களைப்பேண வேண்டும்.

பிறரது முன்மாதிரியான வாழ்க்கை முறைகளை அனுசரித்து ஒழுகவேண்டும். மொழிப்பற்று உடையவனாக வாழவேண்டும். எண்ணம், சொல், செயல் மூன்றிலும் சிறந்து விளங்க வேண்டும். மற்றையவர்களை மதித்து நடக்க வேண்டும். அன்பும், பண்பும், பணிவும், உண்மையும், நேர்மையும், வாய்மையும், தூய்மையும், நன்னடத்தைப் பாங்கும் எல்லோருக்கும் வேண்டும். கலாசாரம் என்பது ஒரு மக்கள் சமூகத்தினது அடையாளமாகும். அவற்றை அழியாது காக்கவேண்டும்.

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களது இத்தகைய சமய, சமூக கலாசார சிந்தனைகள் உயர்வானவை. இதற்கான அடையாளங்கள் இவர் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம், சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லம், புலவர்மணி நினைவுப்பணிமன்றம், மட்டக்களப்பு கல்லடி உப்போடை இராமகிருஷ்ண மிஷன் ஆகியவற்றைச் சார்ந்துநின்று செய்த சேவைகள். தனது வெளிநாட்டுப் பயணத்தின்போது அங்குள்ள ஊடகங்கள் மூலமாக இந்நிறுவனங்களின் அருமை பெருமைகளையும், அளப்பரிய சேவைகளையும் சர்வதேச மட்டத்தில் அறியச் செய்தமை இவரது சமய, சமூகப் பணிநிலை வாழ்வு ஆழமான; அகலமான வீச்சைக் கொண்டது என்பதனைக் கோடிட்டுக் காட்டிநிற்கின்றது.

**10. பெற்ற பட்டங்கள், விருதுகள், பாராட்டுகள்**

ஆசிரியர் சிரோமணி தம்பிப்பிள்ளை செல்வநாயகம் அவர்களின் பணிகள் பன்முகப்பாங்கானவை. சமய, சமூக, சமரசத்தன்மை வாய்ந்தவை. இவர் தனது வாழ்வை சேவை வாழ்வாகவே மாற்றியிருந்தார். இதனால் பட்டங்களும், விருதுகளும், பாராட்டுகளும் இவரைத்தேடி வந்தன. சென்ற சென்ற இடமெல்லாம் பாமாலைகளும், பூமாலைகளும், பொன்னாடைகளும் இவரை அலங்கரிப்பதற்காகக்

காத்துக்கொண்டிருந்தன. இந்த வகையில் "ஆசிரியர் சிரோமணி", "செம்மனச் செல்வர்", "சமூக சாகரன்" ஆகிய மூன்று முக்கியமான பட்டங்களை இவர் பெற்றிருக்கிறார். இதேபோன்று பாராட்டுகளை நிறையப் பெற்றிருக்கின்றார்.

மட்டக்களப்பு றோட்டரிக் கழகத்தினர் 19.05.1979 அன்று நடந்த தமது ஒன்றுகூடல் வைபவத்தின்போது இம்மாவட்டத்தில் பாராட்டத்தக்க வகையில் தமது கடமையைத் திறமையாகச் செய்துவரும் அரசசேவையாளரைப் பாராட்டிக் கௌரவித்த நிகழ்விலே (VOCATIONAL SERVICE AWARDS) ஆசிரியர் சேவைக்கான பாராட்டையும், பரிசையும் திரு.த.செல்வநாயகம் ஐயா அவர்கள் பெற்றுக்கொண்டார். இவ்வைபவத்துக்கு இவரும், இவரது மனைவியாரும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

ஆசிரியர் சேவைக்கான மேற்படி பாராட்டையும், பரிசையும் அந்நாள் றோட்டரிக் கழகத் தலைவர் திரு.எஸ்.ஓ.சோமநாதர், செயலாளர் திரு.இ.ஜே.சற்குணராசா ஆகியோர் வழங்கிக் கௌரவித்திருந்தார்கள். "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்திலே அதிபராகச் சேவையாற்றிக் கொண்டிருந்த வேளையிலேயே இவ்வைபவம் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். வித்தியாலய வரலாற்றையும், இவரது ஆசிரியத்துவ சேவையையும் மெருகூட்டிய இவ்வைபவம் மனதைவிட்டு அகலாததொன்றாகும்.

முப்பத்தொன்பது வருட ஆசிரியர் சேவைக்காக, சேவையிலிருந்து ஓய்வு பெற்றபோது 03.04.1987ல் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கமானது மகத்தானதொரு சேவைநலன் பாராட்டு விழாவினை ஐயா செல்வநாயகம் அவர்களுக்காக

எடுத்திருந்தது. அவ்விழாவுக்கு இவரும், இவரது மனைவியாரும் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள். சங்கத்தின் உபதலைவர் திரு.செ.எதிர்மன்னசிங்கம் அவர்கள் தலைமைதாங்கி நடத்திய அவ்வைபவத்திலே சங்க உறுப்பினர்களும், அரச அதிகாரிகளும், கல்விப் புலத்தினரும் கலந்து பாராட்டுரைகள் வழங்கி நிகழ்வைச் சிறப்பித்தார்கள். பூமாலையும், புகழ்மாலையும், பொன்னாடையும், பாராட்டுரைகளும் திரு.த.செல்வநாயகம் ஐயா அவர்களை அலங்கரித்ததோடு மட்டுமல்லாமல் இவை எல்லாவற்றுக்கும் மேலாக விழாவின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இவரது ஆசிரியப் பெருந்தகை இலக்கிய கலாநிதி கலாசூரி மகாவித்துவான் F.X.C. நடராசா ஐயா அவர்களால் இவருக்கு "ஆசிரியர் சிரோமணி" பட்டம் வழங்கி, பதக்கம் சூட்டி, பொற்கிழி அளித்து கௌரவிக்கப்பட்டமையானது மகோன்னதமானதாகும்.

இதேபோன்று திரு.த.செல்வநாயகம் ஐயா அவர்கள் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் பொன்விழாக் கொண்டாட்டத்தின் போது 20.11.1996ல் இக்கலாசாலையின் ஆரம்பகால ஆசிரிய மாணவன் என்ற வகையில் "செம்மனச் செல்வர்" என்னும் பட்டமளிக்கப்பட்டுப் பாராட்டைப் பெற்றுள்ளார். இது இவருக்குக் கிடைத்த இரண்டாவது பெறுமதியான பட்டமாகும். இந்த வகையில் "ஆசிரியர் சிரோமணி" என்னும் பட்டமும், "செம்மனச் செல்வர்" என்னும் பட்டமும் தாய் நாட்டில் தான் பிறந்த பிரதேசத்திலே வழங்கப்பட்டுள்ளன. இவ்விரு பட்டங்களும் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களில் இவரது மனைவி உயிருடன் இருந்துள்ளார். தானும் கலந்துகொண்டு நிகழ்வுகளைச் சிறப்பித்துள்ளார். மூன்றாவது பட்டம் இவரது சமூக சேவைகளுக்காகக் கிடைத்ததாகும். இது கடல் கடந்த நாட்டிலே கனடா மண்ணிலே வழங்கப்பட்ட சிறப்பைப் பெறுகிறது. அதாவது "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் தனது

வெளிநாட்டுப் பயணத்தின் போது கனடாவுக்குச் சென்றிருந்த சமயத்தில் 04.09.2000ம் ஆண்டு மட்டக்களப்பு கனடிய சமூகத்தால் "சமூக சாகரன்" பட்டமளிக்கப்பட்டுப் பாராட்டைப் பெற்றிருந்தார். இப்பட்டம் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தன் அன்பு மனைவி உயிருடன் இல்லாதது "ஆசிரியர் சிரோமணி" அவர்களுக்கு பெரும் மனவேதனையைக் கொடுத்திருந்தது. இவற்றினைவிட பல சந்தர்ப்பங்களிலே "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் பாராட்டப்பட்டுக் கௌரவிக்கப்பட்டிருக்கின்றார். அந்த வகையில் மட்டக்களப்பு கல்வித் திணைக்களம் சிறந்த அதிபர்களைப் பாராட்டிய விழாவில் பொன்னாடை போர்த்தப்பட்டுப் பாராட்டப்பட்டிருக்கின்றார். மட்டக்களப்பு ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாகம் 17.09.1993ல் நடந்த ஆலய வருடாந்த உற்சவத்தின் போது பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டு, ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜீ மகராஜ் அவர்களால் பொன்னாடை போர்த்தப்பட்டுப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டிருக்கிறார். இதேபோன்று சிவானந்தா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் 07.01.1996ல் நடந்த பொதுக் கூட்டத்தில் பாராட்டத்தக்க சேவை புரிந்த பழைய மாணவரைபாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வொன்றிலும் பாராட்டப்பட்டுக் கௌரவிக்கப்பட்டுள்ளார். கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய பொன்விழாவின் போது 29.04.1997ல் பொன்னாடை போர்த்தப்பட்டு பாராட்டப்பட்டிருக்கின்றார். மேலும் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் இடம்பெற்ற ஆசிரியர் தின விழா ஆரம்ப வைபவத்தின்போது "இளைப்பாறிய அதிபரைக் கௌரவித்தல்" என்னும் அடிப்படையில் பொன்னாடை போர்த்தப்பட்டு, பரிசும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருக்கின்றார்.

இவர் மட்டக்களப்பு சமாதான ஒன்றியம் 2009ல் நடத்திய தைப் பொங்கல் பெருவிழாவிலும் பொன்னாடை போர்த்தப்பட்டு பாராட்டப்பட்டிருக்கிறார். இவ்வாறாகப் பல பட்டங்களுக்கும்,

பாராட்டுகளுக்கும் உரியவராக இவர் கொள்ளப்படுகின்றார். "ஆசிரியர் சிரோமணி", "செம்மனச் செல்வர்", "சமூக சாகரன்" ஆகிய மூன்று பட்டங்களிலும் "ஆசிரியர் சிரோமணி" என்னும் பட்டமே மிகவும் அழுத்தம்கூடிய ஒன்றாக இவரது பெயரோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கின்ற சிறப்பினைக் காணமுடிகின்றது.

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களது காலத்திலே கல்விப்புலத்திலே "ஆசிரியர்மணி" என்ற பட்டத்துடன் திரு.அ.பஞ்சாட்சரம் அவர்களும், "ஆசிரியர் திலகம்" என்ற பட்டத்துடன் திரு.ச.பிரான்சிஸ் (புளியந்தீவு) அவர்களும் பிரகாசித்திருக்கிறார்கள். "ஆசிரியர் சிரோமணி" என்னும் பட்டத்துடன் திரு.த.செல்வநாயகம் அவர்கள் பிரகாசித்திருக்கிறார். இப்பட்டத்தினை மட்டக்களப்புப் பிரதேசத்திலே வேறு யாரும் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. "ஆசிரியர்மணி", "ஆசிரியர் திலகம்" ஆகிய பட்டங்களைவிட "ஆசிரியர் சிரோமணி" என்னும் பட்டம் உயர்ந்ததாகத் தெரிகின்றது. இந்த வகையிலும் மட்டக்களப்பு வாழ்வியல் தடங்களில் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் ஒருபடி மேலுயர்ந்து நிற்பதனைத் தரிசிக்கமுடிகின்றது.

## 11. ஆசிரியர் சிரோமணியிடமிருந்து நாம் கற்கவேண்டிய பாடங்கள்

ஒரு மனிதனுடைய பிறப்பும், வளர்ப்பும், வாழ்வும் சமூகத்துக்கும்; நாட்டுக்கும் பொருத்தப்பாடு உடையதாகவும், பயன் மிக்கதாகவும் அமையவேண்டும். இதுதான் மனித வாழ்வின் சாராம்சமாகும். இல்லையென்றால் அந்தப் பிறப்பே பாழ்தான். ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களின் சேவை வாழ்வும், அவரது வாழ்வின் அத்தியாயங்கள் ஒவ்வொன்றும் தருகின்ற அனுபவங்களும் சமூகத்தில் வாழும் சகலருக்கும் பலவித பாடங்களைப் புகட்டக்கூடியவைகளாக முக்கியத்துவம் பெறுகின்றன. மாணவர்களும், ஆசிரியர்களும்,

அதிபர்களும், சமூகத்தில் வாழும் பிறதுறையினரும் இவரிடமிருந்து பல பாடங்களைக் கற்கவேண்டியிருக்கிறது.

மாணவர்கள் தங்களது கல்லூரிக் காலங்களிலே தங்களுக்குக் கல்வி புகட்டும் ஆசிரியர்களை மிகவும் கண்ணியமாக மதித்துச் செயற்பட வேண்டும். "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்ற நிலையில் அவர்களை மதிக்கவேண்டும். அவர்கள் சொல்லுக்கும், செயலுக்கும் மதிப்பளிக்க வேண்டும். படிப்பது போல் நடிக்கக் கூடாது. படிப்பையே துடிப்பாகக் கொண்டிருக்க வேண்டும். விளங்காதவைகளை விளங்காதவைகளாகவே வைத்துக் கொள்ளக் கூடாது. அவற்றை ஆசிரியர்களிடம் கேட்டுத்தெரிந்து; தெளிந்து கொள்ளவேண்டும். நாளும் நல்லவற்றைக் கற்றுக் கொண்டு வரவேண்டும். எந்தப் பாடமாக இருந்தாலும் அதிக ஆர்வத்துடனும், அதிக கரிசனையுடனும் கற்கவேண்டும்; அப்போதுதான் அப்பாடம் நன்கு விளங்கும்; அதிக நாட்களுக்கு நிலைத்திருக்கும். எழுதுவது, வாசிப்பது என எல்லாவற்றிலுமே தெளிவும், திருப்தியும் இருக்க வேண்டும். ஆசிரியர்களைப் போலவே பெற்றோருக்கும், பெரியோருக்கும் மதிப்பளித்து நடக்க வேண்டும். இறைவனை வழிபடுவதை மறக்கக் கூடாது. குறிப்பாக கல்வித் தெய்வமான கலைமகளை உள்ளன்போடு தியானித்தபடியே பாடங்களைத் தொடங்கவேண்டும். ஆசிரியர் கொடுக்கும் வகுப்பறை வேலைகளையும், வீட்டு வேலைகளையும் விரைவாகச் செய்து முடிக்க வேண்டும். அத்தகைய விரைவு விவேகத்தையும் வேகப்படுத்தும்.

பாடசாலைக் காலங்களில் தினமும் பாடசாலைக்குச் செல்லவேண்டும். உரியநேரத்துக்கு முன்னர் சென்று செய்யவேண்டிய வேலைகளைக் கவனிக்க வேண்டும். ஏனைய மாணவர்களுடன் பிரச்சினைப்படக்கூடாது. உடலும், உடைகளும் தூய்மையாக இருக்கவேண்டும்.

பொய்பேசுவதைத் தவிர்க்க வேண்டும். உண்மை பேசுவதைத் தினமும் கடைப்பிடிக்க வேண்டும். ஒழுக்கம் மிகமிக முக்கியமானது. நல்லதைப் பார்க்க வேண்டும். நல்லதைக் கேட்கவேண்டும். கெட்டவைகளை விட்டு மறக்க வேண்டும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்னும் ஔவையின் முதுமொழியை மனதிலே கொண்டு மாணவர்கள் உரிய காலப்பகுதியிலே கற்கவேண்டியவைகளை திறமையாகக் கற்றுக் கொள்ள வேண்டும். கற்றபடியே ஒழுக்கசீலமுள்ளவர்களாகவும், மற்றவர்களுக்கு முன்மாதிரியானவர்களாகவும் நடந்து கொள்ளவேண்டும். மேலும் ஒருமாணவன் மொழிப்பாடத்திலும், கணித பாடத்திலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்; அதற்கடுத்ததாக ஆங்கில பாடத்திலும் அதிக அக்கறையோடு செயற்பட வேண்டும். ஏனென்றால் ஆங்கில அறிவு இல்லையென்றால் வாழ்க்கையிலே பலவற்றைச் சாதிக்கமுடியாது. இவ்வாறான விடயங்களிலே முன்மாதிரியாகச் செயற்பட்டதனால் தான் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களின் மாணவப்பருவம் மிகவும் அர்த்தம் மிக்கதாகவும், பயனுறுதி மிக்கதாகவும் விளங்கியது. ஆக, மாணவர்கள் இத்தகைய மாணவப்பருவ இலட்சணங்களை இவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகின்றது.

இதே போன்று ஆசிரியர்கள் இவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் பல இருக்கின்றன. சமூகத்திலே ஆசிரியத் தொழில்தான் உயர்ந்தது; மேலானது. எனவே இதற்குரிய உயர் அந்தஸ்தை ஆசிரியர்கள் பாழாக்கிவிடக் கூடாது. நடையுடை பாவனைகளிலும், சிந்தனைகள், செயற்பாடுகளிலும் ஆசிரியர்கள் மாணவர்களின் முன்னால் எப்போதும் முன்மாதிரியாக விளங்கவேண்டும். வாய்மையிலும், தூய்மையிலும் சிறந்து விளங்கவேண்டும். மாணவர்களின் நிலைப்பாட்டை அறிந்தே கற்பிக்கத் தொடங்கவேண்டும்.

நேரகாலத்துக்குப் பாடசாலைக்குச் செல்லவேண்டும்; தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களைத் தவிர பாடசாலைக் காலங்களில் தினமும் தமது கடமைக்காகச் செல்லவேண்டும். விடுமுறை எடுப்பதாயின் அதுபற்றி முன்கூட்டியே அறிவிக்கவேண்டும். பதிற்கடமைக்குரிய ஒழுங்குகளை முன்கூட்டியே செய்துகொள்ள வேண்டும். குறிப்பாக கடமைக் காலத்தில் நேரத்தை வீணாகக் கழிக்கக் கூடாது.

ஆசிரியர்கள் அதிபருக்கும், கல்வி அதிகாரிகளுக்கும் மதிப்பளித்துச் செயற்பட வேண்டும். கற்பிக்கும் பாடங்கள் அனைத்துமாணவர்களுக்கும் நன்கு விளங்க வேண்டும். ஏனோதானோவென்று கற்பிக்கக் கூடாது. அத்தகைய கற்பித்தல் ஆசிரியர்களுக்கு உதவாது. பாடத்திட்டம், வேலைத்திட்டம், பாடக்குறிப்பு, பாடப்பதிவு ஆகியவை நான்கும் ஆசிரியர்கள் பேணவேண்டிய மிக முக்கியமான ஆவணங்கள். இவை இல்லாமல் ஒரு ஆசிரியர் செயற்படக்கூடாது. இடாப்பு வேலைகள், மாணவர் மதிப்பீட்டுச் செயன்முறைகள், பரீட்சைப்புள்ளிப்பதிவுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் ஆகியவற்றிலும் ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும். கற்பிக்கப்போகும் பாடவிடயம் பற்றியபூரணமான அறிவு ஆசிரியருக்கு இருக்கவேண்டும். வகுப்பறையில் மகிழ்ச்சிகரமான சூழலை உருவாக்கிக் கற்பிக்கவேண்டும். வகுப்பறை முகாமைத்துவத்தை ஆசிரியர்கள் உரிய முறையிலே பேணவேண்டும். கற்பித்தலை அர்ப்பணிப்போடு அறப்பணியாக மேற்கொள்ளவேண்டும். செயற்பாடுசார்ந்த கற்பித்தல் முறைகளை கூடுதலாகப் பின்பற்ற வேண்டும். செய்யும் எந்தவொரு வேலைகளையும் எழுத்துமூலங்களாக வைத்திருக்கவேண்டும்.

ஆசிரியர்கள் எந்தப் பிரதேசத்திலாயினும் கடமையாற்றுவதற்குத் துணிந்தவர்களாக இருக்கவேண்டும். இன, மத, பேதம், பிரதேசம்

கடந்து பணிசெய்ய வேண்டும். பொது அறிவுகளிலும், அனுபவங்களிலும் முன்மாதிரியானர்களாக விளங்கவேண்டும். கற்பித்தல் அனுபவங்கள் இல்லாமல் வகுப்பறைகளுக்குள் பிரவேசிக்கக்கூடாது. அன்பாகவும், பண்பாகவும், மாணவர்களை அணுகவேண்டும். "ஆசிரியர் மாணவர் தொடர்பு; மாணவர் மாணவர் தொடர்பு, ஆசிரியர் பெற்றோர் தொடர்பு" இவை ஒரு ஆசிரியருக்கு மிகவும் முக்கியமானவை. செயற்பாடுகளை மாணவர்கள் உரிய நேரத்துக்குள் செய்து முடிக்க வேண்டும் என்பதற்காக கண்டிக்கும் பண்பையும் ஆசிரியர்கள் சற்றுக் கொண்டிருக்க வேண்டும். பாடசாலை நேரசூசிப்படி கருமமாற்ற வேண்டும். உரிய பாட அலகுகளை உரிய தவணைக்குள் உரிய முறைப்படி கற்பித்து முடிக்க வேண்டும். மேலும் ஆசிரியர்கள் நல்ல வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். மாணவ சமூகத்தை நெறிப்படுத்த வேண்டும். மாணவர்களின் சுத்தம், அவர்கள் தமது புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள் ஆகியவற்றைப் பேணுகின்ற விதங்கள், அவர்களது கற்றல் முன்னேற்றம் முதலானவற்றையெல்லாம் ஆசிரியர்கள் கவனித்துச் செயற்படவேண்டும்.

வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயன்முறையின் போது வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் அப்பியாசக் கொப்பிகளைத் திருத்திக் கொடுக்க வேண்டும். திருத்தம் செய்து கொடுப்பது மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். பாராட்டுக்குறிப்புகளையும் திறமை கண்டு அதிலே எழுதிக் கொடுக்கவேண்டும். காலை ஒன்றுகூடல்களிலும், வகுப்பறையில் பாடத்தைத் தொடங்க ஆரம்பிக்கையிலும் நல்லநல்ல சிந்தனைகளை மாணவர்களுக்குச் சொல்லவேண்டும். இவ்வாறான செயற்பாடுகளிலும், சிந்தனை வெளிப்பாடுகளிலும் ஆசிரியத்துவத்திலே நின்று கடமையே கண்ணாகக் கொண்டு திரு.த.செல்வநாயகம் ஐயா அவர்கள் செயற்பட்டதனால்தான் ஆசிரியர்களுக்குள்ளே சிரோமணியாக

உயர்ந்தார் என்ற உண்மையினை ஆசிரியர்கள் எவரும் மறந்துவிடக் கூடாது.

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் தனது சேவைக்காலத்திலே ஆசிரியராக, ஆலோசக ஆசிரியராக மாத்திரமன்றி அதிபராகவும் நீண்டகாலம் சேவையில் இருந்து மாணவ சமூகத்துக்காகவும், கல்விச் சமூகத்துக்காகவும் அயராது உழைத்துள்ளார். இதனால் ஒரு சிறந்த அதிபர் கொண்டிருக்கவேண்டிய ஆளுமைப்பண்புகளையும், ஆற்றல்களையும், பல்வேறு அனுபவங்களையும் பெற்றிருந்தார். அவை அனைத்தும் தற்போது அதிபர் சேவையில் இருப்பவர்களுக்கும், எதிர்காலத்திலே அதிபர்களாக வரப்போகின்றவர்களுக்கும் சிறந்த பாடங்களாக விளங்குவதைக் காணலாம். பதுளை கொஸ்லாந்தை தமிழ் மகாவித்தியாலயத்திலே அதிபராகப்பிரவேசித்து ஏறக்குறைய ஒரு வருடம் தன்சேவையினைத் திறம்பட ஆற்றியவர் அதன் பின்னர் மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்திலே தொடர்ச்சியாகப் பதினான்கு வருடங்கள் அதிபராகப் பணியினைத் தொடர்ந்து 03.04.1987ல் தனது 60வது அகவையிலே ஓய்வு பெற்றிருக்கிறார். இக்காலப் பகுதியிலே இவர் சாதித்த சாதனைகள் பலவாகும்.

ஆசிரியர் சிரோமணி அவர்களிடமிருந்து பாடசாலை அதிபர்கள் படிப்பினையாகக் கொள்ளவேண்டிய பல விடயங்கள் உள்ளன. அந்தவகையில் அதிபர்கள் தமக்குரிய கடமைக்கூறுகளிலிருந்தும், பண்புநிலைகளிலிருந்தும் சிறிதும் பிசகக் கூடாது. ஒரு பாடசாலையின் உயர்வும் தாழ்வும் தம்வசமே தங்கியிருக்கிறது என்பதை ஒருபோதும் இவர்கள் மறந்துவிடக்கூடாது. "பாடசாலையொன்று திறக்கப் படும்போது சிறைச்சாலையொன்று மூடப்படுகிறது" எனக்கூறப்படுகிறது. இதிலிருந்து

பாடசாலையொன்றின் முக்கியத்துவமும், அதனைத் தலைமையேற்று நடத்துகின்ற பாடசாலை முதல்வரின் முக்கியத்துவமும் நன்கு புலனாகின்றது. "ஆசிரியர் சிரோமணி" அவர்கள் தலைமையேற்ற பாடசாலைகளும், அவரது சேவைகளும் உயர்ந்து விளங்குகின்றன. பாடசாலையை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்வதிலும், மாணவர்களின் கற்றல்பேறை உயர்ந்த மட்டத்தை நோக்கி முன்கொண்டு செல்வதிலும் இவர் கொண்டிருந்த அக்கறை அளப்பரியது. இவரது தொலைநோக்குச் சிந்தனைகளும், செயற்பாடுகளும் ஏனைய அதிபர்களுக்கும் நல்ல பாடங்களாக அமைகின்றன.

பாடசாலையின் அதிபராயினும் சரி ஏனைய துறைத் தலைவராயினும் சரி நேரமுகாமைத்துவத்தை காத்து ஒழுகவேண்டும். உரிய நேரத்துக்கு கடமைக்குச் செல்லவேண்டும். நேரத்தைப் பொன்போற் கருதி செயற்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தவேண்டும். இவர் தனது சேவைக் காலத்திலே தினமும் 6.30 க்கெல்லாம் பாடசாலைக்குச் சென்றுவிடுவார். வானொலியில் காலைச்செய்தியினை அங்கேதான் கேட்பார். உரியநேரத்துக்குள் உரிய வேலைகளை முடித்துவிடுவார். நேரத்தை வீணாகக் கழிப்பவர்களை இவருக்குப் பிடிக்காது. தனது சேவைக்காலத்திலே ஏனைய பாடசாலை அதிபர்களுக்கெல்லாம் முன்மாதிரியாகச் செயற்பட்டுள்ளார். மேலும் ஒரு அதிபரானவர் மேற்பார்வை முகாமைத்துவம், மாற்ற முகாமைத்துவம், நிதிவள முகாமைத்துவம், பௌதீகவள மற்றும் ஆளணிவள முகாமைத்துவம் ஆகியவற்றிலும் அக்கறையோடு மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும். இல்லையென்றால் பாடசாலையின் முன்னேற்றமானது சரிவு நிலையை அடைந்துவிடும்.

பாடசாலை அதிபரானவர் எப்போதும் தூரநோக்குடன் செயற்பட வேண்டும். பாடசாலைக்குத் தேவையான வளங்களை உரியவர்கள் மூலமாக உரிய காலப்பகுதிக்குள் பெற்றுக் கொள்ளவேண்டும். திட்டங்களை வகுத்துச் செயற்பட வேண்டும். பாடசாலையையும், மாணவர்களின் கல்வியையும் அபிவிருத்திப்பாதையில் இட்டுச் செல்வதிலேயே ஒரே குறியாக இருக்க வேண்டும். அர்ப்பணிப்பும், அயராத உழைப்பும் இருக்க வேண்டும். கல்விப் புலத்தினரால் அவ்வப்போது நடத்தப்படும் கூட்டங்களிலும், செயலமர்வுகளிலும் தவறாது கலந்து கொள்ளவேண்டும். ஆசிரியர்களுடனும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருடனும், பெற்றோர்களுடனும் விசுவாசமாக நடந்து கொள்ளவேண்டும்.

இவை தவிர அதிபர்கள் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் வரவு தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். எவ்வாறான சவால்கள், பிரச்சினைகள் வந்தபோதும் வெற்றிகரமான முறையில் பாடசாலை நிர்வாகத்தை நடத்திச் செல்லவேண்டும். இதற்கெல்லாம் சிறந்ததொரு உதாரணராகவும், 'பப்லியஸ்' (PUBLIUS SYRUS) என்பாரின், "கடல் அமைதியாக இருக்கும் போது எவராலும் கப்பலைச் செலுத்த முடியும்; கல்வி முகாமையாளர்கள் அமைதியான கடலில் கப்பலைச் செலுத்தும் வகையைச் சேர்ந்தவர்களல்லர். அவர்களின் ஒழுங்கமைப்பில் எத்தகைய பிரச்சினையான நிலைமைகளையும் எதிர்கொள்ளத்தக்க தைரியம் அவர்களிடம் இருத்தல் வேண்டும்." என்ற கூற்றுக்குப் பொருத்தமானதொரு கல்விப்புல முகாமையாளராகவும் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களைக் காணமுடிகின்றது. இவர் அதிபராக இருந்து கடைப்பிடித்துக் காட்டிய வழிகள் ஒவ்வொன்றும் பாடசாலை அதிபர்களுக்கும், பிற நிறுவனத் தலைவர்களுக்கும் சிறந்த பாடங்களாக அமைகின்றன எனலாம்.

இவை தவிர ஒரு குடிமகன் கடைப்பிடித்தொழுக வேண்டிய பண்பாட்டு வாழ்க்கைக்கும் இவரது வாழ்க்கை தரும் செய்திகள் ஒவ்வொன்றும் பாடங்களாக அமைகின்றன. ஒரு சமூக உறுப்பினன் சமயத்துக்கும், சமூகத்துக்கும், தாய்மொழிக்கும் தன்னாலியன்ற பங்களிப்பைச் செய்ய வேண்டும். சமயத்திலும், தாய்மொழியிலும் அதிக பற்றுள்ளவராக வாழவேண்டும். சமூகத்துக்காக நல்லநல்ல பணிகளையாற்ற விழையவேண்டும். சைவசமயத்தைச் சேர்ந்த ஒருவர் நெற்றியில் எப்போதும் திருநீறு அணிந்திருக்க வேண்டும். இறைவனை முப்பொழுதும் முறையாக வழிபட வேண்டும்.

எந்தச் சமயத்தவராக இருந்தாலும் உண்மை, நேர்மை, நீதி நியாய நெறிமுறைகளை வாழ்க்கையிலே பின்பற்ற வேண்டும். உள்ளத்திலே நல்ல சிந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும். பிறருக்குத் தீமை செய்வதை ஒருபோதும் விரும்பக் கூடாது. வீட்டுக்கு வருவோரை இன்முகத்துடன் வரவேற்கவேண்டும். அவர்கள் திரும்பிச் செல்கையில் தலைவாயில் வரைசென்று வழியனுப்பி வைக்கவேண்டும். நேரத்தை வீணாகக் கழிக்காமல் பிரயோசனமாகப் பயன்படுத்த வேண்டும். அறிவு தரும் நூல்களையும், பத்திரிகை சஞ்சிகைகளையும் பார்க்க வேண்டும். எல்லோரையும் நேசிக்க வேண்டும். எவரையுமே அர்த்தமற்ற முறையில் பகைத்து வாழக்கூடாது. அன்பையும், பண்பையும், நல்ல மனப்பாங்குகளையும், நேர்ப்பாங்கான ஆளுமைகளையும் ஒருவர் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். வாழ்க்கையிலே பல சோகங்களும், துன்ப துயரங்களும் தொடராக வந்து வருத்தும் போது கூட சோர்ந்துவிடாமல் துணிந்து நின்று வாழ்க்கையிலே வெல்ல வேண்டும். சவால்களைச் சந்திக்கக் கூடிய தைரியமும், எதிலுமே

எதிர்நீச்சலிட்டு முன்னேறக்கூடிய வல்லமையும் வாழ்க்கையிலே ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் உரியவராகவும், சுவாமி விவேகானந்தரின் பின்வரும் அமுத வாக்குகளுக்கு ஏற்றவராகவும் "ஆசிரியர் சிரோமணி" அவர்களைக் காணமுடிகின்றது. "உண்மை, தூய்மை, தன்னலமின்மை இந்த மூன்றும் கொண்டவனை நசுக்குவதற்கான ஆற்றல் உலகில் எங்கும் இல்லை. உலகமே எதிர்த்து நின்றாலும் அவன் வெற்றி பெறுவது உறுதி", "தைரியம் உங்களின் தாரக மந்திரமாகட்டும். உலகில் தோன்றியதற்கு அடையாளமாக வாழ்க்கையில் ஏதாவது ஒரு நல்லதைச் சாதித்துக்காட்டுங்கள்." ஆக, ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களிடமிருந்து பலவிதமான பாடங்களையும், வாழ்க்கை அனுபவங்களையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

## 12. வாழ்வின் இறுதி அத்தியாயம்

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் 1948.05.03ல் ஆசிரியராகப் பதவியேற்று பல்வேறு பாடசாலைகளில் அல்லும் பகலும் அயராதுழைத்து 1987.04.03ல் அதிபராக ஓய்வு பெற்றார். சமய, சமூகப் பொதுப்பணி வாழ்வில் முனைப்போடு பணியாற்றி அதிலிருந்து 2003.01.15ல் ஓய்வு பெற்றார்.

அதன் பின்னர் தன் இல்லத்தில் இருந்தவாறே இறை வழிபாட்டிலும், சமயத் திருநூல்களை வாசிப்பதிலும், தொலைக்காட்சியிலே ஒளிபரப்பாகும் இராமாயணக் காட்சிகள் முதலான நல்லபல நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழ்வதிலும் பிரயோசனமான முறையில்

காலத்தைக் கழித்து வந்தார். இவ்வாறு வாழ்ந்து வருகையில் வயோதிபம் கனிந்து படுக்கையில் வீழ்ந்து 2010.02.11 வியாழக் கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இவ்வுலகியல் வாழ்விலிருந்து விடுதலை பெற்றார்.

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் இதுவரைக்குமான தனது வாழ்புலக் காலப்பகுதியில் பல்வேறு துன்ப துயரங்களுக்கும், வாழ்வின் சோகங்களுக்கும், நெருக்கீடுகளுக்கும் மத்தியில் சிறந்த மாணவனாய், தலைசிறந்த ஆசிரியராய், நல்ல ஆசிரிய ஆலோசகராய், பலவகையிலும் போற்றத்தக்க அதிபராய், கல்விப் புலமையாளராய், பக்திமானாய், சமய-சமூக சேவகனாய், செம்மனச் செல்வராய், சமூக சாகரனாய், இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஆசிரியர் சிரோமணியாய், பல்வேறு படிநிலைகளிலும் உயர்ந்து தடம்பல பதித்துவிட்டார். ஒரு வரலாறாகவே உயர்ந்துவிட்டார். இவர் பதித்துச்சென்ற வாழ்வியல் தடங்களின் வழித்தடங்களில் நாமினித் தடங்களைப் பதிக்கவேண்டும். இவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றிப் பணியினை இனித் தொடரவேண்டும். இதுதான் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் என்னும் இந்த ஆசிரியப் பெருந்தகைக்கு நாம் செய்கின்ற மிகவுயர்ந்த சேவையாகும்.

"ஆச்சாரிய தேவோ பவ"

*AASIRIYAR SIROMANI*
*T. SELVANAYAGAM*
*Ret. Principal*
*37, 6th Lane*
*Tissaveerasingam Sq re,*
*Boundary Road*
*Batticalo*
*T.P. 065 - 2222*

# பொன் விழா

## அரசினர் ஆசிரியர் கலாசாலை

1946—1996

மட்டக்களப்பு.

இலங்கை.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்று, கல்வி வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியதுடன், இலக்கிய, கலை கலாசார, நிருவாக, சமூகத் துறைகளிலும் ஈடுபட்டுச் சாதனைகள் புரிந்து மேன்மை பெற்றமைக்காக

........மட்டக்களப்பு........சேர்ந்த

திரு. [illegible] செல்வநாயகம்........அவர்கள்

1996 - 11 - 20 அன்று

........செம்மணச் செல்வர்........

பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறார்.

பிரதம விருந்தினர்
S. [illegible],
[illegible] ஆணையாளர்
[illegible], மட்டக்களப்பு.

V. கனகசிங்கம்.
அதிபர்,
மட். அரசினர் ஆசிரியர் கலாசாலை

# Batticaloa Society of Canada

*Presented to*

## Mr. T. SELVANAYAGAM


Honoring his
outstanding contribution to
Tamil Literature and Education
for over 25 years
Naming him as

## SAMOOHA SAHARAN

Organizers
SakthiShanthan    Ealathuporadanar

Sept 4/2000
CANADA


Proud to be a Shivanandian
Platinum Jubilee Celebration
2008



பகுதி – 02

# ஆசிரியர் சிரோமணியின் சுய ஆக்கங்கள் சில

## பொருளடக்கம்.

### பகுதி - 02
### ஆசிரியர் சிரோமணியின்
### சுய ஆக்கங்கள் சில


01. இலக்கிய கலாநிதி புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை நூற்றாண்டு மலர் - **புலவர்மணியின் வாழ்க்கைச் செய்தி.**

02. மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம். வெள்ளிவிழா மலர் - **சமயவாழ்வு**

03. கலைச்செல்வி - வைரவிழா **மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை வரலாறு**

04. பவளவிழா **சுவாமிஜியின் கண்டிப்பான உத்தரவு.**

05. ஈசன் உவக்கும் இன்மலர்

06. மனம் நெகிழ்வு.

## 2.1 இலக்கிய கலாநிதி புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை நூற்றாண்டு மலர்

# புலவர்மணியின் வாழ்க்கைச் செய்தி

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம்.

முகவுரை

"வெள்ளை நிற மல்லிகையோ........"

என்ற சுவாமிகளின் பாடல்

"இலங்கை மணித் திருநாடெங்கள் நாடே......."

என்ற புலவர்மணியின் பாடல்,

இவை இரண்டும் சாவாமூவாப் பாடல்கள், இவ்வாறு குறிப்பிட்டவர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள். (புலவர்மணி கவிதைகள் அணிந்துரை)

வெள்ளைநிற மல்லிகை பாடிய விபுலாநந்த சுவாமிகளையும், இலங்கை மணித் திருநாடு பாடிய புலவர்மணி அவர்களையும் உலகுக்கு உவந்தளித்துப் பெருமையுற்றது மாண்புமிகு மட்டக்களப்பு தமிழகம். குருவும் சீடனும்.

குருவிற்கு நூற்றாண்டு விழாக்கண்ட இவ்வேளையில் நூற்றாண்டு விழாக்காணவுள்ள சீடரைப்பற்றியும் நாம் அறிந்து கொள்வது அவசியமென்போம்.

## பிறப்பும், இளமைக்கல்வியும்

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பட்டை தீட்டப்பட்ட வைரமணிபோல பல துறைகளில் ஜொலித்த ஒருவராவர்.

அவர் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளர், சிறந்த கவிஞர், சிறந்த சைவகர்த்தா, சிறந்த நல்லாசிரியர், சிறந்த அரசியல் ஆய்வாளர், சிறந்த சிந்தனையாளர், சிறந்த இலக்கிய ஆராய்ச்சியாளர், சிறந்த பண்பாளர், சிறந்த பக்தர், சிறந்த நண்பர், சிறந்த சீர்திருத்தவாதி, சிறந்த புரட்சியாளர், சிறந்த பத்திரிகையாளர்....

இவ்வாறு சகலகலா வல்லுனராக அவரை எமக்கு அறிமுகஞ் செய்பவர் தினபதி-சிந்தாமணி பிரதம ஆசிரியராம் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் (உள்ளதும் நல்லதும் முன்னுரை) பிற்காலத்தில் பல பட்டங்களைப் பெற்றும் "**புலவர்மணி**" எனும் கிரீடத்தைச் சுமந்து விளங்கிய பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பிறந்த நன்நாடு மண்டூரும் முகிற்குலங்களும் விண்டுரு மழைபொழியும் மண்டூர்ப்பதி, தில்லை மண்டூர் எனவும்:. சின்னக்கதிர்காமம் எனவும் சிறப்புப்பெற்ற மட்டக்களப்பு வாவியின் மேற்கேயுள்ள இயற்கையெழில் நிறை முருகனுறையும் பழம்பெரும் பதி.

தமிழ்க் கடவுள் முருகன். அம்முருகனின் தொண்டனாக, தருமகர்த்தாவாக வண்ணக்கராக விளங்கிய சோமநாத வண்ணக்கரின் மகன் ஏகாம்பரம்பிள்ளை அவர்களும், சிதம்பரப்பிள்ளை வண்ணக்கரின் மகள் சின்னத்தங்கம் அம்மையாரும் சென்ற நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சீர்சிறப்புடன் வாழ்ந்த இலட்சியத் தம்பதிகள் இவர்கள் வாழ்வில் முகிழ்த்த மூத்த புதல்வனே பெரியதம்பி. இது நிகழந்தது 1899க்குச் சரியான விளம்பி வருடம் தைமாதம் 8ம் திகதியாகும்.

மண்டூர் வெஸ்லிய மிஷன் தமிழ்ப்பாடசாலையில் 5 வயதில் ஆரம்பமாகிய ஆரம்பக்கல்வி 10 வயதில் ஐந்தாம் வகுப்புவரை நீடித்தது. எழுத்தறிவித்த இறைவர்களாக ஆரம்பத்தில் விளங்கியோர் திருவாளர்கள் வே.கனகரெத்தினம், மூ.தம்பாப்பிள்ளை என்போராவர். ஐந்தாம் வகுப்பில் உடன்கற்றோர் ஆங்கிலம் கற்பதற்காக கல்முனை வெஸ்லிய மிஷன் ஆங்கிலப் பாடசாலை சென்றனர். யாழ் புலோலி சந்திரசேகர ஆசிரியரின் வருகையினால் இவரின் ஆங்கிலக்கல்விக்குத் தடையேற்பட்டது. இவர் தமிழ் மொழிக்கு திசை திருப்பப்பட்டார். சந்திரசேகர உபாத்தியாயரிடம் தமது இல்லத்திலேயே சூடாமணி நிகண்டு, திருச்செந்தூர் புராணம், வில்லி புத்தூரர்பாரதம் முதலான நூல்களை முறையாகக் கற்றார். இவருடன் கற்றவர்களுள் பிரபல கல்விமானாய் விளங்கிய பண்டிதர் மகாவித்துவான் வி.சீ.கந்தையா அவர்களின் தந்தையார் வினாசித்தம்பி என்பாருமொருவர். மட்டக்களப்பில் புலவர்மணியின் இனத்துள் கலந்து கொண்ட முதுபெரும் புலவர் சந்திரசேகர உபாத்தியாயர்.

இவரிடம் கற்ற கல்வி, புலவர்மணியின் அம்மாவின் மறைவுடன் நின்றுபோயிற்று. இது நிகழ்ந்தது பதின்மூன்றாம் வயதில் எனலாம். அன்னையும் பிரிய ஆசிரியரும் பிரிந்து சென்றுவிட்டார். எனினும் ஆசிரியரின் ஆசீர்வாதம் புலவர்மணி அவர்களை விட்டுக் கடைசிவரை பிரியாது காத்தது. தமிழ்ப்படிப்பு அடைபட, ஆங்கிலகதவு திறந்து கொண்டது. கல்முனையிலுள்ள வெஸ்லியமிஷன் ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலப்படிப்பு ஆரம்பமாகியது. 1917ம் ஆண்டுவரை ஆங்கிலம் கற்றுத் தேறினார். தமிழைப்போல் ஆங்கிலத்திலும் வல்லவராய் விளங்கினார். ஆங்கிலத் திறமைக்கு வழிகாட்டியவர் கனம் ஆர்.என்.சேதுகாவலர் என்பதை நாம் குறிப்பிட்டாக வேண்டும். அவர் அதிபராகவும்

விளங்கியவர். 1917ம் ஆண்டின் நடுப்பகுதியில் இவரின் ஆங்கிலக் கல்வியும் முடிவுற்றது. புதியதொரு திருப்பம் ஏற்பட்டது, இவரது வீட்டிற்கு வருகை தந்தவர் யாழ்ப்பாணம் மட்டுவில் வடக்கைச்சேர்ந்த செ.தம்பிமுத்துப்பிள்ளை என்பவர். அவரின் வழிகாட்டுதலில் யாழ்ப்பாணப் பயணம் மேற்கொண்டார். யாழ்ப்பாணத்தில் நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையிலே காவியப் பாடசாலையில் ஆரம்பமாகிய கல்வி, முளைவிட்டு, வளர்ந்து, கிளைவிட்டு மலர்ந்தது. ஒரு மரத்தின் இரண்டு கிளைகளில் ஒருமிக்கப் பழுத்த இரண்டு பழங்கள் எனப்போற்றப்பட்ட இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களுடன் கல்வி கற்கும் பேற்றிற்கு வழிகோலியது.

## மேற்கல்வியும், யாழ் அனுபவமும்

காவிய பாடசாலைக் கல்வி முறைதான் பெரியதம்பிப்பிள்ளை அவர்களைப் பண்டிதராகவும், கவிஞராகவும் புலவராகவும், புலவர்மணியாகவும் படிப்படியாக மெருகூட்டியது எனில் அது மிகையல்ல. மட்டக்களப்பிலே மண்டூரில் பிறந்த சந்திரசேகர உபாத்தியாயரின் மடியிலே தவழ்ந்து விளையாடி ஆர்.என்.சேதுகாவலரின் அரவணைப்பில் எழுந்து நின்று யாழ்ப்பாணத்தில் குமாரசுவாமிப் புலவரிடம் நடைபழகி மயில்வாகனனார் (பிற்காலத்தில் சுவாமி விபுலானந்தர்) அவர்களின் மருங்கிலே விளையாடிவர் எமது பெரியதம்பிப்பிள்ளை.

காவியப் பாடசாலையில் பாரதம், கந்தபுராணம், இராமாயணம், நன்னூல் விருத்தி, நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் என்பன முறையாகக் கற்றார். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பண்டிதமணி நவநீதகிருஷ்ண பாரதி, பண்டிதர் திருச்சோமசுந்தரம், சாவகச்சேரிப் புலவர் பொன்னம்பலம்பிள்ளை, சைவப்பெரியார் மு.மயில்வாகனம்

ஆகியோரின் சந்திப்பும் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி.கணேசையர் போன்றோரின் வழிகாட்டலும் யோகர் சுவாமியின் ஆசியும் பண்டிதர் மயில்வாகனனாரின் அரவணைப்பும் பெரியதம்பி அவர்களின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் மிகவும் அடிகோலின.

1921ம் ஆண்டளவில் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மீண்டும் மட்டுநகர் திரும்பினார். எவ்வளவோ கற்றறிந்த மேதையாக திரும்பினார். பரீட்சை எடுக்காத பண்டிதராகவே திரும்பினார். கல்வித்திறனை மதிப்பிடும் தராதரப்பத்திம் எதுவுமின்றியே திரும்பினார். இக்காலம்தான் பண்டிதர் மயில்வாகனனார் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் பதவியைத் துறந்து ஸ்ரீராமகிருஷ்ண சங்க மடத்து திருகூட்டத்திற் சேர்ந்து பிரபோதசைதன்னியர் ஆகியதெனலாம். இது நிகழ்ந்தது 1922ம் ஆண்டு.

வெறுங்கையோடு அதாவது தராதரப்பத்திரம் எதுவுமின்றி தாய்வீடு திரும்பிய பெரியதம்பியைப் பற்றி துறவு பூணச்சென்ற பண்டிதர் மயில்வாகனம் செய்த சிபார்சின் பேரில் மீண்டும் யாழ்நகர் சென்ற பெரியதம்பிப்பிள்ளை அவர்கட்கு அங்கு ஏமாற்றமே காத்திருந்தது. தமிழ்ப் பண்டிதராக கடமையேற்கச் சென்றவர் அவ்விடத்திற்கு வேறொருவர் நியமிக்கப்பட்டு விட்டார் என்பதை அறிந்ததும் மீண்டும் மட்டக்களப்பிற்குத் திரும்பாமல் அங்கேயே நிலைத்து விட்டார். பின்னர் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை சைவ வித்தியாலயத்தில் ஆசிரியர் பணியை ஏற்றுக்கொண்டார். சில மாதங்களின் பின்னர் சாவகச்சேரி சங்கத்தானை இந்துக்கல்லூரியில் பண்டிதராகக் கடமையேற்றார்.

யாழ்ப்பாண வாழ்க்கை இவரின் வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. தீண்டாமையை எதிர்த்துப் போராட வேண்டியவரானார். வாய்வேதாந்தம் பேசாத சமத்துவவாதியான அன்னார் தீண்டாமையை எதிர்த்த காரணத்தால் யாழ்நகர உயர்சாதி எனக் கூறிக்கொண்டோரின் வெறுப்பிற்கு ஆளாக நேரிட்டது,

இச்சந்தர்ப்பம் இவருக்கு மனதில் ஏற்பட்ட மாற்றம் கிறிஸ்தவர்களுக்கு சாதகமாக அமைந்துவிட்டது, எவ்வாறு மருள்நீக்கியார் சமணர்களுடன் சேர்ந்து கொண்டாரோ அவ்வாறே இவரும் கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து கொண்டார். இம்மாற்றம் அவரின் சொந்த ஊரிலும் பிரதிபலிப்பை ஏற்படுத்தியது. தந்தையார் முதலியோரை ஆறாத்துயரில் ஆழ்த்தியது, எனினும் இவர் தனது கொள்கையினின்றும் பிறழாது தேவாலயங்கள் தோறும் சென்று புதுப் புதுக் கருத்துக்களை வெளியிடத் தொடங்கினார்.

**பசுமலைச் சீவியமும், சுவாமி விபுலாநந்தர் சந்திப்பும்.**

பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் கவிதாஞானம் கிறிஸ்தவ கீதங்களாகப் பரிமணமித்தது. கிறிஸ்து திருவவதாரக் கீதங்கள் பல அச்சுவாகனமேறி இந்தியா, பர்மா, இலங்கை முழுவதும் சென்று பிரசித்தம் பெற்றன. இக்காலத்திலேதான் இவரின் பிரசித்தம் பெற்ற பசுமலைச் சீவியம் ஆரம்பமாகியது. பசுமலை என்பது மதுரைக்கும், திருப்பரம குன்றத்திற்கும் இடையிலுள்ள ஒரு சிறிய நகரம். இங்கு ஞானகலாநிதி பளிங்கா என்னும் அமெரிக்கப் பெரியார் அதிபராயிருந்தார். பசுமலையில் பல புரட்சிகரமான சீர்திருத்தங்களை மேற்கொண்ட பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை கிறிஸ்தவப் பெரியார்களிடையெ பெரும் புகழும் பெற்று மிடுக்கோடு மிளிரலானார். பல மகாநாடுகள்

கருத்தரங்குகளில் கலந்து கொண்டு பலரும் வியக்கத்தக்கவாறு சொற்பெருக்குகள் ஆற்றிய காரணத்தினால் 1925 இல் சென்னையில் இடம்பெற்ற மகாநாட்டுக்குப் பசுமலைப் பிரதிநிதியாக போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். சக காலத்தில்தான் மைலாப்பூர் இராமகிருஷ்ண சங்க திருமடத்திலே பிரபோதசைதன்னியராக இருந்த பண்டிதர் மயில்வாகனனார் சுவாமி சிவானந்த மகராஜ் அவர்களினால் "**சுவாமி விபுலாநந்தர்**" எனத் துறவு நாமம் பெற்றுச் சன்னியாசி யானார். இது நடந்தது 1924இல் சித்திரை பூரணைத் திரு நாளிலாகும்.

ஒருநாள் பசுமலை உயர்கல்வி நிலையத்தில் தமிழ்ப் பண்டிதர் நா.சுப்பிரமணியசர்மா என்பவர் பண்டிதர் பெரிய தம்பிப்பிள்ளை அவர்களைச் சந்தித்து சுவாமி விபுலானந்தர் பற்றியும் அடிகளார் மங்கம்மாள் சத்திரத்தில் தங்கியிருக்கிறார் என்றும் கூறினார். அவர் கூறியதைக் கேட்டதும், ஏதோ இனம்புரியாத சக்தி ஒன்றினால் கவரப்பட்டவராய் மங்கம்மாள் சத்திரத்தை நோக்கிச் சென்ற பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை அவர்களை இரும்பைக் காந்தம் இழுப்பது போல அடிகளார் இறுகத் தழுவிக் கொண்டார். அடிகளாரின் பரிசதீட்சை கிடைக்கப்பெற்ற பண்டிதர் வேற்று மனிதராகிவிட்டார். "**மட்டக்களப்பில் அதிகம் வேலைகளைத் தொடங்கிக் கொண்டேன். ஆட்கள் தேவை**" என்று இரண்டு வாக்கியங்களில் மாத்திரம் பேச்சை முடித்த அடிகளார் திருச்சி புறப்பட்டதும் பண்டிதரும் தம்வசமிருந்த எல்லா உடமைகளையும் நண்பன் தேவதாசனுக்கு அன்பளிப்புச் செய்துவிட்டுப் பிறந்த மண்ணுக்கு புது மனிதனாகத் திரும்பிவிட்டார். இது நடந்தது 1925ல் என்க.

**திருமணமும் ஆசிரியர் பணியும்:**

பல பெரும் புகழும் பெற்றுக் கையில் கடதாசி இல்லாமலும், பையில் பணமில்லாமலும் தாயகம் மீண்ட பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு ஊரில் கால்கட்டு இடப்பட்டது. அதாவது திருமண நிச்சயதார்த்தம் குருக்கள்மடத்தில் கோயிற்திருப்பணித் தலைவர் நா.குமாரப்பெருமாள் உடையாரின் பேத்தி நல்லம்மா என்பவரே மணப்பெண். தந்தையார் வினாசித்தம்பி மூத்ததம்பி, கோயில் வண்ணக்கர், தாயார் உடையாரின் மூத்தமகள் கந்தமை. 1926 ஆவணியில் திருமணப் பதிவு நிறைவேற்றப்பட்டது.

அதே ஆண்டு, அதே ஆவணித் திங்களில் விபுலாநந்த அடிகளாரிடமிருந்து திருகோணமலை இந்துக்கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராகக் கடமை ஏற்குமாறு பணிப்புரையும் கிடைக்கப்பெற்றது. இது திருமணப்பரிசு போலும் எனலாம்.

திருகோணமலையில் ஆசிரியராக பணி ஏற்றவர் பகலில் ஆசிரியராகவும் இரவில் அடிகளாரின் மாணாக்கராகவும் பணியாற்றினார். கவிஞர் மா.பீதாம்பரம் பண்டிதர் செ.பூபாலப்பிள்ளை பண்டிதர், ஐ.சரவணமுத்து, க.சீனிவாசகம் (பிற்காலத்தில் சுவாமி நடராஜானந்தா) சிரம்பரப்பிள்ளை, சிவதாஸ் (பிற்காலத்தில் சுவாமி பரிபூராணந்தா) என்போரும் இவருடன் அடிகளாரிடம் கற்றுத் தேர்ந்த மாணாக்கர்கள் ஆவர்.

சுவாமி விபுலானந்தர் பற்றி புலவர்மணி அவர்கள் தாம் எழுதிய "**உள்ளதும் நல்லதும்**" நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"ஒரு விஞ்ஞானி, கணிதமேதை, இலக்கிய இலக்கண கடல், தத்துவஞானி, சுவாமிகள் ஐம்பத்தைந்து வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்திருந்தாலும் அவர்

நூறு வருட சேவையைப் பூர்த்தி செய்தே மறைந்தார் என்றே துணிந்து கூறுவேன். ஒரு விபுலானந்தரைப் பெற ஈழநாடு தவமிருந்திருக்க வேண்டும்"

திருகோணமலையில் நல்லாசிரியராகத் தமிழ்ப் பணியாற்றிய பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பொதுப் பணிகளிலும் ஈடுபட்டார். விபுலானந்த அடிகளாரின் உள்ளங்கவர் ஆசிரியனாக, மாணாக்கனாக விளங்கினார். திருகோணமலை மக்களின் சைவத் தமிழ் உணர்ச்சிகளுக்கு உயிர்போன்று செயற்பட்டார்.

1928ம் ஆண்டு மகாத்மா காந்தியின் இலங்கை விஜயம் நடைபெற்றது. யாழ்ப்பாணம் செல்லும் மார்க்கத்தில் அனுராதபுர புகையிரத நிலையத்தில் திருகோணமலை மக்கள் சார்பில் வரவேற்புப்பத்திரம் பாடி வணங்கும் பேறு மட்டக்களப்புப் பண்டிதருக்குக் கிடைத்தது மகா அதிசய மெனலாம். குருவருளும் திருவருளுமே இவ்வதிசயம் நிகழக் காரணம் என்க.

இவ்வாறு திருகோணமலையில் அதிசயிக்கத் தக்கவாறு சாதனைகளை நிலைநாட்டிய பின்னர் 1930ம் ஆண்டு குரவரின் ஆசியும் அனுமதியும் பெறாது, சில அன்பர்களின் தூண்டுதலின் பேரில் தனது சுயவிருப்பத்தில் மட்டக்களப்புக்கு வந்தார். முன்னைய ஏற்பாட்டின்படி புளியந்தீவு அர்ச்சியசிட்ட அகுஸ்தினார் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தமிழ்ப்பண்டிதராகக் கடமையேற்றார். ஆசிரியர் கலாசாலையில் பல பயிற்சி ஆசிரியர்களுக்கு இலக்கணத்தில் ஆர்வமுண்டாக்கச் செய்து பிற்காலத்தில் பல பண்டிதர்கள், வித்துவான்கள் உருவாக வழிவகுத்தார். இவரின் மாணாக்கர்களைப் பிரபல்யம் பெற்ற கல்விமானாக விளங்கிய மகாவித்துவான் எவ்.எக்ஸ்.சி. நடராசா அவர்களும் ஒருவர் ஆவர். பண்டிதர் பிரசித்த நொத்தாரிஸ் க.சந்திரகேசரி இவரின் பிரிய மாணாக்கர்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பகுதிநேர ஆசிரியராகப் பணிபுரிந்தகாலம் மட்டக்களப்பு புனித சிசிலியா மகளிர் பாடசாலையிலும் கற்பிக்கும் தேவை ஏற்படவே அங்கும் பணியாற்றினார். இப்பணி 1934ம் ஆண்டுவரை நீடித்தது.

1935ம் ஆண்டின் பின்னர் ஆசிரியர் தொழில் புரிவதினின்று சற்றே விலகியிருந்தவர் பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள். அரசியல் பிரச்சினைகளிலும் ஈடுபடவேண்டி ஏற்பட்டது. இக்காலத்தில் மண்டூரில் உபதபால் நிலைய அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். அல்லாமலும் இரண்டாம் உலக மகா யுத்தகாலத்தில் உணவுக்கட்டுப்பாட்டு இலாகாவில் நெல் கொள்வனவுக் கட்டுப்பாட்டுக் காலங்களின் மேற்பார்வையாளர், யுத்தக்காலக் கரையோரக் காவலர்களின் மேற்பார்வையாளர்கள் பதவிகளை வகித்தும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடான சேவை செய்து சிறப்புப் பெற்றவர்.

இக்காலத்தில்தான் அதாவது 1945இல் திருவாளர் வ.நல்லையா அவர்களின் முயற்சியால் மட்டுமாநகரில் இன்று இந்துக்கல்லூரி எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ள அரசினர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. கிழக்கின் **"சாந்தி நிகேதனமென"** விளங்கிய அக்கல்லூரிக்கு தமிழ்ப் பண்டிதராகத் திரு.வ.நல்லையா அவர்களின் விருப்பப்படி 48 ரூபா சம்பளத்தில் 1947 இல் நியமனம் பெற்றார். அரசினர் கல்லூரி என்பது மக்கள் கல்லூரி, அக்கல்லூரியில் நன்மக்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார். வெற்றியும் கண்டார். புகழும் பெற்றார். இக்கல்லூரியில் 1847 தொடக்கம் 1959 ஆம் ஆண்டு மாசி மாதம் 15ம் திகதி வரை மங்காப் புகழுடன் பெரும்பணியாற்றி ஆசிரியர் பணியென்னும் தூய பணியினின்றும் ஓய்வுபெற்றார்.

**ஆக்கங்களும் மகிமைகளும்**

நல்லாசிரியராகத் திகழ்ந்த பண்டிதர் அவர்கள் தமிழ் அன்னையைப் பலவாறு அலங்கரித்து அழகை இரசித்தவர். நாவலர் வழி வந்தவர் பண்டிதமணி எனில் சுவாமி விபுலாந்தர் வழிவந்தவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை எனலாம். இவர் இயற்றிய நூல்களுள் மணிமகுடம் போல் விளங்குவது பகவத்கீதை வெண்பாவாகும். இந்நூல் கருமயோகம், பக்தியோகம், ஞானயோகம் என மூன்று பாகங்களாகப் பாடப்பட்டது. முதலாம்பாகம் கருமயோகத்திற்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. சீவக சிந்தாமணி, பால சரிதை நாடகம், விபுலாநந்தர் மீட்சிப்பத்து, மண்டூர்ப்பதிகம் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் பதிகம், சிற்றாண்டிப் பதிகம், மாமாங்கப் பதிகம், சர்வசமய சமரசப் பதிகம், இலங்கைப் புகையிரதப் பெருவிபத்து - 1923 முதலாம் பல செய்யுள் நூல்களை யாத்துப் புகழ் பரப்பியவர்.

இவரின் வசன நடைக்கு உரைகள் போன்று விளங்குவது, இவர் சிந்தாமணி வார சஞ்சிகையில் எழுதியதும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றம் நூலுருவில் வெளிக்கொணர்ந்ததுமான "**உள்ளதும் நல்லதும்**" என்னும் நூலாகும். 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் நாள் இந்து சமய, இந்துகலாசார இராஜாங்க அமைச்சு கண்டியில் நடாத்திய தேசிய தமிழ் சாகித்திய விழாவில் இந்நூலுக்குப் பரிசும் நூலாசிரியருக்கு "**இலக்கியச் செம்மல்**" என்ற பட்டமும் விருதும் தேகாந்த நிலையில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை ஈண்டு நினைவிருத்தற்குரியது.

இம்மன்றம் புலவர்மணியின் தெரிந்தெடுக்கப்பட்ட கவிதைகளைத் தொகுத்து "**புலவர்மணி கவிதைகள்**" எனும் பெயரிலும், தினகரன் வாரமலரில் "**கற்றறிந்தாரேத்துங் கலித்தொகை**" எனும் தலைப்பில்

வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்து "**பாலைக் கலி**" எனும் நூலாகவும் விபுலாந்தர் மீட்சிப்பத்தினை மகாவித்துவான் எவ்.எக்ஸ்.சி.நடராசா அவர்களின் குறிப்புரையுடனும் பிரசுரம் செய்துள்ளது.

1926 இன் பின்னர் எமது நாட்டில் வெளிவந்த ஆண்டு மலர்கள், நினைவு மலர்கள், சஞ்சிகைகள், நூல்கள் என்பவற்றில் எண்பது சதவீதமானவற்றில் இவரது கவிதையோ, ஆசியோ, கட்டுரையோ வெளிவந்துள்ளன.

வானொலிப் பேச்சாளராக, சைவசமய ஆலோசனைச் சபையின் உறுப்பினராக, கோயில் பிணக்குகளைத் தீர்க்கும் ஆலய விசாரணைச் சபைகளின் ஆலோசகனாக, சமாதான நீதிபதியாக இவர் செயற்பட்டார். புலவர்மணியி வாழ்நாள் முழுவதும் தேசிய ஒற்றுமை எனும் அடிப்படையிலே அமைந்தது.

"**இலங்கை மணித்திருநாடு**" எனும் பாடல் இவரைத் தேசியக்கல்வி மட்டத்திற்கு உயர்த்தியுள்ளது. இந்து - இஸ்லாம் மக்களிடையே ஒற்றுமை நிலவுவதற்காக பாடுபட்டார். அக் காலங்களில் நாட்டின் நாலா திசைகளிலுமுள்ள கலா மன்றங்கள், தமிழ்ப்பணி மன்றங்கள் இவரைப் பாராட்டிப் பல மகிமைப் பட்டங்களை வழங்கிக் கௌரவித்துள்ளன.

1951 ஆம் ஆண்டு அவரது பிறந்த நாடாகிய மட்டக்களப்பில் கலையொளி பரப்பிய மட்டக்களப்புத் தமிழ்க்கலை மன்றத்தின் சார்பில் அதன் தலைவர் கவிராஜகேசரி பண்டிதர் ஆ.சபாபதி அவர்களால் "**புலவர்மணி**" எனும் பட்டமும் பட்டயமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். பின்னொருபோது ஆரிய திராவிட

பாஷாவிருத்திச் சங்கத்தினர் "**பண்டிதமணி**" எனும் பட்டம் வழங்கினர். இவைபற்றிய புலவர்மணி அவர்கள் "**உள்ளதும் நல்லதும்**" எனும் நூலில் பின்வருமாறு கூறுகிறார்.

"எத்தனையோ பட்டங்கள் என்மீது சுமத்தப்பட்ட போதிலும் புலவர்மணி எனும் பட்டமே எனக்குத் தாங்குவதற்கு இலேசாயிருக்கிறது. சபாபதி பண்டிதர் வித்துவான் வீ.சி. கந்தையா, வித்துவான் எவ்.எக்ஸ்.சி.நடராசா அன்பர் வெ.திருநாவுக்கரசு முதலிய நண்பர்கள் ஏற்றிய உள்ளூர்ச் சுமையாதலால் இதை இலேசாகத் தாங்குகின்றேன். புலவர்மணி மக்கள் மத்தியில் வாழ்கின்றது"

**முடிவுரை**

புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மட்டக்களப்பிற்கு மாத்திரமல்ல, முழு இலங்கைக்கும் பொதுவான அருந்தவப் புதல்வர். கருவிலே திரு. உடையாராய்ப் பிறந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, இல்லறத்தை நல்லறமாக்கி தருமலிங்கம், சாந்தலிங்கம், சிவலிங்கம் (விஜயரெத்தினம்) சத்திலிங்கம், சந்தானலெட்சுமி, தனலெட்சுமி என்னும் பிள்ளைகளின் தந்தையாய் வாழ்ந்தவர்.

புலவர்மணி அவர்கள் "**சமாதான நீதவான்**" பட்டம் பெற்றமையைப் பாராட்டி 1978 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ம் திகதி குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தில் அந்நாள் களுவாஞ்சிக்குடி உதவி அரச அதிபர் திருவாளர் அ.கி.பத்மநாதன் அவர்கள் தலைமையில் ஒரு விழாவெடுக்கப்பட்டது. அவ்விழாவில் தலைவரால் பொன்னாடை அணிவிக்கப் பலரும் புகழ்மாலை சூட்டினர். விழா முடிவுற்றதும், மிகவும் மனம் நிறைந்தவராகக் காணப்பட்டார். அன்றைய விழாதான் மண்ணுலகில் அவருக்காக எடுத்த இறுதி விழாவென்பதை எவரும் அறிந்திலர்.

காலதேவன் தன்கடமையிற் கண்ணாயிருந்தார். புலவர்மணி அவர்களின் பூவுலக வாசகால அனுமதி 1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதியுடன் முடிவடைந்ததும் மீண்டும் அவரை மண்ணுலகினின்றும் விண்ணுலகிற்கு அழைத்துக் கொண்டான். ஆம் அந்நாள்தான் புலவர்மணி சிவபதமடைந்த நந்நாளாகும். எந்தப் பொன்னாடையில் அவரது பூதவுடல் பொலிவுடன் விளங்கியதோ அதே பொன்னாடை பூதவுடலையும் அலங்கரித்து அவரின் இறுதி யாத்திரை இடம் பெற்றது.

கீதை பல செய்து கீர்த்தி மிகப்பெற்ற புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் புகழ் தமிழ் உள்ளளவும் நின்று நிலவுமிவ்வேளையில் அவருக்குத் தேகாந்த நிலையில் "**இலக்கியகலாநிதி**" எனும் கௌரவப் பட்டத்தினை 23.04.1997 அன்று இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் வழங்கித் தனக்குப் பெருமை தேடிக்கொண்டது கிழக்குப் பல்கலைக்கழகம்.

இதே பல்கலைக்கழகம் 1996 ஜுலை 25ம் திகதி புலவர்மணி அவர்களின் மூத்த நன் மாணாக்கனாம் மகாவித்துவான் எவ்.எக்ஸ்.சி.நடராசா அவர்களுக்கும் கௌரவ இலக்கிய கலாநிதி பட்டத்தை தனது பல்கலைக்கழக வரலாற்றில் முதல் தடவையாக வழங்கியதன் மூலம் தமிழ் கூறும் நல்லுலகில் அழியாப் புகழைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டமையும் இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமென்போம். குருவும் சிஷ்யனும் இந்நூற்றாண்டின் மறைந்தும் மறையாத மனித மாணிக்கங்கள் ஆவர்.

**இக்கட்டுரையை நிறைவு செய்ய முன்னர்:**

புலவர்மணி அவர்கள் ஈட்டிய பெருமதிப் பொன்றினைக் குறிப்பிட விரும்புகிறேன். 1994 ஆம் ஆண்டு தேசிய வீரர்கள் தினமாக மே

மாதம் 22ந் திகதி இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் முத்திரைப் பணியகம் ஞாபகார்த்த வெளியீடாக நான்கு தேசிய வீரர்களுக்கு முத்திரை வெளியிட்டது. சங்கைக்குரிய மஹா கவிந்திர மகிரிபெனே தம்மரட்ன மஹாதேரர், மறைந்த சனாதிபதி மேதகு ரணசிங்க பிரேமதாச, கலாநிதி கொல்வின் ஆர்.த.சில்வா, புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை ஆகியோரே அந்த நால்வருமாவார்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞர்களில் ஒருவரும் சிறந்த புலவருமாவர். 1899 ஆம் ஆண்டு தை மாதம் 8ந் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்டூரில் பிறந்தார்.

இலங்கையின் உத்தம புத்திரர்களில் ஒருவராகிய இவர் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்டு தொண்டாற்றி 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி சிவபதமடைந்தார்.

என்னும் புறக்குறிப்புடன் ஒரு ரூபா பெறுமதியான ஞாபகார்த்த முத்திரையை வெளியிட்டுப் புலவர்மணி அவர்களை மகிமைப்படுத்தியதோடு முத்திரை வெளியீட்டு வரலாற்றில் தனக்குப் பெருமையும் தேடிக்கொண்டது இலங்கை அஞ்சல் திணைக்களம்

ஈழ நன்னாடே ஈழ நன்னாடே
இனிதெனைப் பெற்ற ஈழநன்னாடே
ஊழி யூழிநீ வாழியென்னம்மோய்.

**-புலவர்மணி-**

# சமய வாழ்வு

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம்.
(ஓய்வுபெற்ற அதிபர்)

உலகிலே பல்வேறு காலங்களில், பல்வேறு மதங்கள் தோன்றி மக்களின் வாழ்க்கையைப் பண் படுத்தியுள்ளன. அவ்வாறு தோன்றிய மதங்களுள் இந்து மதம் மிக மிகப் பழமையானது. இந்து மதம் ஆன்மீக ஈடேற்றத்திற்கு உதவும் வாழ்க்கை முறைகளைத் தெளிவாகச் சொல்லுகின்றது. உண்மையான மதம் வாழ்க்கையிலிருந்து தான் உற்பத்தியாக வேண்டும். அது வாழ்க்கையோடு ஒட்டிச் செயல்பட வேண்டும். நல்ல வாழ்க்கைக்குப் பயன்படும் முறைகளைத் தெளிவாக எடுத்துக் கூறுதல் வேண்டும். அப்படிப்பட்ட மதமே இந்து மதம் ஆகும்.

வாழ்க்கைவேறு சமயம் வேறு அல்ல. மதத்தினைச் சரியாகப் புரிந்து கொள்ளும் போது வாழ்க்கையைச் சரியாகச் சீர் செய்து கொள்ளலாம். இந்துமதம் என்பது மேலை நாட்டவரால் பிரிவினைக்காக எடுத்தாளப்பட்ட பெயராகும். "**சனாதன தர்மம்**" என்பதுதான் இதன் உண்மைப் பெயர். "மக்களின் உயர் வாழ்வுக்கான அறநெறியை எடுத்துக் கூறுதல்" என்பதுவே இதன் பொருளாகும். ஆதியில் உலகெங்கும் பரவியிருந்தது இந்து மதமேயாகும்.

மதம், சமயம், மார்க்கம் என்பதெல்லாம் ஒரு பொருட் சொற்கள். மதம் என்ற சொல்லுக்கும், அறிவைக் கொடுக்கும் மதி என்ற சொல்லுக்கும் இணைந்த தொடர்புண்டு. நமது பக்தியை வளர்ப்பதற்கும் அதனை வலிமைப்படுத்துவதற்கும் துணை செய்வதுதான் மதம்.

உலகிலுள்ள எல்லா மதங்களுமே நம்மை நாமே உயர்த்திக் கொள்ளும் வழிகளைத்தான் கூறுகின்றன. மனித சமுதாயத்தில் ஒற்றுமையும், அமைதியினையும், அன்பினையும் வளர்க்க வேண்டுமென்றே எல்லா மதங்களும் கூறுகின்றன. அவற்றுள்ளும் இந்துமதம் சிறப்பாக அன்பையே வலியுறுத்திக் கூறுகின்றது. எங்கும், எல்லா உயிர்களிலும் இறைவனைக் காணவேண்டுமென்றே இந்து மதம் கூறுகின்றது. இந்து மதத்தினை இந்து தர்மம் எனவும் ஒரு சிலர் கூறுவர்.

புண்ணியம் என்பதை வடமொழியில் தர்மம் எனக் கூறுவர். உலகிலே தர்ம, அதர்மங்கள் பலவிதமாக உள்ளன. அவற்றுள் தனிமனித தர்மங்கள், குடும்பத்தின் தர்மங்கள், கிராமத்தின் தர்மங்கள், நகரத்தின் தர்மங்கள், தேசத்தின் தர்மங்கள் எனப் பிரிக்கப் பட்டுள்ளன. இத்தகைய தர்மங்கள் அனைத்தையும் இந்துமதம் போதிக்கின்றது.

நமது வாழ்வு அகவாழ்வு, புறவாழ்வு என இருவகைப்படும். இன்றைய மனிதன் புறவாழ்வை மட்டுமே சிந்திக்கின்றான். அகவாழ்வைப் பற்றிச் சிந்திப்பதாக இல்லை ஆனால் அகவாழ்வுதான் ஆன்மீக விடுதலைக்கு வழிகாட்டுவதாகும். அகவாழ்வைப் பற்றிச் சிந்தியாது விட்டமையினாலேயே நமக்கு இத்தனை இன்னல்களும் தோன்றுவதற்குக் காரணமாயிற்று. நாம் எப்பொழுதும் அகவாழ்வைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். புறவாழ்வு ஊண், உறக்கம், உறைவிடம், தற்காப்பு, கல்வி என்பவற்றை பூர்த்தி செய்வதிலேயே

சென்றுவிடுகின்றது. இத்தகைய வாழ்வு மிருகங்களிடத்தும் உள்ளன. பசுவிடம் பசுவின் குணத்தைக் காணலாம். புலியினிடத்து புலியின் குணத்தைக் காணலாம். ஆனால் மனிதனிடத்து மனித குணத்தைக் காணமுடியாமல் உள்ளது. பசுவைப் புலியாக்க முடியாது, புலியைப் பசுவாக்கவும் முடியாது. ஆனால் மனிதன் புலியாகவும் வாழலாம், பசுவாகவும் வாழலாம். மனிதனாகவும் வாழலாம். தேவனாகவும் வாழலாம். மனிதனிடத்து மனித சக்தி, தெய்வ சக்தி, மிருக சக்தி ஆகிய மூன்று சக்திகள் உண்டு. அதில் மிருக சக்தியை மேலோங்க விடாமல், மனித சக்தி, தெய்வ சக்தி என்பவற்றினைத் தொழிற்படச் செய்ய வேண்டும். மனிதனும் தெய்வமாகலாம் என்பதை எம் கண்முன்னே காண்கின்றோம். ஆயினும் சமய வாழ்க்கையின்றி மனித வாழ்க்கை வாழ முடியாது.

மேலும் அரசியல், சமூக பொருளாதார, சமய நெறிகளில் உலகைத் திருத்திய உத்தமர்கள் வரிசையில் பலர் காணப்படுகின்றனர். **"உன்னைப்போல் உன் புறத்தியானையும் நேசி"** எனப்போதித்த இயேசு பிரான், இறைவன் அருளால் தன் உள்ளத்தெழுந்த உண்மையான உணர்வுகளைத் தன்னுடனிருந்த சகாக்களுக்கு எடுத்தியம்பி வழிகாட்டிய அண்ணல் முஹம்மது நபி, அன்பு, அஹிம்சை, ஜீவகாருண்யம் என்பவற்றை அருளுபதேசமாக எடுத்துரைத்துப் போதி மர நிழலிலிருந்து ஞானம் பெற்ற புனிதவள்ளல் புத்தபிரான், **"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"** என மொழிந்து உதாரண வாழ்க்கை வாழ்ந்து காட்டிய தாயுமான சுவாமிகள், நீண்ட நாள் நீரின்மையால் வாடி வதங்கிச் சோர்வுற்றுத் துவண்டுபோன மல்லிகைச் செடியினைக் கண்டு மனங் கசிந்து கண்ணீர் மல்கிய இராமலிங்க வள்ளலார், **"சத்தியமே உண்மை மார்க்கம் அஹிம்சையே உண்மை வழி"** எனப் போதித்த காந்தி அடிகள் என்போரெல்லாம் தெய்வ சக்தியில் மேன்பட்டவர்கள் என்பதை நாம் அறிவோம்.

ஆனால் இன்றைய மனிதனோ சமய வாழ்க்கையின்றி மனிதனாக வாழ முடியும் என்று கனவு காண்கின்றான். கலாசாரம், பண்பாடு என்ற சொற்களை அடிக்கடி கேட்கின்றோம். ஆயினும் அவற்றையிட்டுச் சிந்திப்பது இல்லை. அகச் சீர்திருத்தம், புறச்சீர்திருத்தம் இரண்டையும் அகப்படுத்தி நிற்பதே கலாசாரமாகும். புறச் சீர் திருத் தத் திற்கு முக்கியத் துவம் அளிக்காது அகச்சீர்திருத்தித்திற்கு முக்கியத்துவம் கொடுத்தவர்களையே உயர்ந்தோர் என உலகம் போற்றியது. **"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே"** என்பதையும் நாம் அறிவோம். உட்சுவர் இருக்கப் புறச்சுவர் பூசுவதால் பயனில்லை. சமயத்தை இழந்து நமது சமூகம் வாழ முற்படுவதால் உயிரை இழந்தபின் உடல் வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பது போலாகும. கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கலாமா? பட்டமரத்திற்குத் தண்ணீா ஊற்றித் தழைக்க வைக்கலாமா? இவற்றையிட்டு நாம் சிந்திக்க வேண்டும்.

சமய வாழ்வு வாழ்ந்து காட்டிய நாயன்மார்கள், ஆழ்வார்கள் வாழ்க்கையில் பல உண்மை ஊடகங்களை நாம் கண்டு கொள்ளலாம். மனித சமூகம் கடைப்பிடிக்க வேண்டிய பல நல்ல வழிமுறைகளை அவர்களின் வாழ்க்கை ஊடாக நாம் உய்த்துணரலாம்.

உதாரணமாகத் திருநீலகண்ட நாயனார் வாழ்வில் திடசங்கற்பம் கொள்ளும் மனோபாவம், இயற்பகை நாயனார் வாழ்வில் மனித சக்திக்கு அப்பாற்பட்ட மனோநிலையில் தனது மனைவியைக் கூட சிவனடியாருக்கு ஈந்து கொடுக்கும் ஈகைக்குணம், இளையான் குடி மாற நாயனார் வாழ்வில் விருந்தோம்பல், மெய்ப்பொருள் நாயனார் வாழ்வில் மாசு மறுவற்ற பக்தி உணர்வு என்பன அடித்தளமாய் அமைந்து இருப்பதை அறியலாம்.

மனித வாழ்க்கையில் திட சங்கற்பம் கொள்ளல், ஈகைக்குணம், விருந்தோம்பல், சிவசின்னங்களை மதித்தல், மாசுமறுவற்ற பக்தி உணர்வு ஆகிய நற்குணங்களைக் கடைப்பிடித்தொழுக வேண்டுமென நாயன் மார்களின் சமய வாழ்வு எடுத்துக் கூறுகின்றது. இதே போலவே மற்றைய நாயன் மார்களின் வாழ்விலும் ஒவ்வோர் நற்குணங்கள் இழையோடியிருப்பதை அவதானிக்கலாம்.

எனவே இவற்றினை நோக்கும் பொழுது உண்மையான ஒரு மதம் வாழ்க்கையிலிருந்துதான் உற்பத்தியாக வேண்டுமென்பதையும், அது வாழ்க்கையோடு ஒட்டிச் செல்ல வேண்டுமென்பதையும் அறிந்து கொள்ளலாம். இவ்வகையில் வாழ்க்கைக்குப் பயன்படும் நல்ல அறிவுரைகளை, வழிகாட்டல்களை எடுத்துக் கூறும் ஒருமதமாக இந்துமதம் திகழ்கின்றதென்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளுவர்.

**நாளை என்பது நம்கையில் இல்லை. இன்று ஒரு பயனுள்ள செயலைச் செய்ய எண்ணினால் இன்றே செய்து விடுவது நல்லது. நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணினால் நாளை என்ன நடக்கும் என்பதை யார் அறிவார்? எந்தச் செயலையும் தள்ளிப் போடுவது அறிவுடைமையாகாது.**

**2.3 அரசினர் ஆசிரியர் கலாசாலை**
**மட்டக்களப்பு 2005/2006**
**கலைச் செல்வி**
**வைரவிழா ஆரம்ப மலர்**

# மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை வரலாறு

**ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம்.**

## முன்னுரை

1996.11.20 அன்று தனது பொன்விழாவை அதிபர் அமரர். திரு.வ.கனகசிங்கம் அவர்கள் தலைமையில் கொண்டாடிய மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை இன்று 60வது வயது நிறைவில் கொண்டாடும் வைர விழாவின் போது அதன் ஆரம்ப காலவரலாற்றினை நினைவு கூறுவது மிகவும் பொருத்தமானது.

இந்நினைவு கூறும் பணியை ஆசிரியர் கலாசாலையின் மூத்த புதல்வனும், பொன்விழா நிகழ்வின் போது இக்கல்லூரியின் பயிற்சி பெற்று கல்வி வளர்ச்சிக்கு அரும்பணி யாற்றியதுடன் இலக்கிய கலை, கலாசார நிருவாகத்துறைகளிலும் சமூகத்துறைகளிலும் ஈடுபட்டு சாதனைகள் புரிந்து மேன்மை பெற்றமைக்காக "**செம்மனச் செல்வர்**" பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவனுமாகிய என்னிடம்

மலரவுள்ளவைரவிழா மலருக்கு எழுதி உதவுமாறு பணித்த கலாசாலை நிருவாகிகளுக்கு நன்றி கூறி என்னை உருவாக்கிய கலாசாலை அன்னையின் திருப்பாத கமலங்களில் இக்கட்டுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

## தோற்றம்

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை தோற்றுவிக்கப்பட்ட காலகட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட பொதுவாகக் கிழக்கு மாகாண கல்வி நிலைகளைப் பற்றித் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமானது. அரசினர் பாடசாலைகள் மிக மிகக்குறைவு, உதவி நன்கொடை பெறும் சமய ரீதியான சமய நிறுவனங்களான கிறிஸ்தவ, மெதடிஸ்த இந்துப்பாடசாலைகளே காணப்பட்டன.

கல்லடி - உப்போடை இராம கிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத். சுவாமி நடராஜானந்தஜீ அவர்களின் பரிபாலனத்தில் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாயலம், ஆனைப்பந்தி இ.கி.மி. பெண்கள் பாடசாலை, கல்லடி உப்போடை விவேகானந்தா மகளிர் பாடசாலை, ஆரைப்பற்றை சைவப்பாடசாலை, மண்டூர் சைவப்பாடசாலை, காரைதீவு சாரதா வித்தியாலயம் போன்றவையும், திருகோணமலையில் இந்துக்கல்லூரியும் இயங்கியன. மெதடிஸ்த சபை முகாமையாளர் திரு.S.A. செல்வநாயகம் அவர்களின் முகாமைத்துவத்தில் அரச மெ.மி.த. கலவன் பாடசாலை, மத்திய கல்லூரி வின்சென்ற் மகளிர் பாடசாலை, ஆரைப்பற்றை மெ.மி.த. கலவன் பாடசாலை, கிரான்குளம் மெ.மி.த. கல்வன் பாடசாலை, கல்முனை G.V.S. கொன்வென்ற் என்பனவும் கத்தோலிக்க முகாமையின் கீழ் சென். மேரிஸ் பாடசாலை, புனித மைக்கல் கல்லூரி, புனித சிசிலியா மகளிர் பாடசாலை, கோட்டைமுனை புனித செபஸ்தியார் றோ.க. பாடசாலை, தேத்தாத்தீவு

றோ.க.பாடசாலை, கல்முனை கார்மல் கொன்வென்ற், பாத்திமாக் கல்லூரி என்பனவும் நிருவகிக்கப்பட்டன. அரசினர் பாடசாலைகளாக முஸ்லிம் பாடசாலைகள் ஒரு சில இயங்கின. ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளென அரசடி மெ.மி. பாடசாலையைச் சாதனா பாடசாலையாக கொண்டு அரசடி மெதடிஸ்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும், சென் மேரிஸ் பாடசாலையைச் சாதனா பாடசாலையாகக் கொண்டு புனித அகுஸ்தீனார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் இயங்கின. இவ்விரு பயிற்சிக் கல்லூரிகளிலும் அவ்வச் சமய மாணவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டன. இங்குள்ள இந்து சமய மாணவர்கள் மிகுந்த கஷ்டத்தின் பேரில் கோப்பாய் ஆசிரியர் கல்லூரிக்கும் முஸ்லிம் மாணவர்கள் அளுத்கம முஸ்லிம் பயிற்சிக் கல்லூரிக்கும் செல்ல வேண்டிய நிலையே இருந்தது.

இந்நிலையில் தேசிய ஆசிரியர் கலாசாலையின் தேவை உணரப்பட்டது. மட்டக்களப்புத் தெற்குத் தொகுதியின் அரச சட்ட சபை உறுப்பினராகப் பணிபுரிந்த திருவாளர் S. தர்மரெத்தினம் MSC அவர்களின் முயற்சியினால் அட்டாளைச்சேனை வாடி வீட்டில் 1942 ஜுலை மாதத்தில் ஒரு ஆசிரியர் கலாசாலையை அரசாங்கம் அமைத்து உதவியது. இவ்வாசிரியர் கலாசாலையில் தமிழ் முஸ்லிம் மாணவர்கள் இரு சாராரும் சேர்ந்து பயிற்சி பெற்றனர். இக்கல்லூரியின் முதல் அதிபராகப் பணியேற்றவர் சிவானந்தா வித்தியாலயத்தில் கற்பித்துக் கொண்டிருந்த திரு.V. நல்லையா B.A. (London) அவர்கள். அக்காலத்தில் ஆசிரியர் பயிற்சிக்கு சிரேஷ்ட தராதரப் பத்திரப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் நேர்முகப்பரீட்சையின் பின்னர் போட்டிப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி பெற்று 2ம் வகுப்பு பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக வெளியேறுவார்கள் இந்நாட்களைப் போன்று ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படவில்லை.

அரசாங்கம் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளைக் கையேற்றதும் மட்டக்களப்பில் இயங்கிய இரண்டு பயிற்சிக் கல்லூரிகளும் மூடப்பட்டன. ஒரே ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியே அட்டாளைச் சேனையில் இயங்கியது.

இதே காலத்தில் மட்டக்களப்பு வடக்குத் தொகுதிக்கு நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் திரு.V. நல்லையா B.A.(London) அவர்கள் தெரிவு செய்யப்பட்டு கல்விக்குழு உறுப்பினரானார். அரசடி மெ.மி. ஆசிரியர் கலாசாலை மூடப்பட்டதும் அதன் அதிபராகப் பணியாற்றிய அதிர் திரு.V.T. ஞானசூரியம் B.A அட்டாளைச்சேனைப் பயிற்சிக் கல்லூரி அதிபரானார்.

நானும் ஆசிரியர் பயிற்சி பெறுநற் பொருட்டு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அட்டாளைச்சேனை ஆசிரியர் கல்லூரிக்கு அதிபர் திரு.V.T. ஞானசூரியம் B.A. அவர்கள் முன்னிலையில் தோற்றினேன். எனது தராதரப்பத்திரங்களும் ஏனைய தகவல்களும் பரீசிலிக்கப்பட்டு போட்டிப்பரீட்சைக்கு அதிபர் மூலம் விண்ணப்பித்து பரீட்சையும் எழுதி பரீட்சை முடிவிற்காக காத்திருந்த காலம்.

அதிபர் திரு. V.T. ஞானசூரியம் B.A. அவர்கள் மட்டக்களப்பு வட்டாரக்கல்வி அதிகாரியாகப் பதவி மாற்றம் பெற்றதும் திரு.V.நல்லையா MSC அவர்களின் முழுக்கவனமும் இதன்பால் ஈர்க்கப்பட்டது. அக்காலத்தில் காத்தான்குடி மத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றியவர் யாழ்ப்பாணம் வசவிளானைச் சேர்ந்த பிரபல்யமான கல்விமான் திரு.S.கந்தசாமி B.Sc அவர்கள். அவரை உடனடியாக அட்டாளைச்சேனை பயிற்சிக் கல்லூரியின் அதிபராகவும், கோட்டைமுனை புனித செபஸ்தியார் றோ.க. பாடசாலை அதிபர் பண்டிதர் செ.பூ.பாலப்பிள்ளை அவர்களைத் தமிழ்ப் போதனாசிரியராகவும் நியமித்து இக்கல்லூரி செவ்வனே நடைபெற ஆவன செய்தார்.

இவ்வாசிரியர் கலாசாலையில் முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை கூடுதலாகவும், தமிழ் மாணவர்கள் 29 பேர் மாத்திரமே பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தனர். எவ்வித பேதமுமின்றி கல்வி பயின்று வந்த இவர்கள் மத்தியில் திடீரென ஏற்பட்ட கலாசாரப் பிறழ்வு காரணமாக ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து தமிழ் மாணவர்கள் தொடர்ந்தும் கல்வி கற்க முடியாத நிலை ஏற்படவே. தமிழ்ப் பேராசான் பண்டிதர் செ.பூபாலப்பிள்ளை அவர்கள் தனது தலைமையில் மாணவர்கள் அனைவரும் இரவோடிரவாக மட்டக்களப்பை அடைந்தனர். மட்டக்களப்பை அடைந்த மாணவர்கள் பண்டிதர் அவர்களின் ஏற்பாட்டின்படி கல்லடியில் தங்க வைக்கப்பட்டனர்.

மட்டக்களப்பில் அமைந்துள்ள ஆளுநர் பணிமனையை அடுத்திருந்த ஒரு கட்டடத்தில் மறு நாளே வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இவ்விடயம் அரசாங்க சட்டசபையில் கல்விக்குழு உறுப்பினராகக் கடமையாற்றிய திரு.V. நல்லையா MSC அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதும் தமிழ் சமூகத்திற்கு தனிக்கலாசாலை வேண்டும் என்ற குரல் சட்டசபையில் ஓங்கி ஒலித்தது, இதனை அடுத்து அரசினர் கட்டளைப்படி இன்று இந்துக்கல்லூரியில் விஞ்ஞான பிரிவு அமைந்திருக்கும் பகுதியில் இருந்த R.A.F. படையினர் யுத்தகாலத்தில் அமைத்திருந்த ஓலைக் கொட்டகைகளில் மாணவர்களுக்கு விடுதி வசதிகளும் வகுப்பறைகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. தற்காலிக அதிபராக அக்காலத்தில் Basic ஆங்கில வட்டாரக்கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய திரு.வி. துரைசிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டார். அவருடன் பண்டிதர் செ.பூபாலப்பிள்ளை அவர்களும், திருவாளர்கள் S. சேதுகாவலர் B.O.L., B.T. உடற்பயிற்சி ஆசிரியராக M.C. தியாகராசா இசைப்பயிற்சி

ஆசிரியராக P.சந்திரகேசரம் ஆகியோரும் நியமிக்கப்பட்டதும், 1946 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி திரு.V.நல்லையா MSC அவர்களால் குருகுலமுறையான மட்டக்களப்பு அரசினர் ஆண்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அங்குராப்பணம் செய்யப்பட்டது. இவ்வைபவத்திற்கு மட்டக்களப்பு வித்தியாகந்தோர் கல்வி அதிகாரி (E.O.) திரு.அ.வி. மயில்வாகனம் உட்பட கல்வித்திணைக்கள அதிகாரிகள் பலரும் சமுகமாயிருந்தனர்.

புனித அகுஸ்தினார் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய பின் புனித சிசிலியா மகளிர் பாடசாலையுடன் இணைந்திருந்த மகாவித்துவான் F.X.C. நடராசா அவர்களும் இங்கு நியமனம் பெற்றார்.

இக்காலத்தில் ஆசிரியர் பயிற்சிக்காகத் தேர்வுப்பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுக்காகக் காத்திருந்த மாணவர்களில் 52 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 1946 ஜுலை முதலாந் திகதி முதல் வருடப்பயிற்சி மாணவர்களாகச் சேர்க்கப்பட்டனர். அந்த 52 மாணவர்களுள் நானும் ஒருவன். அக்காலத்தில் எமது பயிற்சிக் காலம் மூன்று வருடங்கள். ஆசிரியர் கல்விக்குப் பொறுப்பாளராகத் திணைக்களத்தில் கடமையாற்றிய திரு.S.F.De. சில்வா அவர்கள் இக்கலாசாலையைத் தரிசித்து இதன் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றி வைப்பதாகக் கூறிச் சென்றார்.

இந்நிலையில் தமிழ்ப் பேராசான் பண்டிதர் செ. பூபாலப்பிள்ளை அவர்களே விடுதிப்பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டு எங்களின் உணவு, கல்வி, கலாசாரச் செயற்பாடுகள் என்பவற்றின் கண்காணிப்பாளராக இருந்து எம்மை வழிப்படுத்தியவர் என்பேன். வெள்ளிக்கிழமை தோறும் மாமாங்கேஸ்வரர் ஆலயம் சென்று

கூட்டுப்பிரார்த்தனை, பூசை என்பன செய்வித்தபோது அவர் மனதிலெழுந்த எண்ணமே இன்று ஞான விநாயகராலயமாக இங்கு மிளிர்கிறது.

**வளர்ச்சி**

தற்காலிக அதிபராகவிருந்த திரு.வி. துரைசிங்கம் அவர்கள் மீண்டும் தனது பதவிக்குச் சென்றதும் இவ்விடத்திற்கு 01.09.1946 உடன் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி அதிபர் திரு.எஸ். கந்தசாமி BSC அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். மகாவித்துவான் F.X.C. நடராசா அவர்கள் அதே தினத்தில் அட்டாளைச்சேனை பயிற்சிக் கல்லூரிக்குத் தமிழ் விரிவுரையாளராக மாற்றம் பெற்றார்.

திரு.S.கந்தசாமி BSC அவர்களின் காலம் ஆசிரியர் கலாசாலையின் பொற்காலம் என்பேன். இரண்டாவது தொகுதி மாணவர்களாகிய நாங்கள் பயிற்சி பெற்று 31.03.1948 உடன் வெளியேறினோம். அதைத் தொடர்ந்து வருடந்தோறும் பயிற்சிக்காக மாணவர்கள் ஒழுங்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். R.A.F. ஓலைக் குடிசைகளில் இயங்கியவை யாவும் தற்போதைய கட்டடங்களுக்கு மாற்றப்பட்டன. பல்துறை சார்ந்த விரிவுரையாளர்களான திருவாளர்கள் P.E. டானியேல், S. பொன்னப்பா, S. ஆறுமுகவடிவேல், E.R. வில்லியம், S. சொலமன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இவர்களிடம் சிறந்த பயிற்சி பெற்ற நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று இக்கல்லூரியின் புகழ்பரப்பினர். இக்கால கட்டத்தில் 16.07.1947 இல் திரு.S.F.De சில்வா அவர்களும் 25.09.1947 இல் வித்தியதிபதி திரு.ஐயன் சண்டிமன் அவர்களும் இக்கலாசாலையைத் தரிசித்து இதன் வளர்ச்சியை வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

**மட்டக்களப்பு அரசினர் பெண்கள் பயிற்சிக் கல்லூரி**

கிழக்கு மாகாணத்திற்கென ஆண்கள் பயிற்சிக் கல்லூரி அமைக்கப்பட முன்னர் எவ்வாறு ஆண்கள் பயிற்சி பெறுவதற்காக யாழ்ப்பாணம் சென்றார்களோ அவ்வாறே பெண்களும் யாழ்ப்பாணம் நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றனர். மிக மிகக் குறைவாக ஒரு சிலரே அவ்வாறு செல்ல முடிந்தது. இந்நிலையை உணர்ந்த அக்கால கற்குடாத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு.V. நல்லையா அவர்கள் இக்குறையையும் நீக்குவதற்காக இலங்கை இராமகிருஷ்ண மிஷனுக்குச் சொந்தமான மட்டு நகரிலுள்ள ஆனைப்பந்திப் பெண்கள் பாடசாலையில் பெண்களுக்கான பயிற்சிக் கல்லூரி ஒன்றை ஆரம்பித்தார். அதிபராக திருமதி. E.S. தம்பிராசா B.A. அவர்களும் போதனாசிரியர்களாக திருமதி. மங்கையக்கரசி மயில்வாகனம், திருமதி. கந்தையா கங்கேஸ்வரி, திருமதி. எல்.டானியேல் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். ஆண்கள் ஆசிரியர்கள் பயிற்சி மாணவர்களாக அதிகரித்த வேளையில் பெண்கள் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெறும் பெண்களின் தொகை குறைந்ததும் அரசின் நிதி நிலமை காரணமாகவும் மீண்டும் திரு.V. நல்லையா அவர்களின் முயற்சியினால் 1950 ஆம் ஆண்டு மே மாதம் 08ம் திகதி ஆண், பெண் ஆசிரியர் கலாசாலைகள் இரண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டு மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை என்ற பெயரில் அதிபர் திரு. S. கந்தசாமி BSC அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக வளர ஆரம்பித்தது, பல பாடங்களிலும் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டன.

**பழைய மாணவர் மன்றம்**

அதிபர். திரு.S.கந்தசாமி அவர்கள் காலத்தில் அவரால் ஆரம்பிக்கப்பட்டு வளர்க்கப்பட்டதுதான் இப்பழைய மாணவர் சங்கம் வறிய பயிற்சி மாணவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் உதவும் நோக்குடன் "சகாயநிதி" ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. வாழைச்சேனை தொடக்கம் தம்பிலுவில் பரியந்தம் இருந்த பழைய மாணவர்களுடன் நேரில் சென்று இதற்குரிய நிதியைத் திரட்டி நாவற்குடாவிலுள்ள ஒரு பயிற்சி மாணவருக்கு இந் நிதியை வழங்கினோம். அவரிடமிருந்து அந்நிதி மீளளிக்கப்படாமையினால் அதைத் தொடரமுடியவில்லை. திரு. மு. கணபதிப்பிள்ளை (மு.க.ஆரையம்பதி) திரு.பூ. சுந்தரம்பிள்ளை (காரைதீவு) ஆகியோர் இணைச்செயலாளர்கள். திரு.மு. இராஜகோபால் (கொம்மாதுறை), பொருளாளர் இன்று இக்கலாசாலை பல துறை ஆசிரியர்களுக்கும் பயிற்சி கொடுத்து தன்னிகரில்லாது தலை நிமிர்ந்து நிற்கும் நிலைக்கு 60 ஆம் ஆண்டு வைரவிழா கொண்டாடும் நிலைக்கு உயர்த்திய அதிபர், ஆசிரியப் பெருமக்களை 1953 ஆம் ஆண்டிலேயே பழைய மாணவர் சங்கம் அன்னவரின் பெரிய அளவிலான புகைப்படங்களைத் திரைநீக்கஞ் செய்வித்தும் திறப்புவிழா மலரொன்றை வெளியிட்டும் தனது நன்றிக்கடனைக் காணிக்கையாக்கியது.

அட்டாளைச்சேனையில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை ஆரம்பித்த கொடைவள்ளல் திரு.எஸ். தர்மரெத்தினம் MSC மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் பிதாமகர் எனப்போற்றப்படும் தமிழ்பேராசான் பண்டிதர் செ.பூபாலப்பிள்ளை, மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் ஸ்தாபகர் திரு.V.நல்லையா MP, (தபால் தொலைத்தொடர்பு அமைச்சர்) "மட்டக்களப்பு கந்தசாமி" என யாழ்ப்பாணத்தவர்களால் அழைக்கப்பட்ட ஆசிரியர் கலாசாலையின்

தந்தை எனப் போற்றப்படும் பெருந்தகை திரு.சி.கந்தசாமி BSC தற்காலிக அதிபராக இருந்த திரு.வி.துரைசிங்கம் பெண்கள் பயிற்சிக் கல்லூரி அதிபர் திருமதி.E.S. தம்பிராசா ஆகியோரின் புகைப்படங்களே அவை. 1953 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட திறப்பு விழா மலரை அந்நாள் வித்தியாதிபதி திரு.K.S. அருணந்தி அவர்கள் வெளியிட்டு வைத்தார்கள்.

இறுதியாக 11.11.1952 இல் இக்கலாசாலையைத் தரிசித்த யோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள்
"I am very happy to see promissing faces in this ideal Training College. The principal is on examplar and the students cheerfully emulate his example"

**(sged) YOGI SHUDDHANDA BHARATHI**

**ஆதாரம்:** "திறப்பு விழா மலர். 1953" பழைய மாணவரால் வெளியிடப்பட்டது.

இவ்வாறு எழுதியுள்ள புறக்குறிப்புகளே இவ்வாசிரிய கலாசாலைக்கு வழங்கப்பட்ட சான்றிதழாகும்.

ஆசிரியர் கலாசாலையின் வளர்ச்சி மடடக்களப்பின் வளர்ச்சி எனலாம்.

**ஆசிரியர் சிரோமணி**
**த.செல்வநாயகம்**
**(பழைய மாணவன்)**
**ஓய்வு பெற்ற அதிபர்.**

2.4 பவள விழா
ராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம்
மட்டக்களப்பு. 1926 - 2001.

# சுவாமிஜியின் கண்டிப்பான உத்தரவு

## திரு.பாலிப்போடி வேலுப்பிள்ளை J.P அவர்களுடன் நேர் காணல்

**ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம்.**

கல்லடி உப்போடையில் அமைந்துள்ள ராமகிருஷ்ண மிஷன் குருகுலம் தனது பவள விழாவைக் கொண்டாடி வருகிறதை நீங்கள் அறிவீர்கள். திருவாளர் வேலுப்பிள்ளை அவர்களே! இக் குருகுலத்தின் பழைய மாணவன் என்ற வகையில் உங்களை நாம் நேர்கண்டு சில கருத்துக்களை அறிய விரும்புகின்றோம்.

**கேள்வி : உங்களின் இளம்பிராயம் பற்றிக் கூறுவீர்களா?**

**பதில் :** எனது இளமைக் காலம் புதுக்குடியிருப்புக் கிராமத்திலேயே கழிந்தது. நான்காம் வகுப்பு வரை இங்குள்ள மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கல்வி கற்றேன். எனது பாட்டனாருக்கு சுவாமி விபுலானந்தரிடம் உள்ள தொடர்பு காரணமாக 1936 ஆம் ஆண்டு நவராத்திரித் திருநாளில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆலயத்தில் வைத்து சுவாமிஜி அவர்களால் ஆங்கிலக் கல்வி ஆரம்பித்து வைக்கப்பட்டது. என்னுடன் டாக்டர் பசுபதி அவர்களின் மகன் சந்திரசேகரத்திற்கும் ஆரம்பித்து வைத்தார். அன்றிலிருந்து எனது குருகுல வாழ்க்கை

ஆரம்பமாகியது. அன்று சுவாமி அவர்களுடன் ஏற்பட்ட தொடர்பு 1947 ஆம் ஆண்டு ஆடி மாதம் 19ம் திகதி வரை நீடித்தது.

சுவாமிஜி அவர்களின் கண்டிப்பான உத்தரவின் பேரில் பாட்டனார் அடிக்கடி வந்து என்னைச் சந்திப்பதை நிறுத்திவிட்டார். நான் சுவாமிஜி அவர்களின் பாதுகாப்பிலிருந்து எனது கல்வியைத் தொடர்ந்தேன். 1945 ல் எஸ்.எஸ்.சி. பரீட்சையில் சித்தியடைந்தேன்.

**கேள்வி : உங்களுடன் குருகுலத்தில் உடன் வசித்த அல்லது கல்வி கற்றவர்கள் பற்றிச் சிறிது கூறமுடியுமா?**

பதில் : என்னுடன் குருகுலத்தில் இருந்தவர்கள் பலர் எனினும் மனதில் சிலரே எனலாம். திருவாளர்கள் குழந்தைவேல், குப்புசாமி (சதாசிவம்பிள்ளை) பரீட்சைத் திணைக்களத்தில் உதவி ஆணையாளராக இருந்து ஓய்வு பெற்றவர், பதுளையைச் சேர்ந்த கலகொட, பிரதாபன், நாராயணசுவாமி, இராமநாதன், காரைதீவைச் சேர்ந்த தில்லையம்பலம் ஆகியோரைக் குறிப்பிடலாம். பல இடங்களிலிருந்தும் வந்து நாம் ஒன்று சேர்ந்தோமாயினும் ஓரிடத்துள்ளவர்கள் போன்றுதான் எமது வாழ்க்கை அமைந்ததை நான் விசேடமாகக் குறிப்பிட வேண்டும். எங்களுக்கு விடுதி மேற்பார்வையாளர்களாக இருந்து பிற்காலத்தில் சந்நியாசம் பெற்றுத் துறவி ஆகியவர்களான சுவாமி நடராஜானந்தர், கதிர்காம மடத்தில் தொண்டாற்றிய மதிப்புக்குரிய சுவாமி கைலாயப்பிள்ளை என்னும் சுவாமி சர்வாதிதானந்தர் ஆகியோரும் பணிபுரிந்தனர். இவர்களுடைய நெறிப்படுத்தலில் நாம் நல்ல அனுபவங்களைப் பெற்றோம்.

**கேள்வி :** **நீங்கள் அங்கிருக்கும் போது பெற்ற அனுபவங்களைப் பற்றியும், அவை உங்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த உதவியனவா என்பது பற்றியும் சிறிது கூறுங்களேன்.**

**பதில் :** அங்கு நான் பெற்ற அனுபவம் இன்றுவரை என்னுடன் நின்று துணைபுரிகிறது. மனித நேயம், அன்பு, பிற உயிர்களிடம் கூட அன்பு செலுத்துதல். உதாரணமாக நாய் சுட்ட சம்பவம் குருகுலத்தில் கட்டாக் காலி நாய்களின் துன்பம் அதிகரித்துக் காணப்பட்ட வேளையில் அவைகளைச் சுட்டுக் கொல்வதென்று தீர்மானிக்கப் பட்டதும் அவ்வாறு செய்யாது அவற்றை அங்கிருந்து துரத்த ஒரு ஆளை நியமித்து அவை துரத்தப்பட்டதையும் நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அது மாத்திரமல்ல குருகுலத்தில் ஒரு சில பசுக்களை வாங்கி வளர்த்துப் பராமரித்து வந்ததின் மூலமும் சுவாமிஜியின் ஜீவகாருண்யச் செயல்களை எம்மாலும் உணர்ந்து கொள்ளவும், அதைக் கடைப்பிடிக்கவும் முடிந்தது.

தனது தேவைகளைப் பிறரை எதிர்பாராது தானே செய்து முடித்தல். உதாரணமாக உடுப்புகள் கழுவுதல், தலைமுடி வெட்டல், முதலுதவிச் செயற்பாடுகள், சாதி, சமய, இன பேதமில்லாத வாழ்வு என்பவற்றுடன் தொழில் முக்கியத்துவமும் எனக்குக் கற்றுக் கொள்ள முடிந்தது. நான் பிறவியிலேயே விவசாயக் குடும்பம். இங்கு கல்வி கற்ற காலத்தில் வயலில் இறங்கி வேலை செய்யாவிடினும், எமது உணவிற்கான காய்கறிச் செய்கையில் ஈடுபட்டு அதில் ஊக்கம் காட்ட முடிந்தது. அப்பயிற்சியை இன்றும் நான் மேற்கொள்கிறேன்.

அந்நாட்களில் சிவானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலம் மிக மறக்க முடியாத ஒன்று. உடையைப் போன்று உள்ளமும் புனிதமான அதிபர் திரு.எஸ்.அம்பலவாணர், திரு.கே.கணபதிப்பிள்ளை போன்றோரின் வழிகாட்டல், காரைதீவு தம்பிராசா ஆசிரியர், திரு.வி. நல்லையா, திருகே. கந்தசாமி போன்றோரின் நெறிப்படுத்தல் என்பன பிற்காலத்தில் உத்தியோக வாழ்க்கையில் குடும்ப வாழ்க்கையில் கைதந்துதவின.

நாங்கள் அங்கு கற்றுக் கொண்ட தோட்டப் பயிற்சியைப் போன்று உடற்பயிற்சி அதாவது யோகப்பயிற்சி எம்மை வலுவுள்ள மனிதனாக வாழ வழி சமைத்தது. அங்கு பயின்ற சுத்தம் பேணுதல், வீடு வளவு என்பவற்றை அழகுபடுத்தல் போன்ற நற்கருமங்கள் யாவும் இன்று என்னுடன் ஒட்டி உறவாடுகின்றன என்பேன்.

**கேள்வி : குருகுல வாழ்க்கையில் நீங்கள் பெற்ற அனுபவங்ளைப் பற்றி உங்களின் பிள்ளைகளுடன் கலந்துரையாடுவீர்களா? அவர்கள் அதைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்?**

பதில் : குருகுல வாழ்க்கை பற்றி நான் பல தடவை எனது பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறியதுண்டு. அங்கு வாழ்ந்தகாலத்தில் எமது வாழ்க்கை முறை ஒழுங்காக நேரந்தவறாமல் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதை நான் பிள்ளைகளுக்குக் கூறுவேன். கடவுள் வணக்கம், படிப்பு, விளையாட்டு, ஓய்வு, தோட்ட வேலை உட்பட உணவு, உறக்கம் யாவும் நேரந்தவறாமல் இடம்பெற்றதினால் அவற்றை நான் இன்றுவரை எனது உத்தியோகக் கடமைக் காலத்திலும் கூடியளவு

பின்பற்றியதை எடுத்துக் கூறி அதனால் நான் பெற்ற பலாபலன்களையும் கூறுவேன். மக்களும் அவற்றைப் பின்பற்றி ஒழுகுவதைக் கண்டு மனம் பூரிப்படைகிறேன்.

**கேள்வி : முடிவாக இந்த நேர்காணல் மூலம் வாசகர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

**பதில்** : 1926 ஆம் வருடத்தில் சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட இக் குருகுலம் ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி, மூங்கில் போல் சுற்றம் சூழ வாழ்வதைக் காணவும், இப் பவளவிழா மலருக்கு எனது சிறு அனுபவங்களைக் கூறவும் என்னை நலமுடன் வாழ வைத்துக் கொண்டிருக்கும் இறைவனுக்கு முதற்கண் எனது வணக்கத்தைக் கூறி, பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் நாமத்தில் வானளாவப் புகழ் பரப்பும் இவ்வில்லம் காலத்திற்குக் காலம் பல துறவிகளின் பாததூளியை ஸ்பரிசித்துப்புனித பூமியாக மிளிர்கின்றது என்ற உண்மையை எமது பின் சந்ததியினர் உணர்ந்து இதன் புனித சேவையை அனைவரும் மதித்துப் பாராட்டிப் பயனுற வேண்டுமென மனதார விரும்புகின்றேன். இச்சந்தர்ப்பத்தை நல்கிய பவளவிழா மலர்க் குழுவினர்க்கும், கருவியாக நின்று கருத்துக்களை என்னிடம் கேட்டுத் தொகுத்தெழுதிய உங்களுக்கும் உளமார்ந்த நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

திருவாளர் வேலுப்பிள்ளை அவர்களே! நீங்கள் ஆசிரியராக சமூகத்தில் பணியை ஆரம்பித்து பல்வேறு பணிகளாற்றி, கிராமிய அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் உத்தியோகம் வரை உயர்ந்து 1980 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற பின்னரும்

வடகிழக்கு மாகாண ஆளுனரின் உதவிச் செயலாளராகவும் 1990-95 வரை பணியாற்றி இன்று வீட்டில் நிம்மதியாக வாழ்கிறீர்கள்.

உங்களின் வாழ்க்கை நெறியைக் குருகுலத்திலருந்து பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறியப் பெருமகிழ்ச்சியாக இருக்கிறது. பவளவிழா மலருக்கான இந்த நேர்காணலுக்கு உதவிய உங்களுக்கு மலர்க் குழு சார்பில் நன்றியும், வணக்கமும் கூறிக்கொள்கிறேன்.

**ஒருவன் தான் செய்த வினையின் பலனை அனுபவித்தே ஆகவேண்டும். ஆனால் இறைவனின் நாமத்தை மீண்டும் மீண்டும் சொல்வதன் மூலம் செய்த தீயவினைகளின் பலனின் தாக்கத்தை குறைத்துக் கொள்ளலாம். ஜபம் மற்றும் தவத்தின் மூலம் கர்மவினைப் பலனை கணிசமான அளவிற்கு குறைக்கலாம்.**

## 2.5 அமரர். லயன். கலாநிதி இரா.பத்மரஞ்சன் அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலி மலர்

# ஈசன் உவக்கும் இன்மலர்

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம்.

**காராயுனை யல்லால் கதிகாணேன் அடியேனே**
**ஏராருவகெல்லாந் தரு மெந்தாயுமை மைந்தா!**
**பாரார் தொழும் பொருளே யிசை பண்ணே யிருகண்ணே**
**சீராரையம்பதி மாமுக சிவமே பிரணவமே.**
**(திருநீலகண்ட விநாயகர் - பிரணவ அட்டகம்)**

**"தோன்றின் புகழொடு தோன்றுக. அஃதிலார்**
**தோன்றலின்தோன்றாமை நன்று"**

எனும் பொய்யாமொழிப்புலவரின் வாக்கிற்கிணங்க, புகழொடு தோன்றி, புகழுடன் வாழ்ந்து, புகழுடன் ஈசன் உவர்க்கும் இன்மலராகிவிட்ட இராசரெத்தினம் பத்மரஞ்சன் அவர்கள் பிறந்த இடம் தமிழகத்தின் பட்டின அமைப்பைப் பின்பற்றி சகல குலமக்களையும் தன்னகத்தே கொண்ட கிராமமாம் ஆரையம்பதி. இக்கிராமம் ஈழத்திருநாட்டில் மட்டுநகருக்குத் தென்பால், நான்கு மைல் தொலைவில் அமைந்துள்ளது.

அக்கிராமத்தின் முகப்பில் அணிகலன்களாக விளங்குவன செங்குந்தர் குலத்திலுதித்த நிலச் சுவாந்தராய் விளங்கிய நொத்தாரிஸ் மூத்ததம்பி முதலியார் தனது குல மக்களுக்காக

ஸ்தாபித்த ஸ்ரீ திருநீலகண்டர் விநாயகர் ஆலயமும் நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயமுமெனலாம். இவ் விநாயகரை வணங்கி வழிபட்டும், இவ்வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி கற்றும் முன்னேற்றமடைந்தோர் பலர். அவர்களுள் மெச்சத்தக்க பாராட்டுப் பெற்றவர் அமரர். பத்மரஞ்சன்.

**"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு**

**கற்றனைத்தூறு மறிவு"**

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க தன்னூக்கத்தால் கற்றுத் தேறிப் பலபட்டங்களைத் தனதாக்கிக் கொண்ட கல்வியியலாளன்.

எத்தனை பட்டம் பதவி பெற்றாலும் தன்னை ஈன்றெடுத்து வளர்த்து அகால மரணமடையும் வரை கல்வியூட்டிய தந்தையையும் தந்தையார் அதிபராயிருந்து அரும்பணியாற்றி மறைந்த, தான் ஆரம்பக்கல்வி கற்ற நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயத்தையும் மறந்தானில்லை.

1996 ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாக்கொண்டாடிய மேற்படி வித்தியாலயம் வெளிக்கொணர்ந்த 100 ஆண்டு விழா மலருக்கு அவர் வழங்கிய **"இலங்கையில் பொருளாதாரமும் உள் நாட்டுப் போரும;"** என்னும் கட்டுரையில் இவ்வித்தியாலயத்தின் முன்னாள் அதிபராக அரும்பணியாற்றி அகாலமரணமடைந்த என் அன்புத்தந்தை அமரர். தம்பிப்பிள்ளை இராசரெத்தினம் அவர்களுக்கு சமர்ப்பணம் என்ற குறிப்பிட்டு தனது நன்றி மறவாமையையும் விருப்பத்தையும் வெளிக்காட்டியமையிலிருந்து எம்மால் உணர முடியும்.

அவ்வாறே ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் மீதும் நீங்காப் பற்றுக் கொண்டவர். தனது அப்பப்பா, பெரியப்பா, அப்பா ஆகியோரைப் பின்பற்றி இவரும் இவ்வாலய திருப்பணியில் ஈடுபட்டார். தனது இனத்தவர்களின் ஏகோபித்த விருப்பத்தின் பேரில் இவ்வாலயத்தைப் புனரமைப்புச் செய்து கும்பாபிஷேகம் செய்யும் நன்நோக்கில் அமைக்கப்பட்ட கோயில் நிருவாகக் குழுவின் தலைவராகி ஏனைய உறுப்பினர்களின் ஒத்துழைப்பைப் பெற்று புனருத்தாரணப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் விநாயகர் என்ன நினைத்தாரோ அவரின் உவந்த இன்மலராக்கிவிட்டார். இப்பணியைத் தொடர்ந்து செய்வதே அவரின் ஆத்மசாந்திக்கு இடமளிக்கும்.

மனித நேயம் மிக்க, தனக்காகச் சிந்திப்பதைவிட சமூகத்திற்காகச் சிந்திப்பதில் அதிகம் செலவிட்ட, அறிவுப் புரட்சியை ஏற்படுத்துவதில் உத்வேகத்துடன் செயல்பட்டுவந்த கல்விமானாகத் திகழ்ந்தவன் பத்மரஞ்சன். தந்தைவழி சென்று சமூகப் பணியும் செய்து, சமயப்பணியும் செய்து, தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் மாத்திரமல்ல, குடும்ப உறவினர் மத்தியிலும் இணைப்புப் பாலமாகத் திகழ்ந்தவன். பாலம் உடைந்துவிட்டது அதை எவராலும் நிமிர்த்த முடியாது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சரித்திரத்தில், முதன் முறையாக வர்த்தக முகாமைத்துறையில் ஆங்கில மொழியில் கற்று முதலாம் வகுப்பில் சிறப்புப் பட்டம் பெற்று தனக்கும் பல்கலைக்கழகத்திற்கும் பெருமைதேடிக் கொண்டவன் ரஞ்சன். அவனை அப்பல்கலைக்கழகம் நன்கு பயன்படுத்தத் தவறிய காரணத்தால் மனமொடிந்த ரஞ்சனுக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகம் வரவேற்று சகல வசதிகளையும் வழங்கியது. அங்கிருந்து கல்விபயிலும்போது பலபடி உயர்ந்து, பலபட்டங்களை உள்நாட்டிலும் ஜப்பான், USA போன்ற அயல் நாடுகளிலும் பெற்று, விரிவுரையாளராய், முதுநிலை

விரிவுரையாளராய், பீடாதிபதியாய் பதவியும் உயர்ந்து பேராசிரியராகப் பரிணமிக்க இருந்தவேளை அவனுடைய சேவை போதும் நீ என்னிடம் வருவாய் என ஈசன் இன்மலராக்கிக் கொண்டான்.

மட்டக்களப்பு லயன் கழகத்தின் மூலம் அவனாற்றிய பணிகள் அநேகம். கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டப் பணிப்பாளராகச் செயலாற்றிப் பல நல்ல சேவையாற்றியமை யாரும் அறிந்ததே. என்மீது தனிப்பட்ட முறையில் பத்மரஞ்சன் எந்தளவு பற்றும் பாசமும் வைத்திருந்தான் என்பதை அறிவதற்கு எனக்கொரு சந்தர்ப்பம் கிடைத்தது.

**"கோப் இன்"** விருந்துபசார மண்டபத்தில் அண்மையில் நடந்த அவனுடைய நூல் வெளியீட்டு விழாவில் நானும் கலந்து கொண்டேன். நூலாசிரியர் பதிலுரையில் எனது தந்தையாரின் மறைவிற்குப் பின்னர் எனக்குத் தந்தையாக இருந்து என்னை வழிநடத்தி ஆளாக்கிய எனது பெருமதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய பெரிய தந்தையார் இதோ இச் சபையில் வீற்றிருக்கிறார். அவர் மிகவும் மகிழ்ச்சிடைவார் என மனதாரக் கூறி மகிழ்ந்தவன் எனது மகன்.

**"அவ்வமையத்தில் நாமிரு வரும்**
**தந்தைமகற்கு ஆற்றும் நன்றி அவையத்து**
**முந்தியிருப்பச் செயல்"**

**"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை**
**என்நோற்றான் கொல் எனும் சொல்"**

இவ்விரு குறட்பாக்களுக்கும் இலக்கணமானானோ....

இறுதியாக எனக்கும் அவனுக்கும் நிகழ்ந்த வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத ஒரு சந்திப்பையும், உரையாடலையும் கூறி ஆறுதல் பெறுகிறேன்.

09.05.2007 அன்று அவனது இளைய சகோதரனுக்கு எமது வீதியில் எனது வீட்டிலிருந்து இரண்டு வீடுகள் தள்ளி அவனது சகோதரி வீட்டில் நடந்த கலியாணப் பதிவிற்கு காலை 7.00 மணி போல வருகை தந்தவன் எனது வீட்டு வாசலில் காரை நிறுத்திவிட்டு தனது அன்புத் துணைவி, ஆசை மகளுடன் வீட்டிற்கு வந்தான். நானும் மகளும் கோயில் செல்வதற்கு வெளியே வரும் நேரம். பெரியப்பா! எனக்கு நேரமில்லை பெரியப்பா! பல்கலைக்கழகத்தில் எனக்குப் பொறுப்புக்கள் கூட எனக்கு நான் விரும்பியவாறு நடக்கலாமெனினும் அப்படி நடக்க நான் விரும்பவில்லை.

கிழமைக்கு ஒரு தடவைதான் வருகிறேன். வீட்டிற்கு வந்தால் வங்கியாளருக்கு உதவி, சனி ஞாயிறு நாட்கள் சுவாமி விபுலானந்த இசை நடனக்கல்லூரியில் வேறு வகுப்புக்கள். நேரங்கிடைக்கும்போது கோயில் பணி, நான் வரவில்லை என்று கோபிக்காதீர்கள் பெரியப்பா என்று அவன் கூறிச் சென்றான். சரி மகனே! நாங்கள் கோயிலுக்குப் போகிறோம் என்று கூறிச் சென்றோம். அதுதான் அவனுடன் உரையாடிய கடைசிச் சந்தர்ப்பம். அவனது குரல் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

மகனே! நீ என்னை வழியனுப்பி வைப்பாய் என்று எதிர்பார்திருந்த நான் உனக்கு அஞ்சலி உரை எழுதும்படி ஆகிவிட்டதே இதுவும் என் விதி.

**எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.**
**எது நடக்கிறதோ அது நன்றாக நடக்கிறது**
**எது நடக்குமோ அதுவும் நன்றாகவே நடக்கும்.**
**இது உலக நியதி.**

ஆறுதலடைவோம்! அமைதி பெறுவோம்!

## 2.4 நண்பன் எஸ்.எஸ்.இராசையா ஜே.பி. அவர்கள் இறைபதம் அடைந்த ஞான்று ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களின்

# மனம் நெகிழ்வு

மூத்தவன் குடும்பத்தின் முதல்வன்
முது தமிழ்க் காவலன் குடும்பநலம் காத்தவன்
பழகுதற் கினிய பண்புடையாளன்
கிறிஸ்தவ நெறியும் தமிழின் சுவையும்
வையகத்தாருக்கு மனங் கனிந்து அளித்தவன்
ஐய! நின் அழகுறு அகத்தினில் மிளிரும்
மென் புன்னகையை முகத்தினில்
என்று நான் காண்பேன்?
செய்யுந்தொழிலே தெய்வமென வாழ்ந்து
நற்றமிழ் வளர்த்து நன் மாணாக்கரை
நல்வருவாக்கிய நல்லாசான் நீ!
மாண்புறு மகிமைப்பட்டமாம் ஜே.பி.
பட்டமும் பெற்று மனம் மகிழ்வுற்றாய்!
கற்றவர் கருந்த காசினி புலம்ப
பெற்ற மக்கள், உற்ற மருமக்கள்
பேரக்குழந்தைகள், உற்றார் உறவினர்கள்
உயிர் தளர்வுறவே
எங்கு சென்றாயோ என் நண்பனே டடா?
எங்கு சென்றாலும் அங்குநின் துணையுடன்
மம்மி என்னும மங்கை நல்லாளுடன், நீ
இன்புற்று வாழ்வாயங்கு.
நண்பனே! நான் எப்போதும் சொல்லுமாப் போல்
உன்விசா முடிந்து நீ சென்றுவிட்டாய்,
என் வீசா முடிந்ததும் நானும் வருவேன் அங்கு.
பன்னலம் பெறுக! பரம் பொருளுடனே!

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாக நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்

# பகுதி – 03

# ஆசிரியர் சிரோமணி பற்றிய வாழ்த்துக்களும், பத்திரிகைச் செய்திகளும்.

## பொருளடக்கம்

**பகுதி 03**

**ஆசிரியர் சிரோமணி பற்றிய வாழ்த்துக்களும் பத்திரிகைச் செய்திகளும்**

3.1 உபசாரப் பாடல்

3.2 அன்புமடல்

3.3 அன்பே சிவம்

3.4 ஆசிரியர் சிரோமணியின்

3.5 ஆசிரியர் சிரோமணிக்கு.....

3.6 த.செல்வநாயகம்

3.7 ஆசிரியர் சமூகம்....

3.8 இரண்டு அறிஞர்களுக்கு.....

3.9 வாழும்போதே வாழ்த்துவோம!

3.1

# உபசாரப் பாமடல்

**செயலாற்றல் மிக்க அதிபராக கடமையாற்றி ஓய்வு பெறும் ஆசிரியர் சிரோமணி திரு. த. செல்வநாயகம் அவர்கட்கு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய அபிவிருத்திக் கழகத்தினர் எடுத்த சேவைநலம் பாராட்டு விழாவின்போது பட்டமளித்துக் கௌரவித்துப் பாடியளித்த உபசாரப் பாமடல்.**

நல்லாசான் மலைபோல் மலரைப்போல்
நாடு புவியதைப்போல் வாழ்வானென்ற
சொல்லுக்கு இலக்கணமாய் நடந்து காட்டி
தூய்மை மிகுமாசிரியப் பணியை நாடி
வல்லவனாய் நல்லவனாய் மக்கள் போற்ற
மாண்புமிக ஓய்வு பெறும் மணியே நின்றன்
எல்லையில்லா நற்றொண்டை இனிது வாழ்த்தி
இசைக்கின்றோம் பல்லாண்டு இனிது வாழ்க.

இனிக்கின்ற பேச்சாலும் இதயத்தாலும்
இளைய தலைமுறையினர்க்கு எடுத்துக்காட்டாய்த்
தொனிக்கின்றன செயல் காட்டிக் கல்வித் தொண்டைத்
தூய்மையுடன் மேற் கொண்ட சுத்தவீரா
பனிக்குன்று போல் நினது உயர்ந்த தோற்றம்
பலமன்றச் செயலாளன்ஆன பண்பு

கணிக்கின்றதன்றே நின் செயலின் ஆற்றல்
கண்டினிது போற்றுகின்றோம் கலை வல்லோனே.

கலைகளிலே வல்லகலை ஆரம்பத்துக்
கல்விநிலை அதையுணர்ந்து கடமையாற்றித்
தலைப்பள்ளியதையாக்கி நிருவகித்த
தன்னிகரற்றுயர்ந்திட்ட தரும வானே
சிலை நிறுவவேண்டும்யாம் ஆனால் இன்றோ
சிரோமணியென்றொரு மகுடம் சூட்டி நின்று
பலபேசி வாழ்த்துகிறோம் பயன்துய்த்தோர்கள்
பரவ செல்வநாயகமே பல்கால் நின்றே.

பல்லவனாய் நீ உயர்ந்து நிற்கின்றாய் நின்
பணிகளினால் மாணாக்கர் அதற்குச் சாட்சி
வல்லவனாய் நீ உயர்ந்து நிற்கின்றாய் நின்
வாய்மையினால் மன்றங்கள் அதற்குச் சாட்சி
நல்லவனாய் நீ உயர்ந்து நிற்கின்றாய் நின்
நடத்தையினால் நாங்களெல்லாம் அதற்குச் சாட்சி
எல்லவனாய் நீயுயர்ந்து நிற்கின்றாய் யிவ்
“வாசிரியர் சிரோமணி”யே அதற்குச் சாட்சி.

ஆசிரிய மணியானாய் ஆற்றலாலே
அன்பு கொண்டு சிறார்க்கறிவு சேர்த்ததாலே
பேசரிய புகழ்கொண்டு சமூகத் தொண்டைப்
பேணியதால் புகழ் பூண்டாய் பெருமையாளா
தேசமெல்லாம் நின் தொண்டை தலைமேற் கொள்ளும்

செல்வச் சீர்நாயகமே சேர்ந்த அன்புப்
பாசமதால் நினை வாழ்த்திப் பல்லாண்டின்று!
பாடுகிறோம் சிரோமணி நின் பண்பு வாழ்க.

வாழ்ந்திடுக நற் செல்வநாயகப் பேர்
வல்லவனே நின் தொண்டைப் பற்றி நின்று
ஆழ்ந்தகன்று உயர்ந்திட்ட அறிவு பெற்ற
ஆசிரியர் குழாமெல்லாம் அறத்தில் நிற்கச்
சூழ்ந்திடுக இறையினருள் பல நலங்கள்
தோன்றிடுக நின் வாழ்வில் சோபனங்கள்
வாழ்ந்திடுக எழிலி தரும் துளியின் மேலாம்
வாழ்நாள்கள் வாய்த்திடுக வளமலிந்தே.

**இவ்வண்ணம்**
**கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய**
**அபிவிருத்திக் கழகத்தினர்.**
**மட்டக்களப்பு.**

**04.04.1987**

**யாப்பு: திமிலைத் துமிலன்.**

**3.2 2009ம் ஆண்டு ஜனவரி 12ம் நாள் மட்டக்களப்பு சர்வமத சமாதான ஒன்றியம் நடாத்திய தைப்பொங்கல் விழாவில் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களின் சேவைநலம் பாராட்டி சமய பெரியோர்களால் வழங்கப்பட்ட அன்புமடல்.**

ஆரையம்பதியின் பாலகனே ஆசிரியர் சிரோமணியே!
ஊசிநுனிபோன்ற உண்மைபல உணர்ந்தவனே!
பாசிபடர்ந்தது போல் படிப்பற்ற பாலகரை
நாசிவலிமையினால் நல்வாழ்வு தந்தனையே!

சைவமும் தாய்த்தமிழும் தான் தழைக்கத் தலைப்பட்டாய்
வையகத்திலுள்ளோர் வாழும் மதங்களெல்லாம்
மெய்யான மதங்களென மேலாக எடுத்துரைத்தாய்
செய்யாத செயல்களையே செய்ததினால் பேர்பெற்றாய்

மாணவர்கள் மனதிலே மங்காத செல்வநாயகமாய்
போனவர்கள் வந்தவர்கள் போற்றும் புகழோனாய்
வீணவர்கள் வாழ்வு விழுமியமாய் தான் விளங்க
வானவர்கள் போற்றும் வலுமிக்க பேரருளே!

வெள்ளை மனமே வெளுத்திரு உருவே!
கள்ளம் கபடமற்ற காருண்ணியப் பேரருளே!
உள்ளங்கவரும் எங்கள் உயர்ந்த திருவுருவே!
வள்ளல் எனக் கல்வியை வாரிவழங்கினையே!

கோட்டைமுனையில் கனிஷ்ட வித்தியாலயதில்
வீட்டைமறந்து விடியவே வெளிப்பட்டு
போற்றிப்புகழும் சேவைகள் பலவாற்றி
ஏற்றி இன்புறவே எல்லோரும் வாழ்த்துவோமே.

வாழ்க உன் திரு உருவம் வாழிய வாழியவே!
வாழ்க உன் பெருங்கருணை வாழிய வாழியவே!
வாழ்கவுன் பரம்பரைகள் வாழிய வாழியவே!
வாழ்க உன் திருவுள்ளம் வாழிய வாழியவே!
சுபம்.

**49/3, புகையிரத நிலையக் குறுக்குவீதி,**
**சர்வமத சமாதான ஒன்றியம்**
**மட்டக்களப்பு.**
**12.01.2009.**

**எவன் ஒருவன் இறைவனிடம் பிரார்த்தனை செய்வதை ஒரு பழக்கமாகக் கொள்கிறானோ அவன் எளிதாக எல்லா துன்பங்களிலிருந்தும் விடுபடுகிறான். அவன் அமைதியாக இருக்கிறான். வாழ்க்கையின் இடையில் ஏற்படும் சோதனைகளிலும் கூட கலங்காமல் இருப்பான்.**

3.3 ஸ்ரீமாரியம்மன் இந்துசமய போதனாபீடம்
ஸ்ரீமாரியம்மன் ஆலயம்,
தாமரைக்கேணி - மட்டக்களப்பு.

## அன்பே சிவம் அதுவே நலம்

**ஆரையம்பதியைப் பிறந்த இடமாகவும் தாமரைக்கேணியைப் புகுந்த இடமாகவும் கொண்டு தமிழ்ப்பணியும், சைவப்பணியும், சமூகப்பணியும் ஆற்றியமைக்காக ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அதிபர் அவர்கட்கு தாமரைக்கேணி ஸ்ரீமாரியம்மன் இந்துசமய போதனாபீடத்தினர் அவர் சேவையைப் பாராட்டி 17.09.93 அன்று அகில இலங்கை இந்து தர்மோதயத்தால் நடாத்தப்பெற்ற பூஜையில் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தில் வைத்து வாசித்து கையளிக்கப்பட்ட பாராட்டு நன்மடல்.**

வீரமகமாரியென்னை வீரகத்தியானருளால்
வீரமிடுக்கோடு பணி
ஆற்று தமிழ் நாயகமாம்.
ஆரமகபோல் பணிகள் ஆயிரங்களாற்றி
வீரகத்திலே விளங்குசெம்மல்
வாழ்க! வாழ்கவே!
செல்வநாயகம் பணிகள்
சொல்வதாயிரம் செல்வநாயகம்
பணிகள் வெல்வதாயிரம்
செல்வநாயகம் பணிகள் சித்த
சித்தியாகுமே செல்வநாயகம் பணிகள்
சொல்வதாகுவேன் பாவில்
ஆரையூரில் பிறந்தமகன் அழகுமட்டு நகர்
புகுந்தான் ஆரைவெல்லு
மாற்றலினை அன்னை மாரிதான் கொடுத்தாள்
ஆரறிவும் அறிவினாலே அகமலர்ந்து

மலர்ச்சியுற்றான் ஆரைநல்லூர்
தந்த செல்வநாயகம் வாழ்கவே!
எப்.எக்ஸ்.சி.நடராசா இதயநிறை
சீடனவன் எப்.எக்ஸ்.சி.சரிதை
கதை தந்த தமிழ் ஆசான்
எப்.எக்.சி. என்றாலும் ஏற்றிடு
நற்சீடனவன் எப்.எக்.சி.நடராஜன்
போலினது வாழியவே!
நெற்றியிலே திருநீறு நின்னழகைக்
காட்டும். நெற்றியிலே மேதா
விலாசமதைக் காட்டும் கல்வி
வெற்றியிலே நனிகனிந்த மன
நிலையைக் காட்டும் பற்றினிலே
சைவதமிழ் பாங்குறுதி கூட்டும்
அன்பும், அமைதியும், அடக்கமும்
நிறைந்தாய் ஆற்றலொன்றே
அரும்பணி என்றாய்
பண்பும் பாசமும் பக்குவமானாய்
பைந்தமிழ் நாவில் பயிலப் பெற்றாய்
உன் வழிகாட்டலில் உயர்ந்தோர்
ஆயிரம் ஊக்கத்தால் வளர்ந்தவர் கோடி
என்பதை அறிந்தோம் இதயம் மகிழ்ந்தோம்
இனியாய் வாழ்க! எழுகதிர் போலே!
வான்முகில் போலே பொழிக!
நின்பணிகள் வான்மதி கதிர்போல்
வளர்க! நின் நாமம்
வான் புவிமட்டும் நின்பணி ஓங்கும்
வானின் நிழலில் நாம் பணியாற்ற
செல்வநாயக சீரோன் செய்பணிகளெல்லாம்
பல்நூறு பெறுக பயன் பூத்து.

கவிஞர் : கலைமணி தாசன் திகதி : 17.09.93

3.4

பாவலர் சாந்தி முஹியித்தீன் J.P.

பாவலர் பண்ணை,
காத்தான்குடி.

## ஆசிரியர் சிரோ மணியின் 80வது அகவை நினைவாக

பேச்சே தன்னையொரு பேரறிஞரெனக்காட்டும்
ஆசிரியர் சிரோ மணி ஐயா பிறந்த தினம் - இன்னாளில்
எல்லா அருளும் இனிதே நிறைவாக.
வல்லான் வழங்கட்டும் வாயார வாழ்த்துகிறேன்.

தெளிந்த நீரோடையெனத் திறந்த மனம் கொண்ட ஐயா!
மறந்தும் பிறர்நோவ நடந்தறியமாட்டீர்கள் - மென்மேலும்
சைவத் தமிழ்த் தொண்டாற்றி சாயி அரவணைப்பில்
இன்னும் பல்லாண்டு இன்பமுடன் வாழ்ந்திடுக!.

அன்றலர்ந்த தாமரையாய் அகமுகமுமொன்றாக
என்றும் கலைத்தாயின் இனிய நிற வெண்ணாடை
அன்றிவேறொன்று மணிந்தறியா ஆசிரிய
சிரோ மணியின் பிறந்த தினம் சிறப்புக்குரிய தினம்.

ஆன்றோர்களோடிணைந்து ஆய்ந்தறிந்து மற்றவரை
சான்றோர்களாக வெண்ணும் சற்குணரே! - என்றென்றும்
உங்கள் உளவுணர்வு உயர்ந்து சிறந்துயர
வாழ்த்துகிறேன் பாவலன் நான் வாழ்வாங்கு வாழ்ந்திடுக!

இப்படிக்கு
அன்புள்ள
ஆளுநர் விருது பெற்ற பாவலர்.

## 3.5 ஆசிரியர் சிரோமணிக்கு....

முதுமையிலும் இளமையாய் - எம்
முதுமொழி தமிழதை
முறையாக பேசியெங்கும்
குறைவிலா மொழியறிவு கொண்ட.... ....

விபுலானந்தன் பெயரிலே - நான்
விதைத்திட்ட கல்விப்பணியை
விருப்புடன் செயல்பட்டு
விரிவாக்கிவிழயவைக்கும் பணியாளன்.... ....

மீன்பாடும் தேனாட்டின் - நம்
கூன்விழுந்தமுதியோர்கள்
துன்பமின்றிவாழ்ந்திடவே
இன்புடன் இல்லமைக்க.... ...

தடையெல்லாம் மீறியே - தமிழ்
கடமைசெய்யவென
காலமெல்லாம் உழைத்திட்ட
கோலமகன் செல்வநாயகம் ..... .....

நினையாமல் கனடாவந்து - மண்
நினைத்திட்ட பணியெல்லாம்
நிறைவேற்ற கரம் நீட்டிய
நிறைகுறையா பேச்சாளன் .... .....

ஆசானிலொரு மணிபதித்த
ஆசிரியர் சிரோமணியே!

சக்திசாந்தன்
கனடா.

3.6 விடிவானம்

1997 ஜனவரி 01ம் நாள்

"செம்மனச் செல்வர்"

# த. செல்வநாயகம்



மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் மூத்த மாணாக்கருள் ஒருவரான ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அக்கலாசாலையில் பயிற்சிபெற்று கல்வி, இலக்கிய, கலை, கலாசார, சமூகத் துறைகளிலும் ஈடுபட்டமைக்காக கலாசாலையின் "**கலைச்செல்வி**" பொன்விழாச் சிறப்பு மலர் வெளியீட்டு விழாவின்போது "**செம்மனச்செல்வர்**" எனும் பட்டம் அளித்து பொன்னாடை போர்த்திப் பாராட்டப்பட்டார்.

த.செல்வநாயகம் 1927 ஆம் ஆண்டு அமரர்களான தம்பிப்பிள்ளை பொன்னம்மா தம்பதியினருக்கு ஆரையம்பதியில் பிறந்தார். நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம், காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம், கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாயலத்திலும் கல்வி கற்றார்.

1946 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதலாந் திகதி மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்ட அரசினர் ஆண்கள் ஆசிரியர் கலாசாலையில் முதலாவது தொகுதி மாணாக்கர் 52 பேரில் ஒருவராக அதிபர் சி.கந்தசாமி, விரிவுரையாளர்களான அமரர் பண்டிதர் செ.பூபாலபிள்ளை, மகாவித்துவான் F.X.C. நடராசா ஆகியோரிடம் பயிற்சி பெற்றவர்.

கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் 14 வருடம் சேவையாற்றி ஓய்வு பெற்றவேளை **"ஆசிரியர் சிரோமணி"** என்ற பட்டமளித்து பதக்கஞ்சூட்டி பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணி மன்றம், மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம், கல்லடி உப்போடை இராமகிருஷ்ண மிஷன், சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபை, ஓய்வூதியம் பெறுநர் சங்கம் ஆகியவற்றில் இணைந்து நற்பணியாற்றியுள்ளார்.

மகாவித்துவான் F.X.C.நடராசா வாழ்க்கை வரலாறு என்னும் நூலினை அவர் வாழ்ந்த காலத்திலேயே எழுதினார்.
இவரின் சேவை தொடர வாழ்த்துகிறோம்.

**-வி.ஜசிகரன்-**

# ஆசிரியர் சமூகம் அன்று கொண்டிருந்த மதிப்பை இன்று இழந்துவருகிறது.

இன்று பாடசாலைகள் தமது முக்கியத்துவத்தை இழந்து வருவதுடன் அநேக பிரபல பாடசாலைகள் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்படும் மாணவர்களின் பெறுபேறுகளால் பெருமையை பெற்றுக் கொள்கின்றன. பெரும்பாலான ஆசிரியர்கள் பாடசாலைகளில் கற்பிப்பதைவிட தனியார் கல்வி நிலையங்களிலும் வீடுகளுக்கு மாணவர்களை அழைத்து தனிப்பட்ட ரியூசன்களை நடத்துவதிலுமே அக்கறை காட்டி வருகிறார்கள். இதனால் அன்றைய ஆசிரியர் சமூகம் பெற்ற மதிப்பையும் பெருமையையும் இன்றைய ஆசிரியர் சமூகம் இழந்து வருகிறதென்று ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் தெரிவித்தார்.

கல்விப் பயிர் வளர்த்த அதிபர்கள் வரிசையில் பேட்டி காண்பதற்காக கேசரி வாரமலர் சார்பில் அவரைச் சந்தித்தேன். எழுபத்தாறு வயதிலும் பழைய நினைவுகளை மீட்டதுடன் இன்றைய கல்விச் சமூகத்திற்கும் பல்வேறு ஆலோசனைகளைத் தெரிவித்தார்.

ஆசிரியர் சிரோமணி செல்வநாயகம் 1927 சித்திரை மாதம் 3ம் திகதி மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை பொன்னம்மா தம்பதியினரின் புதல்வனாக பிறந்தார்.

ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம் காத்தான்குடி 5ம் குறிச்சி தமிழ்பாடசாலை காத்தான்குடி மகாவித்தியாலயம், கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலயம் என்பவற்றின் பழைய மாணவராவார்.

தற்போது மட்டக்களப்பு இந்துக்கல்லூரி இயங்கும் இடத்தில் அமைந்திருந்த அரசினர் ஆண்கள் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் 1946 ஆம்ஆண்டு நுழைந்த ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் 1948 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆசிரியர் பயிற்சியை பூர்த்தி செய்தார்.

பதுளை ஹாலி-எல, உடுவரை சிங்கள தமிழ்க்கலவன் பாடசாலையில் 03.05.1948 ஆம் ஆண்டு உதவி ஆசிரியராகப் பதவியேற்று கல்விச்சேவையில் கால் பதித்தார். கண்டி சிங்கள தமிழக் கலவன் பாடசாலை, ஆரைப்பற்றை தமிழ் கலவன் பாடசாலை, கோட்டைமுனை கலவன் பாடசாலை, அரசடி மெதடிஸ்த மிசன் பாடசாலை, தளவாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கோட்டைமுனை மகாவித்தியாலயம், வெலிமடை அரசினர் பாடசாலை, மெதடிஸ்த மத்திய கல்லூரி, கிரான்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கொஸ்லந்தை தமிழ் மகாவித்தியாலயம் என்பவற்றில் ஆசிரியராக கடமைபுரிந்த இவர் 08.03.1973 இல் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய அதிபராக பதவியேற்று 02.04.1987 இல் ஓய்வுபெற்றார். 39 வருடங்கள் கல்விப் பணியில் ஈடுபட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றும் புகழ்பெற்ற ஆரம்ப பாடசாலையாக பலரும் அனுமதிக்காக போட்டிபோடும் பாடசாலையாக மட்டுமல்ல வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அதிகளவு மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சாதனையும் புரிந்துள்ளது. இப்பாடசாலையை கட்டியெழுப்புவதில் ஆசிரியர் சிரோமணியின் பங்களிப்பு பலரும் அறிந்ததே. இவரினால் இடப்பட்ட அடித்தளத்தில் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் இன்றும் தரமான பாடசாலைகளில் ஒன்றாக திகழ்ந்து வருகிறது.

அர்ப்பணிப்பும், திறமையும், ஆற்றலும் கொண்ட ஒரு கல்விமானின் அனுபவங்களை பகிர்வது இன்றைய கல்வித்துறை சார்ந்தவர்களுக்கு பெரிதும் பயனுடையதே.

**கேள்வி: அன்றைய ஆசிரியர் சமூகத்திற்கும், இன்றைய ஆசிரியர் சமூகத்திற்கும் இடையில் என்ன வேறுபாட்டைக் காண்கிறீர்கள்?**

**பதில்:** அன்று இரண்டு வருட கற்பித்தல் பயிற்சியின் பின்பே ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. நாம் எந்தவித கொடுப்பனவுகளும் பெறாது ஆசிரியர் பயிற்சியில் ஈடுபட்டோம். ஆனால் இப்போது ஆசிரியராக நியமிக்கப்பட்ட பின்னர் சம்பளத்துடன் பயிற்சி வழங்கப்படுகிறது.

அன்று ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் நுழையும்போது வேட்டி நெஷனல் அணிவது முக்கியம். மிகவும் கட்டுப்பாட்டுடன் கூடியபயிற்சி வழங்கப்பட்டது. நான் கலாசாலை மாணவனாக இருந்தபோது அதிபராக இருந்த திரு.கந்தசாமி அவர்களை இன்றும் நினைத்துப்பார்க்கிறேன்.

இன்று பல ஆசிரியர்கள் பாடசாலைகளில் குறைந்த நேரத்தையும் தனியார் கல்வி நிலையங்களில் கூடுதலான நேரத்தையும் செலவிடுகிறார்கள். இதனால் ஆசிரியர்களது மதிப்பு குறைந்துவருகிறது. ஆசிரியர் பதவிக்கு சம்பளம் பெற்றுவிட்டு தனியார் கல்வி நிலையங்களில் கற்பிப்பது ஒரு வகையில் வியாபாரமே.

இதனால் பாடசாலைகளின் முக்கியத்துவம் குறைந்து ஆசிரியர்கள் மீதான மாணவர்களின் நம்பிக்கையும் குறைந்து வருகிறது.

டியூட்டரிகளில் படித்து சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களின் வெற்றியில் பாடசாலைகள் பெருமை கொள்கின்றன. அன்று ரியூசன் இல்லை. ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் கற்பித்தார்கள். எம்மால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் பெரிய பெரிய பதவிகளில் இருந்தாலும் இன்றும் எம்மை கண்டால் பணிவுடன் தலைவணங்குகிறார்கள்.

மதிப்பு தானாக ஏற்படாது எமது சேவையின் மூலமே கிடைக்கும்.

**கேள்வி: இன்றைய ஆசிரியர்களுக்கு கூற விரும்பும் ஆலோசனைகள் எவை?**

**பதில:** எந்தவொரு ஆசிரியரும் வெற்றிகரமாக கற்பித்தலை மேற்கொள்ள முதலில் மாணவர்களின் குடும்பப் பின்னணியை அறிய வேண்டும். மாணவர்களது திறமை, அபிலாசைகளை அறிந்து வழிகாட்ட வேண்டும். எந்தவொரு பெற்றோரும் தமது பிள்ளைகளை வைத்தியராகவோ, பொறியியலாளராகவோ வரவேண்டுமென்றே எதிர்பார்க் கின்றார்கள். ஆனால் மாணவரின் ஆற்றல் தகுதிபற்றி ஆசிரியரே நன்கறிவார்.

திறமையை அறிந்து கரிசனையுடன் கற்க வேண்டும் அப்போதுதான் சமூக மதிப்பு கிட்டும். பல்கலைக்கழகத்தில் கற்றாலும் எந்தவொரு மாணவனும் பேராசிரியர்களைவிட ஆரம்பக் கல்வியை போதித்த ஆசிரியர்களை என்றும் நினைவில் வைத்திருப்பார்கள். எனவே மதிப்பை கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும். மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். தீய பழக்கங்களில் ஈடுபட்டுக் கொண்டு மாணவர்களுக்கு ஒழுக்கத்தை போதிக்க முடியாது.

**கேள்வி: இன்றைய மாணவர்கள் மத்தியில் புறக்கிருத்தியக் கல்வியின் ஆர்வம் குன்றக் காரணமென்ன?**

**பதில்:** இன்று ஆசிரியர்களுக்கும் நேரமில்லை. மாணவர்களுக்கும் நேரமில்லை. மூன்றாம் வகுப்பிலேயே டியூசனுக்கு செல்லும் நிலை. ஆசிரியர்களில் அநேகமானோர் எப்போது பாடசாலை முடியும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கும் நிலை. நான் அதிபராக இருந்தபோது "எந்தக்கொத்தால் அளக்கிறீர்களோ அந்தக் கொத்தால் உங்களுக்கும் அளக்கப்படும்" என்பதை ஆசிரியர்களுக்கு அடிக்கடி உணர்த்துவேன்.

இன்று பெரும்பாலான ஆசிரியர்களிடம் அர்ப்பணிப்பு சிந்தனை குறைவு. இன்று ஆசிரியர்களுக்கு கூடிய வேதனம் வழங்கப்படுகிறது. அன்று குறைந்த வேதனம் பெற்ற நிலையில் இருந்த கடமை உணர்வு இப்போது மிகமிகக் குறைவாகும்.

**கேள்வி: இன்று இனரீதியாக பாடாசலை முறைமை உள்ளது பற்றி என்ன கருதுகிறீர்கள்?**

**பதில்:** இன்றைய இன முரண்பாடுகளுக்கு பாடசாலை முறைமையையும் முக்கிய காரணங்களில் ஒன்று. இன்று தமிழ் மாணவர்கள் தமிழ் பாடசாலைகளிலும் சிங்கள மாணவர்கள் சிங்கள பாடசாலைகளிலும் முஸ்லிம் மாணவர்கள் முஸ்லிம் பாடசாலைகளிலும் கல்வி கற்று வருகிறார்கள்.

இதனால் ஒரே நாட்டில் வாழும் மூன்று இனங்களுக்குள்ளும் புரிந்துணர்வு ஏற்படக்கூடிய வாய்ப்பு இல்லாதுபோகிறது. நான் எஸ்.எஸ.சி. பரீட்சைக்காக காத்தான்குடி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். அப்போது தமிழ் அதிபர் இருந்தார். ஒருவரை தவிர ஏனையவர்கள் ஆசிரியர்கள் அனைவரும் தமிழர்கள். ஆரையம்பதி பிரதேசத்தை சேர்ந்த அதிகளவு தமிழ் மாணவர்கள் இங்கு கல்வி கற்றார்கள்.

முன்னர் எம்மோடு படித்த முஸ்லிம் மாணவர்களை இன்று கண்டால் பரஸ்பர சிநேக மனப்பான்மையுடன் பழகி வருகிறோம். பாடசாலைகளின் தரத்தைப் பார்த்து இனமத பேதமற்ற முறையில் அனுமதி பெறும் நடைமுறை முன்னர் இருந்ததால் அநேக பிரபல தமிழ் பாடசாலைகளில் முஸ்லிம்கள் கல்வி கற்றார்கள். இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

இனங்களுக்கிடையில் புரிந்து ணர்வை வளர்ப்பதுடன் ஒரு இனத்தை மற்றைய இனம் புரிந்துகொள்வதற்கு இனரீதியாக பாடசாலைமுறை ஒழிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கேள்விகளுக்கு பதிலளித்தார் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் ஆசிரியர் பயிற்சி ஆலோசகராகவும் கடமைபுரிந்து ஏனைய ஆசிரியர்களுக்கும் வழிகாட்டியாக உள்ள நெஷனல் வேட்டி அணியும் பரம்பரையின் கடைசி பரம்பரையைச் சேர்ந்தவர்.

இவரது 39 வருடகால ஆசிரியர் சேவைக்காக கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய அபிவிருத்தி சங்கம் **"ஆசிரியர் சிரோமணி"**

பட்டம் வழங்கி கௌரவித்தது. 1979 இல் மட்டக்களப்பு ரோட்டரிக் கழகம் விருது வழங்கி கௌரவித்தது. மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை பொன்விழாவில் செம்மனச் செல்வர் பட்டமும் மட்டக்களப்பு கனேடிய சமூகம் சமூகசாகரன் பட்டம் வழங்கி கௌரவித்தன.

கலாசூரி இலக்கிய செம்மல் மகாவித்துவான் எவ்.எக்ஸ்.சி. நடராஜா வாழ்க்கை வரலாறு ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தாஜி நூலின் இணை ஆசிரியராக எழுதி வெளியிட்டார். அத்தோடு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்ற செயலாளராக இருந்து புலவர்மணி எழுதிய சுவாமி விபுலானந்தர் மீட்சிப்பத்து, புலவர்மணி கவிதைகள், பாலைக்கலி, "உள்ளதும் நல்லதும்" ஆகிய நூல்களை வெளியிட பெரிதும் உழைத்தார்.

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்ற உபதலைவராக செயற்பட்டு முதியோர் இல்லத்தை அமைப்பதிலும் பங்களிப்பை வழங்கினார். மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனோடு நெருங்கி செயற்பட்டார். ஆசிரியராக, அதிபராக, இலக்கிய படைப்பாளியாக, பதிப்பாசிரியராக, சமூக சேவையாளராக பணிபுரிந்து வரும் ஆசிரியர் சிரோமணி செல்வநாயகம் வழங்கிய பங்களிப்புகள் மட்டக்களப்பு மண்ணின் வரலாற்றில் என்றும் வாழும்.

**நேர் காணல்**
**-நெல்லை நடேசன்-**

**உறவினர்களை அடிக்கடி சந்தித்து விட்டு வரலாம். ஆனால் அவர்களுடனேயே வாழ முடியாது.**

3.8

# இரண்டு அறிஞர்களுக்கு மட்டக்களப்புச் சங்கம் அளித்த பாராட்டு

## கனடாவில் வெளிவந்த உதயன் பத்திரிகைச் செய்தி

மட்டக்களப்பு சங்கம் நடாத்திய மேற்படி விழாவினை ஆரம்பித்து வைத்து திரு.ஈழத்துபூராடனர் அவர்கள் உரையாற்றும் போது 45 வருடங்களுக்கு மேலாக மட்டக்களப்பில் சேவையாற்றிய எஸ்.பொ. அவர்கள் சிறந்த சமத்துவ வாதியும் இலக்கிய சுவைததும்பும் ஒரு முற்போக்கு எழுத்தாளர் எனவும் குறிப்பிட்டார். அத்தோடு தினகரன் பத்திரிகையில் கறுவாக்காட்டு தமிழ் கனவான்களைபற்றிய அந்தரங்கங்களை மிக துணிவுடன் மற்றைய மாகாண தமிழ் மக்களுக்கு வெளிக்காட்டியதனால் அவருக்கு ஏற்பட்ட இடையூறுகளையும் நினைவூட்டினார்.

ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அவர்கள் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் பயிற்சிக்காக தான் சென்றபோது அங்கு ஏற்கவே இரண்டாம் வருட மாணவரான திரு.த.செல்வநாயகம் அவர்கள் கலாசாலையின் ஒரு முதல் மாணாக்கராகி இருந்து ஏனைய மாணவர்களின் தினவரவுகளை அடையாளமிடும் தகுதிவாய்ந்த ஆசிரியமாணாக்கராக திகழ்ந்தவர் எனவும் அதுமட்டுமன்றி கடந்த பல வருடங்களாக மட்டக்களப்பு நகரிலே இயங்குகின்ற சமய சமூக கலாச்சார சங்கங்களில் முக்கிய பொறுப்புக்களை பொறுப்பேற்று நடாத்திய ஒரு நல்ல சமூகசேவையாளன் எனவும் குறிப்பிட்டார். எழுத்தாளர் எஸ்.பொவுக்கும் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களுக்கும் இப்பாராட்டு விழா நடத்தப்பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

அதனை தொடர்ந்து சங்கத்தின் செயலாளர் திரு.அஜந்தா ஞானமுத்து அவர்கள் விழாவிற்கு வருகை தந்திருந்த விழா நாயகர்களை மாலை அணிவித்து கவிதைபாடி வரவேற்றதுடன் வந்திருந்த ஏனைய பிரமுகர்களையும் பிறந்த மண்ணின் புகழ்பரப்ப வளரும் மண்ணில் எம்முடன் கரம்சேர்க்க முன்வந்த அனைவரையும் நன்றியுடன்

வரவேற்பதாக கூறி உரையாற்றினார். தொடர்ந்து சங்கத்தின் தலைவர் திரு.ப.கனகரெத்தினம் அவர்கள் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களுக்கும் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக மடடக்களப்பில் ஆற்றிவரும் சேவைக்காக சங்கத்தின் சார்பாக **"சமூகசாகரன்"** என்னும் பட்டத்தை வழங்கி பாராட்டினார். அதனையடுத்து திரு.எஸ.பொ. அவர்களுக்கு அவரது சமத்துவமும் முற்போக்கு எண்ணமும் கொண்ட இலக்கிய படைப்புகளுக்கும் மடடக்களப்பில் ஆற்றிய கல்விப் பணியையும் பாராட்டி சங்கத்தினால் வழங்கப்பட்ட சமத்துவசாகரன் என்னும் நாமம் பொறிக்கப்பட்ட கேடயத்தினை திருமதி.ஞானம்மா பூபாலபிள்ளை அவர்கள் வழங்கி எஸ்.பொ. அவர்களை கௌரவித்தார்கள்.

பாராட்டையும் தனக்களிக்கப்பட்ட சமத்துவசாகரன் என்னும் பட்டத்தையும் ஏற்றுக்கொண்டு உரையாற்றிய எஸ்.பொ. அவர்கள் 1955 இல் இருந்து தான் நைஜீரியா செல்லும் வரை தான்புகுந்த நாடான மட்டக்களப்பின் தமிழ் மக்களின் கலைவளமும் இயற்கையழகும் என்றும் எப்போதும் விருந்தினரை மனம்கோணாது உபசரிக்கும் சிறந்தமனம் கொண்ட மக்களையும் வெகுவாக புகழ்ந்து கொண்டார். மட்டக்களப்பின் வனப்புக்களையும் அவர்களின் பண்பாட்டு இலக்கிய கலாச்சார பின்னணிகளையும் தான் எழுதிய பல நூல்களில் சுட்டிக்காட்டிய தாகவும் குறிப்பிட்ட அவர் மட்டக்களப்பின் மைந்தன் முத்தமிழ் வித்தகரின் புகழை வெளிக் கொண்டு வரவேண்டும் எனவும் கூறியதோடு எந்த வித தகுதியுமற்ற சிலருக்கு அண்மை காலத்தில் முத்தமிழ் வித்தகர் என பட்டம் வழங்கப்பட்ட செயலினையும் கண்டித்தார். இறுதியாக மட்டக்களப்பு மக்களால் தனக்கு அளிக்கப்பட்ட பாராட்டிற்கு நன்றி தெரிவித்து என்றும் இன்றைய நிகழ்வினை மனதில் பசுமையாக எடுத்துச் செல்வதாக குறிப்பிட்டார்.

உலகத் தமிழர் பண்பாட்டுக் கழக கனடா கிளையின் உப தலைவர் திரு.ஆ.வேலுப்பிள்ளை உரை ஆற்றும் போது யாழ்பபாணத்து மக்கள் ஊருக்கு ஊர் சங்கம் வைத்திருப்பது போல் மட்டக்களப்பு மக்களுக்கும் சங்கங்களை அமைக்க வேண்டும் எனகேட்டு கொண்டார். யாழ்ப்பாணத்து மக்கள் தங்கள் சங்கங்களை உருவாக்கும்போது தங்கள் குறிக்கோளிலேயே கண்ணாயிருப்பது போன்று மட்டக்களப்பு மக்களும் தங்கள் சங்கங்களை அமைத்து தங்கள் கலை பண்பாட்டு நிகழ்ச்சிகளை நடாத்துவதோடு பிறந்த மண்ணிலும்

ஆக்கபூர்வமான விடயங்களை செய்ய வேண்டுமெனவும் இப்படியாக சங்கங்களை அமைப்பதால் பிரிவினையை ஏற்படுத்துவதாக நினைப்பது மிகவும் மடமைத்தனமானது எனக் குறிப்பிட்டதுடன் அப்படியான எண்ணங்களை இனிமேலாவது படித்தவர்கள் தவிர்த்து கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

விழாவின் போது ஈழத்துபூரடனாரின் கனேடிய குறவஞ்சி என்னும் நூலினை வித்துவான் திரு.க.ஞானரெத்தினம் அறிமுகம் செய்து விமர்சித்ததை தொடர்ந்து தனது நண்பரும் நாட்டுகூத்து விற்பன்னருமான திரு.மு.கணபதிப் பிள்ளையைப்பற்றி பூரடனாரின் மற்றய நூலான, முக என்ற நூலினை சமூகசாகரன் திரு.செல்வநாயகம் அவர்கள் வெளியிட்டு வைக்கும் போது தானும் திரு.முகவும் நூலினை ஆசிரியர் சமர்ப்பணம் செய்த பண்டிதர் பூபாலப்பிள்ளை அவர்களும் ஆரையம்பதியை பிறப்பிடமாக கொண்டதோடு பண்டிதரின் தலைமையின் கீழ் ஒன்றாக பயிற்சி கலாசாலையில் படித்த காரணத்தினாலும் தான் இந்த நூலினை வெளியிட்டு வைக்க தகுதியானவன் தான் எனவும் குறிப்பிட்டார்.

தனக்கு அளிக்கப்பட்ட பாராட்டினை நன்றியுடன் ஏற்றுக் கொண்ட ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் நினையாமல் தான் வந்த கனடா நாட்டில் தன்னை நினைத்து மட்டக்களப்பு மக்கள் பட்டமளித்து பாராட்டியதை மனமுருக தெரிவித்து கொண்டு மட்டக்களப்பில் இந்து இளைஞர் மன்றத்தால் அமைக்கப்பட்டுவரும் வயோதிப இல்லத்திற்கான நிர்மாணப் பணிக்கு உதவிசெய்யும் படியும் அனைவரையும் கேட்டுக் கொண்டார். கனேடிய மட்டக்களப்பு சமூகத்தினரால் கடந்த செப்டம்பர் 4ம் திகதி அன்று மாலை கிராமத்து விருந்து உணவகத்தின் பின்புறமாக அமைந்த கிராமிய சூழ்நிலையுடன் கூடிய புல்வெளியில் தாயகத்தின் பிரபல எழுத்தாளரும் கல்விமானுமான திரு.எஸ்.பொன்னுத்துரை அவர்கட்கும் மட்டக்களப்பில் பிரபல்யமான சமூகசேவையாளரும் ஆசிரியர் சிரோமணியுமான திரு.த. செல்வநாயகம் அவர்கட்குமான பாராட்டு விழாவும் விருந்துபசாரமும் இடம் பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**UTHAYAN - Sept. 08, 2000**

3.9 செங்கதிர்

ஆவணி - 2008

# வாழும்போதே வாழ்த்துவோம்!

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம்.

அமரர்களான தம்பிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியினருக்கு மட்டக்களப்பு ஆரையம்பதியில் 1927.04.03 அன்று பிறந்த திரு.த.செல்வநாயகம் அவர்கள் தற்போது தனது 81வது அகவையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்த பிரஜையாவார்.

தனது ஆரம்பக் கல்வியை ஆரையம்பதி மூத்த தம்பி நொத்தாரிஸ் வித்தியாலயத்தில் கற்று, பின்னர் காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம், கல்லடி உப்போடை சிவாநந்த வித்தியாலயம் ஆகியவற்றில் தொடர்ந்து, பின் 1946 இல் மட்டக்களப்பு ஆண்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்ற ஆசிரியராகி இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள பாடசாலைகளிலும் கற்பித்தல் தொழிலில் ஈடுபட்டுச் சிறந்த மாணவர் சமூகமொன்றை உருவாக்கியவர்.

1971 இல் பது-கொஸ்லாந்தை தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபராகி மீண்டும் மட்டக்களப்பிற்கு வந்து கோட்டைமுனை மகா வித்தியாலயத்தில் (தற்போது இந்துக்கல்லூரி) பணிபுரிந்து 1973 இல் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் அதிபராகச் சேவையாற்றி 1987.04.03 அன்று சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

- h மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரம்பப் பாடசாலைகளின் "**சிறந்த அதிபர்**" என்ற பெயரைப் பெற்றுக் கொண்டவர்.
- h 1979 இல் இவரது சேவையைப் பாராட்டி மட்டக்களப்பு "**றோட்டரிக்**" கழகம் பரிசு வழங்கிக் கௌரவித்தது.
- h மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய அபிவிருத்திச் சங்கம் இவர் ஓய்வு பெற்றபோது "**ஆசிரியர் சிரோமணி**" மட்டமளித்துக் கௌரவித்தது.
- h மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலை தனது பொன்விழாக் கொண்டாட்டத்தின்போது தனது மூத்த மாணாக்கனாகிய இவருக்கு "**செம்மனச் செல்வர்**" என்ற பட்டமளித்து மகிமைப்படுத்தியது.

கிழக்குப் பிரதேச ஆசிரியர் தொழிற்சங்கம் - மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம், புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றம், சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபை - மட்டக்களப்பு மாவட்டக் கலாசாரப் பேரவை - ஆரையம்பதி, கோட்டைமுனை, திசவீரசிங்கம் சதுக்கம் விநாயகர் ஆலய அறப்பணி இவற்றினூடாக மட்டக்களப்பு மாவட்ட சமூக, கலை, இலக்கிய, பண்பாட்டு வளர்ச்சியில் தனது ஆளுமையையும் ஆற்றலையும் அர்ப்பணிப்புடன் கூடிய சேவைகளினூடாக வெளிப்படுத்தியவர்.


புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றத்தினூடாக அன்னாரின் "**உள்ளதும் நல்லதும்**"; "**விபுலானந்தர் மீட்சிப்பத்து**"; **பாலைக்கலி**" ஆகிய நூல்கள் வெளிவரத் துணை நின்றவர். மன்றத்தின் செயலாளராகவும் பணிபுரிந்தவர்.

மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் 24.05.2008 அன்று தனது பவளவிழாக் கொண்டாட்டத்தின்போது கௌரவித்த துறைசார் திறமைகொண்ட பழைய மாணவர்களுள் இவரும் ஒருவர்.

அமரர் ருத்திராம்பாள் செல்வநாயகம் அவர்களின் வாழ்க்கைத் துணைவனாகவும் - வினோதா, சசிதரன், திலீபன், ஸ்ரீகாந்தன் ஆகியோரின் தந்தையாகவும் விளங்கி குடும்ப வாழ்வுடன் பொதுப் பணியிலும் தன்னை இணைத்துக் கொண்டு இன்றும் இளைஞனைப் போன்ற உற்சாகத்துடன் உழைத்துவரும் **"ஆசிரியர் சிரோமணி"** திரு.த.செல்வநாயகம் அவர்களை **"செங்கதிர்"** வாழும்போதே வாழ்த்திச் சங்கை செய்கிறது.

**-ஆசிரியர்-**

**எல்லையில்லா அன்புடனும், சிரத்தையுடனும் சரணாகதி என்ற எண்ணத்தில் இறைவனுடைய நாமத்தை ஜபம் செய்ய வேண்டும். ஒவ்வொருநாளும் நீ தியானம் செய்வதற்கு முன்பு முதலில் இறைவனிடம் இந்த உலகத்தில் எனக்கு உதவி செய்ய யாருமில்லை என்று நினைக்க வேண்டும்.**



# பகுதி – 04

# அமரர் ஆசிரியர் சிரோமணி பற்றிய நினைவுப் பதிவுகள்

## பொருளடக்கம்

**பகுதி 04**

**அமரர் ஆசிரியர் சிரோமணி**
**பற்றிய நினைவுப் பதிவுகள்.**


4.1 ஆசிரியர் சிரோமணி மட்டக்களப்பு....

4.2 வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த.....

4.3 ஆசிரியர் சிரோமணி.....

4.4 ஆயிரத்தில் ஒருவர்....

4.5 அன்புள்ள அப்பாவே....

4.6 எனது நோக்கில்......

4.7 கண்ணியம் மிக்க கடமையாளன்

4.8 வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்

4.9 ஐயா ஓர் அனுபவம்

4.10 ஆசிரியர் சிரோமணியும் நானும்

4.11 சொல்லின் செல்வருடனான....

4.12 புகழ் வல்லாளன்....

4.13 மட்டக்களப்பு....

4.14 அமரருள் உய்த்த.....

4.15 நீத்தார் பெருமை

4.16 மதிப்பிற்குரிய அதிபர்....

4.17 கண்ணன் வைத்தியரின் பார்வையில்....

4.18 காட்சிக்கினியவர்....

4.19 மனித நேயங்களை மதித்த மகான்

4.20 மனதில் என்றென்றும் மறையாத மாமணி

4.21 நினைவுகளின் நிழல்கள்

4.22 A Model of Decorum

4.23 எனது ஆசான்

4.24 மறக்க முடியா மகா ஆசான்

4.25 என் அன்பான அப்பா பற்றி....

4.26 My Darling Appappa

4.27 My Lovely Grandpa

4.28 எனக்காகவே வாழ்ந்த

4.29 ஆசிரியர் சிரோமணி.....

4.30 உமது மீதான எமது பாடல்

4.31 வாழ்க்கையின் வழிகளே....

4.32 மற்றவரிடம் பேசுவது எப்படி?

4.33 வெற்றியின் இரகசியம்



அருட் சகோதரர் வித்தியா சிரோமணி,
அதிபர் திலகம், கலாநிதி
எஸ்.ஏ.ஐ.மத்தியூ
கல்முனை பாத்திமாக் கல்லூரியின்
முன்னாள் அதிபர்

## 4.1 ஆசிரியர் சிரோமணி மட்டக்களப்பு தமிழகத்தில் ஒரு ஆசிரிய மணிமுடி

ஆசிரியர் சிரோமணி தம்பிப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் மட்டக்களப்பு தேசம் அறிந்த ஆசிரியப் பெருந்தகைகளில் ஒருவர். அவரை நான் முதலில் சந்தித்தது என்னுடைய ஒரு ஆசானாக ஆசிரிய வாண்மையை விருத்தி செய்ய அக்கால கல்வி அமைச்சு சிறப்பான ஆசிரியர்கள் சிலரைத் தெரிவு செய்து அவர்களுக்கூடாக புதிய ஆசிரியர்களுக்காக ஆசிரிய வாண்மை பற்றிய பயிற்சி வகுப்புகளை நடைமுறைப்படுத்திய காலம் **"புதிய பார்வை"** என்ற புதிய கல்விச் சீர்திருத்தம் 1972 இல் அறிமுகப்படுத்தப்பட்ட காலம். நான் கல்வி உலகில் ஆசிரியராக காலடி எடுத்து வைத்த காலம்.

இதன்படி அக்காலத்தே கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையிலே சனிக்கிழமைகளில் ஆசிரிய வாண்மை பற்றி தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் இடம்பெற்று வந்தன. ஐயா செல்வநாயகம் அவர்கள் கல்விப் புள்ளி விபரவியல் பாடம் கற்பித்தார்கள். ஒரு முறை வகுப்புக்குச் சென்றுவிட்டால் அடுத்தமுறை அவருடைய வகுப்பு தானாகவே மாணவர்களைக் கவர்ந்துவிடும். அவர் கற்பித்த மீடிறன் பரம்பல் பற்றிய பாடம் இப்போதும் மனக் கண்முன் வருகிறது. மிகத் திறமையான ஆசிரியர்.

ஆசிரியர் சிரோமணியாக அவர் கல்வி உலகில் மிக உயர்ந்து நின்றமை பெரும் வியப்புக்குரியதல்ல. அவர் ஆசிரியராக அன்றே பல ஆண்டுகளுக்கு முன்பு பேர் புகழுடனும், ஆற்றலுடனும் ஆசிரிய சமுதாயத்தின் அணிகலனாக திகழ்ந்துள்ளார். சிறந்த குடும்பப்

பின்னணியைக் கொண்டிருந்த அவர் மிகச் சிறந்த ஒரு பண்பாளர், ஆழ்ந்த அறிவு படைத்தவர், தமிழ்ப் புலமை மிக்கவர், பழகுவதற்கு மிக இனியவர், மிகச் சிறந்த ஒரு மனிதர் மட்டக்களப்புத் தமிழகத்தில் ஒரு ஆசிரிய மணிமுடியானவர்.

ஆசிரியராக மட்டுமன்றி சிறந்த மனிதராகவும் திகழ்ந்த அவர் ஒரு தமிழ் அறிஞர். ஏனைய கல்வியியலாளர்களையும், ஆசிரியர்களையும், பிறரையும் எப்பொழுதும் பெருமையுடன் போற்றிப் புகழும் பெருந்தகை. நீண்ட காலம் மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாயலத்தின் அதிபராகப் பணியாற்றி அக்கல்லூரிக்கு பெருமைகள் பலவற்றைத் தேடிக்கொடுத்தவர். ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் அவரது கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாயலத்துக்கே சிறப்புரிமை ஆகியது.

அவ்வித்தியாலயத்தின் பாரம்பரியத்தில் கல்வி அடைவுக்கெனவே மிகச்சிறந்த பாரம்பரியத்தை ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் உருவாக்கியிருந்தார். அவர் அப்பாடசாலையை விட்டு நீங்கிய பின்னரும் நுண்மதிமிக்க திறமையான மாணவர்களை ஈர்க்கும் ஒரு பாடசாலையாக அது திகழ்ந்தது. பாரம்பரியங்கள் உடனே அழிந்து விடுவதில்லை. அவை நீடித்து நிலைக்கக் கூடியவை. கல்லினாலும், சாந்தினாலும் ஆகிய கட்டடங்கள் கல்விச்சாலைகள் ஆகா. அந்த வகையில் ஆசிரியர் சிரோமணி அவர்கள் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்துக்கு அதன் பெருமைக்கு அடிக்கல் நாட்டிய ஒரு பெருமனிதராகின்றார்.

என்னைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பை நினைக்கின்ற பொழுது, அதன் உயர்வான மனிதர்களைப்பற்றிச் சிந்திக்கின்ற பொழுது ஐயா செல்வநாயகம் அவர்கள் முன்வரிசையில் கம்பீரமாகக் காட்சி தருகின்றார். அவர் அதிகம் பேசமாட்டார். எந்தக் குறித்த விடயத்தையும் காத்திரமாகவும், ஆழமாகவும் அளவிட்டு மதிப்பிடு செய்யும் ஒரு மனிதர் அவர்.

அன்னாரது வாழ்வும், வளமும் மட்டக்களப்புக்குக் கிட்டியது. கிடைத்த பெரும் அருள் வளமாகும். ஒருவரது பெருமை அவரவர் எச்சத்தால் அறியப்படும் என்றார். வள்ளுவர். மாண்புற்ற அவரது மக்கள் இம் முதுமொழிக்கு சாட்சிகளாக விளங்குகின்றார்கள்.

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் ஐயா அவர்கள் ஆசிரிய சமுதாயத்துக்கு விட்டுச் செல்லும் முதுசங்கள் பலவாகும். அந்த வகையில் ஆசிரியன் ஒருவன் கல்வி அறிவு, கட்டுரை வாண்மை, சிந்தனைத் தெளிவு, சீரிய வாழ்வு, மாணவர்பால் நேசம், மாணவர்கள் அனைவரும் நம் பிள்ளைகள் என்னும் எண்ணம் ஆகியவற்றிலே சிறந்து விளங்க வேண்டும். மேலும் ஆசிரியர் தமிழக நெறிப் பற்றும் அருள் நெறிப்பற்றும் உடையவராக இருப்பதுடன் விக்கிரமாதித்தன் கதைகள், பஞ்ச தந்திரக் கதைகள், ஆயிரத்தோர் இரவுகள் போன்ற அறநெறிக் கதைகளுடன் இதிகாசங்கள், உபநிடதங்கள், கீதை உபதேசங்கள், பல்சமய அறிவுகள், பழமொழிகள் பற்றிய அறிவினையும், அனுபவங்களையும் விரல் நுனியிலே பெற்றிருக்க வேண்டும். இதற்கெல்லாம் ஆசிரியர் சிரோமணி அவர்கள் சிறந்ததொரு எடுத்துக் காட்டாவார்.

எதையும் "ஆம்" என்றால் அதனை அப்படியே செய்து முடிக்கும் ஆற்றல் அவரது ஆசிரிய அணிகலன். அவர் அணியும் வெள்ளாடை அவரது உள்ளக்கமலத்தின் பிரதிபலிப்பு. நேரம், காலம் தவறாமை அவரிடம் ஆசிரியர்கள் கற்க வேண்டிய பாடங்கள் அதே போன்று ஐயா செல்வநாயகம் அவர்களது சமூகப்பார்வை மிகப் பரந்துபட்டது, எந்தவொரு மனிதரையும் இறைவனின் உயர் சிருஷ்டியாகக் காண்பவர் அவர். அவரது சமூகப்பணி வாழ்வினை சில வார்த்தைகளுக்குள் மட்டும் அடக்கிவிட முடியாது. இவ்வாறாக அன்னாரது சமய, சமூக, ஆசிரியத்துவ, தமிழ்ப்பணி வாழ்வானது குறிப்பாக மட்டக்களப்புத் தமிழகத்திலே மேன்நிலை பெறுகின்றதெனலாம்.

என் அருமை மிகு ஆசான் பெருமையுடன் இறைவன் திருவடி நிழலிலும் நீண்டுவாழ எனது பிரார்த்தனைகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

க.துரைரெட்ணசிங்கம்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,
204/06, லோவர் வீதி,
திருகோணமலை.
தொ.பே.: 026-2222715
20.07.2010.

## 4.2 வையததுள் வாழ்வாங்கு வாழ்ந்த பெருந்தகை

அமரர் ஆசிரியர் சிரோமணி தம்பிப்பிள்ளை செல்வநாயகம் அதிபர் அவர்கள் அமரத்துவம் அடைந்து நாட்கள் பல கடந்தாலும் அவர் இவ்வுலகில் விட்டுச் சென்ற எச்சங்கள் புத்துயிர் பெறுகின்றது.

“**தக்கார் தகைவிலார் என்பது அவர்தம் எச்சத்தால் ஈயப்படும்**” என்பது ஆன்றோர் வாக்கு. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த ஒரு பெருந்தகை சாதனைகள் பல படைத்து வாழ்க்கையில் நமக்கெனத் தனிச் சிறிப்பிடத்தைப் பெற்றுக் கொண்டவர் மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் இவர் அதிபராக கடமையாற்றிய காலம் இவ்வித்தியாலயத்தின் பொற்காலம் எனலாம். தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் மிகக் கூடுதலான மாணவர்களைத் தோற்றுவித்து சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு காரண கர்த்தாவாகவிருந்தவர் மட்டு நகரில் உள்ள சிறந்த கல்விக் கூடங்களில் இவ்வித்தியாலயமும் சிறப்பிடத்தைப் பிடித்து வளர்ந்து வந்தது குறிப்பிடத்தக்கது. அதிபர்கள் கடமை புரியும் பாடசாலைத் தரங்களைக் கொண்டு அதிபர்கள் மதிப்பிடப்படுவதில்லை. அவர்களின் செயற்றிறனைக் கொண்டே மதிப்பிடப்படுகிறார்கள். இதற்கு எடுத்துக் காட்டாக விளங்கியர் அமரர் அவர்கள்.

ஆசிரியர் தொழிற்சங்கங்களில் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதனால் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் கிடைத்தது. அரசியலில் ஈடுபட்ட காலத்திலிருந்து எமது தொடர்புகள் மேலும் நெருக்கமடைந்தன. ஒவ்வொரு சனிக்கிழமை தவறின்

ஞாயிற்றுக்கிழமை இவரது தொலைபேசி அழைப்பு வரும். சற்று நேரம் ஒதுக்கி தொலைபேசியில் உரையாடியது அமரர் அவர்களுக்கும் எனக்கும் திருப்தியளித்தது. முக்கிய பத்திரிகைகள் அனைத்தையும் தவறாமல் வாசித்து மிக ஆழமான கருத்துப் பரிமாற்றங்கள் செய்வார். தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு நீதியான ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு கிடைத்து தமிழ் மக்கள் அரசியல் உரிமைகளுடன் இந்நாட்டில் கௌரவமாக வாழவேண்டுமென்பதில் மிக்க பற்றுறுதியுடனிருந்தார்.

மட்டுநகர் சென்று நேரில் சந்தித்து கதைக்க வேண்டும் என்று விரும்பியிருந்தாலும் அது பல கட்டத்தில் சந்தர்ப்பம், சூழ்நிலை இடந்தரவில்லை. சுகவீனமுற்றுக் கதைக்க முடியாமலிருந்த பொழுது தான் சென்று பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. சுகபலத்துடனிருக்கும் பொழுது சென்று பாத்திருந்தால் எவ்வளவு மகிழ்ச்சியடைந்திருப்பார் என்பதை எண்ணி எனக்குள்ளேயே தாங்கமுடியாத கவலையடைந்தேன். சிறந்த ஆசிரியராக, முன்னோடி அதிபராக, தொழிற்சங்கவாதியாக, சமய, சமூகப் பணிச் சேவகனாக பொறுப்புள்ள குடும்பத் தலைவனாக பாசமிகு தந்தையாக, பழகும் பண்பு நிறைந்த நண்பனாக, நல்லாலோசனை கூறி வழிநடத்தும் ஆலோசகராக அனைத்து உள்ளங்களிலும் வாழ்ந்த பெருமகனை இன்று நாம் இழந்து நிற்கின்றோம்.

அன்னாரின் பிரிவுத்துயரால் துயருறும் பாசமிகு பிள்ளைகள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரின் மன ஆறுதலுக்காகவும், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம். அவர் காட்டிய நல்வழியில் சேவை புரிவோம் இதுவே அன்னாருக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

**க.துரைரெட்ணசிங்கம்**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
திருகோணமலை மாவட்டம்.

4.3

# வாழ்க்கை நெறி

**திருமதி.தவமணிதேவி அருள்நந்தி -** நூலகர்- கிழக்குப் பல்கலைக்கழகம்.

"**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் இப்புவியில் மட்டுமல்ல வானுலகத்திலும் தெய்வத்தில் வைத்து மதிக்கப்படுவான்**" என்பது வள்ளுவரின் கூற்று. இவ்வரிய மனிதப்பிறவியைப் பெற்ற நாம் அதை எவ்வாறான நெறியில் கொண்டு திருப்தியடைகிறோம், முழுமை பெறுகின்றோம் என்பது இன்று எம் ஒவ்வொருவர் மனதிலும் எழுப்பப்பட வேண்டிய ஒரு உள்ளார்ந்தமான எண்ணம்.

மனிதர்கள் நாம் பலவிதம், வாழ்க்கை வாழ்வதற்கே என நினைப்பவர் ஒருசிலர். வாழ்க்கையை எப்படியும் வாழலாம் என்று நினைப்பவர் ஒருசிலர், வாழ்க்கையை ஒரு வகுக்கப்பட்ட நெறிக்குள் உட்படுத்தி அல்லது நடத்திச் சென்று வாழ்பவர்கள் இன்னும் சிலர். இவர்களுள் அமரர் ஆசிரியர் சிரோமணி செல்வநாயகம் அவர்கள் எவ்வாறு ஒரு வரையறுக்கப்பட்ட நெறிக்குள் தன்னை உட்படுத்தி வாழ்ந்தார் என்பதை நோக்கவே இச்சிறிய கட்டுரையின் நோக்கம்.

ஆசிரியர் சிரோமணி அவர்கள் கால்பதித்த பரிமாணங்கள் பல. அவற்றுள் சிலவற்றை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

- **குடும்பச் சூழ்நிலை**
- **உத்தியோகப்பின்னணி - கல்விப்பணி**
- **சமயப்பின்னணியும், ஆன்மீக வாழ்க்கையும்**
- **சமூகப் பின்னணியும், சேவையும்.**
- **சான்றோர், நல்லோர் தொடர்பு**
- **கலாசாரப் பண்பாட்டு பங்களிப்பு.**

**குடும்பச் சூழ்நிலை:**

மனித உயர்வுக்கு, அது தனிமனிதனாகட்டும் அல்லது பல மனிதர்கள்

சேர்ந்த சமூகமாகட்டும் அவர்கள் தம் குடும்பப் பின்னணி, சமூகப்பின்னணி, கல்விச் சூழ்நிலை, அவர்களைச் சூழ்ந்துள்ள புறச் சூழ்நிலை என்பன முக்கிய பங்கை வகிக்கின்றன. இவற்றுள் குடும்பம், கல்வி, புறச்சூழ்நிலை என்பன ஒரு முக்காலியின் மூன்று கால்கள் போன்று ஒருவனை உருவாக்குவதிலும், அழிப்பதிலும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவ்வகையில் ஆசிரியர் சிரோமணி அவர்கள் தன் குடும்பச் சூழ்நிலையைப் பாங்காகப் பயன்படுத்தினார். அன்பான மனைவி, பண்பான பிள்ளைகள், நலம்மிக்க உற்றார், உறவினர், நண்பர்கள் எனப்பல நல்லுறவுகளைப் பெற்றிருந்தார். அவற்றை மென்மேலும் வலுப்படுத்தியதை எம்மால் கண் கூடாகக் காணக்கூடியதாக இருந்தது. குறிப்பாக அவரது பிள்ளைகள் வள்ளுவரது வாக்கான தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும் என்னும் குறளுக்கு உதாரணமாக வாழ்கின்றனர். சேவை செய்தல், பிறருக்குதவுதல், இலவசக்கல்வி உதவி, படிக்கும் மாணவர்களுக்குப் பொருளாதார உதவி என தம் பெற்றோரின் விருப்பத்தைக் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது விதந்துரைக்கப்பட்டதொன்று. கனடாவிலிருந்து நிதி திரட்டி மாணவர்களை ஊக்கப்படுத்த உதவும் **"விபுலானந்தர் கல்வி அபிவிருத்திச் சங்கம்'** (VEDS) நிறுவனத்தின் செயல் இங்கு குறிப்பிடத்தக்கது.

## உத்தியோகப்பின்னணி (கல்விச்சேவை)

ஆசிரியத் தொழில் மிகவும் புனிதமானது. எதிர்காலத்தில் பல்வகைப்பட்ட தலைவர்களை உருவாக்கும் மாணவர்களைச் சமுதாயத்திற்கு வழங்கும் ஒரு உன்னதமான பணி அவ்வரிய ஆசிரியத்தொழிலை அரசாங்க உத்தியோகம் எனக் கருதாது அதை ஒரு சேவையாகச் செய்தவர் ஆசிரியர் சிரோமணி அவர்கள். அவரால் ஆசிரியர் பதவி அழகுபெற்றது. உயர்வு பெற்றது எனலாம். அவர் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் பணிபுரிந்த காலத்தில் (1973.08.03 - 1987.04.03) 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய பிள்ளைகள் நல்ல பெறுபேறுகளைப் பெற்றதுடன் தேசிய, மாவட்ட மட்டத்திலும் இவ்வித்தியாலயம் முக்கிய இடத்தைப் பெறத்

தொடங்கியமை நம்மில் பலரறிவோம். இது ஆசிரியர் சிரோமணி அவர்களின் ஒரு மைல்கல் என்பது மறக்கமுடியாத உண்மையாகும். வாழ்க்கை என்பது கல்வி கற்ற, உத்தியோகம் பெற்று இலௌகிக வாழ்க்கையுடன் மட்டும் நின்றுவிடாது அது மனிதனின் பூரணத்துவத்தை வெளிக்கொணர வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையுடன் செயல்பட்டார்.

இவ்விடத்தில் சுவாமி விவேகானந்தர் கல்வி பற்றி கூறிய "**மனிதனின் பூரணத்துவத்தை வெளிக்கொணர்வதுதான் கல்வி என்றும், மனிதனிடம் தெய்வீகம் மறைந்துள்ளது அத் தெய்வீகத்தை வெளிக் கொணர்வதுதான் மதம்**" என்ற கூற்று சிந்திகற்பாலது. ஆசிரியர் சிரோமணி அவர்கள் தன் கல்விப்பணி மூலம் மாணவர் சமூதாயத்தை ஆன்மீக நெறிப்படுத்தினார் எனலாம்.

ஆசிரியர் சிரோமணி அவர்கள் எவ்வாறு தன் உத்தியோகத்தை நேசித்தாரோ, அந்தளவுக்கு நேரத்தை மதித்தார். இன்னும் கூறப்போனால் நேரத்தை நேசித்தார் என்றே கூறலாம். இன்றைய தகவல் விஞ்ஞான உலகத்தில் "**நேரமுகாமைத்துவம்**", "**நேரம் ஒரு அரசன்**" என்றெல்லாம் நேரத்துடன் எதிர் நீச்சல் போடும் வேளையில் ஆசிரியர் தன் வாழ்நாள் முழுவதிலும் நேரத்தை தானே நிர்வகித்தார்.

பாடசாலைக்கு அதிநேரத்துடன் சென்று அதன் சுத்தம், சுகாதாரத்தில் மிகவும் கவனம் செலுத்தினார். சிறுகுப்பையைக் கண்டாலும் அதைத் தானே முன்னின்று அகற்றுவதன் மூலம் மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும், மற்றவர்களையும் அச் சீரிய பண்பைச் செய்யத் தூண்டுபவராகவும் காணப்பட்டார். எந்த ஒரு நிகழ்ச்சியிலும் குறிப்பிட்ட நேரத்துக்கு சிறிது முன்னதாகவே அந்நிகழ்ச்சியில் பிரசன்னமாகி இருப்பது அவருக்கேயுரிய தனிச்சிறப்பு. ஆகவே நேரத்தை மதித்து செயற்பட்டமை அவரது வாழ்க்கை நெறியில் முக்கியமானதொன்றாகும்.

புனிதமான இப்பணியினால் அவர் வளர்த்த மாணவர் சமூகம் இன்று பல நிலைகளில் சீரிளமை குன்றாது சிறந்த பண்புகளுள்ள

பிரசைகளாக வாழ்வது அவரது பணிக்குக் கிடைத்த வெற்றியாகும். அவரால் ஆரம்பக்கல்வி "**ஏடு தொடக்கல்**" செய்யப்பட்ட சிறார்கள் இன்று பெரும் கல்விமான்களாக இருப்பதை நாம் அறிவோம்.

போதிப்பவராக இருந்தால் மட்டும் குருவாக முடியாது. அக்குரு தன்வாழ்விலும் போதித்ததை வாழ்ந்து காட்டுபவராகவும் இருத்தல் அவசியம். இவ்வகையில் வாழ்ந்து குருவுக்கு முன்மாதிரியாக இருந்தவரே ஆசிரியர் சிரோமணி அவர்கள்.

## சமயப்பின்னணியும் ஆன்மீக வாழ்க்கையும்

சிறுவயதிலே கிடைத்த சனாதன சமயச் சூழ்நிலையானது அவரது உத்தியோகத்தின் மூலம் தன்னையும், தன்னைச் சார்ந்தோரையும் வளர உதவியது. "**கோபுரதரிசனம் கோடி புண்ணியம்**" என வாழ்ந்தார்.

பாடசாலையில் சமயக்கல்வியை ஆழமாகக் கற்றுக் கொடுத்தார். அவரது விபூதி அடையாளம், சந்தனத்திலகம், தூய வெள்ளாடை என்பன அவரது அகவழிபாட்டை துல்லியமாக வெளிப்படுத்தியது. வாழ்க்கையையும், ஆன்மீகத்தையும் தன் இரு கண்களாகப் போற்றி வாழ்ந்தார். அன்பை ஊற்றி ஆன்மீகத்தை வளர்த்தார். சர்வமதப் பிரியராக வாழ்ந்தார். அவர் வாழ்வில் அவர் சந்தித்த இஸ்லாம், கிறிஸ்தவ, பௌத்த பெரியார்கள் இவற்றுக்குச் சான்று.

ஒவ்வொரு வருடத்தின் தொடக்கத்திலும் மட்டக்களப்பு - திருகோணமலை ஆயரிடமும், இராமக்கிருஷ்ண மிஷன் தலைவரிடமும் ஆசீர்வாதம் பெறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆகவே இவர் ஒரு சத்சங்க தொடர்புடையவராகவும் காணப்பட்டார். சமயப் பொறையும், சர்வமதப் பிரியராகவும் காணப்பட்டமையினால் இவர் பல பொது அமைப்புக்களில் சேர்ந்து சேவையாற்ற அழைக்கப்பட்டிருந்தார். அவர் தொடர்புபட்டிருந்த இராமக்கிருஷ்ண மிஷன், ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம், இந்து இளைஞர் மன்றம் என்பன குறிப்பிடத்தக்கவை.

## சமூகப் பின்னணியும் சேவையும்.

எந்த ஒரு மனிதனதும் கடமை, சேவை, உறவு, அன்பு போன்றன அவ்வக் குடும்பத்துடன் அதாவது ஒரு வட்டத்திற்குள் இருந்தால்

இம் மனிதப் பிறவியினால் அம் மனிதன் அடையும் சுகம் மிகச் சிறியதாகவே இருக்கும். இம் மனிதன் குடும்பங்களைக் கொண்ட சமூதாயப் பிராணி மற்றவர்களுடன் சேர்ந்தே வாழவேண்டும். மனிதன் தனக்காக மட்டுமல்ல பிறருக்காகவும், சமூதாயத்திற்காகவும் வாழவேண்டும். அவனது சகல நடவடிக்கைகளும் சமூகம் சார்ந்ததாகவும், சமூக விழுமியங்களைக் கட்டியெழுப்புவதாகவும் இருப்பதன் மூலம்தான் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தை ஏற்படுத்த முடியும். இவ்வகையில் ஆசிரியர் சிரோமணி அவர்களின் செயல்கள் யாவும் சமூகம் சார்ந்ததாகவே காணப்பட்டதை நாம் மறுத்தலாகாது.

அவரது தூய ஆசிரியத்தொழில் தவிர்ந்த ஏனைய பல சமூக நிறுவனங்களில் அங்கத்துவம் வகித்திருந்தார். குறிப்பாக அவர் பல்வகைப்பட்ட இன்னல்களை அனுபவித்த மக்களது அமைதி, இருப்பிடம், நீதி என்பவற்றை பெறுவதற்கு துணிவுடன் தன் கருத்துக்களை முன்வைத்தவர். மேலும் விபுலானந்தர் முதியோர் இல்லத்தில் அவர் ஆற்றிய பணிகள் பல.

முன்பும், அவர் மறைந்த பின்பும் அவரது ஒரேமகள் தந்தை வழி சென்று இலவசக்கல்வி புகட்டலும், கல்விகற்கும் சிறார்களுக்கு இடவசதியளித்து வருவது தந்தையின் சேவை இடையறாது தொடர்வது நினைவுக்குரிய தொன்றாகும். அது மட்டுமன்றி சமூக அபிவிருத்தியினை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் எந்த நிகழ்ச்சியிலும் பங்குபற்றி அவற்றின் வளர்ச்சிக்கு ஊக்குவிப்பது அவரது இயல்பு. அவற்றில் சமூக, கலாசார, கல்வி, பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாப்பதில் மிகக் கவனம் செலுத்தினார். எவ்விடயத்தில் தலையிட்டாலும் அதில் தன் முழுமனதுடன் ஈடுபட்டமையே அவரது வாழ்வின் முழு வெற்றிக்கு காரணமாயிற்று. தன் மனதிற்கு ஒவ்வாத விடயம் என்றால் அதை நேரே கூறி அவ்விடத்திலிருந்து ஒதுங்கிவிடுவார்.

சமூகம் சார்ந்த கல்வியிலும் மிக்க அக்கறை கொண்டிருந்தார். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் ஒரு பெரிய கல்வி நிறுவனமான கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற்

கொண்டு தனது வீட்டுநூலக சேகரிப்பில் ஒரு பகுதியை பல்கலைக்கழக நூலகத்திற்கு ஆனிமாதம் 2007 அன்பளிப்புச் செய்தார். அதேவேளையில் நூல்கள் மிகக் குறைந்த கிரான்குளம் பொது நூலகத்திற்கும் கொடுத்தது அவரது சிறப்பாகும்.

அது மட்டுமன்று ஆசிரியர் சிரோமணி அவர்கள் என்னுடன் அடிக்கடி உரையாடும்போது தன் நினைவாக கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழியில் திறமைச் சித்தி பெறும் மாணவருக்கு வெகுமானம் கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டும் என்பார். அதை தன்பிள்ளைகள் நிறைவேற்றுவார்கள். அதற்கு வேண்டிய தொழில் ரீதியான முறைகளை அவ்வேளையில் செய்து கொடுக்கும் படியும் கேட்டுக் கொண்டார். இது அவர் கல்விக்கு கொடுத்த முக்கியத்துவத்தையும், ஆர்வத்தையும் துல்லியமாக வெளிப்படுத்தியது.

### சான்றோர் தொடர்பு

**"பால் மழையாகப் பொழிந்தாலும் பாத்திரம் இருப்பவனுக்குத்தான் அது பயன்படும்"** என்கிறது ஒரு ரஷ்யப் பழமொழி. ஒரு நாட்டில் நீர், நிலம், கனிவளங்கள் என பல்வகைப்பட்ட செல்வங்கள் இருந்தபோதும் அந்நாட்டின் முதன்மைச் செல்வம் அங்கு வாழும் சான்றோர்கள், அறிவார்ந்த மக்கள் தான் என்பர் பெரியோர். **"அரியவற்றுள் எல்லாம் அரிது சான்றோருடைய தொடர்பு"** என வள்ளுவர் கூறினார். அத்தகைய பெருமை வாய்ந்த சான்றோர் தொடர்பை ஆசிரியர் சிரோமணி கொண்டிருந்தார். அவர் தன் வாழ்க்கையைச் செம்மையாகக் கொண்டு செல்ல அச்சான்றோர் நெறியைக் கடைப்பிடித்தார். அப்பெரியோர்களில் குறிப்பாக சுவாமி ஜீவனானந்தஜீ மகராஜ், சவாமி ஆத்மகனானந்தஜீ மகராஜ், வி.சி.கந்தையா, கலாசூரி F.X.C. நடராசா எனப் பட்டியலிடலாம்.

நன்றாக வாழவேண்டும் என நினைத்தால் மட்டும் போதாது. நல்லோர் தொடர்பும் தேவையே என்பதை அவர்தம் வாழ்க்கையில் கடைப்பிடித்தார். நல்லோர் தொடர்பு என்றால் உயிருள்ள மனிதர்கள் மட்டுமல்ல, பகவத்கீதை, குறள், இராமக்கிருஷ்ணர், விவேகானந்தர், அன்னை சாரதாதேவி ஆகியோரின் அமுதமொழிகள் என்பனவற்றை படித்தலும் அடங்கும். ஆசிரியர் சிரோமணி அவர்கள் இவ்வமுத

மொழிகளிலிருந்து நற்சிந்தனைகள் பலவற்றை எடுத்துக்காட்டி உரையாடுவதன் மூலம் இச்சான்றோர் தொடர்பை மேலும் வலுப்படுத்தினார்.

இத்தகைய ஒரு சந்தர்ப்பத்திலேயே இக் கட்டுரையாளனாகிய நானும், ஆசிரியர் சிரோமணியும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டோம். அந் நந்நாளை இன்றும் நன்றியுடன் நினைவு கூருகிறேன். மறைந்த கலாசூரி F.X.C. நடராசா அவர்களால் ஆசிரியர் சிரோமணி அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். ஏறக்குறைய 25 வருடங்களுக்கு மேலாக எனக்கும், மறைந்த ஆசிரியர் சிரோமணிக்கும் தொடர்பு இருந்துள்ளது. இது ஒரு பெரும் பாக்கியம் என்றே இன்றும் நினைக்கின்றேன். மிகுந்த அனுபவமும், அறிவும், பண்பாடும் நிறைந்த பண்பாளர் ஆசிரியர் சிரோமணி அவர்கள்.

எம் குடும்பத்தில் பல நல்விடயங்களில் பங்குபற்றி அறிவுரை கூறி வழிகாட்டுபவராக விளங்கினார். அது மட்டுமல்ல துக்கமான சந்தர்ப்பங்களில் மிக ஆறுதலாக ஆற்றுப்படுத்துவார். இவர் தொடர்பு எமக்குக் கிடைத்த முதுபெரும் செல்வமாகவே இன்றும் நினைவுடன் இருக்கின்றோம். தான் பெற்ற பெரியோர் தொடர்புச் செல்வத்தின் அனுபவத்தை மற்றவருக்கும் அளித்த பெரியாராகவே ஆசிரியர் சிரோமணி காணப்பட்டார்.

**கலாசார பண்பாட்டு பங்களிப்பு**

மனிதன் ஒருவன் இலௌகீக வாழ்க்கையில் பல்வகையில் முன்னேற்றம் அடைந்து கலாசார பண்பாட்டு விழுமியங்களை பின்பற்றாது வாழ்வானாகில் அவ்வாழ்க்கை அர்த்தமற்றதாகவே இருக்கும். ஆசிரியர் சிரோமணி அவர்கள் மனித விழுமியங்களாக சத்தியம், தர்மம், சாந்தி, அகிம்சை போன்றவற்றை கடைப்பிடித்து வாழ்ந்தவர். இவ்வாழ்க்கையானது இயல்பாகவே கலாசாரப்பண்பாட்டு விழுமியங்களை பாதுகாத்து வாழ்வதற்கு வழிகாட்டியது. சகிப்புத்தன்மை, பொறுமை என்பவற்றுக்கு முன் உதாரணமாக விளங்கினார். எனவே வாழ்க்கையை அர்த்தத்துடன் வாழ்ந்து காட்டினார்.

சமூகத்தில் குறிப்பாக இளம் சிறார்களுக்கு கலாசார பண்பாட்டு விழுமியங்களை தன் ஆசிரியர் தொழில் மூலம் வளர்த்தார். அவரது நடை, உடை, பேச்சு செயல் என்பவற்றின் மூலம் சமூகத்தில் பண்பாட்டை காப்பதில் ஒரு உதாரண புருஷராகக் காணப்பட்டார். ஆசிரியர் சிரோமணி அவர்களுடன் உரையாடிய போது அவரிடம் பல ஆதங்கங்கள் காணப்பட்டன. தமிழ் மக்களின் அவலநிலை, பொருளாதாரத் தாக்கம், சிறார்களின் கல்விநிலை, கலாசார பண்பாட்டின் அவலநிலை பற்றி அடிக்கடி உரையாடுவார். அவற்றின் தனித்தன்மை குறைவதையிட்டு மனம் தளர்கிறது என்பார். இத்தகைய பெருமனமும், சமூகப்பற்றும் கொண்டிருந்த இப் பெரியாருக்கு சமூகமாகிய நாம் என்ன செய்ய வேண்டும் என்பது எம்முன் எழுகின்ற கேள்வியாக உள்ளது.

ஆசிரியர் சிரோமணி அவர்கள் ஒரு விடயத்தை அடிக்கடி கூறுவார். ஆன்மீகத்தையும் இலௌகீக வாழ்க்கையும் பிரிக்க வேண்டாம். அதை நாம் இரு கண்கள் போல் ஒன்றாகக் கொண்டு செல்வோம் என்பார். அதில்தான் வாழ்க்கையின் அர்த்தமும் வெற்றியும் தங்கியுள்ளது என்பார். அவர் கூறிய படி வாழ்ந்தும் காட்டினார். அவர் வழி சென்றால் வாழ்க்கையின் பலதடைகளை இலகுவாகத் தாண்டலாம். நல்ல ஒரு வாழ்க்கையை நாம் எமக்குள்ளேயே நெறிப்படுத்திக் கொள்ளலாம்.

**முடிபு:**

ஆசிரியர் சிரோமணி என்னும் அர்த்தமுள்ள அழகான அவர் சிறப்புப் பெயர் அவர் வாழ்க்கை நெறிமூலம் அர்த்தமாகியதுதான் அப்பெயருக்குப் பொருத்தமானவர் என்பதை நிரூபித்தார். எதிர்கால சந்ததியினருக்கு உதாரணமாக, உயர்ந்தவராக வாழ்ந்து காட்டினார். அவரின் வழிநடத்து நற்பிரஜையாக வாழ்வதே அவருக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

*"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்ட அழகும்*
*மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து*
*நல்லம் யாம், என்னும் நடுவுநிலைமையால்*
*கல்வி அழகே அழகு."*

**-பதினென் கீழ்க்கணக்கு-**

## 4.4 ஆயிரத்தில் ஒருவர் எங்கள் ஆசிரியர்

# சிரோமணி த. செல்வநாயகம்.

**அன்புமணி - ஆரையம்பதி - 01**

வித்தகர் என்றால் அது விபுலானந்தர்
புலவர்மணி என்றால் அது பெரியதம்பிப்பிள்ளை
ஆசிரியர் சிரோமணி என்றால் அது
அமரர் செல்வநாயகம் தான்.
ஆசிரியப் பணியில் அவர் ஒரு முன் உதாரணர்.
சமய சமூகப்பணிகளில் ஒரு வழிகாட்டி.
இந்து இளைஞர் மன்றம், புலவர்மணி
பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றம்
முதியோர் இல்லம் ஆகியவற்றில்
இவர் ஆற்றிய பணிகள் இவரின் ஆளுமைக்கு
எடுத்துக் காட்டாகின்றன.
எந்த ஒரு பணியிலும் அவரது தனித்துவம்
பளிச்செனத் தெரிந்துவிடும்.
ஆளுமை, ஆற்றல், அரவணைப்பு
அத்தனையும் இவரது தனித்துவங்கள்.
அமைதியான, ஆனால் ஆழமான
நோக்கும் போக்கும் இவரது அணுகுமுறை,
வெள்ளை உடை அவரது தூய்மையைக் காட்டும்.
நெற்றியில் துலங்கும் விபூதி
அவரது ஆழ்ந்த இறைபக்தியைக் காட்டும்.
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
என்பதற்கு இவரே ஒரு பிரத்தியட்ச உதாரணர்.
எண்ணம், சொல், செயல் மூன்றிலும் புனிதர்.

இயலாத போதும் முக்கிய நிகழ்வுகளுக்கு
எப்படியோ வந்து சேர்ந்துவிடுவார்.
இறுதிவரை இலட்சிய வாழ்வைக் கடைப்பிடித்தார்.
இறைவன் அழைப்பு வரும் வரை காத்திருந்தார்.
இன்று அவன் அழைப்பை ஏற்று
எங்கள் எல்லோரிடமும் விடைபெற்றுச் சென்றார்.
இறைவன் திருவடி நிழலில் சரணபுகுந்தார்.
ஆனாலும், அவர் என்றும் நம்
இதயங்களில் வாழ்ந்திருப்பார்.

> "நான் செய்தேன், நான் செய்தேன்" என்ற தற்பெருமைக்கு இடந்தராமல் "என் மூலமாக இறைவன் செய்து முடித்தான்" என்று அடக்கத்துடன் எண்ணப் பழகிக்கொண்டால், மன இறுக்கம் குறையும். அடுத்த உதவி கேட்டு வருபவர்களுக்காக வாசலில் காத்து நிற்பீர்கள்.

## 4.5 அன்புள்ள அப்பாவே........

**உங்கள் அன்புள்ள சிறிய மகன் சிறி**

எழுதத் தொடங்கியது 11.10.2009. வாசிக்கப்பட்டது அப்பாவின் இறுதியாத்திரையில் 14.02.2010.

இது கடிதமா, கவிதையா, கட்டுரையா என்று எனக்கு விளக்கிக் கூற முடியவில்லை. இப்படி ஒரு சந்தர்ப்பத்தில் வாசிப்பதற்காகவும் எழுதப்படவில்லை. அப்பாவிடம் தனியாக வாசித்துக் காட்டுதவற்காக எழுதினேன். ஆனால் அதை அவர் கேட்காமலேயே கண்ணீர்த் துளிகளாய் மாறிவிட்டது.

எனக்கும் உயிர் கொடுத்து, எனது மொழிக்கும் வடிவம் அமைத்துக் கொடுத்த என் ஆசானே! அன்புள்ள அப்பாவே!

என் இந்த நிமிடத்து வேண்டுதல் எல்லாம் ஆண்டவா! அவர் இந்த எழுத்துக்களை நான் வாசிக்கக்கேட்டு என் முதுகில் தட்டிக் கொடுத்து முத்தமிட வேண்டும் என்பதே.

"கல்லுக்குள் ஈரம் என்பார்கள்" அந்த ஈரம் இவருக்கும் இரத்தமாய் ஓடியது. கோபம் என்னும் போர்வையால் இவர் தன்னை மூடி வெளிக்காட்டினாலும் உள்ளுக்குள் கதகதப்பான, இதமான கம்பளியாய் இருந்தார். இளவயதில் இவர் கையிலுள்ள பிரம்பு என்னைப் பிய்த்து எடுத்த சந்தர்ப்பங்கள் அநேகம். ஆனால் அந்த அடிகளுக்குப் பின்னால் இருந்த அர்த்தங்களும் அநேகம். என்னை ஒரு மனிதனாக செதுக்கி விட வேண்டும் என்ற வேட்கை அந்த சிற்பியிடம் இருந்தது. அவர் என்னை நோகப் பண்ணிவிட்டு அவர் கண்ணீர்விட்டார் என்பதைப் புரிந்து கொள்ள பல வருடங்கள் எடுத்தது.

தமிழை இவர் மூலமாகத்தான் அறிந்து கொண்டேன். அதை அதிகமாகப் புரிந்து கொள்ள வைத்தார். சைவசமயத்தை, கடவுள் பக்தியை எங்களுக்கு உணவாக ஊட்டினார். இவருடன் இருந்தபோது கற்றுக் கொண்டதைவிட, இவரைப் பிரிந்து இருந்த நாட்களில் இவரை நினைத்துப் பார்த்து படித்துக் கொண்டது அநேகம்.

பெரிய சேர் என்று மரியாதையாய் மாணாக்கர் அழைத்தாலும் பெரியப்பா, மாமா என்று சொந்தங்கள் கூப்பிட்டாலும் எனக்குள் ஒரு கர்வம் இருந்தது. செல்வநாயகம் மாஸ்டரின் கடைக்குட்டி என்று.

நேரத்தை மந்திரமாக உச்சரித்தார். அதைவிட அந்தக் கொள்கையை வாழ்ந்து காட்டினார் என்றால் அது மிகப் பொருந்தும். சமூகசேவையை சுமப்பதில் ஒரு தனிப்பட்ட சுகத்தைக் கண்ட மனிதர்கள் ஒருசிலரே. இவர் அந்த வரிசையில் போட்டி போட்டு இடம் பிடித்தவர். ஆசிரியத் தொழிலை தனக்குக் கொடுக்கப்பட்ட அசரீரிவாக்காக எடுத்துக் கொண்டார். கனிஷ்ட வித்தியாலயம் தனக்காகக் கட்டப்பட்ட வீடு என்று எண்ணி தன்னை அதற்குள் முழுவதுமாகப் புதைத்துக் கொண்டார். கனிஷ்ட வித்தியாலயத்துக் கதவுகளும், கல்லும், மண்ணும் கதைக்குமானால் இப்போது அவருக்காகக் கதறி அழும்.

1978 ஆம் ஆண்டு சூறாவளியை அது வந்த வேகத்தில் என்மன ஓட்டத்தை ஓடவிடுகிறேன். முதலாவது காற்று அடித்து ஓய்ந்தபின் மக்கள் தங்கள் சொத்துக்களை சரிபார்த்துக் கொண்டிருந்த அந்த இரவுவேளை தொடர்ந்தும் காற்றும், மழையும்! ஓர் அறையைத்தவிர எங்கள் வீட்டின் கூரையெல்லாம் பறந்து விட்டிருந்தது.

இவர் கையில் ஒரு Tourch Light உடன் சிறி மகனே வாடா கனிஷ்ட வித்தியாலயத்திற்குப் போய்ப் பார்த்து விட்டு வருவோம் என்று என்னை

சூறாவளி தள்ளுவது போல் தள்ளிக் கொண்டு போனார். அங்கு அவருடைய அலுவலக அறையில் பாதுகாக்கப்பட வேண்டிய பொருட்கள் எல்லாவற்றையும் கவனமாக ஈரம் படாதபடி பூட்டிவிட்டு ஈரமாய் திரும்பி வந்தோம். நானும் விரும்பி போயிருந்தேன் இவருக்குள்ள கடமை உணர்வினால் அல்ல. புதினம் பார்க்கவும் இவரில் உள்ள பயத்தினாலும். இராமருக்கு அணில் உதவியது போல இந்தப் பள்ளியிலும் என்கைபட்ட இடங்கள் அநேகம்.

ஆண்டவா!
அப்பாவிடமிருந்து சர்க்கரை மலையில் ஏறிய எறும்பாய் எடுத்துக் கொண்டவை, கற்றுக்கொண்டவை கொஞ்சம்தான். கொண்டுபோன சில பொருட்களில் அவருடைய வாலாமணி, குறிப்பாய் அவருடைய தினக்குறிப்பேடுகள் (Diary) ஒவ்வொரு விடயத்தையும் மிகவும் விளக்கமாக எழுதியிருந்தார். அழகான தமிழில், முத்தான எழுத்துக்களில் இவரால் மட்டும் எப்படி எழுத முடிந்தது. இவருக்கு யார் இப்படிக் கற்றுக் கொடுத்தார்கள் என்று ஆச்சரியப்பட்டேன். இவருடன் இவர் பிறந்த நேரத்தில் பிறந்திருந்தால் இவர் கற்ற ஆசான்களிடம் நானும் இப்படிக் கற்றுக் கொண்டிருப்பேனே என்று விசர்த்தனமாக எண்ணினேன்.

ஆண்டவா!
சமீபகாலத்து நிகழ்வுகள் இன்னும் ஆழ்ந்த காயமாய் இரத்தம் காயாமல்......
30.09.2007 காலை என் கையடக்கத் தொலைபேசி கூவியபோது பார்த்தேன். அக்காவின் அழைப்பு. அப்பா விழுந்து விட்டார் என்று. ஒரு மலையிலிருந்து நான் கால் தடக்கி வீழ்ந்துவிட்டது போல் உணர்ந்தேன்.

04.10.2009 ஞாயிற்றுக்கிழமை மாலை ஆண்டவர் சந்நிதியில் இருந்தபோது வந்த செய்தி முடியுமானால் விரைந்துவா என்று. 05.10.2009 திங்கட்கிழமை மாலை 5 மணி லண்டனில் இருந்து இலங்கை செல்லும் விமானத்தினுள் அவசரமாய் என்னை புகுத்திக் கொண்டேன். 07.10.2009 காலை என் அன்புள்ள அப்பாவைத் தொட்டு முத்தமிட அன்புள்ள ஆண்டவர் கிருபை செய்தார்.

தொடர்ந்து முப்பது நாட்களுக்கு மேலாய் என் அக்கா, அண்ணா, அப்பாவுடன் அற்புதமாய் நாட்கள் கழிந்தன. நொந்து போயிருந்த நேரத்தில் அவருடைய உடலுக்கும், மனதிற்கும் ஆறுதலாகச் செயற்பட்டோம். இந்த நாட்களில் மிகவும் மனம் திறந்து பேசினார். நகைச்சுவையுடன் கூட உரையாடினார். அவருடைய இருதயத்தின் இறுதி ஆசையாய் தன் உலக வாழ்க்கையை விரைவில் முடித்துக் கொள்ள ஆசைப்பட்டார். நான் அவர் சுகமாக வேண்டும் என்று எதிர்பார்த்தேன். அவருடைய வேண்டுதல்தான் ஆண்டவரால் கேட்கப்பட்டது.

இன்று அவர் காதுகளுக்கு எட்டுமாறு காற்றில் இந்த எழுத்துக்களைத் தூவுகின்றேன். ஒரு சுகந்தமான காணிக்கையாய், கண்ணீர்த் துளிகளாய் அப்பாவிடம் போய்ச்சேரட்டும் என்று.

**I love you appa!, I miss you appa!**

## 4.6 எனது நோக்கில்.....
## (ஆசிரியர் சிரோமணி )
## ஓர் அபூர்வ மனிதர்

**திரு.அ.கி.பத்மநாதன், முன்னாள் மட். அரச அதிபரும், புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றத்தின் முதல் தலைவரும்.**

1978ம் ஆண்டு முதல் அமரர் செல்வநாயகம் அவர்களுடன் எனக்கு நெருக்கமான தொடர்பு உண்டு. அந்த ஆரம்பத்தை நினைத்துப் பார்க்கிறேன்.

02.11.1978ல் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை காலமானார். 18.11.1978 இல் அவருக்கான இரங்கற் கூட்டம் மட்-ஆனைப்பந்தி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. அன்றைய தினமே, புலவர்மணியின் அரிய தமிழ்ப்பணிகளை தமிழ் உலகுக்கு அறியச் செய்யுமுகமாக "புலவர்மணி நினைவுப் பணி மன்றம்" உருவானது.

அம் மன்றத்தின் தலைவராக நானும், செயலாளராக அமரர். ம.சிவநேசராசாவும் தெரிவு செய்யப்பட்டோம். ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் செயற்குழு உறுப்பினரில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டார். மன்றச் செயற்பாடுகளில் அவர் மிகவும் தீவிரமாக ஈடுபட்டார்.

1990-91 காலப்பகுதியில் இம் மன்றத்தின் தலைவராக மகாவித்துவான். F.X.C. நடராசா அவர்களும், செயலாளராக ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகமும் செயற்பட்டனர். இக் காலப் பகுதியில் புலவர்மணி நினைவுப் பணி மன்றத்தின் சார்பில், அவர் பல காத்திரமான பணிகளை மேற்கொண்டார். ஆண்டு தோறும் புலவர்மணி நினைவுதின

வைபவங்களை ஏற்பாடு செய்தார். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் "விபுலானந்தர் மீட்சிப்பத்து" நூலை மறுபதிப்புச் செய்து அந்நூலின் வெளியீட்டு விழாவை மட்-நகர மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடாத்தினார்.

ஆசிரியர் சிரோமணி த. செல்வநாயகம் அவர்களைப் பற்றி நாம் பெருமைப் படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவர் நமது மண்ணின் மைந்தர். அவரது இளமைக் காலத்தைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

அவர் ஆரையம்பதியில் 1927 இல் பிறந்தார். ஆரம்பக் கல்வியை ஆரையம்பதியில் உள்ள நொத்தாரிஸ் பாடசாலையில் பெற்றார். பின்பு காத்தான்குடி மத்திய கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்றார். அதன் பின்பு சுவாமி விபுலானந்தர் உருவாக்கிய சிவானந்தா வித்தியாலயத்தில் சேர்ந்து தனது உயர் கல்வியைப் பெற்றார். அவரை ஒரு பண்புள்ள மனிதராக்குவதில் இக்கல்லூரி பெரிதும் உதவியது. சிரேஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி எய்தும்வரை அவர் இக்கல்லூரியில் பயின்றார்.

அதன்பின் 1946 மட்/ஆசிரிய பயிற்சி கலாசாலையில் சேர்ந்து பயிற்சி பெற்று ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆனார். நாட்டின் பல பாகங்களிலும் ஆசிரியராகப் பணியாற்றி, பண்புள்ள சிறந்ததொரு மாணவ சமுதாயத்தை உருவாக்கினார். "கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு" என்ற கூற்றுக்கமைய அவர் கல்வி கற்பித்த பாடசாலைகளில் பெற்றோரதும், மாணவர்களினதும் நன்மதிப்பைப் பெற்றார்.

1971 ஆம் ஆண்டு இவர் அதிபராகப் பதவி உயர்வு பெற்று கொஸ்லாந்தை பாடசாலையில் தனது அதிபர் பணியினை செவ்வனே நிறைவேற்றி, பாடசாலை நிர்வாகத்திலும், சமூக முன்னேற்றத்திலும்

காத்திரமான பங்களிப்பைச் செய்தார். அதன்பின் மீண்டும் மட்டக்களப்புக்கு வந்து மட்/கோட்டைமுனை மகா வித்தியாலயத்தில் (தற்போது இந்துக்கல்லூரி) ஆசிரியராக பணி புரிந்தார். இவரது நிர்வாகத்தினைக் கண்ட கல்வித் திணைக்கள அதிகாரிகள் அவரைக் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்துக்கு அதிபராக நியமித்தனர். 1973 இல் அதிபராகச் சேர்ந்து 14 வருடங்கள் தொடர்ந்து முன்மாதிரியான பல பணிகளைப் பூர்த்தி செய்து பின்பு ஓய்வு பெற்றார்.

கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் இவர் ஆற்றிய ஆசிரியப்பணி, பிற ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக அமைந்தது. பாடசாலை நிர்வாகம் ஆசிரியர் கற்பித்தல், மாணவர்களின் கல்வி ஆகியவற்றில் அவர் தன் தனித்துவ முத்திரையைப் பதித்தார். அவர் இங்கு கடமை ஆற்றிய காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சிறந்த ஆரம்பப் பாடசாலை அதிபர் என்ற நற்பெயரைப் பெற்றார். அக்காலப் பகுதியில் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கு நல்லதொரு ஆசிரியர் குழுவையும், சிறந்த மாணவர் சமூகத்தையும் உருவாக்கிய வகையில் இவரது புகழ் எங்கும் பரவியது. ஒரு முன்மாதிரிப் பாடசாலையாகக் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்றது.

இவர் ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றதும் பல பொது நிறுவனங்களில் இணைந்து பணியாற்றினார். மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம், புலவர்மணி நினைவுப்பணி மன்றம், கிழக்குப் பிரதேச ஆசிரியர் சங்கம் முதலிய நிறுவனங்களில் இவர் ஆற்றிய சிறப்பான பணிகள் இன்றும் மக்களால் விதந்து பேசப்படுகின்றன.

புலவர்மணி நினைவுப் பணிமன்றப் பணிகள் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டோம். அவ்வாறே பிற நிறுவனங்களிலும் அவர் சிறப்பாகப் பணி ஆற்றினார். மட்டக்களப்பு கச்சேரியில் இயங்கிய மட்/மாவட்ட கலாசாரப் பேரவையில் செயற்குழு உறுப்பினராகச் செயற்பட்ட இவர்

பல நல்ல பணிகளைச் செய்தார். மகாவித்துவான் F.X.C. நடராசா தொகுத்து வெளியிட்ட "மட்டக்களப்பு மான்மியம்" பிரதிகள் கிடைக்காத நிலையில் கலாசாரப்பேரவை இந்நூலை மறுபதிப்புச் செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தது. அப்பணியை இவரே பொறுப்பேற்று மிகவும் சிறப்பான முறையில் இந்நூலை அச்சிட்டு வெளிக் கொணர்ந்தார். மட்/கச்சேரியில் ஒரு அரும் பொருட் காட்சியகம் என்னால் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இவர் ஒரு பழைய ஏட்டை அன்பளிப்புச் செய்தார். அரும் பொருட் காட்சி யகத்தில் சேர்க்க வேண்டிய பல்வேறு பொருட்கள் பற்றியும் இவர் நல்ல ஆலோசனைகளை வழங்கினார்.

இவரது பல்வேறு பணிகளை நன்கறிந்த மக்கள் இவருக்குப் பல்வேறு கௌரவங்களை வழங்கியுள்ளனர். முக்கியமாக மட்டக்களப்பு றோட்டரிக் கழகம் இவரது தன்னலமற்ற சேவையினை கருத்திற் கொண்டு இவருக்குப் பாராட்டு விழா நடாத்தி கேடயமும் பரிசும் வழங்கிக் கௌரவித்தது. மகா வித்துவான் F.X.C. நடராசா அவர்களே இக் கௌரவங்களை அவருக்கு வழங்கினார்.

அவ்வாறே ஆசிரியப் பணியில் 40 வருடங்கள் பூர்த்தி செய்தமையைக் கருத்திற் கொண்டு. கோட்டைமுனை கனிஷ்ட பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இவருக்குப் பாராட்டு விழா நடாத்தி "ஆசிரியர் சிரோமணி" என்னும் பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தது.

அன்று முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் "ஆசிரியர் சிரோமணி" என்றால் அது அமரர் த. செல்வநாயகம் ஒருவரையே குறிப்பதாகியது. இவ்வாறே மட்/ஆசிரியர் கலாசாலை இலக்கிய மன்றம் அதன் பழைய மாணவர்களில் புகழ் பெற்றவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் ஒரு நிகழ்வை நடாத்தியது. அந்நிகழ்வில் இவர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

**"தோன்றிற் புகழோடு தோன்றுக, அஃதிலார்**

**தோன்றலிற் தோன்றாமை நன்று"**

என்னும் குறள் இவ்விடத்தில் நினைவு கூறத்தக்கது.

இவரிடம் தனித்துவமான சில பண்புகள் இருந்தன. இவர் இறைபக்தி மிகுந்தவர். பயபக்தி உள்ளவர். வெள்ளை உடையில் எந்நேரமும் சிவப்பழமாகக் காட்சி தருவார். இவர் தினமும் பாராயணம் பண்ணும் "கோளறு பதிகம்" என்னும் தோத்திரத்தை அச்சிட்டு மக்களுக்கு இலவசமாக வழங்கினார். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்னும் கோட்பாட்டை இச் சம்பவம் நினைவு கூறுகின்றது.

இவர் ஒரு சுயகட்டுப்பாடு உடையவர். எந்த வேலையையும் நன்கு சீர்தூக்கி மிகவும் கச்சிதமாக அதை நிறைவேற்றுவார். அவர் மேற்கொண்ட பொது நிறுவனப் பணிகள் இதற்குச் சான்று பகரும். வாழ்வில் இவர் ஒரு அப்பழுக்கில்லாத புனிதர். உண்மை, நேர்மை, சத்தியம் என்பன இவரது தாரகமந்திரங்களாகும். எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் இவர் நேர்மையைக் கடைப்பிடித்தார். இவர் முதியோர் இல்லத்தின் பொறுப்பாளராக இருந்த காலத்தில் அங்கு சென்றுவிட்டு திரும்பும் போது என் வீட்டுக்கு வந்து என்னுடன் உரையாடுவார். அந்தப் பண்பாளரை என்னால் இலகுவில் மறக்க முடியாது.

ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களின் நினைவு நீங்காது என்றும் நிலைத்து நிற்பதாக!

## 4.7 கண்ணியம் மிக்க கடமையாளன்

**என்றும் உங்கள் நினைவாக தம்பி இராஜேஸ்வரன்**

**"எவன் ஒருவன் விதிக்கப்பட்ட பணிகளை முறையாக நிறைவு செய்கின்றானோ அவன் கர்மயோகி ஆகின்றான்"**

-(பகவத்கீதை)-

நெற்றி நிறைந்த திருநீற்றொளியும், நிமிர்ந்த தோற்றமும், வெள்ளை உடையும், நேர்மையும், ஆலய தரிசனமும், காலம் தவறாத பூசையும், கள்ளமில்லா மனமும், கடின உழைப்புமாக வாழ்ந்த என் அண்ணனை நான் நினையாத நாள் இல்லை.

ஒரு மனிதன் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தான் என்பதல்ல, எப்படி வாழ்ந்தான் என்பதுதான் வாழ்க்கையின் அர்த்தமாகும். தனது வாழ்நாளில் கல்வியே அழியாச் செல்வம் என அதை சிறுவர் தொடக்கம் பெரியோர்வரை கற்பித்து பயனடையச் செய்தவர். இப்படித்தான் வாழவேண்டும் என போதித்து வாழ்ந்தவர். ஒரு சிறந்த கணவனாக, பாசமுள்ள சகோதரனாக, பண்பான தந்தையாக, நன்றியுள்ள நண்பனாக, மாணவர்கட்கு கல்வியிலே ஒரு "ஆசிரியர் சிரோமணியாக" மருமக்களை தூக்கிவிடும் மாமனாக ஆலய தொண்டில் அள்ளி வழங்கும் பாரியாக, சமூகத்தின் சேவகனாக மது, புகை, தவிர்த்து வாழ்ந்த ஓர் உயர் குடிமகனாக வாழ்ந்து சிறந்தவர் என் அண்ணன்.

குடும்ப வாழ்க்கையில் தனது பிள்ளைகட்கு சிறந்த கல்வியை வழங்கி ஒரு நல்ல பிரஜையாக ஆக்குவது ஒரு தந்தையின் கடன் என்பதை உலகிற்கு செயல் மூலம் காட்டியவர். எண்ணித் துணியும் ஆற்றலும் விரைவாக, சரியாக முடிவுகளை எடுக்கும் தன்மையும், சொல்வதை செய்யும் திறனும், சொன்னசொல் மாறாத குணவியல்பும், எல்லோரையும் மதிக்கும் தன்மையும், கொண்டு மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த எனது அண்ணனின் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல திரு நீலகண்ட விநாயகரையும் ஸ்ரீ முத்துமாரி அம்மனையும் வேண்டி நிற்கிறேன்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

# 4.8 வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்

மு. கணபதிப்பிள்ளை
"மூனாக்கானா"
கந்தசுவாமி கோயிலடி, ஆரையம்பதி - 03.

என் வாழ்வில் எனக்குக் கிடைத்த ஒரு சில நண்பர்களில் அமரர் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் ஒரு முன்மாதிரியான நண்பர். அவரும் நானும் ஒரே ஊரவர்கள். ஒரே ஆசிரிய காலாசாலையில் பயின்றவர்கள். நீண்டகால நண்பர்கள். இதன் காரணமாக நாங்கள் மச்சான் மச்சான் என்றும், அடே மூனாக்கானா, அடே ஆசிரியர் சிரோமணி என்றும் உரிமையோடு கூப்பிட்டுக் கொள்வோம். இப்போது அவர் அமரராகி விண்ணில் இருக்கின்றார். நான் மனிதனாக மண்ணில் நிற்கின்றேன். இனி இப்படிப் பட்ட சொற்களால் அவரைக் குறிப்பிட முடியாது.

பிறந்த ஒவ்வொருவருக்கும் முக்கியமாக இரண்டு கடமைகள் உண்டு. ஒன்று, தாய் தந்தை, மனைவி, மக்கள், உற்றார், உறவினர்களுக்குச் செய்கின்ற அகக்கடமை. மற்றையது, தொழில், சமயம், சமூகம் சார்ந்த புறக்கடமை. இவர் இவ்விரு கடமைகளையும் தியாக மனப்பான்மையோடு நிறைவேற்றிய தலைமகன். சீர்தனத்தையே பேரம்பேசும் இக்காலத்தில் தனது சொந்த மாமன் மகளையே திருமணம் செய்த தியாகி. குடும்பத்தை பாசத்தோடு அரவணைத்து மக்களை பண்போடு வளர்த்த தலைவன்.

புறக்கடமைகளிலே தொழிற்சங்கம், சமய விழா, தமிழ் மன்றம், பழைய மாணவர் சங்கம், கருத்தரங்கு, அனாதை இல்லம், சமாதானக் குழு என பல துறைகளிலும் தனது சிறந்த பங்களிப்பை செய்தவர். கடைசியாக ஓய்வு பெறும்வரை மட்டக்களப்பு கனிஷ்ட வித்தியாலய

அதிபராயிருந்து இவ் வித்தியாலயத்தின் பெயரை இம் மாவட்டத்திலேயே பொன்னெழுத்துக்களால் பொறித்து "ஆசிரியர் சிரோமணி" என்ற மகுடத்தை சூடிக்கொண்டவர்.

திணைக்களம், வித்தியாலயம், தொழிற்சங்கம், கூட்டுத்தாபனம், உள்ளூராட்சி மன்றம், தொழிற்சாலை, மன்றம், கழகம் எதுவாயிருந்தாலும் இதற்குத் தலைமை தாங்குபவர்களுக்கு மூன்று சிறந்த பண்புகள் இருக்க வேண்டும். ஒன்று நேர்மையான கடமை. இரண்டு மனிதாபிமானத்தோடு கூடிய ஆளுமை. மூன்று ஆராய்ந்து முடிவெடுக்கும் தற்றுணிவு. இவை மூன்று பண்புகளை சிறப்பாகக் கையாண்டதன் மூலம் சிறந்த அதிபரானார். சென்மைக்கேல் கல்லூரி, வின்சென் மகளிர் கல்லூரி போன்ற பிரபல கல்லூரிகளில் தங்கள் பிள்ளைகளை உயர்தர வகுப்புகளில் சேர்ப்பதற்கு போட்டி போட்டுக் கொண்டு பெற்றோர் வரிசையில் நிற்பதுபோல, ஐந்தாம் வகுப்பில் தங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பதற்காக கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் தலைவாசலில் பெற்றோர்களை நிற்க வைத்தவர். காரணம் மாவட்டத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் உயர்ந்த பெறுபேறுகளை தொடர்ச்சியாகப் பெற்றுக் கொடுத்ததேயாகும்.

அமரராகும்வரை வெள்ளை நிறவேட்டி, வாலாமணி சால்வை அணிந்து தமிழ்ப் பண்பாட்டோடு வாழ்ந்தவர். உடைமட்டுமல்ல அவரது உள்ளமும் வெண்மையானது. ஆரையம்பதி திருநீலகண்டப்பிள்ளையார் ஆலயத்துக்கு பல தொண்டுகளைச் செய்தது மட்டுமல்லாமல் ஏனைய ஆலயங்களுக்கும் தன்னாலான உதவிகைளச் செய்த ஒரு ஆன்மீகவாதி. பிழை செய்தவர் எவராக இருந்தாலும் அவர் முன்னிலையிலேயே அதைச் சுட்டிக்காட்டிய நக்கீரர்.

எனது உள்ளத்தின் உணர்ச்சித் துளிகளில் தொட்டு இவரைப் பற்றி எழுதுவதாயிருந்தால் எழுதிக் கொண்டேயிருக்கலாம். எனினும் இத்துடன் நிறுத்திக் கொள்கின்றேன்.

## 4.9 ஐயா ஓர் அனுபவம்

திரு. மு. கருணாநிதி. (ஓய்வு பெற்ற அதிபர்)
திசவீரசிங்கம் சதுக்கம், மட்டக்களப்பு.

1963, ஓர் ஆசிரியராக ஐயா அவர்கள் எனக்கு அறிமுகமானார்கள். 1973, ஆசிரியர் ஆலோசகர் பரீட்சைக்கான ஆசிரியர் அவர் எனக்கு. 1986, அவரே எனக்கு அயல் வீட்டுக் குடியிருப்பாளர். எனவே ஐயா அவர்களுடன் மிக நெருக்கமாக உறவு கொண்டேன். மனித வாழ்வில் உறவுகள் ஒன்று சேர்கின்றன. மரணம் மறக்க முடியாமல் பிணைகின்றது. வாழ்வென்பது இந்திர ஜாலக்கனவு, சந்தைக் கூட்டம், என்பதெல்லாம் வெறும் பேச்சுக்கென்றாகிறது.

"தூங்குவது போலும் மரணம் தூங்கி விழிப்பது போலும் பிறப்பு" இது ஜனன மரணம் பற்றிய வள்ளுவர் நோக்கு யாக்கை வினையின் வந்தது. அடுத்தொரு வினைக்கு வித்தாவது. இது மணிமேகலையில் சாத்தனார் சொன்னது. கூட்டிக் கழித்து ஐந்தொகை பார்த்தால் "மறுபடி மரணம், மறுபடி ஜனனம், மறுபடி தாயின் வயிறே சரணம்" என்ற ஆதி சங்கரரின் பிறப்புத்தத்துவம் சத்தியமே என்றாகிறது. மண்ணிலே மலரும் இந்த வாழ்வு ஒருநாள் இந்த மண்ணுக்கே இரையாகிப் போகிறது. இந்த விதி, வித்தியாசமின்றி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. வாழ்க்கையில் நாங்கள் சாதித்து வைத்தவைகளே வாழ்வுக்குச் சான்றாக அமைகின்றன.

ஐயா சாதித்தார், ஆசானாக, குடும்பத்தலைவனாக, சமூகத் தொண்டனாக, சமய வழிகாட்டியாக, ஒவ்வொன்றிலும் அவரது சாதனைகள் தனித்துவமானதாகவே நோக்கப்படுகின்றது. காரணம் இத்தனைக்குஊடே அவரது உண்மை, நேர்மை, அர்ப்பணிப்புத் தன்மை,

உறுதியாக நிலை பெற்றிருந்ததேயாகும். யாப்பிலக்கணத்திலே சந்தக்கவி சிறப்பாக பேசப்படுகிறது, ரசிக்கப்படுகிறது. எனது நோக்கிலே ஐயா அவர்கள் சந்தக் கவிதான், அருணகிரி நாதரின் திருப்புகழ் மாதிரி, புரிந்து கொண்டால் அவர் புதுமையான மலையருவிதான். அரசியல், ஆன்மீகம் தொடக்கம் அடுத்த வீட்டு குடியிருப்பாளர் அரசியல் வாதிகள் வரை ஒரு நேரம் கலந்துரையாடிக் கொள்வோம். அது ஒரு அருமையான அனுபவம். அந்த அனுபவம் இன்று வெறுமையாகிப் போய்விட்டது.

அக்குரோணிக் கணக்கான உயிர்களை வதைத்து வெல்லப்பட்ட குருஷேத்திரப் போர் யுதிஷ்டினருக்குக் கொடுத்தது வெறும் முப்பதாண்டு அரச வாழ்வுதான். அமர்க்கள வாழ்வும் அரசபோகமும் கொடுக்காத ஆன்ம ஞானத்தை, வைகுந்த யாத்திரைதான் வழங்கிற்று வாழ்வியல் உண்மையை.

உத்தமமாகப் புலர்ந்த ஒரு உன்னதமான காலைப் பொழுது, ஐயாவின் இறுதியாத்திரைக்கு துவக்கச் சுழியாயிற்று. இரண்டு மாதங்கள் அவர் வாழ்வு தவவாழ்வானது, பின் முடிவாயிற்று. இறுதியில் சாம்பராயிற்று. நினைக்கும்போது நீண்ட பெருமூச்சு நிம்மதியை அள்ளிக் கொண்டு போகிறது. உடல், உயிர், மரணம் என்பவற்றைப் பற்றி இந்து மதம் மிக விஸ்தாரமாகவே பேசுகிறது. மரணத்தில் கூட உண்மை மரணம், பொய் மரணம் என இரண்டாகிறது. பிறப்பின்றி இறைவனோடு கலத்தல் உண்மை மரணமென்றும் மீண்டும் பிறப்பெடுப்பது பொய் மரணமென்றும் பேசுகிறது. மரணத்தைப்பற்றிய வேதவிளக்கத்தை அபிதான சிந்தாமணி மிக விளக்கமாகவே பேசுகிறது. பிரம்மலோக பிராப்தமும், வைகுந்தப் பிராப்தமும் ஆன்மாவின் உறைவிடம் என அறியும் போது மரணத்தைப் பற்றிய பூரணம் புரிந்து போய் விடுகிறது.

ஐயா இவைகளை மிகவும் தெரிந்திருந்தார். அவரது இறுதிக்காலம் ஆன்மீக தவமாகவே இருந்தது. "சொல்லும் செயலுமற்றுச் சும்மா இருப்பதொன்றே சுகம் காண்பராபரமே" என்ற தாயுமானார் நிலையிலே இருந்தார். காண்டம் சொன்ன கணக்கின்படியே அவரது மூச்சு முடிந்ததை அற்புதமென்பதா? ஆச்சரியமென்பதா? அது அற்புதமேதான்.

முதுமையும் நோயும் வாழ்வின் விரக்தியும் மரணத்தை மனிதன் விரும்பக் காரணமாக அமைகின்றன. நண்பர்கள், வாழ்வில் நல்லது செய்தவர்கள், கல்வியூட்டியவர்கள், தாய் தந்தை சுற்றம் ஒவ்வொருவராக நம்மை விட்டுப்பிரிந்து நாம் தனிமைப்படும் போது நம்மை நாமே மரணத்தை நோக்கி நகர்த்துகிறோம். நாம் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருப்பது எந்த நிலை? நீரின் ஆவி நிலையா? கொதி நிலையா? அல்லது குளிர் நிலையா? பனிக்கட்டி நிலையா? இந்தப் புதிருக்கு விடை ஆன்மீகத்திடமே இருக்கிறது. "வேதம் - ஆகமம் இதிகாசம் மற்றும் வேறு முறைகளையெல்லாம் அத்துவித, துவித மார்க்கத்தை விரிவாக எடுத்தோதும்" என்ற ஆன்மீக ஞான வாதமும் புல்லாகிப் பூடாக என ஆரம்பிக்கும் திருவாசகத்தின் பிறப்பு வரிசையும் நமக்கு எதைக் கூறவருகின்றன?

**"கற்றாரு முற்றாரும் தொன்னூற்றாறதிலே**
**உற்றாரும் பெற்றாரும் ஒன்றென்றே நானிருந்தேன்**
**உற்றாரும் பெற்றாரும் ஊரைவிட்டுப் போகயிலே**
**சிற்றூரும் இல்லாமல் என் கண்ணம்மா - நான்**
**துணையிழந்து நின்றதென்ன"**

என்ற அழுகணிச்சித்தர் பாடல் எமக்கு எதைச் சொல்ல வருகிறது என்பதை உணர்ந்தால் நமக்கு மரணம் மகிழ்ச்சியான ஒன்றுதான்.

# 4.10 ஆசிரியர் சிரோமணியும் நானும்

**-வித்துவான் ந. நாகலிங்கம் - தாமரைக்கேணி-**

1946 ஆம் ஆண்டு மே மாதம் மட்டக்களப்பில் புதிதாகத் திறக்கப்பட்ட அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்வதற்கான புதுமுகத் தேர்வில் தேறி மட்டக்களப்பிற்குச் சென்றேன். அங்கு ஆரையம்பதியில் இருந்து திரு.த. செல்வநாயகமும் வந்திருந்தார். அவரைச் சந்தித்தபோது அவர் எம் உறவினர் என்பதனையும் தெரிந்து கொண்டேன். 1948 ஆம் ஆண்டு எங்களுடைய இறுதித்தேர்வு நடைபெற்றது. அதுவரை ஒன்றாய் இருந்து தேர்வின் பின் அவரவர் சொந்த இடங்களுக்குச் சென்றோம்.

பின்னர் தொழில் காரணமாக வெவ்வேறு இடங்களுக்குச் சென்றோம். திரு. செல்வநாயகத்திற்கும் (மட்டக்களப்பு தாமரைக்கேணியில் 1952 ஆம் ஆண்டு என நினைக்கின்றேன்) அவருடைய தாய்மாமன் மகள் ருத்திரம்பாளுக்கும் திருமணம் நடைபெற்றது. அத் திருமணத்திற்கு நானும் போய் தம்பதிகளை வாழ்த்திவிட்டு வந்தேன். பின்பு எனக்கும் 1956 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தாமரைக்கேணியில் திருமணம் நடைபெற்றது. தாமரைக்கேணியில் இருவர் வீடுகளும் அருகருகில் இருந்தன. இந் நாட்களில் தினமும் சந்தித்து கதைத்து வருவோம்.

அதன் பின்னர் 1960ம் ஆண்டிலிருந்து மிகவும் நெருங்கிப் பழகிவந்தோம். நான் (தற்போது) இந்துக்கல்லூரி என்றழைக்கப்படும் கோட்டைமுனை மகா வித்தியாலயத்திற்கு அவ்வாண்டு நவம்பர் மாதம் மாற்றம் பெற்று வந்தேன். அவர் (தற்போது) மகாஜனாக் கல்லூரி என்றழைக்கப்படும் அரசடி சாதனா பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றினார். இந்தக் காலத்தில் கோட்டைமுனை சைவ மகாசபை திறம்பட இயங்கி வந்தது. அதற்கு உதவி செய்யும்படி அதன் அப்போதைய தலைவர்

ஏரம்பமூர்த்தி ஆசிரியர் எங்களைக் கேட்டுக் கொண்டார். நாங்கள் ஞாயிறு சமய வகுப்புக்களில் போதனை செய்து வந்தோம். மார்கழி மாதம் திருவெம்பாவை காலத்தில் அதிகாலை மூன்று மணிக்கே மட்டக்களப்பு தாமரைக்கேணி மாரியம்மன் ஆலயத்தில் இருந்து தொடங்கி வீதிகள் தோறும் திருப்பள்ளியெழுச்சி பாடி ஐந்தரை மணிக்கு கோட்டைமுனை வீரகத்திப்பிள்ளையார் ஆலயம் சென்றடைவோம். அங்கு பூசையில் திருவெம்பாவை பாடப்படும்.

இந்தக் காலத்தில் கோட்டைமுனை ம.வி. அதிபராக இருந்த திரு.சிவசிதம்பரம் மாற்றம் பெற்று யாழ்ப்பாணம் செல்ல திரு. A.T. சபாரெத்தினம் என்பவர் அதிபராக வந்தார். கற்பித்தலில் சிறந்த ஆசிரியர்களைத் தேடி அவர்களைத் தமது பாடசாலைக்கு மாற்றம் செய்தார். அப்படி அரசடி சாதனா பாடசாலையில் கற்பித்து வந்த திரு.த. செல்வநாயகம் அவர்களும் அந்த மாற்றம் பெற்றவர்களுள் ஒருவர். நாங்கள் இருவரும் ஒரே பாடசாலையில் பல நாட்களாக கடமையாற்றி வந்தோம். இக்காலத்தில் எங்கு செல்வதானாலும் இருவரும் ஒன்றாகவே செல்வோம். பின் பொன். சின்னத்துரை அவர்கள் அதிபராக வந்தார். திரு செல்வநாயகத்தின் கற்பித்தல் முறைகளை மிகவும் பாராட்டினார். அவரிடம் கற்ற மாணாக்கர்கள் தமிழ், சமய பாடங்களில் அதிவிசேட சித்திபெற்றனர். நாங்கள் இருவரும் ஒன்றாக எல்லா இடமும் போவதை அவதானித்த இவர் எங்களை இரட்டையர் என அழைத்தார்.

இவருடைய காலத்தில் தான் (1972ஆம் ஆண்டு) எங்களுக்கு முதல்தர தலைமையாசிரியர் பதவி உயர்வும் கிடைத்தது. இப்பதவி பின்னர் நிந்தர அதிபர் என மாற்றப்பட்டது, பதவி உயர்வினால் நான் கண்டி தலாத்து ஓயாவிற்கும், செல்வநாயகம் கொஸ்கந்தைக்கும் சென்றோம். கொஸ்கந்தைக்கும் தலத்து ஓயாவிற்குமிடையே கடிதப்போக்குவரத்து அடுத்த நாளே கிடைக்கும்படியாக இருந்தது. அடிக்கடி பாடசாலை

நிலைபற்றி கடிதப் போக்குவரத்து நடந்தது இரு வருடத்தின் பின் வெளியிடம் சென்று மட்டக்களப்பு ஆசிரியர்களுக்கு சொந்த ஊரில் இடமாற்றம் கிடைத்து. நான் பழையபடி கோட்டைமுனை மகா வித்தியாலயத்திற்கு நாலாந்தர அதிபர் பதவியுடன் ஆசிரியராக மாற்றம் பெற்றேன். திரு.செல்வநாயகம் அவர்கள் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய அதிபராக நியமனம் பெற்றார்.

இவருடைய காலத்தில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. பல புதிய கட்டடங்கள் எழுந்தன. வகுப்பறைகள் புதுத் தளபாடங்களுடன் காணப்பட்டன. மட்டக்களப்பில் ஆரம்பப் பாடசாலைகளில் முன்னோடிப் பாடசாலையாக விளங்கியது. கல்விப் பகுதியினர் இவருடைய நிருவாகத் திறமைகளைப் பற்றி வியந்து பேசுவர். இவருடைய திறமைக்காக அந்தப்பாடசாலையிலேயே மூன்றாம் தர அதிபராக பதவியுயர்வு பெற்றார். பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆசிரியர் சிரோமணி என பட்டம் வழங்கி கௌரவித்தது.

கோட்டைமுனை வீரகத்திப் பிள்ளையர் ஆலயம் இக்காலத்தில் மிகவும் மோசமான நிலையில் இருந்தது. அதனைப் புனருத்தாரணம் செய்து குடமுழுக்கு நடத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அக்காலத் தலைவராக இருந்த தாமரைக்கேணியைச் சேர்ந்த திரு.பொ.வி.கந்தையா அவர்கள் கல்முனையில் பிரசித்திபெற்ற நொத்தாரிசாக கடமையாற்றியவர். அவரை அழைத்து வந்து தலைவராக்கி ஆலயத் திருப்பணிகளைத் தொடங்கினோம். 1964 ஆம் ஆண்டு ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. 1978 ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியினால் கோவிலுக்கு வருமானம் தந்த தென்னை மரங்கள் எல்லாம் அடியோடு சாய்ந்து முறிந்து விட்டன. இதனால் கோயில் வருமானம் தடைப்பட்டது.

நான் அக்காலம் கும்புறுமூலை வெம்புவில் குடியிருந்தமையால் கோயில் புனருத்தாரண வேலைகளில் கலந்து கொள்ள முடியவில்லை. செல்வநாயகம் ஊரோடிருந்ததால் கோயில் பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

திரு, கந்தையா நொத்தாரிசு அவர்கள் ஆலயத்தைத் திருத்தியமைக்க பெரியகல்லாறைச் சேர்ந்த முத்துலிங்கம் ஸ்தபதியிடம் பொறுப்புகளை ஒப்படைத்திருந்தார். அவர் இந்தியாவில் இருந்து சிறந்த சிற்பிகளை வரவழைத்து ஆலய சிற்பவேலைகளைச் செய்வித்தார். ஆலயத்தூபியில் உள்ள பொம்மைகள் (உயிருள்ளவை போல்) மட்டக்களப்பில் எவ்வாலயத்திலும் காணப்படாத சிறப்பம்சம் நிறைந்ததாக இருந்தன. ஆலய சேவைகள் ஓரளவு நிறைவேறிய பின் குடமுழுக்குச் செய்ய பணம் பற்றாதிருந்தது. இந்த வேளையில் நானும் 1988 ஆம் ஆண்டு ஊருக்கு வந்தேன்.

திரு. த. செல்வநாயகமும் நானும் வீடு வீடாக இரவு பகலாகச் சென்று குட முழுக்குக்காக நிதி சேகரித்தோம். குட முழுக்குக்கான திகதியும் 1989 ஆம் ஆண்டு என தீர்மானிக்கப்பட்டு வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் கோட்டைக் கல்லாற்றில் எனது சகோதரன் சிவானந்தம் கிராம சேவையாளர் விபத்தொன்றில் சிக்கி அகால மரணமானார் இதனால் ஒரு மாதகாலம் ஆலயம் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அந்தவேளை நான் ஆலய பொருளாளராக கடமையாற்றி வந்தேன். என்னுடைய முழுப்பொறுப்பையும் திரு.த. செல்வநாயகத்திடம் ஒப்படைத்தேன். அவர் சிரமம் பாராது இப்பொறுப்புக்களைப் பெற்று குட முழுக்கையும் அதன்பின் 40 சங்காபிசேகங்களையும் திறம்பட நடாத்தி முடித்தார். திரு.த. செல்வநாயகம் அந்த வேளையில் கைகொடுக்காதிருந்தால் இக்குடமுழுக்கு நிறைவேறியிருக்காது என்று புகழுமளவில் அவருடைய ஒத்துழைப்பும் தளராத முயற்சியும் இத்திருப்பணிக்கு மூலகாரணமாக அமைந்தது. அதற்காக அவரைப் பாராட்டவும் மறக்கவும் முடியாது.

இக்காலத்தில் ஆலயத் திருப்பணியை விட இரண்டு முக்கியமான மன்றங்களில் கடமையாற்றி வந்தார். ஒன்று மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம், மற்றயது புலவர்மணி நினைவுப்பணி மன்றம். இந்து இளைஞர் மன்றத்தின் செயலாளராக இருந்துவந்ததோடு அம்மன்றத்தினால் ஒரு முதியோர் இல்லம் தொடங்குவதற்கும் காரணமாக இருந்தார். திரு.த. செல்வநாயகம் அவர்களே இம்முதியோர் இல்லத்தை ஆரம்பித்து வைத்து முதியோரின் உணவு உடைகளுக்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்தார். இதற்காக உறுப்பினர் வீடுகள் தோறும் சென்று ஆண்டுக்கு ஒரு தடவை முதியோருக்கு ஒருவேளை உணவிற்கு உதவி செய்யுங்கள் என்று கேட்டு முதியோருக்கு எல்லா நாளும் உணவு கிடைக்க வழிவகுத்தார். அவர் முதியோர்களுக்கு பொறுப்பாகவிருந்த காலத்தில் தினமும் அங்கு சென்று அவர்களைக் கேட்டு குறைகள் இல்லாத வகையில் அன்பாக நடாத்தி வந்தார். முதியோர்களும் அவரைத் தந்தையைக் கண்டதுபோல் மகிழ்ந்தனர்.

அடிக்கடி அங்கு சென்று தனது செலவில் முதியோர்களுக்கு உடைகள், சிற்றுண்டிகள், வெகுமதிகள் கொடுப்பார். அவருடைய காலம் முதியோருக்கு பொற்காலமாக இருந்தது. அவருக்குப் பிரயாணம் செய்ய முடியாத நிலையில் அப்பொறுப்புக்களை கைவிட்டார். தற்போதைய தலைவர் அவர் செய்த ஏற்பாட்டின்படி உறுப்பினர்களிடமிருந்து ஆண்டுக்கொரு முறை பணம் பெற்று இல்லத்தை நடாத்தி வருகின்றார். நானும் முதியோர் இல்லத்திற்கு அடிக்கடி போவேன். செல்வநாயகம் ஐயா வந்து போய்விட்டார் என்று சொல்வர். இவ்வாறு முதியோரைத் தம்பிள்ளைகளைப் போல் பராமரித்து வந்தவரின் மறைவு முதியோருக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் பெரிய இழப்பாகும்.

மட்டக்களப்பு புலவர்மணி நினைவுப்பணி மன்றத்தின் ஆயுட்கால உறுப்பினராக என்னையும் சேர்த்துக் கொண்டார். இவர் செயலாளராக இருந்த காலத்தில் புலவர்மணியின் சிலை திறந்து வைக்கப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு முன்னால் செல்லும் வீதிக்கு புலவர் மணி வீதி எனப் பெயரும் சூட்டப்பட்டது. புலவர் மணியின் நூல்கள் பல மறுபதிப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. நோய்வாய்ப் படும்வரை புலவர்மணி நற்பணி மன்றத்திற்கு தம்மாலான ஒத்துழைப்பினை நல்கி வந்தார்.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண நிலையத்துடன் இவருக்கு நல்ல தொடர்பிருந்தது. அங்கு நடைபெறும் சகல நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதுடன் முக்கிய ஒலிபரப்பாளராகவும் கடமையாற்றி வந்தார். இராம கிருஷ்ண அனாதை ஆச்சிரமப் பிள்ளைகளுக்கு தம்மாலான உதவிகளை வழங்கி வந்தார்.

மட்டக்களப்பில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலும் இவருக்கு நண்பர் பலர் இருந்தனர். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் சீடர் ஆசிரியமணி பஞ்சாட்சரம் என்பவரோடு நெருங்கிய தொடர்பை வைத்திருந்தார். அவர் பண்டிதமணியின் நூல்களை மட்டக்களப்பிற்கு கொண்டு வந்து நகரசபை மண்டபத்தில் காட்சிக்கு வைப்பதற்கு அவரோடு ஒத்துழைத்தவர் ஆசிரியர் சிரோமணி அவர்கள்.

இவர் சிறந்த பரோபகாரியாக விளங்கினார். தான் அருமையாகச் சேகரித்த நூல்களையெல்லாம் கிழக்கு பல்கலைக்கழக நூல்நிலையத்திற்கு அன்பளிப்புச் செய்தார். சைவ அன்பர்கள் நன்மை கருதி இரண்டு இலவச நூல்களை வெளியிட்டார்.

1. விநாயகர் அகவல் (தனது 80வது அகவை நிறைவின் வெளியீடு)
2. திருஞானசம்பந்தர் அருளிச் செய்த கோளறு திருப்பதிகம் (தனது மனைவியின் 5ம் ஆண்டு நினைவு வெளியீடு)

முதலியன. இவற்றை எனக்கும தபாலில் அனுப்பி வைத்தார். ஆரையம்பதி திருநீலகண்ட விநாயகர் ஆலய குடமுழுக்குக்கு பெருந்தொகைப் பணத்தை வழங்கியுள்ளார். அவ்வாலயத்தில் போஷகராகவும் இருந்து வந்தார். 2008 ஆம் ஆண்டு குட முழுக்கு நடைபெற்றது.

மட்டக்களப்பு ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் உறுப்பினராகவும் இருந்து பலரை ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் உறுப்பினராக்கினார். மேலும் தொலைபேசி பாவனையாளர் செயலாளராக கடமையாற்றி தொலைபேசி பாவனையாளர் குறைபாடுகளை நீக்கி வைத்தார்.

தாமரைக்கேணியிலிருந்து திசவீரசிங்கம் சதுக்கத்திற்கு குடியமரச் சென்ற பின் அருகிலுள்ள சிந்தாமணிப்பிள்ளையார் ஆலயத்திற்கு தினமும் சென்று வழிபட்டு வந்தார். ஆலயத்தின் குடமுழுக்குக்கு தம்மாலான உதவிகளைச் செய்தார்.

திமிலைதீவு கிருஸ்ணன் கோயிலுக்கும் இவருக்கும் நல்ல தொடர்பிருந்தது. வாரம் ஒரு முறையாவது அங்கு சென்று வருவார். அவ்வாலயத்தின் வளர்ச்சிக்கும் அன்பளிப்புக்கள் செய்துள்ளார்.

ஏழைகள் பலருக்கு தம்மாலான உதவிகளைச் செய்து வந்தார். நான் அறியாதவை பல இருக்கும். அறிந்தவையை எழுதுகின்றேன். கடைசியாக இவரைச் சந்தித்துதம் உரையாடியதும் இவருடைய மகளின் கணவன் ஜெகநாதன் மரணத்தின்போது. ஏற்கனவே மனைவியை இழந்திருந்த இவருக்கு மருமகனின் மறைவு பெரும் துயரம் தருவதாக இருந்தது. மகள் தனித்து விட்டாள் என்று சொல்லி மிகவும் கவலைப்பட்டார்.

இவருடைய ஆண் மக்கள் சசிதரன் கனடாவிலும், சிறிகாந்தன் UK இலும் இருந்து இவரின் மருமகனின் மரணத்தின் போதும், பின் தந்தை நோய்வாய்பட்டபோதும், மரணத்தின் போதும் வந்து துக்கத்தில் பங்குபற்றினர்.

இவ்வாறு எல்லோருக்கும் நல்லவராகவும், சிறந்த சமயத் தொண்டராகவும், சமூக சேவையாளராகவும் ஏழைகளின் நண்பராகவும், பரோபகாரியாகவும் வாழ்ந்த ஆசிரியர் சிரோமணி அவர்களை என்னால் என்றும் மறக்க முடியாது. அவரை நான் கடைசியாக சந்திக்கச் சென்ற வேளையில் கண்திறந்து பார்க்க முடியாத நிலையில் படுக்கையில் இருந்து எழுந்திருக்க முடியாத நிலையில் இருந்தார். என்னால் தனித்து நடக்க முடியாத நிலையில் முச்சக்கர வண்டியில் சென்றேன். அதன் பின்னர் அவரின் உடல் நிலை பற்றி மகளிடம் தொலைபேசியில் பேசுவேன். நிலமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதை மகள் சொல்லுவார்.

அவர் எப்போதும், விசா முடிவடைந்தால் அனைவரும் போயே ஆகவேண்டும் என்று சொல்லுவார். அவ்வாறே விசா முடிவடைந்து இறைவனிடம் போய்ச் சேர்ந்து விட்டார். இவருடைய ஆன்மா சாந்தியடைய வேண்டுமென்று இறைவனை வேண்டுவதைவிட நாம் செய்யக் கூடியதொன்றுமில்லை. மகள் விநோதா, ஆண் மக்கள் சசி, சிறி எல்லோருக்கும் மன அமைதி கிடைக்க வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

## 4.11 சொல்லின் செல்வருடனான எமது நீங்காத நினைவுகள்

திரு. த. லட்சுமணன் - B.A.
ஓய்வுபெற்ற உதவி தொழில் ஆணையாளர் - மட்டக்களப்பு.

"மானிட வாழ்வின் சிறப்பு பணி செய்து பயனுற வாழ்வதே" என்ற கோட்பாட்டுக்கு அமைவாக பல நற்பணிகள் புரிந்து புகழோடும் பெயரோடும் வாழ்ந்து பல சிறப்புக்களைப் பெற்று அமரத்துவம் அடைந்தவர் ஆசிரியர் சிரோமணி திரு.த. செல்வநாயகம் ஐயா அவர்கள்.

ஆரையம்பதி கிராமத்தைச் சேர்ந்த இவர், மட்டக்களப்பு தாமரைக்கேணியில் உருத்திராம்பாள் என்பவரைத் திருமணம் செய்து இளமைக் காலத்தில் இங்கேயே வாழ்ந்து பிற்காலத்தில் திசவீரசிங்கம் சதுக்கத்தில் அமைந்துள்ள அவரது வீட்டில் சிறப்புடன் ஒரு திறமையான குடும்பத் தலைவனாக முழுமையாக வாழ்ந்து ஆசிரியத் தொழிலில் உயர்வடைந்தவர் ஆசிரியர் சிரோமணி அவர்கள்.

இவர் ஓர் ஆசிரியர், பாடசாலை அதிபர், ஒரு சிறந்த கல்விமான், துணிச்சல் மிக்கவர், நாவன்மை கொண்டவர், நேர்மை, வாய்மை, வழி நின்று பெருமை தேடியவர். அன்புள்ளம் கொண்டவர். பகுத்தறிவு சிந்தனையாளர். தனது கருத்துக்களை வெளிப்படையாக கூறும் சுய திறமையில் நம்பிக்கை கொண்ட துணிச்சல் மிக்கவர். படைப்பாற்றல் மிக்கவர். கடின உழைப்பாளி என பலவாறாக ஐயா பற்றிக் கூறலாம்.

இவர் ஓர் சமூக பணியாளர், சமயத் தொண்டர், நூல் வெளியீட்டாளர், எழுத்தாளர் என பல துறைகளில் ஈடுபாடு காட்டி சாதனை படைத்து வாழ்ந்த ஒரு பெருமகன். கல்வித் திணைக்களத்தில் நன்மதிப்பு பெற்றவர். மாணவ சமுதாயத்தினரால் போற்றி வணங்கப்படுபவர். இவரது ஆற்றல் வாய்ந்த அதிபர் சேவை மூலம் கோட்டை முனை கனிஷ்ட வித்தியாலய கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமிட்டவர். 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை அதி சிறந்ததாக பெறுவதற்கு வழிகாட்டிய ஒரு பெருமைக்குரியவர்.

இப் பாடசாலையில் தற்போதும் இவரது பெயர் ஞாபகத்தில் இருக்கக் கூடியதாக ஆற்றல் மிக்க கட்டமைப்பை உருவாக்கியவர் அமரர் ஆசிரியர் சிரோமணி த. செல்வநாயகம் ஐயா அவர்களே. இலங்கையின் பல பாகங்களிலும் இவர் ஆசிரியர் தொழிலில் கடமை புரிந்திருந்தாலும் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் இவரது ஆற்றல் மிக்க சேவை என்றும் நினைவு கூறத்தக்கது.

ஆசிரியர் தொழிலில் இருந்து 1987 இல் ஓய்வு பெற்ற பின்பும் ஓர் இளைஞருக்குரிய கம்பீரத்துடன் வெள்ளை வேட்டி, வாலாமணி இரண்டையும் இணைக்கும் சால்வையுடன் சமய சமூக பணிகளில் ஈடுபாடு காட்டியதுடன் தனக்கு அறிமுகமானவர்களையும் இவ்வாறான பணிகளுக்கு உள்வாங்கும் தன்மையும் கொண்டிருந்தார்.

மட்டக்களப்பு மத்தியஸ்தர் சபை கூட்டங்களில் பங்குபற்றி தன் பணியினை ஒழுங்காக நிறைவேற்றினார். விபுலானந்தர் முதியோர் இல்ல வளர்ச்சியில் ஐயா அவர்கள் முக்கிய பங்கு ஆற்றி உள்ளார். மேலும் இந்து இளைஞர் மன்றம், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவு பணிமன்றம் சார்ந்த நிகழ்வுகள் நிகழ்ச்சிகளில் ஆர்வமுடன் பங்குபற்றி தனது ஆக்கபூர்வமான பங்களிப்பினைச் செய்துள்ளார். மட்டக்களப்பு கச்சேரியினால் நடாத்தப்பட்ட விபுலானந்தர் சார்பான

நிகழ்ச்சிகளிலும் இவர் தனது ஆக்க பூர்வமான பங்களிப்பினைச் செய்துள்ளார்.

இராமகிருஷ்ண மிசனுடன் குறிப்பாக இராமகிருஷ்னமிசன் சுவாமிகளுடன் இவர் கொண்டிருந்த பணிவான உறவு, கிரமமான தொடர்பு, சான்றோரை மதிக்கும் இவரது நற்பண்புக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

ஆரையம்பதி திருநீலகண்ட விநாயகர் ஆலயம் மட்டக்களப்பு சித்தாமணிப் பிள்ளையார் ஆலயம், திமிலைதீவு கிருஷ்ணன் கோவில் என்பவற்றில் இறை பணிபுரிந்து மனநிறைவு கண்டவர் ஐயா அவர்கள்.

அத்துடன் பிற மதத்தவர்களுடனும் சுமுகமான உறவை வளர்த்துக் கொண்டவர் அமரர் செல்வநாயகம் ஐயா அவர்கள். அமரர் வித்துவான் கலாசூரி F.X.C. நடராசா ஐயா அவர்களுடன் ஐயா அவர்கள் இறுதிவரை ஒரு சிஸ்யனாக பணிபுரிந்து குரு பக்திக்கு ஒரு இலக்கணமாக விளங்கியுள்ளார். ஐயா அவர்கள் மேலை நாட்டில் வசிக்கும் தன் இரு புதல்வர்களிடம் (இங்கிலாந்து - கனடாவுக்கு) சுற்றுலா சென்று அங்கு வானொலி நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் என்பவற்றை நிகழ்த்தி அங்கும் தனது இலக்கணத்தமிழை, சொல்லாட்சியை நிலை நாட்டியவர்.

கனடா வாழ் தமிழரின் "விபுலானந்தா கல்வி அபிவிருத்தி சங்கம்" (VEDS) உடன் இணைந்து விபுலானந்தர் சம்பந்தமான நிகழ்ச்சியினை மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியில் நடாத்தி மட்டக்களப்பு மக்களை மகிழ்வித்தவர்.

ஆசிரியர் சிரோமணி பட்டம் இவர் ஆசிரியர் சேவையில் ஆற்றிய சிறப்பான பணிக்காக வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக மக்களால்

அன்புடன் இவருக்கு வழங்கப்பட்ட பட்டம் "மாஸ்ரர்" அதாவது "செல்வநாயகம் மாஸ்ரர்" என்பதாகும். இப்பெயரே அவரது இறுதி நாள்வரை வழக்கத்தில் நிலைத்து இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் ஆகும்.

இவரது தமிழ் பற்றி கூறுவதாயின் இலக்கணத்தமிழில் மரபுவழி நிற்கும் உரைநடை இலக்கணத் தமிழில் சொற்களை உச்சரித்து உரையாடும் பாங்கு, இலக்கண மரபுக்கமைய தமிழ் மொழியினை பயன்படுத்தியமை போன்ற யாவரையும் கவர்ந்த அம்சமாக இருந்தன. தமிழ் நாட்டில் மரபுவழி நின்ற இலக்கணத்தமிழ் வளர்த்தவருள் சொல்லின் செல்வர் பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை ஐயா அவர்களும் ஒருவராவார். இது போலவே ஈழத்திலும் ஒரு சொல்லின் செல்வராக வாழ்ந்து மொழிவளர்த்து அமரத்துவம் அடைந்தவர் ஆசிரியர் சிரோமணி செல்வநாயகம் ஐயா அவர்கள்.

1987ஆம் ஆண்டில் இருந்து இத்தகைய பெருமைக்குரிய பெருமகன் வாழ்ந்த தாமரைக்கேணியில் அமைந்துள்ள அவரது வீட்டில் வசிக்கும் சந்தர்ப்பம் எமக்கு கிடைத்தமை ஒரு பெரும் பேறாகவே உள்ளதென நாம் கருதுகின்றோம். இப்பேறு சகலருக்கும் கிடைப்பது அரிது. இவர் எமது குடும்பத்தின் உயர்வுக்காக, வழிகாட்டியாக, உறுதுணையாக இருந்த ஒரு பெருமகனாவார். எமது இரு மகள்மாரின் கல்வியில் அதீத அக்கறை காட்டியும் அவர்களின் தொழில் உயர்வடைய ஆசிவழங்கியும் எமது சுப கருமங்களில் தனது வீட்டு நிகழ்வாக கருதி மனமுவர்ந்து பங்குபற்றி ஆசி வழங்கிய பெருந்தகையுமாவார். எனவே அவர் காட்டிய நல்வழியில் நம் வாழ்க்கையை அமைத்து அவருக்கு நன்றிக் கடன் செலுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம்.

தன் சொந்த வாழ்வில் பல துன்பங்களை எதிர் கொண்டவர். குறிப்பாக இவரது சகோதரனின் அகால மரணம், தொடர்ந்து சகோதரியின் மரணம், பின்பு அருமை மகனின் மறைவு, தொடர்ந்து ஆருயிர் மனைவின் மறைவு, பின்பு மருமகனின் மரணம் என இவர் பல துன்பங்களைக் கண்ணுற்றார். ஆயினும் இத் துயரங்களை தன்னுள் வைத்துக் கொண்டு பிறருடன் சகசமாக பழகி ஆரவாரமின்றி விளம்பரத்தை விரும்பாது அதிலிருந்து ஒதுங்கி அமைதி வாழ்வு கண்ட அரிய பண்பாளர் ஐயா அவர்கள்.

ஐயா அவர்கள் 2006 இல் பரவிய சிக்குன்குனியா நோயினால் பாதிக்கப்படடார். பின்பு வெளி உலகத் தொடர்புகள் குறைந்த நிலையில் வீட்டுடன் அமைதி வாழ்வு வாழ்ந்தார். தனது பல நண்பர்கள், உறவினர்கள் காலக்கிரமத்தில் தூர விலகியமை இவரை ஓரளவு மனதளவில் பாதித்திருந்தது. இவருடன் கலந்துரையாடிய போது இதுபற்றி ஓரளவு தெரிய வந்தது. ஆயினும் இவர்தன் எஞ்சிய வாழ்க்கையினை ஓரிரு நண்பர்கள், சில உறவினர்களுடன் மட்டுப்படுத்தியதுடன் வானொலி நிகழ்ச்சிகளை செவிமடுப்பது, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், பத்திரிகைகள் பார்ப்பது, தொலைபேசி உரையாடல் என்பன மூலம் தனது எஞ்சிய காலத்தை அமைதியாக கழித்தார். மேல் நாட்டில் இருக்கும் தன் இரு மகன்மாருடனும் மற்றும் உள்ளூர், வெளியூர் நண்பர்களுடனும் தொலைபேசியில் கிரமமாக தொடர்பு கொண்டு பல விடயங்களை உரையாடும் வழக்கத்தினைக் கொண்டிருந்தார்.

**"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை**
**என்னோற்றான் கொல் எனும் சொல்"**

என்ற வள்ளுவர் வாக்குப்படி ஐயா அவர்களது மகள் ஆரம்பம் முதலே வேண்டிய பணிவிடைகளைச் சிறப்புறச் செய்து வந்துள்ளார். இது போலவே இவரது இரு புதல்வர்களும் இறுதி நாட்களில் மேல் நாட்டில் இருந்து வருகை தந்து ஐயா அவர்களுக்கு வேண்டிய

பணிவிடைகளினைச் செய்துள்ளனர். இவை ஐயா அவர்களுக்கு ஒரு மன நிறைவினைக் கொடுத்திருக்கும் என்பதினை மறக்க முடியாது.

ஆயினும் ஐயா அவர்கள் தனக்குப்பின் தனது குடும்பத்தின் தனிமை பற்றி உணர்ந்து மனதாலும், உடலாலும் படிப்படியாக தளர்வடைந்து வந்தார். தான் செய்த தான தருமங்கள், நற்பணிகளின் பயன் தான் இல்லாத காலத்திலும் தன் குடும்பத்தினர்க்கு உதவும் என்ற நம்பிக்கையுடனும் குறிப்பிட்ட சில நண்பர்கள், கிட்டிய சில உறவினர்கள் தன் பிள்ளையின் தனிமையை போக்குவார்கள் என்ற நம்பிக்கையுடனும் தனது இறுதி நாட்களை எதிர் நோக்கி இருந்தார்.

**"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்திவ் வுலகு"**

என்னும் குறள் வாக்கியப்படி நேற்று இருந்தவர் இன்று இல்லை எனும் பெருமையைக் கொண்டு வாழும் இவ்வுலக நியதிக்கேற்ப ஐயா அவர்கள் தனது பிள்ளைகளின் முன்னிலையில் 11.02.2010 மாலை 4:30 மணி அளவினதாக இறைவனடி சேர்ந்தார்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்னும் வள்ளுவர் வாக்குக்கு அமைவாக வாழ்ந்த ஐயா அவர்களும் தெய்வத்தினுள் வைக்கப்பட வேண்டிய பெருமகன் ஆவார்.

எனவே இவரை இழந்து துன்புறும் இவரது பிள்ளைகள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரியப்படுத்துவதோடு, அன்னாரது இழப்பை தாங்கிக் கொள்ளும் மனவலிமையை ஐயா அவர்களின் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டியும் ஐயா அவர்களது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனிடம் பிரார்த்திப்பதுடன் அவரை ஒரு உதாரண புருஷராக கொண்டு நாமும் வாழ்வோமாக!.

# 4.12 புகழ் வல்லாளன்
# அமரர். ஆசிரியர் சிரோமணி த. செல்வநாயகம் அவர்கள்

திரு. எஸ். எதிர்மன்னசிங்கம்
முன்னாள் கலாசார பணிப்பாளர் - வடக்கு-கிழக்கு மாகாணம்

அமரர் செல்வநாயகம் அவர்கள் மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் அதிபராகவிருந்த காலப்பகுதியிலிருந்தே எனக்கும் அவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. எனது பிள்ளைகளில் நால்வர் அவரிடம் கல்வி கற்றனர். அக் காலப்பகுதியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராகச் சில காலம் நான் பணியாற்றினேன்.

அமரர் அவர்கள் பாடசாலையில் ஆசிரியர்களுடனும் பிள்ளைகளுடனும் மிகவும் அன்பாகப் பழகுவார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நிருவாக ஒழுங்கு என்பவற்றை அவரிடமிருந்தே மற்றவர்கள் தெரிந்து கொள்ளுமளவிற்குத் திறமையாகச் செயற்பட்டவர். இக்கால கட்டத்திலேதான் அமரர் செல்வநாயகம் அவர்களது செயற்திறமையை வியந்து பெற்றார் ஆசிரியர் சங்கம் அன்னாருக்கு "ஆசிரியர் சிரோமணி" என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராகத் திரு. அந்தோனிமுத்து அவர்கள் இருந்த சமயத்தில் மிகச் சிறப்பானவொரு பரிசளிப்பு விழாவினைப் பாடசாலையில் ஒழுங்கு செய்து நடாத்திய பெருமைக்குரியவராக அமரர் அவர்கள் விளங்குகின்றார்.

அடுத்ததாக புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களது நினைவுப் பணி மன்றச் செயற்பாடுகளின் போது அமரர் செல்வநாயகம்

அவர்களுக்கும் எனக்கும் தொடர்புகள் அதிகரித்தன. அத்தோடு மகாவித்துவான் F.X.C. நடராசா அவர்களது இல்லத்தில் அடிக்கடி சந்தித்துக் கொள்ளுவோம். மகா வித்துவானுடன் அமரர் அவர்கள் நெருங்கிய தொடர்பினை வைத்திருந்தார். மகா வித்துவான் கலாசூரி F.X.C. நடராசா அவர்கள் பற்றியதொரு சிறு நூலையும் அமரர் செல்வநாயகம் அவர்கள் எழுதினார்.

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்துடன் அதன் செயற்பாடுகளில் அமரர் அவர்கள் பெரும் பங்கெடுத்துக் கொண்டார். இந்து இளைஞர் மன்ற முதியோர் இல்லப் பணிகளையும் அதன் நிருவாகப் பொறுப்பினையும் ஏற்றுச் செயற்பட்டார். மோட்டார் சைக்கிள் ஓட்டமுடியாத நிலை ஏற்படும்வரை சில பணிகளைத் தொடர்ந்து செய்தார். எந்தக் கூட்டமாக இருந்தாலும் எந்த விழாவாக இருந்தாலும் அமரர் செல்வநாயகம் அவர்கள் தவறாது கலந்து தனது பங்களிப்பை வழங்கி வந்தார். இவரது செயற்பாட்டை மதித்து மட்/அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பொன்விழாவின் போது "செம்மனச் செல்வர்" விருதினை வழங்கிக் கௌரவித்தது..

எல்லாவற்றிற்கும் மேலாக ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்துடன் அமரர் செல்வநாயகம் அவர்களுக்கு அதிக பற்று இருந்தது. நான் ஆலயத்தின் தலைவராகவிருந்த காலத்திலிருந்து ஆலய நிருவாகத்தின் போஷகராகச் செயற்பட்டு அமரர் இறக்கும் வரை போஷகராக இருந்தார். கூட்டங்களுக்குத் தவறாது சமூகம் கொடுத்து நல்ல பல ஆலோசனைகளைக் கூறி நிருவாகத்தை வழிநடத்தத் துணைபுரிந்தார். ஆலயத்திற்கு மேலானதொரு கைங்காரியத்தையும் அமரர் அவர்கள் செய்து வந்தார். சிந்தாமணிப் பிள்ளையாருக்குரிய "உள் அமுது" படைப்பதற்குரிய செலவினை ஒவ்வொரு மாத ஓய்வூதியம் கிடைத்தவுடன் தவறாமல் ஆலய நிருவாகத்திற்கு வழங்கி வந்தார். தற்போது அக்காரியத்தை மகள் பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஆலயத்தின் சகல பூசைகளிலும் திருவிழாக்களிலும் பங்கேற்று தேவார திருவாசகங்களைத் தானே பாடித் தொண்டு புரிந்து வந்தார். வருடாந்த திருவிழாவின் நிறைவு நாளன்று படிப்பதற்கான ஊஞ்சல் பாட்டினை என்னிடம் கொடுத்து இது மட்/வீரகத்திப் பிள்ளையார் மேல் பாடப்பட்ட திருவூஞ்சல் பாடல் இதனை நீங்கள் எமது சிந்தாமணிப் பிள்ளையாருக்கேற்ப அமைத்துப் பாடுங்கள் எனக் கூறிய பெருந்தகை அமரர் செல்வநாயகமாவார்.

மேலும், ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய வரலாற்றை என்னை வைத்தே எழுத வேண்டுமென்ற உயர்ந்த எண்ணம் அவரிடம் இருந்தது. அதனை என்னிடம் அடிக்கடி கூறுவார். அவரது எண்ணப்படி நானும் எம்பெருமான் ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையாருடைய சிறப்புக்களை தெரிந்தளவில் ஆலயம் பற்றிய குறிப்புக்களாக எழுதி முடித்துள்ளேன். எம்பெருமான் சிந்தாமணி விநாயகரின் ஆசியுடன் விரைவில் அதனை நூல் வடிவில் அச்சிட்டு வெளியிடுதவற்கு எண்ணியுள்ளேன். நூல் வெளிவரும் பட்சத்தில் அமரர் ஆசிரியர் சிரோமணி அவர்களது உயர்ந்த எண்ணம் நிறைவேறும்.

**ஜபம், தியானம், பிரார்த்தனை ஆகியவற்றை குறிப்பிட்ட நேரத்தில் செய்வது மிகவும் அவசியம். ஏனென்றால் எப்பொழுது நல்லநேரம் வரும் என்று சொல்ல முடியாது. எனவே, இடைவிடாத வேலைகள் இருந்தபோதிலும் கூட ஒருவன் கடவுளை நினைத்து வணங்க வேண்டும்.**

# 4.13 மட்டக்களப்பு

**-காசுபதி நடராசா-**

## நக்கீரத்துவம்

ஆசிரியர் சிரோமணி தம்பிப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் மரணித்து விட்டார்கள் என்பதை என்னால் ஜீரணிக்க மிகவும் கஷ்டமாக உள்ளது. எங்களுக்குள் அறுபது வருடத் தொடர்பு நேற்றுவரை என்னோடு உரையாடியவர்; இன்று இல்லை. அவரை எண்ணுந்தோறும் மட்டக்களப்பின் பல்துறை அம்சங்களையும் கோர்வையிட்டே எழுத வேண்டியுள்ளது.

அவர் மட்டக்களப்புத் தமிழ் ஆசிரியத் தலைமுறை ஒன்றின் குறியீடு. அதனை இந்நூலிலுள்ள அவர் பற்றிய தேடலில் பல்வேறுபட்ட அறிஞர்களின் பார்வை மூலம் கண்டு தெளிய முடியும். அவ்வாறே எனது நினைவுகள் சிலவற்றையும் இந்நூலில் இடைச் செருகலாக்கி அடக்கிட விருப்பம்.

அறிவு ஊற்றின் திறவுகோல் ஆசிரியத்துவம். அதைத்திறம்படச் செய்தவர்களில் இவர் சிரோமணி. என்னையும் வளர்த்துவிட்டவர்கள் வரிசையில் குருமணி. என் ஊரின் புகழ்பரவவிட்ட கண்டாமணி.

கற்பித்தல் செய்த குருவாக, குடும்ப நண்பராக, முரண்நிலைகளில் தீர்வாளராக, ஆலயங்களில் ஆசாரசீடராக எங்கும் எதிலும் உடனிருந்து வழிகாட்டியவராக நல்லதைச் செய்ய முயன்ற வல்லவராக பிடித்தவைகளுக்கு உடனிருந்து உதவும் தோழனாக, கல்வி பணித்துறையில் பதவிகள் பல வகித்துப் பாராட்டப்பட்டவராக, தொண்டு

நிறுவனங்களின் நிருவாக துறைகளில் அறிவாளராக அழைக்கும் கூட்டங்களுக்குத் தவறாது கலந்து சிறப்பிக்கும் பார்வையாளராக உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாதவராக, விமர்சனங்களை முன்வைப்பதில் நக்கீரராக... என்றவாறு இத்தியாதி பல்வேறு பண்புகளையும் தன்னகத்தே ஒருங்கிணைத்துக் கொண்ட ஒரு தமிழாசிரியர் இவர். அவருக்கு தனித்துவச் சிறப்பிலுள்ள நக்கீரத்துவத்தை குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

மட்டக்களப்பில் இப்படிப்பட்ட நக்கீரர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். அமரர்களான D.S.K. வணசிங்கா, வீ.த. குமாரசாமி, ம.சிவனேசராசா முதலானவர்களும், படைப்பிலக்கியவாதிகளில் தலைசிறந்த திரு. எஸ்.பொ (எஸ்.பொன்னுத்தரை) மற்றும் அமரர்களான K.S. ஆனந்தன், சாருமதி யோகநாதன் முதலானவர்களும் நிருவாகத்தரத்தில் அமரர்களான எந்திரிகள், மரியசிங்கம், மனோகரதாஸ், மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் சே. சீவரெத்தினம், மாமாங்கம் வண்ணக்கராயிருந்த எஸ். பொன்னம்பலம், முன்னாள் வட-கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளராயிருந்த கந்தையா தியாகராசா, சட்டத்தரணி, தங்கவடிவேல், வைத்தியகலாநிதி வே. சிவலிங்கம், முன்னாள் மாநகர ஆணையாளராயிருந்த கார்த்திகேசு, மற்றும் தொழிற்சங்கவாதிகளான கிருஷ்ணக்குட்டி, கணக்காளர் வே. பீதாம்பரம் முதலானோரையும் என்னால் பெயரிட்டுக் குறிப்பிட முடியும்.

மேலுள்ளவர்கள் என்னால் அறியப்பட்டுள்ள பெரு மக்களில் சிலராவர். இத்தகையவர்களைப் போன்று கடந்த முப்பது வருடங்களில் முன்னின்று கருத்து வெளிப்பாட்டால் மரணம் தழுவியவர்களும் உள்ளனர். இவர்களைவிட இன்று மிகவும் காத்திரமான இளைய தலைமுறையினரில் மேலெழும் நக்கீரர் பரம்பரையும் உள்ளதை நான் அறிவேன். காலம் வரும்போது அவர்களைப்பற்றிய உரையாடலை எழுப்ப முடியும்.

**ஆசிரியத்துவம்:**

இத்கைய நக்கீரத்துவம் எங்கே அதிகம் வேரூன்றியுள்ளது என்பதைக் கூர்ந்து பாாக்கும்போது கல்வித்துறையிலேயே அது அதிகம் வெளிப்பட்டதையும் காண முடியும். இவர்களில் அனேகமானவர்கள் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்கள் அல்லது அத்தகைய கற்பித்தல் குணாம்சங்களைக் கொண்டவர்களாயிருந்தனர். நன் மாணாக்கர்களை உருவாக்க, அவர் குற்றங்கடிந்து திருத்த, நினைத்ததை உரத்துச் சொல்லவைக்கும் ஆற்றல் ஆசிரியத்துவத்திற்கு மிக அதி சக்தியைக் கொடுத்திருந்தது. அந்தச் சக்தி, ஆளுமை ஆசிரியர் சிரோமணியிடம் அதிகம் நிலை கொண்டிருந்த சிறப்பியல்புகளில் தலையாயது.

**ஒரு பட்டம்**

"பாவாடைச் சாமியார் ஐயா" இது மட்டக்களப்பில் சிலரால் அவருக்குச் சூட்டப்பட்ட செல்லப்பெயர். இதில் பொருத்தப்பாடும், அர்த்தமும் உள்ள மூன்று சொற்கள் உள்ளன. மூன்றாவது சொல் "ஐயா" - இது அடிமைத்தனத்தின் சொற்பிரயோகம் போல தெரிந்தாலும், ஆசிரியத் தொழில் சார் அறிஞர்களுக்கே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. ஆகவே, இங்கு இவரின் ஆசிரியத்துவம் சுட்டப்படுகின்றது. முதற்சொல் "பாவாடை" இது அவர் எப்போதும் அணிந்து திரியும் தேசிய உடை பற்றியது. இதற்குள் தமிழர் பண்பாடு இந்துதத்துவம், ஆசிரிய வாண்மைக் கோலம் வெண்மையைக் காட்டும் மனித நேயம், தடைகள் கண்டு அஞ்சாமை, நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை என்ற பல்வேறு பண்புகளும் அடங்கும்.

மற்றைய சொல் "சாமியார்". இது அவருக்குப் பொருந்தியது போல வேறுயாருக்கும் பொருந்த மாட்டாது என்றே எண்ணத் தோன்றுகின்றது. அவர் தாமரை இலைத் தண்ணீர்போல வாழ்வை அமைத்துக் கொண்டவர். மட்டக்களப்பு அமிர்தகழி, மாமாங்கேஸ்வரர், எல்லை வீதி சிந்தாமணிப் பிள்ளையார், கோட்டைமுனை ஸ்ரீசித்தி விநாயகர்,

திமிலைதீவு கிருஷ்ணர், ஆரையம்பதி திருநீலகண்டப் பிள்ளையார், அருகிலுள்ள மாரியம்மன் முதலான தெய்வங்களின் திருக்கோயில்களிலெல்லாம் இவர் தொண்டராக, அடியவராக, அறங்காவலராக, ஆலோசகராக, சேவைசெய் பக்தராக என்று பல்வேறு பரிமாணங்களுடன் பணிபுரிந்தவர். ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் அறப்பணிகளுக்கெல்லாம் துணைசெய்த பெருமகனார். அவர் சாமியாரேதான் என்ன மாதிரிப் பொருத்தப்பாட்டுடன் இப்பெயரை வைத்துவிட்டார்கள்.

**நிலைபட்டம்**

மட்டக்களப்பிலுள்ள பல்வேறு சமய, சமூக பண்பாட்டு மையங்களும் காலத்துக்குக்காலம் தத்தம் விழாக்களில் இவரைக் கௌரவித்துப் பாராட்டத்தவறவில்லை. அவ்வழியில் இவரது 39 வருட ஆசிரியர் பணியைப் பாராட்டி அவர் ஓய்வு பெற்றபோது கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயச் சமூகம் 04.04.1987 இல் ஆசிரியர் சிரோமணி என்ற பட்டத்தை உவந்தளித்துக் கௌரவித்தது. இப்பட்டமே அவருக்கு விருப்பமாயிருந்ததும் அவரது தனித்துவத்தைப் பறை சாற்றுவதாகவும் அவருள் நிலைத்து நின்ற ஒன்று. இதைவிட செம்மனச் செல்வர், சமூகசாகரன் போன்ற பட்டங்களும் இவருக்குக் கிடைத்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் அந்தநாளில் பிரபல்யமாக இருந்த ஆசிரியர்களில் ஒருவர் அமரர் K.L. இராஜேந்திரம். ஆசிரியர் சங்கத் தலைவர், ஓய்வூதிய சங்கத் தலைவர், அதிபர், ஆசிரியர், சமூக சேவகர் என்று பல பரிமாணங்களைப் பெற்ற ஒருவராக இவரும் இருந்தார். இவரையும் பட்டமளித்துக் கௌரவித்திருந்தனர். அப்பட்டமானது ஆசிரிய மணி என்பதா, ஆசிரியர் சிரோமணி என்பதா என்று என்னால் அறிய முடியவில்லை. இதேபோல் மட்டக்களப்பில் இத்தகைய பட்டம் வேறுயாருக்காவது வழக்கப்பட்டிருந்ததா என்பதையும் என்னால் அறிய

முடியவில்லை. எவ்வாறாயினும் ஆசிரியர் சிரோமணி என்றால் எம்முன்னே செல்வநாயகம் ஆசிரியரே காட்சி தரும் பிம்ப நிலை ஒன்று இன்று உருவாகியிருந்தது சிறப்பு அம்சமாகும்.

**என்னிருப்பு:**

ஆசிரியர் சிரோமணி அவர்களுடன் எனக்கு இரு வேறுபட்ட காலகட்டங்களில் இரு நிலைப்பட்ட உறவுகள் இருந்தன. ஒன்று 1952 இல் ஆரையம்பதி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அவர் கற்பிக்க வந்தபோது நான் வகுப்பு 5 இல் இருந்தேன். தமிழையும் சைவத்தையும் மிக இலகுவாக எங்களுக்குக் கற்பித்தவர் நான் அதிகாலையில் எழுந்து இலக்கியப் பாடல்களை மனனம் செய்யப்பழக்கியவரும் இவரே. அதிகாலையில் எழும் அப்பழக்கம் இன்று வரை என்னிடம் உள்ளதற்கும் காரணமானவர். இவரைத் தொடர்ந்து இவரது தம்பி இராஜரெட்ணம், அக்கா மாரிமுத்து தர்மலிங்கம் ஆகியோரும் இப்பாடசாலையில் எங்களுக்கு கற்பித்துதந்தவர்கள். அக்காலத்தில் ஆரையம்பதியில் இருந்த ஒரேயொரு அரச பாடசாலையும் இதுவேதான். இதனால் இவரது குடும்பத்தினரின் பங்கும் பணிகளும் எனது இடைநிலைக்கல்விக்கு அடித்தளமிட்டதைக் குறிப்பிட்டாக வேண்டும். அது பிற்காலத்தில் மகா வித்தியாலயமாகத் தரம் உயர வழிவகுத்தவர்களில் இவரும் ஒருவர்.

இதற்குப் பின் மற்றொரு பரிமாணம் 1980களில் தொடங்குகின்றது. இவருடைய மகள் “வினோ” சிவானந்த வித்தியாலயத்தில் ஒரு சிறந்த கணித ஆசிரியை எனது துணைவி விமலா அங்கு பௌதிக ஆசிரியை. இவர்களுக்குள் இருந்த நெருக்கமான நட்புத் தொடர்பு ஸ்ரீராமகிருஷ்ணமிஷன், சிவானந்த வித்தியாலயம் ஆகியவைகளின் செயற்பாடுகளில் எனது ஈடுபாடு முதலியன மீண்டும் எங்களை ஒன்றிணைத்தன.

**உடனிருப்பு:**

மிகவும் நெருக்கடி மிகுந்த முப்பதாண்டுகால மட்டக்களப்பின் மைய இருப்பில் நாங்கள் இருவரும் தனித்தும் இணைந்தும் பல்வேறு சமூகப் பணிகளையும் அறப் பணிகளையும் புனர்வாழ்வுப் பணிகளையும் செய்து வந்திருக்கின்றோம்.

எனது வாழ்க்கையில் ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகளில் எங்களைத் தளர்வடையச் செய்தவைகளில் இரண்டு நிகழ்வுகள் மறந்திட முடியாதவை. ஒன்று நான் 1990 களில் கடத்தப்பட்டிருந்தது. மற்றையது 1995 இல் மட்டக்களப்பு சந்தைக் குண்டு வெடிப்பில் மனைவியுடன் சேர்ந்து மாட்டிக் கொண்டு உயிர் பிழைத்தது எங்களுக்கு ஆறுதலும், தேறுதலும் அளித்தவர்கள் பலர். இந்நேரத்தில் ஆசிரியர் சிரோமணியையும், அவர் மனைவி உருத்திராம்பாளையும் மகள் வினோவையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் துறவிகளான மகா சமாதியடைந்த ஜீவனானந்தஜீ மகராஜ் மற்றும் அக்காலத்தில் இலங்கை இராமகிருஷ்ணமிஷன் தலைவராகப் பணிபுரிந்த ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணானந்தஜீமகராஜ் மடடக்களப்புக்கிளைத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்த ஜீ மகராஜ் முதலானவர்களுடனும், திருமலை மட்டக்களப்பு மறைமாவட்டப் பேராயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் மற்றும் இயேசு திருச்சபையைச் சேர்ந்த அருட்தந்தை போல் சற்குண நாயகம் அவர்கள், அருட் சகோதரர் கலாநிதி மத்தியூ அவர்கள் முதலானோர்களுடனும் இஸ்லாமிய, பௌத்த குருமார்களுடனும் இணைந்து அறப்பணிகள் செய்த பெருமகன் இவர்.

மகா சமாதியடைந்த சுவாமி ஜீவனானந்தஜீ மகராஜ் இவர் மேல் பெருமதிப்புக் கொண்ட மகான். ஸ்ரீராமகிருஷ்ணமிஷனின் முக்கிய நிகழ்வுகளுக்குகெல்லாம் பின்னால் சுவாமிஜீயுடன் ஐயா நிற்பார்.

அவ்வாறே இலக்கிய கலாநிதி F.X.C. நடராசா அவர்களின் இறுதிக் காலம் வரை துணை நின்றவர். கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் திருமதி தவமணி அருள்நந்தி அவர்களுடன் F.X.C. ஆக்கங்கள் வெளிவர உதவியர். இவ்வாறே அமரர் ம. சிவனேசராசா அவர்களுடன் இணைந்து மட்டக்களப்பு தமிழாசிரியர் சங்கம் உருவாக்கியதுடன், இந்து இளைஞர் மன்றத்தையும் செயல்திறன் மிக்கதாக்கியவர்.

இந்து மக்களுக்கு உதவுவதில் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் தொடர்ந்து பணிபுரியும் நிறுவனம். அதன் ஆரம்பகால உறுப்பினராக, அதன் கலாசாரச் செயலாளராக, உப தலைவராக, வெள்ளிவிழா மலர் அமைப்புக் குழுத்தலைவராக, சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லப்பரிபாலனக்குழுத் தலைவராக என்றவாறான பல நிறைபணிகளையும் இவர் அங்கு செய்தவர்.

ஆரம்பத்தில் இந்துக்களுக்கு முதியோர் இல்லம் அதன் பண்பாட்டுத்தளத்தில் அவசியம் இல்லை என்ற நிலைப்பாட்டுடன் இருந்தவர் அதன் தலைவர் ம.சிவனேசராசா அவர்கள். தனிப்பட்ட கலந்துரையாடல் ஒன்றின்போது இந்துக்களுக்கு முதியோர் இல்லம் ஒன்று தேவை என்பதை நான் முன்வைத்தேன். "இந்துக்களின் தலையாய கடமைகளில் ஒன்று பெற்றோரைத் தாங்குதல், பிள்ளைகள் கடனே., பழைய காலத்தில் தமது வயது முதிர்ந்த பெற்றோரை துன்பங்கள் வராது உறி கட்டித் தூக்கிச் சென்று பாதுகாத்த மக்களெல்லாம் வாழ்ந்ததாகக் கூறக்கேட்டிருக்கின்றோம். அத்தகைய பண்பாட்டை இப்படியான இல்லங்கள் அமைத்துக் கெடுத்துவிடக் கூடாது" என்று சிவனேசராசா ஐயா கூறினார். சுவாமி ஜீவனாந்தஜீ மகராஜ் அவர்களும் உடனிருந்தார்கள். சுவாமிகள் எதுவும் கூறவில்லை. என்னிடம் இதனை மறுதலிக்கக்கூடிய கருத்துக்கள் இருந்தன. ஆயினும் அவ்விடத்தில் நான் அதனை விவாதப் பொருளாக்குவதில் பயனில்லை என்பதை உணர்ந்தேன். இவ்விடத்தில் நான் ஆசிரியர் சிரோமணியை அணுகத் தீர்மானித்தேன்.

அவரிடத்தில் எங்களிடையே நடந்த உரையாடலையும் எனது ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினேன். இது காலத்தின் தேவை என அவரிடம் கூறினேன். அவரையே உதாரணமாகச் சொன்னேன். மக்கள் வெளிநாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் இங்குவந்து வாழ்வார்களா என்பது உறுதியற்றது. உறவுகள் இல்லையென்றால் எங்கே போவது? யுத்தம் நம்மை நிர்வாணப்படுத்தி சந்தியில் நிற்பாட்டியிருக்கிறது. சிறுவர் இல்லங்கள் போல முதியோர் இல்லங்களும் நமக்குத்தேவை என்று நான் கூறியதை ஐயா ஆசிரியர் சிரோமணியும் ஏற்றுக் கொண்டார்கள்.

எமது சூழலின் நிர்ப்பந்தம் விரைவில் ஒரு முதியோர் இல்லத்தின் தேவையை உணர்த்திவிட்டது. மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் இந் நற்பணியை முன்னின்று தொடக்கி ஆசிரியர் சிரோமணியை அதற்குப் பொறுப்பாகவும் ஆக்கிவிட்டது. இவரும் அதன் செயலாளர் திரு. த.யுவராஜன் அவர்களுமே என்னை மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் உறுப்பினராக்கியவர்கள் எடுத்த பணிகளைக் கனகச்சிதமாகச் செய்வதில் வல்லவர் இவர். முதியோர் இல்லத்தைச் சிறப்பாக முன்னகர்த்தினார். வளப் பற்றாக்குறை நீண்டகாலத்தில் தோன்றும் போலகாணப்பட்டது. நான் அவருக்கு ஓர் ஆலோசனை கூறினேன். வருடத்தின் 365 நாட்களுக்கும் நாளுக்கு ஒரு தர்மவானைக் கண்டுபிடியுங்கள். வருடத்தில் ஒரு தடவை ஏதாவது ஒரு ஞாபகாத்த நிகழ்வுக்காக இல்ல அன்னதானத்துக்கு ஆயிரம் ரூபா மட்டும் கேளுங்கள். உங்களால் அதனை இலகுவில் சாதிக்க முடியும் என்றேன் நான் எனது பெற்றோர் நினைவாக வருடந்தோறும் ஆடி அமாவாசைத் திதிக்கான நாளைப் பொறுப்பேற்கின்றேன் என்றும் கூறினேன். உடனடியாகச் செயற்பட்டார். பலரின் வீட்டுவாசல் படிகளும் ஏறி இறங்கினார். கைமேற்பலனும் கிடைத்தது. இன்று வைத்தியர் க. நடராசா அப்பணியை இயன்றவரை சிறப்பாகச் செய்கின்றர். மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு. மு. பவளகாந்தன்,

செயலாளர் திரு.த.யுவராஜன் முதலானோர் அருகிலிருந்து வழிநடத்துகின்றனர். சுனாமியால் பாதிக்கப்பட்ட இவ் இல்லம் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து உயிர் வாழ்கின்றது. அர்ப்பணிப்போடு செயற்படும் நிருவாகிகளைப் பாராட்ட வேண்டும்.

அமரர்களான முன்னாள் மாநகர ஆணையாளர் எஸ்.கார்த்திகேசு, கந்தையா தியாகராசா, டாக்டர். வே. சிவலிங்கம் மற்றும் இலக்கிய கலாநிதிகளான வ.சிவசுப்பிரமணியம், சா.இ.கமலநாதன் முதலானோருடன் இணைந்து சுவாமி விபுலானந்தரின் நூற்றாண்டு விழா நடத்தினோம். நான் பொதுத்துணைச் செயலாளர். ஆசிரியர் சிரோமணி இலக்கியச் செயலர். 1992 இல் மூன்று நாட்கள் மட்டக்களப்பில் நடைபெற்ற இந்நிகழ்வு இலங்கை முழுவதும் சுவாமி விபுலானந்தர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி விட்டது. தேசியத் தமிழ்மொழித்தினமாக அவரது மறைவுத்தினமான ஜூலை 19 ஆம் நாளை அரசு பிரகடனப்படுத்தியது. அக்காலக் கல்விப் பணிப்பாளரான திரு.சபாநாயகம் இதில் நினைவு கூறப்பட வேண்டியவர் தேசிய அளவில் முத்திரையும் வெளியிட்டு வைக்கப்பட்டது. தமிழ்ப்பேசும் நல்லுலகின்பட்டி, தொட்டிகளிலெல்லாம் சுவாமி விபுலானந்தர் பேசுபொருளானார்.

சுவாமிகளுடைய பிறந்த நாள் பற்றிய சர்ச்சை மிகப்பலமாக எழுந்தது. நூற்றாண்டு விழாச் சபை கூடி சுவாமிகளின் பிறப்புச் சான்றிதழைத் தேடிப்பெறும் முடிவை எடுத்தது. இலக்கிய கலாநிதிகள் வ.சிவசுப்பிரமணியம், சா.இ.கமலநாதன் ஆகிய இருவரும் கொழும்பு பிறப்புச் சான்றிதழ் பதிவாளர் நாயகத்தின் விசேட அனுமதி பெற்று கடும் சிரமத்துக்கு மத்தியில் சுவாமிகளின் பிறப்புச் சான்றிதழை அங்கு தேடிப்பெற்று விட்டனர். அதில் யாரும் எதிர்பாராத செய்தி ஒன்று கிடைத்தது. அவரது பிறப்பை நாங்கள் மார்ச் மாதத்தில்

அல்லது பங்குனி மாதத்தில் எதிர்பார்த்தோம். ஆனால் அது மே மாதம் 03 ஆம் தேதி என்று சித்திரைப் புதுவருடத்தைக் கடந்து சென்றுவிட்டது. பல்வேறு வாதப் பிரதிவாதங்களுக்குப் பிறகு நூற்றாண்டு விழாச்சபை சட்டப்படியான மே மாதம் 3 இல் நூற்றாண்டு விழாவை நடத்துவதென்று தீர்மானத்தை எடுத்து விட்டது. இவைபற்றியெல்லாம் ஊடகங்களில் காரசாரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. ஆயினும் அன்றிலிருந்து இன்றுவரை இத்தினத்தினையே பிறந்த நாளாக்கி விழா வெடுத்து வருகின்றோம்.

இப்போது இதன் தலைவராக பேராசிரியர் மா.செல்வராசா அவர்களுடன் செயலாளராக திரு.எஸ்.ஜெயராசா அவர்களும், பொருளாளராக திரு.த.யுவராஜன் அவர்களும் இருந்து நடத்தி வருகின்றனர். சுவாமிகளின் பிறந்த நாளிலும் நினைவு நாளிலும் தவறாது இரண்டு நிகழ்ச்சிகள் நடைபெறும். ஒன்று அவருடைய சமாதியில் மு.ப. 8 மணிக்கு மரலஞ்சலி, மற்றயது மட்டக்களப்பு நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள சுவாமிகளின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை சூட்டி அஞ்சலி செலுத்துவது. இதனை பிறந்தநாளில் மட்டுநகர் மாநகர சபையும் நினைவு தினத்தை இந்து இளைஞர் மன்றமும் பொறுப்பேற்று நடத்தும். ஆசிரியர் சிரோமணி அவர்கள் சுகயீனமாக வீட்டில் தங்கும் வரை இந்நிகழ்வுகளை அவரே முன்னின்று நடத்தி வைத்தார்.

இவ்வாறே புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணிமன்றத்திலும் மிகவும் சிறப்பாக இயங்கியவர். அக் காலத்தில் அம்மன்றம் மாதந் தோறும் F.X.C. ஐயா வீட்டில் தவறாது கூடும். நாங்களெல்லோரும் ஒன்றுகூடி பல்வேறு பணிகளை முன்னெடுத்தோம். அதிலொன்று மட்டக்களப்பில் மீண்டும் தமிழ்ப் புலமையாளரை உருவாக்க இலக்கிய கலாநிதி திமிலைத்துமிலன் துணை பெற்று பண்டிதர் வகுப்பு ஒன்றை ஆரம்பித்தது. ஆர்வலர் குறைவால் அது வெற்றிபெறவில்லை. ஆசிரியர் சிரோமணியின் பங்கு எப்போதும் மிகவும் வீச்சானதாகவே இருக்கும்.

மட்டக்களப்பு டொக்கியாட், வீதிக்கு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை வீதி எனப் பெயரிடவும் முத்திரை ஒன்று வெளியிடவும், அவரது நூல்களை மீளபிரசுரம் செய்யவும் அவர் வாழ்க்கை வரலாற்றை நூலாக்கவும், தேகாந்த நிலையில் கிழக்குப் பல்கலைக்கழகம் அவருக்கு இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கவும் அரும்பாடுபட்டவர். புலவர்மணியின் நூற்றாண்டு விழாவை அன்புமணி இராநாகலிங்கம் அவர்கள் முன்னின்று நடத்தியபோது அப்போது இவரால் முன்மொழியப்பட்ட பலவிடயங்களும் நிறைவேறியிருந்ததைக் குறிப்பிட்டாக வேண்டும். வடகிழக்கு மாகாணக் கலாசாரப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்ற திரு.செ. எதிர்மன்னசிங்கம் மற்றும் திரு.சிவ நித்தியானந்தா முதலானோர்கள் புலவர்மணியின் வாழ்க்கை வரலாற்றை வெளியிட்டுள்ளனர். அமரர்களான சிவனேசராசா, F.X.C. நடராசா, ஆசிரியர் சிரோமணி ஆகியோர்களின் கனவுகள் நினைவாக இவைகளைக் காணலாம்.

**விட்டகுறை**

ஆசிரியர் சிரோமணியின் வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்து எழுதும் பொறுப்பை நான் ஏற்றிருந்தேன். நான் கொழும்பிற்கு இடம் பெயர்ந்ததால் அதனை வெளியிட முடியாமல் தடங்கல்கள் வந்துவிட்டன. இது எங்களுக்குள் ஒருவிதமான மன அழுத்தத்தையும் ஏற்படுத்தியிருந்தது. ஆயினும் அதற்கான நல்ல தீர்வொன்றை பேராசிரியர் மா.செல்வராசா அவர்கள் ஊடாக நண்பர் சரவணமுத்து கணேசமூர்த்தி, நவேந்திரன் ஆகிய சகோதரர்கள் மிகச் சிறப்பாக நிறைவேற்றிவிட்டனர். வளர்ந்து வரும் புதிய எழுத்தாக்கத் தலைமுறை இவர்கள். அவர்களைப் பாராட்டுகின்றேன். இம் முயற்சியில் அவருடைய மகள் வினோத மிகக்கடுமையாக உழைத்தவர். அவருடைய சகோதரர்களும் துணை நிற்கின்றனர். நூல் வெளியீட்டுத் தொழில் நுட்பவேலைகளை திரு.ச.மணிசேகரன் செய்துள்ளார். இவ்விடத்தில் சந்திரசேகரம் மணிசேகரனைப் பற்றிய குறிப்பு ஒன்றையும் எழுதத்தோன்றுகிறது.

இவர் இன்று ஓர் அதிபர். நாடறிந்த படைப்பிலக்கியவாதி. இவருடைய தந்தை சந்திரசேகரம் அவர்களும் ஆசிரியர். பண்டிதர் செ.பூபாலபிள்ளை அவர்களின் நன் மாணாக்கர். படைப்பிலக்கியவாதி இவர்களது ஊரும் ஆரையம்பதிதான். ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்கள் ஊடாக மட்டக்களப்பு செங்குந்தர் வரலாற்றை மேற்கிளப்ப முயற்சி மேற்கொண்டவர். மணிசேகரம். இப்படியொரு முயற்சியில் ஊடகவியலாளராயிருந்து வெளிநாட்டில் இன்று வசிக்கும் திரு.ஐசீகரனும் ஈடுபட்டு ஆய்வு செய்ததையும் நான் அறிவேன். எனினும் அவைகள் இன்னும் வெளிவரவில்லை. விரைவில் அம்முயற்சி கைகூடும் என எண்ணுகின்றேன்.

ஆசிரியர் சிரோமணி செல்வநாயகம் ஐயாவை நினைக்கும்போது அவருடன் இணைந்து செய்த அறப்பணிகள் பலவும் நினைவுக்குள் வருகின்றன. அனைத்துக்கும் வடிகாலமைக்க இத்தளம் போதா.

**நினைவுரை:**

கடந்த 28.02.2010 காலை 10.00 மணிக்கு மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இவருக்கு ஓர் அஞ்சலிக் கூட்டம் நடந்தது. மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் எழுத்தாளர் பேரவை இதை ஏற்பாடு செய்திருந்தது, திரு.அன்பழகன் குரூஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பேராசிரியர் சி.மௌனகுரு நினைவுப் பேருரை நிகழ்த்தினார். மிகச் சிறப்பாக அமைந்திருந்த அப்பேச்சிடையே அமரரின் பல்வேறு குணாம்சங்களையும் கூறி அதற்குக்காரணமாய் அமைந்த ஆரையம்பதிச் சமூகக் கட்டமைப்பையும் சுட்டிக் காட்டினார்.

ஆம் ஆரையம்பதியில் சாதிக் குழுக்கள் பகுதி பகுதியாக வாழ்ந்து வந்தன. அவர்களிடம் தொழில் நிமித்தம் யாரும் யாரையும் குறைத்து மதிப்பிடும் பழக்கம் நான் அறிந்த வரை இல்லை என்றே கூறுவேன். அதுவே ஆசிரியர் சிரோமணியின் பரந்த மனத்துக்கும் விரிந்துபட்ட

செயற்பாட்டிற்கும் களம் அமைத்துக் கொடுத்திருந்தது என்ற முக்கிய கருத்தொன்றையும் பேராசிரியர் சொல்லத் தவறவில்லை. அது உண்மை. ஆரையம்பதி மக்களிடம் இப்பண்புகளைக் காண முடியும். சாதியம் அங்கு எக்காலத்திலும் தலை தூக்கிய பிரச்சினையாக இருக்கவேயில்லை. ஆசிரியர் சிரோமணி அதற்கு நல்ல சான்றாதாரம். அவர் எல்லோரையும் நேசித்தார்.

**எச்சங்கள்:**

இது வழித்தோன்றல்கள் பற்றியது. ஆரையம்பதிச் செங்குந்தர் பரம்பரையில் நுண்ணறிவுப் பிரவாகத்திற்கு என்றும் குறைவிருக்கவில்லை. பொது நலம் மிகுந்த சமூகச் சான்றோர் பலர் அங்கு தோன்றி வாழ்ந்து வந்துள்ளனர். அங்குள்ள ஆலயங்கள், கல்விக் கூடங்கள், பொது நிறுவனங்களின் வரலாற்றை ஆராயும்போது இதனைக்கண்டு தெளியலாம். முந்தி முந்திச் சிந்தித்தார்கள். அவைகளைச் செய்தும் காட்டினார்கள்.

அப்பரம்பரையில் எனக்குத் தெரிந்த பல சாதனையாளர்கள் மறைந்து விட்டனர். முதல் சித்தாண்டித் தலபுராணம் பாடிய அழகேச முதலியார், “சேர்” எனச் செல்லமாக அழைக்கப்பட்ட ஆய்வறிஞர் விவேகானந்த முதலியார், தமிழ்ப்புலமையாளரும் வைத்தியருமான சோமசுந்தரம், அவர்களது சகோதரி கவிஞர் திருமலர்ப்பாக்கியம் மற்றும் தமிழாசிரியரும் எழுத்தாளருமான சந்திரசேகரம் என்று பலர் அடங்குவர்.

இவற்றில் கொன்றதும், கொல்லப்பட்டதுமான மூன்று இழப்புக்கள் வரலாற்றுப் பதிவுக்குட்படுத்த வேண்டியவைகள். அவற்றில் ஒன்று “ரோசா” என அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட முருகேசு முதலியார் ஆனந்தராச முதலி.

ஆரையம்பதி பரிதி சனசமூக நிலையத்தின் முன்னோடிகளில் ஒருவர் பொத்துவில் தொடங்கி வெருகல்வரை கிழக்குப் பிரதேச கீழ்ப்பிரிவுச் சனசமூக சம்மேளனங்கள் அமைத்து அதன் செயலாளராகச் சேவை செய்தவர் திருக்கோவில் கிராமாட்சி மன்றத் தலைவராயிருந்த அறப்போர் முன்னணியின் தலைவர் R.W. அரியநாயகம், மட்டக்களப்பின் முன்னாள் மாநகர முதல்வர் J.L. திஸவீரசிங்கம், ஆரையம்பதி கிராமாட்சி மன்றத் தலைவர் எஸ்.சாமித்தம்பி முதலானோர்களுடன் இணைந்து பொதுப்பணிகள் புரிந்தவர். 1965 இல் நானும் ஆரையம்பதி பரமன் சனசமூக நிலையத்தினூடாக இணைந்து பணி புரிந்தோம். விழாக்கள் நடத்தினோம், ஊர்கள் தோறும் சிரமதானப் பணிகள் செய்தோம், இவைகளின் ஆவணப்பதிவாக "கதிரொளி" சஞ்சிகையை வெளியிட்டு அதனை ஒரு ரூபாவுக்கு விற்றுச் சங்கங்களுக்கு உதவினோம். பிற்பட்ட காலத்தில் அவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாம்தம்பி முத்து, கலாமாணிக்கம் முதலானவர்களுடன் இணைந்து சேவைசெய்ய முற்பட்ட காலத்தில் காவு கொள்ளப்பட்டார்; அவர்களுக்கும் அதுவே நேர்ந்தது,

இவ்வாறான ஒரு நிகழ்வில்தான் ஆசிரியர் சிரோமணியின் தம்பி இராஜரெட்ணம் அவர்களை இழந்தோம். அவர் ஆரையம்பதி மூத்ததம்பி வித்தியாலயத்திலிருந்து கல்விக்கும், ஊருக்கும் அரும்பணிகள் செய்தவர். பலரும் தயங்கிய போதிலும் அங்குள்ள சமாதானச் சபைகளிலெல்லாம் அர்ப்பணிப்போடு முன்வந்து மக்களுக்குச் சேவை செய்தவர். அது ஊர்மக்களுக்கு நெருக்கடியான ஒரு காலகட்டமாயிருந்தது. உயிரைத் துச்சமென மதித்துச் செயற்பட்டவரின் உயிரே தெரியாமற்போய்விட்டது.

இவ்விரு இழப்புகள் செயற்கையாக ஏற்படுத்தப்பட்டவைகள், அகாலமரணங்கள் என்றார்கள். ஆனால் இந்த இராஜரெட்ணம் அவர்களுக்கு "பத்மரஞ்சன்" என்று மகன் ஒருவர் இருந்தார்.

இளமையிலேயே அறிவுச் சாதனைகள் பலபுரிந்து ஜப்பான் சென்று கலாநிதிப்பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர். வர்த்தக முகாமைத்துவத்துறையில் அவர் ஒரு பேரறிவாளராகவும், நுண்ணாய்வாளராகவும், எழுத்தாளராகவும், புலமை பெற்று பலரும் முன்னேற பங்களித்தவராகவும் செயற்பட்ட இளைய தலைமுறையின் பேரறிவாளனாகத் திகழ்ந்தவர்; கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முது நிலை விரிவுரையாளர்; லயன் கழக சமூகசேவகன்; இளம் குடும்பஸ்தர்; இயற்கை அவரைத் திடீரெனப்பிரித்து விட்டது; பொது மக்கள் பலரும் கண்ணீர் விட்டனர்; அது சாதாரண இழப்பன்று ஒரு தலைமுறையின் வரலாற்று இழப்பு எனில் மிகையாகாது.

இவர்களெல்லோரும் பொதுப்பணிகளில் தங்களை இணைத்துக் கொண்டு வாழும்போது மறைந்த பெருமக்கள். இந்த சமூகப்பணியில் தொடர்ந்து அவருடைய கடைசித்தம்பி திரு. இராஜேஸ்வரன் M.L.T. யைக் காண்கின்றேன். ஆரையம்பதி சமய, சமூகப் பொதுப்பணிகளில் இன்றும் அவர் ஈடுபட்டுழைக்கின்றதைப் பார்க்க முடிகின்றது. அது மட்டுமன்றி இவர்களின் மக்கள்மாரையும் பொதுப்பணிகளில் ஆங்காங்கே என்னால் காண முடிகின்றது. அவ்வாறே இவர்களுடைய மூத்த சகோதரி மாரிமுத்து அவரை அரசம்மா ரீச்சர் என அழைப்போம். இப்பகுதி வளர்ச்சியில் பெரிதும் அக்கறைப்பட்டு உழைத்தவர். இவ் இளைய தலைமுறையில் ஆசிரியர் சிரோமணியின் மூன்று பிள்ளைகளையும் சிறப்பாகக் குறிப்பிட முடியும்.

மூத்தமகள் விநோதா. இவர் ஒரு சிறந்த கணித ஆசிரியை. மட்டக்களப்பில் கணித அறிவு மட்ட அடைவு குறைவு. இதனை உயர்த்துவதற்குப் பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர். இவர் ஓய்வுபெற்றுவிட்டார். ஆயினும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு இல்ல மாணவர்களுக்கு இன்றும் இலவசமாகக் கற்பித்து வருகின்றார்.

மூத்த மகன் சசீதரன் இவர் கனடாவில் வாழ்பவர். இவரது குடும்பம் தேசம் கடந்து வாழ்ந்தாலும் தாய்மண்ணை மறக்கவில்லை. விபுலானந்த கல்வி அபிவிருத்தி நிதியம் ஒன்றை கனடாவில் அமைத்து எம்மாணவர்களின் கல்வித்துறை அபிவிருத்திக்கு உதவி வருகின்றார்கள். இவ்வாறே இளைய மகன் ஸ்ரீகாந்தன் இலண்டன் மாநகரில் வாழ்பவர். இவரும் அங்குள்ள அறப்பணி நிலையங்களில் இணைந்து எம்மவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தப் பாடுபடுபவர்.

இவர்களுக்கு ஆதார சக்தியாகத் திகழ்ந்த அன்னை உருத்திராம்பாளையும் அவர்கள் பொதுப்பணிகளுக்கு மறை கரமாயிருந்து உதவியதையும் நினைக்காமல் இருக்க முடியாது. அவர் எனக்கு ஊற்றித்தந்த தேநீர் இன்னும் இனிக்கிறது. இவ்வாறே இவரது மூன்றாவது மகன் திலீபனையும் குறிப்பிட வேண்டும். ஆசிரிய சிரோமணியின் பணிகளுக்கு திட்டம் வகுத்து பிரதி பண்ணி ஒழுங்குபடுததிக் கொடுப்பவர். இவர்களுடன் இவருடைய மருமகன் ஜெகநாதனையும் குறிப்பிடாமல் விடமுடியாது. இனிய நண்பர். இம் மூவரது இழப்பும் ஆசிரிய சிரோமணியை தளர்வடையச் செய்துவிட்டது.

இவைகள் எல்லாவற்றையும் தொகுத்துச் சுருக்கி எழுதும்போது ஆசிரியர் சிரோமணியின் சமூகத்துக்கும் அவருடைய பெற்றோர்களுக்கும் இரத்தத்துடன் ஊறிய சமூக சேவைநலப் பண்புகள் இழையோடி இருந்துள்ளன. அது அவரது தந்தை பாவோடி நெய்த காரைக்கால் சோமன் பட்டுச்சீலையின் பொன்கரையைப் போன்றது. அப்பட்டொளி இழைகள் அறுந்து விடாத வகையில் மக்களாலும் உடன் பிறப்புகளாலும் அவர் தம் வழித் தோன்றல்களாலும் முன்னெடுக்கப்பட்டு வருவது மிகுந்த மனநிறைவைத் தருகின்றது. அவரது எச்சங்களான நன்மக்கள். அவர்கள் பரம்பரை ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி சீரும் சிறப்புடன் வாழ இறையருள் கிடைப்பதாக.

**எச்சங்கள்:**

ஆசிரியர் சிரோமணியின் நேசிப்பு மிகவும் ஆழமானது. அவரால் நேசிக்கப்பட்டவர்களின் இழப்புக்களின் போது மிகவும் தளர்ந்து போய் விடுவார். போலித்தனம் இல்லாதவர்களிடம் தான் இதனைக் காணமுடியும். அது அவரிடம் காணப்பட்டது. அவரது வாழ்நாளில் நேரடி இழப்புக்களாக மனைவி, மகன், தம்பி, மருமகன், தம்பி மகன் என்று நீளும் பட்டியல் உள்ளது. நாங்கள் இருவரும் காலை வேளைகளிலே தொலைபேசி உரையாடல் செய்வோம். ஒவ்வொரு நாளும் பேசினாலும் மிகவும் மகிழ்ச்சியடைவார். பல விடயங்களுக்கும் மத்தியில் நான் மறந்து விட்டால் உடனடியாகவே தொடர்பு கொள்ளத் தவறமாட்டார். அவர் எனக்கு ஆறுதலும் புத்தியும் சொல்லுவார். நானும் அவருக்குத்துணை நின்றிருக்கின்றேன். அவரது இழப்பானது எனக்கும் எங்கள் குடும்பத்திற்கும் பேரிழப்பு.

எனது மகனின் திருமணத்துக்கு அவரால் சமூகமளிக்க முடியாத கவலையைத் தெரிவித்துக் கொண்டார். மட்டக்களப்புக்கு வந்ததும் முதலாவதாக தன்வீட்டுக்குக் கட்டாயம் வர வேண்டுமென்று வலியுறுத்தினார். நாங்களும் புதுமணத்தம்பதிகளுடன் சென்றோம். சிறப்பான விருந்துபசார மொன்றுடன் எங்களுக்கு வரவேற்பளிக்கப் பட்டது. அவர்களின் அடிக்கடி இத்தகைய உபசரிப்பை நான்பெற்றிருக்கின்றேன். ஆனாலும் அன்றைய தினம் எங்களுக்குக் கிடைத்த உபசரிப்பு மிகப் பிரமாதமாக இருந்ததையும் அவர் முகம் நிறைந்த மகிழ்ச்சி பெற்றிருந்ததையும் என்னால் இன்னும் மறக்க முடியாமலுள்ளது. அதுவே எங்களுடனான கடைசி இருப்பாகவும் மாறிவிட்டது.

அவருடைய பிறந்த நாள் ஏப்பிரல் 03 ஆம் திகதி தவறாமல் அதிகாலையில் வாழ்த்துக் கூறுவேன். பாவலர் சாந்தி முகைதீனுடன் பிற்பகலில் செல்வோம். அப்படியாக அவரது அமுத விழா (80) அகவையையொட்டியும் நாங்கள் அவருக்கு அவர் வீட்டில் பொன்னாடை

போர்த்தி பாராட்டி மகிழ்ந்தோம். இந்நிகழ்வில் பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களும் உடனிருந்து சிறப்பித்தார். கவிஞர் சாந்தி முகைதீன் இவரைப் பாராட்டி கவிதை ஒன்றையும் யாத்தளித்திருந்தார்.

இவரது பிறந்த நாளன்றுதான் சிவானந்த வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர் E.P. ஆனந்தராசா அவர்களது பிறந்த நாளும். ஆசிரியர் சிரோமணி வீட்டில் இருவரையும் சந்தித்து மகிழ்வோம். சட்டத்தரணி ஸ்ரனிஸ்லோஸ் குடும்பம், திரு. மணிவண்ணன் ஆசிரியர் குடும்பம் மற்றும் இவர்களைப் போல மிக நெருங்கிய நண்பர்கள் குடும்பங்களை வருடந்தோறும் இங்கு இந்நாளில் சந்தித்து ஒன்று கூடி மகிழ்வோம்.

**நிறைவினில்**

கீதையின் ஞானோபதேசத்தை நினைக்கின்றேன். ஒன்று மற்றொன்றில் தங்கியிருப்பது போல அதுவும் உண்மைதான். இவ் உடல் பல்லாயிரம் உயிரங்கிகளின் தொகுப்பு. ஆயினும் அது தனிமம் என்பதை மரணம் தெளிவாக உணர்த்தி விடுகிறது. மகள் வினோதாவைப்பற்றிய ஈறல் ஒன்று அவருக்குள் ஊசலாடிக் கொண்டிருந்ததை அறிவேன். அதில் எங்களுக்கும் சேர்வுண்டு. எனினும் "கல்லுக்குள் தேரைக்கும் வழிகாட்டும்" கடவுட் தத்துவம் இங்கு ஓங்கி ஒலிப்பதை உணர்கின்றேன்." நாம் வாழும் காலம்வரை "தனிமம்" அல்ல. ஒன்றாயினும் கூடிவரும். தனிமரமாயினும் நிழல் கொடுக்கும்; அதில் காகம், குருவிகளும் தங்கும். நாம் இயன்றவரை கொடை வழங்கி வாழும் வரை வளம் கொழிக்கும் தோப்பு; கனிமிகு தோட்டம் நாம் தனிமம் அல்ல; அல்ல.

எம் பிரானின் "நிலை பெறுமாறெண்ணுதியே நெஞ்சே"

**ஆசிரியர் சிரோமணி செல்வநாயகம் ஐயாவின் ஆன்மா பிறவாப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றுய்வதாக.**

**ஓம்**

**சாந்தி, சாந்தி, சாந்தி.**

# 4.14 அமரருள் உய்த்த ஆசிரியர் சிரோமணி

திரு. க. மகாலிங்க சிவம்,
விரிவுரையாளர், அரசினர் ஆசிரியர் கலாசாலை மட்டக்களப்பு.

அமரர் ஆசிரியர் சிரோமணி த. செல்வநாயகம் ஐயா அவர்களின் பல்வேறு பரிமாணங்களை பல்வேறு கோணங்களில் பலரும் உரைக்கக் கேட்டிருக்கின்றேன். அமரர் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வின் போது திரண்டிருந்த அறிஞர் பெருமக்களையும் அவர்தம் அரிய கருத்துக்களையும் நினைக்கும் போது ஐயா அவர்களின் இழப்பு எமக்கெல்லாம் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும் என்பதில் மிகையில்லை.

அமரர் ஆசிரியர் சிரோமணி அவர்கள் ஒரு நல்லாசிரியராக, ஆற்றல் மிகு அதிபராக, சிறந்த ஆலோசகராக, நேர்மையான வழிகாட்டியாக, சிறந்த பண்பாளராக, ஆன்மீக வாதியாக, ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத் தொண்டராக, இந்து இளைஞர் மன்ற வயோதிபர் இல்லப் பொறுப்பாளராக என விரிந்து கொண்டே செல்லுகின்ற அதேவேளை ஐயா அவர்களை சிறந்த கிருஷ்ண பக்தராகவும் நான் கண்டேன். கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக திமிலைதீவு ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயத்தில் மிகவும் ஈடுபாடுடைய பக்தராகவும் தொண்டராகவும் ஐயா அவர்கள் செயற்பட்டதை அனைத்து அடியவர்களும் அறிவார்கள். திமிலைதீவு ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலய பூசகராக இருந்து பரமபதமடைந்த உயர் திரு சின்னையா வடிவேல் ஐயாவுடன் அமரர் செல்வநாயகம் ஐயா அவர்கள் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தார்கள். வெள்ளிக்கிழமைகளில் கண்ணனின் ஆலய பூசைக்கு பூசைப்பொருட்களுடன் வருகை தரும் ஐயா பூசை முடிவடைந்தவுடன் முதலாவதாக பகவானிடம் தன்னுடைய

வேண்டுதல்களை பூசகர் மூலமாக எடுத்துக்கூறி, பகவானின் பதிலுக்காகக் காத்திருப்பார். விடை கிடைத்த பின்னர்தான் வீடு திரும்புவார். தன்னுடையதும், தன்னுடைய பிள்ளைகளினதும் எந்தக் கருமமானாலும் முதலில் பூசகர் வடிவேல் ஐயாவிடம் எடுத்துக் கூறியதன் பின்னர் பகவானின் பூசை நேரத்தில் பகவானிடம் வேண்டி நின்று அவருக்கு சித்தமானால் மட்டுமே அக்கருமத்தை ஆரம்பிப்பார்.

திமிலைதீவு ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலய மகோற்சவ காலங்களில் கண்ணனின் ஆலய திருவிழாக்கள் வெகு சிறப்பாக நடந்தேறும் ஒவ்வொரு திருவிழாவும் கண்ணனின் ஒவ்வொரு லீலையை வெளிப்படுத்தும் சடங்காகவும் வீதி உலா வருவதாகவும் நடைபெறும். பகவானின் கல்யாணக்கால் வெட்டும் வைபவம் ஒவ்வொரு அடியவரினதும் பக்திப் பரவச நிலையை வெளிப்படுத்தும் நிகழ்வாகும். அமரர் செல்வநாயகம் ஐயா அவர்கள் கல்யாணக்கால் வெட்டப்போகும் போதும், வெட்டி வரும் போதும் வீதியின் இரு மருங்கிலும் மக்கள் வெள்ளம் அலைமோதும். அவ்வேளையிலும் சன நெரிசலுக்குள் வயதான காலத்திலும் பகவானின் நாமத்தினை உச்சரித்த வண்ணம் செல்லும் காட்சி இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சை உருக்கும் அன்று இரவு முழுவதும் கண்ணனின் ஆலயத்தில் விழிந்திருந்து அடுத்த நாள் அதிகாலையில் நடைபெறுகின்ற திருக்கல்யாண பூசையில் கலந்து கொண்ட பின்னர் கல்யாணக் கால் சுற்றும் போது ஆலய பூசகரின் பின்னால் முதலாவதாக செல்வநாயகம் ஐயாதான் வருவார். முதன் முதலாக அவருக்கே பூசகர் சைகையினால் பகவானின் அனுக்கிரகத்தை வெளிப்படுத்துவார். அவ்வேளையில் ஐயா கண்ணீர்மல்க கையை ஏந்தியவண்ணம் நின்று கொண்டிருப்பார். ஒவ்வொரு வருடமும் மகோற்சவம் நிகழும்போது இவையெல்லாம் என் மனக்கண் முன் தோன்றும்.

அமரர் ஆசிரியர் சிரோமணி செல்வநாயகம் ஐயா அவர்களிடம் என்னைக் கவர்ந்த பண்புகளையும் இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். ஐயா நேரம் தவறாதவர்; பிழையென்றால் அவர் யாராக இருந்தாலும் நேருக்கு நேர் எடுத்து வைத்து ஆலோசனை வழங்குவார். நான் மட்/சிவாநந்த வித்தியாலய தேசிய பாடசாலையில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் பாடசாலையில் எந்த நிகழ்வாக இருந்தாலும் ஐயாவுக்கு அழைப்பிதழ் அனுப்பத் தவறுவதில்லை. அந்த நிகழ்வுகளுக்கு முதலில் வருகை தரும் பிரமுகராக ஆசிரியர் சிரோமணி ஐயாதான் இருப்பார். ஐயாவுக்கு அழைப்பிதழ் அனுப்பும் போது முகவரி எழுதும் போது சிலவேளை தவறு ஏற்பட்டாலும் நிகழ்வுக்கு வருகை தரும்போது அழைப்பிதழுடன் வந்து தவறைச் சுட்டிக்காட்டி திருத்திய பின்னர்தான் மண்டபத்துக்குச் செல்வார். நிகழ்வு முடியும் வரை இருந்து உரியவர்களைப் பாராட்டிச் செல்வார். மற்றவர்களுக்கு ஆலோசனை கூறி வழிகாட்டும் பண்பையும் ஐயாவிடம் காண்கின்றேன். ஐயாவை ஒரு தடவை காண்பதற்காக சென்றபோது உறவினர் ஒருவருடன் கதைத்துக் கொண்டிருந்தார். அந்த உறவினர் உடல் நலக்குறைபாட்டுடன் இருந்ததை அறிந்தேன். அவ்வேளையில் அமரர் அவர்கள் கூறுகின்றார் தம்பி,

**“புகையும் நெருப்பு,**
**உடல் நோய்,**
**வட்டிக்குக் கடன்படல்”**

இந்த மூன்றையும் உடனே அணைக்க வேண்டும். இல்லாவிட்டால் அவை இருந்து எல்லாவற்றையும் அழித்து விடும் என்றார். எவ்வளவு வாழ்க்கை அனுபவம்; எளிதான முறையில் எவ்வளவு பெரிய ஆலோசனை. இவை எப்பொழுதும் என் காதுகளில் ஒலிக்கின்றது. எடுத்த கருமத்தில் விடாமுயற்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் ஆன்மீக நெறி தழுவியதாகவும் ஈடுபடுகின்ற பண்பையும் ஐயாவிடம் விசேடமாக நான் காண்கின்றேன். இதற்குப் பல சம்பவங்களை எடுத்துக் கூறலாம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கொப்ப அமரர் ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் ஐயா அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை எம் எல்லோருக்கும் நல்ல பாடம் மாத்திரமல்ல ஒரு முன்மாதிரியுமாகும் என்பதோடு ஐயாவின் ஆன்மா பரமாத்மாவின் நிழலில் என்றும் சாந்திபெற திமிலைதீவில் உறையும் கண்ணனின் அருளாட்சி கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி.**

**உதவும் மனப்பான்மையை வளர்த்துக் கொண்டால் உறவு, நட்பு, திருப்தி, சந்தோஷம் என்ற வாழ்க்கைக்குத் தேவையான நல்ல அம்சங்கள் நம்மை விட்டு அகலாமல் நிலைத்திருக்கும். வாழ்நாட்களில் ஒவ்வொன்றையும் அர்த்தமுள்ளதாக்கும்.**

# 4.15 நீத்தார் பெருமை

**திருமதி. பூ. சண்முகநாதன்**
**(முன்னாள் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய உதவி ஆசிரியர்)**
**பார் வீதி, மட்டக்களப்பு.**

மறைந்த ஆசிரியர் சிரோமணி திரு.த. செல்வநாயகம் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாயலத்தின் முன்னாள் அதிபர். அவர்களைப் பற்றி அறிந்தவைகள் சிலவற்றை எழுதித்தரும்படி அவரின் ஒரே மகள் திருமதி. வினோதா ஜெகநாதனின் வேண்டுகோளுக்கு இணங்க இதனை எழுதுகிறேன்.

"மண்ணை ஆண்டவர் எத்தனை கோடி" இது முதியோர் வாக்கு. ஆண்டவர் என்னும்போது எல்லோரும் ஆண்டவர்கள் அல்ல. தன் திறமையை மற்றவர்களுக்குச் செலுத்தி வீட்டுக்கோ, சமூகத்துக்கோ, தேசத்துக்கோ தொண்டு செய்தல்தான் ஆளுமை என்பது (ஆண்டவர்கள்) மற்றவர்கள் சாதாரணமாய் பிறந்து வாழ்ந்து மடிந்தவர்கள். அந்த மண்ணை ஆண்டவர்களில் ஒருவர்தான் திரு. செல்வநாயகம் அதிபர் அவர்கள்.

அவர்களின் செயலாற்றல் பற்றி எவ்வளவோ கூறலாம். அதிகம் எழுதினால் மற்றவர்கள் எழுத இடமிருக்காது.

நான் 1967 ஆம் ஆண்டு தொடங்கி 1989ஆம் ஆண்டு இறுதிவரை கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் 22 வருடங்கள் உதவி ஆசிரியையாகக் கடமையாற்றியுள்ளேன் எத்தனையோ அதிபர்கள், ஆசிரியர்கள் வந்துபோயினர். அக்காலங்களில் திரு.த.செல்வநாயகம் அதிபர் அவர்கள் என்னுடன் ஒரு உதவி ஆசிரியராக இருந்தார். அவ்வேளையில் அவரை நோக்குமிடத்து பாடசாலையில் ஒரு விருப்பு

வெறுப்பு அற்றவராகக் காணப்பட்டார். காரணம் தன் எண்ணத்துக்கு ஏற்ப நடைமுறைகள் இல்லை என்பதனாலாகும். அப்படிக் காணப்பட்ட வேளையில் திடீரென மாற்றலாகி வேறு இடப் பாடசாலைக்குச் சென்று விட்டார். பின் சில வருடங்களில் எங்கள் பாடசாலைக்கு அதிபராக கடமையேற்று வந்தார்.

இவருடைய மனதில் எப்படியும் இப்பாடசாலையை முன்னேற்றி நகரப் பாடசாலைகளில் ஒன்றாக ஆக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் செயலாற்றி வந்தார் என்பது வெள்ளிடை மலை.

இவரது உள்ளக் கிடக்கையில் "தோட்டிகள் பாடசாலை" என்ற கூற்றை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் அவருள் வேரூன்றியிருந்தது, பாடசாலை ஆண்டறிக்கையினை எழுதி வாசிக்கும்பொழுது அன்று தோட்டிகள் பாடசாலையாக இருந்த இப்பாடசாலையின் வளர்ச்சி குன்றுபோல் உயர்ந்து வளர்ந்துள்ளதென்று மிகவும் பெருமையுடன் எடுத்துக் கூறியதை நாம் அனைவரும் நன்கறிவோம்.

இவரைப்பற்றிக் கூறப்போனால். நான் ஆரம்ப வகுப்பு முதல் S.S.C சித்தியடைந்து ஆசிரிய கலாசாலைக்குப் போகும்வரையும் பெரியகல்லாறு அ.த.க. பாடசாலையில்தான் கல்வி கற்றேன். அக்கால கட்டங்களில் அப்பாடசாலையில் எத்தனையோ அறிவுசார் ஆசான்கள் இலக்கியம், சரித்திரம் போன்ற பாடங்களைக் கற்பித்தனர். தங்களின் கண்களில் கண்ணீர் மல்க இலக்கியம் கற்பித்தனர். அவ் ஆசிரியர் குழாத்தில் கடைசிக்காலத்தில் ஓர் சிறப்பான அதிபர் இருந்தார். அவர்தான் பாலஸ்ரீபண்டிதர் வே. சாமித்தம்பி ஆவார். அப்பெருந்தகை ஒழுக்க சீலர்; மாணவர்களைக் கொள்ளை கொள்ளும் அன்புள்ளங் கொண்டவர். மாணவர்களைக் கல்விமான்களாக ஆக்குவதற்கும், பாடசாலை, சமூகம், தேசம் என்பவற்றை சீர்படுத்துவதற்காகவும்

அரும்பாடுபட்டவர். அவர் காலத்தில் வித்தியாதிபதியாக இருந்த திரு. அருணந்தி அவர்கள் தன்னுடைய வாயால் நான் சமுகமளித்திருந்த ஆசிரிய கலாசாலைக் கூட்டமொன்றில் "எல்லாம்தெரிந்த சாமித்தம்பி" என்று அவரைப் புகழ்ந்துரைத்தார்.

இத்தகைய மேம்பாடான அதிபரின் திறமையை கனம் செல்வநாயகம் அதிபரில் கண்டேன். இத்தகைய சீரிய செயல்கள், சமூகத் தொண்டுகள், செய்தவர் அவராவார். தோட்டிகள் பாடசாலை எனப் பெயர் கொண்ட பாடசாலையை கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் என இன்றுவரை மட்டக்களப்பில் பெயர்பெற்ற முதல் தரமான பாடசாலையாக்கிய பெருமை ஆசிரியர் சிரோமணி திரு.த. செல்வநாயகம் அதிபர் அவர்களையே சாரும்.

திரு.த.செல்வநாயகம் அதிபர் அவர்கள் ஆசிரிய கலாசாலையில் கல்வி கற்கும் போது அக்காலத்தில் அதிபராயிருந்தவர் திரு.சின்னப்பு கந்தசாமி. இவர் யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்தவர். அவரை மனம் நிறைந்த குருவாக மதித்து அவர் வழியில் கல்வி கற்பித்து வந்தவர். இவ்விடத்தில் நானும் அம்மேன்மைதங்கிய அதிபர் கந்தசாமியுடைய மாணவியாய் இருந்தேன் என்பதை மிக மிகப் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அப்பெருந்தகை அதிபர் ஓர் உளநூல் வித்தகர். மாணவர்களை பார்த்தாலே மதிப்பீடு செய்துவிடுவார். அனேகமாக மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் இருந்து அதிகமான நல்லாசிரியர்களை வெளியேற்றிய பெருமை அதிபர் கந்தசாமி அவர்களுக்குண்டு. செல்வநாயகம் அதிபர் அவர்பால் வைத்த குருபக்திக்கு உதாரணமாக ஒரு விடயத்தைக் கூறிவைக்கிறேன்.

மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் நடந்த ஒரு பரிசளிப்பு விழாவில் திரு.கந்தசாமி அதிபர் அவர்களை யாழ் நகரில் இருந்து வரவழைத்து ஒரு பிரதம விருந்தினராக்கி அப்பரிசளிப்பு விழாவைச்

சிறப்புடன் நடாத்தி புகழுடையச் செய்தார். அவரின் குருபக்தியைச் சொல்ல இச் சம்பவம் ஒன்று போதும் என நினைக்கிறேன்.

பொதுவாக திரு.த.செல்வநாயகம் அவர்கள் சிறந்த சமூகத் தொண்டர். எம்மதமும் சம்மதமென்னும் கொள்கையுடையவர். ஆனால் சைவசமயத்தில் அதிக அக்கறை பூண்டவர். இராம கிருஷ்ணமிசனால் ஆரம்பிக்கப்பட்ட வயோதிபர் இல்லத்தை உண்டாக்கப் பாடுபட்டவர்களில் ஒருவர். இவருடைய பணிகளுக்கெல்லாம் உறுதுணையாக நின்று ஊக்கங்கொடுத்ததில் இவர் மனைவி மக்களுக்குப் பெரும்பங்கு உண்டு என்பதை நான் அறிவேன். பாடசாலைக் காலங்களில் உதவி ஆசிரியர், மாணவர்களை ஒரு குடும்பமாக நின்று அவர்களுக்கு வரும் நன்மை தீமைகளில் பங்கு கொண்டு உதவுவதில் போற்றத்தக்கவர்.

இத்தனை சிறப்புகளையுடைய ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் அதிபர் இன்று எங்களுடன் இல்லை. அவர் மரித்து நீறாகிவிட்டார். அவரின் பெருமை அவர் கற்பித்த மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் நீங்காதிருக்க வேண்டுமெனக் கூறி அவர் ஆத்மசாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

**-நன்றி, வணக்கம்-**

**இழப்பதற்கு எதுவுமே இல்லை என்ற நிலையில் வாழ்க்கை எவ்வளவு இலேசாகி விடுகிறது.**

**எதிர்பார்ப்பு இருந்தால்தான் ஏமாற்றம் இருக்கும்.**

## 4.16

**திருமதி. செ. கனகசிங்கம், முன்னாள் ஆசிரியை**
**மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் - மட்டக்களப்பு.**

என் மதிப்பிற்குரிய அதிபர், ஆசிரியர் சிரோமணி த. செல்வநாயகம் பற்றிச் சில வார்த்தைகள்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற வள்ளுவர் வாக்கிற்குரிய தகைமை பெற்றவர் அதிபர் அவர்கள்.

1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான் மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்துக்கு மாற்றலாகி வந்தபோது செல்வநாயகம் அதிபர் அவர்கள் அன்போடு வரவேற்றார். பாடசாலை வளவும், வகுப்பறைகளும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் காணப்பட்டன. அதிபர் அவர்களின் தோற்றம், பேச்சு, நடைமுறை எல்லாமே ஒரு சிறந்த அதிபர் என்பதைக் தெட்டத்தெளிவாகக் காட்டித் தந்தன. ஆசிரியர்கள் தத்தமது கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். ஓய்வு நேரம் தவிர, வகுப்பு நேரங்களில் ஆசிரியர்கள் கற்பிக்கும் ஒலி தவிர வேறு எந்த ஒலியையும் கேட்க முடியாது. மாணவர்கள் மிக அமைதியாக இருந்து கற்றலில் ஈடுபடுவார்கள். அதிபர் அவர்கள் காலையில் 6.30 மணிக்கே வந்து வகுப்பறை, பாடசாலை வளவு சுத்தங்களை தானே முன்னின்று கவனிப்பார். 5ம், 4ம் ஆண்டு மாணவர்களும் நேரத்துக்கு வந்து பாடசாலைச் சுத்தத்தில் மகிழ்ச்சியாக ஈடுபடுவர். "பெரியசேர்", "பெரியசேர்" என்று அன்போடு பழகுவர். பெரிய சேர் என்றால் மாணவர்களுக்கு மிகவும் பிரியம். அவர் எதைச் சொன்னாலும் நான்முந்தி, நீமுந்தி என்று போட்டி போட்டுக் கொண்டு செய்வார்கள். காலை 7.45 க்குப் பாடசாலை ஆரம்பம். 7.30 மணிக்கு அவரது

கந்தோரின் முன்னால் கம்பீரமாக நின்று கொண்டிருப்பார். பாடசாலைக்கு வரும் ஆசிரியர், மாணவர்களின் காலை வணக்கத்தை ஏற்றுக் கொண்டு அவரும் எங்களுக்குக் காலை வணக்கம் சொல்லி வரவேற்பார். இது மகிழ்ச்சியாக ஆசிரியர் கற்பிப்பதற்கும் மாணவரின் கற்றலுக்கும் ஒரு உந்துசக்தியாக இருக்கும். சரியாக 7.45 க்கு காலை கூட்ட மணி ஒலிக்கும். 8 மணியிலிருந்து பி.ப. 1.45 வரை பாட மணி தவறாமல் ஒலித்துக் கொண்டிருக்கும். ஓய்வு நேரம் ஆசிரியர்கள் தமது காலை உணவை அவசர அவசரமாக உள்ளே திணித்து விட்டு மணி அடித்ததும் மிக விரைவாக அவரவர் வகுப்பறைகளை நோக்கிச் செல்வர். ஆசிரியர்கள் லீவு எடுப்பதும் குறைவு அப்படி எடுத்தாலும் அவர்களின் வகுப்பில் பாடங்களை ஓய்வுநேர ஆசிரியர்களைக் கொண்டு ஒழுங்காக நடத்திவைப்பார் அதிபர் அவர்கள். ஒரு பாட வேளை தன்னும் மாணவர் வீணே கழித்தது கிடையாது. இது அதிபர் அவர்களின் சிறப்பான நிர்வாகத்துக்குச் சான்று. பாடசாலை நேரம் முடிந்ததும் விடுகைக் கொப்பியில் கையெழுத்துப் போடும் நேரத்தில்தான் சக ஆசிரியர்களின் முகத்தைக் காணமுடியும். இப்படியே பாடசாலை தானாகவே இயங்கிக் கொண்டிருக்கும்.

பாடசாலையில் என்ன விழாக்களோ, நிகழ்ச்சிகளோ நடப்பதாக இருந்தாலும், அவரே திட்டம் போட்டு ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொடுப்பார். குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்வு தொடங்கி குறிப்பிட்ட நேரத்தில் சிறப்பாகவும் ஒழுங்காகவும் நடந்து முடியும். இது அவரது நிர்வாகத்துக்கும் ஒழுங்குக்கும் ஆளுமைக்கும் எடுத்துக்காட்டாகும்.

"சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல", பக்கம் சாராது சமநிலை பேணும் பெருந்தகையோன் ஏதாவது தவறுகளோ, பிழைகளோ நடந்துவிட்டால் முகம் பாராது அவருக்கு முன்னிலையிலேயே எடுத்துக்கூறும் துணிவு படைத்தவர். அநீதிக்கும், ஆணவத்துக்கும்

அடி பணியாத அறவோன். தனக்குச் சரியென்று படுவதைச் செய்வார். யார் எது சொன்னாலும் கவலைப்படவோ, பொருட்படுத்தவோ மாட்டார். இன்னும் கூறப்போனால் இறைபக்தியின் சான்றோன். அறிஞன். நல்வழிகாட்டுபவன். பெற்றோருக்கும், பாடசாலைக்கும் மிக நெருங்கிய தொடர்பு பேணப்பட்டது. பெற்றோர்கள் எந்நேரமும் பாடசாலைக்கு வந்து தங்கள் முறைப்பாடுகளையும் ஆலோசனைகளையும் ஆசிரியரிடமோ, அதிபரிடமோ கூறுவதற்கும், தங்கள் பிள்ளைகளின் கல்வி விருத்தி பற்றி உரியவர்களிடம் கேட்டு அறிவதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாடசாலையின் தேவைகளை நிறைவேற்றுவதில் அதிபரோடும் ஆசிரியர்களோடும் ஒத்துழைப்பை வழங்கியது. பெற்றோருக்கும், பாடசாலைக்கும் இடையே இருந்த அந்நியோன்யத் தொடர்பும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது,

மேற் சொன்ன காரணங்களால் எனக்கும் அவர் மீது மதிப்பும், மரியாதையும், அன்பும் ஏற்பட்டது. அன்னார் இவ்வுலகை விட்டு பிரிந்தாலும் அவரது நினைவு என்பது நிலைத்திருக்கும். இன்னும் மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் மட்டக்களப்பு நகரிலே ஒரு சிறந்த கல்விக் கூடமாகத் திகழ்கிறது என்றால் அது இந்த அதிபர் ஆசிரியர் சிரோமணி த. செல்வநாயகம் அவர்கள் போட்ட அத்திவாரம்தான். அவருடைய நடைமுறைகள் இன்றும் இப்பாடசாலையிலே பின்பற்றப்படுகின்றன.

இன்று அவர் இல்லாத நிலையில் அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர் ஆறுதலடையவும், அன்னாரது ஆத்மா இறைவன் அடியிலே சாந்தியடையவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கிறேன்.

# 4.17 கண்ணன் வைத்தியரின் பார்வையில் மாமா ஆசிரியர் சிரோமணி த. செல்வநாயகம் அவர்கள்.

**Dr. Srikalaivanan J.P., Whole Island**
**R.A.M.P.No.: 10711, No. 99/3, Vythiyar Lane, Seelamunai, Batticaloa.**

**"தோன்றிற் புகழுடன் தோன்றுக"** எனும் வள்ளுவர் வாக்குக்கு ஏற்ப புகழுடன் வாழ்ந்தவர்தான் அமரர் பெருந்தகை செல்வநாயகம் மாமா. ஒரு நல்ல ஆசானாக இருந்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாடுகளுக்கு அமைவாக வாழ்ந்து காட்டியவர். எம் நாட்டிலே மட்டுமன்றி, பல நாடுகளிலும் பல கல்வி மான்களை உருவாக்கியவர் ஆசிரியர் சிரோமணி மாமா அவர்கள். இப்பணி மூலம் **"ஒருவர் மரணித்தும் உயிர் வாழ்கின்றார்."** என்ற பழமொழிக்கு இலக்கணமாக வாழ்ந்தார். அவர் வயதில் ஏற்பட்ட ஆசிரிய அனுபவ அறிவு முதிர்ச்சி அவர் வாழ்வில் அனுபவ முத்துக்களாக வெளிப்பட்டதினால்தான் இன்று எமது நாட்டில் பல கல்விமான்கள் புத்திஜீவிகள் என்ற பலர் உருவாக வழி சமைத்தது.

வெண்ணிற வாலாமணி அணிந்து வேட்டி கட்டி தோழில் சால்வை போட்டு கம்பீர நடையுடன் ஆசிரியராக பணிபுரிந்து வந்த நாட்களை நான் இன்று நினைத்துப் பார்க்கின்றேன். அந்த நிலையானது ஓர் ஆளுமை வாய்ந்த ஒரு நிலையாகும். நான் சிறு வயதில் மாமாவைக் கண்டால் பயந்து ஓடுவேன்; ஒளிப்பேன். மாமா அவர்களின் பெயரினை சொல்லியே எங்களை அம்மா சிறுவயதில் பயமுறுத்தாட்டி படிக்க வைப்பார். அவர்களின் அந்த ஆளுமை நிறைந்த காலகட்டத்தை நான் இன்று நினைத்துப் பார்க்கின்றேன்.

கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் அவர் அதிபராக இருந்த அந்த கால கட்டத்தை நான் நினைத்துப் பார்க்கின்றேன். ஏன்? மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்பட்ட இப்பாடசாலையை ஒரு முன்னேற்ற பாடசாலையாக அவர் மாற்றியமைக்கு இரவு வேளை, பகல், லீவு என்று கருதாது சாரனுடன் பாடசாலையில் தங்கியிருந்து அப் பாடசலையினை ஒரு சிறந்த பாடசாலையாக்கிய அப்பெருந்தகையின் இளமைக்கால அத்தோற்றத்தினை நான் நினைத்துப் பார்க்கின்றேன்.

மாமா அவர்கள் அதிகம் பேசமாட்டார். கேட்ட கேள்விக்கு பொருத்தமான விடை அளிப்பார். சிந்திக்கும் திறன் கொண்டவர். ஆசிரியராக பணிபுரிந்த காலத்தில் பிற பிள்ளைகளை உருவாக்கும் எண்ணமே ஒழிய, தன் குடும்பத்தை பற்றி கவலை கொள்ளாதவர். காரணம் அவரின் துணைவியாரான மாமியின் திறனும் ஒத்துழைப்பும் அவருக்கு பக்க பலமாக இருந்தது. இவரிடம் கல்வி கற்ற பலர் இப்பொழுது பெருமனிதர்களாக தலை நிமிர்ந்து நிற்க வழிகாட்டிய ஒரு பெருமகனாகவே மாமாவைப் பார்க்கின்றேன்.

காலம் சென்ற ஆசிரியர் சிரோமணி மாமா அவர்கள் நல்லதோர் கனிவிருட்சம். நாடி வந்த எல்லோருக்கும் நிழல் கொடுத்தவர். கனிகொடுத்தவர், அவரின் இழப்பு மட்டக்களப்பு வாழ் மக்களுக்கும், எங்களுக்கும் பேரிழப்பாகும். வாழும் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும். இந்த உயரிய நோக்கிலே அவர் வாழ்வாங்கு வாழ்ந்தவராவார். அவரின் வரலாறு ஒரு பாடமாகும். கடைசி நிமிடம் வரை தளராமல் உழைத்தவர். எத்தனை சோதனை அவருக்கு வந்தபோதும் மனம் தளராமல் சுமைதாங்கியாக வாழ்ந்து காட்டிய பெருமனிதனைப் பார்க்கின்றேன்.

சுனாமிப்பேரலை ஏற்பட்டு எனது வீடு, உடமைகள் வைத்திய ஏடுகள், புத்தகங்கள், மருந்துகள், மூலிகைகள் எல்லாம் அழிவுற்ற நிலையில் பைத்தியத்துக்கு மருத்துவம் பார்த்த நானே ஒரு பைத்தியகாரனாக தனித்து நின்ற அந்தவேளையில் அடிக்கடி ஓடோடி வந்து எனது உளக்குமுறலை குருசேத்திர உரை நிகழ்த்தி என்சோகம் களைந்த மாமாவைப் பார்க்கின்றேன். தைரியம் ஊட்டினார். நடைமுறை சிக்கல் பலவற்றை தீர்க்க ஆவன செய்தார். தன்தசை கொடுத்து குஞ்சுகளின் உயிர் காக்கும் நண்டுபோல் மாமாவின் செயலினை நான் பார்க்கின்றேன்.

மாமாவைப் பற்றி சொல்வதென்றால் நினைத்துப்பார்க்க முடியாத காரியம் அவர் ஒரு அறிவை வளர்க்கும் வாசிகசாலை என்றே கூற வேண்டும். தன்னலமற்ற சமூகப்பணி, கல்விப்பணி, சமயப்பணி என சேவை செய்தார். இருந்தாலும் இவ்வுலக நினைவாக சேவையுடன் பேரும், புகழுடன் இருந்தும் தோன்றிற் புகழுடன் தோன்றுக என்னும் வள்ளுவர் வாக்குக்கேற்ப மாமா அவர்கள் மாமனிதர் ஆனார்.

**மிக மோசமான உணர்ச்சி - கோபம்.**

**மிகச்சிறந்த கேடயம் - புன்னகை.**

# 4.18 காட்சிக்கினியவர் கடுஞ்சொல் இல்லாதவர்..

**திருமதி.பாரதி கென்னடி,**
**விரிவுரையாளர், வர்த்தக முகாமைத்துவ பீடம்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**

அன்று இடம்பெற்ற செல்வநாயகம் சேரின் நினைவு நாளில் பேராசிரியர் மௌனகுரு அவர்கள் இவ்வாறு எங்களது பெரிய சேரை வர்ணித்தார்,

பெரிய சேர், நான் மூன்றாம் தரத்திற்கு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் 1981 ஆம் ஆண்டு சேரும்போது அதிபர். அப்போது அங்கு இரண்டு சேர்மார். ஒருவர் அதிபர். பெரிய சேர், மற்றையவர் சின்ன சேர். அவர்தான் உப அதிபர்.

பெரிய சேர், வெள்ளை நிற வேட்டியும், வாலாமணியும் அணிந்து நெற்றியில் மூன்று விரல்களும் பதிய திருநீற்றுப் பூச்சுடன் காட்சியளிப்பார். சிரித்த முகம்; ஆனால் கண்களில் கண்டிப்பு. பெரிய சேர் என்றுமே எங்களை மகள், மகன் என்றுதான் கூப்பிடுவார். வெறும் நுனிநாக்கினால் அன்றி அவரது அடிவயிற்றினின்று அந்தச் சொற்கள் பாசத்துடனும் உரிமையுடனும் வெளிவரும். அத்துடன் கண்டிப்பும், இடையிடையே படர்ந்து காணப்படும். எனவேதான் பெரிய சேர் என்றவுடன் உள்ளூர ஒரே பயம்.

பெரிய சேரின் பள்ளியில் படிக்கும்போது 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சை, எனது சகபாடிகளை விட வயதில் சிறியவளாகக் காணப்பட்டதனால் எனக்கு அந்தப் பரீட்சை எழுதும் வாய்ப்பு கிட்டாது என அறிந்தும் கூட அவரை அணுகி என் அம்மா கோரிக்கை விட்டார். சொந்தக்காரி என்றும் கூட பார்க்காமல் மறுத்துவிட்டார். அவரது “மறுப்பு” கவலையை ஏற்படுத்தவில்லை. வெறுப்பை ஏற்படுத்தவில்லை.

அவரது மறுப்பு நேர்மையை வித்திட்டது. நேர்மை என்னும் விதை என்னுள் விதைக்கப்பட்டது. சட்டம் சட்டம் தான்; நியாயம் நியாயம்தான். பெரிய சேரை நினைக்கும்போது இச்சம்பவமும் நினைவுக்கு வருகிறது. ஒரு நாள் எதேச்சையாக பெரிய சேரைக் கண்டு கல்வியில் நான் பெற்ற அடைவினை கூறினேன். சேர் சந்தோஷப்பட்டார். என்னை மனதார வாழ்த்துவார் என்று எதிர்பார்த்தேன். அப்படியே நடந்தது. வாழ்த்தினார் அது மாத்திரமல்லாது "முதலாவதாக வருவது கெட்டித்தனமல்ல, எப்போதுமே அந்த நிலையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் அதுதான் முக்கியம்" என்றார். It is important to remain number one than becoming number one இவ்வெண்ணத்தினை என்னுள் புதைத்துவிட்டவர் சேர்தான்.

பெரிய சேர், உங்களது ஆன்மா சாந்தியடைய என்றுமே இறைவனைப் பிரார்திக்கின்றேன்.

எங்களின் பெரிய சேருக்காக வெளியிடப்படும் இந்த மலரில் எனது எழுத்துக்களையும் மாலையாகப் போட மனமுவந்து இடமளித்த வினோ அக்காவுக்கு என் நன்றிகள்.

**அடுத்தவர் காட்டும் அக்கறையிலும், பாராட்டிலும் அப்படியே கரைந்து விடாமல் அதன்பின்னால் ஒளிந்திருக்கும் உண்மையான நோக்கத்தை அறிந்து நடப்பதே நல்லது. ஏனெனில் நம் வாழ்க்கை நமக்கு மட்டும்தான் வாழ்க்கை மற்றவர்களுக்கு அது வெறும் வேடிக்கை.**

4.19

## திரு.கந்தவனம் நமசிவாயம்
## வாழைச்சேனை

திருப்பணித் தொண்டு என்றால் தீராத ஆசையும்

பொதுப்பணி என்று போகாத இடமும் இல்லை எனலாம்.

அரும்பணி பாடுபட்டு அயராது உழைத்த சேவையினால்

சிரோமணி என்ற சீரான பட்டமும் பெற்றுவிட்டீர்.

ஆண்டுகள் பல கடந்தாலும் அழியாப் புகழுடன்

சான்றுகள் பல பரிணமித்ததையும் பாரினிலே பார்த்தீர்கள்

பேருக்கும், புகழுக்கும் ஏற்றவன்தான் ஐயா நீங்கள்

ஊருக்கும் உத்தமர்தான் என்று உள்ளத்தால் உணர்த்தி

கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்பதனை

கல்வியிலே காட்டி விட்டீர்கள் காலம் காலமாக

அள்ளி அள்ளி கொடுத்துள்ளீர்கள் என்று

அன்புள்ளங்கள் அங்கலாய்க்கின்றன. எந்நாளும்

மண்ணிலே பிறந்து மண்ணிலே வாழ்ந்து

மண்ணிலே மறைந்தாலும் - உங்கள்

கண்ணிலே கண்ட இன்பம் கரைந்ததோ சாம்பலாக

என எண்ணியே ஏங்கிவிட்டார்கள் உன் மக்கள்

தானம் செய்வதில் தலை சிறந்த வீரனாக

போன இடமெல்லாம் பொன்னாடை ஆகுதைய்யா

சொல்லின் செல்வன் என்ற பேருக்கே இலக்கணமாக

பல்லின மக்கள் எல்லாம் பாராட்டிய காலம் இது

சொல்லொணாத் துயரத்தால் சொந்தங்கள் எல்லாம்

வில்லிலே பட்ட மானைப்போல் துடிக்குதையா உன் நினைவால்

கள்ளம் கபடமில்லா உன் மனதிற்கு

உள்ளக்கமலம்தான் உத்தமனார் வேண்டுவது என்று

பள்ளி மாணவர்கள் பாடியதையும் பார்த்தார்கள் பலபேர்.

மனித நேயங்களை மதித்த மகான் நீங்கள்

புனித பூமியிலே புண்ணியங்களையும் செய்துள்ளீர்கள்

தனிமையிலே சென்றுவிட்டீர்கள் விண்ணுலகில்

தனிமையிலே கண்ட இன்பம் இனிக்குதையா மண்ணுலகில்

இறந்தும் இறவாத அன்பு வேண்டி

மறந்தும் மறவாத மக்களின் பாசமிதை

துறந்து சென்ற துயர்தனையும்

எப்படி ஐயா மறந்திருப்போம் என்று

இப்படி ஏங்குதய்யா மனங்கள் எல்லாம்

மட்டு மாவட்ட மக்கள் எல்லாம்

தட்டு மலர் கொண்டு அஞ்சலி செய்து

இட்டுச் சென்ற தொண்டைச் செய்ய

இறையருள் வேண்டும் என்று

இறைஞ்சுகின்றனர் மக்கள் எல்லாம்.

# 4.20 மனதில் என்றென்றும் மறையாத மாமணி அமரர். செல்வ – நாயகம்

திரு, சு. சிவப்பிரகாசம்
(முன்னாள் பிரதான மத்தியஸ்தர் - மத்தியஸ்தர்சபை), சித்தாந்த வித்தகர், சிந்னைச் செம்மல், சிவநெறிச் செம்மல், சைவநெறிக்காவலர், மட்டக்களப்பு சைவத் திருநெறிமன்ற உபதலைவர், உலகத்தமிழ் பண்பாட்டுக்கழக உள்துறை உறுப்பினர், சின்னலெப்பை வீதி, மட்டக்களப்பு.

1988 ஆம் ஆண்டு என்னால் எழுதப்பட்ட வெடியரசன் (1ம் நூற்றாண்டில் இலங்கையில் வடக்கு, கிழக்கு, மேற்கு யாவற்றையும் ஆட்சி செய்த மன்னன்) வரலாற்று நூலிற்கான அணிந்துரையைப் பெற்றுக் கொள்வதற்காக சென்றல் வீதியிலுள்ள வித்துவான் F.X.C. நடராசா அவர்களின் வீட்டிற்குச் சென்றிருந்த சமயம் முதன் முதலாக அமரரை சந்திக்க நேர்ந்தவேளை மிகச் சிறப்பான சமூகவேயையாளர் என திரு. F.X.C. நடராசா வினால் அறிமுகம் செய்யப்பட்ட நாளிலிருந்து இவரும் பல சமய, சமூகப்பணிகளில் கலந்து கொண்டதன் மூலம் இவரின் சேவை மனப்பான்மை என்னை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியது.

மேலும் 2002 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மத்தியஸ்தர் சபையில் எம்முடன் பணியாற்றியவேளை எல்லோருடனும் பொறுமையுடனும், நடுநிலைமையுடனும் விசாரணைகளை மேற்கொண்டு தமது அனுவ அறிவினால் இரு பகுதியினரையும் புரிந்துணர்வினை ஏற்படுத்தியும், மிகத் தைரியமான தீர்ப்புகளை வழங்கியமையும் இன்றும் என்னால் மறக்க முடியவில்லை.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விசாரணைகள் மாலை 3 மணிவரை நடைபெறுவதனால் களைப்பு, தாகம் ஏற்படும். இக்காலத்தில் இலங்கை வங்கியில் கடன் பெற்றவர்களின் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட

தொகையினை மீளப்பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடக் கூடியதாகும். அவ்வேளை அங்கு வரும் வங்கி ஊழியர்கள் தமது சார்பில் மத்தியஸ்தர்களிற்கும் குளிர்பானம் பகிர முயலும்வேளை இதனைக் கண்ணுற்ற ஐயா அவர்கள் அந்த முறையினைத் தடுத்து, ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு மத்தியஸ்தரின் செலவில் தாகசாந்தி செய்ய வழியமைத்தார்.

இவரின் அர்ப்பணிப்பான சேவைகள் பல விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்ட போதும், தமது நிலையினைத் தெளிவுபடுத்தி, ஏனையோர்க்குப் புரிய வைப்பதில் சமர்த்தராக இருந்தார். இருப்பினும் இப்படியான சந்தர்ப்பங்களில் இவர் மனச்சோர்வு அடையும் வேளைகளில், சபைக்கு வரப்போவதில்லை என என்னிடம் கூறி சலிப்படையும் போது, வள்ளுவர் காலத்திலேயும் மரத்தில் கண்ணைக் கவரும் விதமாகவும், வாசனை மிகுந்ததாகவும் சுவையான பழங்கள், இருந்தபோதும், நிறமோ, அழகோ அற்ற புளிக்கின்ற காய்களை பறித்து உண்பவர்கள் அன்றும் இருந்தமையால்தான் வள்ளுவர் கூட

**இனிய உளவாக இன்னாது கூறல்**
**கனியிருக்கக் காய் கவர்ந்தற்று (குறள்)**

எனக் கூறி நான் அவரைத் தேறுதல் அடையச் செய்வதுண்டு மேலும்

**தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க்கு எல்லாம் இனிது**

எனும் குறளின்படி தமது வழியிலேயே தம்மக்களையும் கல்வி, அறிவு, நேர்மை, கண்ணியம் என்பவற்றில் மேம்பாடு எய்தச் செய்து பல்லோரும் மதிக்கும் நிலைக்கு உயரச் செய்தார். தமது 80வது அகவை நிறைவிலும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறிகளை திரட்டி நூலாக்கியமை வரவேற்கத்தக்கதாகும். இப்பேர்ப்பட்ட மக்கள் சேவைகளின் மூலம் “மக்கள் சேவை மகேசன் சேவை” என்பதற்கிணங்க வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார். என்பது உறுதியாகின்றது.

# 4.21 நினைவுகளின் நிழல்கள்

S. Stanislaus (LLB, Sri Lanka)

தொலைபேசி மணி அடிக்கிறது - அடுத்த பக்கத்திலிருந்து "மகனே நான் செல்வநாயகம் சேர் பேசுகிறேன்" இந்தப்பக்கம் உங்களைக் காணவில்லை.... இப்படி ஒரு ஏக்கம் கலந்த தொலைபேசி உரையாடல் என்னை தேடும் ஒரு ஆதங்கம் - நானும் உடன் பதிலளித்து விடுவேன். அடுத்த ஓரிரு நாட்களுக்குள் அவரைச் சந்திக்காமல் இருந்ததில்லை. இந்த உறவு ஏறக்குறைய முப்பத்துரண்டு ஆண்டுகளாக முளைவிட்டு கிளைத்து மரமான ஒன்று. என் மனைவி குடும்பத்தாருடன் இருந்த அந்நியோன்னியமான நட்புறவு ஐயாவுடன் என்னையும் பிணைக்க வைத்தது. கல்வி அலுவலகத்தில் கடமையாற்றிய காரணத்தால் அவரை ஏற்கனவே அறிமுகமாகி இருந்தாலும் நட்பின் நெருக்கம் ஒருவித உறவின் வெளிப்பாடாக இறுதிவரை தொடர்ந்து இன்றும் என்நெஞ்சில் நிழலாடும் நினைவலைகளாகப் படருகின்றன. ஐயாவை சேர் என்று பரிவுடன் அழைப்பேன். எனது மகனின் பாடசாலை வாழ்க்கையுடன் தான் அவருடன் கிட்டி நெருங்கும் சந்தர்ப்பம் அதிகம் கிடைத்தது. நிமிர்ந்த உருவமும், தாட்சணியமான பார்வையும், இலக்கணம் வழுவாத பவ்வியமான அதேவேளை அழுத்தம் திருத்தமான பேச்சுத் திறனும் அவர் ஆளுமைக்கு சிறந்த எடுத்துக்காட்டு. சிறந்த செயல் திட்டவாளராக, நல்லாசானாக, அதிபராக கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கொண்டு அவர் நடந்த நாட்களை யாராலும் மறக்க முடியாது. அவரைப் பற்றி அறிந்தவர் பலர், பல்வேறு கோணங்களில் பரிமளித்து பலரும் எழுதுவார்கள். ஆனாலும் அவர் உள்ளத்தின் ஒரு ஓரத்தில் எனக்கென ஒரு தனியிடம் ஒதுக்கியிருந்ததை பல சந்தர்ப்பங்களில் உணர்வு பூர்வமாக உணர்ந்தவன் நான். அவர் என்னோடு மனந்திறந்து பேசியவை, இன்னும் என் செவிகளில்

ஒலிக்கத்தான் செய்கிறது. சிலவேளைகளில் ஓர் தந்தையின் தேடல், ஆதங்கம், அவர் எனக்காக காத்திருந்து மனந்திறந்து பேசுவது போலிருக்கும். பேசி முடிந்ததும் மனப்பாரம் தீர்ந்ததுபோல் அவர் முகத்தில் தெரியும் அமைதி அதற்காகவே நான் நேரம் கிடைத்தபோதெல்லாம் சந்திக்க செல்வது எனது பழக்கமாயிருந்தது. எனக்கு அவர்காட்டிய பாசத்தின் வெளிப்பாட்டை அவர் நோய்ப் படுக்கையில் அயர்ந்து இருந்த வேளையில் கண்டு கண் கலங்கினேன். நான் இறுதியாக பார்க்க சென்ற போது மகள் நான் வந்திருந்ததை "அப்பா ஸ்ரனி அண்ணன் வந்திருக்கிறார். கண்ணை விழித்து பாருங்கள்" என அவரிடம் கூற கண்கள் படபடத்து, வாய், கரம் என்பன அசைந்தன. அந்த அன்பு வெளிப்பாடு இன்னும் என் கண்களில் கண்ணீரைத்தான் வரச் செய்கிறது.

என் குடும்பத்தாருடன், அவரது குடும்பத்தால் ஏற்பட்ட பழக்கம் நட்பை விட உயர்ந்த படி கொண்டது. எனது மாமனாரின் இறுதிச் சடங்கில் கண்ணீர் மல்க நண்பனே... என்று அழகுதமிழில் தானே கவிதை எழுதி வாசித்தபோது கண்கலங்காதவர்கள் யாரும் இல்லை. இவ்வளவு நட்பின் ஆழமா? என்று வியக்க வைத்த அந்த நிகழ்வை நினைத்துப் பார்க்கிறேன்.

ஒரு தந்தையாய் நல்லாசானாய், நல்லாலோசகனாய், நண்பராய், வழிகாட்டியாய் இருந்தவரை இழந்துவிட்ட தவிப்பில் இந்த நினைவலைகளில் ஓரிரு வரிகளை யானும் சமர்ப்பிக்கிறேன். நெஞ்சை விட்டகலாத பல நிகழ்வுகளின் நினைவுகள் அவருக்கும், எனக்கும், என் குடும்பத்திற்கும் நிறையவே உண்டு. எழுதுவது முடியாத காரியம். இச் சந்தர்ப்பத்தை தந்த அவரது குடும்பத்தவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

## 4.22 A MODEL OF DECORUM

**By C. Pathmanathan**

**Lay, Voluntary Worker at the Ramakrishna Mission**
**22.02.1986 - 14.04.2009**

From the time I joined the Ramakrishna Mission, Kallady- Uppodai in my 50th year, I have been impressed by the dress and deportment of Mr. Thambipillai Selvanayagam. During my career of 15 years at the Mission, I had occasion to meet and talk with him. It was then that I was struck by his flawless Tamil speech which was as immaculate as his sparkling white dress. But, it was from my 65th year when I joined the Swami Vipulanandhar Elders' Home that I came to know him closely.

Entrusted with the task of managing the home by the Batticaloa Y.M.H.A., he put his heart and soul to his task. He virtually begged for the daily requirements of the Elders. No individual or establishment closed its doors on his face. The respected position he held in the community and his dedicated services as a teacher, drew the sympathy and concern of the ordinary man to the plight of the destitute Elders in his care. He used to visit the Home daily and enquire of the welfare of the Elders. He spent his own money, going from door to door collecting resources for the running of the Home. His target was to harness the charity of 365 people to feed the Elders just for one day of the year. His ambition was to raise the standard and content of this Hindu Home to that of the more famous Home run by the Little Sisters of the Poor, where I am now resident. Unfortunately his failing health and the unenthusiastic support of the Y.M.H.A. officials thwarted his plans.

There was nothing that he touched without adorning it. All his actions were as impeccable as his Tamil diction. A perfectionist to the core, he could not tolerate slip shod work. Others just could not equal his qualities of dedication and commitment. His life and work was that of a perfect gentleman. It is a pity that the Batticaloa Y.M.H.A. did not share and appreciate his vision. The Hindus are the poorer for that!

**இளமைக்காலத்திலிருந்தே பற்றற்ற தன்மையைப் பழகிக்கொள்வது நல்லது. ஆரம்பத்தில் அது சிரமமாக இருந்தாலும் சிறிது சிறிதாகப் பழகிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். ஏனென்னில் மிகவும் பிரியமாக நேசிக்கும் அனைத்தையுமே ஒரு நாள் விட்டுவிடும்வேளை வந்தேதீரும். இந்த உண்மையை உணர்ந்து வாழ்க்கையை நடத்துவது மிக அவசியமானது.**

# 4.23 எனது ஆசான்

திருமதி. விஜயலெட்சுமி ரகுபதிராஜ் (ஆசிரியை)
ஆரையம்பதி

2010.02.11 அன்று சிவபதமடைந்த அமரர் தம்பிப்பிள்ளை செல்வநாயகம் ஆசிரியர் சிரோமணி அவர்கள் எனது ஆசானாவார். இவர் எனக்கு எட்டாம் தரம் முதல் பதினோராம் தரம்வரை தமிழ் மொழியையும் சைவ சமயத்தையும் கற்றுத்தந்தார். நான் தமிழை எழுதும்போதும் இறைவனை வணங்கும் போதும் இவரின் ஞாபகம் என் மனதில் எழும். குறிப்பாகத் தமிழ்ப் பாடத்தில் கட்டுரை எழுதும் நுட்பங்களையும் கடிதம் எழுதும் முறையையும் எழுத்துப் பிழையின்றி எழுதவும் கற்றுத் தந்தது நேற்று நடந்தது போல் என்மனதில் பசு மரத்தாணி போன்று பதிந்துள்ளது.

வகுப்பில் இவர் ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியாக அழைத்து தவறுகளைச் சுட்டிக்காட்டி, அதனைத் திருத்தி எழுதிக் காட்டுவார். இவ்வாறு இவர் அப்பியாசக் கொப்பிகளைத் திருத்துவதால் அன்றுடனே மாணவராகிய எங்கள் சந்தேகம் தீர்ந்துவிடும். இனிமேல் அத்தகைய தவறுகளை நாங்கள் விடமாட்டோம். எங்களது அப்பியாசக் கொப்பியில் காணப்படும் அவரது எழுத்துக்களைப் பார்க்கும்போது கொள்ளை ஆசை ஏற்படும். அவ்வளவு அழகாக உறுப்பமைய எழுதியிருப்பார். ஏனைய ஆசிரியர்கள் காட்டாத அன்பும், இரக்கமும் இவரிடம் நிறைந்து காணப்பட்டது. இதுவே எங்களுக்கு அவரது பாடங்களின் மீது பிரியத்தை ஏற்படுத்தியது.

சைவசமய பாடத்தில் திருக்குறளும், திருவருட் பயனும் கற்றுத் தந்ததில் அவருக்கு நிகர் அவரே. திருக்குறளையும், திருவருட்

பயனையும் ஒப்பு நோக்கிக் கற்றுத் தந்தார். அவர் கூறியவாறு மனனம் செய்த திருக்குறளும், திருவருட் பயனும் இன்னும் எனது ஞாபகத்தை விட்டகலவில்லை. திருவருட் பயனுக்கு இவர் கூறிய விளங்கங்கள் இன்னும் நான் வேறு எவரிடத்தும் கேட்கவில்லை.

இவர் தமிழ் இலக்கியம் கற்றுத் தருவது ஒரு தனிப்பாணியில் அமையும். இவரிடம் தமிழ் இலக்கியம் பயின்ற எந்த மாணவரும் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் அதிவிசேட சித்தி பெறத் தவறுவதில்லை. நான் இப்போது சில வகுப்புக்களுக்குச் சைவசமயம் கற்பிக்கின்றேன். அவ்வேளையில் ஆலய தரிசனம் பற்றிக் கற்பிக்கும் போது ஆசிரியர் சிரோமணியின் ஞாபகம் என் நெஞ்சை வருடும். இவ்வாறு நேர்மை, பண்பு, கடமை உள்ள இவ் நல்லாசிரியரைப் பற்றி கூறுவதானால் பல நாட்கள் எடுக்கும்.

எனது தனிப்பட்ட வாழ்விலும் அரும் பெரும் உதவிகளைச் செய்துள்ளார். எனது கணவர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் இருந்த ஊரடங்குச் சட்ட வேளையில் அங்கு சென்று உணவு கொடுத்து ஆறுதல் வார்த்தைகளையும் கூறி அவரைத் தென்பு படுத்தியுள்ளார். எனது மகன் பாடசாலையில் கற்றுக் கொண்டிருக்கும் வேளையில் பொதுப் போட்டியில் பரிசு பெற்றதைப் பாராட்டுமுகமாக அவரும் பாராட்டிப் பரிசு வழங்கினார். எனது வாழ்க்கைப் பயணத்தில் நானடைந்த ஒவ்வொரு வெற்றிப் படிக்கும் ஆசீர்வாதம் வழங்கினார்.

அவர் அதிபராக இருந்து ஆற்றிய சேவையின் போது அவரது உன்னத சேவைக்கு மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் 5ம் தர புலமைப் பரிசில் பெறுபேறுகள் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

**"அன்னாரின் ஆத்மா சாந்தியடைய**
**இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்"**

# 4.24 மறக்க முடியாத மகா ஆசான்

திரு. கி. சிவலோகநாதன்
இலங்கை மத்திய வங்கி - கொழும்பு

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃ(து) இலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

எனும் பொய்யா மொழிப் புலவன் வாக்கிற்கிணங்க புகழுடன் பிறந்து, புகழோடு வாழ்ந்து, புகழோடு மறைந்த ஆசிரியர் சிரோமணி திரு. த.செல்வநாயகம் ஐயா அவர்களை ஒரு முறை நினைத்துப் பார்க்கின்றேன்.

வெள்ளை உடை, நிமிர்ந்த நடை, மற்றவரை தன்னிடத்தில் கவரக் கூடிய கனிவான பார்வை, மெல்லிய புன்னகை கொண்ட ஒரு பண்பான மனிதனாக அவரை நான் காண்கின்றேன். ஆரம்ப காலத்தை நான் அறிந்திருக்கா விட்டாலும், எனது தாய்மாமனார் காலஞ் சென்ற க.விநாயகமூர்த்தி (அதிபர்) அவர்களின் உற்ற நண்பன் என்ற ரீதியில் ஐயாவை பற்றி அறிந்திருந்தேன். அந்த அறிமுகம் அன்னாரின் பெறாமகன், காலமான கலாநிதி திரு.பத்மரஞ்சனின் திருமணத்தின் மூலம் எம்மிடையே ஒரு நெருக்கமான உறவை வளர்த்துவிட்டது.

காலப்போக்கில் எங்கள் இருவரிடையேயும் பல கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்று வந்தன. அவை நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் தொடர்ந்து கொண்டிருந்தன. அவர் தொலைபேசியில் உரையாடும்போது மகனே உனக்கு என்னோடு பேச நேரமிருக்கிறதா? இல்லாவிட்டால் பிறகு கதைக்கவா? என்று பண்பாக கேட்பர். மற்றவரை தொந்தரவு செய்ய அவர் ஒருபோதும் விரும்பியதில்லை. எந்த ஒரு

விசேட நாட்களிலும் ஐயாதான் எனக்கு முதலில் வாழ்த்துக் கூறுவார். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் பல கருத்துக்களை என்னோடு பரிமாறுவார். சில வேளைகளில் அதை பற்றி விவாதித்தும் தீர்வு காண்போம். அதில் ஒத்த கருத்தை இருவரும் கொண்டிருப்போம். மற்ற மனிதர்களை மனதால், சொல்லால், செயலால் நோகவைக்க விரும்ப மாட்டார். எதிரியையும் இன் சொல்லால் சமாளிக்கும் தன்மை அவருடைய பேச்சில் காணப்படும்.

ஆசிரிய தொழிலில் அன்னார் ஒரு கலங்கரை விளக்காகவே விளங்கினார். அவரின் திறமைக்கு இன்று பல கல்விமான்கள் சாட்சிகளாக, சமூகத்தில் காணப்படுகின்றனர். கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் அவரின் இலட்சியத்திற்கு வழி அமைத்துக் கொடுத்த ஒரு பாசறையாக மிளிர்ந்தது. அவரின் பணி இன்னமும் அங்கு தொடர்ந்து பிரகாசிக்கின்றது. மனித நேய மிக்க அவர் தனக்காக சிந்திப்பதை விட சமூகத்திற்காக சிந்தித்து செயலாற்றுவதில் தனக்கென ஒரு தடம் பதித்திருந்தார். தன்பிள்ளைகளை எப்படி அறிவூட்டி வளர்த்தாரோ அதே போன்று மற்றவர்களையும் அதே அக்கறையுடனேயே அறிவூட்டி வளர்த்தார். தன்னலத்தை விட பொது நலமே அவரிடம் மேலோங்கிக் காணப்பட்டது.

கல்விப் பணியுடன் பிற்காலத்தில் சமய, சமூகப் பணிகளிலும் தன்னை இணைத்து செயலாற்றினார். முதியோர் இல்லம், இராமகிருஷ்ண மாணவரில்லம் போன்ற அமைப்புக்களில் தனது முழுப் பங்களிப்பையும் செலுத்தி தனது அறப்பணியை அருமையாகச் செய்து வந்தார். மனிதன் பிறந்தான், வாழ்ந்தான், இறந்தான் என்றில்லாமல், வாழும் காலத்தில் பிறருக்கு இயன்றவரை உதவி செய்தே வாழ வேண்டும் என்ற "சுவாமி விவேகானந்தரின்" வாக்குக்கு ஒப்ப, தனது வாழ்வில் வாழ்ந்து காட்டினார். அவரின் பணிக்கு உயிருடன் இருக்கும் போதே, பாராட்டும் பெற்றுவிட்ட ஒரு பெருமகனாக அவரை நான் கண்டேன்.

சமயத் தொண்டின் ஒரு கலங்கரை விளக்கு, தனது குல மக்களுக்காக ஸ்ரீ திருநீல கண்ட விநாயகர் ஆலயத்தின் புனருத்தாரண திருப்பணியில் தன்னை ஈடுபடுத்தி அவ்வாலயத்தின் மூல மூர்த்தி பரிவார தெய்வங்கள் போன்றவற்றை தனது மக்களின் உதவியோடு தானே முடித்து வைக்க என் உதவியையும் நாடினார். நான் கொழும்பில் இருந்து அவ் விக்கிரகங்களை ஒழுங்கு பண்ணி அப்பணியில் என் பங்களிப்பை நல்கி அவருக்கு உதவி புரிந்தேன். இன்னமும் அவரிடம் பல திட்டங்கள் இருந்தும் அவை செயலாக முன் காலன் தன்வலையை விரித்து முடித்து விட்டான்.

ஐயாவின் இரங்கல் உரை நிகழ்வின்போது அன்னாரின் இளைய மகன் கவிதையா? கடிதமா? கதையா? என்று தெரியாமல் காதருகே தந்தையிடம் கூற என்று எழுதி வந்தேன் என்று செய்தி ஒன்றை அன்று வாசித்தார். அதில் ஒரு தந்தை மகனை எப்படி தட்டிக் கொடுத்து வளர்த்தார், தன் தொழிலில் எப்படி கடமை கண்ணியத்தை கடைப்பிடித்தார், குடும்ப வாழ்வில் எப்படி அரவணைப்புடன் வாழ்ந்தார், எதிர்காலத்தில் சமூகத்தில் தன் பிள்ளைகள் எப்படி வாழ வேண்டும் என ஆசைப்பட்டார், போன்ற பல செய்திகளை "பட்டபின் ஞானமாய் பகர்ந்ததை யான் கண்டேன்" அங்கு குழுமி இருந்தவர்களும் அதே கருத்தை கண்டிருப்பர் என நான் நினைத்தேன்.

எது எப்படியோ எண்ணும் அளவுடைய மனித வாழ்வில், வாழ்ந்த காலத்தில் முடித்தவரைக்கும் கல்விக்கும், சமூகத்திற்கும், பல அரிய சேவைகள் செய்து, உலக நியதிப்படி ஆண்டவனின் அழைப்பை ஏற்று இவ்வுலகில் இருந்து விடைபெற்று சென்றார். அன்னாரின் ஆத்மா என்றும் இறைவனின் பாதக்கமலத்தை அடைவதாக.

# 4.25 என் அன்பான அப்பா பற்றி.....

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்

அன்புடையார் எம்பும் உரியர் பிறர்க்கு"

என வாழ்ந்து காட்டியவர் என் அப்பா.

தன் குடும்பத்துக்கு மட்டுமல்லாது, தன் உறவினர்களுக்காகவும், தன் சமூதாய முன்னேற்றத்திற்காகவும் இறுதிவரை பாடுபட்டவர்.

ஒரு மென்நெஞ்சிற் கொண்ட கல்லாக தன்கொள்கைகளை கடைப்பிடித்தவர். அவரின் சேவைகளை சரித்திரம் சாட்சி சொல்லும்.

முத்திரை குத்திய சாட்சியங்களாக கல்லடி விபுலானந்தர் முதியோர் இல்லமும், ஆரையம்பதி திருநீலகண்ட விநாயகர் கோயிலும் வின்று பகரும்.

**I love you Appa.**
**May God keep you with him in eternity.**
**I thank you for everything,**
**You have done to me in my life.**

பெரிய மகன்
சசி செல்வநாயகம்.

## 4.26 MY DARLING APPAPPA

Appappa... my darling Appappa!

Well.. what can I say about you?

A famous man is the father of my Appa

You built up such a good reputation

I am so proud to say that you are my Appappa

Even though I did not learn Tamil from you

You have been the best Tamil teacher of your time.

You have such a great heart...

You touched so many people's lives in a positive way.. .

You were a very disciplined man,

I am learning to be one like you from my Dad.

You were a great asset to the whole community of Batticaloa.

I love you so much...

I love you always.

Once more... I like to say

I am so proud to say that you are my darling Grandpa.

Miss you deeply....

**With love,**
**Theep Dylaan Jerome**
**July 2010.**

## 4.27 MY LOVELY GRANDPA

Appappa.... Appappa... I say thank you!

My lovely Grand Dad.... I recall my days with you

Your soft touch and hugs...

You lived miles away... now you have left us with sorrow;

But your smile is still inside me.

You are so nice and cool.

I admire your straight forward attitude..

I like your personality.

Appappa,

You lived a life in full..

We hadn't much opportunities to be with you

and learn from you,

But your younger son, my beloved Dad taught me what he learnt from you.

Whatever I learn and wherever I live

I have a touch of you for my whole life.

Appappa,

A big "Thank you" to you.

We are blessed and proud because

we are your grand children

I love you and miss you always!!

With love,
Arunth Geshwin
July 2010.

## 4.28 எனக்காகவே வாழ்ந்த என் இனிய அப்பா

**அன்புமகள் திருமதி. வினோதா ஜெகநாதன்**

அப்பா! என் எண்ணங்களில் எதை எழுதுவது, எதை விடுவது என்றே தெரியவில்லை. எழுதி முடித்த பின்னர் சரியா அப்பா? என்று கேட்பதற்கு நீங்களும் இல்லை. ஒவ்வொரு விடயத்திலும் உங்கள் ஆலோசனைகளையும், உதவிகளையும் பெற்று வளர்ந்த எனக்கு இப்போ என்ன செய்வது என்றே தெரியவில்லை.

நீண்ட நாட்கள் நாம் பிரிந்து இருந்தது நீங்கள் வெளிநாடு சென்றபோதுதான். அப்படியும் நான் தனியே இருப்பேன் என்று ஆறுமாத விசாவை மூன்று மாதங்களில் முடித்து விட்டு திரும்பி வந்துவிட்டீர்கள். இப்போது இந்த கடைசிப்பிரிவு மனதிற்கு கஷ்டமாக இருக்கிறது அப்பா.

நம் வீட்டில் நாம் நேசித்தவர்கள் எல்லோரும் நம்மைவிட்டுப் பிரிந்தபோது மீதி இருந்தவர்கள் ஆளுக்கு ஆள் ஆறுதலாக இருந்தோம். உங்கள் பிரிவு மனதிற்கு பாரமாக உள்ளது. நடைமுறையில் கஷ்டமாக உள்ளது. எனினும் அப்பா நீங்கள் என்னுடன் கூட இருக்கிறீர்கள் என்று உள்மனம் சொல்கிறது. எப்படி மகளே உன்னை தனிய விட்டுப் போவேன் என்று சொன்ன அப்பா நீங்கள். ஆனாலும் போய் விட்டீர்கள்.

எனக்கு நீங்கள் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் சிறந்த அதிபராகவும், என்னை நேசிக்கும் ஓர் அப்பாவாகவும் தான் இருந்தீர்கள். ஆனால் உங்கள் வாழ்க்கை வரலாற்றைப் பார்க்கும்போது எவ்வளவோ பெருமையாக உள்ளது. எத்தனை விடயங்களைச் சாதித்துள்ளீர்கள்.

உங்களை நினைத்து மற்றவர்கள் எழுதிய கட்டுரைகளைப் பார்க்கும்போது நீங்கள் எந்தளவுக்கு அவர்களை நேசித்துள்ளீர்கள் என்றும் அவர்கள் எந்தளவுக்கு உங்களை நேசித்துள்ளார்கள் என்றும் அறியும்போது ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை.

அப்பா நேரந்தவறாமை என்பதை உங்களிடம் இருந்துதான் கற்றேன். இன்றுவரை அப்பழக்கம் என்னிடம் மாறாமல் உள்ளது.

நிறைய எழுத மனம் நினைக்கிறது. எழுத முடியாமல் கண்ணீர் மறைக்கிறது அப்பா. கடவுள் நம்மோடு எப்பவும் இருக்கிறார் என்று அடிக்கடி சொல்வீரகளே அப்பா. அந்த முழு நம்பிக்கையுடனும் எனது இவ்வுல வீசா முடியும் வரையும் நான் வாழ்ந்துதானே ஆகவேண்டும் என்ற எண்ணத்திலும் வாழ்கின்றேன். பெரிய பொறுப்புக்கள் என்று இல்லாத இந்த வாழ்க்கை மனதிற்கு ஒரு வகையில் பிடித்துள்ளது. நல்ல உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் இருப்பதால் பயமில்லை அப்பா. எனக்குப் பக்கத்திலேயே இருந்து நான் பார்த்து ரசித்த அப்பா..... அதிசயித்த அப்பா..... கற்றுக் கொண்ட அப்பா..... பரவசப்பட்ட அப்பா.... என் முன்னாலேயே என்னைவிட்டுப் பிரிந்ததை மறக்க முடியவில்லையே, இந்த அற்புதமான அப்பாவுடைய நினைவுகள் என்றுமே என்னுடன் நிலை கொண்டிருக்கும்.

மகளே! என்று நீங்கள் கூப்பிடும் அந்தக் குரலின் பாசத்துடன் என் எண்ணங்களை முடிக்கா நிற்கின்றேன்.

## 4.29 ஆசிரியர் சிரோமணி செல்வநாயகம்

-அருட்திரு. கலாநிதி. S.A.I. மத்தியு-

*நாள் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது.*
*ஆண்டு 1972.*
*உவெஸ்லி உயர்தர பாடசாலை.*
*புதிய பாடத்திட்டம்.*
*புள்ளி விபரவியல் அறிமுகம்.*
*பயிற்றப்பட்ட மற்றும்*
*பட்டதாரிகளுக்கான படிப்பு.*
*பட்டதாரியாக அந்த வகுப்பில் நானும்...*
*45 வயது மதிக்கத்தக்க*
*செல்வநாயகம் என்ற ஆசிரிய*
*பெருமகன். கம்பீரமான தோற்றம்*
*வெள்ளை நிற ஆடை.*
*தெளிந்த சிந்தனை.*
*அதற்கேற்ற சொல்வளம்.*
*அவர் கற்பித்த புள்ளி விபரவியல்*
*என் மனதில் ஆழப்பதிந்தது*
*ஆர்வத்தையும் சேர்த்தது.*

*நாட்கள் வளர்ந்தன.*
*எங்கள் நட்பு உரிமை கொண்டது.*
*பல ஊர்ப்பணிகளில்*
*அவர் முதல் மகன்.*
*கோட்டைமுனை கனிஷ்ட*
*வித்தியாலயம் அவரால் உயர்ந்தது.*
*5ம் வகுப்பு புலமைப்பரிசில்*
*பரீட்சை முடிவுகளில் எப்போதும்*

*முதன்மை. அதனால் அவர்*
*ஆசிரியர் சிரோமணி.*
*ஆசிரிய உலகம் வியந்தது. பாராட்டியது.*
*14.03.2009 என் அன்னையின் மரணம்.*
*ஐயா ஒரு செய்தி தாருங்களேன்.*
*எழுதி அனுப்பினார்.*
*ஈசன் உவர்க்கும் இன்மலர்.*
*அந்த செய்தித்தாளின் தலைப்பு.*
*ஆம் ஈசன் உவர்க்கும்*
*இன்மலராகிவிட்ட ஆசிரியர்*
*சிரோமணி 82 அகவை கண்டவர்.*
*பல நன் மாணாக்கர்களையும்*
*அரும் பிள்ளைகளையும் உலகிற்கு*
*உகந்தளித்த ஓர் உத்தமர்.*

*ஐயா ஒரு மனிதம்.*

**பெற்றோர்களுக்கு, பிள்ளைகளுக்கு, உடன் பிறந்தோர்களுக்குச் செய்தவைகளை எல்லாம் நாலு பேர் எள்ளி நகையாடும் வண்ணம் சொல்லிச் சொல்லி மாய்ந்து போகாதீர்கள். கடமைக்கும், உதவிக்கும் அர்த்தம் புரிந்து கொள்ளாமல் குழம்பாதீர்கள். இரண்டுக்கும் நிறையவே வேறுபாடுகள் இருக்கின்றன. சீதையை மீட்க, ராமனுக்கு லஷ்சுமணன் துணையாய் நின்றது கடமை. சுக்கிரீவன், அனுமன், விபீஷணன் மூவரும் தோள் கொடுத்தது உதவி.**

## 4.30 உமது மீதான எமது பாடல்

*தம்பிப்பிள்ளையும் பொன்னம்மாவும்*
*பெற்றெடுத்த பெருமகனே*
*வேல்முருகு தம்பதியின்*
*அன்பார்ந்த மருமகனே*
*"எப்படி நலமா?" செப்பிடு ஐயா....*
*உமக்கொரு அஞ்சலும் அழைப்போலையும்*
*எழுதி இப்போது அனுப்புகின்றேன்*
*இரண்டையும் பார்த்திட மறந்திட வேண்டாம்*
*"இதுவரைக்கும் என்ன செய்தாயென...?"*
*என்னை நொந்து கேட்டிட வேண்டாம்.*

* * *

*பஸ்சிலே சென்றாலும், வகுப்பிலே இருந்தாலும்*
*எப்போதுமே உமது நினைவே எனக்கு*
*கொஞ்சு தமிழும் குமிண் சிரிப்பும்*
*வஞ்சனை இல்லா நெஞ்சும்*
*என்னை வசீகரித்தே தினமும் நிற்கும்*
*"மகனே" "மகளே" என்னும் மணிக்குரல்*
*என் மனதுக்குள்ளே அடிக்கடி ஒலித்து ஓயும்*
*என் தூக்கத்தில் கூட உமது*
*உருவமும், உணர்வுகளும்*
*தினம் தினம் கனாவாக வந்துபோகும்.*

* * *

*ஓ... என்வாழ்வில் எல்லோரையும் நான்*
*நேசித்திருக்கிறேன்; காதலித்திருக்கிறேன்*
*ஆனாலும் உம்மீது கொண்ட காதல் தான்*
*ஆழமானது; அதிகம் நீளமானது*
*இதனை உமது குடும்பம் கூட*
*சரியாக உணர்ந்திருக்காது*
*"நவேந்திரன் நடிக்கிறான்" என்றுதான்*
*எல்லோருமே நினைத்திருப்பார்கள்*
*ஆனாலும் நடந்தது என்ன....?*
*ஆழமாகக் காதலித்து முழுக்கவனமும்*
*உம்மீதே கொண்டு வாழ்ந்து வந்தேன்*

* * *

*கல்வி தந்த செல்வனே*
*செல்வம் கொழித்த செல்வநாயகமே*
*உம் சிந்தனைத் தடங்களிலும்*
*வாழ்வியல் தடங்களிலும்*
*எம் குட்டிப்பேனைகளை*
*பலமாகவே பதித்தெடுத்திருக்கின்றோம்*
*உமக்கொரு சிலையினையும்*
*உண்மையிலே சமூகமிது செய்திருக்க வேண்டும்*
*இதனை எமது பேனைகள் இன்று*
*எழுத்து மூலமாச் செதுக்கி முடித்திருப்பதனை*
*உமக்குச் சொல்லி அனுப்புகின்றேன்.*

* * *

ஆம்..... உம் வாழ்க்கைச் சரித்திரம்
எம் அறிவுக்கெட்டிய வரையில் இங்கே
எழுதப்பட்டு முடிந்ததிப்போ
அச்சேறிக் கொண்டிருக்கும் புத்தகத்தை
நல்லதொரு நாள்பார்த்து
வெளியிட்டு வைப்போம் இனி....
இதுவரைக்குமாவது உமது உயிரை இங்கே
விட்டுவைத்திருக்க வேண்டாமா?
கடவுளும், காலனும் செய்த கொடுமை கண்டு
சீறிச் சினந்து நிற்கிறோம் நாங்களின்று

* * *

சுந்தரத் தமிழோனே சுதந்திரப் போக்குடையோனே
மட்டக்களப்பிலும், மலையகப் பகுதியிலும்
கடல்கடந்து கனடா, இலண்டன் நாடுகளிலும்
உம் பாதங்கள் மீண்டுமொரு தடவையாவது
பதிவதனை நாம் பார்த்து மகிழவேண்டும்
இராமகிருஷ்ண மிஷன் அதிலும்
இந்து இளைஞர் மன்றத்திலும்
இன்னுமுள்ள சமய சமூக நிறுவனங்களிலும்
உம்மை மீண்டுமொரு தடவையாவது
நாமொன்றாய்க்கூடி சந்திக்க வேண்டும்

* * *

*செல்வநாயகம் என்னும் செல்வமே*
*கல்வியால் உயர்ந்த "சீதேவியே"*
*உம் புத்தக வெளியீட்டுக்காவது*
*கட்டாயமாக வந்துபோங்கள்*
*ஓரிரு வரிகளையாவது வாசித்துப் பாருங்கள்*
*இல்லையென்றால் இதனை*
*எமது இதயங்கள் நிச்சயமாகத்*
*தாங்கிக் கொள்ள மாட்டாது;*
*"எப்படி நலமா?" செப்பிடு ஐயா....*
*உமக்கொரு அஞ்சலும் அழைப்போலையும்*
*எழுதி இப்போது அனுப்புகின்றேன்*
*இரண்டையும் பார்த்திட மறந்திட வேண்டாம்*
*"இது வரைக்கும் என்னசெய்தாயென....?"*
*என்னை நொந்து கேட்டிட வேண்டாம்.*

**-கன்னிமுத்து வெல்லபதியான்-**

## 4.31 வாழ்க்கையின் வழிகளே பிள்ளையின் கல்வியாம்

கண்டனத்திடையே வாழும் பிள்ளை,
கண்டனம் செய்யவே கற்றுக் கொள்ளும்.
பகைமையினிடையே வாழும் பிள்ளை,
பலரையும் எதிர்க்கப் பழகிக் கொள்ளும்.
கேலிகளிடையே வாழும் பிள்ளை,
கூசவும் நாணம் கொள்ளவும் பழகும்.
பொறாமையினிடையே வாழும் பிள்ளை
குற்றவுணர்வு கொண்டிடப் பழகும்.
சகிப்புச் சூழலில் வாழும் பிள்ளை,
பொறுமை உணர்வினைப் போற்றிப் பயிலும்.
ஊக்குதலிடையே வாழும் பிள்ளை,
தன்னம்பிக்கை தான் கொளப்பயிலும்.
பாராட்டுச் சூழலில் வாழும் பிள்ளை,
நயக்கும் திறமையை நன்கு வளர்க்கும்.
நீதியினிடையே வாழும் பிள்ளை,
நியாய புத்தியைக் கற்றுக் கொள்ளும்.
காப்புணர்வுடனே வாழும்பிள்ளை,
விசுவாசத்தினை விளங்கிக் கொள்ளும்.
ஒப்புதலிடையே வாழும் பிள்ளை,
தன்மை மதிக்கும் தன்மையிற் சிறக்கும்.
மற்றையோர் மதித்திட நட்பில் வாழ் பிள்ளையோ,
இப்புவி அன்பினால் இயங்குதல் காணுமே.

**ஆசிரியர் சிரோமணி கனிஷ்ட வித்தியாலய அதிபராக இருந்தபோது அவரின் அலுவலக அறையில் வைக்கப்பட்டிருந்த வாசகங்கள்.**

## 4.32 மற்றவரிடம் பேசுவது எப்படி?

| | | |
|---|---|---|
| தாயிடம் | அன்பாகப் | பேசுங்கள்! |
| ஆசிரியரிடம் | பண்பாகப் | பேசுங்கள்! |
| சகோதரரிடம் | அடக்கத்தோடு | பேசுங்கள்! |
| சகோதரியிடம் | அளவோடு | பேசுங்கள்! |
| துணைவியிடம் | உண்மையாகப் | பேசுங்கள்! |
| குழந்தைகளிடம் | ஆர்வமாகப் | பேசுங்கள்! |
| உறவினரிடம் | பரிவோடு | பேசுங்கள்! |
| நண்பரிடம் | பணிவாகப் | பேசுங்கள்! |
| அதிகாரிகளிடம் | பணிவாகப் | பேசுங்கள்! |
| வியாபாரிகளிடம் | கறாராகப் | பேசுங்கள்! |
| தொழிலாளரிடம் | மனிதநேயத்துடன் | பேசுங்கள்! |
| அரசியல்வாதியிடம் | ஜாக்கிரதையாக | பேசுங்கள்! |
| கடவுளிடம் | மரியாதையாகப் | பேசுங்கள்! |

**பேசுங்கள்! பேசுங்கள்! ஆனால்?**

**புரிந்து பேசுங்கள்! புரியும்படி பேசுங்கள்!**

4.33

# வெற்றியின் இரகசியம்

அன்பு காட்டு, ஆனால் அடிமையாகிவிடாதே!

இரக்கங்காட்டு, ஆனால் ஏமாந்து போகாதே!

பணிவாய் இரு, ஆனால் கோழையாய் இராதே!

கண்டிப்பாய் இரு, ஆனால் கோபப்படாதே!

சிக்கனமாய் இரு, ஆனால் கஞ்சனாய் இராதே!

வீரனாய் இரு, ஆனால் போக்கிரியாய் இராதே!

சுறுசுறுப்பாய் இரு, ஆனால் பதட்டப்படாதே!

தர்மம்செய், ஆனால் ஆண்டியாகிவிடாதே!

பொருளைத்தேடு, ஆனால் பேராசைப்படாதே!

உழைப்பை நம்பு, ஆனால்

கடவுளை மறந்து விடாதே!

# பகுதி – O5

# ஆசிரியர் சிரோமணி பற்றிய நிகழ்வுகளின் நிழல்கள்

# பொருளடக்கம்

**பகுதி 05**


**ஆசிரியர் சிரோமணி பற்றிய நிகழ்வுகளின் நிழல்கள்**

5.1 ஆசிரியர் சிரோமணி பற்றிய நிகழ்வுகளின் நிழல்கள்

பின்னிணைப்பு




1942 இல் ஆசிரியர் சிரோமணியின் தாய், தந்தை, சகோதரி, சகோதரர்கள்







ஆசிரியர் சிரோமணியின் இளமைத் தோற்றங்கள்.



ஆசிரிய கலாசாலை சாரணர் பாசறையில் அதிபர் கந்தசுவாமி அவர்களுடன் இடப்புறத்தில் இருப்பவர்



1952 இல் நடந்த திருமண வைபவத்தின் போது




1973 இல் ஆசிரியர் சிரோமணியின் மனைவி, மக்களுடன்



ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெற்று ஆசிரியர் சிரோமணி பட்டம் பெற்ற நாளில் அன்பு மனைவியுடன் வீட்டில்.



அமரராகிவிட்ட ஆசை மகன் திலீபன்



உந்துருளியில் புறப்பட்டுவிட்ட சமூகத் தொண்டன்.




மகளின் திருமண
நிகழ்வில்



பெரிய மகன் சசிதரன் குடும்பத்துடன் கனடாவில்.




சிறிய மகன் சிறிகாந்தன் குடும்பத்துடன் லண்டன் மாநகரில்.



கனடாவில் நடந்த பேத்தியின் திருமணத்தில் மகன்மார்களுடன் தந்தையும் மகளும் இணைந்து கொண்டபோது.



மட்-றோட்டரிக்கழக தலைவர், அதிபர் த.செல்வநாயகம் அவர்களை அவரின் தன்னலமற்ற சேவைக்காக கழகம் சார்பில் பாராட்டிபரிசு வழங்குகிறார்.



கோட்டைமுனை
கனிஷ்ட
வித்தியாலயத்தில்
இடம்பெற்ற ஆசிரியர்
தினவிழாவில் ஓய்வு
பெற்ற அதிபர்
ஆசிரியர் சிரோமணி
பொன்னாடை
போர்த்திப்
பாராட்டப்படுகிறார்.



கோட்டைமுனை
கனிஷ்ட வித்தியாலப்
பொன்விழாவில்
மட்டக்களப்பு மாவட்டப்
பாராளுமன்ற உறுப்பினர்
கௌரவ. யோசப்
பரராசிங்கம்
பொன்னாடைபோர்த்திக்
கௌரவித்தார்.



2003 இல் இருவேறு பாடசாலைகளில் நடைபெற்ற ஆசிரியர் தினத்தில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட தந்தையும், மகளும் வீட்டில் மருமகனுடன்



கனடா - மட்டக்களப்பு சமூகம் சமூக சாகரன் விருது கையளித்தல்.



ஆசிரியர் சிரோமணியின் அகவை 80 இல் பேராசிரியர் சி.மௌனகுரு பொன்னாடை போர்த்துகின்றார். சி. ஆலாலசுந்தரம், ஜனாப் சாந்தி முகைதீன், காசுபதி நடராசா அருகிலிருக்கின்றனர். (2007.04.03)



மட்-சிவானந்தா தேசிய பாடசாலையின் பொன்விழாவின் போது பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்.



சர்வமத சமாதான ஒன்றியத்தின் பொங்கல் விழா நிகழ்வில் இனங்களின் ஐக்கியத்துக்காக பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்.



மகாவித்துவான் F.X.C.நடராசா அவர்களுக்கு இந்துகலாசார அமைச்சு இலக்கியச் செம்மல் விருது வழங்கிக் கௌரவித்தபோது அவர்சார்பாக பிரதமமந்திரி T.B.விஜயதுங்க அவர்களிடமிருந்து ஆசிரியர் சிரோமணி பெற்றுக் கொள்ளல். அருகில் கௌரவ இந்து கலாசார அமைச்சர் P.தேவராஜ் அவர்கள்.



கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் நடாத்திய சாரணர்
சின்னஞ்சூட்டு வைபவத்தின் போது.



கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற மாணவர்களின்
கைப்பணி கண்காட்சி ஒன்றின்போது.



கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய புகைப்பட கண்காட்சியின்போது.




கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய விளையாட்டுப்போட்டி ஒன்றில்.



கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய பரிசளிப்பு விழாவின்போது.



கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற கலை நிகழ்வு.



கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய புத்தக கண்காட்சி ஒன்றில்.




கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய சுற்றுலாவின் போது
கோயில் தரிசனம்.



கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய
பிரியா விடையின்போது மாணவர் கூட்டத்தினுள்.



கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய
பிரியாவிடையின்போது ஆசிரியர்களுடன்.



கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய பிரிவுபசார விழாவில்
வாழ்த்து மடல் பரிசளிக்கும்போது



கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற பிரிவுபசார
விழாவின்போது கழுத்து நிறைந்த மலர் மாலைகளுடன் ஆசிரியர் சிரோமணி.





கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய பிரியாவிடையின் போது ஆசிரியர் சிரோமணி பட்டம் வழங்கி கௌரவித்தபின்னர் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிருவாகக் குழுவினருடன் அதிபர் தம்பதிகள்.




விபுலானந்தர் கல்வி அபிவிருத்திச் சங்க (VEDS)
பரிசளிப்பு விழாவின்போது.



மட்டக்களப்பு இராமக்கிருஷ்ணமிசன் முன்றலில்.



ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலய நூற்றாண்டுவிழா 30.08.1997 மலர்விழா முதற்பிரதி ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்த ஜீ மகராஜ் அவர்களுக்கு மலர்தொகுப்பாசிரியர் ஆசிரியர் சிரோமணி அவர்களால் வழங்கப்படுகின்றது.



19.07.99 அன்று சுவாமி விபுலானந்தர் சிலைக்கு மாலை அணிவித்தல்.



26.09.99 அன்று இருதயசத்திரசிகிச்சை நம்பிக்கை நிதியத்திற்கு மனைவியின் நினைவாக வழங்கிய நிதி ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்த ஜீ மகராஜ் அவர்களிடம் கையளிக்கப்படுகிறது.



ஸ்ரீமத் சுவாமி அஜராத் மானந்த ஜீ மகராஜ் அவர்களுடன்.




மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்.





சுவாமி விபுலாநந்தர் முதியோர் இல்ல முதியவர்கள்.



மட்டக்களப்பு
ஸ்ரீ வீரகத்தி
விநாயகராலய
திருப்பணியில்




ஆரையம்பதி திருநீலகண்ட பிள்ளையாரின் திவ்விய தரிசனத்துக்காக.





ஆரையம்பதி திருநீலகண்ட விநாயகரின் நவக்கிரக கோயில் அடிக்கல் நடும் வைபவத்தில்.





கனடா கந்தசுவாமி கோயிலின் முன்றலில்.



லண்டனில் உள்ள கோயில் ஒன்றில்.





உலகில் உள்ள அதிஉயர் கோபுரத்தை கனடாவில் பார்வையிட்டபோது அங்கு காணப்பட்ட கல்வெட்டு.




கனடாவில் கரடி பொம்மையுடன்



லண்டனில் கிறின்விச் நேரம் பதியும் இடத்தில்.



லண்டனிலுள்ள மகாராணி மாளிகையின் முன்னால்.



மெழுகுப் பொம்மை அப்பலோ வீரருடன் தந்தையும் மகனும்.

# பின்னிணைப்பு

# மரண அறிவித்தல்

| மண்ணுலகு | | விண்ணுலகு |
|---|---|---|
| 1927 | | 2010 |
| 04 | | 02 |
| 03 | | 11 |



மட்டக்களப்பு, ஆரையம்பதியை பிறப்பிடமாகவும், எல்லை வீதி திசவீரசிங்கம் சதுக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

ஆசிரியர் சிரோமணி

## திரு.தம்பிப்பிள்ளை செல்வநாயகம்

(ஓய்வு பெற்ற அதிபர், கோட்டைமுனை, கனிஸ்ட வித்தியாலயம், மட்டக்களப்பு)

அவர்கள், **11.02.2010** வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்

அன்னார், அமரர்களாகிய **தம்பிப்பிள்ளை பொன்னம்மா** தம்பதிகளின் அன்பு மகனும்,

அமரர்களாகிய **வேல்முருகு, பாக்கியம்** தம்பதிகளின் அன்பு மருமகனும்,

காலஞ்சென்ற **ருத்திராம்பாள்** அவர்களின் அன்புக் கணவரும்,

**வினோதா** (ஓய்வு பெற்ற ஆசிரியை) **சசிதரன்** (கனடா)

(காலஞ்சென்ற **திலீபன்**), **ஸ்ரீகாந்தன்** (U.K)

ஆகியோரின் அன்புத் தகப்பனாரும்,

(காலஞ்சென்ற **ஜெகநாதன்**), **நளினி** (கனடா), **ஜயந்தி** (U.K)

ஆகியோரின் அன்பு மாமனாரும்,

(காலஞ்சென்றவர்களான **மாரிமுத்து, இராசரெத்தினம்**)

**ராஜேஸ்வரன்** (ஓய்வு பெற்ற M.L.T), ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

**அஜனி, பகீரதன், விசாந்த், கோபிகா, தீப்டிலாந்த், அருந்த்**

ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் 14.02.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 4.00 மணிக்கு மட்டக்களப்பு, எல்லை வீதி, திசவீரசிங்கம் சதுக்கம், 6ம் குறுக்கு, 37 இலக்க இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கள்ளியங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**


**37, 6 ம் குறுக்கு,**
*திசவீரசிங்கம் சதுக்கம்,*
*எல்லை வீதி, மட்டக்களப்பு.*
**065 - 2222987**

**12.02.2010**

**- தகவல் -**
**குடும்பத்தினர்.**

ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு. T.P: 2222076

# கண்ணீர் அஞ்சலி



# அமரர். த. செல்வநாயகம்

(போசகர் ஸ்ரீ திரு நீல கண்ட விநாயகர் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம் - ஆரையம்பதி
முன்னாள் அதிபர், எழுத்தாளர், பல்வேறு பொது அமைப்புக்களின் உறுப்பினர்)

ஆரையூர் மண்ணில்
தம்பிப்பிள்ளைக்கும் பொன்னம்மாவிற்கும் மகனாக மூன்று உடன் பிறப்புக்களுடன் பிறந்து,
நான்கு பிள்ளைகளை பெற்றெடுத்து ஆசிரியப் பணியுடன்
மட்டுநகரில் நாடு போற்ற வாழ்ந்தவர்.
குமாரசாமி ஐயரின் செங்குந்தர் குல புலமைத்துவ தமிழ் மரபின் தொடர்ச்சியின் ஒரு
மைல்கல்லாக **அமரர். த. செல்வநாயகம்** விளங்கி எமக்கெல்லாம் பெருமை சேர்ந்தவர்
தனது குல தெய்வமான திருநீலகண்ட விநாயகரிடத்து அளவிட முடியாத அன்பும் பக்தியும்
பூண்டு ஆலய புனரமைப்புக்கும் திருகுட முழுக்கும் அதன் தொடர்ச்சியாக நவக்கிரக
ஆலயத்திற்கும் என அள்ளி அள்ளி வழங்கிய ஒரு வள்ளல் பெருந்தகை ஆவார்.
எந்த சமூகப் பணியானாலும் பின் நிற்காது முன் நின்று முதல் மனிதனாக
தன்னை இணைத்துக் கொள்வார்.
தனக்கு சரியெனப்பட்டதை முகஸ்துதி பார்க்காது நேர்மையாக எடுத்துரைக்கும் நேர்மையாளன்
பண்டிதமணியென்றால் சி.கணபதிப்பிள்ளைக்கும், புலவர் மணியென்றால் பெரிய
தம்பிப்பிள்ளைக்கும் சிறப்புப் பெறுவது போல ஆசிரியஸ்ரீரோஜஸ்மணி யென்றால் அது
செல்வநாயகம் தான் என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்தவர்.
பட்டம் பதவி நிறைந்த பலரை உருவாக்கியதுடன் பல்வேறு பதவிகளுடன்
உள்ளவர்களிடத்து அன்புடனான உறவைப் பேணி பணிகள் பல செய்தவர்.
ஆசிரிய, பொதுப்பணிக்கென்றே தன்னை இறுதிவரை அர்ப்பணித்து அள்ளி அள்ளி
வழங்கிய பண்பாளனின் இழப்பு குடும்பத்திற்கு மட்டுமன்றி இந்த சமூகத்திற்கும்
மட்டக்களப்பு மண்ணுக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென அவரின் குல தெய்வமான
ஸ்ரீ திருநீலகண்ட விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

ஆரையம்பதி.

**ஸ்ரீ திருநீல கண்ட விநாயகர்**
**ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய**
**பரிபாலன சபையினரும் செங்குந்தர் குலமக்களும்.**

திரு கின் மட்டக்களப்பு. 065-2223204

## மனம் நிறைந்த சுமைகளுடன்



# விழி நீர் அஞ்சலி



# அமரர். த. செல்வநாயகம்

(போசகர் ஸ்ரீ திரு நீல கண்ட விநாயகர் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம் - ஆரையம்பதி
முன்னாள் அதிபர், எழுத்தாளர், பல்வேறு பொது அமைப்புக்களின் உறுப்பினர்)

அறிவு குழைந்து அழகூட்டும்
அன்பின் பெருமை அகமூட்டும்
செறிவார் தெய்வ சிந்தனையுள்
சிந்தை நிறைந்தோர் வாழ்பதியாம்
திறனோர் தெளிவில் புகழோங்கும்
சீரார் ஆரையூர் பொற்பதியில்
அறிவின் பெரியோய் நின் புகழ் வீச
ஐயன் நீலகண்டன் அருட்துணையே!

தவம்சேர் தம்பிப்பிள்ளை நன்மனையாளின்!
தவத்தின் பயனே பெரும் பயனாய்
உவக்கும் பணிசெய் என் குலத்தோய்
சிவம் பெரும் ஆசிரியசிரோன்மணியே

மகா வித்துவ பெருங்கடலில்
துறைதோய்ந்தெழுந்த முகிலெனவே
மகா அனுபவக் கல்விப் பயனில்
மனங்கொண்டளைந்த சிரோன்மணியே!
தாகமுயரெம் ஊர் நற்பணியில்
தலைவ நின்பணி போற்றுகின்றோம்
ஆக நற்பணிகள் அதிசயமாய்
அன்று முதலெழிக் கீந்தளித்தாய்

திருநீலகண்ட செல்வக்கணபதியின்
சிறப்பார் குடமுழுக்கு சாந்தியுயர்
உருகொள் விழா பொலிந்து தோன்ற
உத்தம உன் பணிதனை வாழ்த்தி
கருக் கொள் கவிதை ஆரமிது
கனிவாள் மாரி மகள் சார்ந்து
பெருமை செறிந்த பெரும் குடும்ப
பெரியோய் நின்பணி ஓங்குகவே!

உயரத்திலும் உள்ளத்திலும் ஓங்கி வளர்ந்து
உயிர் நீத்து நின்னுடம்பு ஓய்ந்தாலும்
உங்கள் புகழுடம்பு ஒரு போதும் ஓயாதைய்யா
வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடம் போல
வளருகின்ற சமுதாயத்திற்கு வழி காட்டியதை
எப்படித்தான் மறப்போம்
தெளிவற்றுத் தவிக்குதய்யா எம் சமூகம்

நாணயமாக, நற்பணிகள் பல அளவிடா வகையில்
நல்கிய எம் மூத்த பெருந்தகை இறப்பதற்கே
பிறக்கின்ற நாங்களிங்கு மறுக்கின்றோம்
உலகமதை மாயையென்று மறக்கின்றோம்
மரணமது வந்த போதும் உணர்வு கொண்டு
உளம் தேறி பிரிந்தவரின்
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

கண. யோகராசா
தலைவர்.
ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர்,
ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய
செங்குந்தர் வீதி, ஆரையம்பதி.

நியூ லீக் மட்டக்களப்பு. 065-2222304

அமரராகிவிட்ட ஆசிரியர் சிரோமணி

## த. செல்வநாயகம் அவர்களின் மறைவுக்காக

### மட்டக்களப்பு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றத்தின்

# அஞ்சலி



# அமரர். த. செல்வநாயகம்

அமரர் ஆசிரியர்சிரோமணி த. செல்வநாயகம் தனது பட்டத்திற்கேற்ப, ஆசிரியர்கள் மத்தியில் ஓர் உதாரண புருஷராகத் திகழ்ந்தவர். கல்வி போதிப்பதிலும் கல்வி நிர்வாகத்திலும் அவர் முத்திரை பதித்தவர். அதனால் கல்வித்திணைக்களத்திலும், கல்விமான்கள் மத்தியிலும் பெருமதிப்பைப் பெற்றவர்.

பண்டிதர் செ. பூபாலபிள்ளை, புலவர் மணி ஏ. பெரிய தம்பிப்பிள்ளை, மகாவித்துவான், FXC நடராசா முதலியோருடன் நெருங்கிப் பழகி அவர்களது அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டவர்

ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெற்றபின் அவர் சமய சமூகப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம், புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம், மட்டக்களப்பு முதியோர் இல்லம் முதலிய அமைப்புக்களில் செயலாளராக இருந்து, தனித்துவமான பல பணிகளை ஆற்றியவர்.

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் செயலாளராகப் பணி ஆற்றிய போது இந்துமத விழிப்புணர்வுக்கான பல செயற்திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தியவர். புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றத்தின் செயலாளராகக் கடமை ஆற்றிய போது "பாலைக்கலி" விபுலானந்தர் மீட்சிப்பத்து" முதலிய நூல்களை மன்றத்தின் சார்பாக வெளியிட்டவர்.

மட்டக்களப்பு முதியோர் இல்லத்தின் செயலாளராக கடமை ஆற்றிய காலத்தில் இல்லத்தின் புதிய கட்டிடம் அமைப்பதற்கும் இல்லத்துக்கு அன்பர்களின் உபயம் கிடைக்கும் ஏற்பாட்டைச் செய்தவர்.

ஆசிரியர்சிரோமணி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை தன் சொந்த வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் இறுக்கமாகக் கடைப்பிடித்ததுடன் எந்த ஒரு பணியையும் "செய்வன திருந்தச் செய்" என்ற முது மொழிக்கேற்பச் சிறப்பாகச் செய்தவர்.

அன்னார் புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை நினைவுப் பணி மன்றத்துக்கு ஆற்றிய சேவைகளை மன்றம் பாராட்டி நினைவு கூருகின்றது. அவரது மறைவு தமிழ்கூறும் நல்உலகிற்கு பேரிழப்பாகும்.

அமரர் ஆசிரியர்சிரோமணியின் மறைவினால் துயருறும் குடும்பத்தாருக்கு புலவர்மணி நினைவுப் பணிமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**13.02.2010**

**புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை**
**நினைவுப்பணி மன்றம்.**
**மட்டக்களப்பு.**

*Yathavan's Commu.... Tel : 065 - 2223336*

# RAMAKRISHNA MISSION

(CEYLON BRANCH)

ASHRAMA & CHILDREN'S HOMES,

RAMAKRISHNAPURAM, BATTICALOA, SRI LANKA.

T.P : 065 - 2222752, E-mail rkmbat@eureka.lk


## அனுதாபச் செய்தி

ஆசிரியர் சிரோமணி அமரர் தம்பிப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் இராம கிருஷ்ணமிசனுடன் மிகவும் நெருக்கமான தொடர்பினைக் கொண்டவர். அன்னார் இராம கிருஷ்ணமிசன் மாணவர் இல்ல பவளவிழாச்சபையின் ஒரு உறுப்பினராக இருந்து, பவளவிழா சிறப்புற அமைய தன்னை அர்ப்பணித்து உழைத்த பெரியவர். சுவாமி விபுலானந்த நூற்றாண்டு விழாச்சபையிலும் இருந்து அரும்பணியாற்றிய தொண்டர்.அது மாத்திரமன்று இராம கிருஷ்ணமிசனில் நடைபெறும் ஜெயந்தி விழாக்களிலும் அல்லது எந்த நிக்ழ்வாக இருந்தாலும் குறித்த நேரத்திற்கு வருகை தந்து நிகழ்வு முடியும் வரை கலந்து சிறப்பிப்பவர்.நேர்மை,நீதி,தியாகம்,அர்ப்பணிப்பு கொண்டவரான அமரர், அவர்கள் சிவானந்தா வித்தியாலயத்தின் பழைய மாணவராவார்.

அவரிடம் மாணவனாகக் கல்விபயிலும் பாக்கியம் எனக்கு கிடைத்தமையிட்டு நான் பெருமையடைகின்றேன்.அன்னார் வெள்ளை வேட்டியும்,வாலாமணி சட்டையும், நிமிர்ந்த நடையும்,நேரிய பார்வையும் கொண்ட ஆசிரியர் சிரோமணி, ஆன்மீகப்பணிக்கும் ஆசிரியப்பணிக்கும் தம்மை அர்ப்பணித்தவர்.ஆசிரிய சேவையை உயர்வாக மதித்து அளப்பரிய சேவையை மாணவ சமுதாயத்திற்கு ஆற்றியதால்,"ஆசிரியர் சிரோமணி" எனும் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. அவரின் சேவை இம்மாவட்டத்துக்கு கிடைத்தமை பெரும் பேறாகும்.

"பழுது பட்ட துணிகளைக் களைந்துவிட்டு மனிதன் புதியவைகளைப் போட்டுக் கொள்வது போன்று,

ஆத்மா பழைய உடலங்களை நீத்துப் புதியன புகுகின்றது"

என பகவத்கீதை பகர்வதை அறிந்திருந்த போதிலும், ஆசிரியரின் மறைவு செய்தி கேட்டு பெரும் துயர்கொண்டோம்.

இத்துயரச்செய்தி கேட்டதும்,நானும் குருகுல மாணவர்களும்,12.02.2010 அன்று அன்னாரின் இல்லத்திற்குச் சென்று ஆத்மசாந்திக்கு பிரார்த்தனை செய்தோம்.அவருக்குப்பிடித்தமான "வெள்ளை நிற மல்லிகையோ,வேறெந்த மாமலரோ" என்ற விபுலானந்த அடிகளாரது பாடலைப்பாடி எமது அஞ்சலியை செலுத்தினோம்.இன்று அன்னார் எம்மை விட்டுப்பிரிந்து இறை சந்நிதியை அடைந்து விட்ட இவ்வேளையில். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ,இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரை இழந்து தவிக்கும் அவரின் குடும்பத்தினருக்கு இறைவன் நல்லாசிகளையும்,இப்பேரிழப்பைத் தாங்கக்கூடிய மனத் தைரியத்தையும், ஆறுதலையும் வழங்க வேண்டுமென பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பிராத்திக்கின்றேன்.

குருதேவர் தொண்டில்,

சுவாமி அஜராத்மானந்தா

(சுவாமி அஜராத்மானந்தா)

மட்டக்களப்பு மாவட்ட
தமிழ் எழுத்தாளர் பேரவை நடாத்தும்
அரங்கம் / இரண்டு

# அஞ்சலிக் கூட்டம்

காலஞ்சென்ற ஆசிரிய சிரோமணி

**த. செல்வநாயகம்**

அவர்கட்கு

காலம் :- 28.02.2010 காலை 10.00 மணி

இடம் :- மட்/பொது நூலககேட்போர் கூடம்
(பொது நூலகம், மட்டக்களப்பு.)

தலைமை :- அன்பழகன் குரூஸ்
(தலைவர். மட்/மா.த.எ.பேரவை)

இரங்கலுரை :- பேராசிரியர் சி. மௌனகுரு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



**மட்/மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவை**
**மட்டக்களப்பு.**

பிரசுரம் அன்பளிப்பு - ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு. T.P.2222076

**PSA Shivananda Vidyalaya (UK)**
Presents
**15TH KALACHARA MALAI 2010**

# மட்/சிவானந்த வித்தியாலயம்

பெருமையுடன் வழங்கும்

# 15வது

# கலாச்சார மாலை 2010

**Saturday**

**1st May 2010**



PRESTON MANOR HIGH SCHOOL
**Carlton Avenue East**
**Wembley Middx HA0 8NA**

## அமரராகிவிட்ட "ஆசிரியர் சிரோமணி" திரு.த.செல்வநாயகம் அவர்களின் நினைவு கூரல்.

அமரர் ஆசிரியர் சிரோமணி திரு.த.செல்வநாயகம் தனது பட்டத்திற்கேற்ப ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியில் ஓர் உதாரண புருசராகத் திகழ்ந்தவர். கல்வி போதிப்பதிலும், கல்வி நிர்வாகத்திலும் அவர் முத்திரை பதித்தவர். அதனால் கல்வித் திணைக்களத்திலும், கல்விமான்கள் மத்தியிலும் பெருமதிப்பைப் பெற்றிருந்தவர்.

ஆசிரியப் பணியில் இருந்து கொண்டும், ஓய்வு பெற்ற பின்னரும் சமய சமூக பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம், மட்டக்களப்பு முதியோர் இல்லம் முதலிய அமைப்புக்களில் செயலாளராக இருந்து தனித்துவமான பல பணிகளை ஆற்றியவர்.

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் செயலாளராகப் பணியாற்றிய போது இந்து மத விழிப்புணர்வுக்கான பல வெற்றிடத்திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தியவர். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றத்தின் செயலாளராகக் கடமை ஆற்றியபோது "**பாலைக் கலி, விபுலானந்தர் மீட்சிப்பத்து**" முதலிய நூல்களை வெளியிட்டவர்.


மட்டக்களப்பு முதியோர் இல்லத்தை அமைப்பதில் முன்னின்று உழைத்து அதன் செயலாளராகக் கடமையாற்றிய காலத்தில் இல்லத்தின் புதிய கட்டடம் அமைப்பதற்கும், இல்லத்திற்கு அன்பர்களின் உபயம் கிடைக்க ஏற்பாட்டையும் செய்தவர்.

ஆசிரியர் சிரோமணி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை தன் சொந்த வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் இறுக்கமாகக் கடைப்பிடித்ததுடன் எந்த ஒரு பணியையும் "செய்வன திருந்தச் செய்" என்ற முதுமொழிக்கேற்ப சிறப்பாகச் செய்தவர்.

சிவானந்த மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் என்ற முறையிலும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு தனது ஆசிரிய சமூகப் பணியாற்றியவர் என்ற முறையிலும் சிவானந்த பழைய மாணவர் மன்றம் இவரை நன்றியுடன் நினைவு கூருகின்றது.

**தொடர்புகட்கு: ஸ்ரீகாந்தன் -07803 791 281(U.K.)**

# பதினாறாம் நாள் நினைவும் நன்றி நவிலலும் 26.02.2010



ஆசிரியர்சிரோண்மணி

## திரு.தம்பிப்பிள்ளை செல்வநாயகம்

(ஓய்வு பெற்ற அதிபர் கோட்டை முனை கனிஷ்ட வித்தியாலயம்-மட்டக்களப்பு)

கடந்த 11.02.2010 வியாழக்கிழமை எம்மை விட்டுப் பிரிந்த தந்தையின் பிரிவுச் செய்தியறிந்து எங்களோடு நேரடியாகவும், தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்தும் பூதவுடலுக்கு மலர் வளையம் அணிவித்தும் மேலும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்

பிள்ளைகள் விநோதா, சசிதரன், சிறிகாந்தன்

தகவல்: திருமதி விநோதா ஜெகநாதன்-065-2222987

# எங்கள் நன்றிக்குரியோராக.....

* இந்நூல் உருவாக்கம் பெறுவதற்கு மூலகாரணராக அமைந்து நெறியாழ்கை செய்த கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வி, பிள்ளை நலத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.செல்வராஜா அவர்கள்.

* இந்நூலை திறம்பட உருவாக்கித் தந்த நூலாசிரியர் சரவணமுத்து நவேந்திரன் (கன்னிமுத்து வெல்லபதியான்) அவர்கள்.

* இதன் உருவாக்கத்துக்காக பக்கபலமாக முன்னின்றுழைத்த துணை ஆசிரியர் சரவணமுத்து கணேசமூர்த்தி (சரவணன்) அவர்கள்.

* இந்நூலை வடிவமைப்பது தொடர்பில் ஆலோசனைகள் நல்கிய திரு.ச.மணிசேகரன் (ஆசிரியர்), திரு.காசுபதி நடராசா அவர்கள்.

* ஆசிச் செய்திகளை அழகுற வழங்கி நூலை அலங்கரித்த சமயப் பெரியோர்கள், கல்விமான்கள்.

* எம் தந்தையின் ஆளுமைகளை தம் கைவண்ணத்தாலே வெளிப்படுத்திக் காட்டிய கட்டுரையாளர்கள்.

* இவ் வெளியீட்டுருவாக்கத்துக்கு உதவிய அன்பர்கள், நண்பர்கள்.

* எம் தந்தை வயோதிபம் கனிந்து சுகயீனமுற்றிருந்த வேளையில் தோளோடு தோள்நின்றுதவிய உறவுகள்.

* தனித்து நின்றபோதும் தளராது உதவிகளை நல்கிய நட்புள்ளங்கள்

* எம் தந்தை சுகயீனமுற்றிருந்த வேளையில் மருத்துவப் பணிகளையாற்றிய மட்/நியூ பயனியர் (NPH) வைத்தியர்கள், தாதிமார்கள்.

* இந்நூலை அழகுற அச்சேற்றிய மட்டக்களப்பு அரசடி **ஆதவன் அச்சகத்தார்.**

* எம் தந்தையின் இன்னுயிர் பிரிந்த துயரம் மாறுவதற்கிடையில் அஞ்சலிக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்து திறம்பட நடாத்தி முடித்த மட்டு. மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவையாளர்கள்

* அந்த அஞ்சலி நிகழ்விலே இரங்கலுரையினை மிகவும் சிறப்பான முறையிலே நிகழ்த்திப் பெருமைப்படுத்திய கிழக்குப் பல்கலைக்கழகத்து நுண்கலைத்துறைப் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள்.

* எம் தந்தையாருக்காக இடம்பெற்ற அந்த அஞ்சலி வைபவத்துக்காக மனமுவந்து மண்டப ஒழுங்கினை வழங்கிய மட்டக்களப்பு பொதுநூலக நிர்வாகிகள்.

* எம் தந்தையின் மரணச் செய்திகேட்டு துயரம் மிகவுற்று எழுத்து மூலமாக கண்ணீரை காணிக்கையாக்கியிருந்த பொது அமைப்பாளர்கள், நலன் விரும்பிகள்.

* எம் தந்தையின் இறுதி நிகழ்விலே கலந்து கொண்ட பல்துறைசார்ந்த பெரியோர்கள், ஆர்வலர்கள், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், பொது மக்கள்.

* இவ்வெளியீட்டு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த அன்புக்கினிய ஏற்பாட்டாளர்கள்.

* நூல் வெளியீடு நிகழ்வுக்காக மண்டப வசதிகேட்டுச் சென்றபோது இன்முகத்துடன் மண்டபம் நல்கி விழா சிறப்புற அமைய துணைநின்ற மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

* அழைப்பினை ஏற்று நிகழ்வுக்கு வருகை தந்திருந்த அனைவருக்கும்.

* மற்றும் தொடர்புள்ள அனைவருக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

**-பிள்ளைகள்-**

**திருமதி. வினோதா ஜெகநாதன்**

**திரு. சசி செல்வநாயகம்**

**திரு. சிறி செல்வநாயகம்**

**065-2222987**

**37, திசவீரசிங்கம் சதுக்கம்,**

**6ம் குறுக்கு, எல்லை வீதி,**

**மட்டக்களப்பு.**

## நூலாசிரியரைப் பற்றி.....



**01. முழுப் பெயர்** : திரு.சரவணமுத்து நவேந்திரன்

**02. பெற்றோர்** : தாய் - கன்னியம்மை
தந்தை - சரவணமுத்து

**03. பிறந்த திகதி** : 1978-03-02

**04. சகோதரர்கள்** : திரு.ச.கணேசமூர்த்தி (பெரியண்ணா - அதிபர்)
திரு.ச.பஞ்சாட்சரம் (சின்னண்ணா)
திருமதி.வி.கலாராணி (அன்பு அக்கா)
திரு.சி.விக்னேஸ்பரன் (அன்பு அத்தான்)

**05. பிறந்த பதி** : விவேகானந்தபுரம், வெல்லாவெளி.

**06. ஆரம்பக்கல்வி** : மட்/திருக்கொன்றை முன்மாரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. (விவேகானந்தபுரம்)

**07. இடைநிலைக்கல்வி:**
மட்/வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயம்.
மட்/கோவில்போரதீவு விவேகானந்தா மகா வித்தியாலயம்
மட்/முனைத்தீவு சக்திமகா வித்தியாலயம்
மட்/அம்பிளாந்துறை மகா வித்தியாலயம்

**08. உயர்கல்வி** :
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்
(தேசிய பாடசாலை)

**09. வாழ்ந்தபதி :**
பழைய பொலிஸ் நிலைய வீதி, **எருவில்,** களுவாஞ்சிக்குடி.

**10. புகுந்த பதி :**
சோமநாதர் வீதி, **பாண்டிருப்பு - 01**, கல்முனை.

**11. வாழ்க்கைத் துணைவி :** சதானந்தராஜா நூர்மதி
**ஏக புதல்வி :** நவேந்திரன் பவேந்தினி.

**12. கல்வித் தகமை :**
கலைமாணி (பேராதனைப் பல்கலைக்கழகம் - வெளிவாரி)

**தொழில் தகமை :**
பட்டமேற்கல்வி டிப்ளோமா
(இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)

தற்போது கல்வி முதுமாணி கற்கை நெறி
(2009/2010 - கிழக்குப் பல்கலைக்கழகம்)

**13. பதவி :** ஆசிரியர்.

**14. படிப்பிப்பகம் :** மட்/மாங்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை,
திருமலை வீதி, மாங்கேணி, வாகரை.

**15. எழுத்துலக பிரவேசம் :**
* 1994-95 காலப்பகுதிகளில் ஆரம்பம்.

* கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், சஞ்சிகை விமர்சனங்கள், நகைச்சுவைகள், வாழ்வியல் பற்றிய வைரவரிகள், துணுக்குகள், சிறுவர் பாடல்கள் - எழுதிய / எழுதிக் கொண்டிருக்கும் ஆக்கங்கள்.

* பேச்சு, நாடகம், விவாதம், ஓவியம் - இவற்றிலும் நாட்டம்.

**16. ஆக்க ஊக்கம் தந்த பத்திரிகைகள்**

வீரகேசரி, தினமுரசு, தினகரன், தினக்குரல், சுடர்ஒளி, நவமணி, தினக்கதிர், தமிழ் அலை, எங்கள் தேசம், மெட்ரோ நியூஸ், மித்திரன், உதயன் (யாழ்ப்பாணம்), வலம்புரி (யாழ்ப்பாணம்) மற்றும் இன்னும் சில....

**17. ஆக்கங்கள் எழுதப்பட்டுள்ள சஞ்சிகைகள் :**

**உள்நாட்டுச் சஞ்சிகைகள்.**

செங்கதிர் (மட்டக்களப்பு), ஞானம் (கொழும்பு), தாயகம் (யாழ்ப்பாணம்), நீங்களும் எழுதலாம் (திருகோணமலை), தென்றல் (மட்டக்களப்பு), கலை முகம் (யாழ்ப்பாணம்), வடம் (இரத்தினபுரி), கவிஞன் (மட்டக்களப்பு), ஓசை (மூதூர்), ஓலை (கொழும்பு), பெருவெளி (அக்கரைப்பற்று), மல்லிகை (கொழும்பு), கதிரவன் (மட்டக்களப்பு), மறுகா (ஆரையம்பதி), சமாதானம் (மருதமுனை), சங்கதி (அக்கரைப்பற்று), படிகள் (அனுராதபுரம்), கொழுந்து (கண்டி), தொண்டன் (மட்டக்களப்பு), இருக்கிறம் (கொழும்பு), மூன்றாவது மனிதன் (வெல்லம்பிட்டிய), மூன்றாவது கண் (மட்டக்களப்பு), ஜீவநதி (யாழ்ப்பாணம்), கிழக்கொளி (கி.ப.கழகம்), மருதம் (போரதீவுப்பற்று பிரதேச செயலகம்) விழுது (மட்/வெல்லாவெளி க.ம.வித்தியாயலம்), உதயம் (களுவாஞ்சிக்குடி பொது நூலகம்), மாணவர் விடியல் (கொழும்பு), செந்தூரம் (தினகரன் இலவச இணைப்பிதழ்), அகவிழி (கொழும்பு), கூர்மதி (கல்வி அமைச்சு), கவின் தமிழ் (மாகாணக்கல்வி அமைச்சு).

**வெளிநாட்டுச் சஞ்சிகைகள்.**

இனிய நந்தவனம் (தென் இந்தியா), காற்றுவெளி (லண்டன்), மௌனம் (மலேசியா), உயிர் நிழல் (பிரான்ஸ்), காலச்சுவடு (இந்தியா), தீராநதி (இந்தியா), உயிர்மை (இந்தியா)

**18. புனைபெயர்கள்:**

கன்னிமுத்து வெல்லபதியான், கன்னி முத்து தமிழேந்திரன், கன்னிமுத்து நவோதயன், சரஸ்வதி புத்திரன், பாரதி புத்திரன்.

**19. சில முக்கிய பதிவுகள்**

* பிரதேச பத்திரிகை நிறுவனமொன்றில் இலக்கியப் பகுதிக்கான ஆசிரியராக இரு வருடங்கள் கடமையாற்றியமை.

* களுவாஞ்சிக்குடி பொது வாசிகசாலை வாசகர்வட்ட செயலாளராக சிறிது காலம் செயற்பட்டமை, 2007 இல் "**உதயம்**" சஞ்சிகை வெளிவர துணை செய்தமை.

* மட்/மாங்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் 2007 இல் வாணி விழாவன்று "**கலைமகளே கல்வியைத் தா**" என்னும் மாணவர் கவிரயங்கம் நடாத்தி அதில் கலந்து கொண்ட ஆறு மாணவர்களுக்கும் தலா 100 ப்படி 600/= பணப்பரிசு கொடுத்து பாராட்டிக் கௌரவித்தமை.

* பாடசாலை மாணவர்களை ஆக்கங்கள் எழுதத் தூண்டி அவற்றை வீரகேசரி, மித்திரன், தினகரன் பத்திரிகைகளின் சிறுவர் பகுதிகளுக்கு சொந்தச் செலவில் அனுப்பி பிரசுரித்தமை.

* மருதூர் வானின் ("**சமாதானம்**" - சஞ்சிகை) இரண்டு கவிதை அரங்குகளில் கலந்து கவிதை பாடிச் சிறப்பித்தமை.

* 2007 இல் சக்தியின் இசை இளவரசர்கள் நிகழ்ச்சியில் கொழும்பில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்விலும், கண்டியில் இடம்பெற்ற முதற்கட்ட நிகழ்விலும் பாடலாசிரியர் போட்டியில் கலந்து கொண்டமை.

* கிழக்குப் பல்கலைக் கழகத்தின் **"உலக நாடக தினவிழா 2005"** பற்றிய விமர்சனத்தினை தொடர்ந்து ஆறு வாரம் பிரதேச பத்திரிகையொன்றில் உயிரோட்டத்தோடு எழுதி பலராலும் பாராட்டப்பட்டமை.

* தினமுரசுப் பத்திரிகை 700வது வெற்றி முரசை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடாத்திய கவிதைப் போட்டியில் **"யுத்தம் ஏற்படுத்திய சமூகத் தாக்கம்"** என்னும் மரபுக்கவிதையினை எழுதி முதலாம் இடத்தினையும், 2500/= பணப் பரிசினையும், பாராட்டுச் சான்றிதழையும் பெற்றமை.

* மருதூர் வாணரின் **"சமாதானம் 14"** சஞ்சிகை வெளியீட்டினை முன்னிட்டு நடாத்திய கவிதைப் போட்டியில் இரண்டாம் இடத்தினையும் 200/= பணப்பரிசினையும், நற்சான்றிதழையும் பெற்றமை.

* **"மூன்றாவது மனிதன்"** சஞ்சிகை 2006 இல் நடாத்திய இலங்கைத் தமிழ் படைப்பிலக்கியப் போட்டியில் கவிதை, சிறுகதைப் போட்டிகளில் பங்குபற்றியமை.

* மாணவப் பருவத்தில் பாடசாலை மட்ட, பிரதேச மட்ட, மாவட்ட மட்ட பல்வேறு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்று நற்சான்றிழ்களையும், பரிசில்கைளயும் பெற்றுக் கொண்டமை.

* பிரதேச, தேசிய, சர்வதேசிய கவிதை, கட்டுரை, ஆய்வுக்கட்டுரை, சிறுகதை போட்டிகளில் பங்குபற்றியுள்ளமை.

* இலங்கை வர்த்தக சேவை, தென்றல் வானொலி, தேசிய சேவை, சக்தி எப்.எம். வானொலி ஆகியவற்றுக்கு ஆக்கங்கள் எழுதி அவை ஒலிபரப்பப்பட்டுள்ளமை.

* இவை எல்லாவற்றுக்கும் மேலாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கைகள் நிறுவனம் 2008 இல் எடுத்த சுவாமி விபுலானந்தர் பெருவிழாவில் கலைஞர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வில் இலக்கியத்துக்கான சுவாமி விபுலானந்தர் இளம் விருதினைப் பெற்றுக் கொண்டமை.

**20. இலட்சியம் :**

கல்வியையும், கலையையும் இரு கண்களாகக் கொண்டு இவை இரண்டின் வழியிலும் வாழ்வில் உயர்வடைதலும், சமூகத்துக்கு நற்சேவை செய்தலும் ஆகும்.

**திருமதி.வினோதா ஜெகநாதன்.**
**(ஓய்வுபெற்ற கணித ஆசிரியை)**
**மட்/இ.கி.மி. விவேகானந்த வித்தியாலயம்.**
**மட்/இ.கி.மி. சிவானந்த வித்தியாலயம்.**
**மட்/புனித மிக்கேல் கல்லூரி.**

# பிழை திருத்தம்


## வரவேண்டிய தலைப்பு

**பக்கம் 250** ஆசிரியர் சிரோமணி த.செல்வநாயகம் அவர்களின் வாழ்க்கை நெறி

**பக்கம் 292** மட்டக்களப்பு ஆசிரியத் தலைமுறை ஒன்றின் குறியீடு

**பக்கம் 318** மதிப்புக்குரிய அதிபர் அவர்கள்

**பக்கம் 326** மனிநேயங்களை மதித்த மகான்



**முதன் முதல் அப்பா இல்லாத வீட்டிலிருந்து புறப்படுவதற்கு சில நிமிடங்களின் முன்னர் மீள நினைக்கின்றேன்!**

என்றும் என் இனிய
அப்பாவிற்கு.....
பாசமாய் பாதம் தொட்டு
விடைபெற்ற கரங்கள்.....
இன்று படத்தைத் தொட்டு
விடைபெறுகின்றனவே.....
பிரியாவிடை பெற்று
பிரியமனமில்லாமல் மனம்
பிரிந்து செல்கின்றதே.....

ஞானமாய் வளர்த்துவிட்டு
ஞாபகமாய் மாறிவிட்டீர்களே....
மண்ணில் மறைந்து விட்டு....
மறக்காமல் மனசுக்குள்
வந்துவிட்டீர்களே...!
கண்ணீர் காய
கனகாலம் எடுக்குமா?
அன்புடன் மீண்டும்
சந்திக்கும் வரை



**சிறி மகன்**
**பாசமாய்**

ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு. T.P. 065-2222076